ஸ்ரீ

நன்னூல்

காண்டிகையுரை

OFFICE OF THE ... 5 - JUL 1929 MADRAS

திருவல்லிக்கேணி

வை. மு. சடகோபராமாநுஜாசாரியராலும்,

சே. கிருஷ்ணமாசாரியராலும்

நன்கு விளக்கியும்

பல விஷயங்கள் சேர்த்தும்

அரிய உதாரணங்கட்குப் பொருளெழுதியும்

புதுப்பித்துப்

பதிப்பிக்கப்பட்டது.

952

[பன்னிரண்டாம் பதிப்பு.]

சென்னை:

சுந்தரம் அச்சுக்கூடம்.

1928.

(Copy Right Registered.)

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகசாலை,
19. தென்னண்டைமாடவீதி,
திருவல்லிக்கேணி, சென்னை.

97466

இப்புத்தகத்தில் அடங்கியவை.

OFFICE OF THE ... 5 - JUL 1929 MADRAS

விஷயம்.	பக்கம்.
முகவுரை.	
விஷயசூசிகை.	
நூலாசிரியர்வரலாறு.	க
பாயிரம்:—	
சிறப்புப்பாயிரம்	ரு
பொதுப்பாயிரம்	அ
க. எழுத்ததிகாரம்:—	
க. எழுத்தியல்	௩எ
உ. பதவியல்	எ0
௩. உயிரீற்றுப்புணரியல்	கசு
ச. மெய்யீற்றுப்புணரியல்	க௩உ
ரு. உருபுபுணரியல்	கருக
உ. சொல்லதிகாரம்:—	
க. பெயரியல்	கசுஉ
உ. வினையியல்	உக0
௩. பொதுவியல்	உஉஅ
ச. இடையியல்	உஎச
ரு. உரியியல்	உஅரு
சூத்திரமுதற்குறிப்பகராதி	உகூ௩
பரீக்ஷைக்கு உரியவினுக்கள்	உகூஎ
அநுபந்தம் .... ,	உகூவு
தமிழிலக்கணத்துக்கு ஒத்த ஆங்கிலப்பெயர்கள்	௩00
பொருளிலக்கணச்சுருக்கம்	௩0க
யாப்பிலக்கணச்சுருக்கம்	௩0ச
அணியிலக்கணச்சுருக்கம்	௩0வு
காப்பியவிலக்கணம்	௩கஉ
இலக்கணக்கண்ணுடி	௩க௩

ஸ்ரீ

கடவுள் துணை.

OFFICE OF THE ... OF BOOKS
MADRAS
5 JUL 1929

முகவுரை.

அருவுரு வாகிய வமலன தடியிணை
யொருமையொ டுள்கு மொளிபெறற் பொருட்டே.

அருந்தமிழறிந்த அன்பர்களே!

செந்தமிழிலக்கணங்களுட் சிறந்துவிளங்குகின்ற நன்னூல்என்னும்இந் நூல், பவணந்தி என்னும் ஜைநமுனிவரால் தொல்காப்பியத்தையும்,அதன் உரைகளையும் பெரும்பாலுந் தழுவிச் செய்யப்பட்டது.

இந்நூலிற்கு ஜைநவித்துவான்களுள் ஒருவர் எழுதிய பழையவுரை ஒன்று உண்டு; அது அருமையாக வழங்குகின்றது. சங்கரநமச்சிவாயப்புல வராற் செய்யப்பட்டுச் சிவஞானமுனிவரால் திருத்தப்பட்ட விருத்தியுரை யும்,விசாகப்பெருமாளையர் செய்தகாண்டிகையுரையும்,இராமாநுசகவிராயர் இயற்றிய காண்டிகைவிருத்தியுரையும் முதலிய உரைகளே பிற்காலத்திற் பெரும்பாலும் வழங்கலாயின.

அவ்வுரைகளெல்லாவற்றுள்ளும் பரீக்ஷைக்குப்படிக்கும்மாணுக்கர்க்குப் பெரிதும் பயன்படாத பல விஷயங்களைநீக்கியும், மற்றையவற்றை நன்கு விளக்கியும், இன்றியமையாத பலவிஷயங்களைப் புதிதாகச்சேர்த்தும்,தெளி வாகப் பொருள்விளங்குமாறு மிகஎளியநடையில்எமதுசிற்றறிவுக்குஇயன்ற வளவு ஒரு காண்டிகையுரை எழுதி, உதாரணங்களைஒழுங்குபடுத்தி, அவசிய மான வினக்களை இறுதியிற் கூட்டிப் பதிப்பித்து முப்பது வருஷங்களின் முன் வெளியிட்டோம். இது, அதன் பன்னிரண்டாம் பதிப்பு.

தமிழிலக்கணவகை ஐந்தனுள் இந்நூலிற் கூறப்பட்டுள்ள எழுத்தும் சொல்லும் நீங்கலான மூன்றின்இலக்கணங்களுள் முக்கியமானசிலவிஷயங் கள் மாணுக்கர் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டியனவா யிருத்தலினல், அவையும் அவற்றின்போக்கும் சுருக்கமாகவும் தெளிவாகவும்விளங்குமாறு பொருளிலக்கணச்சுருக்கம், யாப்பிலக்கணச்சுருக்கம், அணியிலக்கணச் சுருக்கம் என்ற மூன்றையும் (வேண்டியஇடங்களில் உதாரணங்களுடன்) சேர்த்திருக்கிறோம். அணியிலக்கணத்தில் அவ்வவ்வணிகளுக்குஉரிய வட மொழிப்பெயர்களும் ஆங்காங்குக் குறிக்கப்பட்டுள்ளன.

அன்றியும், இந்நூலினுள்ள பொருள்கள் தொகுதியாக விளங்குமாறு விஷயசூசிகை யொன்று முதலிற் சேர்த்ததோடு, இந்நூலினுள்ள முக்கிய ன இலக்கண வகைகளைக் கலக்கமின்றி மாணுக்கர் உணருமாறு தனித் சிலபடங்களாக அமைத்துத் தெளிவுசெய்துவிளக்கியுமிருக்கின்றோம்.

இவையல்லாமலும், காலநடையை அனுசரித்துத் தமிழிலக்கணக்குறிகளுக்குஒத்த இங்கிலிஷ்பெயர்களையும் காட்டுவதுநலமென்றுசிலகனவான்கள் கூறியதனுல், அவர்கொள்கையை மேற்கொண்டு, அவற்றிற்கு ஒரு தொகுப்பு அமைத்துக்காட்டியுமிருக்கிறோம். (இந்த இங்கிலிஷ்பெயர்களை அந்தந்தச் சூத்திரத்தின் தலைப்பாக அமைக்குமாறு சிலர்கருதினராயினும், அங்ஙனம் புத்தகத்தினிடையே அமைத்தல்தமிழிலக்கணத்தைத்தமிழ்வழியினாலேயே கற்கவும்கற்பிக்கவும் பிரியமுடைய பலர்க்கு வேண்டாவாதலாலும், சர்வகலாசாலைப்பரீக்ஷைகட்குப் படிப்பவர்களுக்குமாத்திரமேயன்றித் தமிழிலக்கணங்கற்கப்புகும் அனைவர்க்கும் ஒருநிகராக இவ்வுரை பயன்படவேண்டு மென்பது எமது உத்தேச மாதலாலும், அவை ஆங்காங்குஅமைக்கப்படாமல் தனியே ஒப்புமைவிளங்கக் காட்டப்பட்டன.)

அரிதுணர்பொருளனவானஉதாரணங்களைஎளிதுணர்பொருளனவாக மாற்றியும், அங்ஙனம்மாற்றுதவற்றுள் அரியசொற்களுக்கெல்லாம்பொருள் விளக்கியும்,அரிய உதாரணச்செய்யுள்களுள் அவசியமானவற்றிற்கெல்லாம் பொருளெழுதியும் சேர்த்திருக்கிறோம்.

நன்னூலின் பழையவுரையிலிருந்து சாரமான விஷயங்கள் சில இதில் ஆங்காங்குச் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூல் (பி - ஏ) முதலியபட்டப்பரீக்ஷைகளுக்கு முழுவதும்உபயோகமாவதாதலால், இந்நூலில்(யப்-ஏ)பரீக்ஷைக்கு உபயோகமாகத்தக்கமுக்கியமான சூத்திரங்களுக்கு † இக்குறியும், (யப் - ஏ, மெட்ரிக்யுலேஷன்) இவ்விரண்டு பரீக்ஷைகளுக்கும் உபயோகப்படத்தக்க மிகவும் முக்கியமானசூத்திரங்களுக்கு ‡ இக்குறியும் அந்தந்தச் சூத்திரத்தின் முதலில் இடப்பட்டிருக்கின்றன.

இந்தப் பதிப்பிலுள்ள குற்றங் குறைகளை யாயினும்,எமதுசிற்றறிவிற்குப் புலப்படாத அரிய பெரிய வேறுபல விஷயங்களை யாயினும், இன்னும் விளக்கமாகஅமைக்கத்தக்க வேறுவகையை யாயினும்,எடுத்துஎவராயினும் எமக்குத்தெரிவிப்பாராயின், அவரைப்பேருதவிசெய்தவராக நன்குமதித்து மகிழ்வோடு அவர்பக்கல் நன்றிபாராட்டுவதுடன், அவ்விஷயங்களை மறுபதிப்பிற்பிரசுரப்படுத்திப் பலர்க்கும்பயன்படும்படிசெய்யவும் சித்தாயிருக்கின்றோம்.

எமது புத்தகங்களைத் தம்தம் கல்விச்சாலைகளில் உபயோகித்தும், உபயோகிப்பதாக உறுதிமொழியுரைத்தும் எமக்குஊக்கத்தைவிளைத்துவருகிற மகான்கள்திறத்தில் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

விஷய சூசிகை.

[முக்கியமானவைமாத்திரம். எண்கள், பக்கத்தைக் குறிப்பன.]

நூலிலக்கணம்	கூ
நூல்மதம்	கங
நூற்குற்றம்	கங
நூலழகு	கச
உத்திகள்	கரு
சூத்திரம்	கஅ
உரையிலக்கணம்	ககூ
நூலென்னும் பெயர்க்காரணம்	உக
ஆசிரியரிலக்கணம்	உஉ
மாணுக்கரிலக்கணம்	உஎ
சிறப்புப்பாயிரத்திலக்கணம்	ஙஉ
நூற்பெயர்வகை	ஙங
சிறப்புப்பாயிரஞ்செய்ய உரியவர்	ஙச
எழுத்திலக்கணத்தின்பகுப்பு	ஙஎ
காரணவிடுகுறி	சக
இனவெழுத்து	சரு
உயிர்மெய்முதலிய சார்பெழுத்துக்கள்	சகூ-ருகூ
மாத்திரை	ருஎ, ருஅ
மொழிமுதலெழுத்து	ருகூ
மொழியிறுதியெழுத்து	சுக
போலி	சுசு, சுஎ
பதத்திலக்கணம்	எ0
பகாப்பதம்	எக
பகுபதம்	எஉ
பகுபதவுறுப்பு	எங
பகுதி	எச
பண்புப்பகுதிவிகாரம்	எசு
பிறவினை	எகூ
விகுதி	அ0
பலபொருள்குறிக்கும்விகுதிகள்	அச
பெயரிடைநிலை	அஎ
வினையிடைநிலை	,,
காலங்காட்டும்விகுதி	அஅ
வேறுவகையாற்காலங்காட்டுதல்	கூ0
தற்சமம், தற்பவம்	கூஉ
வடவெழுத்துத்திரிதல்	,,
தமிழ்ச்சிறப்பெழுத்து	கூரு
புணர்ச்சியிலக்கணம்	கூசு
வேற்றுமை, அல்வழி	கூஎ
ணர்ச்சிவிகாரம்	கூகூ
ய்யுள்விகாரம்	க00
துப்புணர்ச்சி	க0க
பொதுப்பெயருயர்திணைப் பெயரீறு	க0ங
நாற்கணம்	,,
விகற்பம்	க0ரு
உயிரீற்றுப்புணர்ச்சி	க0சு
உடம்படுமெய்	,,
குற்றியலுகரவிகாரம்	க0அ
உயிர்முன்வல்லினம்பொதுவிதி	க0கூ
இயல்பு உயிரீறு, விதியுயிரீறு	,,
மரப்பெயர்ச் சிறப்புவிதி	,,
அகரவீற்றுச் சிறப்புவிதி	கக0
வினையடிநான்கு	,,
வாழிய என்பதன் சிறப்புவிதி	ககக
பல,சிலஎன்பவற்றின்சிறப்புவிதி	ககஉ
ஆகாரவீற்றுச் சிறப்புவிதி	,,
அருத்தாபத்தி	ககங
இகரவீற்றுச்சிறப்புவிதி	ககச
இகரஐகாரவீற்றுச்சிறப்புவிதி	ககரு
முற்றுகரவீற்றுச்சிறப்புவிதி	ககசு
குற்றுகரவீற்றுச்சிறப்புவிதி	ககஎ-கஉ0
திசைப்பெயர்ச்சிறப்புவிதி	கஉக
எண்ணுப்பெயர்சிறப்புவிதி	கஉஉ-கங0
பூப்பெயர்ச்சிறப்புவிதி	கங0
ஏகாரஒகாரவீற்றுச்சிறப்புவிதி	,,
ஐகாரவீற்றுச்சிறப்புவிதி	கஙக
மெய்யீற்றுப்புணர்ச்சி	கஙஉ
ணகர னகர வீறு	கஙச
மகரவீறு	கஙகூ
யகர ரகர ழகர வீறு	கசக
லகர ளகர வீறு	கசஉ
வருமொழித்தகரநகரந்திரிதல்	கசஎ
இடையுரிவடசொற்புறனடை	கசகூ
வடமொழிப்புணர்ச்சி	கரு0
உருபுபுணர்ச்சி	கருக
சாரியை	கருஉ
உருபேற்கையில் திரியும் பெயர்கள்	கருச
'நீம்' என்னும் பெயர்	கருரு
'ஊன்' என்னும் பெயர்	,,
இரண்டாம்வேற்றுமைப் புணர்ச்சிச் சிறப்புவிதி	கருகூ
சொல்லிலக்கணம்	கசுங
வழக்கு	கசுஎ

செய்யுள் கசுகூ
குறிப்பு, வெளிப்படை ,,
இயற்சொல் கஎக
திரிசொல் கஎஉ
திசைச்சொல் கஎங
வடசொல் கஎச
பெயரிலக்கணம் கஎரு
பால்பகா அஃறிணைப்பெயர் கஅஉ
ஆகுபெயர் கஅசு
முதல்வேற்றுமையில் மாத்திரம் வரும்பெயர்கள் ககூக
வேற்றுமைகள் ககூஉ-உ00
கருத்தாப்பொருள் ககூஉ
இயற்றுதற்கருத்தா, ஏவுதற் கருத்தா ககூங
செயப்படுபொருள் ,,
முதற்கருவி, துணைக்கருவி ககூச
தற்கிழமை, பிறிதின்கிழமை ககூஎ
ஒற்றுமைக்கிழமை ககூஅ
விளிக்கப்படாதபெயர் உ0ரு
உருபுமயக்கம் உ0எ
வேற்றுமைமுடியுஞ்சொல் உ0அ
வினையிலக்கணம் [தெரிநிலை குறிப்பு] உக0
இருதிணைப்பொதுவினை உகரு
உளப்பாட்டுத்தன்மை உகசு
உளப்பாட்டுமுன்னிலை உகஎ
வியங்கோள் உககூ
ஐம்பால்மூவிடப்பொதுக் குறிப்புமுற்று உஉ0
செய்யுமென்வாய்பாட்டுவிகாரம் உஉக
செயவெனெச்சம் முக்காலமும் உணர்த்தல் உஉங
எச்சத்திரிபு உஉரு
செய்யுமென்முற்று உஉசு
முற்றெச்சம் உஉஎ
ஒன்றொழிபொதுச்சொல் உஉஅ
ஆ ஓவாதல் ,,
இடைப்பிறவறல் உங0
உபலக்ஷணம் உஙஉ
தொகைநிலைகள் உஙச-உசஉ
தொகாநிலைகள் உசஉ
வழு, வழாநிலை, வழுவமைதி உசங
திணைவழுவமைதி உசரு
திணைபால்மரபுவழுவமைதி உசசு
திணைபால்வழுவமைதி உசஎ
பாலிடவழுவமைதி ,,
காலவழுவமைதி உசகூ
வினாவகை உரு0
விடைவகை உருக
மரபு உருஉ
அடுக்குத்தொடர் உருஎ
இரட்டைக்கிளவி ,,
ஒருபொருட்பன்மொழி உருஅ
பொருள்கோள்கள் உசுக-எங
நிரல்நிறைப்பொருள்கோள் உசுஅ
இடைச்சொற்கள்: (ஏ, ஓ, உம்) உஎகூ
செவ்வெண் ,,
உரிச்சொல்வகை உஅரு

பெயாப்பகுபதத்துக்கும் குறிப்புவினைமுற்றுப் பகுபதத்துக்கும் வேறுபாடு:— எஉ
பெயரிடைநிலைக்கும் வினையிடைநிலைக்கும் வேறுபாடு:— அஎ
தழுவுதொடர்க்கும் தழாத்தொடர்க்கும் வேறுபாடு:— கூஅ
புணர்ச்சிவிகாரத்துக்கும் செய்யுள்விகாரத்துக்கும் வேறுபாடு:— க00
முன்னிலைவினைக்கும் ஏவல்வினைக்கும் வேறுபாடு:— க0ரு
தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும்வேறுபாடு:—கஅரு
ஆகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் வேறுபாடு:— ககூ0
முதல் வேற்றுமைக்கருத்தாவுக்கும் மூன்றாம் வேற்றுமைக்கருத்தாவுக்கும் வேறுபாடு:— ககூச
ஏவற்கும் வியங்கோளுக்கும் வேறுபாடு:— உககூ
அடுக்குத்தொடர்க்கும் இரட்டைக்கிளவிக்கும் வேறுபாடு:— உருஅ
மொழிமாற்றுப் பொருள்கோளுக்கும் கொண்டுகூட்டுப்பொருள்கோளுக்கும் வேறுபாடு·— உஎஉ
பெயர்ச்செவ்வெண்ணுக்கும்உம்மைத்தொகைக்கும்வேறுபாடு:--உ

ஸ்ரீ

நன்னூல்

காண்டிகையுரை.

நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியராகிய பவணந்திமுனிவர், இந்தத்தொண்டைமண்டலத்தில் †சனகாபுரத்தில் பிராமண வருணத்தில் சந்மதி முனிவர் செய்ததவப் பயனால் அவர் குமாரராய்த்தோன்றி, இளமைப்பருவத்திலேயே தொல்காப்பியங்களிலும் தொல்காப்பியத்திலும் பல்காற் பயின்று, வடமொழி வியாகரணம் முதலியவற்றிலும் வல்லவராய், தாம்பிறந்துள்ள அருகசமயத்தில் முத்திபெறுதற்குக் காரணமாகிய ஞானநூல்களை ஓதி, அவற்றின் பொருளைக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்துகொண்டு, அன்பு அருள் அடக்கம்ஒழுக்கம் வாய்மை முதலிய நற்குண நற்செய்கைகளில் மிகச் சிறந்தவராய், துறவறங் கொண்டு ஒழுகுவாராயினர்.

* இது, பெரும்பாலும்இந்நூற் சிறப்புப்பாயிரத்தையேபிரதானஆதாரமாகக் கொண்டும், சிறுபான்மை மற்றுஞ் சில ஆதாரங்களால் வேறு சில விஷயங்களைச் சேர்த்தும் ஒருவாறு சுருக்கமாக எழுதப்பட்டது.

---

† "தன்னூர்ச் சனகையிற் சன்மதி மாமுனி தந்த மைந்த
நன்னூ லுரைத்த பவணந்தி மாமுனி நற்பதியும்
(சின்னூ லுரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்
மன்னூபுரத் திருவன்ன மின்னே) தொண்டை மண்டலமே"

என்று படிக்காசுப்புலவர் தொண்டைமண்டலசதகத்திற்கூறி யிருத்தலால், பவணந்திமுனிவர் பிறந்த ஊர் தொண்டைநாட்டி லுள்ளதென்று தெரிகின்றது;

" மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்குப்—பார்க்குளுயர்
[illegible]ற்குப் பிணுகி திகழிருப தின்காதம்
[illegible]ண்டை நாடெனவே நாட்டு"

[illegible] தொண்டைநாட்டின் எல்லையை அறிக.

அங்ஙனமிருக்கும் நாட்களில் ஒருநாள், கல்வி அறிவுஒழுக்கங்களாலும் செல்வம் அதிகாரம் முதலிய நலங்களாலும் குறைவின்றி மிகச்சிறப்புற்று விளங்கியிருந்த 'சீயகங்கன்'என்னுஞ் செங்கோல்மன்னன்,பவணந்திமுனிவரை நோக்கி 'தொல்காப்பியம்முதலிய பழையஇலக்கண நூல்கள்பேரறிவினர்க்கே புலப்படுந் தன்மையனவா யிருத்தலின், இயற்றமிழின் பாகுபாடான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி யிலக்கணங்களின் பயிற்சி குன்றிப்போவதனல், தமிழாராய்ச்சியால் வலியோரே யன்றி எளியோரும் ஓதியுணரும்படி, நீவிர் ஓர் இலக்கணநூலை இயற்றித்தரல்வேண்டும்' என்று வேண்டினன். பவணந்திமுனிவர், தமிழ்நாடனைத்துக்கும் பேருபகாரமா மென்று எண்ணி, அங்ஙனமே இயற்றத் துணிந்து, தாம்கற்ற இலக்கிய இலக்கணங்களில் இலைமறைகாய்போல் மறைந்துகிடந்த அரிய பெரிய விதிகளையெல்லாம் தமது நுண்ணுணர்வினல் விளங்க எடுத்துத் திரட்டி, முற்காலத்து வழங்கிய இலக்கணங்களுள்ளே பிற்காலத்துவழங்காதொழிந்தனவற்றை நீக்கி, முற்காலத்து வழங்காது பிற்காலத்துவழங்கிவரும்இலக்கணங்களைத் தழுவி, உலக வழக்குச் செய்யுள் வழக்குக்களோடு சிறிதும் மாறுபடாமல், உடன்படல் முதலிய எழுவகை மதங்களையும் தழுவி, குன்றக்கூறல் முதலிய பத்துக் குற்றங்களும் சாராது, சுருங்கச்சொல்லல் முதலிய பத்து அழகுகளோடும் கூடி, நுதலிப்புகுதல் முதலியமுப்பத்திரண்டுஉத்திகளும் விளங்க,சாதாரண மாணுக்கர்கட்கும் உபயோகமாகத்தக்கதாய்,'நன்னூல்' என்னும் இந்நூலை இயற்றி அவ்வரசனது சபையில் அரங்கேற்றினர்.

இந்நூலின் பெருமையை 'நன்னூல்' என்னும் இதன்பெயரே இனிது விளக்கும்; அன்றியும், இந்நூல் தோன்றியபின்னர் எந்நூலினுஞ் சிறந்த தொல்காப்பியம் முதலிய தொன்னூற்பயிற்சி குன்ற இதுவேதலையெடுத்து வந்தமை யொன்றுமே இதன் மாட்சியை நன்கு புலப்படுத்தும். மேலும், தொல்காப்பியம் முதலிய நூல்களைஐயந்திரிபறக் கற்றறிந்தவராகியசுவாமிநாததேசிகர் தாம்செய்த இலக்கணக்கொத்தில் "முன்னூ லொழியப்பின்னூல் பலவினுள், நன்னூ லார்தமக்கு எந்நூ லாரும் இணையோ வென்னுந் துணிவே மன்னுக"என இதன்சிறப்பை எடுத்துக்கூறியிருப்பதுங் காண்க.

'பவணந்தி முனிவரை யாதரித்தவனும் கங்காகுலத்திற் பிறந்தவனுமான அமராபரணசீயகங்க னென்பான் இப்பொழுதைக்கு எகூ0-வருடங்கட்கு முன் சிங்காதனமேறிய மூன்ருவது குலோத்துங்க சோழராஜனுக்கு அடங்கிய ஒரு சிற்றரசன்' என்று சிலாசாசந பரிசோதகர் வெளியிட்டிருப்பது கொண்டு, இந்நூல் இற்றைக்குச் சற்று ஏறக்குறைய எ00-வருடங்களின் முன் இயற்றப்பட்ட தென்று அறியலாம். இந்நூலில் உரியிய[illegible] ககூ-ஆம் சூத்திரத்தில் "பிங்கலமுதலாம் நல்லோ ருரிச்சொலில் நய[illegible] கொளலே" எனப் பிங்கலந்தை யென்னும் நூல் மேற்கோ[illegible] காட்ட[illegible] டுள்ளதனல்,ஆதிதிவாகரனதுபுத்திரனைபிங்கலமுனி[illegible] டலபுருடன் சூடாமணிநிகண்டு சேந்தன்திவாகர[illegible] முற்பட்டதுமான பிங்கலந்தை என்னும் நிகண்[illegible] தென்பது விளங்குகின்றது. ஸ்ரீவைஷ்ணவசம்[illegible]

திவ்வியப்பிரபந்தங்களின் தனியன்கள்முதலியவற்றிற்குவியாக்கியநஞ்செய்தருளிய பிள்ளைலோகார்யசீயர், "நெஞ்சுக் கிருள்கடி தீபமடங்காநெடும்பிறவி,நஞ்சுக்கு நல்லவமுதம் தமிழ நன்னூற் றுறைக,ளஞ்சுக்கிலக்கியம்ஆரணசாரம்பரசமயப்,பஞ்சுக்கனலின்பொறி பரகாலன் பனுவல்களே" என்ற பெரியதிருமொழிச் சிறப்புப்பாயிரத்தில்'தமிழ நன்னூல் துறைகளஞ்சுக்கு' என்பதன்பொருளை விளக்குமிடத்து, 'த்ராவிட சாஸ்த்ரம், எழுத்துசொல் பொருள் யாப்புஅலங்காரம்என்கிற விலக்ஷணமான பஞ்சலக்ஷணத்தோடே கூடியிறேயிருப்பது;அன்றிக்கே,தமிழுக்கு எழுத்துமுதலான அஞ்சுலக்ஷணத்தையும் அறுதியிடுவதான நன்னூலென்று ஒரு சாஸ்த்ர முண்டு: அத்தைச் சொல்லிற்றுதல்; ஏவம்விதமான 'த்ராவிடசாஸ்த்ர மார்க்க பஞ்சகத்துக்கு' என்று எழுதியிருத்தலால்,பிள்ளைலோகார்யசீயர் காலத்தில் இந்தநன்னூல் பிரசித்தமாக இருந்த தென்று அறியலாம்; அவர்காலம் இப்பொழுதைக்கு ஏறக்குறைய நானூற்றைம்பது வருடங்கட்கு முன்பென்று அறியப்படுகின்றது. இன்னும், மேற்கண்ட பெரிய திருமொழிச் சிறப்புப்பாயிரச்செய்யுள் கூரத்தாழ்வான் செய்ததாதலால், அதில் 'நன்னூல்' என்பதற்குப் பிள்ளைலோகார்யசீயர் இங்ஙனம் வியாக்கியானஞ் செய்திருப்பதுகொண்டு, கூரத்தாழ்வான்காலத்தே யுள்ளது நன்னூலென்று அறுதியிடவும் இடமுண்டு; கூரத்தாழ்வான்காலம், ஏறத்தாழ எண்ணூறுவருடத்துக்கு முன்பாகும்.

தமிழிலக்கண மைந்தனுள்ளும் பெரும்பயன்படுதல் கருதி,எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் என்ற இரண்டுமே இந்நூலிற் கூறப்பட்டுள்ளன; ஆதலால், இந்நூல்-எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டுபகுப்பு உடையது.இனி.இந்நூற்சிறப்புப்பாயிரத்துள்,"இருந்தமிழ்க்கடலுள் அரும்பொருளைந்தையும் யாவரு முணரத்,தொகைவகை விரியிற் றருகென...... மொழிந்தனனாக......வகுத்தனன்" என்று கூறியிருத்தலால், இந்நூலின் எழுத்துச் சொல்லதிகாரங்கள்போலவே மற்றைப்பொருள் யாப்புஅணியதிகாரங்களும் ஆசிரியராற்செய்யப்பட்டு முற்காலத்தில் இருந்துபிற்காலத்திற் கிடைத்திலவென்று கொள்வாரும்உளர்; *அக்கொள்கையை,மேற்காட்டிய 'தமிழுக்கு எழுத்துமுதலான அஞ்சு லக்ஷணத்தையும் அறுதியிடுவதான நன்னூ லென்று ஒரு சாஸ்த்ரமுண்டு' என்ற பிள்ளைலோகார்யசீயர் வியாக்கியானவாக்கியம் வற்புறுத்தும். இனி, இந்நூல் இடையூற்றின் மிகுதியால் முடிவுபெறாததென்பர் ஒருசாரார். † எங்ஙனமாயினும், நாடெங்கும்வழங்கி

---

* 'அரும்பொருளைந்து' எனக் கூறினமையின், இந்நூலுட் கூறிய பொருள் யாப் பணிக ளென்னும் மூன்று அதிகாரங்களும் அக்காலத்து உள்ளனபோலும்' என்பது, நன்னூல் விருத்திபுரை.

† 'மங்கலங் கூறியவழியும் நன்னூல் முதலியவற்றின் முடிவுகாணாமையின், மங்கலங் கூறாதவழியும் தொல்காப்பியம் முதலியவற்றின்முடிவுகாண்டலின், உடன்பாட்டினும் எதிர்மறையினும் நியமந் தப்புதலின் எனின்:— நன்று சொன்னாய்; நன்னூல் முதலியவற்றில் இடையூற்றின் மிகுதிப்பாட்டால் முடிவுபேறு இன்று' என்ற தருக்கசங்கிரகவுரையைக் காண்க.

வருவன இந்நூலின் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமுமே யென்பது யாவர்க்குஞ் சம்மதமே. இந்நூலின் மற்றையதிகாரங்களும் இருந்து கிடைத்து வழங்குமாயின், தமிழிலக்கணங் கற்போர்க்குப் பொருள்யாப்புஅணிகளின் பயிற்சி குன்றிப்போகாமல் எழுத்துச் சொற் பயிற்சிபோலவே நின்று நிறைவுறு மென்பதிற் சிறிதும் ஐயமில்லை. ஆகவே, இந்நூல்போலத் தெளிவான இலக்கணநூல் வேறு எதுவும் தமிழில் இல்லை யென்பதாயிற்று.

இவர்மதம் ஜைந மென்பது, இவர் எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும்முதலிற் கூறியுள்ள கடவுள்வணக்கங்களாலும்,மற்றுஞ்சிலவாற்றாலும் விளங்கும்.

இவர் இந்நூலில் ஆங்காங்கு வடமொழிவழக்கைத் தழுவி இலக்கணமெழுதியுள்ளதனால், இவர்காலத்துக்கு முன்னமே வடசொற்கள் தமிழில் மிகுதியாகப் பயிலத்தொடங்கிவிட்டனவென்பது உணரப்படும். இந்நூலின் இரண்டாம் இயலுக்கு 'மோழியியல்' எனப் பெயர்குறியாது 'பதவியல்' எனப் பெயர்குறித்தது காண்க. (மொழி-தமிழ்ச்சொல். பதம்-வடசொல்.)

சிறப்புப்பாயிரம்.

மலர்தலை யுலகின் மல்கிரு ளகல
இலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
பரிதியி னொருதா னாகி முதலீறு
ஒப்பள வாசை முனிவிகந் துயர்ந்த
அற்புத மூர்த்திதன் னலர்தரு தன்மையின்
மனவிரு ளிரிய மாண்பொருண் முழுவதும்
முனிவற வருளிய மூவறு மொழியுளும்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்
அரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத்
தொகைவகை விரியிற் றருகெனத் துன்னார்
இகலற நூறி யிருநில முழுவதுந்
தனதெனக் கோலித் தன்மத வாரணந்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோல் சீய கங்கன்
அருங்கலை விநோத னமரா பரணன்
மொழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந்தவத் தோனே.

இது, நூலாசிரியர்பெயர் முதலிய பதினொன்றையும் விளக்குகின்றது.

(இதன்பொருள்.) 'மலர் தலை உலகில் - பரந்த இடத்தையுடைய இவ்வுலகத்திலே, மல்கு இருள் அகல-நிறைந்த வெளியிருள் ஒழியும்படி, இலகு ஒளி பரப்பி-விளங்குகின்ற (தனது ஆயிரங்) கிரணங்களை விரித்து, யாவையும் விளக்கும்-(கண்ணுக்குத் தெரியத்தக்க உருவங்கள்) எல்லாவற்றையும் காட்டுகின்ற, பரிதியின்-சூரியன்போல, ஒருதான் ஆகி - (உலகங்கட்கெல்லாம்) தான் ஒரு முதல்வனேயாகி, முதல் ஈறு ஒப்பு அளவு ஆசை முனிவு இகந்து உயர்ந்த-பிறப்பும் இறப்பும் உவமையும் அளவும் விருப்பும் வெறுப்பும் (ஆகிய இவற்றை இயல்பாகவே) நீங்கிநிற்றலினாலே தலைவனாகிய, அற்புத மூர்த்தி-வியக்கத்தக்க திருமேனியையுடைய கடவுள், தன் அலர்தரு தன்மையின்-தனது பரவிய குணமாகிய அருளினாலே, மனம் இருள் இரிய

(உயிர்களின்) மனத்தினிருளாகிய அஞ்ஞானம் ஒழியும்படி, மாண்பொருள் முழுவதும்-சிறந்த (அறம் பொருள் இன்பம் வீடு என்னும்)நான்கு உறுதிப் பொருள்களையும், முனிவு அற அருளிய-வெறுப்பில்லாமல் அருளிச்செய்த [விருப்பத்தோடு தந்த],மூ அறு மொழியுளும்-பதினெட்டுத் தேசபாஷைக ளுள்ளும்,குண கடல் குமரி குடகம் வேங்கடம் எனும் நான்கு எல்லையின்-(கிழக்கே) கீழ்கடலும் (தெற்கே) கன்னியாகுமரியும் (மேற்கே) குடகநாடும் (வடக்கே) திருவேங்கடமலையும் என்கிற நான்கு எல்லைக்கு உட்பட்டதேச த்து (வழங்குகின்ற), இருந்தமிழ் கடலுள்-பெரியதமிழ்ப்பாஷையென்னும் கடலில் உள்ள, அரும்பொருள் ஐந்தையும்-(அறிதற்கு) அரியனவான (எழு த்து சொல் பொருள் யாப்பு அணி என்னும்) ஐந்து பொருள்களையும்,யாவ ரும் உணர-(இலக்கியவாராய்ச்சியில்) வல்லவர் மாத்திரமேயன்றி அல்லாத வரும் (எளிதில்) அறியும்படி, தொகை வகை விரியின் தருக-தொகுத்தும் வகுத்தும் விரித்தும் செய்யப்படும் நூல்யாப்பினாலே இயற்றித்தருவாயாக,' என - என்று,—துன்னார் இகல் அற நூறி - பகைவரது பகைமை கெட (அவரை) அழித்து இரு நிலம் முழுவதும் தனது என கோலி-பெரிய பூமி முழுவதையும்தன்னுடையதாகக் கைப்பற்றிக்கொண்டு,தன்மதம் வாரணம் திசை தொறும் நிறுவிய - தனது மதயானைகளை(த் தன்வெற்றிக்கு அடை யாளமாக) எட்டுத்திக்கிலும் (திக்குயானைகளைப்போல) நிறுத்திய, திறல் - வல்லமையையும், உறு தொல் சீர்-மிக்க தொன்றுதொட்டு [பரம்பரையாக] வருகின்ற பெருங்கீர்த்தியையும், கருங் கழல்-பெருமை பொருந்திய வீரக் கழலையும், வெள்குடை-வெண்கொற்றக்குடையையும், கார்நிகர் வள் கை - மேகம் போன்ற (பிரதியுபகாரத்தை விரும்பாமற்) கொடுக்கின்ற கையை யும், திருந்திய செங்கோல் - கோணாத [நீதிதவறாத] அரசாட்சியையும் உடைய, அருங் கலை விநோதன்-அரிய நூல்களை ஆராய்தலையே பொழுது போக்கும் விளையாட்டாக வுடையவனும், அமர் ஆபரணன்-போரை மேற் கொள்ளுதலையே(தனக்கு)ஆபரணமாகக்கொண்டவனும்ஆகிய,சீயகங்கன்-சீயகங்கனென்னும் இயற்பெயரையுடைய அரசன், மொழிந்தனன் ஆக - சொல்ல,—பொன் மதில் சனகை-பொன்மயமான மதில்சூழ்ந்த சனகாபுர த்தில் இருக்கின்ற, சன்மதி முனி அருள்-சன்மதியென்னும்முனிவன்பெற்ற, பன் அருஞ் சிறப்பின் - சொல்லுதற்கு அரிய மேன்மையையும், பவணந்தி என்னும் நாமத்து-பவணந்தி யென்னும் இயற்பெயரையுமுடைய, இருந் தவத்தோன் - பெரிய தவத்தையுடைய முனிவன்,—முன்னோர் நூலின் வழியே-(தொல்காப்பியர் முதலிய) முன்னையோர்செய்த இலக்கணநூலின் வழியாக, நன்னூல் பெயரின் வகுத்தனன்-நன்னூ லென்னும் பெயரினால் (இந்நூலைச்) செய்தான்; (என்றவாறு)—ஏகாரம் - ஈற்றசை. சீயகங்கன் - சிங்கம்போன்ற கங்க னென்பவன்.

ஸந்மதி என்ற வடமொழிப்பெயர்-நல்லறிவுடையவனென்று பொருள் படும். 'அமர் ஆபரணன்' என்பதற்கு போரில் தன் உடம்பின்மேற் படும் பெரும்புண்களையே ஆபரணமாகவுடையவ னெனவுரைத்தலு மொன்று; அமர் - ஆகுபெயர்.

இதனுள் 'பவணந்தி' எனவே நூல்செய்தோன்பெயரும், 'முன்னோர் நூலின்வழி' எனவே நூல்வந்த வழியும், 'நான்கெல்லை' எனவே நூல்வழங்கும் எல்லையும், 'நன்னூல்' எனவே நூலின்பெயரும், 'தொகைவகைவிரியின்' எனவே நூல்யாப்பும், 'அரும்பொருளைந்தையும் யாவரு முணர' எனவே நூலிற்சொல்லப்பட்ட பொருளும், அவற்றையாராய்வோர் இந்நூல்கேட்டற்கு உரியாரென்னுங் கேட்போரும், அவர் அப்பொருளைந்தையும் அறிந்து சொற்களின் வழுவை ஒழித்தலாலே மொழித்திறத்தின் முட்டறுத்தலென்னும் பயனும், 'சீயகங்கன் மொழிந்தனனாக வகுத்தனன்' எனவே அவ்வரசன் காலத்தில் இயற்றப்பட்டு அவனது சபையிலே அரங்கேற்றப்பட்டதெனச் செய்த காலமும், அரங்கேறிய இடமும், சீயகங்கன் சொன்னதனாலும்யாவரிடத்தும் உண்டாகியஇரக்கத்தினாலும்இயற்றினமையாற்காரணமும்ஆகிய பதினொன்றும் பெறப்பட்டன; இனி, 'யாவருமுணர' எனவேசிகண்டுகற்று இலக்கியப்பயிற்சி செய்தபின்பு இந்நூல் கேட்கத்தக்கது என்னும் யாப்பும் 'சீயகங்கன் தருகென மொழிந்தனன்' எனவே கேட்போனும், 'மாண்பொருள் முழுவதும்' எனவே பயனும் பெறப்பட்டன வென்பாரு முளர்.

இப்பாயிரம், இவ்வொருநூலுக்கே உரியதாதலால், சிறப்புப்பாயிரமாம்.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

பொதுப்பாயிரம்.

[பாயிரத்தின் பெயர்கள்.]

க. முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.

(இ - ள்.) முகவுரை......பாயிரம் - முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம் புறவுரை தந்துரை புனைந்துரை என்பன பாயிரத்தின் பெயர்களாம்; (எ - று.)

பாயிரம் - வரலாறு: இது வடமொழியில் உபோத்காத மெனப்படும். முகவுரை யென்பதற்கு-நூலுக்கு முன் சொல்லப்படுவ தென்றும், பதிக மென்பதற்கு-ஐந்துபொதுவும் பதினொருசிறப்புமாகிய பலவகைப்பொருள்களையும்*தொகுத்துச் சொல்வதென்றும், அணிந்துரை புனைந்துரையென்பவற்றிற்கு-நூலின் பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துச்சொல்வதென்றும், நூன்முக மென்பதற்கு -'நூலுக்கு முகம்போல முற்பட்டிருப்பதென்றும், புறவுரை யென்பதற்கு - நூலிற்சொல்லிய பொரு ளல்லாதவைகளை நூலின் புறத்திலே சொல்வதென்றும், தந்துரை யென்பதற்கு-நூலிற் சொல்லிய பொரு ளல்லாதவைகளைத் தந்துசொல்வ தென்றும்பொருள்.()

[பாயிரத்தின் வகை.]

உ. பாயிரப் பொதுசிறப் பெனவிரு பாற்றே.

(இ - ள்.) பாயிரம் - (மேற்சொன்ன) பாயிரமானது,—பொது - பொதுப்பாயிரமும், சிறப்பு - சிறப்புப்பாயிரமும், என - என்று, இரு பாற்று - இரண்டு வகையை யுடையது; (எ - று.)—ஏ - ஈற்றசை.

தன்னால் உரைக்கப்படும் ஒருநூலுக்குமாத்திரமே உரியதன்றி எல்லா நூன்முகத்தும் உரைக்கத்தக்கது பொதுப்பாயிர மெனவும், தன்னால் உரைக்கப்படும் ஒரு நூலுக்கேஇன்றியமையாமல் உரியதாய் அந்நூன்முகத்திலே உரைக்கப்படுவது சிறப்புப்பாயிர மெனவும் அறிக. (உ)

முதலாவது

பொதுப்பாயிரத்தின் இலக்கணம்.

[பொதுப்பாயிரத்தின் இலக்கணம் இன்னதென்பது.]

ந. நூலே நுவல்வோன் நுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்றா மைந்தும்
எல்லா நூற்கு மிவைபொதுப் பாயிரம்.

---

* "பதிகக் கிளவி பலவகைப் பொருளைத்
தொகுதி யாகச் சொல்லுதல் தானே."

(இ - ள்.) நூலே-நூலினது வரலாறும், நுவல்வோன் - (நூலைக்) கற்பிக்கும் ஆசிரியனது வரலாறும், நுவலும் திறனே - (ஆசிரியன் மாணாக்கனுக்கு நூலைப்) பாடஞ்சொல்லுதலின் வரலாறும், கொள்வோன் - மாணாக்கனது வரலாறும், கோடல் கூற்று - (மாணாக்கன்) பாடங்கேட்டலின் வரலாறும், ஆம் - ஆகிய, இவை ஐந்தும்-இவ்வைந்து பொருள்களும், எல்லா நூற்கும் - எல்லா நூல்கட்கும், (பொதுவா மாதலால்), பொதுப்பாயிரம் - (இவற்றை விளங்கச்சொல்வது)பொதுப்பாயிரத்தின் இலக்கணமாம்;எ-று.

விரிந்தும் தொக்கும் வந்த எகாரங்கள் - எண்ணுப்பொருளன; இதனைப் பிறவிடங்கட்குங் கொள்க. திறன், கூற்று என்றது - வரலாற்றை; இதனைப் பிறவற்றோடும் கூட்டுக, (ங)

க. நூலின் வரலாறு.

[நூல் இன்ன தென்பது.]

ச. நூலி னியல்பே நுவலி னோரிரு
பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய்
நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
ஐயிரு குற்றமு மகற்றியம் மாட்சியோடு
எண்ணான் குத்தியி னோத்துப் படலம்
என்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை
விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.

(இ - ள்.) (மேற்கூறிய ஐந்தனுள்), நூலின் இயல்பு - நூலின் வரலாற்றை, நுவலின் - சொல்லப்புகுந்தால்,—ஓர் இரு பாயிரம் தோற்றி - (கீழ்க் கூறிய பொதுவும் சிறப்பு மாகிய) இருவகைப் பாயிரங்களையும் முன்னேயுடையதாய், மும்மையின் ஒன்று ஆய் - மூவகை நூல்களுள் ஒன்றாகி, நால் பொருள் பயத்தோடு - நான்கு புருஷார்த்தங்களாகிய பிரயோசனங்களுடன், எழு மதம் தழுவி - எழுவகை மதங்களையும் தழுவி, ஐ இரு குற்றமும் அகற்றி - பத்துவகைக் குற்றங்களையும் நீக்கி, அ மாட்சியோடு - அத்தனை [பத்துவகை] அழகுகளுடனே கூடி, எண் நான்கு உத்தியின் - முப்பத்திரண்டுவகைஉத்திகளைக்கொண்டு ஓத்துபடலம் என்னும்உறுப்பினின்- ஓத்தும் படலமும் என்கிற அவயவங்களுடனே, சூத்திரம் - சூத்திரமும், காண்டிகை-காண்டிகையுரையும்,விருத்தி-விருத்தியுரையும், ஆகும்-ஆகின்ற, விகற்பம் நடை - வேறுபட்ட நடைகளை, பெறும்-பெற்றுவரும்; (எ - று.)

'மும்மை' முதலியவற்றை, மேல்வருஞ் சூத்திரங்களிற் காண்க. 'அம்மாட்சி' என்பதில், அகரம் - ஐயிரண்டைச் சுட்டிற்று. ஓத்து, படலம் = இயல், அதிகாரம்;ஓத்து - சிற்றுறுப்பு, படலம் - பேருறுப்பு (ச)

[நூலின் வகை-ரு.]

ரு. * முதல்வழி சார்பென நூல்மூன் றாகும்.

---

* இறையனாரகப்பொருளுரை மேற்கோள்,

(இ - ள்.) முதல் - முதல் நூலும், வழி - வழிநூலும், சார்பு - சார்பு நூலும், என-என்று, நூல்—, மூன்றுஆகும்-மூன்றுவகையாகும்; (எ - று.)

இச்சூத்திரம், முன்னோர் செய்ததை மேற்கோளாகக் கொண்டது. (௫)

[முதல்நூல்.]

௬. அவற்றுள்,

* வினையி னீங்கி விளங்கிய வறிவின்

முனைவன் கண்டது முதனூ லாகும்.

(இ - ள்.) அவற்றுள்-அந்த மூவகை நூல்களுள்,—வினையின் நீங்கி - (இயல்பாகவே நல்வினை தீவினை யென்னும்) இருவினையினின்றும் நீங்கி, விளங்கிய அறிவின் - (தானே இயல்பின்) விளங்கின அறிவையுடைய, முனைவன்-கடவுள், கண்டது - செய்தது,—முதனூல் ஆகும்—; (எ - று.)

'முனைவன் கண்டது முதனூல்' என்றாராயினும், அம்முனைவனை வழிபட்டுத் தலைவராயினோர் செய்ததும் முதனூலெனப்படுமென அறிக: வருஞ் சூத்திரத்தில் 'முன்னோர் நூலின்' எனப் பன்மையாகக் கூறுவதும் இது பற்றி யெனக் காண்க; அவை - அகத்தியம் முதலியன.

இச்சூத்திரம், தொல்காப்பியத்தினின்று மேற்கோளாக எடுத்துக் கொள்ளப்பட்டது. (௬)

[வழிநூல்.]

௭. § முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்

பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி

அழியா மரபினது வழிநூ லாகும்.

(இ - ள்.) முன்னோர் நூலின்-கடவுளும் அவனருள்வழிப்பட்டோரும் செய்த நூல்களினது, முடிபு - பொருள்முடிபு, ஒருங்கு ஒத்து - முழுவதும் ஒத்து [வேறுபடாமலிருக்க],—பின்னோன் - வழிநூல் செய்யப்புகுந்தவன், வேண்டும் விகற்பம் கூறி - (முதனூல் இருக்கவும் தான் வேறே வழிநூல் செய்தற்குக் காரணமாக) இன்றியமையாத சில வேறுபாடுகளையும் (அதனோடுகூட்டிச்) சொல்லி,—அழியா மரபினது - (அவ்வேறுபாடுகள் அறிவுடையார் பலர்க்கும் ஒத்திருத்தலால்) அழியாமல் (உலகத்தில்) நிலைநிற்கின்ற தன்மையை யுடையது,—வழிநூல் ஆகும்—; (எ - று.)

எனவே, முதனூலைப் பெரும்பான்மை ஒத்துச் சிறுபான்மை வேறுபட்டிருப்பது வழிநூலென்றதாயிற்று. பின்னோன் வேண்டும் விகற்பங் கூறலாவது-பழைய இலக்கணங்களாகிப் பிற்காலத்து வழங்காதவை உளவாயின் அவற்றை 'இறந்ததுவிலக்கல்' என்னும் உத்தியால் விலக்கியும், புதிய இலக்

* தொல்காப்பியம் - பொருளதிகாரம் - மரபியல் - ௯௪.

§ இறையனாரப்பொருளுரை மேற்கோள்.

ங்களாகிப் பிற்காலத்து வழங்கிவருபவை உளவாயின்அவற்றை 'எதிரது போற்றல்' என்னும் உத்தியால் தழுவியும் கூறுதல் முதலியன. வழிநூல்-தொல்காப்பியம் முதலியன. இவ்வழிநூல்களெல்லாம், ஒருவனுக்கு மகனானவன் தன்மகனுக்குத் தந்தையாவதுபோல,முதல்நூலைநோக்க வழிநூலாயும் சார்புநூலை நோக்க முதனூலாயும் நிற்குமென அறிக.

இச்சூத்திரமும், அடுத்தசூத்திரமும் - முன்னோர்செய்தவற்றை மேற்கோளாகக் கொண்டன. (எ)

[சார்புநூல்.] *

அ § இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும்.

(இ - ள்.) இருவர் நூற்கும்-(கீழ்க்கூறிய) இருதிறத்தார் (செய்த முதனூல் வழிநூல் என்னும் இருவகை) நூல்கட்கும், ஒரு சிறை தொடங்கி -

---

* முதனூல் வழிநூல் என்னும் இரண்டேயொழியச் சார்புநூலென ஒன்று தனியே கொள்ளுதல், ஆசிரியர் தொல்காப்பியனார்க்கு உடன்பாடன்று;"மரபுநிலை திரியா மாட்சிய வாகி யுரைபடு நூல்தா மிருவகை யியல, முதலும் வழியு மென நுதலிய நெறியின்"என்ற தொல்காப்பியச்சூத்திரத்தைக் காண்க; அங்ஙனம் கொள்ளாமைக்குக் காரணம்,அடியிற்காட்டப்படுகிற நச்சினார்க்கினியருரை வாக்கியத்தால் நன்கு விளங்கும்.— "'நுதலிய நெறி" என்றது என்னையெனின்,—இன்னதே முதனூல் இன்னதே வழிநூல் என்பது ஓர்யாப்புறவு இல்லை;ஒருநூல்பற்றி ஒருவன் வழிநூல்செய்தவழி அவ்வழிநூல்பற்றிப் பின்ஒருகாலத்து ஒருநூல்பிறந்ததாயின் அதுவழிநூலெனப்பட்டு முன்னைவழிநூலே முதனூலெனப்படுமென்றற்கு என்பது. இதனைச் சார்புநூலென்னுமோ வெனின்,—வழிநூலாம் சார்புநூலுமாகலின் அங்ஙனம் கூறானாயினன்: எற்றுக்கு? சார்புநூலினைப்பற்றி ஒருநூல் பிறந்தவழிச் சார்பின் சார்பெனக் கூறவேண்டுவதாகலானும்,அதனைச்சார்ந்து தோன்றின் சார்பென்னுஞ்சொல்லை மும்முறை சொல்லியும் அதன்பின் தோன்றிய நூற்கு நான்முறை சொல்லியும் எண்ணிகந்துஓடுதலானும் என்பது. மற்று, இரண்டாம் எண்ணும் முறைமைக்கண் நின்ற நூலினையே வழிநூலெனக் கொண்டு, மூன்றாவதுதோன்றிய நூலே சார்புநூலாகவும் அதன் பின்னர் நூல் செய்யப்பெறாரெனவுங் கொள்ளாமோ வெனின்,— 'முதனூலிற்கிடந்த பொருளை ஓர் உபகாரப்பட வழிநூல்செய்த ஆசிரியன் செய்தக்கால் சார்புநூலெனப் பின்னர் ஓர் ஆசிரியன் நூல்செய்ததனாற் பயந்ததென்னையென்க' என்றார்க்கு, 'வழிநூலும் பிற்காலத்து அரிதாமாயின் அதனையும் எளிதாகச் செய்தலன்றே இதனாற்பயந்தது' எனின், 'அதுதானும் பின்னொருகாலத்து அரிதாமாயின் அதனையும் எளிதாகச் செய்வானல்லனோ?' என்று மறுக்க, இவ்வாராய்ச்சி வேண்டாவென்றற்கன்றே இவ்விருவகையானும் வருதலே மரபென்பானுயிற்று என்று ஒழிக.'

§ இறையனாரகப்பொருளுரை மேற்கோள்.

(பொருள்முடிபு) ஒருபுடை [சிறுபான்மை] ஒத்து, வேறு திரிபு உடையது-மற்றவைகளெல்லாம் ஒவ்வாமையை யுடையது,—புடைநூல் ஆகும்-சார்பு நூலாம்; (எ - று.)

எனவே, முதனூல் வழிநூல்கட்குச் சிறுபான்மை ஒத்துப் பெரும்பான்மை வேறுபட்டுள்ளது சார்புநூலென்றதாயிற்று. இந்நன்னூல் - தொல்காப்பியத்தைநோக்க வழிநூலும், அகத்தியத்தைநோக்கச் சார்புநூலுமாம்.

[வழிநூல் சார்புநூல்கட்குச் சிறப்புவிதி.]

கூ. முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும்---முன்னோரின்
வேறுநூல் செய்துமெனு மேற்கோளில் லென்பதற்குங்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்.

(இ - ள்.) ‘முன்னோர் மொழி பொருளே அன்றி - முதனூல்செய்தவர் சொன்ன பொருள்களையே பெரும்பாலும் ஒத்திருக்கவும் சிறுபான்மை ஒத்திருக்கவும் எடுத்துச் சொல்வது மல்லாமல், அவர் மொழியும் - அவர்களுடைய சொற்களையும், பொன்னே போல் போற்றுவம் - பொன்னைப் போலவே விரும்பி வைத்துக்கொள்ளக்கடவோம் என்பதற்கும்-என்னுங் கொள்கைக்கு அடையாளமாகவும்,—‘முன்னோரின் வேறுநூல் செய்தும் எனும் - முன்னோர் செய்த நூலையே சொல்லாமல் அந்நூலினின்றும் வழி நூல் சார்புநூல் என வேறுநூலைச் செய்தோமாயினும், மேற்கோள் இல் - (இந்நூலுள்)ஆசிரியவசனம் இல்லை,’ என்பதற்கும்-என்று சொல்லுங் குறை ஒழிவதற்காகவும்,—பழஞ் சூத்திரத்தின் கோள் கூறு - (அவர்சொல்லிய) பழஞ்சூத்திரங்களையும்ஒவ்வோரிடத்தில் எடுத்துச்சொல்லக்கடவாய்.எ-று.

எனவே, வழிநூல் சார்புநூல்களில் முன்னோர் கூறிய செய்யுள் ஒரோவிடத்தில் இருத்தலும் இலக்கணமாயிற்று. தொல்காப்பியத்திலிருந்தும் பிறநூல்களிலிருந்தும் சிற்சிலசூத்திரங்கள் இந்நூலில் ஆங்காங்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருத்தல் காண்க.

எனும் - எனினு மென்பதன் விகாரம். ஆசிரியவசனம், மேற்கோள், பழஞ்சூத்திரக்கோள் என்பன - ஒருபொருட்சொற்கள்.

முன்னே ‘போற்றுவம்’ ‘செய்தும்’ என உளப்பாட்டுத்தன்மைப்பன்மை முற்றுக்களாகவும், பின்னே ‘கூறு’ என முன்னிலை யேவலொருமைமுற்றாகவும் கூறியதனால், இச்சூத்திரம், பலர்கூடிப்பேசிப் பின்பு ஒருவனைநோக்கி முடிவு சொன்னதாகச் செய்யப்பட்டதென அறிக. (கூ)

[நூற்பொருட்பயன்.]

க0. அறம்பொரு ளின்பம்வீ டடைதல்நூற் பயனே.

(இ - ள்.) அறம் - தருமமும், பொருள்-அர்த்தமும், இன்பம்-காமமும், வீடு - மோக்ஷமும், (ஆகிய இந்நான்கு புருஷார்த்தங்களையும்), அடைதல் - அடைவது,—நூல் பயன் - நூலால் அடையும் பிரயோசனமாம்; (எ - று.)

[எழு மதம்.]

கக. * எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅ ணட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோ ளொருதலை துணிவே
பிறர்நூற் குற்றங் காட்டல் ஏனைப்
பிறிதொடு படாஅன் றன்மதங் கொளலே.

(இ - ள்.) எழுவகை மதம்-எழுவகை மதங்களாவன:—உடன்படல் - (பிறர்மதத்திற்குத் தான்) உடன்படுதலும், மறுத்தல்-(பிறர்மதத்தை)மறுத்தலும், பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவே - பிறர்மதத்தை ஒருவாறு அங்கீகரித்து (ப் பின்பு) மறுத்துவிடுதலும்,தான் நாட்டி தனாது நிறுப்பே-தானே ஒருபொருளை எடுத்துத்தாபித்து அதனை (இடந்தோறும்) நிலைநிறுத்துதலும், இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே-ஒன்றற்குஒன்று விரோதமாக இருவராலேகொள்ளப்பட்ட இரண்டு விஷயங்களுள்(ஒன்றை நீக்கி) மற்றொன்றைத் துணிந்து எடுத்துக்கொள்ளுதலும், பிறர் நூல் குற்றம் காட்டல்-பிறர்செய்த நூல்களிலுள்ள குற்றங்களை எடுத்துக்காட்டுதலும், ஏனை - மற்றும், பிறிதொடுபடாஅன் தன் மதம் கொளல் - பிறர்மதத்தோடு கலவாதவனுய்த் தன்மதத்தையே தான் கொள்ளுதலுமாம்; (எ- று.)

மதம் - கொள்கை. இம் மதங்கட்கும், மேற் சொல்லப்படும் அழகு உத்தியென்பவற்றிற்கும் உதாரணம்,இந்நூலுட்பின்வருமிடங்களிற்பெரும்பாலும் காட்டப்படும். (கக)

[பத்துக் குற்றம்.]

கஉ. குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத்தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுதல் நின்றுபய னின்மை
என்றிவை யீரைங் குற்றம் நூற்கே.

(இ - ள்.) குன்ற கூறல் - (குறித்தபொருளை விளக்குதற்கு வேண்டுஞ் சொற்களிற்) குறைவுபடச் சொல்லுதலும், மிகை பட கூறல் - (குறித்த பொருளை விளக்குதற்கு வேண்டுஞ் சொற்களினும்) அதிகப்படச்சொல்லுத

---

* இது முதல் நான்கு சூத்திரங்களிலுள்ள சொற்றொடர்களையெழுதி 'இவ்வாறு சொன்னார் பாடலனார் என்னும் ஆசிரியரெனக் கொள்க' என்பர் யாப்பருங்கலக்காரிகை யுரையாசிரியர்.

லும், * கூறியது கூறல்-(முன் தான் ஒருகால்) சொன்ன தொரு பொருளையே (பின்னும் காரணமின்றி) [அவசியமில்லாமற்] சொல்லுதலும், மாறுகொள கூறல் - (முன்சொன்னதற்குப் பின்சொல்வது) விரோதப்படச் சொல்லுதலும், வழூஉ சொல் புணர்த்தல் - குற்றமுடைய சொற்களைச் சேர்த்துவைத்தலும், மயங்க வைத்தல்-(இதற்குப் பொருள் இன்னதென்று துணியக்கூடாமல் இதுவோ அதுவோ என்று) மயங்கும்படி வைத்தலும், வெற்றென தொடுத்தல்-(பொருள் என்னுங் கருக் கொள்ளாது) வெளிறுபடச் சொற்களைச் சேர்த்துவைத்தலும்,மற்று ஒன்று விரித்தல்-(சொல்லத் தொடங்கியபொருளைச் சுருக்கி)மற்றொருபொருளை(இடையிலே)விரித்துச் சொல்லுதலும், சென்று தேய்ந்து இறுதல் - செல்லச்செல்ல (ச் சொற்செறிவு பொருட்பொலிவுகள்) தேய்ந்து முடியச் சொல்லுதலும், நின்று பயன் இன்மை-(சொற்கள்) இருந்தும் (அவற்றுக்கு) ஒரு பிரயோஜனமும் இல்லாதொழியச் சொல்லுதலும், என்ற இவை—,—நூற்கு - நூலுக்கு, ஈர் ஐங் குற்றம் - பத்துக் குற்றங்களாம்; (எ - று.)

என்றிவை - விகாரம். வெற்றெனத்தொடுத்தல் - வியங்கியார்த்தப்பிரதானமாக வல்லாமற் கூறுதல்; (வியங்கியார்த்தம் - குறிப்புப்பொருள்.)

வடநூலார் கூறுகிற §அவ்யாப்தி, அதிவ்யாப்தி, அஸம்பவம்என்னுங் குற்றங்களும் இவற்றுள்ளே அடங்குமாறு அறிந்து அடக்கிக்கொள்க.(கஉ)

[பத்து அழகு]

கங. சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலக மலையாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே.

(இ - ள்.) சுருங்க சொல்லல்-(சொற்கள் வீணாக விரியாமற்) சுருங்கிநிற்கச் சொல்லுதலும், விளங்க வைத்தல்-(அவ்வாறு சொல்லினும் யாவர்க்கும் பொருளைச்சந்தேகத்துக்கு இடமாகாமல்) விளங்கித்தோன்ற வைத்தலும், நவின்றோர்க்கு இனிமை - படிப்பவர்க்கு இன்பத்தைத் தருதலும்நல்

---

* யாதாயினும் ஒருநிமித்தத்தால் ஒன்றனைமுற்கூறிவேறொருநிமித்தத்தால் அதனையே பின்னுங் கூறுதல், அநுவாத மென்னுங் குணமா மென்க.

§ அவ்யாப்தி - இலக்கியத்தின் ஏகதேசத்தில் இலக்கண மில்லாமை; 'பசுவிற்கு வெண்ணிற முண்டு' என்றல் போல்வன. அதிவ்யாப்தி - இலக்கியமல்லாததிலும் இலக்கணமிருப்பது; 'பசுவுக்குக்கொம்புஉண்டு' என்றல் போல்வன. அஸம்பவம் - இலக்கியமுழுவதிலும் இலக்கணமில்லாமை;'பசுவுக்கு ஒற்றைக்குளம்பு உண்டு' என்றல் போல்வன.

மொழி புணர்த்தல்-நல்ல சொற்களைச் சேர்த்துவைத்தலும், ஓசை உடைமை-சந்தவின்பமுடையதாதலும், ஆழம் உடைத்து ஆதல்-(பார்க்கப்பார்க்க இவ்வளவென்று வரையறுக்கப்படாமல்) ஆழ்ந்தகருத்துக்களை யுடையதாதலும், முறையின் வைப்பே-(சொல் பொருள் இயல் அதிகாரம் முதலியவற்றையாதாயினும் ஓர் ஏற்ற) முறைப்படி (வரிசைப்பட) வைத்தலும், உலகம் மலையாமை-உயர்ந்தோர் வழக்கத்தோடு விரோதப்படாமற் சொல்லுதலும், விழுமியது பயத்தல்-சிறந்தபொருளைத் தருதலும், விளங்கு உதாரணத்தது ஆகுதல் - (எளிதில்) விளங்கத்தக்க உதாரணங்களை யுடையதாதலும், (என்னும் இவை), நூலிற்கு அழகு எனும் பத்து-நூலுக்கு அழகென்று சொல்லப்படும் பத்தாகும்; (எ - று.) (கங)

[முப்பத்திரண்டு உத்தி]

கச. நுதலிப் புகுதல் ஒத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டல் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்
சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொற் புணர்த்தல்
இரட்டுற மொழிதல் ஏதுவின் முடித்தல்
ஒப்பின் முடித்தல் மாட்டெறிந் தொழுகல்
இறந்தது விலக்கல் எதிரது போற்றல்
முன்மொழிந் துகோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தல் முடிந்தது முடித்தல்
உரைத்து மென்றல் உரைத்தா மென்றல்
ஒருதலை துணிதல் எடுத்துக் காட்டல்
எடுத்த மொழியி னெய்த வைத்தல்
இன்ன தல்ல திதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல்
பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்
தன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல்
சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்
ஒன்றின முடித்த றன்னின முடித்தல்
உய்த்துணர வைப்பென உத்தியெண் ணைன்கே.

(இ - ள்.) நுதலி புகுதல் - (இதனைச்சொல்வே னென்று முதலிற்) சொல்லித் தொடங்குதலும், ஒத்து முறை வைப்பு - இயல்களை (யாதாயினும் ஓர் ஏற்ற) முறையின்படி வைத்தலும், தொகுத்து சுட்டல் - (பலவற்றையும்) திரட்டிச்சொல்லுதலும், வகுத்துகாட்டல்-(அவ்வாறு தொகுத்துச் சொல்லியவற்றை வெவ்வேறாக) விவரித்துச்சொல்லுதலும், முடித்து காட்டல் - மேலோர் முடித்தவாறு தான்) முடித்துக்காட்டுதலும், முடிவு இடம்

கூறல்-(தான்சொல்லும் இலக்கணத்திற்கு)இலக்கியந்தோன்றுமிடத்தைச் சொல்லுதலும், தான் எடுத்து மொழிதல் - (பழஞ்சூத்திரங்களைத்) தான் (ஓரோரிடத்திலே) எடுத்துச் சொல்லுதலும், பிறன் கோள் கூறல் - பிறன் கொண்ட கொள்கையை(த் தனது நூலிற்) சொல்லுதலும்,சொல்பொருள் விரித்தல் - சொல்லின் பொருள் வெளிப்படையாக விளங்கும்படி விவரித்துச் சொல்லுதலும், தொடர்சொல் புணர்த்தல்-(ஒன்றற்குஒன்று)சம்பந்தமுடைய சொற்களைச் சேர்த்து வைத்தலும், இரண்டு உற மொழிதல்-(ஒரு வாக்கியத்தில்) இரண்டு [பல] பொருள் ஒருங்கே படும்படி சொல்லுதலும், ஏதுவின் முடித்தல் - (முன்பு காரணம் விளங்காமற் சொல்லப்பட்ட ஒன்றைப் பின்பு)காரணம் விளங்கக்காட்டி முடிவுசெய்தலும், ஒப்பின்முடித்தல் (அங்கே சொல்லக் கூடாதாயினும் ஒன்றற்குத்தான்சொல்லும்இலக்கணம் வேறொன்றற்கும்) ஒத்துவருமாயின் (அதற்கும் அதுவே இலக்கணமாக இயைபில்லாததையும் அவ்விடத்து) உடன்கூட்டி முடிவுசெய்தலும், மாட்டெறிந்து ஒழுகல்-(ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணத்தை அதனைப் பெறுதற்கு உரிய மற்றொன்றற்கும்) மாட்டிச் சொல்லுதலும், இறந்தது விலக்கல்-முன்பு உள்ளதாய்ப் பின்புவழங்காதாயின் அதனை விலக்குதலும், எதிரது போற்றல்-முன்பு இல்லாததாய்ப் பின்பு வழங்கிவருமாயின் அதனைத்தழுவிக் கொள்ளுதலும், முன்மொழிந்து கோடல்-முன்பு(ஓரிடத்து ஒன்றைச்) சொல்லி(ப்பின்பு அதனை வேண்டுமிடந்தோறும்) எடுத்துக்கொள்ளுதலும், பின் அது நிறுத்தல்-முறை தவராமல் முன் வைக்கவேண்டியதைப் பின்னே வைத்தலும்,விகற்பத்தின் முடித்தல்-(விளங்குதற்பொருட்டுப்)பல வேறுபாடுகளின் சிறப்புவாய்ப்பாட்டால்)முடித்தலும், முடிந்தது முடித்தல்-(அவ்வாறுசிறப்புவாய்ப்பாட்டால்)முடிந்ததை(ப் புலப்படவேண்டிப்பொதுவாய்பாட்டால் தொகுத்து முடித்தலும், உரைத்தும் என்றல் - (பின்னே சொல்லப்படுவதை முன்னே ஒரு நிமித்தத்தினாற் சொல்லவேண்டின்) இதனைப் பின்னே சொல்வோமென்பது தோன்ற அங்கே சுருக்கிச் சொல்லுதலும், உரைத்தாம் என்றல் - (முன்னே ஒரு நிமித்தத்தினாலே சொல்லப்பட்டதைப் பின்னே சொல்லவேண்டியவிடத்து) இதனை முன்னே தானே சொன்னோமென்பது தோன்ற அங்கே மீளவுஞ் சொல்லாதுவிடுதலும்,ஒருதலை துணிதல் - (இருவராலே ஒன்றற்கு ஒன்று விரோதமாகக் கொள்ளப்பட்ட இரண்டு பக்ஷங்களுள்) ஒருபக்ஷத்தைத் துணிந்து எடுத்துக்கொள்ளுதலும், எடுத்து காட்டல் - (தான்சொல்லும் இலக்கணத்திற்கு அமைந்த இலக்கியத்தைத்தானே)எடுத்துக்காட்டுதலும்,எடுத்தமொழியின்எய்தவைத்தல்-தான் எடுத்துக்காட்டிய இலக்கியத்தில் (தான் சொல்லும் இலக்கணத்தைப்(பொருந்தியிருக்கவைத்தலும்,இன்னது அல்லதுஇதுஎனமொழிதல்-(சந்தேகப்படநின்றவிடத்து) இதுவன்றுஇதுதானென்றுதுணிந்துசொல்லுதலும்,எஞ்சிய சொல்லின் எய்த கூறல்-சொல்லாதுவிடப்பட்டவற்றிற்குஞ் சொல்லியவற்றால் (இலக்கணம்) பொருந்தச்சொல்லுதலும்,பிறநூல்முடிந்தது தான்உடன்படுதல்-வேறு நூல்களிலேசொல்லப்பட்டகொள்கையைத் தான் அங்கீகரித்தலும், தன்குறி வழக்கம் மிக எடுத்து உரைத்தல் - தான்

(நூதனமாகக்) குறித்து வழங்கியதை (ப் பல இடங்களில்) அதிகமாகஎடுத்துச்சொல்லுதலும், சொல்லின் முடிவின் அ பொருள் முடித்தல் - சொல் முடிந்தவிடத்து அதன்பொருளையும் முடியவைத்தலும், ஒன்று இனம் முடித்தல் தன் இனம் முடித்தல் - விதியால் ஒற்றுமைப்பட்டவற்றை ஒருங்குகூட்டி முடித்தல் = ஒன்றைச்சொல்லுமிடத்து அதற்கு இனமாகிய மற்றொன்றையும் (விரியாதிருக்கவேண்டி அதனுடனே) கூட்டி முடித்தலும், உய்த்து உணர வைப்பு - (சிலசூத்திரவிதிகளைக்கொண்டு) ஆராய்ந்து அறியும்படி (ஒருபொருளை) வைத்தலும், என - என்று, உத்தி - தந்திரயுக்திகள்:—எண்நான்கு - முப்பத்திரண்டாம்; (எ - று.)—உத்தி=யுக்தி.

'ஒன்றினமுடித்தல் தன்னினமுடித்தல்' என்பது - ஓர் உத்தி; இதனை இரண்டுஉத்தியாகக்கொண்டு,'உய்த்துணரவைப்பெனும்'எனப்பாடமோதி, அதனை உத்திக்கு விசேஷணமாக்கி உரைப்பாரும் உளர்:அவ்வுரைக்கு,ஒன்றினம்-ஒருபொருட்கூட்டமும், தன்னினம் - பலபொருளீட்டமுமாம்.மதத்தினுள்ளும் அழகினுள்ளும் வருவன சிலவற்றை உத்தியுள்ளுங் கூறியது என்னையெனின்,—கொள்கைபற்றி மதமென்றும், சிறப்புப்பற்றிஅழகென்றும்,இந்த மதம் அழகு முதலியஎல்லாம் புத்திநுட்பத்தால் அமைதல்பற்றி உத்தியென்றும் கூறப்பட்டன வென்க. தலைமைபற்றிக் கூறியஇம்முப்பத்திரண்டே யன்றி,உரையிற்கோடல், உடம்பொடுபுணர்த்தல், ஏற்புழிக்கோடல், மொழிந்தபொருளோ டொன்ற அவ்வயின் மொழியாததனையும்முட்டின்று முடித்தல் முதலாகப் பிறவும் சில உள்ளன வெனக் கொள்க;அவற்றையும் ஒருவாறு இவற்றில் அடக்கவுங் கூடும். (கச)

[உத்தி இன்னதென்பது.]

கரு. நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி யறிந்திதற் கிவ்வகை யாமெனத்
தகும்வகை செலுத்துதல் தந்திர வுத்தி.

(இ - ள்.) நூல் பொருள் - ஓர் இலக்கணநூலினுற் சொல்லப்படுகின்ற பொருளை, வழக்கொடு வாய்ப்ப காட்டி-உலகவழக்குச் செய்யுள்வழக்குக்களோடு பொருந்தக்காண்பித்து, ஏற்புஉழிஅறிந்து - (மற்றோரிலக்கியநூலிலும்) ஏற்கும் இடத்தை அறிந்து, இதற்கு இ வகை ஆம் என - இவ்விடத்துக்கு இப்படி ஆமென்று நினைத்து, தகும் வகை - தக்கபடியாக, செலுத்துதல் - நடத்துவது,—தந்திரம் உத்தி - தந்திரயுக்தியாம்; (எ - று.)

தந்த்ரம், யுக்தி என்னும் வடசொற்களுக்கு - முறையே நூல் என்றும், பொருந்தும்விதம் என்றும் பொருள். (கரு)

[ஓத்து.]

கசு. நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை யொருவழி வைப்பது
ஓத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்.

(இ - ள்.) நேர் இனம் மணியை - ஒரு சாதியாயுள்ள இரத்தினங்களை' நிரல் பட-வரிசையாக, வைத்து ஆங்கு - பதித்துவைத்தாற் போல,—ஓர் இனம் பொருளை - ஒருசாதியாயுள்ள பொருள்களை, ஒருவழி வைப்பது-ஒரு வழிப்பட வைத்துச் சொல்வது, ஓத்து - இயலென்னும் உறுப்பாம், என - என்று, உயர்மொழி புலவர் - சிறந்தநூல்களை யறிந்த புலவர்கள்,மொழிப- சொல்வார்கள்; (எ - று.)—மொழி - நூலுக்குக் கருவியாகுபெயர்.

நேர்தல்-ஒன்றுபடுதல். 'நேரினம்' எனவே, ஒருசாதியாயினும்தம்மில் ஒத்தனவே கூறல்வேண்டும் என்பதாம். 'உயர்மொழிப்புலவர்' என்றது, அங்ஙனம் நூல்செய்தல் உயர்ந்தோர்கடனென்றவாறு. ஓத்தெனினும், இய லெனினும் ஒக்கும்.

இதுவும், வருஞ்சூத்திரமும் -* தொல்காப்பியத்தினின்றுஇவ்வாசிரிய ரால் எடுத்துக்கொள்ளப்பட்டன. (கசு)

[படலம்.]

கஎ. ஒருநெறி யின்றி விரவிய பொருளாற்
பொதுமொழி தொடரி னதுபடல மாகும்.

(இ - ள்.) ஒரு நெறி இன்றி விரவிய பொருளால் - ஒருவழிப்படாமற் கலந்த [பலவேறுவகைப்பட்ட] பொருள்களோடுபொருந்தி,பொதுமொழி தொடரின் - பொதுவகையாகக் கூறினால், அது—, படலம் ஆகும் - படல மென்னும் உறுப்பாம்; (எ - று.)

படலமெனினும், அதிகாரமெனினும் ஒக்கும். § இயலென்பது-ஒருசா திப் பொருள்கொண்டது,படலமென்பது - பலசாதிப்பொருள்கொண்டது என அறிக. இயலென்பதற்கு உதாரணம் - இந்நூலில்எழுத்தியலில்எழுத்தி லக்கணமே வருதலும்,பதவியலில் பதவிலக்கணமேவருதலும், புணரியலில் புணர்ச்சியிலக்கணமே வருதலும், அதிகாரமென்பதற்கு உதாரணம்-எழுத் ததிகாரத்தில்இவ்விலக்கணங்களெல்லாம்பொருந்திவருதலும்காண்க.(கஎ)

[சூத்திரம்.]

கஅ. சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்.

(இ - ள்.) ஆடியின்-(பெரிய உருவங்களின் பிரதிபிம்பத்தைத் தன்னு ள்ளே செவ்வையாக அடக்கிஇனிதாகக்காட்டுகின்றசிறிய)கண்ணாடிபோல, சில் வகை எழுத்தில் - சிலவகை யெழுத்துக்களாலாகிய சொற்களில், பல் வகை பொருளை - பலவகைப்பட்டு அகன்ற பொருள்களை, செவ்வன்-செவ் வையாக, செறித்து - அடக்கி, இனிது விளக்கி - (நோக்குவார்க்கு) இனிய

---

* தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுளியல் - கஎக, கஎஉ.

§ இத்தன்மை மாறியும் வரும்; திருக்குறள் முதலியவற்றிற் காண்க,

தாக (அப்பொருளை) விளங்கச்செய்து,—திட்பம் - (குற்றமில்லாமையாற்) சொல்வலிமை பொருள்வலிமைகளும், நுட்பம் - (ஆழமுடைமையாற்) பொருள் நுணுக்கங்களும், சிறந்தன - சிறந்துவருவன,—சூத்திரம் - சூத்திரங்களாம்; (எ - று.) (கஅ)

[சூத்திரநிலை.]

கக. ஆற்றொழுக் கரிமா நோக்கந் தவளைப்
பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத் திரநிலை.

(இ - ள்.) சூத்திரம் நிலை-சூத்திரங்கள் ஒன்றோடொன்று பொருளால் தொடர்ந்துநிற்கும் நிலைகள்,—ஆறு ஒழுக்கு-(இடையறாமல் ஒருமுகமாகவே செல்லுகின்ற) ஆற்றுநீரோட்டத்தையும், அரிமா நோக்கம்-(முன்னும்பின்னும் பார்க்கின்ற) சிங்கத்தின் பார்வையையும், தவளை பாய்த்து - (நடுவே சிறிது இடம்விட்டுக் குதிக்கின்ற)தவளையின் குதிப்பையும்,பருந்தின் வீழ்வு-(நெடுந்தூரத்திலிழிந்து ஒன்றைக்கௌவிப்போதற்குத் தலைகீழாக விழுகின்ற) பருந்தின் வீழ்ச்சியையும், அன்ன - போல்வனவாம்; (எ - று.) (கக)

[சூத்திர வகை.]

உ0. பிண்டந் தொகைவகை குறியே செய்கை
கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம்.

(இ - ள்.) சூத்திரம்-சூத்திரங்கள்,—பிண்டம்-(பலதிறப்பொருள்களையும் ஒருங்குதிரட்டிக்கூறும்) பிண்டசூத்திரமும், தொகை - (அப்பலதிறப் பொருள்களையும் வேறுவேறாகத் தொகுத்துச் சொல்லுந்)தொகைச்சூத்திரமும், வகை - (அவ்வாறு தொகுத்துச்சொல்லப்பட்டவற்றை வேறுவேறாக வகுத்துச் சொல்லும்) வகைச்சூத்திரமும், குறி - (இவைஉயிர் இவைமெய் என்பது முதலாக அறியவருங்)குறிச்சூத்திரமும், செய்கை-(புணர்ச்சிமுடிபு முதலியவற்றைச் செய்கின்ற)செய்கைச்சூத்திரமும், கொண்டு இயல் புறன் அடை-(இவற்றையெல்லாம்)ஏற்றுக்கொண்டு (இவற்றின்) புறத்து அடுத்து வரும் புறனடைச்சூத்திரமும் ஆகிய,கூற்றன-(ஆறு)பிரிவையுடையனவாம்.

இந்நூலில், பிண்டசூத்திரம் - "நன்கியம்புவ னெழுத்தே" என்றாற் போல்வன. தொகைச் சூத்திரம் - "பன்னிருபாற்றதுவே" என்றாற்போல்வன. வகைச்சூத்திரம் - "மொழிமுதற்காரணமாம்" என்றாற் போல்வன. குறிச்சூத்திரம்-"அம்முத லீராறுவி" என்றாற் போல்வன. செய்கைச்சூத்திரம் - "ணனவல்லினம்வரட்டறவும்" என்றாற் போல்வன. புறனடைச்சூத்திரம் - "இடையுரி வடசொலின்" என்றாற் போல்வன. (உ0)

[உரையின் பொதுவிலக்கணம்.]

உக. பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்
விரிவதி காரந் துணிவு பயனொடு
ஆசிரிய வசனமென் றீரே ழுரையே.

(இ - ள்.) பாடம் - மூலபாடமெடுத்துரைத்தலும், கருத்து - (தாற்பரியத்தைச் சுருக்கமாக எழுதுங்) கருத்துரையும், சொல் வகை - பதங்களைப் பிரித்துரைத்தலும், சொல் பொருள்-சொல்லுக்குப் பொருளெழுதும் பதவுரையும்,தொகுத்துரை-(பதத்தைத் தனித்தனி எடுத்துப் பொருளெழுதாமல்) தொகுப்பாக எழுதுகின்ற பொழிப்புரையும், உதாரணம் - உதாரணமெடுத்துரைத்தலும்,வினு-(தானே)வினுவிக்கொள்ளுதலும்,விடை-(தானே அவ்வினுக்களுக்கு) உத்தரமுரைத்தலும், விசேடம்-(சூத்திரத்துஉள்ளபொருளன்றியும் அவ்விடத்துக்கு) வேண்டுவனவற்றைத் தந்துரைத்தலும், விரிவு-(வேண்டுவனவற்றையெல்லாம்) விரித்துரைத்தலும், அதிகாரம்-அதிகாரத்தோடு பொருந்தக் காட்டி யுரைத்தலும், துணிவு - (சந்தேகப்பட நின்றவிடத்து இதற்கு இதுவே பொருளெனத்)துணிந்துரைத்தலும்,பயனேடு-(இவ்வாறுசொல்லியதனுல் வந்த)பயன் இதுவென் றுரைத்தலும், ஆசிரியவசனம்-ஆனரோர் நூல்களினின்று மேற்கோள்காட்டியுரைத்தலும்,என்று-, உரை -(நூலுக்கு) உரை, ஈர் எழ்-பதினுன்குவகையாகச் செய்யப்படும்.

சொல்வகை என்பதற்கு-சொற்களுக்கு இலக்கணம்முதலியன உரைத்தலென்பாருமுளர். (உக)

[காண்டிகையுரை.]

உஉ. கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்ரேடு வினுவிடை யாக்க லானுஞ்
சூத்திரத் துட்பொருள் தோற்றுவ காண்டிகை.

(இ - ள்.) (மேற்கூறிய பதினுன்கனுள்), கருத்து-கருத்துரையும்,பதப்பொருள்-பதவுரையும், காட்டு - உதாரணமும் ஆகிய, மூன்றினும் - மூன்றுவகைகளாலும்,—அவற்ரேடு - அம்மூன்றனுடனே, வினு விடை ஆக்கலானும் - வினுவும் விடையும் ஆகிய இரண்டுவகைகளையுங் கூட்டிச்சொல்லுதலாலும்,—சூத்திரத்து உள் பொருள்-சூத்திரத்திலுள்ள பொருளை, தோற்றுவ - விளக்கியுரைப்பன,—காண்டிகை - காண்டிகையுரைகளாம்; (எ-று.)

'மூன்றினும்' எனப் பிரித்துக் கூறியதனுல், வினுவிடை யின்றியும் காண்டிகையுரை வழங்கு மென்க. (உஉ)

[விருத்தியுரை.]

உ௩. சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்கு
இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐய மகலவைங் காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை யெஞ்சா திசைப்பது விருத்தி.

(இ - ள்.) சூத்திரத்து உள்பொருள் அன்றியும் - சூத்திரத்தில் உள்ள பொருள்மாத்திரமே யல்லாமலும், ஆண்டைக்கு - அவ்விடத்துக்கு, இன்றி அமையா - இல்லாமல்முடியாத [அவசியமான], யாவையும் - எல்லாப் பொ

ருள்களும், விளங்க - விளங்கும்படி, தன் உரையானும் - தான் உரைக்கும் உரையாலும், பிற நூலானும் - ஆசிரியவசனங்களாலும், ஐங் காண்டிகை உறப்பொடு - (மேற்கூறிய காண்டிகையுறுப்பு ஐந்தினுலும் ஐயம் அகல - சந்தேகந் தீர, மெய்யினை - மெய்யான பொருளை, எஞ்சாது - குறைவுபடாமல் [விரித்து], இசைப்பது - உரைப்பது,—விருத்தி - விருத்தியுரையாம்.

மேற்கூறிய பதினன்கு வகையுங் கொண்டது விருத்தியுரையென்க.()

[நூல் என்னும் பெயர்க்குக் காரணம்.] *

உச. பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு.

(இ - ள்.) தன் சொல் பஞ்சி ஆ - தன்சொற்களே பஞ்சு ஆகவும்,பனுவல் இழைஆக-செய்யுளே இழையாகவும், செம் சொல் புலவனே சேயிழை ஆ-செவ்வையாகிய சொற்களை யறிந்தபுலவனே நூற்கின்ற பெண்ணுகவும், எஞ்சாத வாயே கை ஆக-குறைவில்லாத வாயே கையாகவும்,மதியே கதிர் ஆக - அறிவே நூற்குங்கதிராகவும், மை இலா நூல்-குற்றமில்லாத கல்வி நூல், முடியும் ஆறு - முடியுந்தன்மை, (இது); (எ - று.)

ஆதலால், நூலென்றது - உவமவாகுபெயராம். பஞ்சுகொண்டு இழைத்து நூற்கப்படும் நூல் போலச் சொற்கொண்டு தொடுத்து அமைக்கப்படுவது நூ லென்க. பஞ்சி=பஞ்சு; பஞ்சு இதன் என்றும் பிரிக்கலாம். (உச)

[இதுவும் அது.]

உரு. உரத்தின் வளப்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா—மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

---

* இனி நூலென்ற சொற்குப் பொருள் யாதோ வெனின்:—நூல்போறலின், நூலென்ப; பாவைபோல்வாளைப் பாவையென்றது போல. என்னை ? நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளாற் கைவல்மகடூஉத் தனது செயற்கைநலந் தோன்ற ஒரிழைப்படுத்தலாம், உலகத்து நூல்நூற்றலென்பது: அவ்வாறே,சுகிர்ந்துபரந்த சொற்பரவைகளாற் பெரும்புலவன்தனது உணர்வுமாட்சியின் பிண்டம்படலம் ஓத்துச் சூத்திரமென்னும் யாப்புநடைபடக் கோத்து நூற்கப்படலி னென்பது. இனி, ஒருசாரார், நூல்போலச் செப்பஞ்செய்தலின்நூ லென்ப. இனி, தந்திரமென்னும் வடமொழிப்பொருளை நூலென வழங்குதல் தமிழ்வழக் கெனக் கொள்க. இது நூலென்ற சொற்குப் பொருள்' என்ற இறையனாரகப்பொருளுரை அறியத்தக்கது. இனி, நூல் என்ற பெயரை 'ஸூத்ரம்'என்னும் வடமொழியின் பொருளமைந்த தென்பாரும் உளர்.

(இ - ள்.) புரத்தின் உரத்தின் வளம் பெருக்கி - உடம்பினுள் உள்ள அறிவின் வளத்தை வளர்வித்து,—உள்ளிய தீமை வளம் முருக்கி-நினைக்கப்பட்ட தீமையாகிய அறியாமையின் மிகுதியை ஒழித்து,—பொல்லா மரத்தின் கனம் கோட்டம் தீர்க்கும் நூல் அஃதே போல்-கெட்ட மரத்தினது மிக்க கோணலைப் போக்குகின்ற எற்றுநூலின் அம்மாட்சிமை போலவே, நூல் மாண்பு-கல்வி நூலின் மாட்சிமை, மாந்தர் மனம் கோட்டம்தீர்க்கும்-மனிதரது மனத்தின் கோணலைப் போக்கும்; (எ - று.)

இதனாலும், நூல்-உவமவாகுபெயராம். மரம் முதலியவற்றின் கோணலைத் தீர்த்துச் செப்பஞ்செய்யும் எற்றுநூல்போல மனத்தின் கோணலைத் தீர்த்துச் செவ்வைசெய்வது நூலென்க. (உரு)

உ. ஆசிரியனது வரலாறு.

[நல்லாசிரியனிலக்கணம்.]

உசு. குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே.

(இ - ள்) குலன்-உயர்குடிப்பிறப்பும், அருள்-ஜீவகாருண்யமும், தெய்வம் கொள்கை - கடவுள்வழிபாடும், மேன்மை - பெருந்தகைமையும், கலை பயில் தெளிவு - (பல) நூல்களிற் பழகிய தேர்ச்சியும், கட்டுஉரை வன்மை- (நூற்பொருள்களை மாணாக்கர் எளிதில் உணரும்படி) தொடுத்துச்சொல்லுகின்ற சொல்வன்மை [போதநாசக்தி] யும், நிலம் மலை நிறைகோல் மலர் நிகர் மாட்சியும் - பூமியையும் மலையையும் தராசுகோலையும் பூவையும் ஒக்கின்ற குணங்களும், உலகு இயல் அறிவொடு-உலகநடையை யறிகிற அறிவும், உயர்குணம் இனையவும் - இவைபோல்வன பிறஉயர்ந்த குணங்களும், அமைபவனே - பொருந்தியிருக்கப்பெற்றவனே,— நூல் உரை ஆசிரியன்-நூலைக் கற்பிக்கும் ஆசிரியனாவான்; (எ - று.)

நிலம் மலை நிறைகோல் மலர் நிகர் மாட்சியை, அடுத்த நான்கு சூத்திரங்களால் முறையே கூறுவர். ஈற்றிலுள்ள பிரிநிலையேகாரம், பிரித்துக்கூட்டப்பட்டது.

[க. நிலமாட்சி.]

உஎ. தெரிவரும் பெருமையுந் திண்மையும் * பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே.

(இ - ள்.) தெரிவு அரு - (ஓரிடத்தில் நின்று முழுவதுங்) காணுதற்கு அரிய, பெருமையும்-(உருவப்பரப்பின்)பெருமையும், திண்மையும்- (பெரிய

* "அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை,இகழ்வார்ப்பொறுத்தல் தலை" என்ற திருக்குறளைக் காண்க.

பாரஞ்செய்து தன்மேல் நெருங்கியவைகளாற் கலங்காத) வலிமையும், பொறையும் -(தன்னையடுத்த மனிதர் தோண்டுதல் முதலிய குற்றங்களைச் செய்தாலும் பொறுக்கின்ற) பொறுமையும்,பருவம் முயற்சி அளவின்பயத்தலும்-தக்கபருவத்திலே (உழவர்செய்கின்ற) முயற்சியளவுக்குத்தகுதியாக (அவர்க்கு)ப் பயன் கொடுத்தலும்,—நல் நிலம் மருவிய மாண்பு ஆகும் - நல்லநிலத்தினிடத்துப் பொருந்திய நற்குணங்களாம்; (எ - று.)

பிறரால் வகுத்தறியப்படாத கல்வியறிவின்பெருமையும்,பெரியவாதஞ் செய்து தன்மேல் நெருங்கினவராற் கலங்காத வல்லமையும், தன்னையடுத்தவர் இகழ்தல் முதலிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கும் பொறுமையும், மாணுக்கர் செய்யும் முயற்சியளவிற்குத் தக அவர்க்குப் பயனைத்தருதலும் ஆசிரியனிடத்துப் பொருந்துங் குணங்களாதலால், நிலம் அவனுக்கு உவமையாமென அறிக. 'தெரிவரு' என்பதைத் திண்மைபொறைகளோடும் கூட்டுக (உஎ)

[உ. மலைமாட்சி.]

உஅ. அளக்க லாகா வளவும் பொருளுந்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே.

(இ - ள்.) அளக்கல் ஆகா - அளவுசெய்தற்கு அரிய, அளவும் - தன் வடிவத்தின் அளவும் பொருளும் - பலவகைப்பொருள்களை யுடைமையும், துளக்கல் ஆகா நிலையும்-(எப்படிப்பட்டவலிமையுடையவர்களாலும்)அசைக்கப்படாத உருவத்தின் நிலைமையும், தோற்றமும் - (நெடுந்தூரத்திலுள்ளாராலும்) காணப்படுகின்ற உயர்ச்சியும், வறப்பினும் வளம் தரும் வண்மையும்- (மழைபெய்யாமல்) வறந்துபோனாலும் (தன்னைச்சேர்ந்த உயிர்கட்கு) நீர்வளத்தைக் கொடுக்கின்ற கொடையும்,—மலைக்கு - மலைக்கு (உள்ள நற்குணங்களாம்); (எ - று.)

அளவுகாணக்கூடாத கல்வியினளவும், பலவகை நூற்பொருள்களும், எப்படிப்பட்ட புலமையுடையோராலும் அசைக்கப்படாத கல்வியறிவின் நிலையும், நெடுந்தூரத்திலுள்ளாராலும் அறியப்படும் உயர்ச்சியும், பொருள் வருவழி வறந்தாலும் தன்னைச்சேர்ந்த மாணுக்கர்க்குக் கல்விப்பொருளைக் கொடுக்குங் கொடையும் ஆசிரியனுக்கு உள்ள குணங்களா மாதலால்,மலை அவனுக்கு உவமையா மென அறிக. 'அளக்கலாகா' என்பதைப் பொருளோடும் கூட்டுக. மலைக்கு மாண்பாகும் எனமுற்சூத்திரத்தினின்றும் வினை வருவித்து முடிக்க. (உஅ)

[ரு. நிறைகோல்மாட்சி.]

உகூ. ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலும்
மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே. *

---

* "சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்,கோடாமை சான்றோர்க்கு அணி" என்ற திருக்குறள் காணத்தக்கது.

(இ - ள்.) பொருளை ஐயம் தீர உணர்த்தலும் - (கிறுக்கப்பட்ட) பொருளினளவைச் சந்தேகந் தீரக் காட்டுதலும், மெய் நடு நிலையும் - உண்மை பெறத் தான் (இரண்டுதட்டுக்கும்) நடுவே (ஒருபாற்கோணாமல்) நிற்றலும், —நிறைகோற்கு மிகும்-தராசுகோலுக்கு (நற்குணங்களாக)மிகும்; (எ-று.)

வினவப்பட்ட சொற்பொருளினியல்பைச்சந்தேகந்தீரஅறிவித்தலும் புலவர் இருவர் மாறுபட்டாராயின் உண்மைபெறத் தான்அவ்விருவர்க்கும் நடுவாகப் பக்ஷபாதமின்றி நிற்றலும் ஆசிரியனிடத்துக் குணங்களாக மிகுமாதலால் நிறைகோல் அவனுக்கு உவமையாமென அறிக. ஆசிரியனுக்கு மெய்ந்நடுநிலை - மாணுக்கர்பலருள் ஒருவனிடத்து விருப்பாகவும் ஒருவனிடத்து வெறுப்பாகவும் உணர்த்தாமையுமாம். (உக)

[ச. மலர்மாட்சி.]

௩0. மங்கல மாகி யின்றி யமையாது
யாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே.

(இ - ள்.) மங்கலம் ஆகி-சுபகாரியங்கட்கு உரியதாய், இன்றி அமையாது - (அலங்கரிக்குந் தான்) இல்லாமல் (யாதொருசெய்கையும்) முடியாதாக, யாவரும் மகிழ்ந்து மேல் கொள - கண்டோரெல்லாரும் விரும்பி மேலாகத் தன்னைச் சூடிக்கொள்ள, மெல்கி-மென்மைக்குணமுடையதாய், பொழுதில் முகம் மலர்வு உடையது - மலர்தற்கு உரியகாலத்தில்முகமலர் தலை யுடைமை, பூ - பூவின் குணமாம்; (எ - று.)

சுபகாரியத்துக்கு உரியனாய்ச் சிறப்பிக்குந் தான் இல்லாமல்யாதொரு செய்கையும் முடியாதாகக் கண்டோரெல்லாரும் விரும்பிமேலாகத் தன்னை வைத்துக்கொள்ளமெல்லியகுணமுடையவனாகிப் பாடஞ்சொல்லுதற்குரிய காலத்தில் முகமலர்ச்சியை யுடையவனாயிருத்தல் ஆசிரியனுக்குக்குணமாதலால், பூ அவனுக்கு உவமையாமென அறிக. (௩0)

[ஆசிரியராகாதவர்.]

௩க மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பும்
அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலும்
கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியரா குதலே.

(இ - ள்.) மொழி குணம் இன்மையும் - பாடஞ்சொல்லுங்குணமில்லாமையையும், இழி குணம் இயல்பும் - தாழ்ந்த குணமாகிய சுபாவத்தையும், அழுக்காறு - (மாணுக்கர்க்கு வருங்கல்வியைக்குறித்துக்கொள்ளும்)பொறாமையையும், அவா - (செல்வத்தின்மேல் அதிகமாகவைக்கும்)ஆசையையும், வஞ்சம் - (மெய்ப்பொருளைமறைத்துப் பொய்ப்பொருளைக்கூறி) வஞ்சித்தலையும், அச்சம் ஆடலும் - (கேட்பவர்க்கு) அச்சமுண்டாகப்பேசுதலையும்,

கழல்குடம் மடல்பனை பருத்திக்குண்டிகை முடம்தெங்கு ஒப்பு எனமுரண்கொள் சிந்தையும் - கழற்காய்பெய்த குடமும் கூரிய கருக்கு மடல்கள்விரியப்பெற்ற பனைமரமும் பஞ்சுஅடைத்த குடுக்கையும் வளைந்த தென்னைமரமும் (ஆகிய நான்கும்தமக்கு)ஒப்பென்று சொல்லும்படிமாறுபாடுகொண்ட மனத்தையும், உடையோர்-உடையவர்கள்,—ஆசிரியர் ஆகுதல் இலர் - கற்பிக்கும் ஆசிரிய ராகுத லிலராவர் [ஆசிரியராகார்]; (எ - று.)

இனி, 'மொழிகுணமின்மை' என்பதற்கு - கீழ் நல்லாசிரியர்க்குச் சொன்ன நற்குணங்க ளில்லாமை யென்றும், போதிக்குந் திறமில்லாமை யென்றும், 'அச்சமாடல்' என்பதற்கு - சபைக்கு அஞ்சுதலையுடைமையென்றும் பொருள் கொள்ளலாம். கழற்குடம் முதலியவற்றின்தன்மையை,மேல் நான்கு சூத்திரங்களால் முறையே கூறுவர். (௩க)

[க. கழற்குடத்தின் தன்மை.]

௩௨. பெய்தமுறை யன்றிப் பிறழ வுடன்றருஞ்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

(இ - ள்.) பெய்த முறை அன்றி - (முன்பு தன்னுள்ளே) இட்டமுறையின்படி யல்லாமல், பிறழ - (முன் இடப்பட்டவையும் பின் இடப்பட்டவையும் அம்முறை) மாறிப்போம்படி, உடன் தரும் - (கொட்டும்போது) விரைவிலே (தன்னுள்ளே கொண்ட கழற்காய்களைக்) கொடுக்கின்ற, செய்தி - செய்கை,—கழல் பெய் குடத்தின் சீர்-கழற்காய்பெய்த குடத்தின்தன்மையாம்; (எ - று.)

தாம் கற்றுக்கொண்ட முறையினு லல்லாமல் முன்பின்னுகஅம்முறை மாறுபடப்போதிக்கும்போதுதம்முள்ளேகொண்டநூற்பொருள்களைவிரைவிலே தருகின்ற செய்கை ஆசிரியராகாதவரது குற்றமாதலால், கழற்குடம் அவர்க்கு உவமையா மென அறிக. (௩௨)

[உ. மடற்பனையின் தன்மை.]

௩௩. தானே தரக்கொளி னன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை.

(இ - ள்.) தானே தர - (தன் பழங்களைத்) தானே கொடுக்க,கொளின் அன்றி - கொண்டா லல்லாமல், தன்பால் மேவி - (ஒருவர்) தன்னிடம் நெருங்கி ஏறிவந்து, கொள - பறித்துக்கொள்ளும்படி,கொடாஇடத்தது - இடங்கொடாதது,—மடல்பனை -(தன்வடிவமுழுவதும்) கூரியகருக்குமடல்கள் விரியப்பெற்ற பனைமரத்தின் தன்மையாம்; (எ-று.)—இம்மடற்பனையிலேறுவார் அம்மடல்களின் கருக்கிஞற் கொடும்புண்படுவ ரென்க.

தாமே தம்மிடத்திலுள்ள நூற்பொருள்களைச் சொல்லப்பிறர்அறிந்துகொண்டா லல்லாமல் ஒருவர் தம்மிடம் நெருங்கி வந்து விஞவி அறிந்துகொள்ள இடங்கொடாதவர் ஆசிரியராகாதவ ராதலால்,மடற்பனை அவர்க்கு உவமையா மென அறிக. கொடாவிடத்தது - விகுதி பிரித்துக் கூட்டப்பட்டது. (௩௩)

[௩. பருத்திக்குண்டிகையின் தன்மை.]

௩௪. அரிதிற் பெயக்கொண் டப்பொரு டான்பிறர்க்கு
எளிதீ வில்லது பருத்திக் குண்டிகை.

(இ - ள்.) அரிதின் பெய கொண்டு - (பஞ்சைஉட்கொண்டபோதும்) அருமையாக [வருத்தத்தோடு] (சிறிதுசிறிதாக] அடைக்கத்(தன்னுள்ளே) கொண்டு, அ பொருள் - அப்பஞ்சை, தான் பிறர்க்கு எளிது ஈவு இல்லது - (கொடுக்கும்போது) தான் பிறர்க்கு எளிதிற்கொடாதது,—பருத்தி குண்டிகை - பஞ்சு அடைத்த குடுக்கையின் தன்மையாம்; (எ - று.)

கல்வியைக் கற்றபோதும் வருத்தத்தோடு சிறிதுசிறிதாகக் கற்பிக்கத் தாம் அறிந்துகொண்டு பாடஞ்சொல்லும்போதும்அக்கல்வியைத் தாம்பிறர்க்கு எளிதிற்கொடாதவர் ஆசிரியராகாதவ ராதலால், பருத்திக்குண்டிகை அவர்க்கு உவமையா மென அறிக. தன்வாய் சிறியதாதலாற் சிறிதுசிறிதாகவேகொண்டு அவ்வாறே கொடுக்கின்ற குண்டிகைபோல,தம்உணர்வுசிறியதாதலாற் சிறிதுசிறிதாகவே கற்று மாணுக்க னுணர்வுபெரியதாயினும்அவ்வாறே கொடுப்பவ ரென்றபடி. (௩௪)

[௪. முடத்தெங்கின் தன்மை]

௩௫. பல்வகை யுதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கு மதுமுடத் தெங்கே.

(இ - ள்.) பல் வகை உதவி -(நீர்பாய்ச்சுதல்முதலிய) பலவகைகளாலும் உபகரித்து, வழிபடுபண்பின்-(தனக்கு)வழிபாடுசெய்கின்ற[போற்றிவளர்க்கின்ற] தன்மையினின்றும், அல்லோர்க்கு - அல்லாத பிறர்க்கு, அளிக்கு மது - (தன்காய்களைத்) தருவது,—முடம் தெங்கு - (வேலிக்குவெளிப்புறத்தே) வளைந்த தென்னைமரத்தின் தன்மையாம்; (எ - று.)

பொருள்கொடுத்தல் முதலிய பலவகைகளாலும் உபகரித்துத் தமக்கு வழிபாடுசெய்யும் நன்மாணுக்கர்க்குத் தராமல் அத்தன்மையரல்லாதபிறர்க்குத தாம்கற்ற நூற்பொருளைத் தருபவர்ஆசிரியராகாதவ ராதலால்,முடத்தெங்கு அவர்க்கு உவமையா மென அறிக. (௩௫)

௩. பாடஞ்சொல்லுதலின் வரலாறு.

௩௬. ஈத லியல்பே யியம்புங் காலைக்
காலமு மிடனும் வாலிதி னேக்கிச்
சிறந்துழி யிருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பிமுக மலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்
கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்த லென்ப.

(இ - ள்.) ஈதல் - (ஆசிரியன் மாணாக்கர்க்கு நூலைக் கற்றுக்கொடுத்த வினது,இயல்பு - முறைமையை, இயம்புங்காலை-சொல்லும்போது,—காலமும் இடனும்-(இருவர்க்கும் உரிய) காலத்தையும் இடத்தையும்,வாலிதின் நோக்கி - செவ்வையாக ஆராய்ந்துபார்த்து, சிறந்த ,உழி இருந்து - மேம்பட்ட இடத்தில் இருந்து, தன் தெய்வம் வாழ்த்தி - தான் வழிபடுங் கடவுளைத் துதித்து, உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து-(தன்னாற்) பாடஞ் சொல்லப்படும் நூற்பொருளைத் தன்மனத்திற் பொருத்தமாகமுன்னமே நிறைத்து வைத்துக்கொண்டு, விரையான்-விரைவுபடாமலும், வெகுளான் - கோபியாமலும், விரும்பி - விருப்பத்தோடுகூடி, முகம் மலர்ந்து - மலர்ந்த முகமுடையவனாய், கொள்வோன் கொள் வகை அறிந்து-கற்றுக் கொள்ளும் மாணாக்கன் தன்மனத்திற் கொள்ளுந் தன்மையை அறிந்து கொண்டு, அவன் உளம் கொள-அவன் மனத்தில் ஏற்றுக்கொள்ளும்படி, கோட்டம் இல் மனத்தின்-மாறுபாடில்லாத நன்மனத்துடனே, நூல்-நூற் பொருளை, கொடுத்தல் - கற்றுக்கொடுத்தலாம், என்ப - என்று சொல்வர், (அறிவுடையோர்); (எ - று.)—சிறந்துழி - விகாரம். கொள்வோன் கொள் வகை - பாடங்கேட்பவனது அறிவின் திறம். (௩௬)

௪. மாணாக்கனது வரலாறு.

[மாணாக்கராதற்கு உரியவர்.]

௩எ. * தன்மக னாசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளற்கு உரைப்பது நூலே.

(இ - ள்.) தன் மகன் - தனது புத்திரனும், ஆசான் மகன் - தனது ஆசிரியனது புத்திரனும், மன் மகன்-அரசனது புத்திரனும், பொருள் நனி கொடுப்போன்-செல்வத்தை மிகுதியாகக் கொடுப்பவனும், வழிபடுவோன்-(தனக்கு) வழிபாடுசெய்பவனும், உரை கோளாளற்கு - (தான்சொல்லும்) உரையை (விரைவிலே) மனத்திற்கொள்ளும் அறிவுடையவனும்ஆகிய இவர்கட்கு, நூல் உரைப்பது - நூல் சொல்லத்தக்கதாம்; (எ - று.)

தன்மகன் முதலிய நால்வர்க்கும் வழிபாடின்றியும் உரைக்கவேண்டுமென்பார் அவரை முன்வைத்து, உரைகோளாளனும் வழிபடுதல் வேண்டுமென்று அறிவித்தற்கு அவனை வழிபடுவோனுக்குப்பின்னே வைத்தார். ()

[மாணாக்கரின் வகை - ௩.]

௩அ. அன்ன மாவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

(இ - ள்.) அன்னம் ஆவே - அன்னப்பறவையும் பசுவும் என்னும் இரண்டையும், மண்ணொடு கிளியே-நிலமும் கிளியும் என்னும் இரண்டையும்,

* தொல்காப்பியத்து இளம்பூரணருரை மேற்கோள்.

இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி-சில்லிக்குடமும் ஆடும் எருமையும் பன்னாடையும் என்னும் நான்கையும், அன்னர் - ஒப்பவர்,—தலை இடை கடை மாணாக்கர்-(முறையே)உத்தமமாணாக்கரும்மத்திமமாணாக்கரும்அதம மாணாக்கரு மாவர்; (எ - று.)—இது, முறைநிரனிறைப்பொருள்கோள்.

இவற்றுள், அன்னம் பாலையும் நீரையும் வேறு பிரித்துப் பாலைமாத்திரம் உட்கொண்டு நீரை நீக்கிவிடுதல்போல முதல்மாணாக்கர் சாரத்தையும் அசாரத்தையும் வேறுபிரித்துச்சாரத்தை உட்கொண்டு அசாரத்தைவிலக்கி விடுதலாலும், பசு மிக்கபுல்லுள்ள இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிரம்ப மேய்ந்து பின்பு ஓரிடத்தில் இருந்து சிறிதுசிறிதாக அதனை வாயில் வருவித்துக்கொண்டு மென்றுதின்று ஜீர்ணப்படுத்துதல் போல முதல் மாணாக்கர் மிக்க கல்வியுள்ள ஆசிரியனைக் கண்டால் அக்கல்வியை உள்ளம் நிரம்பக்கேட்டு உட்கொண்டு பின்பு ஓரிடத்தில் இருந்து அதனைசிறிதுசிறிதாக நினைவிற் கொண்டுவந்து சிந்துத்துத் தெளிதலாலும், அவர்க்கு இவ்விரண்டும் உவமையாயின. பசுவுக்குப் புல்மேய்தலும் அசைவுபோட்டுமெல்லுதலுமே முக்கியமான தொழில்க ளாதல்போல, இடைவிடாமற் பாடங்கேட்டலும் சிந்தித்தலுமே தலைமாணாக்கர்க்கு முக்கியமான தொழில்களாமென்றபடி.

நிலம் உழவர் வருந்திப் பயிர்செய்யும் முயற்சியளவுக்குத் தக்க விளைவைத் தருதல்போல நடுமாணாக்கர் ஆசிரியன் கற்பித்த முயற்சியளவுக்குத் தக்க கல்வியறிவையே காட்டுதலாலும், கிளி தனக்குக் கற்பித்த சொல்லையல்லாமல் வேறொன்றையுஞ் சொல்லமாட்டாமைபோல இடைமாணாக்கர் தமக்குக் கற்பித்த நூற்பொருளையல்லாமல் வேறொரு நூற்பொருளையுஞ் சொல்லமாட்டாமையாலும், அவர்க்கு இவ்விரண்டும் உவமையாயின. எருமற் குறையாமற் சொல்வித்தபடி சொல்வது, கிளிக்கு இயல்பு.

சில்லியுள்ள குடம் நீரை வார்க்கவார்க்கப் புறத்தே ஒழுகவிட்டு எப்பொழுதும் நிரம்பாமைபோலக் கடைமாணாக்கர் ஆசிரியர்தமக்குநூற்பொருளைக் கற்பிக்கக்கற்பிக்கமனத்திற்கொள்ளாது மறந்து எப்பொழுதும் கல்வி நிரம்பாமையாலும், ஆடு ஒருசெடியிலே தன்வயிறு நிரம்பும்படி தழைநிறைந்திருந்தாலும் அதனை வயிறுநிரம்ப மேயாமற் சிறிது கடித்தமாத்திரத்திலே விட்டுப் பல செடிகளிலுஞ்சென்று சிறிதுசிறிது மேயப்புகு மியல்பினதாய் எங்கும் வயிறுநிரம்பாமைபோல ஓராசிரியனிடத்தே தனக்குப் புலமை நிரம்பும்படி கல்வி மிக்கிருந்தாலும் புலமைநிரம்ப அவனிடங் கற்றுக்கொள்ளாமல் அவனிடம் ஒருநூலைச் சிறிது கற்றமாத்திரத்திலே விட்டுப் பலரிடத்தும் போய்ச் சிறிதுசிறிதாகப் பல நூல்களைப் பாடங்கேட்கப்புக்கு எங்கும் புலமை நிரம்பாமையாலும், எருமை தெளிந்தநீரைக் கலக்கிக் குடித்தல் போலக்கடைமாணாக்கர்ஆசிரியனதுநன்மனத்தைவருத்திக்கலங்கச்செய்து பின்பு அவன் வெறுப்புக்கொண்டு பாடஞ்சொன்னதைக் கேட்டுப் போதலாலும், பன்னாடையானது நெய் தேன் முதலியவற்றை வடிக்கட்டுதற் பொருட்டுத் தன்மேல் வார்க்கும்போது அவற்றிற்சாரத்தைக்கீழேயொழுக

விட்டு அசாரமான கசட்டையே தன்னிடந் தங்கப்பெற்றுக்கொள்ளுதல் போலக் கடைமாணுக்கர்தமக்கு நல்லாசிரியன் நூல்கற்பிக்கும்போது அவன் வாயினின்று வந்தவற்றில் விதியாகிய நற்பொருள்களை யெல்லாம் மறந்துவிட்டு விலக்காகிய தீப்பொருளையே பற்றிக்கொள்ளுதலாலும், இந்நான்கும் கடைமாணுக்கர்க்கு உவமையாயின. (ரு அ)

[மாணுக்கராகத் தகாதவர்.]

ருகூ. களிமடி மானி காமி கள்வன்
பிணிய னேழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே.

(இ - ள்.) களி - கட்குடியனும், மடி - சோம்பேறியும், மானி - அகங்காரியும், காமி - காமமுடையவனும், கள்வன் - திருடனும், பிணியன்-நோயாளியும், ஏழை - அறிவில்லாதவனும், பிணக்கன்-மாறுபாடுடையவனும், சினத்தன்-கோபமுள்ளவனும், துயில்வோன்-மிகுதியாகத் தூங்குபவனும், மந்தன் - (சொன்னதை விரைவில் அறிந்துகொள்ளும்) நுட்ப மில்லாதவனும், தொல் நூற்கு அஞ்சி தடுமாறு உளத்தன் - பழைய நூல்களின் பரப்பைக் கண்டு அச்சங்கொண்டு கலங்குகின்ற மனமுள்ளவனும், தறுகணன்- (அஞ்சத்தக்கவைகட்கு) அஞ்சாதவனும், பாவி - பாவத்தொழில் செய்பவனும், படிறன் - பொய்ம்மையுடையவனும், இன்னோர்க்கு இத்தன்மையவர்க்கு, நூல் - நூலை, பகரார் - சொல்லார், (ஆசிரியர்); (எ - று.)—காமி-தூர்த்தன்.

"நுண்ணுணர் வின்மை வறுமை", "அறிவிலார், என்னுடையரேனுமிலர்" ஆதலால், ஏழை யென்பதற்கு - அறிவில்லாதவனென்றுஉரைக்கப்பட்டது; பொருளில்லாதவ னென்றுங் கொள்ளலாம்: மிக்கதரித்திரனுக்கு மனம் ஒரு நிலையில் நில்லாதாதலால், அவன், கல்விக்கு உதவான்; அவனுக்குக் கல்வி பயிற்ற வேண்டுமாயின், உணவு உடை உறையுள் முதலியன கிடைக்கத் தக்க வகை செய்தே பயிற்றவேண்டு மென்க. (ருகூ)

ரு. பாடங்கேட்டலின் வரலாறு.

[பாடங்கேட்கும் முறை.]

சுO. கோடல் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர்.

(இ - ள்.) கோடல் மரபு-பாடங்கேட்டலின் விதத்தை, கூறும் காலை-சொல்லும்பொழுது,—பொழுதொடு சென்று - (தக்க) காலத்திலேபோய், வழிபடல் முனியான் - வழிபாடு செய்தலில் வெறுப்பில்லாதவனாய் [மிக்க விருப்பமுள்ளவனாய்], குணத்தொடுபழகி-(ஆசிரியனது)குணத்துக்குத்தக்க படி பழகி, அவன் குறிப்பின் சார்ந்து-அவன் குறிப்பின்வழியிலே சேர்ந்து [தான் வரலாமென்ற ஆசிரியன் கருத்தைக் குறிப்பால் நுட்பமாகஅறிந்து கிட்டி], இரு என இருந்து - 'இரு' என்று (ஆசிரியன்) சொன்னபின்பு இருந்து, சொல் என சொல்லி - 'படி' என்று (ஆசிரியன்) சொன்னபின்பு படித்து, பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகி - மிக்க தாகமுள்ளவன் நீரினி டத்துக்கொள்ளும் விருப்பம்போலத்தான் பாடங்கேட்டலில் மிக்கவிருப்ப முடையவனாய், சித்திரம் பாவையின் அத்தகவு அடங்கி - சித்திரத்திலெழு திய பிரதிமையினது அசைவில்லாத அக்குணம்போல மன மொழி மெய்க ளடங்கி, செவிவாய் ஆக - காது (கல்வியாகிய நீரைப் பருகும்) வாயாகவும், நெஞ்சுகளன் ஆக-மனம் கொள்ளுமிடமாகிய வயிறாகவும்,கேட்டவைகேட் டவை-(ஆசிரியனிடத்திற்) பலமுறைகேட்ட நூற்பொருள்களை, விடாது உளத்து அமைத்து-மறந்துவிடாமல் தன்மனத்தில் நிரம்பப்பதியவைத்துக் கொண்டு, போ என போதல் - 'போ' என்று (ஆசிரியன்) சொன்னபின்பு தான் மீண்டு போகுதலாம், என்மனார் புலவர் - என்று சொல்வர் அறிவுடை யோர்; (எ - று.)—களன் - இங்கே, வயிறு என்றபடி.

இனி, 'சொல்லெனச் சொல்லி' என்பதற்கு - ஆசிரியன் கீழ்நடந்த பாடத்தைச் சொல் என்றவுடனே தான் சொல்லி என்றலுமாம். கேட்ட வைகேட்டவை, அடுக்கு - மிகுதிப்பொருளது கோடல்=கொள்+தல்: கொள்ளுதல்; ஆசிரியன் கற்றுக்கொடுப்பதை மாணாக்கன் பெற்றுக் கொள்ளல். (௩௦)

[நூற்பயிற்சிசெய்யும் விதம்.]

௩௧. * நூல்பயி லியல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும்.

(இ - ள்.) நூல் பயில் இயல்பு - நூற்பயிற்சிசெய்தலின் தன்மையை, நுவலின் - சொல்லுமிடத்து,—வழக்கு அறிதல் - (உலகவழக்குச்செய்யுள் வழக்கு என்னும்) இருவகைவழக்குக்களை அறிதலும்,பாடம்போற்றல்-மூல பாடங்களை (மறவாமற்) பாதுகாத்தலும், கேட்டவை நினைத்தல்- (ஆசிரிய னிடத்துக்) கேட்ட நூற்பொருள்களைப் (பலமுறை) சிந்தித்தலும், ஆசான் சார்ந்து அவை அமைவர கேட்டல் - ஆசிரியனை அடுத்துமுன்கேட்டஅவற் றையே குறைவுதீரமனத்திற்பதியும்படி மறுபடியுங்கேட்டலும், அ மாண்பு

* தொல்காப்பியத்து இளம்பூரணருரை மேற்கோள்.

உடையோர்தம்மொடு பயிறல்-அவ்வாறு கற்குந் தொழிலுடையமாணுக்கர்களோடு பழகுதலும், வினுதல் - (தான் சந்தேகித்தபொருள்களைக்குறித்து அவர்களைக் கேள்விகேட்டலும், வினுயவை விடுத்தல் - (அவர்கள்கேட்ட) கேள்விகட்குத் தான் உத்தரஞ்சொல்லுதலும், என்ற இவை-என்று சொல்லப்பட்ட இச்செயல்களை யெல்லாம், கடன் ஆ கொளினே - (தனக்கு) முறைமையாக (மாணுக்கன்) கொண்டால்தான்,மடம் - அறியாமையானது, நனி - மிகுதியும், இகக்கும் - (அவனைவிட்டு) நீங்கும்; (எ - று.) (சக)

சஉ. * ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பின்
பெருக நூலிற் பிழைபா டிலனே.

(இ - ள்.) ஒருகுறி கேட்போன்-ஒருநூலைஒருதரம் பாடங்கேட்டவன், இரு கால் கேட்பின் - (ஒருதரங் கேட்டவளவில் அமையாமல்)இரண்டுதரம் கேட்டாணுயின், (அவன்),—நூலின் - அந்நூலில், பிழைபாடு தவறுபடுதல், பெருக இலன் - மிகுதியும் இலனுவன்; (எ - று.)

பிழை - ஐயம் திரிபு. இது, கீழ்ச்சூத்திரத்திற் கூறின 'ஆசாற்சார்ந்து அவைஅமைவரக்கேட்ட'லின் பயன்; அடுத்தசூத்திரமும் இவ்வாறே. (சஉ)

சங. * முக்காற் கேட்பின முறையறிந் துரைக்கும்.

(இ - ள்.) முக்கால் கேட்பின்-மூன்று தரம் கேட்டாணுயின்,—முறை அறிந்து - (ஆசிரியன் கற்பித்த) முறைமையை அறிந்து,உரைக்கும்-(தான் பிறர்க்குச்) சொல்ல வல்லவனுவான்; (எ - று.) (சங)

சச. * ஆசா னுரைத்த தமைவரக் கொளினுங்
காற்கூ றல்லது பற்றல னுகும்.

(இ - ள்.) (மாணுக்கன்),—ஆசான் உரைத்தது - ஆசிரியன் கற்பித்த நூற்பொருளை, அமைவர கொளினும்-(மேற்சொல்லியவாறுதன் அறிவில்) நிரம்பக் கற்றுக்கொண்டானுயினும்,—கால் கூறு அல்லதுபற்றலன் ஆகும்-(ஆசிரியனது புலமைத்திறத்திற்) காற்பங்கு பெறுவனேயல்லது அதற்கு அதிகமாகப் பெறுன்; (எ - று.) (சச)

சரு. * அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகால்
செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்.

(இ - ள்.) அ வினையாளரொடு-அவ்வாறு கற்குந்தொழிலுடைய மாணுக்கர்களோடு, பயில் வகை - பழகும் வகையால், ஒரு கால்-ஒரு காற்பங்கும்,—செவ்விதின் உரைப்ப -(தன் மாணுக்கர்க்கும் சபையார்க்குந்தான்) ஒழுங்காகச் சொல்லுதலால், அ இரு காலும் - மற்றை இரண்டு காற் [அரைப்] பங்குமாக,—மைஅறுபுலமை-குற்றமற்ற புலமைத்திறம், மாண்புஉடைத்து ஆகும் - (நிரம்பி)மாட்சிமையுடையதாம்; (எ - று.)—இது, 'அம்மாண்புடை

* தொல்காப்பியத்துக்கு நச்சினர்க்கினியருரை மேற்கோள்.

யோர் தம்மொடு பயிறல், வினாதல், வினாயவைவிடுத்தல்' என்றவற்றின்பயன். மூர்த்தினசூத்திரம், அவற்றின் இன்றியமையாமையைக் காட்டும். (௩௫)

[மாணாக்கர் வழிபாடு செய்யும் விதம்.]

௩௬. அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோடு
* எத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே.

(இ - ள்.) அழலின் - (குளிருக்காக அனல்காய்பவன் விட்டு நீங்காமலும்நெருங்காமலும் இருக்கின்ற) நெருப்பைப்போல (ஆசிரியனைநினைத்து), அஞ்சி நீங்கான் அணுகான் - அச்சங்கொண்டு விட்டு நீங்காமலும் கிட்டநெருங்காமலும் (இருந்து), நிழலின் நீங்கான் -(அவன்சென்றவிடத்தெல்லாம்) நிழலைப்போல விடாது பின்தொடர்ந்து சென்று, நிறைந்த நெஞ்சமோடு- அன்பு நிரம்பின மனத்துடன்கூடி, எத்திறத்து ஆசான் உவக்கும்அத்திறம்- எவ்வகையால் ஆசிரியன்மகிழ்வானோ அவ்வகையோடு பொருந்தி,அறத்தின் திரியா படர்ச்சி - தருமத்தினின்றும் மாறுபடாத நடத்தையானது,—வழிபாடு - (மாணாக்கன் ஆசிரியனுக்குச் செய்யும்) வழிபாடாம்; (எ - று.)

குளிர்காய்வோன் தீயை விட்டு விலகினால், குளிர் நீங்குதலாகிய பயன் சித்தியாது: நெருங்கினால், சூடுதாக்கும்; ஆதலால்,மிகவிலங்காமலும்மிகநெருங்காமலும் அளவாகச் சார்தல் போல, மாணாக்கன் ஆசிரியனைவிட்டுவிலகினால் அவனருள் பெறுதலாகிய கருதியபயன் கைகூடா தாதலாலும்,மிகநெருங்கினால் அவனை அவமதித்தான்போன்று அவனது வெறுப்புக்குஇலக்காதலாலும், அளவாகச் சார்ந்து வழிபடுதல் வேண்டு மென்க. (௩௬)

பொதுப்பாயிரத்தின் இலக்கணம் முற்றிற்று.

இரண்டாவது

சிறப்புப்பாயிரத்தின் இலக்கணம்.

[சிறப்புப்பாயிரத்தின் போதுவிதி.]

௩௭. ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே.

(இ - ள்.) ஆக்கியோன் பெயரே-(நூலைச்)செய்தவனது பெயரும்,வழியே (நூல்வந்த) வழியும், எல்லை - (நூல் வழங்கும் நிலத்தின்) எல்லையும், நூல் பெயர் - நூலின் பெயரும், யாப்பே - (தொகுத்தல்முதலிய) நூற்கட்டும், நுதலிய பொருளே-(நூலிற்) சொல்லப்பட்டபொருளும்,கேட்போர்-

* தொல்காப்பியத்து இளம்பூரணருரை மேற்கோள்.

(இந்நூல்) கேட்டற்கு உரிய அதிகாரிகள் இவரென்பதூம், பயனோடு-(நூல் கற்றதனாற் பெறப்படும்) பயனும், அ எண்பொருளும் - அவ்வெட்டுவகைப் பொருள்களையும், வாய்ப்ப காட்டல் - விளங்க உணர்த்துதல்,—பாயிரத்து இயல்பு - சிறப்புப்பாயிரத்தின் இலக்கணமாம்; (எ - று.)

இனி, யாப்பு - இந்நூல் கேட்டபின் இந்நூல் கேட்கத்தகு மென்னும் இயைபு என்றும், கேட்போர் - நூலை இயற்றித்தருகவெனக்கேட்பவர்என்றும் உரைப்பாரு முளர்; யாப்பு என்பதற்கு - இந்நூல் இன்னவகைச்செய்யுளாற் செய்யப்பட்ட தென்ப தென்றலும் ஒன்று. ஆயெண்பொருள் - சுட்டு நீண்டவிடத்து யகரம் தோன்றிற்று; 'ஆய எண்பொருள்' என்பதன்தொகுத்தலெனக் கொண்டு உரைக்கவும் அமையும்: ஆய=ஆகிய.

இச்சூத்திரமும்; அடுத்தசூத்திரமும் - முன்னோர் செய்தவற்றை மேற்கோளாகக் கொண்டது. * (௧)

சஉ. * காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே.

(இ - ள்.) காலம் - (நூல்செய்த) காலமும், களனே-(நூல்அரங்கேறிய) சபையும், காரணம் - (நூல்செய்தற்குக்) காரணமும், என்ற இ மூ வகை- என்கிற இந்த மூன்றையும், எற்றி - (அந்தஎட்டோடு) கூட்டி, மொழிநரும்- (பதினொன்றாகச்) சொல்வாரும், உளர் - (சிலர்) உண்டு; (எ - று.)

காலம் முதலிய மூன்றும் நூல்செய்த காலத்தன்றி நூல்வழங்கும் காலத்து இல்லாமையால், பிறன்கோட்கூறலாகத்தனியேபிரித்துக் கூறினர்.

[நூற்பெயர்க்குச் சிறப்புவிதி: நூற்குப் பெயரிடும் வகை.]

சங. முதனூல் கருத்த னளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும்
இடுகுறி யானும் நூற்குஎய் தும்பெயரே.

(இ - ள்.) நூற்கு - ஒருநூலுக்கு,—முதல்நூல்-(அந்நூலின்) முதனூலும், கருத்தன் - (அந்நூல்) செய்தவனும், அளவு - (அந்நூலின்) அளவும், மிகுதி - (அந்நூலிற் சொல்லப்படும் பொருள்களுள்)மிக்கதான பாகமும், பொருள் - (அந்நூலிற் சொல்லப்பட்ட) பொருளும், செய்வித்தோன்-(அந்நூல் செய்வோனுக்குப் பொருளுதவிமுதலியனசெய்து நூலைச்)செய்வித்தவனும், தன்மை - (அந்நூலின்) குணமும், முதல் - முதலாகிய,நிமித்தினும்- காரணங்களாலும், இடுகுறியானும் - (காரண மில்லாமல்) இடுகுறியாலும், பெயர் எய்தும்-பெயர் வரும்; (எ - று.)—நிமித்து - நிமித்தம், விகாரம்.

முதனூலாற் பெயர்பெறுதல் வழிநூல்சார்புநூல்கட்கே அமையுமென்பது, எற்புழிக்கோட லென்னும் உத்தியால் விளங்கும்.

முதனூலாற் பெயர்பெற்றன - தமிழிலுள்ள இராமாயணம், பாரதம் முதலியன. கருத்தனாற் பெயர்பெற்றன - அகத்தியம், திருவள்ளுவர்முதலி

* ௧, ௨ - சூத்திரங்கள் - இறையனாரகப்பொருளுரை மேற்கோள்.

யன. அளவினாற் பெயர்பெற்றன - பன்னிருபடலம், நாலடிநானூறுமுதலி யன. மிகுதியாற் பெயர்பெற்றன - களவியல் முதலியன. பொருளாற்பெயர் பெற்றன-அகப்பொருள்முதலியன.செய்வித்தோனாற்பெயர்பெற்றன-சாத வாகனம்,இளந்திரையும்முதலியன வென்பர். தன்மையாற் பெயர்பெற்றன-சிந்தாமணி, நன்னூல் முதலியன. இடுகுறியாற்பெயர்பெற்றன-கலைக்கோட்டுத்தண்டு முதலியன வென்பர்; (காண்டிகையென்னும் உரைப்பெயரையும் இடுகுறி யென்பர்:) பிறவும் இவ்வாறு வருவன உளவாயின் கண்டுகொள்க.

ஆத்திச்சூடி, கண்ணிநுண் சிறுத்தாம்பு என்றாற்போல முதற்குறிப்பினாற் பெயர்பெற்றவை முதலியன, இச்சூத்திரத்தில் 'முதல் நிமித்து'என்றதற்கு உதாரணமாம். (௩)

[நூல்யாப்பிற்குச் சிறப்புவிதி.]

ருo. தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு
எனத்தகு நூல்யாப் பீரிரண் டென்ப.

(இ - ள்.) தொகுத்தல் - (விரிந்துகிடந்ததைத்) தொகுத்துச்செய்தலும், விரித்தல் - (தொக்குக்கிடந்ததை) விரித்துச் செய்தலும், தொகைவிரி - சிலவற்றைத் தொகுத்தும் சிலவற்றை விரித்தும் செய்தலும்,மொழிபெயர்ப்பு - ஒரு பாஷையிலுள்ள நூலை மற்றொருபாஷையிற் செய்தலும், என - என்று, தகும் நூல் யாப்பு - தக்க நூல்யாப்பானது, ஈர் இரண்டு - நால்வகைப்படும், என்ப-என்று சொல்வர்: (அறிவுடையோர்); (எ - று.)—(நூல்யாப்பு - நூற்கட்டு.)

தொகுத்தலுக்கும், மொழிபெயர்த்தலுக்கும்உதாரணம் - வடமொழியில்இருபத்ினாலாயிரஞ் சுலோகமான வால்மீகத்தைக்கம்பர்தென்மொழியிற்பன்னீராயிரஞ் செய்யுளாக்கியது போல்வன; பாரதமும் இது. விரித்தலுக்கு உதாரணம் - திருத்தொண்டத்தொகை யென்னும்பதிகத்தைச்சேக்கிழார் பெரியபுராணமாக விவரித்தது போல்வன. தொகைவிரிக்கு உதாரணம் - தொல்காப்பியத்திற் குற்றியலுகரப்புணரியலெனத் தனித்துக்கூறியதனை இந்நூலில் உயிரீற்றுப்புணரியலுள் அடக்கியும், தொல்காப்பியத்திற் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள கால இடைநிலைகளை இந்நூலில் விரித்தும் கூறியது போல்வன. (௪)

[சிறப்புப்பாயிரஞ் செய்தற்கு உரியவர்.]

ருக. தன்னா சிரியன் தன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் தகுமுரை காரனென்று
இன்னோர் பாயிர மியம்புதல் கடனே.

(இ - ள்.) தன் ஆசிரியன் - தன்னுடைய ஆசிரியனும், தன்னொடு கற்றோன் - தன்னோடு பாடங்கேட்டவனும், தன் மாணாக்கன் - தன்னுடைய மாணாக்கனும், தகும் உரைகாரன் - (தான்செய்த நூலுக்குத்) தக்க உரை செய்தவனும், என்ற இன்னோர்-என்று சொல்லப்பட்ட இந்நால்வரில் ஒருவர், பாயிரம் - சிறப்புப்பாயிரத்தை, இயம்புதல் - சொல்லுதல், கடன் - முறைமை; (எ - று.) (ரு)

[சிறப்புப்பாயிரம் பிறர்செய்தற்குக் காரணம்.]

௫௨. * தோன்று தோற்றித் துறைபல முடிப்பினுந்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே.

(இ - ள்.) தோன்று-(பிறர்க்குத்)தோன்றாத நுட்பமானபொருள்களை, தோற்றி-தான் தோன்றச்செய்து [காட்டி], துறை பல முடிப்பினும் - பல துறைகள் (அமையப் பெரிய நூலைச் செய்து) முடித்தாலும்,—தான் தன் புகழ்தல்-தானே தன்னைப் புகழ்ந்துகொள்வது, தகுதி அன்று-தக்கதன்றாம்; (எ - று.)

நூல்செய்தவனே சிறப்புப்பாயிரமும் செய்துகொண்டால்தற்புகழ்ச்சி செய்தவனாவ னாதலால், நூல்செய்பவனது புகழாகிய சிறப்புப்பாயிரத்தைப் பிறர் கூறவேண்டு மென்பதாம். § (௬)

[தற்புகழ்ச்சி குற்றமாகாத இடங்கள்]

௫௩. மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை யாற்ற லுணரா ரிடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலுந் தகும்புல வோர்க்கே.

(இ - ள்.) மன்னுடை மன்றத்து ஓலைத்தூக்கினும்-அரசனது சபைக்கு எழுதுகின்ற சீட்டுக்கவியிலும், தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்-தன்னுடைய(கல்வியின்)வலிமையை அறியாதவரிடத்திலும்,மன்னியஅவையிடை வெல்லுறு பொழுதினும்-நிலைபெற்ற சபையிற் (பிறரோடு வாதஞ் செய்து) சயிக்கும்பொழுதிலும்,தன்னை மறுதலை பழித்த காலையும்-தன்னை எதிரியாகிய புலவன் இகழ்ந்துபேசியகாலத்திலும்,தன்னைபுகழ்தலும்-தன்னைத் தான் புகழ்ந்துகொள்ளுதலும், புலவோர்க்கு-புலவனுக்கு, தகும்—; (எ - று.)—'புகழ்தலும்' என்ற இழிவுசிறப்பும்மையால், இவ்விடங்களிலும் தற்புகழ்ச்சிசெய்யாமையே மேம்பட்ட தென்பது பெறப்படும். (௭)

[பாயிரம் அவசிய மென்பது.]

௫௪. ¶ ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே.

---

* தொல்காப்பியத்து இளம்பூரணருரை மேற்கோள்.

§ சிறுபான்மை நூலாசிரியர் தாமே தம்மைப் பிறன்போலும் பாயிரங் கூறுதலும் உண்டு. பிரயோகவிவேகநூலார் 'இது, தன்னைப்பிறன்போலும் நாந்தி கூறுகின்றது,' 'வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார்', 'இனிச் சம்பந்தர் சடகோபர் முதலாயினரும்திவாகரரும் பதினெண்கீழ்க் கணக்குச்செய்தாரும் முன்னாகப்பின்னாகப் பதிகங்கூறுவதும்காண்க' என்றவை காணத்தக்கன. அது, தற்சிறப்புப்பாயிர மெனப்படும்.

¶ இறையனாரகப்பொருளுரை மேற்கோள்.

(இ - ள்.) ஆயிரம் முகத்தான் - மிகப்பல வகைகளால், அகன்றது ஆயி னும்-விரிந்தநூலாயினும்,—பாயிரம் இல்லது - பாயிரமில்லாதது, பனுவல் அன்று - நூலன்றும்; (எ - று.)—எ - தேற்றம்.

இச்சூத்திரம், முன்னோர் செய்ததை மேற்கோளாகக் கொண்டது.

'எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க' என் பது. இலக்கணம்: என்னை? "ஆயிர முகத்தா னகன்ற தாயினும், பாயிர மில்லது பனுவலன்றே" என்றாராதலின். பாயிரமென்றது, புறவுரையை. நூல்கேட்கின்றான் புறவுரை கேட்கின், கொழுச்சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமாறுபோல, அந்நூல் இனிது விளங்குதலின், புறவுரை கேட்டல்வேண்டும்; என்னை? 'பருப்பொருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்' என்றாராதலின், 'அப்பாயிரந் தான், தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன்போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும்ஞாயிறும் போலவும், நூற்கு இன்றி யமையாச்சிறப்பிற்றாயிருத்தலின், அதுகேளாக்கால், குன்றுமுட்டிய குரீஇப் போலவும், குறிச்சிபுக்க மான்போலவும், மாணாக்கன் இடர்ப்படுமென்க' என் பது, தொல்காப்பியம் நச்சினார்க்கினியருரைத் தோடச்கம். (அ)

௫௫. மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க்குஅணியும்போல்-நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை யெந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.

(இ - ள்.) மாடக்கு - மாளிகைக்கு, சித்திரமும்-சித்திரவேலையும், மா நகர்க்கு - பெரியபட்டணத்துக்கு, கோபுரமும் - வாயிற்கோபுரமும், ஆடு- நாட்டியஞ்செய்கின்ற, அமை தோள் நல்லார்க்கு-மூங்கில்போலுந் தோள் களையுடைய மகளிர்க்கு, அணியும் - ஆபரணமும், போல்-போல,—நாடி - (நூலுக்குப் பாயிரம் இன்றியமையாச்சிறப்புடையதென்று)எண்ணி,—ஐது உரையாநின்ற அணிந்துரையை-அழகிய பொருளைச் சொல்லுகின்ற பாயி ரத்தை, உரையா-உரைத்து, எ நூற்கும்-எவ்வகைப்பட்ட நூல்களுக்கும், முன் - முதலில், பெரிது - பெரும்பாலும், பெய்து வைத்தார் - சேர்த்து வைத்தார்கள், (அறிவுடையோர்); (எ - று.)—மாடக்கு=மாடத்துக்கு.

ஆடு நல்லார் என இயையும்; நாட்டியப்பெண்க ளென்றபடி. (௧)

சிறப்புப்பாயிரத்தின் இலக்கணம் முற்றிற்று.

பொதுப்பாயிரம் முற்றுப்பெற்றது.

முதலாவது

எழுத்ததிகாரம்.

எழுத்தின் அகத்திலக்கணம் புறத்திலக்கணம் என்னும் இருவகை யிலக்கணங்களையும் உணர்த்தும் அதிகாரம்; அதிகாரம் - இங்கே, பெரும்பிரிவு.

க. எழுத்தியல்.

எழுத்தின் அகத்திலக்கணத்தை உணர்த்தும் இயல்; இயல் - இங்கே சிறுபிரிவு.

[கடவுள் வணக்கமும், அதிகாரத் தோடக்கமும்.]

ருசு. பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த
நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே.

(இ - ள்.) பூ மலி - பூக்கள் நிறைந்த, அசோகின்-அசோகமரத்தினது, புனை நிழல் - அழகிய நிழலில், அமர்ந்த - எழுந்தருளிய, நான்முகன் - நான்கு திருமுகங்களையுடைய கடவுளை [அருகதேவனை] *, தொழுது - வணங்கி,—எழுத்து-எழுத்திலக்கணத்தை, நன்கு இயம்புவன் - நன்றாகச் சொல்வேன், (யான்); (எ - று.)—ஏ - ஈற்றசை.

§ எல்லா நூல்களும் மங்கலமொழி முதல் வகுத்துக் கூறவேண்டுதலால், 'பூ' என்று தொடங்கப்பட்டது. எழுதப்படுதலின் எழுத்து எனக் கொள்க. எழுத்திலக்கணத்தை 'எழுத்து' என்றது, ஆகுபெயர்.

எல்லாம் வல்ல கடவுளை வணங்கியதனால் எடுத்துக்கொண்ட காரியம் இனிது முடியுமென்பது கருதி, 'நன்கியம்புவன்' என்று தொடங்கியதனால், இது நுதலிப்புகுதல் என்னும் உத்தி;(நுதலிப்புகுதல்-சொல்லித்தொடங்குதல்.) (க)

[எழுத்திலக்கணத்தின் பகுப்பு - கஉ.]

‡ ருஎ. எண்பெயர் முறைபிறப்பு உருவம் மாத்திரை
முதலீ றிடைநிலை போலி யென்றா
பதம்புணர் பெனபப்பன் னிருபாற் றதுவே.

---

* 'எல்லாச் சமயத்தோராலும் வணங்கப்படும் படைப்பு முதலிய ஐந்தொழிற்கு முரிய எல்லாக்கடவுளாகியும் நின்றான் ஒருவனே யென்பார், அருகனை 'நான்முகன்' என்று கூறினார்' என்பது, நன்னூல் விருத்தியுரை. சீவகசிந்தாமணியில் "பிண்டிநான்முகன்" என்றதும்; 'எல்லாமூர்த்தமும் இவனாதலின், நான்முக னென்றார்', 'அரியும் அயனும் அரனும் இவனே யென்பது கருத்து' என்ற நச்சினார்க்கினியருரையும் காணத்தக்கன.

§ "வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து, மங்கலமொழி முதல்வகுத், தெடுத்துக்கொண்ட விலக்கண விலக்கிய, மிடுக்கணின்றி யினிது முடியும்"

(இ - ள்.) எண்-(எழுத்துக்களின்) கணக்கும், பெயர்-பெயரும், முறை-(நிற்கும்) முறைமையும், பிறப்பு - பிறத்தலும், உருவம் - வடிவமும், மாத்திரை - (உச்சரிக்கும்) அளவும். முதல் (நிலை) - (மொழிக்கு)முதலில் நிற்றலும், ஈறு (நிலை) - (மொழிக்கு) இறுதியில் நிற்றலும், இடை நிலை - (மொழிக்கு) நடுவில் நிற்றலும், போலி - போலியும், என்று - என்றும்,—பதம்-பதமும், புணர்பு - புணர்ச்சியும், என - என்றும்,—பன்னிருபாற்று-பன்னிரண்டுவகையினை யுடையதாகும்: அது - அவ்வெழுத்திலக்கணம்; (எ - று.)

பிறப்பும், மாத்திரையும்-எழுத்தின் ஒலிவடிவத்தையும், உருவம்-எழுத்தின் வரிவடிவத்தையும் பற்றியவை. மற்றவை, பொது.

எண் முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம் என்பதும், பதம் புணர்பு என்னும் இரண்டும் எழுத்தின் புறத்திலக்கணம்என்பதும்தோன்ற, 'என்று' என்றும், 'என' என்றும் வெவ்வேறு சொற்களைக் கொடுத்துப் பிரித்தார்.

இச்சூத்திரம் தோகுத்துச்சுட்டல் என்னும் உத்தி. மேல் வருவன வகுத்துக்காட்டல், (தொகுத்துச் சுட்டல்-திரட்டிச்சொல்லுதல்.வகுத்துக் காட்டல் - விவரித்துச்சொல்லுதல். உத்தி - யுக்தி.)

எழுத்தின் அகத்திலக்கணமாகிய பத்தையும் எழுத்தியல் என ஓரியலாக்கி முதலிலும்; அவ்வெழுத்தாலாகிய பதத்தின் இலக்கணத்தைப் பதவியல் என ஓரியலாக்கி அதன்பின்னும்; அப்பதம் புணரும்புணர்ச்சியிலக்கணத்தை உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப்புணரியல், உருபுபுணரியல் என மூன்று இயலாக்கி, உயிரெழுத்து மெய்யெழுத்துக்களின் முறைமை பற்றிஉயிரீற்றுப்புணரியலைப்பதவியலின் பின்னும், மெய்யீற்றுப்புணரியலை அதன் பின்னும், உயிரீறு மெய்யீறு என்றவற்றுள் அடங்குதலால்உருபுபுணரியலைஅவ்விரண்டன்பின்னும்ஒத்துமுறைவைப்புஎன்னும்உத்தியால்வைத்தார்.(ஒத்துமுறைவைப்பு-இயல்களைக்காரணம்பற்றிமுறைப்படவைத்தல்.)

க. எண்.

[எழுத்து இன்னதென்பதும், அதன் வகையும்.]

‡ ௫அ. மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

(இ - ள்.) மொழி முதல் காரணம் ஆம் - சொல்லுக்கு*முதற்காரணமாகின்ற, அணு திரள் ஒலி - அணுக்கூட்டத்தின் காரியமாகிய ஓசை, எழுத்து - எழுத்தாகும்; அது - அவ்வெழுத்து,—முதல் சார்பு என - முதலெழுத்தும் சார்பெழுத்தும் என்று, இரு வகைத்து - இரண்டு வகையை யுடையது; (எ - று.)

---

* முதற்காரணத்தின் தன்மை, இந்நூலின் ௨௯௭ - ஆம் சூத்திரத்தின் உரையில் விளங்கும்.

'ஆம்' என்னும் பெயரெச்சம். 'ஒலி' என்பதனோடு இயையும்; 'அணுத்திரள்' என்றதும், ஒலிக்கு அடைமொழியே. அணுத்திரள் - அணுக்கூட்டம்: அணு என்பது, மிகச் சிறியபொருள்; அது-கட்புலனாகுமணுவும், செவிப்புலனாகுமணுவும் முதலாகப் பலவகைப்படும்: இங்கு, அணுவென்றது - செவிப்புலனும் அணுவை; அது - ஒலிநுட்பம். அணுத்திரளொலி - பரமாணுக்களின் இயைபினாலாவதான ஒலி. மொழிக்கு முதற்காரணம் எழுத்தானாற்போல, எழுத்திற்கு முதற்காரணம் அணுத்திர ளென்றபடி; எழுத்தின் காரியம் மொழியாதல்போல, அணுக்கூட்டத்தின் காரியம் எழுத்தாம். 'அணுத்திரளொலி எழுத்து' என்று மாத்திரம் கூறினால் தும்மல் இருமல் கனைத்தல் முதலியனவும் எழுத்தாமெனக் கொள்ளப்படுமாதலின், அதனை ஒழித்தற்கு, 'மொழிமுதற்காரணமாம்' என்ற அடைமொழி கொடுத்தார். 'அணுத்திரள்' என்றது-ஒலியின் தன்மையை அறியாதவர்க்கு அது இன்னதெனவிளக்கு தற்பொருட்டு வந்த இயற்கையடைமொழி; இனம் விலக்க வந்ததன்று. பிறம்தங்களில்உலகத்தோற்றத்துக்குக் காரணமாக சொல்லப் படுகின்ற மாயை முதலியவற்றை ஒப்புக்கொள்ளாமல் அணுக்களினாலேயே எல்லாப்பொருள்களும் அமைவனவென்று கூறுகின்ற தமதுஆருகதசமயத்தை விளக்குதற்பொருட்டு, 'அணுத்திரள்' என்ற அவசியமில்லாத விசேடணங் கொடுத்தாரெனவுங் கொள்ளலாம்; இது - பிறிதோடுபடாஅன் தன் மதங்கோளல் என்னும் மதம் (பிறிதொடு படான் தன் மதம்கொளல்-பிறர் கொள்கையோடுகலவாமல் தன்மதத்தையே தான்கொள்ளுதல்.) சிலஅணுக்களாவது தம்மிற்கூடினாலொழிய ஒலி செவ்விதாக எழாமையின், 'அணுத்திரள்' என வேண்டிற்று. எழுத்தின் ஒலிவடிவு வரிவடிவு என்ற இரண்டனுள் ஒலிவடிவு சிறப்புடைமையால், அதனை எடுத்து ஓதினார்.

இனி, மொழிக்கு முதற்காரணமாகிய அணுத்திரளே ஒலியெழுத்தாம் என்று உரைத்தலும் ஒன்று. (௩)

[முதலெழுத்தின் வகையும், விரியும்.]

‡ ௫௮. உயிரு முடம்புமா முப்பது முதலே.

(இ - ள்.) உயிரும்-உயிரெழுத்துப் பன்னிரண்டும், உடம்பும் - மெய்யெழுத்துப் பதினெட்டும், ஆம் - ஆகிய, முப்பதும் - முப்பது எழுத்துக்களும், முதல் - முதலெழுத்தாம்; (எ - று.)

'முதலெழுத்து' என்றது, தொகை; 'உயிரு முடம்பும்' என்றது, வகை; 'முப்பது' என்றது, விரி. உயிர்மெய் முதலிய மற்றை யெழுத்துக்களுக்குக் காரணமாதலால், முதலெழுத்தென்றுபெயர். * உயிர் இத்தனை மெய் இத்தனை என்று மேல்வரையறை செய்யப்போவதனால் இங்கு வரையறை செய்யாமல் 'முப்பது முதல்' எனக்கூறியது, உரைத்துமென்றல் என்னும்உத்தி; (உரைத்தும் என்றல் - பின்னே விவரித்துச் சொல்வோ மென்பதுபற்றி முன்னே சுருக்கிச் சொல்லுதல்.) (௪)

* 'தாமே தமித்து நிற்கையின், முதலாயின' என்பது, பழைய உரை.

[சார்பெழுத்தின் வகை-௧௦.]

‡ ௬0. உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு
அஃகிய இ உ ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத்தாகும்.

(இ - ள்.) உயிர்மெய் - உயிர்மெய்யும், ஆய்தம் - முற்றாய்தமும், உயிரளபு - உயிரளபெடையும், ஒற்றளபு - ஒற்றளபெடையும், அஃகிய இ - குறுகிய இகரமும் [குற்றியலிகரமும்],(அஃகிய) உ-குற்றியலுகரமும், (அஃகிய) ஐ - ஐகாரக் குறுக்கமும், (அஃகிய) ஔ - ஔகாரக்குறுக்கமும், (அஃகிய) மஃகான்-மகரக்குறுக்கமும், (அஃகிய) தனிநிலை-ஆய்தக்குறுக்கமும், பத்தும்-ஆகியபத்தும்,சார்பெழுத்து ஆகும்-சார்பெழுத்தின் வகையாம்;(எ-று.)

அஃகுதல்-சுருங்குதல்: இங்கே,மாத்திரைக்குறைதல். 'அஃகிய' என்னும்பெயரெச்சத்தைஉகரம்முதலியவற்றோடும்கூட்டுக.(மேற்சூத்திரத்தில் 'அஃகும்'என்பதையும் இவ்வாறேகொள்க.)பின்னே'அஃகியதனிநிலை' என ஆய்தக்குறுக்கம் கூறப்படுதலால், முன்னே 'ஆய்தம்' என்றது,முற்றாய்தம்.

ஆய்தம்-("அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு" முதலிய இடங்களில் உயிர்போல அலகுபெற்றும், "தோன்றிற் புகழொடு தோன்றுகவஃதிலார் முதலிய இடங்களில் மெய்போல அலகுபெறாமலும் உயிர்மெய்களை ஒருபுடையொத்து) உயிருமாகாமல் மெய்யுமாகாமல் (அலிபோலத்) தனிநிற்றலால், 'தனிநிலை' எனப்பட்டது. உயிரும் மெய்யும் தம்மிற் கலத்தல்போல ஆய்தம் ஒரெழுத்தோடுங் கலத்த லின்றித் தனிநிற்றலால் தனிநிலையெனப் பட்டதென்றலு மொன்று. உயிர்மெய்-உயிரும் மெய்யுஞ்சார்ந்து உண்டாதலாலும், ஆய்தம்-உயிர் மெய்களி னிடையே சார்ந்துவருதலாலும், மற்றை உயிரளபெடை முதலிய எட்டும் - தம் தம் முதலெழுத்தின் திரிபு விகாரத்தாற் பிறத்தலாலும், இவையெல்லாம் சார்ப்பெழுத் தெனப்பட்டன.* (௫)

[சார்பெழுத்தின் விரி - ௩௬௯.]

‡ ௬௧. உயிர்மெய் யிரட்டு நூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை
ஆறே ழஃகு மிம்முப் பானேழ்
உகர மாறா றைகான் மூன்றே
ஔகா ரணன்றே மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப.

(இ - ள்.) உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு-உயிர்மெய் இருநூற்றுப்பதினாறும், உயர் ஆய்தம் எட்டு-முற்றாய்தம் எட்டும், உயிரளபு எழுமூன்று-உயி

* 'அவையே தம்மொடுதாம் சார்ந்தும் இடம் சார்ந்தும்பற்றுக்கோடு சார்ந்தும் விகாரத்தால்வருதலின்,சார்பெழுத்தென்றாயின' என்பதுபழைய உரை.

ளபெடை இருபத்தொன்றும், ஒற்றளபெடை ஆறேழ்-ஒற்றளபெடைநாற்பத்திரண்டும்,அஃகும் இ முப்பானேழ்-குற்றியலிகரம்முப்பத்தேழும்,(அஃகும்) உகரம் ஆறுறு-குற்றியலுகரம் முப்பத்தாறும், (அஃகும்) ஐகான்மூன்றே-ஐகாரக்குறுக்கம் மூன்றும், (அஃகும்) ஔகான்ஒன்றே-ஔகாரக்குறுக்கம்ஒன்றும், (அஃகும்)மஃகான்மூன்றே-மகரக்குறுக்கம்மூன்றும்,(அஃகும்) ஆய்தம் இரண்டொடு - ஆய்தக்குறுக்கம்இரண்டும்,(ஆக) சார்பெழுத்துஉறுவிரி - சார்பெழுத்தினது மிக்க விரி, ஒன்று ஒழி முந்நூறு எழுபான்-ஒன்று குறைந்த முந்நூற்றெழுபது [முந்நூற்றறுபத்தொன்பது] ஆகும், என்ப - என்றுசொல்வர், (அறிவுடையோர்); (எ - று.)—உறுவிரி - முழுத்தொகை.

இவை இத்தனையாதலை, * அவ்வவற்றின்பிறப்பிலக்கணத்திற்காண்க. எழுத்துவேற்றுமைபற்றி, உயிர்மெய் இருநூற்றுப்பதினாறாயின. உயிரளபெடையும் ஒற்றளபெடையும், எழுத்துவேற்றுமை இடவேற்றுமைஎன்னுமிரண்டும்பற்றித் தொகையிடப்பட்டன. திரிந்த முதலெழுத்துக்கள்பற்றி, ஆய்தக்குறுக்கத்திற்குத் தொகைகுறிக்கப்பட்டது.மற்றவையெல்லாம்,இடவேற்றுமைபற்றிக் கணக்கிடப்பட்டன. உயர் ஆய்தம் - மாத்திரை குறையாமல் நிறைந்த ஆய்தம்; எனவே, முற்றாய்தமாம். (சூ)

உ. பெயர்.

[பெயரின் பொதுவிலக்கணம்.]

‡ சூ உ. இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின.

(இ - ள்.)இடுகுறி காரணம் பெயர்-இடுகுறிப்பெயரும்காரணப்பெயருமாகிய இரண்டும்,—பொது சிறப்பின-பலபொருளுக்குப்பொதுப்பெயராகியும் ஒவ்வொரு பொருளுக்கே சிறப்புப்பெயராகியும்வருவனவாம்; (எ - று.)

எனவே, இடுகுறிப்பொதுப்பெயர், இடுகுறிச்சிறப்புப்பெயர்,காரணப்பொதுப்பெயர், காரணச்சிறப்புப்பெயர்எனப்பெயர் நால்வகைப்படுமென்றதாயிற்று. ஒருகாரணமும்பற்றாமல் ஒருபொருளுக்குக் கடவுளாலும் அறிவுடையோராலும் இட்ட குறியாகிய பெயர்,இடுகுறிப்பெயர்.காரணத்தால் வரும்பெயர், காரணப்பெயர்.

(உதாரணம்.)
- மரம்—இடுகுறிப் பொதுப்பெயர்.
- பனை, பலா - இடுகுறிச் சிறப்புப்பெயர்.
- அணி—காரணப் பொதுப்பெயர்.
- வளை, சிலம்பு—காரணச் சிறப்புப்பெயர்.

(அணி - அணியப்படுவன: ஆபரணங்கள். வளை - வளைவாகவுள்ளது : ஒருவகையணி. சிலம்பு - ஒலிப்பது : ஒருவகைக் காலணி.)

இனி இரட்டுறமொழிதல் என்னும் உத்தியால், இச்சூத்திரத்திற்கு வேறொரு பொருளும் உரைக்கப்படும் ; (இரண்டு உற மொழிதல்- இரண்டு பொருள் ஒருங்கே அமையும்படி சொல்லுதல்.) அது வருமாறு:—

* அக - ஆஞ் சூத்திரம் முதலியன.

பெயர் - பெயர்கள்,—இடுகுறி காரணம் பொது - இடுகுறி காரணம் என்னும் இரண்டு இலக்கணங்களுக்கும் பொதுவாகியும், சிறப்பின - இடுகுறிக்கே சிறப்பாகியும் காரணத்திற்கே சிறப்பாகியும்வருவனவாம்;!(எ-று.)

எனவே, காரணவிடுகுறிப்பெயர், இடுகுறிப்பெயர், காரணப்பெயர் எனப் பெயர் மூவகைப்படு மென்றதாயிற்று. (வடநூலார் இடுகுறியைரூட மென்றும், காரணத்தை யோகமென்றும், காரணவிடுகுறியை யோகரூட மென்றும்வழங்குவர்.) காரணஇடுகுறிப்பெயராவது - காரணத்தைநோக்குமிடத்து அக்காரணத்தையுடைய பலவற்றிற்கும் பெயராக வழங்கக்கூடியதாயினும், அங்ஙனம் வழங்காமல் அக்காரணத்தையுடைய ஒன்றற்கேஉரியதாக இடப்பட்ட குறியாய் வழங்குஞ் சொல்.

(உ - ம்.) பரம், பொன்—இடுகுறிப்பெயர்.
பரமன், பொன்னன்—காரணப்பெயர்.
முக்கணன், அந்தணர், முள்ளி—காரணவிடுகுறிப்பெயர்.

(பரம் - மேன்மை. பரமன் - மேலானவன். பொன்னன் - பொன்னையுடையவன்.) முக்கணனென்பது - காரணங்கருதியபொழுது மூன்றுகண்களையுடைய விநாயகமூர்த்தி முதலிய பலர்க்குஞ் செல்லுமாயினும் இடுகுறியளவாய்ச் சிவபிரானுக்கே பெயராதலாலும், அந்தணரென்பது - அழகிய தண்மையை [குளிர்ந்த அருளை] யுடையபலர்க்குஞ் செல்லுமாயினும்பிராமணர்க்கே பெயராதலாலும், முள்ளியென்பது - முள்ளுடையன பலவற்றிற்குஞ் செல்லுமாயினும் ஒருவகைச்செடிக்கே பெயராதலாலும், காரணவிடுகுறிப்பெயராயின.

எழுத்துக்குப்பெயர்கூறத்தொடங்கியவர்,பெயரினிலக்கணத்தைமுதலில் தெரிவித்தார். இவ்வாறேமேல் எழுத்துக்களின்பெயர்வருதல்காண்க.*

எழுத்துக்களின் பெயர்.

[உயிரும், மெய்யும்.]

‡ சூஅ. அம்முத லீரா றாவி கம்முதல்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்.

(இ - ள்.) 'அ முதல்ஈராறு-அகரம்முதலிய பன்னிரண்டும், ஆவி-உயிரெழுத்து: க முதல் மூவாறு - ககரம் முதலிய பதினெட்டும், மெய் - மெய்யெழுத்து, 'என - என்று, விளம்பினர்புலவர் - சொன்னார் அறிவுடையோர்; (எ - று.)—வடமொழியில் உயிர் 'அச்' எனவும், மெய் 'ஹல்' எனவும்படும்.

---

* 'அ ஆ என்றற் றொடக்கத்தன - இடுகுறிச் சிறப்புப்பெயர். குறில் நெடில் வல்லினம் மெல்லினம் இடையினம் என்றற் றொடக்கத்தன - காரணப் பொதுப்பெயர். குற்றிகரம் குற்றுகரம் மகரக்குறுக்கம் ஆய்தக்குறுக்கம் என்றற் றொடக்கத்தன - காரணச் சிறப்புப்பெயர். இவ்வாறே பிறவும் ஆராய்ந்தறிக ' என்பது பழைய உரை.

(உ - ம்.) அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ—உயிர் - கஉ.
க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்—மெய் - கஅ.

அகரம் முதலிய பன்னிரண்டும் உயிர்போலத் தனித்து இயங்குவனவாதலால் 'உயிர்' எனவும், ககரம்முதலிய பதினெட்டும் உடம்புபோல உயிரோடு கூடியல்லது இயங்காவாதலால் 'மெய்' எனவும் பெயர்பெற்றன. உயிர் ஆவி என்பனவும், * மெய் உடல் உடம்பு உறுப்பு ஒற்று புள்ளி என்பனவும் ஒரு பொருளன. (அ)

[குறில் - ரு.]

‡ சூச. அவற்றுள்,
அ இ உ எ ஒக் குறி லைந்தே.

(இ - ள்.) அவற்றுள் - (உயிர் மெய் என்ற) அவற்றுள், அ இ உ எ ஒ ஐந்து - இவ்வைந்தும்,—குறில் - குற்றெழுத்தாம்; (எ - று.)—குறில் - குறுகிய அளவுள்ளது; (ஹ்ரஸ்வம்.) (கூ)

[நெடில் - எ.]

‡ சூரு. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்.

(இ - ள்.) ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ - இவ்வேழும்,—நெடில்-நெட்டெழுத்தாம்; (எ - று.)—நெடில் - நீண்ட அளவுள்ளது; (தீர்க்கம்.)

'குறில்ஐந்து' என்றாற்போல 'நெடில்எழு' எனத் தொகைகொடாமல் 'நெடில்' என்றவளவோடு நிறுத்தியது, ஐயும் ஔவும் சிலவிடத்தன்றி எங்கும் நெடிலாகாமையைக் குறிப்பித்தற்கு என்பர். (க0)

[சுட்டு - ந.]

‡ சூசு. அ இ உம் முதல் தனிவரிற் சுட்டே.

(இ - ள்.) அ இ உ - இம்மூன்றும்,—முதல் - (மொழிக்கு) முதலில், தனி வரின் - தனித்து [சுட்டுப்பொருளைக் காட்டி] வந்தால், சுட்டு-சுட்டெழுத்தாம்; (எ-று.)—சுட்டு - குறித்துக்காட்டுதற்பொருளை உணர்த்துவது.

'முதல்' எனப் பொதுப்படச்சொன்னதனால்,மொழிக்கு அகத்தும்புறத்தும் வருமெனக் கொள்க. அகத்து உறுப்பு-பதத்தினுள்ளாகவேசுட்டெழுத்துநிற்பது. புறத்து உறுப்பு-பதத்திற்குவெளியாகச்சுட்டெழுத்துநிற்பது.

(உ - ம்.)		
அவன், இவன், உவன்	அகச்சுட்டு.	
அக்கொற்றன், இம்மனிதன், உவ்வீடு	புறச்சுட்டு.	

அகரம் - தூரத்திலுள்ள பொருளையும்,இகரம் - சமீபத்திலுள்ளபொருளையும், உகரம்-நடுவிலுள்ள பொருளையும், பின்னிற்கும் பொருளையும், மேல்நிற்கும் பொருளையும் சுட்டுதற்கு வரும்: 'அவ னிவ னுவன்,' 'உப்பக்கம்', 'உம்பர்' என்பன காண்க. (உப்பக்கம்-பின்பக்கம். உம்பர் - மேலிடம்.)

* மெய்யீற்றுப்புணரியல் - க, உயிரீற்றுப்புணரியல் - சங, ச0, ருகூ - ஆஞ் சூத்திரங்களில் முறையே காண்க.

அவன் இவன் உவன் என்பவற்றிலுள்ள அகரஇகர உகரங்கள்-அடை இடை உடை என்பவற்றின் முதலெழுத்துக்கள்போலப் பின்னெழுத்துக்களோடு தொடர்ந்து நின்று ஒருபொருளை உணர்த்தாமல், பொன்னன்முதலிய சொற்களின் பகுதிபோல வேறுநின்று சுட்டுப்பொருளை யுணர்த்துதலால், அகத்துறுப்பும் 'தனிவரின்' என்றதில் அடங்கிற்று, இதனைவிருவிற்குங் கொள்க. (கக)

[வி௵ - ரு.]

‡ சூஎ. எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏஇரு வழியும் வினவா கும்மே.

(இ - ள்.) எ யா முதலும் - எகரமும் யாவும் (மொழிக்கு) முதலிலும், ஆ ஓ ஈற்றும்-ஆகாரமும் ஓகாரமும் (மொழிக்கு) இறுதியிலும், ஏ இருவழியும் - ஏகாரம் இரண்டு இடத்திலும் [மொழிக்கு முதலிலும் இறுதியிலும்], (தனி வரின்) வினஆகும் - தனித்து [வினப்பொருளைக்காட்டி] வந்தால் வினவெழுத்தாம்; (எ - று.)

வின - கேள்விப்பொருளை உணர்த்துவது. முன்சூத்திரத்தில் 'தனிவரின்' என்றது, இங்குங்கூட்டப்பட்டது.ஒன்றினமுடித்தல்தன்னினமுடித்தல் என்னும்உத்தியால்,உயிர்மெய்யாகிய யாவினவும் உடன்கூறப்பட்டது. (ஒன்று இனம் முடித்தல் தன் இனம் முடித்தல் - ஒத்த இலக்கணமுடையவற்றை ஒருங்கு கூட்டிக் கூறுதல்.)

(உ - ம்.)	எவன் யாவன்	எ, யா - முதலிலே அகத்து வந்தன. (அகவின.)
	எக்கடவுள் யாங்ஙனம்	எ, யா - முதலிலே புறத்து வந்தன. (புறவின)
	பொன்னனா பொன்னனோ	ஆ, ஓ - ஈற்றிலே புறத்து வந்தன. (ஈற்றுவின,) புறத்துமாத்திரமே வரும்.)
	ஏவன் பொன்னனே	ஏ - முதலில் அகத்தும், ஈற்றிற்புறத்தும் வந்தது. (கஉ)

[வல்லினம் - சூ.]

‡ சூஅ. வல்லினம் க ச ட த ப ற வென வாறே.

(இ - ள்.) க ச ட த ப ற என ஆறு - இவ்வாறும்,—வல்லினம் - வல்லெழுத்தாம்; (எ - று.)—வல் இனம் - வன்மையாக ஒலிக்கின்ற வருக்கம். இவை - வலி, வன்மை, வண்கணம் எனவும் பெயர்பெறும். (கங)

[மெல்லினம் - சூ.]

‡ சூகூ. மெல்லினம் ங ஞ ண ந ம ன வென வாறே.

(இ - ள்.) ங ஞ ண ந ம ன என ஆறு - இவ்வாறும்,—மெல்லினம் - மெல்லெழுத்தாம்;(எ-று.)—மெல் இனம்-மென்மையாக ஒலிக்கிறவருக்கம். இவை - மெலி, மென்மை, மென்கணம் எனவும் பெயர் பெறும். (கச)

[இடையினம் - சூ.]

‡ ௭௦. இடையினம் ய ர ல வ ழ ள வென வாறே.

(இ - ள்.) ய ர ல வ ழ ள என ஆறு - இவ்வாறும்,—இடையினம் - இடையெழுத்தாம்; (எ - று.)—இடை இனம் - வல்லினமெல்லினங்கட்கு நடுத்தரமாக ஒலிக்கின்ற வருக்கம். வல்லினம் பிறக்குமிடமாகிய மார்பிற்கும் மெல்லினம் பிறக்குமிடமாகிய மூக்கிற்கும் இடையிடமாகிய கழுத்தினின்றுபிறத்தல்பற்றி இடையெழுத்தெனப்பெயர்வந்ததென்றலும்உண்டு.

இவை-இடை, இடைமை இடைக்கணம் எனவும் பெயர்பெறும். (௧௫)

[இனவெழுத்து.]

‡ ௭௧. ஐ ஔ இ உச் செறிய முதலெழுத்து
இவ்விரண் டோரின மாய்வரல் முறையே. *

(இ - ள்.) ஐ ஔ - (ஒத்தஇனமில்லாத) ஐகார ஔகாரங்கள், இ உ செறிய (ஈகார ஊகாரங்கட்கு இனமாகிய) இகர உகரங்களையே(தமக்கும்இனமாகப்) பொருந்த, முதல் எழுத்து - முதலெழுத்துக்கள், இவ்விரண்டு - இரண்டிரண்டு, ஓர் இனம் ஆய் வரல் - ஓரினமாகி வருதல்,முறை-தொன்றுதொட்டுவரும் முறைமையாம்; (எ - று.)—ஆதலால், அவை'இனவெழுத்து' எனப் பெயர்பெறும். முறை - வரன்முறை.

சுருங்கச்சொல்லல் என்னும் அழகுபற்றி,'முதலெழுத்து'எனப் பொதுப்படக் கூறினாராயினும், ஏற்புழிக்கோடல் என்னும் உத்தியால், இவ்விரண்டு ஓரினமாய் வருதலை இடையினம் ஒழிந்த மற்றவற்றிற்கே கொள்க. (சுருங்கச்சொல்லல்-சொற்கள்விரியாதபடிசொல்லுதல்.ஏற்புழிகோடல்-கூறிய இலக்கணத்தை ஏற்ற இடத்திற்கு மாத்திரமேகொள்ளுதல்.(இதனை 'முறை' என்ற மிகையாற் கொள்ளுதலும் ஒன்று.

(உ - ம்.) அ - ஆ, இ - ஈ, உ-ஊ, எ - ஏ, (இ) - ஐ, ஒ, - ஓ,(உ) - ஔ எனவும், க - ங, ச - ஞ, ட - ண, த - ந, ப - ம, ற - ன எனவும் வரும். இடையெழுத்துஆறும், ஓரினம். (௧௬)

[இனமேன்றற்குக் காரணம்.]

௭௨. தான முயற்சி யளவு பொருள் வடிவு
ஆனவொன் றுதியோர் புடையொப் பினமே.

(இ - ள்.) தானம் - பிறப்பிடமும், முயற்சி - பிரயத்தனமும், அளவு-மாத்திரையும், பொருள்-அர்த்தமும், வடிவு - உருவமும், ஆன-ஆகிய இவற்றுள், ஒன்றுஆதி - ஒன்றுமுதலாக, ஓர் புடை ஒப்பு - ஒருபுடை [சில] ஒத்திருத்தல்,—இனம் - இனமாதற்குக் காரணம்; (எ - று.)—இங்கு, வடிவு - வரிவடிவம்.

* 'இவ்விரண்டோரினமாய் வருமுறையே' என்பது, பழையவுரையின் பாடம்; அகரம் முதலான முதலெழுத்துக்கள் முறையே இவ்விரண்டெழுத்துத் தம்முள் இனமாய்வரும் என்று பொருள்.

தானத்தாலும் முயற்சியாலும் ஒத்துவருவன - உயிரினமெல்லாம். முயற்சியாலும் அளவாலும் ஒத்துவருவன - இடையினம் ஒழிந்த மெய்கள்.

பொருளால் ஒத்துவருவன - அ ஆ, இ ஈ, உ ஊ, எ ஏ, ஒ ஓ, க ங, ச ஞ, ட ண, த ந, ப ம, ற ன முதலியன. அது, ஆது; இங்கு, ஈங்கு; உங்கு, ஊங்கு; எது, ஏது; ஒடு ஓடு; குளக்கரை, குளங்கரை; தடச்சோலை, தடஞ் சோலை; படம், பணம்; பாழ்த்தூறு, பாழ்ந்தூறு; அப்பு, அம்பு; நற்கு, நன்கு எனச் சில பொருள் ஒத்து வருதல் காண்க.

வடிவால் ஒத்துவருவன - இ ஈ, ஐ இ, ஔ உ ஒழிந்தமற்றைஉயிர்கள்.

முன்பு காரணம் விளங்காமற் கூறப்பட்ட இனமென்றதை இங்கே காரணங்காட்டிமுடிவுசெய்தலால்,'இச்சூத்திரம்,ஏதுவின்முடித்தல்என்னும் உத்தி. (ஏதுவின் முடித்தல் - காரணங்காட்டி முடிவுசெய்தல்.) (கஎ)

௩. முறை.

எ௩. சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்
நடத்தல் தானே முறையா கும்மே.

(இ - ள்.) சிறப்பினும் - சிறப்பினாலும்,இனத்தினும் - இனத்தினாலும், செறிந்து - (ஒன்றன்பின் ஒன்று) பொருந்தி, ஈண்டு - இவ்வுலகத்தில், அ முதல் நடத்தல் தானே- அகரம்முதலாகத் தொன்றுதொட்டுவழங்குதலே, முறை ஆகும் - (எழுத்துக்கள் நிற்கும்) முறையாம்; (எ - று.)

தனித்து இயங்கும்ஆற்றலுடைய உயிரெழுத்துக்கள்அவ்வுயிர்களோடு கூடியல்லது இயங்கும் ஆற்றலில்லாத மெய்யெழுத்துக்கட்குமுன்நிற்பதும், குற்றெழுத்துக்கள் தமது விகாரங்களாகிய நெட்டெழுத்துக்கட்குமுன்நிற்பதும், வலியார் மெலியார்க்குமுன் நிற்றல்போல வல்லெழுத்துக்கள் மெல்லெழுத்துக்கட்கு முன் நிற்பதும் - சிறப்பினால் எனவும்;குற்றெழுத்துக்கட்குப்பின் அவ்வவற்றின் இனமொத்த நெட்டெழுத்துக்கள் நிற்பதும், வல்லெழுத்துக்கட்குப்பின் அவ்வவற்றின் இனமொத்த மெல்லெழுத்துக்கள் நிற்பதும் - இனத்தினால் எனவும் கொள்க.

(அகரம் முதல்னகரமீறாகப் பொருந்தியமுறைமைக்குக்காரணம்முழுவதையும் விருத்தியுரைகளிற் காண்க.) (கஅ.)

௪. பிறப்பு.

[பிறப்பின் பொதுவிலக்கணம்.]

எ௪. நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப
எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே *

---

* "ஆற்றலுடையுயிர் முயற்சியி னணுவியைந்,தேற்றன வொலிவாய்த் தோற்றுதல்பிறப்பே' என்றார்ஆசிரியர்அவினயனார்' என்பதுபழையஉரை.

(இ - ள்.) நிறை - (ஒலியெழுத்திற்கு வேண்டுங் காரணங்களிற் குறைவின்றி) நிறைந்த, உயிர்-உயிரினது, முயற்சியின் - உச்சரிக்கவேண்டுமென்னும் முயற்சியால், உள் வளி துரப்ப-உள்ளேநின்ற காற்றானது எழுப்ப, எழும் - எழுகின்ற, அணு திரள் - (செவிப்புலனாம்) அணுக்கூட்டம், உரம் கண்டம் உச்சி மூக்கு-மார்பும் கழுத்தும் தலையும் மூக்கும் ஆகியநான்கிடத்தையும், உற்று-(முதலிற்) பொருந்தி, (பின்பு), இதழ்நா பல்அணம்-உதடும் நாக்கும் பல்லும் வாயும் ஆகிய நான்கினுடைய, தொழிலின்-முயற்சிவேறுபாட்டினால், வெவ்வேறு எழுத்து ஒலி ஆய்-வேறுவேறுவகைப்பட்ட எழுத்தாகிய ஓசைகளாய், வரல்-தோன்றுதல்,—பிறப்பு-(அவற்றின்) பிறப்பாம்; (எ - று.)—அணம் - அண்ணம்; மேல்வாயும் கீழ்வாயும். (கக)

[முதலெழுத்துக்களின் பிறப்பிடம்.]

எ௫. அவ்வழி,
ஆவி யிடைமை யிடமிடறாகும்
மேவு மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை.

(இ - ள்.) அ வழி - முன்சொன்ன வழியாற் பிறக்குமிடத்து,—ஆவி இடைமை இடம்-உயிரெழுத்துக்கட்கும் இடையினத்திற்கும் இடம்,மிடறு ஆகும் - கழுத்தாகும்; மென்மை - மெல்லினம், மூக்கு மேவும் - மூக்கை (இடமாக)ப் பொருந்தும்; வன்மை - வல்லினம், உரம் பெறும் - மார்பை (இடமாக)ப் பெறும்; (எ - று.) (உ0)

[முதலெழுத்துக்கட்கு முயற்சிவகையாற் பிறப்பு.]

எசு. அவற்றுள்,
முயற்சியுள் அ ஆ அங்காப் புடைய.

(இ - ள்.) அவற்றுள் - (மேல் இடம்வகுக்கப்பட்ட) முதலெழுத்துக்களுள், அ ஆ - அ ஆ இரண்டும்,—முயற்சியுள் - (முன்சொன்ன நால்வகை) முயற்சிகளுள், அங்காப்பு உடைய-(அண்ணத்தின் தொழிலாகிய)அங்காத்தலை யுடையனவாய்ப் பிறக்கும்; (எ - று.)—அங்காத்தல் - வாய்திறத்தல்.

அ ஆ என உச்சரித்துக் கண்டுகொள்க. பிறவும் இவ்வாறே. (உக)

எஎ. இஈ எஏ ஐஅங் காப்போடு
அண்பல் முதல்நா விளிம்புற வருமே.

(இ - ள்.) இ ஈ எ ஏ ஐ-இந்த ஐந்தும்,—அங்காப்போடு-வாய்திறத்தலுடனே, அண் பல்-மேல்வாய்ப்பல்லை, நா முதல் விளிம்பு-அடிநாக்கினது ஓரமானது, உற - பொருந்த, வரும் - பிறக்கும்; (எ - று.)—அண் பல் - (நாவின் ஓரத்தால்) அணுகப்படும் பல்; வினைத்தொகை.

'அங்காப்போடு' என்பதை, இப்பிறப்பிலக்கணம் முடியுமளவும் வருஞ் சூத்திரந்தோறும் கூட்டுக.

எ௮. உஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே.

(இ - ள்.) உ ஊ ஒ ஓ ஒள - இந்த ஐந்தும், (பிறத்தற்கு ஏதுவாகிய முயற்சி), இதழ் குவிவு - உதடுகளின் குவிதலாம்; (எ - று.) (உங)

எகூ. கஙவுஞ் சஞவும் டணவு முதலிடை
நுனிநா வண்ண முறமுறை வருமே.

(இ - ள்.) க ங வும்-ககரமும் ஙகரமும், ச ஞவும் - சகரமும் ஞகரமும், ட ணவும் - டகரமும் ணகரமும்;—முறை-முறையே,—முதல் இடை நுனி நா அண்ணம் உற-நாக்கின் அடியும் நடுவும் கடையும்மேல்வாயின் அடியையும் நடுவையும் கடையையும் பொருந்த, வரும்-பிறக்கும்; (எ-று.)

'முத லிடை நுனி' என்பதை, நா அண்ணம் என்ற இரண்டோடுங் கூட்டுக.

அடிநா மேல்வாயடியைச் சேர்தலாற் ககரஙகரங்களும்,இடைநாமேல் வாயிடையைச் சேர்தலாற் சகரஞகரங்களும்,நுனிநா மேல்வாய்நுனியைச் சேர்தலால் டகர ணகரங்களும் பிறக்குமென்க; * முறைநிரனிறை. (உச)

அ0. அண்பல் லடிநா முடியுறத் தநவரும்.

(இ - ள்.) அண்பல் அடி-மேல்வாய்ப் பல்லின் அடியை, நா முடி உற-நாக்குநுனி பொருந்த,—த ந - தகரமும் நகரமும், வரும்-பிறக்கும். (உரு)

அக. மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்.

(இ - ள்.) மீ கீழ் இதழ் உற-மேலுதடும் கீழுதடும்(தம்மிற்)பொருந்த, ப ம - பகரமும் மகரமும், பிறக்கும்—; (எ - று.) (உசா)

அஉ. அடிநா வடியண முறயத் தோன்றும்.

(இ - ள்.) அடி நா - நாக்கினடியானது, அடி அணம் உற - மேல்வாயடியைப் பொருந்த,—ய-யகரம், தோன்றும்-பிறக்கும்; (எ - று.) (உஎ)

அங. அண்ண நுனிநா வருட ரழவரும்.

(இ - ள்.) அண்ணம்-மேல்வாயை, நா நுனி வருட -. நாக்கின் நுனியானது தடவ,—ர ழ - ரகரமும் ழகரமும், வரும் - பிறக்கும்; (எ - று.)

அண்ணம் நுனி-மேல்வாய்நுனியை, நா வருட-நாக்குத் தடவ எனினுமாம். மத்திமதீபமாக,நுனியென்பதை அண்ணம் நாஎன்றஇரண்டுக்குங் கூட்டுதலு மொன்று. மேல் அகூ-ஆஞ் சூத்திரத்திலும் இதுகொள்க.(உஅ)

அச. அண்பல் முதலு மண்ணமு முறையின்
நாவிளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.

(இ - ள்.) அண்பல் முதலும்-மேல்வாய்ப்பல்லின் அடியையும்,அண்ணமும் - மேல்வாயையும், முறையின் - முறையே, நா விளிம்பு - நாவின் ஓரமானது, வீங்கி - தடித்து, ஒற்றவும் வருடவும் - பொருந்தவும் தடவவும்,

---

* முறைநிரனிறையின் தன்மையை சகச-ஆஞ் சூத்திரத்திற் காண்க.

லகார ளகாரம் ஆய் - லகாரமாகியும் ளகாரமாகியும், இரண்டும்-இவ்விரண்டெழுத்துக்களும் பிறக்கும்—; (எ - று.)—முறைநிரனிறை.

மேல்வாய்ப்பல்லினடியை நாவின் ஓரம் தடித்துப்பொருந்துதலால் லகரமும், மேல்வாயை நாவின் ஓரம் தடித்துத் தடவுதலால் ளகரமும்பிறக்கும்.

லகாரம் ளகாரம் அ இரண்டும் என்று பிரித்து, லகாரமும் ளகாரமுமாகிய அவ்விரண்டும் என்றும் உரைக்கலாம். (அ + இரண்டு = ஆயிரண்டு.)

அரு. மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.

(இ - ள்.) மேல் பல் - மேல்வாய்ப்பல்லை, இதழ் உற - கீழுதடு பொருந்த,—வ-வகரமானது, மேவிடும் - பிறக்கும்; (எ - று.)

மேற்பல் கீழுதட்டைப் பொருந்த எனினுமாம். (ருo)

அசு. அண்ண நுனிநா நனியுறில் றனவரும்.

(இ - ள்.) அண்ணம்-மேல்வாயை, நுனி நா-நாக்கு நுனி, நனிஉறில்-மிகப்பொருந்தின்,—ற ன - றகரமும் னகரமும், வரும்-பிறக்கும்;(எ - று.)

[சார்பெழுத்துக்கு இடமும், முயற்சியும்.]

அஎ. ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி
சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய.

(இ - ள்.) ஆய்தக்கு-ஆய்தவெழுத்துக்கு, இடம் - பிறப்பிடம், தலை - தலையாம்; முயற்சி - பிரயத்தனம், அங்கா - வாயைத் திறத்தலாம்; சார்பெழுத்து ஏனவும் - (ஆய்தம் நீங்கலான மற்றைச்) சார்பெழுத்துக்களும், தம் முதல் அனைய-(இடமுயற்சி வகைகளினால்) தம் தம் முதலெழுத்துக்களை ஒப்பனவாம்; (எ - று.)—ஆய்தக்கு=ஆய்தத்துக்கு: விகாரம்: (ருஉ)

[பிறப்புக்குப் புறனடை.]

அஅ. எடுத்தல் படுத்தல் நலித லுழப்பின்
திரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்.

(இ-ள்.) (பலவெழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டனவாயினும்)—எடுத்தல்-உயர்த்தி உச்சரித்தலும், படுத்தல் - தாழ்த்தி உச்சரித்தலும், நலிதல் - நடுத்தரமாக உச்சரித்தலும் ஆகிய, உழப்பின்-(எழுத்திற்கு உரிய) ஒலிமுயற்சிவகையினால், திரிபும் - (ஒன்றற்குஒன்று பிறப்பு) வேறுபாடுகளும், தம்தமில்-அவ்வவற்றுள் சிறிது உள ஆகும் - சிறிதுசிறிது உள்ளனவாம்; (எ - று.)

ஓர் எழுத்தே வெவ்வேறுவகையாகஒலித்தலையும்இச்சூத்திரத்திலேயே அடக்கவேண்டும்; அதற்கு உதாரணம்-'தந்தது'என்பதிலுள்ள தகரங்களின் ஒலிவேறுபாடு போல்வன காண்க. (ருரு)

[உயிர்மெய் - உகசு.]

‡ அகூ. புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை யுயிரோ டுருவு திரிந்தும்
உயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்.

(இ - ள்.) அவ்வொடு-(மெய்) அகரவுயிரோடு (கூடியபொழுது),புள்ளி விட்டு-புள்ளியை விட்டு, முன் உரு ஆகியும் - அவ்விட்டவடிவே வடிவாகியும், ஏனை உயிரோடு-('ஆ'முதலிய) மற்றைஉயிர்களோடு (கூடியபொழுது), உருவு திரிந்தும்-(புள்ளிவிடுதல்மாத்திரமேயன்றி)வடிவுவேறுபட்டும், உயிர் அளவு ஆய்-உயிர்மாத்திரையே மாத்திரையாய்[மெய்யின்மாத்திரை தோன்றாமல்], அதன் வடிவு ஒழித்து - (வரிவடிவில்) உயிரின்வடிவை ஒழித்து [மெய்யெழுத்து விகாரப்பட்ட வடிவே வடிவாய்],இரு வயின் பெயரொடும்-(உயிரும் மெய்யும் ஆகிய) இரண்டிடத்தும் பிறந்த (உயிர்மெய் என்னும்) பெயருடனே, ஒற்று முன்ஆய்-மெய்யினொலி முன்னும் உயிரினொலி பின்னுமாகி, உயிர்மெய் - உயிர்மெய்யெழுத்து, வரும்—;(எ - று.)

பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யின்மேலும் தனித்தனி ஏறி வருதலால் உயிர்மெய் இருநூற்றுப்பதினாறம்; க் + அ = க, க் + ஆ = கா முதலியன.

'உயிரளவாய்' என்றதனால், உயிர்மெய்க்குற்றெழுத்துக்கு ஒருமாத்திரையும் உயிர்மெய்ந்நெட்டெழுத்துக்கு இரண்டுமாத்திரையுமா மென்க.

ஙா ஙி ஙீ முதலிய மொழிமுதற்காரணமாகாத ஒலிகளையும் இங்கே எழுத்தெனத் தழுவுதல், அவற்றுள் முதலாகிய ஙகரம் மொழிமுதற்காரணமாதலால்;இது எண்ணிறைத்தற்பொருட்டுச் சுருங்கச்சொல்லலாகக் கூறப்பட்டுவருவதோர் அனுதிவழக்கமாமென அறிக: இங்ஙே "ஙப்போல் வளை" என்னும் ஔவையார் வாய்மொழியின் அரும்பொருள் ஆராயத் தக்கது.

சார்பெழுத்திற்குச் சார்ந்துவருதல் ஓர்பிறப்பாதலால்,அதனைப்பிறப்பிலக்கணத்தோடு சாரவைத்துச் சொல்லத் தொடங்கினார் (௩௪)

[முற்றாய்தம்-அ.]

‡ ௬௦. குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லா றன் மிசைத்தே.

(இ - ள்.) ஆய்தம் புள்ளி - (மூன்று) புள்ளிவடிவாகிய ஆய்தவெழுத்தானது,—குறியதன்: முன்னர் - குற்றெழுத்தின் முன்னதாய், உயிரொடு புணர்ந்த வல் ஆறன் மிசைத்து ஏ-உயிரோடு கூடிய வல்லெழுத்தாறனுள் ஒன்றன் மேலதாகியே வரும்: (எ - று.)—முன் - இங்கே, இடமுன்.

("ஆய்தவொற்று என்றவாறு. ஆய்தமான புள்ளி, 'ஆய்தப்புள்ளி' என்றார். இதனையும் ஒற்றின்பாற் சார்த்துதற்கு என்க" என்பது,பழையஉரை.)

அடுப்புக்கூட்டுப்போல ஒருவகை ஆயுதவடிவாகமூன்று புள்ளிவைத்து எழுதப்படுதலால், ஆய்தமென்று பெயர். ஆய்தம் = ஆயுதம்;இங்கே,போர்க்கருவியாகிய கேடகமென்னும் படை: சமைத்தற்கருவியாகிய அடுப்புமாம்.

முற்றாய்தம்-மாத்திரை குறையாத ஆய்தம். இச்சூத்திரத்தால்,ஆய்தம் தனிமொழி தொடர்மொழிகளின் இடையி லன்றி மற்றைய இடங்களில் வாரா தென்பது நன்கு விளங்கும்.

(உ - ம்.) எஃகு, கஃசு, ஒன்பஃது, பஃறி; பிறவுங் கண்டுகொள்க.

(எஃகு-வேல். கஃசு-ஓர்எடையளவு.ஒன்பஃது-ஒன்பது.பஃறி-ஓடம்.)

வல்லினவகையால் இயல்பாகவரும் ஆய்தம் ஆறு;* அவ் + கடிய = அஃகடிய எனத் திரிதலென்னும் புணர்ச்சிவிகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று; செய்வது = செய்வஃது என விரித்தலென்னுஞ் செய்யுள்விகாரத்தால்வரும் ஆய்தம் ஒன்று: ஆக, முற்றாய்தம் எட்டாதல் காண்க.

இது§ தொல்காப்பியச்சூத்திரமாதலால், இதனைஎடுத்துக்கொண்டது, தானெடுத்துமொழிதல் என்னும் உத்தி. (தான்|எடுத்து மொழிதல் - பழஞ் சூத்திரத்தைத் தான் எடுத்துச் சொல்லுதல்.) (நரு)

[உயிரளபெடை - உக.]

‡ கூக. இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.

(இ - ள்.) மொழி - சொல்லுக்கு, முதல் இடைகடை - முதலிலும் நடுவிலும் இறுதியிலும், நிலை - நின்ற, நெடில் - நெட்டெழுத்துஎழும்,—இசை கெடின் - (பாட்டில்)ஓசை குறையுமிடத்து, அளபு எழும்-(அவ்வோசையை நிறைக்கத்) தம்தம் [இரண்டு] மாத்திரையின் மிக்கு ஒலிக்கும்; அவற்று - அந்தநெட்டெழுத்துக்களின் பின், அவற்று இனம் குறில் - அததற்குஇனமாகிய குற்றெழுத்துக்கள், குறி-(அளபெடுத்தமையைஅறிதற்குவரிவடிவில்) அடையாளமாக வரும்; (எ - று.)

குறி - அவ்வளவிற்குக் குறியாய் வந்துநிற்கு மென்றபடி; எனவே, ஒரு மாத்திரைக்கு ஒன்றாக வைத்து எழுதப்படு மென்க.

உயிர் அளவு எடை - உயிரெழுத்து மாத்திரை அதிகப்படுவது. இது, வடமொழியில், 'ப்லுதம்' எனப்படும்.

(உ - ம்.) $ "ஓஒதல் வேண்டும்" - "ஆஅது மென்னுமவர்" என முதலிலும்,
"உறஅர்க் குறுநோய்" - "செறஅஅய் வாழிய" எனஇடையிலும்,
"நல்லபடாஅ," "அடாஅவடுப்பினவர்" எனக்கடையிலும்வந்தன.

---

* மெய்யீற்றுப்புணரியல் நஉ - ஆஞ் சூத்திரம் பார்க்க.

§ தொல்காப்பியம், எழுத்ததிகாரம், மொழிமரபு - ரு.

$ "ஓஒதல்வேண்டு மொளிமாழ்கும் செய்வினை, யாஅதுமென்னுமவர்"
" உறாஅர்க் குறுநோயுரைப்பாய் கடலைச், செறாஅஅய்வாழியநெஞ்சு."
"அனிச்சப்பூக்கால்களையாள்பெய்தாள் நுசுப்பிற்கு, நல்லபடாஅபறை.
" கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத், தடாஅ வடுப்பினவர்."
" கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை."
" உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன்."

மற்றநெட்டெழுத்துக்களும்இப்படியேஅளபெடுக்கும்.'செருஅஅய்' என்பதில், ஆ ஈரளபெடுத்தது;ஆதலின்,இருகுறில்குறியாகஎழுதப்பட்டது.

இவை, செய்யுளிசைநிறைக்க வந்த அளபெடை.

செய்யுளோசை குன்றுவிடத்தும் (௧) இனிய ஓசையைத் தருதற்பொருட்டாகவே அளபெடுப்பதும், (௨) ஒருசொல் மற்றொருசொல்லின் இசையை நிறைத்தற்பொருட்டு அளபெடுப்பதும் உண்டு.

(௧) (உ - ம்.) "கெடுப்பதூஉங் கெட்டார்க்கு"-எடுப்பதூஉமெல்லாம்"

இவற்றுள் கெடுப்பதும், எடுப்பதும் என நிற்பினும் செய்யுளோசை குன்றாதாயினும், இன்னிசை நிறைத்தற்பொருட்டுக் குறில் நெடிலாய் அளபெடுத்தது; இது, இன்னிசையளபெடை. நெடில்அளபெடுத்தாலும் செய்யுளோசைகுறையாவிடத்தாயின் இன்னிசையளபெடையேயாம்.

(௨) (உ - ம்.) "உரனசைஇ யுள்ளம்" - "வரனசைஇ யின்னும்"

இவற்றுள் உரனசை, வரனசை என நிற்பினும்செய்யுளோசைகுன்றாதாயினும், விருப்பமெனப் பொருள்படும்நசையென்னும்பெயர்ச்சொல்விரும்பியென வினையெச்சப் பொருள்படும்பொருட்டு வினையெச்சச்சொல்லாதற்கு'நசைஇ' என அளபெடுத்தது; இது, சொல்லிசையளபெடை.சொல் விகாரப்பட்டு அளபெடுக்கும் தழீஇ - [தழுவி].குரீஇ-[குருவி],வளீஇ-[வளைந்து] முதலியனவும் இதில் அடக்கப்படும்.

ஆகவே, உயிரளபெடைகளெல்லாம் அடங்குமாறு அறிக.

நெட்டெழுத்து எழும் மொழியின் மூன்றிடத்தும் அளபெடுக்குமெனவே, உயிரளபெடைஇருபத்தொன்றாம்; ஒளகாரம்மொழிக்குநடுவிலும் கடையிலும் வாராமையால்அவ்விரண்டையும் கழிக்க, நின்றஉயிரளபெடை பத்தொன்பது: அப்பத்தொன்பதனோடுஇன்னிசையளபெடை,சொல்லிசையளபெடை என்னும் இரண்டையும் கூட்டஉயிரளபெடைஇருபத்தொன்றாதல் காண்க. (ந௯)

[ஒற்றளபெடை - ௪௨.]

‡ ௯௨. ஙஞண நமன வயலள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே.

(இ - ள்.) (இசைகெடின்)-பாட்டில் ஓசை குறையுமிடத்து,—ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம் - ங முதலிய இப்பத்துமெய்யும் ஆய்தமும் ஆகிய பதினோரெழுத்தும், குறில் இணை குறில் கீழ் - இரண்டுகுற்றெழுத்தின்பின்னும் ஒரு குற்றெழுத்தின் பின்னும், இடை கடை - (மொழிக்கு)நடுவிலும் கடையிலும், அளபு ஆம் - (அவ்வோசையைநிறைக்கத்) தம்தம் (அரை)மாத்திரையின் மிக்கு ஒலிக்கும்; அவற்றின் குறி - அப்படி அவை அளபெடுத்தமையை அறிதற்கு அடையாளம், வேறு மிகலே ஆம்-அம்மெய்யெழுத்துக்களின்பின் அவ்வெழுத்துக்களே (வரிவடிவில்) மற்றொருமுறை அளவுகுறியாய் வருதலாம்; (எ - று.)

ஒற்று அளபு எடை - மெய்யெழுத்து மாத்திரை அதிகப்படுவது. ('ஒற்றுக்கள் ஊன்றிச்சொல்ல அளபெழும்', 'நெட்டெழுத்தை நீட்டிச்சொல்ல அளபெழும்' என்ற நேமிநாதவுரைவாக்கியங்கள் கருதத்தக்கன.)

ஆய்தம், மாத்திரைமுதலியவற்றில்மெய்யெழுத்தோடொத்திருத்தலால், அதனையும் இங்குக் கூட்டி உரைத்தார்; கீழ் "ஆய்தப்புள்ளி" என்றதும் காண்க.

முன்சூத்திரத்தின்'இசைகெடின்'என்றது, இதற்குங்கூட்டப்பட்டது.

(உ-ம்.)*"இலங்ங்கு வெண்பிறை"-"கலங்ங்கு" எனக்குறிலிணைக்கீழிடையிலும்,
"எங்ங்கிறைவன்"-"எங்ங்கென" எனக்குறிற்கீழிடையிலும்,
"மடங்ங்கலந்த"-"விடங்ங்கலந்தான்"எனக்குறிலிணைக்கீழ்க்கடையிலும்,
"அங்ங்கனிந்த"-"நங்ங்களம்"எனக்குறிற்கீழ்க்கடையிலும்

ஙகரம் அளபெடுத்தது; மற்றைமெய்யெழுத்துக்களும் இப்படியேஅளபெடுக்கும். (ஙகரம் கடைசியில் விதியீறாகவே வரும்; இயல்பீறாகவாராது.)

"விலஃஃகி வீங்கிருள்-" "இலஃஃகு முத்து" எனக் குறிலிணைக்கீழிடையிலும், "எஃஃகிலங்கிய" - "வெஃஃகுவார்க்கு" எனக் குறிலிணைக் கீழிடையிலும் ஆய்தம் அளபெடுத்தது.

குறிலிணைக்கீழிடை குறிற்கீழிடை குறிலிணைக்கீழ்க்கடை குறிற்கீழ்க் கடை என்னும் நான்கிடத்தும் பதினோரெழுத்து அளபெடுக்குமெனவே, ஒற்றளபெடை நாற்பத்துநான்காம்; ஆய்தம் மொழியிடையில் மாத்திரமே வருமேயன்றி (விதியீறாகவாயினும்) மொழியிறுதியில்வாராமையால்,§அதற்குக்குறிலிணைக்கீழ்க்கடை குறிற்கீழ்க்கடை என்னும் இரண்டிடத்தைக் கழிக்க, ஒற்றளபெடை நாற்பத்திரண்டாதல் காண்க. (௩எ)

---

* "இலங்ங்கு வெண்பிறைசூடீசனடியார்க்குக்,கலங்ங்குநெஞ்சமிலைகாண்."
"எங்ங்கிறைவ னுளனென்பாய்மனனேயா, னெங்ங்கெனத்திரிவாரின்."
"மடங்ங்கலந்தமனனேகளத்து, விடங்ங்கலந்தானைவேண்டு."
"அங்ங்கனிந்தவருளிடத்தார்க்கன்புசெய்து, நங்ங்களங்கறுப்பாநாம்."
"விலஃஃகிவீங்கிருளோட்டுமேமாத, ரிலஃஃகுமுத்தினினம்."
"எஃஃகிலங்கியகையாயின்னுயிர், வெஃஃகுவார்க்கில்லைவீடு."

§ அவ் + கடிய=அஃகடிய என்றாற்போலப் புணர்ச்சிவிகாரத்தால்(விதியீறாக) மொழியிறுதில்வரும் ஆய்தமும் "குறியதன்முன்னர்" என்ற சூத்திரத்தால் மொழியிடையில் வந்ததுபோலவே பாவிக்கப்பட்டதனால்,ஆய்தம் ஙகரம்போல விதியீறாக வருதலும் இல்லையெனக்கொள்ளப்பட்டது.அல் + திணை=அஃறிணை; பல் + தலை=பஃறலைஎன்றாற்போலப்புணர்ச்சிவிகாரத்தால் (விதியீறாக) மொழியிறுதியில் வருபவை ஆய்தக்குறுக்கமாதலால், அவையும் இங்கே கொள்ளப்படவில்லை. "தற்சுட் டளபொழி" என ஐகார ஔகாரக் குறுக்கங்கட்குக் கூறுவதுபோல ஆய்தக்குறுக்கத்துக்கு எல்லை வரையறுத்துக் கூறாமையால், அது அளபெடுத்தல் ஆசிரியர்க்கு உடன்பாடன்றென்பது அறிக; இது மகரக்குறுக்கத்துக்கும் கொள்க.

[குற்றியலிகரம் - ௩௭.]

‡ கூ௩. யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொல் மியாவி னிகரமுங் குறிய.

(இ - ள்.) * யகரம் வர - யகரத்தை முதலிலுடைய சொல்(வருமொழியாய்) வர, குறள் உ திரி - குற்றியலுகரம் திரிந்த, இகரமும்—,—அசைச் சொல் - முன்னிலையசைச்சொல்லாகிய, மியாவின் - மியாவென்பதன் (மகரத்தின்மேலுள்ள),இகரமும்—,—குறிய - குற்றியலிகரங்களாம்; (எ - று.)

குற்றியலிகரம் - ஒருமாத்திரையாகிய இகரம் குறுகி அரைமாத்திரையாய் நிற்பது; குற்றியலுகரமும் இவ்வாறே.

(உ - ம்.) வீடு + யாது = வீடியாது எனவும், கேண்மியா எனவும் வரும்.

மேற்கூறுங் குற்றியலுகரம் முப்பத்தாறினும், அசைச்சொல்மியாவி னும் குற்றியலிகரம் முப்பத்தேழாக வருதல் காண்க.

குற்றியலுகரம் அறிந்தபின்பே இது அறியப்படுவ தாயினும், எழுத்து முறைமைபற்றி, இதனை அதற்குமுன் வைத்தார். (௩௮

[குற்றியலுகரம் - ௩௯.]

‡ கூச. நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே.

(இ - ள்.) நெடிலோடு - தனிநெடில் எழுடனே, ஆய்தம் - ஆய்தம்ஒன்றும், உயிர் - (சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வாராதஔகாரம்நீங்கிய) உயிர் பதினொன்றும், வலி - வல்லினமெய் ஆறும், மெலி - மெல்லினமெய் ஆறும், இடை -(வல்லெழுத்துக்களோடு தொடராத வகரமெய் நீங்கிய) இடையினமெய் ஐந்தும், (ஆகிய முப்பத்தாறெழுத்துக்களுள் ஒன்றினால்), தொடர் - (ஈற்றுக்கு அயலெழுத்தாகத்) தொடரப்பட்ட,மொழி - சொல்லின், இறுதி - ஈற்றில், வன்மை ஊர் உகரம் - வல்லெழுத்துக்களிலொன்றன்மேல் ஏறிவருகின்ற உகரமானது [கு சு டு து பு று], அஃகும் - (தன் ஒரு மாத்திரையிற்) குறுகும்; பிற - பிறஎழுத்துக்கள் ஒன்றும் பலவும்,மேல் தொடரவும் - ஈற்றயலெழுத்துக்கு முன்னே தொடரவும்; பெறும்-(நெடிற்றொடரொழிந்த ஐந்துதொடர்களும்) பெறும்; (எ - று.)

'நெடிலோடு' என நெடிலை 'ஓடு' என்னும் உருபுகொடுத்துப்பிரித்தது, நெடிற்றொடர் பிற மேல் தொடரப் பெறாமல் தனிநெடிலுடையதாகியே ஈறெழுத்தொருமொழியாய் வருமென்று தோன்றுதற்கு; 'உயிர்' என்றது. குறில் நெடில் இரண்டையும்.

---

* கசுச - ஆம் சூத்திரம் பார்க்க.

(உ-ம்.) நாடு, சோறு-நெடிற்றொடர்.	கொக்கு, பட்டு-வன்றொடர்.
எஃகு, அஃது-ஆய்தத்தொடர்.	குரங்கு, பஞ்சு-மென்றொடர்
வரகு, பலாசு-உயிர்த்தொடர்.	மார்பு,வீழ்து-இடைத்தொடர்.

புணரியலில் எடுத்தாளுதற்பொருட்டு இங்கே ஈற்றயலெழுத்தைக் கொண்டு ஆறுவகையாகச்சொன்னது, முன்மொழிந்து கோடல் என்னும் உத்தி; (முன் மொழிந்து கோடல் - முன்னே ஒன்றைச்சொல்லிப்பின்னே அதனை வேண்டுமிடத்து எடுத்துக்கொள்ளுதல்; அன்றி, பின்னே வேண்டு மென்ற காரணத்தால் முன்னே சொல்லிவைத்துக்கொள்ளுதல்)

ஈற்றயலெழுத்தை நோக்கிக் குற்றியலுகரம் முப்பத்தாறுதல் காண்க.

நாடு, ஈது, சூடு, ஏடு, ஐது, ஓடு, வௌவு; அஃது;வரகு,பலாசு,அரிது, இடையீடு, குருடு, இரும்பூது,—, இலேசு, இளைது,—, புரோசு;சுக்கு,கச்சு, பட்டு, பத்து, உப்பு, பற்று; சங்கு, பஞ்சு, வண்டு, பந்து, வம்பு, கன்று; வெய்து, மார்பு, சால்பு, வீழ்து, தெள்கு என ஈற்றயலெழுத்து நோக்கிய உதாரணங்களை முறையே காண்க. கோடிட்ட எகர ஒகர உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுக்கு உதாரணம் வருமிடத்துக் கண்டுகொள்க.

இனி, நெடிற்றொடர் முதலிய ஆறும் வல்லெழுத்து ஆறையும் ஈறாகக் கொள்ளக் குற்றியலுகரம் முப்பத்தாறுகுமென்றுகொள்வாருமுளர்;அவர்க்கு—நாகு, காசு, காடு, காது, காபு, சோறு; எஃகு, கஃசு, கஃடு, அஃது, அஃபு, சுஃறு; வரகு, பலாசு, முருடு, எருது, மரபு, கயிறு; சுக்கு, கச்சு, பட்டு பத்து,உப்பு,பற்று;சங்கு, பஞ்சு, வண்டு, பந்து,வம்பு,கன்று; செய்கு,—,—, பெய்து, மார்பு,—என்பன உதாரணமாம். சில வாராதிருக்கவும் முப்பத்தாறென்றல், 'உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு' என்றல்போலச் சுருங்கச் சொல்லலாகக் கூறியதென்க.

('நுந்தை' என்னும் முறைப்பெயரின் முன்நின்ற நகரமெய்யின்மேலிருக்கின்ற உகரமும் குறுகு மென்றல், பழையவழக்கு.)

தனித்தும் தனிக்குறிலைச்சேர்ந்தும் வரும் வல்லின மெய்யின்மேலும், மெல்லின இடையின மெய்களின்மேலும் மொழியிறுதியில் வரும் உகரம் முற்றியலுகர மெனப்படும்.

(உ-ம்.) கு, து, நடு, பெறு; தாணு, தும்மு; கதவு, நாலு. (௩௧)

[ஐகாரக்குறுக்கம்-௩, ஔகாரக்குறுக்கம்-க.]

‡ ௬௫. தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்
நையு மௌவு முதலற் றாகும்.

(இ-ள்.) ஐ - ஐகாரம்,—தன் சுட்டு - தன்னை [எழுத்தை]க் குறிக்குமிடமும், அளபு - அளபெடுக்குமிடமும், ஒழி - அல்லாத, மூவழியும்-(சொல்லுக்கு) முதல் இடைகடைகளிலே எங்கே நின்றாலும்,நையும்-(தன் இரண்டு மாத்திரையிற்) குறுகும்; ஔவும் - ஔகாரமும்,—முதல் - (சொல்லுக்கு)

முதலில்,—அற்று ஆகும் - அவ்வாறுகும் [தன்னைக்குறிக்குமிடத்தும் அளபெடுக்குமிடத்தும் குறுகாமல்சொல்லில் வரும்பொழுதெல்லாம் குறுகும்.]

ஐகார ஒளகாரக் குறுக்கங்கள்-இரண்டுமாத்திரையாகிய ஐகார ஒளகாரங்கள் குறுகி ஒருமாத்திரையாய் நிற்பன.

தனித்தும் மெய்யுடன்கூடி உயிர்மெய்யாயும் நிற்கின்ற ஐ ஒள என்பவை எழுத்தைக்குறிக்குமிடத்துமாத்திரம் குறுகாதிருக்குமேயன்றிவேறு பொருளைக்குறிக்குமிடத்தெல்லாம் குறுகு மென்பதைக் காட்டுதற்கு, 'தற்சுட்டொழி' என்றும், தன் மாத்திரையின் மிக்குஒலிக்கும் அளபெடையிற் குறுகாதென்ற இயல்பை விளக்குதற்கு'அளபொழி'என்றும்கூறினரென்க.

(உ - ம்.) ஐப்பசி, இடையன் குவளை; ஒளவை.

இடவகையால் ஐகாரக்குறுக்கம் மூன்றும், ஒளகாரக்குறுக்கம் ஒன்றும் வருதல் காண்க. ஒளகாரம், மொழியிடைகடைகளில் வாராது. (சo)

[மகரக்குறுக்கம் - ௩.]

‡ ௬௯. ண ன முன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்.

(இ - ள்.) ண ன முன்னும்-(ளகர லகரம் திரிந்த) ணகர னகரமெய்களில் ஒன்றன் முன்னும்,—வஃகான் மிசையும்-(வருமொழிமுதலில் நின்ற) வகரவுயிர்மெய்யின் பின்னும்,—ம - மகரமெய், குறுகும்-(தன் அரைமாத்திரையிற்) குறுகும்; (எ - று.)—இங்கு, முன் பின் என்பன-இடம்பற்றின.

மகரக்குறுக்கம்-அரைமாத்திரையாகிய மகரமெய் குறுகிக் கால்மாத்திரையாய் நிற்பது; ஆய்தக்குறுக்கமும் இவ்வாறே.

(உ - ம்.) "மருண்ம்", "போன்ம்", "தரும்வளவன்."

இவற்றுள், மருளும் என்பது - 'மருண்ம்' என்றும், போலும் என்பது-'போன்ம்' என்றும் உகரங்கெட்டு மெய்திரிந்து நின்றன வென்று அறிக.

இச்சூத்திரக் கருத்தை இந்நூலிற் பின்வருஞ் சில * சூத்திரங்களைக்கொண்டு உய்த்துணரவைத்தலால், இது உய்த்துணரவைப்பு என்னும் உத்தி; (உய்த்து உணர வைப்பு - (சிலவிதிகளைக்கொண்டு) ஆராய்ந்துஅறியும்படி ஒருபொருளை வைத்தல்.)

மகரக்குறுக்கம் இடவகையால் மூன்றுதல் காண்க. (சக)

[ஆய்தக்குறுக்கம் - உ.]

௬எ லளவீற் றியைபினு மாய்த மஃகும்.

(இ - ள்.) ல ள ஈறு இயைபின் - (தனிக்குறிலடுத்த) லகர ளகர வீற்றுப் புணர்ச்சியில்,ஆம்-(வருமொழிமுதலில் தகரம்வரும்பொழுது)ஆகின்ற, ஆய்தம்—,—அஃகும் - (தன் அரைமாத்திரையிற்) குறுகும்; (எ - று.)

(உ - ம்.) அல் + திணை = அஃறிணை; முள் + தீது = முஃடீது.

---

* ௩சக, உ௨எ, க௨o - இச்சூத்திரங்கள் முதலியன.

'லளவீற்றியைபிஞமாய்தம்'என்றது, முடிவிடங்கூறல் என்னும்உத்தி; * "குறில்வழி லளத்தவ்வணையி ஞய்த,மாகவும் பெறூஉம்அல்வழியானே" என்னுஞ் சூத்திரத்தை நோக்கிக் கூறுதலால். (முடிவு இடம் கூறல்-தான் சொல்லும் இலக்கணத்திற்கு விதி உள்ள இடத்தைச் சொல்லுதல்.)

ஆய்தக்குறுக்கம் திரிபுவகையால் இரண்டாதல் காண்க. (சஉ)

ரு. உருவம்.

கூஅ. தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்டு
எய்து மெகர வொகர மெய் புள்ளி.

(இ - ள்.) எல்லா எழுத்தும்-எல்லா வெழுத்துக்களும், தொல்லை வடிவின - (பல வேறு வகைப்பட எழுதிவழங்கும்) பழைய வடிவை யுடையனவாம்; ஆண்டு-அவ்வாறு வழங்குமிடத்து,—எகரம் ஒகரம்-எகரவுயிரும் ஒகரவுயிரும், மெய் மெய்களும், புள்ளி எய்தும்-புள்ளியைப் பெறும்; (எ - று.)

(உ-ம்.) எ ஒ; க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் எனவரும்.

எகர ஒகரங்களைப் புள்ளியிட்டெழுதுதல், இக்காலத்தில் இல்லை.(சங)

சா. மாத்திரை.

[எழுத்துக்களின் மாத்திரை.]

† கூகூ. மூன்று உயிரளபு இரண்டாம் நெடில் ஒன்றே
குறிலொடு ஐஔக் குறுக்கம் ஒற்றளபு
அரை ஒற்று இ உக் குறுக்கம் ஆய்தம்
கால் குறள் மஃகான் ஆய்தம் மாத்திரை.

(இ - ள்.) மாத்திரை—,—உயிரளபு-உயிரளபெடைக்கு, மூன்று-மூன்றாகும்; நெடில் - நெட்டெழுத்திற்கு, இரண்டு ஆம் - இரண்டாகும்; குறிலோடு - குற்றெழுத்திற்கும், ஐக்குறுக்கம்-ஐகாரக் குறுக்கத்திற்கும், ஔக் குறுக்கம் - ஔகாரக்குறுக்கத்திற்கும், ஒற்றளபு-ஒற்றளபெடைக்கும், ஒன்றே - (தனித்தனி) ஒன்றாகும்; ஒற்று - மெய்யெழுத்திற்கும், இக்குறுக்கம்-குற்றியலிகரத்திற்கும், உக்குறுக்கம்-குற்றியலுகரத்திற்கும், ஆய்தம் - முற்றாய்தத்திற்கும், அரை -(தனித்தனி) அரையாகும்; குறள் மஃகான்-மகரக் குறுக்கத்திற்கும், குறள் ஆய்தம் - ஆய்தக்குறுக்கத்திற்கும், கால் - (தனித் தனி) காலாகும்; (எ - று.)

மேல் "புள்ளிவிட்டவ்வொடு" என்ற சூத்திரத்தில் 'உயிரளவாய்'என்றதனால் உயிர்மெய்யின் மாத்திரை இவ்வளவென்று பெறப்பட்டமைபற்றி, இங்கே அதற்கு மாத்திரை சொல்லவில்லை; இது,உரைத்தாமென்றல் என்னும் உத்தி;(உரைத்தாம் என்றல்-முன்னே சொன்னேமென்பது தோன்ற மீளவுஞ்சொல்லாதுவிடுதல்.) உயிர்மெய்க்குமெய்ம்மாத்திரையொழியஎறிய

* உஉஅ - ஆம் சூத்திரம்.

உயிர்மாத்திரையே மாத்திரை; உயிர்மெய்க்குற்றெழுத்துக்குஒருமாத்திரையும், உயிர்மெய்ந்நெட்டெழுத்துக்கு இரண்டுமாத்திரையு மாமென்க.

இனி, "செரூஉ அஅய் வாழிய நெஞ்சு", "இலாஅஅர்க் கில்லைத் தமர்" என உயிரளபெடை சிறுபான்மை [ஈரளபெடுக்குமிடத்து] நான்கு மாத்திரையினதாய் வருதலும் உண்டு. (௯௪)

[மாத்திரை இன்ன தென்பது.

‡ ௧00. இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை.

(இ - ள்.) மாந்தர் - மனிதருடைய, இயல்பு எழு-இயற்கையாக உண்டாகின்ற, இமை - கண்ணிமைப்பொழுதும், நொடி - கைந்நொடிப்பொழுதும்,—மாத்திரை-(தனித்தனி) ஒருமாத்திரை யென்னுங் காலவரையறைப் பொழுதாம்; (எ - று.)—இமை - ஒருமுறை கண்ணிமைத்தற்கு வேண்டும் பொழுது; நொடி-ஒருமுறை கைந்நொடித்தற்கு வேண்டும் பொழுது.

இந்த அளவுகருவியை "மூன்றுயிரளபு" என்னுஞ் சூத்திரத்துக்கு முன்னே கூறாமல் பின்னே கூறியது, பின்னது நிறுத்தல் என்னும் உத்தி. (பின்னது நிறுத்தல்-முன் வைக்கவேண்டியதைப் பின்னே வைத்தல்.)மாத்திரை - எழுத்து ஒலிக்கும் அளவு; மாத்ரா - வடசொல்.

கட்புலனாகிய இமைக்காலமும், செவிப்புலனாகிய நொடிக்காலமும் கருதிக்கொள்ளுதற்கு ஒதினாரென்க. இந்த இரண்டு அளவுகளுள் நொடியினும் இமைசிறப்புடையது; உள்ளத்தால் நினைத்து நிகழாமையின்; ஆனது பற்றி, அது முன்னே கூறப்பட்டது.

"உன்னல் காலே யூறுத்தலரையே. முறுக்கல் முக்கால்விடுத்தலொன்றே" என்னுஞ் சூத்திரத்தின் பொருளும் இங்கு அறியத்தக்கது. (௯௫)

[மாத்திரைக்குச் சிறப்புவிதி.]

‡ ௧0௧. ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலும்
மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின்.

(இ - ள்.) இசை - இராகமும், விளி - அழைத்தலும், பண்டம்மாற்று-பண்டமாற்றலும், ஆதியின் - முதலானவிடத்து,—ஆவியும் ஒற்றும் - உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும்,—அளவு இறந்து-(முன்சொன்ன) அளவைக் கடந்து, இசைத்தலும் - (அதிகமாக) ஒலித்தலையும், மேவும் - பொருந்தும், (எ - று.)—பண்டம் மாற்று-பொருள்களை விற்றற்பொருட்டுப் பெயர்கூறிக் கூவுதல்.

முதலெழுத்தாகிய ஆவியும் ஒற்றும் கூறினதில், அவற்றைச்சார்ந்து பிறக்கும் உயிர்மெய் முதலியனவும் அடங்கும்.

'ஆதி' என்றதனால், முறையிடுதல் புலம்புதல் முதலியன கொள்க.

இராகத்தில் அளவிறந்து ஒலிக்கும்போது உயிர்பன்னிரண்டுமாத்திரைவரையிலும், ஒற்றுப் பதினொருமாத்திரைவரையிலும் நீண்டு ஒலிக்குமென்

ஞர் இசைநூலார்; அதனை இவ்வாசிரியர் உடன்பட்டது பிறநூல்முடிந்தது தானுடன்படுதல் என்னும் உத்தி. (பிறநூல் முடிந்தது தான் உடன்படுதல்- வேறு நூல்களிற் சொல்லப்பட்ட விதியைத் தான் அங்கீகரித்தல்.)

மற்றவற்றில் அளவிறந்து ஒலிக்கும்பொழுது உலகநடைபிறழாமல் ஒலிப்பதே வரையறை யெனக் கொள்க.

இச்சூத்திரம் - தவளைப்பாய்த்து; "இயல்பெழு" என்னும் முற்சூத்திரத்தைத் தழுவாமல், இடைவிட்டு, அதற்குமுன்னின்ற "மூன்றுயிரளபு" என்னுஞ் சூத்திரத்தைத் தழுவிநின்றதனால். (தவளைப் பாய்த்து - இடையிட்டுக் குதிக்கின்ற தவளையின்பாய்ச்சல் போலத் தனக்குமுன்னின்றசூத்திரத்தைத் தழுவாமல் அதற்குமுன்னின்ற சூத்திரத்தைத் தழுவுதல்.) (சசு)

எ. முதல்நிலை.

[மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்.]

‡ கம0உ. பன்னீ ருயிருங் கசதந பமவய
ஞஙவீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்.

(இ - ள்.) பன்னீருயிரும் - பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், க ச த ந ப ம வ ய ஞ ங ஈரைந்து உயிர்மெய்யும் இப்பத்து - உயிர்மெய்யெழுத்துக்களும்,—மொழி முதல் - சொல்லுக்கு முதலாகும்; (எ - று.)

(உ - ம்.) அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊக்கம், எடு, ஏடு, ஐயம், ஒன்று, ஓடு, ஔவை எனவும்; களி, சற்று, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, அங்ஙனம் எனவும் வரும்.

மெய்யெழுத்து உயிரெழுத்தோடுகூடி முதலாகுமேயன்றி உயிரெழுத்துப்போலத் தனித்து முதலாகமாட்டாமையால், 'உயிர்மெய்' என்றார்; உயிரேறிய மெய் என்க. இது, இன்னதல்ல திதுவென மொழிதல் என்னும் உத்தி. (இன்னது அல்லது இது என மொழிதல் - இது வன்று இதுதான் என்று துணிந்து சொல்லுதல்.) (சஎ)

[வகரத்துக்குச் சிறப்புவிதி.]

‡ கம0ங. உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல்.

(இ - ள்.) உ ஊ ஒ ஓ அலவொடு - இந்நான்குமல்லாத எட்டு உயிரோடும் (கூடி), வ முதல் - வகரமெய் (சொல்லுக்கு) முதலாகும்; (எ - று.)

(உ - ம்.) வண்டு, வாழை, வினை, வீடு, வெளி, வேழம், வையம், வௌவால். (சஅ)

[யகரத்துக்குச் சிறப்புவிதி.]

‡ கம0ச. அ ஆ உ ஊ ஒ ஔ யம்முதல். *

* தொல்காப்பியனார் "ஆவோடல்லது யகரம் முதலாவது" எனக்கூறியிருப்பினும், இவ்வாசிரியர் இங்ஙனம் கொண்டது, வடசொற்கள் தமிழில் வரும்பொழுது முதலாதலையும் கூட்டியென்க; இதனை, இங்ஙனம் வருவன பிறவற்றிற்குங்கொள்க: இவ்வாசிரியர் வடசொல்லிலக்கணத்தையும்ஒருசார் தழுவுதலை, மேல் 'மொழியியல்' என்னும் 'பதவியல்' என்பதனாலும்காண்க.

(இ - ள்.) அ ஆ உ ஊ ஓ ஔ - இந்தஆறுஉயிரோடும்(கூடி) ய முதல்-யகரமெய் (சொல்லுக்கு) முதலாகும்; (எ - று.)

(உ - ம்.) யவனர், யானை, யுகம், யூதம், யோகம்,யௌவனம்.(யவனர்-ஒருதேயத்தார். யூதம் - கூட்டம். யௌவனம் - இளமை.) (௬௪)

[ஞகரத்துக்குச் சிறப்புவிதி.]

‡ ௧௦௫. அ ஆ எ ஒவ்வோ டாகு ஞம்முதல்.

(இ - ள்.) அ ஆ எ ஒவ்வோடு - இந்நான்கு உயிரோடும் (கூடி), ஞ முதல் ஆகும் - ஞகரமெய் (சொல்லுக்கு) முதலாகும்; (எ - று.)

(உ - ம்.) ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல். (ஞமலி-நாய்,ஞாலம்-பூமி. ஞெகிழி - கொள்ளிக்கட்டை. ஞொள்கல் - இளைத்தல்.)

பிற்காலத்தார், மிஞிறு என்பதுஎழுத்துநிலைமாறியஇலக்கணப்போலிமொழியாகிய ஞிமிறு என்பதையுங் கூட்டி, ஞகரம் ஐந்து உயிரோடு கூடிமொழிக்கு முதலா மென்பர். (ஞிமிறு - வண்டு.) அது,இயற்கைமொழியன்றுதலால், இவ்வாசிரியராற் கொள்ளப்பட்டிலது. ஞேயம் என்றவடசொற்சிதைவும் அது. (௬0)

[நகரத்துக்குச் சிறப்புவிதி.]

‡ ௧0௬. சுட்டியா வெகர வினாவழி யவ்வை
ஒட்டி நவ்வு முதலா கும்மே.

(இ - ள்.) சுட்டு - மூன்று சுட்டும், யா எகர வினா - யாவினாவும் எகர வினாவும் ஆகிய ஐந்தனுடைய, வழி - பின்னே, அவ்வை ஒட்டி - அகரத்தைச்சேர்ந்து, நவ்வும் முதல் ஆகும் - நகரமெய்யும் (சொல்லுக்கு) முதலாம்; (எ - று.)

(உ-ம்.) அங்நனம்,இங்நனம், உங்நனம்,யாங்நனம்,எங்நனம்.(நனம்-விதம்.)

ஒருவிதத்தினலே முதலாகையால், 'நவ்வும்' என இழிவுசிறப்பும்மைகொடுத்துக் கூறினர். முதலாகா தென்பவர்க்கு ஒருவகையால்உடன்படுதலும் ஒருவகையால் மறுத்தலுமாதலால், இது, பிறர்தம்மதம்மேற்கோண்டுகளைவு என்னும் தம்மதம். (பிறர்மதம் மேற்கொண்டுகளைவு-பிறர்மதத்தைஒருவாறு அங்கீகரித்து மற்றொருவகையால் மறுத்தல்.)

முதலாமென்ற பத்துஉயிர்மெய்யுள் வகரம் முதலிய நான்கையும்எடுத்துச் சிறப்புவிதிகூறவே, மற்றைய க ச த ந ப ம என்னும் ஆறுமெய்களும்பன்னிரண்டுஉயிரோடுங்கூடிமொழிக்குமுதலாமென்பதுஅமைதல்காண்க.

(உ - ம்.) கனி, காய், கிளி, கீரை, குடம், கூடு, கெண்டை, கேள்கைதை, கொடை, கோடு, கௌவை;சமர், சாந்து, சிறுமை,சீர்,சுரை,சூது, செக்கு, சேவல், சையம், சொல், சோறு, சௌரியம்; தந்தை, தாய்,திணை, தீமை, துணி, தூது, தெற்கு, தேன்,தையல், தொண்டை,தோடு,தௌவை; நன்மை, நாடு, நிலம், நீர், நுனி, நூல்,நெஞ்சு, நேர், நைதல்,நொச்சி,நோக்தம், நௌவி; படை, பால், பிடி, பீடு, புகழ், பூண்டு, பெடை, பேடு, பைத

பொன், போர், பௌவம்; மனை, மாலை, மின்னல், மீன், முளை, மூப்பு மெலிவு, மேனி, மையல், மொழி, மோடு, மௌவல்.

இங்ஙனம் க ச த ந ப மக்கள் பன்னிரண்டு உயிரோடும், வகரம் எட்டு, உயிரோடும், யகரம் ஆறு உயிரோடும், ஞகரம் நான்கு உயிரோடும், ஙகரம் ஒருயிரோடும் கூடி மொழிக்கு முதலாதல்பற்றியே, மேல்"பன்னீருயிரும்" என்ற சூத்திரத்தில் 'கசதநபமவயஞங' என்றுமுறைப்படுத்தினரெனஅறிக.

உயிரெழுத்துப் பன்னிரண்டும்,கசதநபமக்கள் பன்னிரண்டுஉயிரோடு வருதலால் அவை எழுபத்திரண்டும், வகரம் எட்டு உயிரோடு வருதலால் அவை எட்டும், யகரம்ஆறுஉயிரோடு வருதலால்அவைஆறும்,ஞகரம்நான்கு உயிரோடு வருதலால் அவை நான்கும், ஙகரம் ஒருயிரோடுவருதலால் அது ஒன்றும், ஆக நூற்றுமூன்று எழுத்துக்களே மொழிக்கு முதலாம். (நிச)

அ. ஈற்றுநிலை.

[மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்.]

‡ ௧௦எ. ஆவி ஞணநமன யரலவ ழளமெய்
சாயு முகர நாலாறு மீறே. *

(இ - ள்.) ஆவி - (தனித்தும் மெய்யோடுகூடியும் வரும்) பன்னிரண்டு உயிர்களும், ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்-இப்பதினொருமெய்களும், சாயும் உகரம் - குற்றியலுகரமும் ஆகிய, நாலாறும்-இருபத்துநான்குஎழுத்துக்களும்,—ஈறு - (மொழிக்கு) இறுதியாகும்; (எ - று.)

(உ - ம்.) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ எனவும்; விள, பலா, கிளி, தீ, விடு, பூ, சேஎ, தே, பனை, நொ, போ, வௌஎனவும்;உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ்,புகழ்,வாள்,அஃது எனவும் வரும். (ஆ - பசு. ஊ-மாமிசம். ஏ - அம்பு. ஐ - அழகு. ஒ - ஒத்தல். ஓ - மதகு-நீர்தாங்கும் பலகை. ஔ-பற்றுதல். சே-எருது. தே - தெய்வம். நொ - வருந்து. உரிஞ் - உராய்தல். பொருந் - பொருந்துதல்; அல்லது, ஒருவகைப்பாட்டு. வேய் - மூங்கில். தெவ் - பகை.)

குற்றியலுகரமும் உயிரீற்றில் அடங்குமாயினும், புணர்ச்சிவேறுபாடு பற்றி, வேறு எடுத்துக் கூறினர். எனவே,இங்கு 'ஆவி' என்றதில் அடங்கிய உகரம் முற்றியலுகரமாம். மற்றைய குறுக்கங்களைவேறுஎடுத்துக்கூறாமைக்குக் காரணம் புணர்ச்சிவேறுபாடின்மையென்க.

வல்லினமெய் ஆறும், ஙகரமெய்யும் மொழிக்கு ஈறாகா. (நிஉ)

[சிலவற்றிற்குச் சிறப்புவிதி.]

௧௦அ. குற்றுயி ரளபி னீறா மெகரம்
மெய்யொடே லாதொந நவ்வொ டாமௌ
ககர வகரமோ டாகு மென்ப.

---

* மேல் உயிரீற்றுப்புணரியலிலும் "எண்மூ வெழுத்திற் றெவ்வகை மொழிக்கும்" என்பர்.

(இ - ள்.) குறு உயிர் - (அ இ உ எ ஒ என்கின்ற) உயிர்க்குற்றெழுத்துக்கள்,—(ஓரெழுத்தொருமொழியாய் ஈறாத லன்றி), அளபின் - அளபெடையிலும், ஈறு ஆம் - (வரிவடிவில் அறிகுறியாகத் தனித்து) ஈறாகும் எகரம்—,மெய்யொடு ஏலாது - மெய்யோடுகூடி ஈறாகாது; ஒ - ஒகரம், நவ்வொடு ஆம் - நகரமெய்யொன்றுடனே கூடி ஈறாகும்;ஔ - ஔகாரம், ககர வகரமோடு ஆகும்-ககர வகர மெய்க ளிரண்டுடன் கூடி ஈறாகும், என்ப - என்றுசொல்வர், (அறிவுடையோர்); (எ - று.)

(உ - ம்.) பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கைஇ, கோஒ, கௌஉ எனவும் நொ எனவும்; கௌ, வௌ எனவும் வரும்.(கௌ - வாயினாற்பற்று. வௌ- கொள்ளையிடு.)

எகர ஒகர ஔகாரங்களை எடுத்துச்சொல்லவே, மற்றை உயிர்கள் தமக்கு ஏற்ற மெய்களோடும் கூடி ஈறு மென்பது விளங்கும். (ருங)

[உயிர்மெய்க்கு முதலும் ஈறும்.]

கoகூ. நின்ற நெறியே யுயிர்மெய் முதலீறே.

(இ - ள்.) நின்ற நெறியே - (மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து) நின்ற வழியே, உயிர்மெய் - உயிர்மெய்க்கு, முதல் - (மெய்) முதலாகும்; ஈறு - (உயிர்) ஈறாகும்; (எ - று.)

எனவே உயிரும் மெய்யும் உயிர்மெய்யொழிந்தஆய்தம் முதலிய ஒன்பது சார்பெழுத்துக்களும் ஓரெழுத் தாகையால்அவற்றிற்கு முதலும்ஈறும் அவையேயா மென்பது பெறப்படும். (ருச)

கூ. இடைநிலை.

[மொழிக்கு இடையில் வரும் எழுத்துக்கள்.]

ககo. க ச த ப வொழித்தவீ ரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்டு
ஆகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை
மேவு முயிர்மெய்ம் மயக்கள வின்றே.

(இ - ள்.) க ச த ப ஒழித்த - (பதினெட்டுமெய்களிற்) கசதபஎன்னும் நான்கையும் நீக்கிய, ஈரேழன் கூட்டம் - (மற்றைப்) பதினான்குமெய்களும் (பிறமெய்களோடுகூடுங்) கூட்டம், மெய்மயக்கு-(வேற்றுநிலை)மெய்ம்மயக்கமாகும்; ர ழ ஒழித்து - ரழ என்னும் இரண்டையும் நீக்கி, ஈரெட்டு - (மற்றைப்) பதினாறு மெய்களும் (தம்மோடு கூடுங் கூட்டம்), உடன்நிலைஆகும்- உடனிலைமெய்ம்மயக்கமாகும்; இ இரு பால் மயக்கும் - இவ்விரண்டுவகை மயக்கமும், மொழி இடை மேவும் - ஒருமொழிக்கு நடுவிலும் தொடர்மொழிக்கு நடுவிலும் வரும்; உயிர்மெய் மயக்கு - உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் மாறிமயங்கும் மயக்கத்திற்கு, அளவு இன்று - அளவில்லை [வேண்டியவாறே மயங்கும் என்றபடி]; (எ - று.)

'கூட்டம்,' 'மயக்கம்' என்பன-ஒருபொருட்சொற்கள். பின், 'உடனிலை' என்றதனால், முன் 'வேற்றுநிலை' என்பது கொள்ளப்பட்டது.

மொழியிடையன்றி ஓரெழுத்திலும் மயங்குதலால், மெய்யும் உயிரும் மயங்குதற்கு இடங்கூறாது விட்டார்.

இச்சூத்திரத்தால், மெய்யுடன் மெய் மயங்கும்பொழுது, க ச த ப என்னும் நான்கும் பிறமெய்யோடு மயங்காவாய்த்தம்மொடு தாமேமயங்குமென்பதும், ர ழ என்னும் இரண்டும் தம்மொடு தாம் மயங்காவாய்த் தம்மொடு பிறவே மயங்கு மென்பதும், மற்றைப் பன்னிரண்டு மெய்களும் தம்மொடு தா மும் பிறவும்மயங்கு மென்பதும் பெறப்பட்டன என அறிக.

உயிரும் மெய்யும் மயங்குதற்கு உதாரணம்:—அல், புள் என உயிருடன் மெய் மயங்கின; கா, பூ என மெய்யுடன் உயிர் மயங்கின. மெய்யுடன் மெய் மயங்குதற்கு உதாரணம், மேல்வருஞ் சிறப்புச் சூத்திரங்களிற் காண்க.

உயிருடன் உயிர்மயங்குதல் அருமையாதலின் கூறப்படவில்லை. (ருரு)

[வேற்றுநிலைமெய்ம்மயக்கத்திற்குச் சிறப்புவிதி.]

கக்க. ஙம்முன் கவ்வான் வம்முன் யவ்வே.

(இ - ள்.) ங முன் க - ஙகரமெய்யின் முன் ககரமும், வ முன் ய-வகரமெய்யின் முன் யகரமும், ஆம் - மயங்கும்; (எ - று.)—முன் - இடமுன்; அடுத்த ஒன்பது சூத்திரங்களிலும் இது. (உ - ம்.) பங்கு, தெவ்யாது. (ருசு)

ககஉ. ஞ ந முன் தம்மினம் யகரமொ டாகும்

(இ - ள்.) ஞ ந முன்-ஞகர நகர மெய்களின் முன், தம் இனம்-அவற்றுக்கு இனமாகிய சகர தகரங்களும், யகரமொடு-யகரமும், ஆகும் - மயங்கும்; (எ - று.)—ஞகரமெய்யின் முன் சகரமும் யகரமும், நகரமெய்யின் முன் தகரமும் யகரமும் மயங்கு மென்க. ககச - ஆஞ் சூத்திரத்துக்கும் இவ்வாறே காண்க.

(உ - ம்.) பஞ்சு, உரிஞ்யாது; பந்து, பொருந்யாது. (ருஎ)

ககங. டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.

(இ - ள்.) ட ற முன் - டகர றகரமெய்களின் முன், க ச ப மெய்-க ச ப என்கின்ற மூன்று மெய்களும், உடன் மயங்கும் - கூடிமயங்கும்; (எ-று.)

(உ - ம்) வெட்கம், மாட்சி, திட்பம்; கற்க, பயிற்சி, கற்பு. (ருஅ)

ககச. ணனமுன் னினங் கச ஞபமய வவ்வரும்.

(இ - ள்.) ண ன முன் - ணகர னகரமெய்களின் முன் இனம்-(அவற்றிற்கு) இனமாகிய டகர றகரங்களும், க ச ஞ ப ம ய வ - ககரம் முதலிய இவ்வேழு மெய்களும், வரும் - மயங்கும்; (எ - று)

ணகரமெய்யின்முன் டகரமும், க ச ஞ ப ம ய வக்களும், னகரமெய்யின் முன் றகரமும் க ச ஞ ப ம ய வக்களும், மயங்கு மென்க.

(உ - ம்.) விண்டு, உண்கு, வெண்சோறு, வெண்ஞமலி, பண்பு, வெண்மை, மண்யாது, மண்வலிது; கன்று, புன்கு, நன்செய், புன்ஞமலி, இன்பம், நன்மை, பொன்யாது, பொன்வலிது. (௫௯)

௧௧௫. மம்முன் பயவ மயங்கு மென்ப.

(இ - ள்.) ம முன் - மகரமெய்யின்முன், ப ய வ - இம்மூன்று மெய்களும், மயங்கும் - இணங்கும், என்ப - என்றுசொல்வர், (புலவர்); (எ - று.)

(உ - ம்.) நம்பன், கலம்யாது, கலம்வலிது. (௬0)

௧௧௬. யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.

(இ - ள்.) ய ர ழ முன்னர்-இம்மூன்று மெய்களின் முன், மொழி முதல் மெய்-மொழிக்கு முதலாமென்ற பத்துமெய்களும், வரும்-மயங்கும்; (எ - று.)

(உ - ம்.) பொய்கை, கொய்சகம், எய்து, செய்நர், ஆய்பு, சேய்மை, ஆய்வு,—, பாய்ஞெகிழி; சேர்க, வார்சிலை, ஓர்தும், சேர்நர், மார்பு, சீர்மை, ஆர்வம், போர்யானை, நேர்ஞெகிழி; மூழ்கி, வீழ்சிலை, வாழ்தல், வாழ்நன், சூழ்ப, கீழ்மை, வாழ்வு, வீழ்யானை, வாழ்ஞெண்டு.

வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு என யரழவொற்றின்முன் ஙகரம் தனிமெய்யாய் மயங்குதல், மேல், "யரழவொற்று" என்னுஞ் சூத்திரத்தாற் பெறப்படும். கீழ் "சுட்டியா எகரவினு" என்னுஞ் சூத்திரத்தால் ஙகரம் பிறமொழிகளுக்கு முதலாகாமை கூறப்பட்டதனுல், இவற்றின் முன்-ஙகரம் உயிர்மெய்யாக வந்து மயங்குதற்கு உதாரணம் இல்லை.

சுருங்கச்சொல்லல் என்னும் அழகுபற்றி 'மொழிமுதன்மெய்' எனக் கூறினாயினும், வெய்யன் என யகரத்தின் முன் யகரம் மயங்குதல் உடனிலைமயக்கமாதலின், அதனை இங்குவிலக்குக; இது, ஏற்புழிக்கோடலென்னும் உத்தியின்பாற்படும். (௬௧)

௧௧௭. லளமுன் கசப வயவொன் றும்மே.

(இ - ள்.) ல ள முன் - லகர ளகர மெய்களின் முன், க ச ப வ ய - இவ்வைந்து மெய்களும், ஒன்றும் - மயங்கும்; (எ - று.)

(உ - ம்.) நல்கி, வல்சி, சால்பு, செல்வம், கல்யாணம்; வெஃகி, நீள்சிலை, கொள்ப, கேள்வி; வெள்யானை. (௬௨)

[உடனிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்புவிதி.]

௧௧௮. ரழவல்லன தம்முற் றாமுட னிலையும்.

(இ - ள்.) ர ழ அல்லன - ரகர ழகர மல்லாத மற்றைப் பதினாறுமெய்களும்,—தம்முன் தாம் - தமக்குமுன் தாமே (வந்து), உடன் நிலையும் - உடன் நின்று மயங்கும்; (எ - று.)—மேல் 'உடனிலை ரழவொழித்தீரெட்டாகும்' என்றதன் விவரணம் இது. 'உடனிலைமயக்கமாவது-தனக்கு முன் தான் மயங்குதல்' என்ற இலக்கணம் இங்கு விளக்கப்பட்டது.

(உ - ம்.) சுக்கு, அங்ஙனம், அச்சம், மஞ்ஞை, பட்டு, திண்ணம், பத்து வெந்நீர், அப்பன், அம்மை, மெய்யன், அல்லி, தெவ்வர், பள்ளம், காற்று, அன்னை. (ருங)

[தனிமெய்யுடனே தனிமெய்யாக மயங்குவனவும், மொழிக்கு உறுப்பாக மயங்காதனவும்.]

கககூ. யரழவொற் றின்முன் கசதபஙஞநம
ஈரொற் றாம் ரழத் தனிக்குறி லணையா. *

(இ - ள்.) ய ர ழ ஒற்றின்முன் - ய ர ழ என்னும் மூன்று மெய்களின் முன்னே, க ச த ப ங ஞ ந ம - இவ்வெட்டுமெய்களும், ஈரொற்று ஆம் - (கீழ்க்கூறியபடி உயிர்மெய்யாகி மயங்குதலு மல்லாமல் தாமும் மெய்யாய் நின்று) இரண்டு ஒற்றாயும் மயங்கும்; ர ழ - ரகர ழகர மெய்கள், தனிகுறில் அணையா - (மொழிக்கு உறுப்பாகத்) தனிக்குற்றெழுத்தின் பின்னேவந்து மயங்காவாம்; (எ - று.)

(உ - ம்.)	காய்க்க,	ஈர்க்கு,	வாழ்க்கை;
	பாய்ச்சினன்,	உணர்ச்சி,	சூழ்ச்சி;
	தேய்த்தல்,	பேர்த்தல்,	வாழ்த்தினன்;
	வாய்ப்பு,	கூர்ப்பு,	காழ்ப்பு;
	வேய்ங்குழல்,	ஆர்ங்கோடு,	பாழ்ங்கிணறு;
	தேய்ஞ்சது,	கூர்ஞ்சிறை,	பாழ்ஞ்சுனை;
	காய்ந்தனம்,	நேர்ந்தனம்,	வாழ்ந்தனம்;
	மொய்ம்பு,	ஈர்ம்பணை,	பாழ்ம்பதி.

'அணையா' என்ற ரழக்களுக்கு உதாரணம் காட்டலாகாமை உணர்க.

இனி, உரையிற்கோடல் என்னும் உத்தியால், ரகரவொற்றுத் தனிக் குறிலைச்சேர்ந்துமொழிக்கு உறுப்பாகி விகுதிஇடைச்சொல்லாய்வருதலைக் கொள்வாருமுளர்; (உ - ம்.) வந்தனர் என்பதில், அர். (ருச)

[செய்யுளில் ஈரோற்றாய்நிற்கும் எழுத்துக்கள்.]

கஉ௦. லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே.

(இ - ள்.) செய்யுளுள்ளே - பாட்டினுள்,—ல ள மெய் திரிந்த-லகார ளகார மெய்கள் திரிந்த, ன ண முன் - னகார ணகாரமெய்களின்முன்வருகின்ற, மகாரம் - மகர மெய்யானது,—நைந்து - (முன் சொன்னபடியே) குறுகி, ஈரொற்று ஆம்-(அந்தமெய்களுடனே) ஈரொற்றுமயக்கமாம்; (எ-று.)

(உ - ம்.) "திசையறிமீகானும் போன்ம்," "மயிலியன்மாதர்மருண்ம்."

இங்கே, முன்-இடமுன். இங்கு 'செய்யுளுள்ளே' என்றதனால், முன்பு கூறியவை வழக்குச் செய்யுள் இரண்டிலும் வருவன என்று அறிக. (ருரு)

* 'தனிக்குறிலிணையா' என்றும் பாடம்.

[முதனிலை இறுதிநிலை இடைநிலைகட்குப் புறனடை.]

கஉக. தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும்
இம்முறை மாறியு மியலு மென்ப.

(இ - ள்) தம்பெயர் மொழியின் - எழுத்துக்களின்பெயர்களைச்சொல்லுமிடத்து,—முதலும்மயக்கமும்-மொழிமுதலில்நிற்றலும்மொழியிடையே நிற்றலும், இ முறை மாறியும் இயலும் - கீழ்ச்சொன்ன இவ்விலக்கணம் பிறழ்ந்தும் வரும், என்ப - என்று சொல்வர், (அறிவுடையோர்); (எ - று.)

எனவே, எழுத்துக்கள் வேறுபொருள்குறியாமல் தம்மையேகுறித்து நிலைமொழிகளாகப் புணருமிடத்து, மொழிமுதற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லாவெழுத்துக்களும் முதலாமென்பதும், இடைநிலை மயக்கத்திற்குவிதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லாவெழுத்துக்களும்இடைநின்று மயங்குமென்பதும் ஆயிற்று; இப்படி எல்லாவெழுத்துக்களும்தனித்தனி அதற்கு அதுவே முதலா மெனவே, ஈற்றிற்கு விதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவுமாகிய எல்லாவெழுத்துக்களும் தனித்தனி அதற்கு அதுவே ஈறுமெனத் தானே விளங்குதலின், 'ஈறும்' எனமிகைபடக்கூறுமல் விட்டார்.

(உ - ம்.) "அவற்றுள்,லளஃகான் முன்னர்யவவுந்தோன்றும்"-இதில் லகரமானது - முதலாகியும், 'அவற்றுள்' என்றதன் இறுதியிலே நின்றளகர மெய்யோடு மயங்கியும் வந்தது. 'கெப் பெரிது' இதில், எகரம் - மெய்யோடு ஈறாய் வந்தது. பிறவும் இப்படியே. (சுசு)

கO. போலி.

[இறுதிப்போலி.]

‡ **கஉஉ.** மகர விறுதி யஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன வுளவே.

(இ - ள்.) அஃறிணைப்பெயரின்-பால்பகாவஃறிணைப்பெயர்களிடத்து, இறுதி மகரம் - ஈற்றிலேநின்ற மகரமெய், னகரமோடு உறழா - னகரமெய்யோடு ஒத்து, நடப்பன - நடப்பவை,உள - உண்டு; (எ-று.)—அது,போலியெனப்படும். இம்மகரம் குறிலிணைக்கீழ் வருவதென்று உரையிற்கோடலென்னும் உத்தியாற் கொள்க. (உரையிற் கோடல்-சூத்திரத்திற்சொல்லப்படாத பொருளை அதன் உரையினுல் அமைத்துக்கொள்ளுதல்.)

(உ - ம்.) அகம் = அகன், கலம் = கலன், நிலம் = நிலன்.

போலியாவது - ஒரு சொல்லில் ஓர் எழுத்து உள்ளவிடத்தில்அவ்வெழுத்துக்கு ஈடாக வேறோர் எழுத்து நின்றாலும் பொருள்வேறுபடாமல்ஒத்திருப்பது; போலி - போலநிற்பது. அது, மொழியின் முதல் இடை கடைகளால் மூன்றுவகைப்படும்.

முதற்போலி இடைப்போலிகளின் பின் முறையேசொல்லவேண்டிய இவ்விறுதிப்போலியை முன்னே சொன்னதனுல், * சுரும்பு = சுரும்பர்,

---

* இது,முறையன்றிக்கூற்று எனப்படும்; இதனுல் ஏதேனும் விசேஷார்த்தங் கொள்ளுதல், மரபு.

வண்டு=வண்டர், சிறகு=சிறகர், இடக்கு=இடக்கர், வெற்பு=வெற்பர் எனச் சில குற்றியலுகரப்பெயரினிறுதி உகரத்துக்கு 'அர்' என்பது போலியாக வருதலும்; பந்தல்=பந்தர், சாம்பல்=சாம்பர், குடல்=குடர்எனச்சில பெயரினிறுதி லகரமெய்க்குரகரமெய் போலியாகவருதலும்; திறம்=திறல், மறம்=மறல், பக்கம்=பக்கல், கூவம்=கூவல் எனச் சில பெயரி னிறுதி மகரமெய்க்குலகரமெய்போலியாகவருதலும்; மதில்=மதிள்எனச்சிறுபான் மை லகரத்துக்கு ளகரம் போலியாகவருதலும் முதலியன கொள்க. (கூஎ)

[முதற்போலியும், இடைப்போலியும்.]

‡ கஉரு. அ ஐ முதலிடை யொக்குஞ் சஞயமுன்.

(இ - ள்.) அ ஐ-அகரமும் ஐகாரமும்,—முதல் இடை - (சொல்லுக்கு) முதலிலும் நடுவிலும்,— ச ஞ ய முன் - சகர ஞகர யகரங்களுக்கு முன்,— ஒக்கும் - (தம்முள் வேறுபாடில்லாமல்) போலியாக வரும்; (எ - று.)

இங்கு 'முன்' என்றது, காலமுன் எனக்கொள்க. * (இவ்வியலில் ருடு, ௬க, ௧௯௬—௬௫ - இச்சூத்திரங்களில் 'முன்' என்றதற்கும், இச்சூத்திரத்தில் 'முன்'என்றதற்கும் உள்ளபொருள்வேறுபாடு நுட்பமாகநோக்கத்தக்கது.)

முதற்போலி.	இடைப்போலி.
(உ - ம்.) பசல்=பைசல்,	அரசு=அரைசு,
மஞ்சு=மைஞ்சு,	இலஞ்சி=இலைஞ்சி
மயல்=மையல்,	அரயர்=அரையர்.

'அ ஐ ஒக்கும்' எனப்பொதுப்படக்கூறியதனால், வைச்ச-வச்ச, ஐஞ்சு-அஞ்சு, பைய-பய எனச்சகர ஞகர யகரங்களின்முன் ஐகாரத்துக்குஅகரம் போலியாக வருதலும் கொள்க. இனி, சிறுபான்மை பழமை - பழைமை, இளமை - இளைமை எனப் பிறஎழுத்தின் முன்னும் இவ்வாறு வரும்.(கூஅ)

[இடைப்போலி.]

‡ கஉச. ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகா னுறழு மென்மரு முளரே.

(இ - ள்.) சில் வழி-(சொல்லுக்கு நடுவிற்)சிலவிடத்து,ஐகான் ய வழி-ஐகாரத்தின்பின்னும் யகரமெய்யின்பின்னும், நவ்வொடு - (வருகின்ற) நகர மெய்யோடு, ஞஃகான் - ஞகரமெய், உறழும்-போலியாகவரும், என்மரும்-என்று சொல்பவரும், உளர்-(சிலர்) உண்டு; (எ - று.)

(உ-ம்.)மைந்நின்ற='மைஞ்ஞின்ற' | செய்ந்நின்ற='செய்ஞ்ஞின்ற' } செய்
கைந்நின்ற='கைஞ்ஞின்ற' | நெய்ந்நின்று='நெய்ஞ்ஞின்று' } யுள்.

ஐந்நூறு=ஐஞ்ஞூறு, செய்நலூர்=செய்ஞலூர்=வழக்கு.

*முன்பின் என்பன-காலம்பற்றியும்,இடம்பற்றியும் மாறிவரும்;(உ-ம்.) க ங என்பதில் ககரம் முன்னெழுதப்படுதலால் காலம்பற்றி முன்னும்:அது வே தனக்கு எதிர்முகமாக ஙகரம் முன்னிருத்தலால் இடம்பற்றிப் பின்னு மாம் எனக் காண்க; மேல் கீழ் என்பவற்றிற்கும் இவ்வாறேகண்டுகொள்க.

இங்குக்கூறிய நகரம் பெரும்பாலும் தொடர்மொழியில் நிற்பதென அறிக.

இச்சூத்திரம்,பிறன்கோட்கூறல் என்னும்உத்தி.(பிறன்கோள் கூறல்-பிறன்கொண்ட கொள்கையைத் தன்நூலிற் சொல்லுதல்.) 'உம்மையான், உறழாதென்பார் பெரும்பால ரென்க' என்பது பழையவுரை.

இனி, உரையிற்கோடல்என்னும் உத்தியால்,நயம்=ஞயம்,நாஞ்சில்=ஞாஞ்சில், நேயம்=ஞேயம் என மொழிமுதல் நகரத்துக்கு ஞகரமும்,ஞண்டு=ஞெண்டு என மொழிமுதல் அகரத்துக்கு எகாமும் போலியாகவும்வரும்.

ஐந்து=அஞ்சு, உய்ந்தனன்=உய்ஞ்சனன் எனநகரதகரங்களுக்குஞகர சகரங்கள் முறையேபோலியாக வருதலும்;பித்து=பிச்சு,வைத்த=வைச்ச எனத் தகரத்துக்குச் சகரம் போலியாக வருதலும்; நேயம்=நேசம்,கயம்=கசம் என யகரத்துக்குச் சகரம் போலியாக வருதலும் முதலியவற்றையும் அடங்கும்வழியறிந்து அமைத்துக்கொள்க.* (௬௬)

எழுத்துக்களுக்குப் புறனடை. §

[சந்தியக்கரம்.]

‡ ௬௨௫ அம்மு னிகரம் யகர மென்றிவை
எய்தி னையொத் திசைக்கு மவ்வொடு
உவ்வும் வவ்வும் ஔவோ ரன்ன.

(இ - ள்.) அ முன் - அகரத்தின்முன், இகரம் - இகரமும்,யகரம் - யகரமெய்யும், என்ற-இவை என்று சொல்லப்பட்ட இவை, ஒத்து எய்தின்-தம்முள் ஒத்துப் பொருந்தினல்,ஐ இசைக்கும்-ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்; அவ்வோடு - அகரத்தோடு, உவ்வும் - உகரமும், வவ்வும் - வகர மெய்யும், ஓர் அன்ன - (தம்முள்ஒத்து) ஒருதன்மையனவாக (ப் பொருந்தினல்), ஔ - ஔ என்னும் நெட்டெழுத்து, (ஒலிக்கும்); (எ - று.)

யகரவகர மெய் நடுவிற்கலக்குமெனக் கொள்க.அய்இ=ஐ;அவ்உ=ஔ.

சிலஎழுத்துக்கள்கூடி வேருேரெழுத்துப்போன்று ஒலித்த லாதலால், இதனைப் போலியைச்சார வைத்தார்.

இனி,இச்சூத்திரத்தை எழுத்துப்போலி உணர்த்தியதாகவே கொண்டு வேறும் ஒருபொருள் உரைக்கப்படும்; அது வருமாறு:—

அ முன் - அகரத்தின்முன், இகரம் யகரம் என்ற இவை - இகரமும் யகரமெய்யும் என்கின்ற இவ்வெழுத்துக்கள், எய்தின்-வருமாயின்,ஐ ஒத்து இசைக்கும்-ஐகாரத்தை ஒத்துநடக்கும்; அவ்வோடு-அகரத்தின்முன், உவ்

---

* பழம்=பளம், விளக்கு=விழக்கு என்றூற்போலச் சிறுபான்மை வழங்குகின்ற ழகரளகரப் போலி இலக்கணநெறியாற் கொள்ளத்தக்க தன்றென்பது, வீரசோழியத்தால் விளங்கும்.

§ புறனடை - புறன் + அடை: புறத்து அடையாய் [அடுத்துள்ளதாய்] வருவது; அன்றி, புறன் + நடை-வேறுவிதமாகிய நடக்கை யெனினுமாம்.

வும் வவ்வும் - உகரமும் வகரமெய்யும் (வருமாயின்,)ஔ அன்ன - ஔகா ரத்தை ஒத்து நடக்கும்; (எ - று.)—ஓர் - அசைநிலையிடைச்சொல்.

யகர வகரங்கள் தனித்தும் வரும்.

(உ - ம்.) வைத்தியன் = வயித்தியன், கைடபன் = கயிடபன் எனவும், வையம் = வய்யம், ஐவனம் = அய்வனம் எனவும், பௌத்தர் = பவுத்தர் கௌரி = கவுரி எனவும், ஔவை = அவ்வை, வௌவுதல் = வவ்வுதல் எனவும் வரும். (௭0)

[எழுத்தின் சாரியைகள்.]

௧௨௬. மெய்க ளகரமும் நெட்டுயிர் காரமும்
ஐயௌக் கானு மிருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்பிற.

(இ-ள்.) மெய்கள் - தனிமெய்கள், அகரமும்- அ என்னும்சாரியையும், நெடு உயிர் - உயிர்நெடில்கள்,காரமும் - காரம் என்னும்சாரியையும்,ஐ ஔ- (அவற்றுள்) ஐகாரஔகாரங்கள், கானும் - (காரம்என்னும்சாரியையுடனே) கான் என்னும் சாரியையும், இருமை குறில் - உயிர்க்குறிலும் உயிர்மெய்க் குறிலும், இ இரண்டொடு - (காரம் கான் என்கின்ற) இவ்விரண்டுடனே, கரமும் - கரம் என்னும் சாரியையும், ஆம் - ஆகின்ற, சாரியை - சாரியைகளை, பெறும்—; (எ - று)

மெய்களை முற்கூறினர், அவற்றிற்கு அச்சாரியை இன்றியமையாமையின். 'மெய்கள் அவ்வும்' என்னாது 'அகரமும்' என்றார், இப்படியே கரம் காரம் கான்வந்தால், அவை சாரியையாகிய அகரத்தினது சாரியை யெனக் கொள்ளுதற்கு,மெய்கள் சாரியைபெற்றேயும்,உயிர்மெய்நெடில்கள்சாரியை பெறாமலேயும்வரும்; க ங என்றும், ககரஆகாரம் என்றும் இவ்வாறுவருமே யன்றி,க் ங் என்றும், காகாரம் என்றும் நூல்களிற் பயின்றுவாராஎன்றபடி. மற்றவைஎற்றபடி பெற்றும் பெறாமலும் வரும். ஆய்தம் தனியே வராமையால், அதனை இடைவைத்து முன்னே அகரவுயிரும் பின்னே கேனம் என்னும் சாரியையும் தந்து அஃகேனம் என வழங்குவ ரென்பதும் அறிக.

'பிற' என்றதனால் குறிலோடு கான் சாரியை புணரும்போது இடையிலே ஆய்தம் தோன்றுதல் கொள்க.

அன், ஆன் முதலிய மொழிச்சாரியைகள் வேறு உள்ளதனால், இவை எழுத்துச்சாரியை யென்க.

(உ - ம்.) க - ங எனவும், ஆகாரம்-ஐகாரம்-ஔகாரம் எனவும்,ஐகான்-ஔகான் எனவும்; அகாரம் - அஃகான் - அகரம், மகாரம்-மஃகான்-மகரம் எனவும் வரும். (௭௧)

எழுத்தியலுக்குப் புறனடை.

௧௨௭. மொழியாய்த் தொடரினு முன்னனைத் தெழுத்தே.

(இ - ள்.) எழுத்து - இவ்வெழுத்துக்கள், மொழி ஆய் - பதமாயினும், தொடரினும் - (அப்பதம் தம்மோடும் உருபோடும்) புணர்ந்தாலும், முன் அனைத்து - முன்சொல்லப்பட்ட அப்பத்திலக்கணத்தையும் உடையனவாம்; (எ - று.)—'எழுத்து' என்பது - சாதியொருமையாதலால், 'அனைத்து'என்னும் ஒருமைமுற்ருேடு முடிந்தது. (எஉ)

எழுத்தியல் முற்றிற்று.

உ. பதவியல்.

எழுத்தின் புறத்திலக்கணம் இரண்டிற் பதத்தின் இலக்கணத்தைச் சொல்லும் இயல். இவ்வியலுக்கு ஆதாரம் பெரும்பாலும் வடமொழியாதலால் அது தோன்ற, 'மொழியியல்' எனப் பெயர் குறியாமல் ,பதவியல்' எனப் பெயர்குறித்தார்போலும். (மொழி-தமிழ்ச்சொல்; பதம்-வடசொல்.)

[பதம் இன்னதென்பதும், அதன் வகையும்.]

‡ கஉஎ. எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமா மதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி யியலு மென்ப.

(இ - ள்.) எழுத்தே - எழுத்துக்கள்தாமே, தனித்தும் - (ஒவ்வொன்ருகத்) தனித்தாயினும், தொடர்ந்தும் - (இரண்டு முதலாகத்)தொடர்ந்தாயினும், பொருள் தரின் - பொருளைத் தருமாயின், (அது), பதம் ஆம் - பதமாகும்; அது - அப்பதம்,—பகாப்பதம் பகுபதம் என-பகாப்பதமென்றும் பகுபதமென்றும், இரு பால் ஆகி - இரண்டுவகையையுடையதாகி, இயலும் - நடக்கும், என்ப-என்று சொல்வர்,(புலவர்;) (எ - று.)—பகாப்பதம்-பிரிக்கக்கூடாத பதம். பகுபதம் - பிரிக்கக்கூடிய பதம். (க)

[ஓரெழுத்துமொழிகள்.]

கஉகூ. உயிர்மவி லாறுந் தபநவி லைந்தும்
கவசவி னாலும் யவ்வி லொன்றும்
ஆகு நெடில்நொது வாங்குறி லிரண்டோடு
ஓரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின.

(இ - ள்.) உயிர் மவில் ஆறும்-உயிர்வருக்கத்திலும் மவ்வருக்கத்திலும் அவ்வாறும், த ப நவில் ஐந்தும்-தவ்வருக்கத்திலும்பவ்வருக்கத்திலும்நவ்வருக்கத்திலும் ஐவைந்தும், க வ சவில் நாலும் - கவ்வருக்கத்திலும்வவ்வருக்கத்திலும்சவ்வருக்கத்திலும் நந்நான்கும், யவ்வில்ஒன்றும்-யவ்வருக்கத்தில் ஒன்றும், ஆகும் நெடில் - நெட்டெழுத்தாலாகிய மொழிநாற்பதும்,நொது ஆம் குறில் இரண்டோடு - நொவ்வும் துவ்வும் ஆகும் குற்றெழுத்தாலாகிய மொழி இரண்டுடனே, ஓர்எழுத்து இயல்பதம் - ஓரெழுத்தாலாகியமொழிகள், ஆறு எழ் - நாற்பத்திரண்டும்,—சிறப்பின - சிறப்பையுடையனவாம்.

(உ - ம்.) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ எனவும்; மா, மீ, மூ, மே, மை, மோ எனவும்; தா, தீ, தூ, தே, தை எனவும்; பா, பூ, பே, பை, போ எனவும் நா, நீ, நே, நை, நோ எனவும்; கா, கூ, கை, கோ எனவும்; வா, வே, வை, வௌ எனவும்; சா, சீ, சே, சோ எனவும், யா, எனவும்; நொ, து எனவும் வரும்;

இவை, 'சிறப்பின' எனவே - அ, இ, உ, எ, ஒ, ஔ; கு; கௌ; சை; பீ; வீ எனச் சிறப்பில்லாதவைகளும் சில உள வெனக் கொள்க. (உ)

[தொடரெழுத்து மொழிகள்.]

கநூ0. பகாப்பத மேழும் பகுபத மொன்பதும்
எழுத்தீ ருகத் தொடரு மென்ப.

(இ - ள்.) பகாப்பதம் - பகாப்பதங்கள், ஏழும் - (இரண்டெழுத்து முதல்) ஏழெழுத்துக்களும், பகுபதம் - பகுபதங்கள், ஒன்பது எழுத்துஉம் - (இரண்டெழுத்து முதல்) ஒன்பதெழுத்துக்களும், ஈறு ஆக - எல்லையாக, தொடரும் —, என்ப - என்று சொல்வர், (அறிவுடையோர்); (எ - று.)

(உ - ம்.) அணி, கலம், பொருப்பு, இறும்பூது, குங்கிலியம், உத்தரட்டாதி எனப் பகாப்பதமும்; கூனி, கூனன், அறிஞன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்தராடத்தான், உத்தரட்டாதியான் எனப் பகுபதமும் வரும்.

'நடத்துவிப்பிக்கப் படுகின்றவர்கள்' எனப் பகுதி முதலிய உறுப்பு வேறுபட்டு வருகின்றவைகட்கு இவ்வரையறை இல்லையென்று அறிக. (ஙூ)

[பகாப்பதம்.]

‡ கநூக. பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்

(இ - ள்.) பகுப்பால் - பிரிக்கப்படுதலினாலே, பயன் அற்று - (பகுதி விகுதி முதலிய) பிரயோசன மில்லாமல், இடுகுறி ஆகி-(காரணமில்லாமல்) இடப்பட்ட குறியாய், முன்னே ஒன்று ஆய்-அநாதிகாலமாய் ஒரேதன்மையனவாகி, முடிந்து இயல்கின்ற - முடிந்துநடக்கின்ற, பெயர் வினை இடை உரி நான்கும்-பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும்உரிச்சொல்லும் ஆகிய நான்கும், பகாப்பதம் - பகாப்பதங்களாம்; (எ - று.)

எனவே, பகாப்பதம் நான்கு வகைப்படும்.

பகுபதத்திற்கு மறுதலைப்பட்ட தென்பார், இவ்வாறு கூறினர்.

(உ - ம்.) கலம், சோறு, நெருப்பு, காற்று—பெயர்ப்பகாப்பதம்.
நட, வா, உண், தின், பார் —வினைப்பகாப்பதம்.
மன், கொல், போல், மற்று —இடைப்பகாப்பதம்.
உறு, தவ, நனி, கழி, கூர் —உரிப்பகாப்பதம்.

(இனி, புளி கடு முதலிய ஆகுபெயர்கள் - காரணத்தால் வருவனவாயினும், விகுதி முதலிய உறுப்பு இல்லாததனால், பகாப்பதமென்றேகொள்க.) 'பயன் அற்று' என்பதற்கு - பொருட்பயனில்லாமல் என்றும் உரைக்கலாம்.

[பகுபதம்]

‡ கங௨. பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.

(இ - ள்.) பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின் - பொருளும் இடமும் காலமும் உறுப்பும் குணமும் தொழிலும் ஆகிய இந்த ஆறு பெயர்களையும் அடியாகக்கொண்டு, வரு-பிறக்கின்ற, பெயர்-பெயர்ச்சொற்களும்,—பொழுது கொள் - (தெரிநிலையாக வாயினும் குறிப்பாகவாயினும்) காலத்தைக் கொள்ளுகின்ற, வினை - வினைச்சொற்களும்,—பகுபதம்-பகுபதங்களாம்; (எ - று.)—எனவே, பெயர் வினை எனப் பகுபதம் இரண்டு வகைப்படும். இடைச்சொல்லிலும் உரிச்சொல்லிலும் பகுபதம் இல்லை.

'பொழுதுகொள் வினை பகுபதம்' எனவே, தெரிநிலை குறிப்புஎன்னும் இருவகை வினையாலணையும்பெயர்களும் பகுபதமாமென்பது பெறப்படும்.

(உ - ம்.) பொன்னன்	—பொருட்	
நாடன்	—இடப்	
திருவோணத்தான்	—காலப்	பெயர்ப்பகுபதம்.
கண்ணன்	—சினைப்	
கரியன்	—குணப்	
தட்டான்	—தொழிற்	

நடந்தான், நடந்த, நடந்து, நடவான்—தெரிநிலை	வினைப்
பொன்னன், பெரிய, மெல்ல, அல்லன்—குறிப்பு	பகுபதம்.
நடந்தான், நடந்தவன், நடவாதவன்—தெரிநிலை	வினையாலணை.
பொன்னன், பொன்னவன், இல்லாதவன்—குறிப்பு	யும் பெயர்

(க) பெயர்ப்பகுபதம்-காலங்காட்டாமல் வேற்றுமையுருபை ஏற்றுவரும். (உ - ம்.) பொன்னனை [பொன்னையுடையவனை] வணங்கினான்.

(உ) குறிப்பு வினைமுற்றுப் பகுபதம் - காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபை ஏலாது வரும்; (உ - ம்.) இவன் இப்போது பொன்னன் [பொன்னை யுடையவனாயிருக்கின்றான்.]

(ங) குறிப்பு வினையாலணையும் பெயர்ப்பகுபதம்-காலத்தைக்குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபை ஏற்றுவரும். (உ - ம்.) பண்டு பொன்னனை[முன்னே பொன்னையுடையவனாயிருந்தவனை]ப் பின்பு ஏழையாகக் கண்டேன்.

இவையே இம்மூன்றுக்கும் வேறுபாடாம்.

(க) தெரிநிலைவினைமுற்றுப்பகுபதம் - காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபை ஏலாது வரும்; (உ - ம்.) பொன்னன்நடந்தான்.

(உ) தெரிநிலை வினையாலணையும் பெயர்ப்பகுபதம்-காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபை ஏற்றுவரும்; (உ - ம்.)நடந்தானைத் தடுத்தேன். [இது நடந்தவன் என்றும் வரும்.]

இவையே இவ்விரண்டிற்கும் வேறுபாடாம்.

அவன் இவன் உவன் என்னும் சுட்டிடைச்சொல்லடியால் வரும்பெயர்களும், எவன் ஏது யார் என்னும் வினவிடைச்சொல்லடியால் வரும்பெயர்களும், பிறன் மற்றையான் என்னும் வேறு இடைச்சொல்லடியால் வரும் பெயர்களும், தமர் நமர் நுமர் என்னும் கிளைப்பெயர்களும், இங்குக்கூறிய பொருள் முதலிய ஆறனுள் சொல்வான்குறிப்பின்படி ஒன்றில் அடங்கும்.

செம்மை கருமை முதலிய பண்புப்பெயர்களும், நடத்தல்வருதல்முதலிய தொழிற்பெயர்களும், பகுதிவிகுதியாகப் பகுக்கப்படுமாயினும், விகுதிக்கு வேறு பொருளின்றி நிற்பதனால், சொல்நிலையாற் பகுபதமாயினும் பொருள்நிலையாற் பகாப்பதமெனக் கொள்க. (ரு)

[பகுபதவுறுப்பு.]

‡ கஙஙு. பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

(இ - ள்.) பகுதி - முதல்நிலையும், விகுதி - இறுதிநிலையும், இடைநிலை- இடைநிலையும், சாரியை - சாரியையும், சந்தி - சந்தியும், விகாரம் - விகாரமும், ஆறினும் - ஆகிய இந்த ஆறு உறுப்பினுள்ளும், ஏற்பவை - (பொருளமைதிக்குப்) பொருந்துபவைகளை, முன்னி - நினைத்து, புணர்ப்ப - (அறிவுடையோர்) கூட்டிமுடிக்க, எப் பதங்களும்-எல்லாப் பகுபதங்களும், முடியும் - முடிவுபெறும்; (எ - று.)

(உ - ம்.) கூனி—கூன் + இ எனப் பகுதி விகுதிகளால் முடிந்தது.

வலைஞன்—வலை + ஞ் + அன் எனப் பகுதிஇடைநிலைவிகுதிகளால் முடிந்தது.

உண்டனன்—உண் + ட் + அன் + அன் எனப் பகுதி இடைநிலை சாரியை விகுதிகளால் முடிந்தது.

படித்தனன்—படி + த் + த் + அன் + அன் எனப் பகுதி சந்தி இடைநிலை சாரியை விகுதிகளால் முடிந்தது.

நடந்தனன்—நட + த் + த் + அன் + அன் எனப்பகுதிசந்தி இடைநிலை சாரியை விகுதி இவ்வைந்தும் பெற்று. சந்தியால் வந்த தகரவல்லொற்று மெல்லொற்றாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

இயற்கையாகப் பகுபதங்களின் முதலில் நிற்பது பகுதி யென்றும், அவ்வாறுநிற்கும் பகுதியின் பொருளைப்பின்னின்று வேறுபடுத்துவதுவிகுதி யென்றும், பகுதி விகுதிகளின் இடையில் நிற்பது இடைநிலை யென்றும், * பகுதி விகுதி முதலியவற்றைச் சார்ந்து இயைந்து வருவது சாரியை

* 'சாரியை என்றதன் பொருள் - வேறாகிநின்றஇருமொழியும்தம்மிற் சார்தற்பொருட்டு இயைந்துநின்றது என்றவாறு' என்பது, தொல்காப்பியம் நச்சினார்க்கினியம். 'சாரியை - பற்றாசுபோல விகுதிபதவுருபுகளிடைநின்று புணர்த்துவது' என்பது, பிரயோக விவேகவுரை.

யென்றும், புணர்ச்சிவிதியா லுண்டாகின்ற தோன்றல் திரிதல் கெடுதல் என்ற மூன்றும் சந்தி யென்றும், செய்யுளிலக்கணத்துக்கு ஏற்ப வருகின்ற வலித்தல் முதலிய ஒன்பதும் விகாரமென்றும் கொள்க சாரியை மொழிக்கு இறுதியாக நிற்றலும் உண்டு.

பகுதி, விகுதி - ப்ரக்ருதி, விக்ருதி என்ற வடமொழிகளின்விகாரம்.

அல்வழிவேற்றுமைப்புணர்ச்சிக்கு விதிக்கப்படும் தோன்றல் முதலிய புணர்ச்சிவிகாரங்களையும், செய்யுட்கு விதிக்கப்படும் வலித்தல் முதலிய செய்யுள்விகாரங்களையும் இப்பகுபதம் பெறு மெனமாட்டியது, மாட்டேறிந் தொழுகல் என்னும் உத்தி. (மாட்டெறிந்து ஒழுகல் - ஒன்றன் இலக்கணத்தைஅதனைப்பெறுதற்குஉரியமற்றொன்றற்கும்ஏற்றிச்சொல்லுதல்.)

'ஆறினும் ஏற்பவை முன்னிப்புணர்ப்ப' என்றாராயினும், பகுபதத்திற்குப் பகுதிவிகுதிகள் பெரும்பாலும் இன்றியமையாதனவென்றும், மற்றைய உறுப்புக்களுள் ஒன்றையும் பலவற்றையும் பெற்றும் பெறாமலும் வருமென்றும் அறிக. வினைப்பகுபதம் மாத்திரமே ஆறு உறுப்புக்களையும் பெற்று வரும்; பெயர்ப்பகுபதம் இரண்டோருறுப்புக் குறையப்பெற்று வரும்.

எழுத்தியலிற் கூறிய இடைநிலைக்கும், இங்குக்கூறிய இடைநிலைக்கும் வேறுபாடு மாணுக்கர் அறியத்தக்கது; முதல்நிலை இறுதிநிலைகளுக்கும் இவ்வாறே. எழுத்தியலிற்கூறிய முதனிலை இடைநிலை இறுதிநிலைகள் - சொற்களின் முதலிலும் இடையிலும் இறுதியிலும்எழுத்துக்கள் நிற்கும்நிலை; இங்குக் கூறிய முதனிலை இடைநிலை இறுதிநிலைகள் - பகுபதத்தின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கும் உறுப்புக்கள். (கூ)

க. பகுதி.

[பகுதிக்குப் பொதுவிதி.]

‡ கங௪. தத்தம்,
பகாப் பதங்களே பகுதி யாகும்.

(இ - ள்.) தம் தம் பகாப்பதங்களே - (பெயர்ப்பகுபதங்களுள்ளும் வினைப்பகுபதங்களுள்ளும்) அதனதன் (முதலில் நிற்கின்ற) பகாப்பதமே, பகுதி ஆகும் - பகுதியாம்; (எ - று.)

சாரியை சந்தி விகாரம் என்ற மூன்றும் புணரியலிற் சொல்லப்படுதலால், மற்றைப் பகுதி விகுதி இடைநிலை என்ற மூன்றையும் இவ்வியலிற் சொல்லுகின்றார்.

பகுபதத்துள்ளே பகுதிவிகுதி முதலியஉறுப்புக்களெல்லாம் பகாப்பதமாயினும், விகுதி முதலியவற்றை மேல் எடுத்துக்கூறுதலால், இங்கே 'தத்தம் பகாப்பதங்கள்' என்றது, முதனிலைகளையே யென்பது பெறப்பட்டது.

பெயர்ப்பகுபதங்கட்கும் குறிப்புவினைப்பகுபதங்கட்கும் பெரும்பான்மை பெயர்ச்சொற்களும், சிறுபான்மை இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதிகளாம்.

(உ - ம்.) பொன்னன், ஊரன், திருவோணத்தன், பல்லன், கரியன் கூத்தன் எனப் பெயர்ப்பகுபதங்கட்கு முறையே பொருள் முதலிய ஆறு வகைப் பெயரும் பகுதியாக வந்தன,

அவன், எவன், பிறன் எனப் பெயர்ப்பகுபதங்கட்கு இடைச்சொற்கள் பகுதியாக வந்தன.

கடியன எனப் பெயர்ப்பகுபதத்திற்கு உரிச்சொல் பகுதியாகவந்தது.

[குறிப்புவினைப்பகுபதத்திற்கும் இவையே உதாரணமாம்.]

பெயர்ப்பகுபதத்துக்குச் சிறுபான்மை வினையும்பகுதியாம்;(உ-ம்.) அறிஞன்.

தெரிநிலைவினைப் பகுபதங்கட்குப்பெரும்பான்மைவினைச்சொற்களும், சிறுபான்மை பெயர்ச்சொல் இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதிகளாம்.

(உ - ம்.) நடந்தான், வந்தான் - வினைச்சொற்கள் பகுதியாக வந்தன.

கடைக்கணித்தான், காதலித்தான் - பெயர்ச்சொற்கள் பகுதியாக வந்தன.

போன்றான், என்றான் - இடைச்சொற்கள் பகுதியாக வந்தன.

சான்றான், கூர்ந்தான் - உரிச்சொற்கள் பகுதியாக வந்தன. (எ)

[பண்புப்பகுதிகட்குச் சிறப்புவிதி.]

† கஅ௫. செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே.

(இ - ள்.) செம்மை.....நுண்மை - செம்மை முதல் நுண்மை ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும், இவற்று எதிர் - இவைகட்கு எதிரான வெண்மை முதலானவைகளும், இன்னவும் - இவைபோல்வன பிறவும்,— பண்பின்-பண்புப்பொருளினின்றும், பகா-(வேறுபொருள்)பகுக்கப்படாத, நிலை - நிலையையுடைய, பதம்-பதங்களாம்; (எ - று.)—(சேய்மை - தூரம்.)

இவையெல்லாம் சொல்நிலையாற் பகுபதமாயினும் 'மை' விகுதிக்குப் பகுதிப்பொரு ளல்லது வேறுபொருள் இல்லாமையாற் பொருள்நிலையாற் பகாப்பதமாம்என்பது அறிவித்தற்கு 'பண்பிற்பகா' என்றும்,இவை'மை' விகுதியின்றி வாராமையினாலேஇவ்விகுதியையும்பகுதியாகவேநிறுத்திமேல் வரும்விகுதியோடு புணர்க்கப்படும் என்பது அறிவித்தற்கு 'நிலைப்பதம்'என்றும் கூறினார். பண்புப்பகாப்பத மென்னாமல் 'பண்பிற்பகாநிலைப்பதம்'என்றது, சொற்பொருள்விரித்தல் என்னும் உத்தி. (சொற்பொருள்விரித்தல்- சொல்லின்பொருள் வெளிப்படையாக விளங்கும்படி விவரித்துச்சொல்லுதல்.) செம்மை முதலிய வாய்பாடுகளை எடுத்துக்காட்டியது, எடுத்துக்காட்டல் என்னும் உத்தி. (எடுத்துக் காட்டல் - தான்சொல்லும் இலக்கணத்துக்கு அமைந்த இலக்கியத்தைத் தானே எடுத்துக்காட்டுதல்.)

செம்மைக்கு - வெண்மை கருமை பொன்மை பசுமைகளும், சிறுமைக்கு - பெருமையும், சேய்மைக்கு - அண்மையும்,தீமைக்கு - நன்மையும்,

வெம்மைக்கு - தண்மையும், புதுமைக்கு - பழமையும், மென்மைக்கு-வன்மையும், மேன்மைக்கு - கீழ்மையும், திண்மைக்கு - நொய்ம்மையும், உண்மைக்கு - இன்மையும், நுண்மைக்கு - பருமையும் எதிரானவை யெனக் காண்க. இவைபோல்வன பிறவாவன:—மடமை, புலமை, இளமை, முதுமை; குறுமை, நெடுமை, கிழமை, வறுமை வெறுமை, அருமை, நடுமை முதலியன. (அ)

[பண்புப்பகுதியின் விகாரங்கள்.]

‡ கஙசு. ஈறு போதல் இடையுகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடியகரம் ஐயாதல்
தன்னொற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இனையவும் பண்பிற் கியல்பே.

(இ - ள்.) ஈறு போதல்-இறுதியிலுள்ள மை விகுதிபோதலும், இடை உகரம் இ ஆதல் - நடுவில்நின்ற உகரம் இகரமாதலும், ஆதி நீடல்-முதலில் நின்ற குறில் நெடிலாதலும், அடி அகரம் ஐ ஆதல் - முதலில் நின்றஅகரம் ஐகாரமாதலும், தன் ஒற்று இரட்டல்-தன் [பண்புப்பகுதியின்]மெய் நடுவே மிகுதலும், முன் நின்ற மெய் திரிதல் - மைவிகுதிக்குமுன்னே நின்ற மெய் வேறொரு மெய்யாதலும், இனம்மிகல் - (வருகின்ற வல்லெழுத்துக்கு)இனமான மெல்லெழுத்து மிகுதலும், இனையவும் - இவைபோல்வனபிறவும்,— பண்பிற்கு இயல்பு - அப்பண்புச்சொற்களுக்கு இயற்கையாம்; (எ - று.)

இவ்விகாரங்கள் விகுதிப்புணர்ச்சிக்குமாத்திரமன்றிப் பதப்புணர்ச்சிக்கும்பொருந்துமென அறிவித்தற்கு, 'பண்புப்பகுதிக்கு' என்னுமல்பொதுப் பட'பண்பிற்கு' என்றார் பண்புஅதிகாரப்பட்டமையால்,பதப்புணர்ச்சிக்கும் இங்கேயே சொன்னாரென்க. இது, ஒப்பின்முடித்தல் என்னும் உத்தி.

(உ - ம்.) நல்லன், சிறுபொருள்—நன்மை சிறுமை என்பவற்றின் மை விகுதி போயிற்று

கரியன், சிறியிலை—கருமை சிறுமை என்பவற்றின் மை விகுதி போய் உகரம் இகரமாயிற்று.

பாசி, மூதூர்—பசுமை முதுமை என்பவற்றின் மை விகுதி போய் ஆதி நீண்டது.

பைந்தார்-பசுமைஎன்பதன் மை விகுதிபோய் (நடுநின்ற உயிர்மெய்யும் கெட்டு) முதலிலிருந்தஅகரம் ஐகாரமாகி வருமெழுத்திற்கு இனவெழுத்து மிக்கது.

குற்றி நட்டாறு—குறுமை நடுமை என்பவற்றின் மை விகுதி போய்த் தன் ஒற்று இரட்டியது.

செய்யன், வெவ்வுயிர்—செம்மைவெம்மைஎன்பவற்றின் மை விகுதி போய் முன்நின்றமகரமெய் திரிந்தது.

இவை போல்வன பிறவாவன-பைந்தார் என்பதில் பசுமையின்இடை நின்ற 'சு' என்னும் உயிர்மெய் கெடுதலும், கார் பார் என்பவற்றில் கருமை

பருமைகளின் இடைநின்ற உகரம் கெடுதலும், இன்சொல் என்பதில் இனிமையின் இடைநின்ற இகரம் கெடுதலும், பழைய என்பதில் பழமையின் இடை அகரம் ஐகாரமாதலும், தூமலர் என்பதில் தூய்மையின் இடையொற்றுக் கெடுதலும், துய்ய என்பதில் தூய்மையின் முதல் குறுகுதலும், அரும்வலி பெரும்வளம் முதலிய இடங்களில் அருமை பெருமை என்பவற்றின் இறுதி ஐகாரம்மாத்திரம் கெடுதலும் முதலியன.

இவ்விகாரங்களை அன்பு அழகு முதலிய பண்புவாய்பாடுகட்கு அடையாமல், எடுத்துக்காட்டிய செம்மை முதலிய மையீற்றுப் பண்புவாய்பாடுகட்கே அடைய வைத்தலால், இது-எடுத்தமொழியினெய்தவைத்தல் என்னும் உத்தி. (எடுத்த மொழியின் எய்த வைத்தல்-தான் எடுத்துக்காட்டிய இலக்கியத்தில் தான் சொல்லும் இலக்கணத்தைப் பொருந்தியிருக்க வைத்தல்.)

மற்றை விகாரங்களை யடையும்போதெல்லாம் 'ஈறுபோதல்' கொள்க. ஆனது பற்றியே, அது முற்கூறப்பட்டது. 'இனையவும்' என்ற உம்மையை எதிர்மறையாக வைத்து, செம்மையன் கருமையன் என இவ்விகாரங்களுள் ஒன்றையும் பெறாமல் இயல்பாய் முடிதலையும் அமைத்துக்கொள்க. (௬)

[தெரிநிலைவினைப்பகுதிக்குச் சிறப்புவிதி.]

‡ ௧௩௭. நட வா மடி சீ விடு கூ வே வை
நொ (ப்) போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின்
தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று
எய்திய இருபான் மூன்று மீற்றவும்
செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.

(இ - ள்.) நட...அஃகு என்று - நட என்பது முதல் அஃகு என்பது ஈறாக, எய்திய-பொருந்திய, இருபான் மூன்று ஆம் ஈற்றவும் - இருபத்து மூன்றாகிய ஈற்றையுடைய இவைமுதலிய சொற்களெல்லாம்,—செய் என் ஏவல் வினை பகாப்பதம்-செய்யென்னும் வாய்பாட்டு ஒருமையேவலும் மற்றைத் தெரிநிலைவினைகளின் பகாப்பதமாகிய பகுதியும் ஆம்; (எ - று.)—பகாப்பதம்=பகுதி.

சொல்லுக்கு இறுதியில் நிற்கு மெனப்பட்ட இருபத்துநான்கு எழுத்துக்களுள் எகரம் வினாவிடைச் சொல்லிலும், அளபெடையிலும், தன்னையுணர்த்துமிடத்திலும் ஈறாவ தல்லாமல் மற்றைச்சொற்களின் இறுதியில் நில்லாதாதலால், அதனை ஒழித்து 'இருபான்மூன்று மீற்ற' என்றார். இருபத்துமூன்று ஈற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டிய வாய்பாடுகளெல்லாம் இப்பொதுவாய்பா டொன்றில் அடங்கு மென்பார், 'செய்' என்று கூறினார்.

பகுதிகூறவந்தவர், அதுதான் ஏவல்வாய்பாடுபட வருதலால், அதனையும் உடன்கூறினா ரென்க.

ஒருமை யேவலாக வருவதற்கு:—

(உ - ம்.) நட, வா, உண், தின், அஃகு என வரும்.

மற்றை வினைப்பகுதியாக வருவதற்கு:—

(உ - ம்.) நடந்தான், வந்தான், மடிந்தான், சீத்தான் [சீவினான்], வீட்டான், கூவினான், வேந்தான், வைத்தான், நோந்தான், போயினான், வேளவினான், உரிஞினான் [உராய்ந்தான்], உண்டான், பொருநினான் [பொருந்தினான்], திருமினான் [திரும்பினான்], தின்றான், தேய்ந்தான், பார்த்தான், சென்றான்; வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான் [சுருங்கினான்] என வரும்.

இங்குக்காட்டிய நட வா முதலியனவெல்லாம், தன்வினைப்பகுதிகள்; பிறவினைப்பகுதிகள் மேற்சூத்திரத்திற் காட்டப்படும். [தன்வினையாவது - தானே நேராகத் தொழிலைச்செய்வது; பிறவினையாவது-மற்றொருவனைக் கொண்டு தான் செய்விப்பது.]

கிட, சுர, பற, கல முதலிய அகரவீற்று வினைப்பகுதிகளெல்லாம் இங்கு எடுத்துக்காட்டிய 'நட' என்னும், அகரவீற்று வாய்பாட்டிலும், இவ்வாறே எல்லா ஈற்றுப் பிற பகுதிகளும் இங்குக்காட்டிய அவ்வவ்வீற்று வாய்பாடுகளிலும் அடக்கப்படுமென அறிக.

இந்நூலாசிரியர் வடநூல்மேற்கோளாகஒருமொழியைஎடுத்துப்பகாப்பதம் பகுபதமெனக் காரணபெயர் தாமே இட்டு "எழுத்தே தனித்தும்" என்னுஞ் சூத்திரம் முதல் இதுவரையிலும் பகாப்பதம் பகுபதமெனப் பலதரம் சொல்லுதல், தன்குறிவழக்கம்மிகவெடுத்துரைத்தல் என்னும் உத்தி. (தன் குறி வழக்கம் மிக எடுத்து உரைத்தல் - தான் நூதனமாகக் குறித்து வழங்குவதைப் பலவிடங்களில் எடுத்துச் சொல்லுதல்.)

நட, வா முதலிய சொற்கள் ஓசைவேறுபாட்டாற் கட்டளைப்பொருளுணர்த்தும்போது ஏவலொருமையாமென்றும், மற்றை வினைச்சொற்களெல்லாம் பிறத்தற்கு மூலமாய்த் தொழில்மாத்திரத்தை யுணர்த்தும்போது பகுதியாமென்றும் அறிக.

[நட வா முதலிய பகுதிகளே விகுதியோடு புணராமல் தனித்துநின்று ஓசைவேறுபாட்டால் ஏவலொருமை வினைமுற்றாய் நிற்குமென்பது, தொல்காப்பியவுரையாசிரியர் முதலியோருள் சிலர் மதம்; நடவாய் வாராய்முதலிய முன்னிலையேவலொருமை வினைமுற்றுச்சொற்கள்தாமே ஆய் என்னும் விகுதிகுன்றி நட வா முதலியனவாக நிற்குமென்பது, மற்றுஞ்சிலர்மதம்: பிறர்மதத்தை மறுத்துத் தமது மதத்தை நிலைநிறுத்துதற்கு அவரவர் பற்பல காரணமுங் கூறுவர். இவ்விருவகைக் கொள்கைகளுள் உண்மையான சித்தாந்தம் எதுவாகுமானாலும், உய்த்துநோக்குமிடத்து, நன்னூலாசிரியரது கருத்து முந்திக்கூறிய வகையையே தழுவியுள்ளதென நன்குவிளங்குகின்றது; மேல் "செய்யென் வினைவழி விப்பி தனிவரிற், செய்வியென் னேவ லிணையி னீரேவல்" என்றும், "ஆவி யரழ விறுதி முன்னிலைவினை, யேவல் முன் வல்லினம்" என்றும், "ஏவலின் வரூஉமெல்லா வீற்றவும்" என்றும் கூறுவன, இதற்குச் சிறந்த ஆதாரமாம்.]

இத்தெரிநிலைவினைப்பகுதிகள் விகுதிமுதலியவற்றோடுபுணரும்போது தொழு - தொழுதான், உண் - உண்டான் எனச் சில இயல்பாத லல்லாம

னும்; செல் - சேறல், கொள்-கோடல் என முதல் நீண்டும்; தா - தந்தான், வே - வெந்தான் எனத் தனிநெடில் குறுகியும்; சா - செத்தான் என முதல் ஆகாரம் எகரமாகியும்; கொணு - கொணர்ந்தான் என முதலெழுத்துக்கு அயலெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தும்; விரவு-விராவினன் என நடுக் குறில் நீண்டும்; முழுகு-முழுகினன் மூழ்கினன், விழு - விழுந்தான் வீழ்ந் தான் என இயல்பும் விகாரமுமாக விகற்பித்தும்; வா - வருகின்றான், அல மா - அலமருகின்றான் என நெடில்குறுகி ஒருயிர்மெய் விரிந்தும்; கல் - கற்றான், கேள்-கேட்டான் என ஈற்றுமெய் வருமெய்யாகத் திரிந்தும்; செல்-சென்றான், கொள் - கொண்டான் என ஈற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும், இன்னும் இவ்வாறு பல விகார மடைந்தும் வரும். கா, சா, தா இவை - முறையே காத்தான், செத்தான், தந்தான் என்றும்; கல், நில், புல், சொல் இவை-கற்றான், நின்றான், புல்லினன், சொன்னன் என்றும் ஒருதன்மையனவான பகுதிகள் பலவிதமாக விகாரப்படுதலால் அவை யெல்லாவற்றையும் தனித்தனி எடுத்து முடிபு சொல்லப் புகுந்தால் வரையறையில்லாமல் விரியு மாதலால், செய்யுள் வழக்கத்தையும் உலக வழக்கத்தையும் பார்த்துப்புணர்ச்சிவிகாரமும் செய்யுள்விகாரமும்கொண்டு அமைத்துக்கொள்க. (௧0)

[ஏவற்குச் சிறப்புவிதி: பிறவினை.]

‡ ௧௩௨. செய்யென் வினைவழி விப்பி தனிவரின்
செய்வியென் னேவ லிணையி னீரேவல்.

(இ - ள்.) செய் என் வினை வழி-செய் என்னும் வாய்பாட்டு முதனிலைகளின் பின், வி பி தனிவரின்-'வி' விகுதியாவது 'பி' விகுதியாவது தனித்து வருமாயின், செய்வி என் ஏவல் - (செய் என்னும் ஏவலின் மேல் ஓரேவலாய்ச்) செய்வி என்னும் வாய்பாட்டு ஏவலொருமையாம்; இணையின்-('செய்' என் வினையின்பின் இந்த விகுதிகள் தன்னொடும் பிறிதொடும்) இணைந்துவருமாயின், ஈர் ஏவல்-(செய்யென்னும் ஏவலின்மேல்) ஈரேவலாய்ச்செய்விப்பி என்னும் வாய்பாட்டு ஏவலொருமையாம்; (எ - று)—இரண்டு + ஏவல் = ஈரேவல்: ஏவலின்மேல் ஏவல் என்க; இருமடியேவல்.

(உ - ம்.) வருவி, நடப்பி—வி, பி தனித்துவந்தன; ஓரேவல்.
நடப்பிப்பி—பி, தன்னோடு இணைந்துவந்தது. } ஈரேவல்.
வருவிப்பி—வி, பிறிதோடு இணைந்துவந்தது. }

'வி' விகுதி, தன்னோடு இணைந்து வாராது.

இவ்வினைமுற்றின் தன்மையை மேல் வினையியலிற் கூறாது இங்கே கூறியது, இவை பகுதிமாத்திரமாய் நிற்றலாலும், பகுதி இங்கு அதிகாரப் பட்டிருத்தலாலு மென்க.

இனி, உரையிற்கோடல் என்னும் உத்தியால், சிலபகுதிகள் கு, சு, டு, து, பு, று என்கிற விகுதிகளுள் ஒன்றைப் பெற்றும், சிலபகுதிகள் இடையிலுள்ள மெல்லொற்று வல்லொற்றாகத் திரிந்தும், தன்ஒற்று இரட்டியும் பிறவினையாக வரு மெனக் கொள்க,

(உ - ம்.) (க) போ-போக்கு, பாய்-பாய்ச்சு, உருள்-உருட்டு, நட-நடத்து, எழு - எழுப்பு, பயில்-பயிற்று } பிறவிகுதி பெற்றன.

(உ) திருந்து-திருத்து, தோன்று-தோற்று—மெலிவலியாயின.

(ந) உருகு - உருக்கு, ஆடு - ஆட்டு—தன்ஒற்று இரட்டின.

இவ்வாறன்றி, சில வினைப்பகுதிகள் தன்வினை பிறவினைகட்குப்பொது வாம்; (உ - ம்) கரை, தேய், மறை, உடை, அலை, சேர், மடி முதலியன.

இத்தன்மையனவான பகுதிகள் இவ்விகுதிவேண்டாமல் கரைத்தான், தேய்த்தான்; கரைத்திலன், தேய்த்திலன்; கரைக்கின்றான், தேய்க்கின்றான்; கரைக்கின்றிலன், தேய்க்கின்றிலன்; கரைப்பான், தேய்ப்பான்; கரைக்கான், தேய்க்கான் எனப் பிறவினைப்பொருளைத் தரும்போது வல்லெழுத்துமிக் கும்: கரைந்தான், தேய்ந்தான்; கரைந்திலன்; தேய்ந்திலன்; கரைகின்றான் தேய்கின்றான்; கரைகின்றிலன்; தேய்கின்றிலன்; கரைவான், தேய்வான்; கரையான், தேயான் எனத் தன்வினைப்பொருளைத் தரும்போது வல்லெ ழுத்து மிகாமலும் வருமென்று அறிக. இப்பகுதிகள் எதிர்காலவினைமுற் றில் பிறவினைப்பொருட்குப் பகர இடைநிலையையும், தன்வினைப்பொருட்கு வகர இடைநிலையையும் ஏற்றுநிற்கும்.

[வினைப்பகுதிக்குப் புறனடை.]

கநகூ. விளம்பிய பகுதி வேறாதலும் விதியே.

(இ - ள்.) விளம்பிய பகுதி வேறு ஆதலும்-(ஏவல் வேறாதல்போல அதன்பின்னே) சொல்லப்பட்ட மற்றை வினைப்பகுதிகள் வேறுபடுதலும் விதியே - விதியேயாம்; (எ - று.)

நட முதலிய ஏவலொருமை முற்றுக்கள்-நடப்பி, நடப்பிப்பி என்று பிறவினையாக வேறுபடுதல்போல, நடந்தான் முதலிய மற்றை வினைமுற் றுக்களிலுள்ள நட முதலிய பகுதிகளும் - நடப்பித்தான், நடப்பிப்பித் தான் என்று பிறவினையாக வேறுபடும் என்பதாம்.

'செய்யெனேவல் வினைப்பகாப்பதம்' எனக் கீழ் இரண்டாகக் கூறி நிறுத்தியவர், அவற்றுள் முந்தியது பிறவினையாதற்கு விதியை முந்தின சூத்திரத்திற் கூறி, பிந்தினது பிறவினையாதற்கு அவ்விதியையே இச்சூத் திரத்தாற் பெறவைத்தாரெனக் கொள்க.

கீழ் "நடவாமடிசீ" என்னுஞ் சூத்திரத்து உரையின் இறுதியிற் கூறிய பகுதிவிகாரப்படுதலை இச்சூத்திரத்துக்குப் பொருளாகக் கூறுவாருமுளர்; அவ்விகாரங்கள் பகுபதவுறுப்பாய்க் கொள்ளப்பட்ட மூன்று சந்தியுள்ளும் ஒன்பது விகாரத்துள்ளும் அமைந்துகிடத்தலால், அது பொருந்தாது. (கஉ)

உ. விகுதி.

‡ கசO. அன் ஆன் அள் ஆள் அர் ஆர் ப (ம்) மார்
அ ஆ கு டு து று என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஓம் (ஒடு) உம் ஊர்.

கட தற ஐ ஆய் இ (ம்) மின் இர் ஈர்
ஈயர் க ய உம் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே.

(இ - ள்.) அன்..............என்பவும் - அன் முதல் முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளும், பிறவும்-(இவைபோல்வன) பிறவும்,—வினையின் விகுதி - தெரிநிலை வினைமுற்றுப் - பகுபதங்களின்விகுதிகளாம்;பெயரினும் சில - பெயர்ப்பகுபதங்களிலும் (அவற்றுள்) சில விகுதிகளாம்; (எ - று.)

இரட்டுறமொழிதல் என்னும் உத்தியால் தன்மையொருமைக்கும் அஃறிணைப்படர்க்கையொருமைக்கும்பொதுவாக 'டு து று' என்றும்,முன்னிலையொருமைக்கும் முன்னிலையேவலொருமைக்கும் பொதுவாக - 'ஆய்' என்றும், அன் என்னும்தன்மையொருமைவிகுதி தொன்றுதொட்டதன்றிஇலக்கியங்களிற்கண்டமையின் எதிரதுபோற்றல் என்னும் உத்தியால் தழுவிக்கொண்டதாதலின் அதனைவலியுறுத்திப் பின்னும்'அன்' எனஎடுத்தும்,இன்னும் இவற்றுள் இரட்டுறமொழிதலால் அடங்குவன அடங்க அடங்காதனவாகிய பெயரெச்சம் வினையெச்சம் முதலியவற்றின் ஈற்றில் நிற்பனவெல்லாம் விகுதி யென்று கருதிக்கொள்ளுதற்கு 'பிறவும்' என்றும் கூறினர்; (எதிரது போற்றல் - முன்பு இல்லாததாய்ப் பின்பு வழங்கிவருமாயின்அதனைத் தழுவிக்கொள்ளுதல்.)

உம் ஊர் க ட த ற - உம் என்பது ஊர்ந்த [ஏறிய] ககர டகர தகர றகர மெய்கள்; அவை - கும், டும், தும், றும் என்பன.

(உ - ம்.) அன், ஆன். —நடந்தனன், நடந்தான்—ஆண்பாற்படர்க்கை.
அள், ஆள். —நடந்தனள், நடந்தாள்—பெண்பாற்படர்க்கை.
அர், ஆர், ப, மார். } நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார் } -பலர்பாற்படர்க்கை.
அ, ஆ. —நடந்தன, நடவா—பலவின்பாற்படர்க்கை.
கு, டு, து, று, என், ஏன், அல், அன். } உண்கு, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென்,நடந்தேன், நடப்பல், நடப்பன் } —ஒருமைத்தன்மை
அம்; ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும், } நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், உண்கும், உண்டும், நடந்தும், சேறும் } —பன்மைத்தன்மை.
ஐ, ஆய், இ. } நடந்தனை, நடந்தாய். சேறி [செல்வாய்] } — ஒருமைமுன்னிலை.
மின், இர், ஈர். } நடமின், நடந்தனிர், நடந்தீர். } —பன்மைமுன்னிலை.
ஈயர், க, ய. } நிலீயர், நடக்க, வாழிய. } —வியங்கோள்.
உம். —நடக்கும் —செய்யுமென்முற்று.

இவையெல்லாம் தெரிநிலைவினைமுற்றுக்கள்.

டு, து, று விகுதிகள் ஒன்றன்பாலில் வருவதற்கு உதாரணம்:— குறுந்தாட்டு [குறுகியதாளையுடையது], நடந்தது, போயிற்று.

'பிறவும்' என்றதனால், மருல் அழேல் என ஆல் எல் முதலிய விகுதிகளும் வரும். இவை - எதிர்மறையொருமையேவல்.

குறிப்புவினைமுற்றுக்கள், குறிப்பாகக் காலங்காட்டுவன வாதலால். இந்த விகுதிகளுள்ளே தாமே காலங்காட்டும் விகுதிகளொழிந்தஅன், ஆன்; அள் ஆள்; அர் ஆர்; அ டு து று; என், ஏன், அம், ஆம் எம் ஏம், ஓம்; ஐ ஆய் இ; இர் ஈர் என்னும் விகுதிகளோடு வருமெனக் கொள்க.

(உ - ம்.) கரியன். கரியான்; கரியள். கரியாள்: கரியர், கரியார்;கரியன; குறுந்தாட்டு, கரியது, குழையிற்று; கரியேன்,கரியேன் கரியம்,கரியாம். கரியெம், கரியேம், கரியோம்; கரியை, கரியாய், வில்லி, கரியிர், கரியீர்.

'பெயரினுஞ் சில' என்றதனால், இவ்விகுதிகளுள் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், து, அ, ஐ, இ என்பவைகளுடனே, மன் ,மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ் என்பனவும், பிறவும் பெயர் விகுதிகளாம்.

(உ-ம்.) குழையன், வானத்தான்; குழையள், வானத்தாள்;குழையர், வானத்தார், தேவிமார்; யாது; குழையன; கண்ணறை,பொன்னி;வடமன், கோமான், கோக்கள், அவை, எந்தை, எங்கை, எம்பி,எம்முன்,தோன்றல், பிறன், பிறள், பிறர், அவ்.

தெரிநிலைப்பெயரெச்ச விகுதிகள்:—அ, உம் என்பன.

(உ - ம்.) நடந்த, நடக்கின்ற, நடவாத; நடக்கும்.

குறிப்புப் பெயரெச்ச விகுதி:—அ ஒன்றேயாம். (உ - ம்.) பெரிய.

'உம்' விகுதிஇடைநிலையை ஏற்காமல்தானேஎதிர்காலங்காட்டுதலால், குறிப்புப் பெயரெச்சத்திற்கு வாராது.

தெரிநிலை வினையெச்ச விகுதிகள்:—உ, இ, ய், பு, ஆ, ஊ, என: அ: இன், ஆல், கால், கு, இய, இயர், வான், பான் பாக்கு, கடை, கண், வழி, இடத்து: உம்: மல், மை, மே என்பனவும், பிறவுமாம். இவற்றுள், இறுதியிற்கூறிய மல், மை, மே என்னும் விகுதிகள் எதிர்மறையில் வரும்.

(உ-ம்.)நடந்து, ஓடி, போய்,உண்குபு, உண்ணு,உண்ணூ,உண்னென: உண்ண:உண்ணின், உண்டால், உண்டக்கால்,உணற்கு,உண்ணிய,உண்ணியர், வருவான்,உண்பான்,உண்பாக்கு, செய்தக்கடை,செய்தக்கண்,செய்தவழி, செய்தவிடத்து: காண்டலும்: உண்ணமல்,உண்ணமை, உண்ணமே.

['உண்ட'என்பதிற்போல அதன் எதிர்மறையாகிய'உண்ணத'என்பதிலும் 'அ'- விகுதியெனக் கொள்ளப்படுதற்கு ஏற்ப, 'உண்டு' என்பதிற்போல அதன் எதிர்மறையாகிய 'உண்ணது' என்பதிலும் 'உ' - விகுதியெனக் கொள்க; இவ்வெதிர்மறைச்சொற்களில், த் - எழுத்துப்பேறு.]

குறிப்புவினையெச்சவிகுதிகள்:—அ: றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து என்பனவும், பிறவுமாம்.

(உ - ம்.) மெல்ல: அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல், அல்லாக் கால், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து.

தொழிற்பெயர் விகுதிகள்:—தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, ஆல், இல் என்பனவும், பிறவுமாம்.

(உ - ம்.) நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, உணர்ச்சி, கல்வி, விக்குள் [விக்குதல்] சாக் காடு [சாதல்], கோட்பாடு [கொள்கை], தேற்றரவு [தேற்றுதல்], வாரானை [வருதல்], நடவாமை, பாய்த்து [பாய்தல்], தழால் [தழுவல்], எழில் [எழுதல்.]

'மை' என்னுந் தொழிற்பெயர் விகுதி - நடந்தமை, நடக்கின்றமை என இறந்தகாலவிடைநிலை நிகழ்காலவிடைநிலைகளோடு கூடியும், 'து' என் னுந் தொழிற்பெயர் விகுதி - நடந்தது, நடக்கின்றது, நடப்பது என முக் கால விடை நிலைகளோடு கூடியும் வரும்.

இவையெல்லாம், விகுதிபெற்ற தொழிற்பெயர்.

இனி, இவ்விகுதிகளில் ஒன்று புணர்ந்துகெட்டுப் பகுதிமாத்திரமாய் நிற்கும் தொழிற்பெயர்களும், விகுதிபுணர்ந்துகெடும்போது பகுதிவிகாரப் பட்டுநிற்கும் தொழிற்பெயர்களும் உண்டு; அவை - முறையே முதனிலைத் தொழிற்பெயரென்றும், முதனிலைதிரிந்ததொழிற்பெயரென்றும் கூறப்படும்.

(உ - ம்.) அடி, அறி, உரை, கெடு—முதனிலைத்தொழிற்பெயர்.
கோள், கேடு, இடையீடு—முதனிலைதிரிந்ததொழிற்பெயர்.

பண்புப்பெயர் விகுதிகள்:—மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர், பம் என்பனவும், பிறவுமாம்.

(உ - ம்.) நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர், திட்பம்.

இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும் - வினைமுதற்பொருளையும், செயப்படுபொருளையும், கருவிப்பொருளையும், உணர்த்தும். (வினைமுதற் பொருள் - கருத்தாப்பொருள்.)

(உ - ம்.) அலரி, பறவை, எச்சம் —வினைமுதற்பொருள்.
ஊருணி, தொடை; நீத்தம் —செயப்படுபொருள்.
மண்வெட்டி பார்வை, நோக்கம்—கருவிப்பொருள்.

அலர்வது அலரி [பூ], பறப்பது பறவை [பக்ஷி], எஞ்சுவது எச்சம் [சந் ததி: எஞ்சுதல்-சேஷித்தல்]; இவற்றில், வினைகளின் எழுவாயே பொருளா தல் காண்க. ஊரரால் நீருண்ணப்படுவது ஊருணி [குளம்]; தொடுக்கப் படுவது தொடை [மாலை]: நீந்தப்படுவது நீத்தம் [வெள்ளம்]; இவற்றில்

வினைகளின் செயப்படுபொருளே பொருளாதல் காண்க. மண்ணைவெட்டு தற்குக் கருவியானது மண்வெட்டி: பார்ப்பதற்குக் கருவியானது பார்வை [கண்], நோக்குதற்குக் கருவியானது நோக்கம் [கண்]; இவற்றில் வினைகளின் கருவியே பொருளாதல் காண்க.

இம்மூவகைவிகுதிகளும் பகுதியோடு புணர்ந்து கெடுதலும் உண்டு.

(உ - ம்.) காய், தளிர், பூ, கனி, திரை, நுரை, அலை என்பவைகளில், வினைமுதற் பொருளுணர்த்தும் விகுதி புணர்ந்துகெட்டது.

ஊண், பூண், கோள், உரி, துணி, மடி என்பவைகளில், செயப்படு பொருளுணர்த்தும் விகுதி புணர்ந்து கெட்டது.

நோக்குஎன்பதில், கருவிப்பொருளுணர்த்தும்விகுதிபுணர்ந்துகெட்டது.

"வரிப்புனைபந்து" என்பதில் வரிந்து என்பதன் வினையெச்சவிகுதியும், "கொள்வாரும் கள்வரும் நேர்" என்பதில் நேர்வர் என்பதன் வினைமுற்று விகுதியும் கெட்டுவந்தன; இவ்வாறு வேறு சில விகுதிகளும் சிறுபான்மை கெட்டுவருதல் கண்டுகொள்க.

விடு, ஒழி என்ற விகுதிகள் - துணிவுப்பொருளை உணர்த்தும்.

(உ - ம்.) செய்துவிட்டான், விட்டொழிந்தான்.

கொள் என்ற விகுதி - தற்செயலை உணர்த்தும்.

(உ - ம்.) அடித்துக்கொண்டான்.

படு, உண் விகுதிகள் - செயப்பாட்டுவினைப்பொருளை உணர்த்தும்.

(உ - ம்.) கட்டப்பட்டான் கட்டுண்டான்.

மை என்ற விகுதி - தன்மைப்பொருளை உணர்த்தும்.

(உ - ம்.) பொன்மை, ஆண்மை.

இரு, இடு, உறு என்பன - தமக்கென வேறுபொரு ளின்றி, பகுதிப்பொருள்விகுதியாய் வரும்: இவற்றைத் துணைவினை யென்பர்.

(உ - ம்.) எழுந்திருக்கிறான், உரைத்திடுகின்றான், சொல்லுறுகின்றான்.

பலபொருள்குறிக்கும் விகுதிகள் வருமாறு:—

அ.—க. வினையெச்சவிகுதி: செய்ய, மெல்ல.

உ. பெயரெச்சவிகுதி: செய்த, பெரிய.

ந. பலவின்பாற்படர்க்கைவிகுதி: வந்தன, கொடியன.

ச. வியங்கோள்விகுதி: எழுந்தருள [=எழுந்தருள்க.]

அம்.—க. தன்மைப்பன்மைவிகுதி: நடந்தனம், பெரியம்.

உ. தொழிற்பெயர்விகுதி: ஆட்டம்.

ந. பண்புப்பெயர்விகுதி: நலம்.

ச. வினைமுதற்பொருள்விகுதி: எச்சம்.

ரு. செயப்படுபொருள்விகுதி: நீத்தம்.

சா. கருவிப்பொருள்விகுதி: நோக்கம்.

அல்.—௧. தொழிற்பெயர்விகுதி: செயல்.
௨. தன்மையொருமைவிகுதி: நடப்பல் [=நடப்பேன்.]
௩. உடன்பாட்டுவியங்கோள்விகுதி: எனல் [=என்க.]
௪. எதிர்மறைவியங்கோள்விகுதி: கொளல் [=கொள்ளற்க.]
௫. எதிர்மறையேவல்விகுதி: உண்ணல் [=உண்ணாதே.]
௬. வினைமுதற்பொருள்விகுதி: தோன்றல் [=மகன்.]

அன்.—௧. ஆண்பாற்படர்க்கைப் பெயர்விகுதி: அறிஞன்.
௨. " வினைவிகுதி: வந்தனன்.
௩. தன்மையொருமைவிகுதி: செய்வன் [=செய்வேன்.]
௪. ஒன்றன்பாற்படர்க்கைப்பெயர்விகுதி: வலியன், கடுவன்.

ஆ.—௧. பலவின்பாற்படர்க்கைவிகுதி: நடவா.
௨. வினையெச்சவிகுதி: செய்யா [=செய்து.]

ஆல்.—௧. தொழிற்பெயர்விகுதி: ஒரால் [=ஒருவுதல்.]
௨. தெரிநிலைவினையெச்சவிகுதி: உண்டால்.
௩. குறிப்புவினையெச்சவிகுதி: அல்லால்.
௪. எதிர்மறையேவலொருமைவிகுதி: மருல் [=மறுக்காதே.]

ஆன்.—௧. ஆண்பாற்படர்க்கைப்பெயர்விகுதி: பெரியான்.
௨. " வினைவிகுதி: வந்தான்.
௩. ஒன்றன்பாற்படர்க்கைப்பெயர்விகுதி: கோட்டான்.

இ.—௧. ஆண்பாற்படர்க்கைப்பெயர்விகுதி: வில்லி.
௨. பெண்பாற்படர்க்கைப்பெயர்விகுதி: பொன்னி.
௩. ஒன்றன்பாற்படர்க்கைப்பெயர்விகுதி: நாற்காலி, பலகணி
௪. முன்னிலையொருமைவிகுதி: வருதி [வருவாய்.]
௫. வினையெச்சவிகுதி: ஓடி.
௬. வினைமுதற்பொருள்விகுதி: அலரி.
௭. செயப்படுபொருள்விகுதி: ஊருணி
௮. கருவிப்பொருள்விகுதி: மண்வெட்டி.
௯. ஏவலொருமைவிகுதி: காட்டுதி [=காட்டு.]
௧௦. * வியங்கோள்விகுதி: காட்டி [=காட்டுக.]

இர்.—௧. பலர்பாற்படர்க்கைப்பெயர்விகுதி: கேளிர், மகளிர்.
௨. முன்னிலைப்பன்மைவிகுதி: நடந்தனிர்.
௩. ஏவற்பன்மைவிகுதி: வருதிர்.

உ.—௧. வினையெச்சவிகுதி: நடந்து.
௨. தொழிற்பெயர்விகுதி: வரவு.

உம்.—௧ ஏவற்பன்மைவிகுதி: வாரும்.
௨. படர்க்கைவினைமுற்றுவிகுதி: செய்யும்.

* 'காட்டி-இகரவீற்றுவியங்கோள்' என்பது, சிந்தாமணிநச்சினார்க்கினியருரை

ங. பெயரெச்சவிகுதி: நடக்கும் (மனிதன்.)
ச. வினையெச்சவிகுதி: செய்தலும் (போனான்.)

ஐ —க. முன்னிலையொருமைவிகுதி: செய்தனை.
உ. தொழிற்பெயர்விகுதி: விலை.
ங. பண்புப்பெயர்விகுதி: தொல்லை.
ச. வினைமுதற்பொருள்விகுதி: பறவை.
ரு. செயப்படுபொருள்விகுதி: தொடை.
சா. கருவிப்பொருள்விகுதி: படை.

கு.—க. பண்புப்பெயர்விகுதி: நன்கு.
உ. பிறவினைவிகுதி: [=போகச்செய்.]
ங. தொழிற்பெயர்விகுதி: போக்கு [=போதல்.]
ச. தன்மையொருமைவிகுதி: உண்கு [=உண்பேன்.]

கை.—க. தொழிற்பெயர்விகுதி: வருகை.
உ. முறைப்பெயர்விகுதி: தங்கை.

சி.—க. பண்புப்பெயர்விகுதி: மாட்சி.
உ. தொழிற்பெயர்விகுதி: காட்சி.

து.—க. ஒன்றன்பாற்படர்க்கைவினைவிகுதி: நடந்தது.
உ " ப்பெயர்விகுதி, கைத்து [=கைப்பொருள்.]
ங. பிறவினைவிகுதி: நடத்து.
ச. தொழிற்பெயர்விகுதி: பாய்த்து [=பாய்தல்.]
ரு. தன்மையொருமைவிகுதி: வந்து [=வந்தேன்.]
சா. எதிர்மறைவினையெச்சவிகுதி: அல்லது.

பு.—க. பண்புப்பெயர்விகுதி: நண்பு.
உ. தொழிற்பெயர்விகுதி: படிப்பு.
ங. வினையெச்சவிகுதி: செய்பு [=செய்து.]

மார்.—க. பலர்பாற்படர்க்கைப்பெயர்விகுதி: குருமார், கன்னிமார்.
உ. பலர்பாற்படர்க்கைவினைமுற்றுவிகுதி: கொண்மார் [கொள்வார்.]

மை.—க. பண்புப்பெயர்விகுதி: நன்மை.
உ. தொழிற்பெயர்விகுதி: செய்தமை.
ங. வினையெச்சவிகுதி: செய்யாமை [=செய்யாமல்.]
ச. தன்மைப்பொருளுணர்த்தும்விகுதி: பெண்மை, பொன்மை.

வி.—க. தொழிற்பெயர்விகுதி: கேள்வி.
உ. பிறவினைவிகுதி: செய்வி.

று.—க. ஒன்றன்பாற்படர்க்கைவினைமுற்றுவிகுதி: போயிற்று.
உ. பண்புப்பெயர்விகுதி: நன்று.
ங. தன்மையொருமைவிகுதி: சென்று [=போனேன்.]
ச. பிறவினைவிகுதி: பயிற்று. (கங)

௩. இடைநிலை.

[பெயர்ப்பகுபத இடைநிலை.]

‡ ௧௪௧. இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலின்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே.

(இ - ள்.) இலக்கியம் கண்டு - (அறிவுடையோரால் நியமிக்கப்பட்ட) இலக்கியத்தைப் பார்த்து, அதற்கு - அவ்விலக்கியத்திற்கு, இலக்கணம் - (அவ்விலக்கியத்தின் அமைதியே) இலக்கணமாக, இயம்பலின் - சொல்ல வேண்டுதலால்,—பகுதி விகுதி பகுத்து-பகுதியையும் விகுதியையும் பிரித்து, இடை நின்றதை - நடுவில் ஏதேனும் நின்றால் அதனை, வினைப்பெயர் அல்பெயர்க்கு - வினையாலணையும் பெயரல்லாத பெயர்ப்பகுபதங்கட்கு இடைநிலை எனல் - இடைநிலையென்று சொல்லுக; (எ - று.)—இலக்கியம்- இலக்ஷியம், இலக்கணம் - லக்ஷணம்.

மேற்கூறப்படும் வினைப்பகுபத இடைநிலை காலங்காட்டுதல் போலப் பெயர்ப்பகுபத இடைநிலை காலங்காட்டாதாயினும் முதனிலை இறுதிநிலைகளாகிய பகுதிவிகுதிகட்கு இடையில் நிற்றலால், 'இடைநிலை' எனப்பட்டது.

* சாரியை சந்தி விகாரங்களும் பகுதிவிகுதிகளின் இடையில் நிற்பனவாயினும், அவை மேல் எடுத்துக் கூறப்படுதலால், அவை ஒழிந்ததை 'இடைநின்றதை' என்றும், மேல் வினைக்குக்கூறும் இடைநிலை வினையாலணையும் பெயர்க்கும் அமைதலால் 'வினைப்பெயரல்பெயர்க்கு' என்றும், 'இப் பெயரிடைநிலை வரையறுக்கப்பட்டதன்று, ஆங்காங்கு வருவது உணர்ந்து உரைக்க' என்பார் 'எனல்' என்றும் கூறினர்.

(உ-ம்.) அறிஞன், கவிஞன், இளைஞன், பகைஞன்...ஞகர இடைநிலை.
இடைச்சி, வலைச்சி, புலைச்சி ...சகர இடைநிலை.
பொருநன், செய்குநன் ...நகர இடைநிலை.

இடைநிலை கூறுபவர்போல, இலக்கிய இலக்கணங்களின் தன்மையையும் இச்சூத்திரத்துள் விளக்கினர். (௧௪)

வினைப்பகுபத இடைநிலை - ௯.

[இறந்தகால இடைநிலை - ௪.]

‡ ௧௪௨. தடறவொற் றின்னே யைம்பால் மூவிடத்து
இறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.

(இ - ள்.) த ட ற ஒற்று - தகர டகர றகர மெய்களும், இன் - இன் என்பதும்,—ஐம் பால் மூ இடத்து-ஐந்து பால்களிலும் மூன்று இடங்களி

---

* 'சந்திவகையானும் பொதுச்சாரியைவகையானும் முடியாவழி இவ்வாறு வருவன இடைநிலை யெனக் கொள்க. என்றது, பழையவுரை.

லும், இறந்தகாலம் - இறந்தகாலத்தை, தரும் - காட்டுகின்ற, தொழில் - வினைப்பகுபதங்களின், இடைநிலை - இடைநிலைகளாம்; (எ-று.)—ஐம்பால்- ஆண்பால் முதலியன, மூவிடம் - தன்மை முதலியன.

(உ-ம்.) நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது. நடந்தன: நடந்தேன், நடந்தேம்: நடந்தாய், நடந்தீர்; உண்டான்;சென்றன்;உறங்கினன்.

'இன்' இடைநிலை - 'சொல்லியது' எனக் கடைகுறைந்தும்;' சொன்னது' என முதல்குறைந்தும் வரும். (கடு)

[நிகழ்கால இடைநிலை - ௩]

‡ கசங. ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழு தறைவினை யிடைநிலை,

(இ - ள்.) ஆநின்று கின்று கிறு - இம் மூன்றும்,—மூ இடத்தின் ஐம் பால் - மூன்று இடங்களிலும் ஐந்து பால்களிலும், நிகழ் பொழுது - நிகழ் காலத்தை, அறை - காட்டுகின்ற, வினை - வினைப்பகுபதங்களின், இடைநிலை - இடைநிலைகளாம்; (எ - று.)—அறைதல் - சொல்லுதல்: இங்கே, குறித்தல்;வருஞ்சூத்திரத்தில் இசைத்தலென்பதும் அது: இது-இலக்கணை.

(உ - ம்.) நடவாநின்றன், நடக்கின்றன், நடக்கிறன்.

[எதிர்கால இடைநிலை - உ.]

‡ கசச. பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழுது
இசைவினை யிடைநிலை யாமிவை சிலவில.

(இ - ள்.) ப வ - பகரமெய்யும் வகரமெய்யும்,—மூ இடத்து ஐம்பால்- மூன்று இடங்களிலும் ஐந்து பால்களிலும்,எதிர் பொழுது-எதிர்காலத்தை, இசை - காட்டுகின்ற,வினை - வினைப்பகுபதங்களின்,இடைநிலை ஆம்-இடைநிலைகளாம்; இவை - இந்த மூன்றுகால இடைநிலைகளும்,—சில - சில வினைப்பகுபதங்கட்கு, இல - இல்லை [வாரா]; (எ - று.)

(உ - ம்.) நடப்பான், வருவான்.

'இவைசிலவில'என்றதனுல், சில வினைப்பகுபதங்களில்விகுதியாவது, பகுதிவிகாரப்பட்டாவது, வேறு இடைநிலையாவது காலங்காட்டுமென்பது பெறப்பட்டது; அவற்றை பின்வருஞ் சூத்திரத்திலும் அதன் உரையிலும் காண்க. (கஎ)

[காலங்காட்டும் விகுதி.]

‡ கசரு. றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவும் கவ்வோ டெதிர்வும்மின் னேவல்
வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தம்
செலவொடு வரவும் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

(இ-ள்.) றவ்வொடு உகரம் உம்மை - றகரமெய்யோடுகூடிய உகரமும் உம்மும் [று, றும் என்னும் விகுதிகள்], நிகழ்பு அல்லவும்-நிகழ்காலம்ஒழிந்த இறந்தகால எதிர்காலங்களையும்; தவ்வொடு- தகரமெய்யோடுகூடியஉகரமும் உம்மும் [து, தும் என்பன], இறப்பும் எதிர்வும் - இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும்; டவ்வொடு-டகரமெய்யோடு கூடிய உகரமும் உம்மும் [டு, டும் என்பன], கழிவும் - இறந்தகாலத்தையும்; கவ்வோடு - ககரமெய் யோடுகூடிய உகரமும் உம்மும் [கு, கும் என்பன], எதிர்வும் - எதிர்காலத் தையும்; மின் - மின்விகுதியும், ஏவல் - மற்றை ஏவல் விகுதிகளும், வியங் கோள்-வியங்கோள்விகுதிகளும், இ - இகரவிகுதியும், மார்-மார் விகுதியும், எதிர்வும் - எதிர்காலத்தையும்; ப அந்தம்-பகரவிகுதி, செலவொடு வரவும் - இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும்; செய்யும்-செய்யுமென்னும் வாய் பாட்டுமுற்றின் விகுதி, நிகழ்பு எதிர்வும்-நிகழ்காலத்தையும்எதிர்காலத்தை யும், எதிர்மறை - எதிர்மறை ஆகாரவிகுதி, மும்மையும்-மூன்றுகாலங்களை யும், எற்கும் - ஏற்றுவரும்: ஈங்கு - (மேற்சூத்திரத்தில்) "இவை சிலவில" என்றவைகளுள்; (எ - று.)

'உகர உம்மை' என்பதனைத் தவ்வொடு,டவ்வொடு,கவ்வோடுஎன்பவற் றோடும் கூட்டுக. 'அந்தம்' என்பதனை எல்லாவற்றிலும் ஒட்டிக்கொள்க.

அந்தம், ஈறு, விகுதி என்பன - ஒருபொருட் சொற்கள். பாந்தம் - ப + அந்தம்: பகரமாகிய விகுதி; வடமொழிப்புணர்ச்சி, தீர்க்கசந்தி.

இங்குக்காட்டிய விகுதிகளுள் று து டு கு என்பவை - தன்மையொரு மைக்கும், றும் தும் டும் கும் என்பவை - தன்மைப்பன்மைக்கும், மின் - ஏவற்பன்மைக்கும், ஏவல் - முன்னிலைக்கும், வியங்கோள்-ஐம்பால்மூவிடங் கட்கும், இ - முன்னிலையொருமைக்கும், மார் ப என்பவை - படர்க்கைப் பலர்பாலுக்கும், உம் - பலர்பாலொழிந்த நான்குபால்கட்கும், ஆ - படர்க் கைப் பலவின்பாலுக்கும் உரியனவாதல், மேல் வினையியலில் விளங்கும். 'ஏவல்'என்றதில், பகுதிமாத்திரமாய் நிற்கின்றஏவலொருமைச்சொற்களும் அடங்கும்.

றவ்வொடுகரவும்மீறும்,தவ்வொடுகரவும்மீறும்,பாந்தமும்இறந்தகாலத் தையும் எதிர்காலத்தையும் ஏற்கும் எனத் தொகுத்துக்கூறாமல், இவ்வாறு வகுத்துக் கூறினார்: எளிதில் விளங்கவேண்டி யென்க.

இகரவிகுதி தனித்து இயலாமையால் யாதாயினும் ஓர்மெய்யினை ஊர் ந்து வரு மென்பதும், அம்மெய் காலங்காட்டா தென்பதும்,அம்மெய்காலங் காட்டின்இகரவிகுதிகாலங்காட்டாதென்பதும்; செய்யுமென்னும்வாய்பாட் டுப்பெயரெச்சமும் இடைநிலையின்றி ஈறு காலங்காட்டுவ தாயினும், அது எதிர்காலங்காட்டுமென மேல் வினையியலிற் கூறுதலால், இங்கு 'செய்யும்' என்று எடுத்தோதியது முற்றென்பதும் பெறப்பட்டன.

(உ - ம்.) சென்று [சென்றேன்], சென்றும் [சென்றோம்] ... இறப்பு.
சேறு [செல்வேன்], சேறும் [செல்வோம்] ... எதிர்வு.

வந்து [வந்தேன்], வந்தும் [வந்தோம்] ... இறப்பு.
வருது [வருவேன்], வருதும் [வருவோம்] ... எதிர்வு.
உண்டு [உண்டேன்], உண்டும் [உண்டோம்] ... இறப்பு.
உண்து [உண்பேன்], உண்தும் [உண்போம்] ... எதிர்வு.

உண்மின், உண்ணீர், உண்ணும், உண்ணுய், உண்
வாழ்க, வாழிய, வாழியர்
சேறி [செல்வாய்]
உண்மார் [உண்பார்.] } எதிர்வு.

உண்ப [உண்டார்], என்ப [என்ருர்] ... செலவு.
உண்ப [உண்பார்], என்ப [என்பார்] ... வரவு.

உண்ணும் நிகழ்பு, எதிர்வு.
உண்ணு இறப்பு, நிகழ்பு, எதிர்வு.

சென்றி, செல்லாநின்றி என வருமாயின், இடைநிலை காலங்காட்டிய இகரவீற்றனவாம்.

'இவை சிலவில' என்றவைகளுள்ளே காலங்காட்டும் விகுதிகளைமாத்திரம்சொல்லிக் காலங்காட்டும் பகுதிகளையும் பிறஇடைநிலைகளையும்சொல்லாமையால், 'அவை சிறுபான்மையன: வந்த இடங்களிற் கண்டுகொள்க' என்ருராயிற்று; அவை வருமாறு:—

து டு று என்னும் மூன்று உயிர்மெய் யீற்றுச் சில பகுதிகள், தம்ஒற்று இரட்டி இறந்தகாலம் காட்டும்.

(உ - ம்.) புக்கான், தொக்கான்; போட்டான், விட்டான்; உற்ருன், பெற்ருன்.

யகரவொற்றிடைநிலை இறந்தகாலமும்: ஆகிடந்து ஆவிருந்துஎன்னும் இரண்டுஇடைநிலைகளும்நிகழ்காலமும்: ககரவொற்றிடைநிலைஎதிர்காலமும் காட்டும்.

(உ - ம்.) போயது; உண்ணுகிடந்தான், உண்ணுவிருந்தான்; செய்கேன்.

இசின் என்பது இறந்தகால இடைநிலையாயும், மகரமெய்யும், மன் என்பதும் எதிர்கால இடைநிலைகளாயும் செய்யுளில் வரும்.

(உ - ம்.) என்றிசினேர்; என்மர், என்மனர்.

'ஈங்கே' என்ற மிகையால், காண்டும் [காண்போம்] என 'டும்'விகுதி எதிர்காலங்காட்டுதலையும், வருதி [வருகின்ருய்]எனஇகரவிகுதிநிகழ்காலங் காட்டுதலையும், பெயரெச்ச வினையெச்சங்களில் இடைநிலையின்றி விகுதி காலங்காட்டுதலையும் அமைத்துக்கொள்க.

"பகுதிவிகுதி" என்னுஞ் சூத்திரம் முதல்இச்சூத்திரம்வரையிலும்பகுபதங்களை மேலோர் முடித்தவாறுமுடித்துக்காட்டியது 'முடித்துக்காட்டல்' என்னும் உத்தி. முன்னைத்தமிழ்நூல்களில் இல்லாதவைகளைஇவ்வாசிரியர் தாமே பகாப்பதம் பகுபத மென முன்னேநாட்டி இச்சூத்திரம்வரையிலும்

அவற்றிற்கு இலக்கணங்கூறி நிறுத்தியது 'தானுட்டித்தனுதுநிறுப்பு' என்னும் மதம். (தான் நாட்டித் தனுது நிறுப்பு-தானே ஒரு பொருளைஎடுத்துத் தாபித்து அதனை இடந்தோறும் நிலைநிறுத்துதல்.) (௧௮)

வடமொழி ஆக்கம்.

[ஆரியமொழி தமிழில் வருதல்.]

‡ ௧௪௬. இடையில் நான்கு மீற்றி லிரண்டும்
அல்லா வச்சை வருக்க முதலீறு
யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்
பொதுவெழுத் தொழிந்த நாலேழுந் திரியும். *

(இ - ள்.) இடையில் நான்கும்-(ஆரியமொழியுள் அச் என்று வழங்குகின்ற உயிர்பதினுறனுள்)நடுவிலுள்ள (𑌋 𑍠 𑌌 𑍡 என்னும்) நாலெழுத்துக்களும், ஈற்றில்-கடையிலுள்ள, இரண்டும்-(𑌅𑌂 𑌅𑌃 என்னும்) இரண்டெழுத்துக்களும், அல்லா - நீங்கலாகிய, அச்சு - (அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்து) உயிர்களும்; ஐ வருக்கம்-(ஹல் என்று வழங்கும் மெய் முப்பத்தேழுள் க ச ட த ப என்னும்) ஐந்துவருக்கங்களினுடைய, முதல் - முதலிலுள்ள (க ச ட த ப என்னும்) ஐந்தும், ஈறு-கடையிலுள்ள (ங ஞ ண ந ம என்னும்) ஐந்தும், ய ஆதி நான்மை-ய ர ல வ என்னும்நான்கும், ள - ளகரமும், ஆகும் - ஆகிய, ஐ ஐ எழுத்து - இருபத்தைந்து எழுத்துக்களும், பொது-(ஆரியத்திற்கும் தமிழிற்கும்)பொதுவெழுத்துக்களாம்; ஒழிந்த - அவை யொழிந்த, நாலேழும் - இருபத்தெட்டு எழுத்துக்களும், திரியும் - (ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்களாய்த் தமிழில் தமக்கு ஏற்ற பொதுவெழுத்துக்களாகத்) திரிந்துவரும்; (எ - று.)

மேல் 'ஏழாமுயிர்' எனவிதந்துகூறுவராதலால்,'இடையில்நான்கு'என விதவாது கூறினர். ஐயைந்து பொதுவெழுத்து எனவே, நாலேழ் சிறப்பெழுத்து என்பது பெறப்பட்டது.சிறப்பெழுத்துத் திரியுமெனவே,பொதுவெழுத்து இயல்பாயும் தமக்கு ஏற்ற விகாரமாயும் வரு மென்றதாயிற்று.

ஆரியபாஷையுள் உயிரெழுத்துப் பதினுருவன:—𑌅 𑌆 𑌇 𑌈 𑌉 𑌊 𑌋 𑍠 𑌌 𑍡 𑌏 𑌐 𑌓 𑌔 𑌅𑌂 𑌅𑌃.

இவற்றுள், 𑌋 𑍠 𑌌 𑍡 𑌅𑌂 𑌅𑌃 என்னும் ஆறும் - ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள்; அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் மற்றைப்பத்தும்-ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்துக்கள். (தமிழிலுள்ள எகர ஒகர வுயிர்கள் வடமொழியில் இல்லை.)

---

* இங்குக் கூறிய வடமொழி யெழுத்துக்களின் தொகை வடமொழியிலக்கண நூலாருள் ஒருசாரார் கொள்கையைத்தழுவிய தென்றும்,பிரசித்தமாக வழங்குகின்ற பாணிநிவியாகரணத்துக்கு ஒத்த தன்றென்றும் அறிக.

மெய்யெழுத்து முப்பத்தேழாவன:—𑌕 𑌖 𑌗 𑌘 𑌙, 𑌚 𑌛 𑌜 𑌝 𑌞, 𑌟 𑌠 𑌡 𑌢 𑌣, 𑌤 𑌥 𑌦 𑌧 𑌨, 𑌪 𑌫 𑌬 𑌭 𑌮, 𑌯, 𑌰, 𑌲 𑌵 𑌶 𑌷 𑌸 𑌹 𑌳 𑌕𑍍𑌷, ᳵ𑌕 ᳶ𑌪.

இவற்றுள், 𑌖 𑌗 𑌘 𑌛 𑌜 𑌝 𑌠 𑌡 𑌢 𑌥 𑌦 𑌧 𑌫 𑌬 𑌭 𑌶 𑌷 𑌸 𑌹 𑌕𑍍𑌷 ᳵ𑌕 ᳶ𑌪 என்னும்இருபத்திரண்டும்-ஆரியத்திற்குச்சிறப்பெழுத்துக்கள்; க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ள என்னும்மற்றைப்பதினைந்தும்-ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்துக்கள். (தமிழிலுள்ளழகர றகர னகரமெய்கள் வடமொழியில் இல்லை.)

ஐவருக்கமாவன:—
கவர்க்கம்— 𑌕 𑌖 𑌗 𑌘 𑌙
சவர்க்கம்— 𑌚 𑌛 𑌜 𑌝 𑌞
டவர்க்கம்— 𑌟 𑌠 𑌡 𑌢 𑌣
தவர்க்கம்— 𑌤 𑌥 𑌦 𑌧 𑌨
பவர்க்கம்— 𑌪 𑌫 𑌬 𑌭 𑌮

ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவாகவுள்ள எழுத்தா லாகி விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்சமம் எனப்படும்.

(உ - ம்.) அமலம், கமலம், காரணம், குங்குமம்.

ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும், பொதுவும் சிறப்பு மாகிய ஈரெழுத்தா லு மாகித் திரிதல்முதலிய விகாரம் பெற்றுத் தமிழில்வந்துவழங்கும் வடமொழி, தற்பவம் எனப்படும்.

(உ - ம்.) 𑌸𑍁𑌖𑍀 - சுகி, 𑌭𑍋𑌗𑍀 - போகி, 𑌶𑍁த்தி꞉ சுத்தி இவை - சிறப்பெழுத்தாலாகிவிகாரம்பெற்றுத்தமிழில்வந்துவழங்குந்தற்பவமொழி

𑌹𑌰𑌿꞉ - அரி, 𑌹𑌰꞉ - அரன், 𑌜𑌯꞉ - சயம், 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 - ஞானம் இவை - ஈரெழுத்தாலுமாகி விகாரம்பெற்றுத் தமிழில்வந்துவழங்குந்தற்பவமொழி.

[ஆரியவெழுத்துத் தமிழில் விகாரப்படுதல்.]

‡ கசஎ. அவற்றுள்,

ஏழாமுயி ரிய்யும் இருவும் ஐவருக்கத்து
இடையில் மூன்று மவ்வம் முதலும்
எட்டே யவ்வும் முப்பது சயவும்
மேலொன்று சடவும் இரண்டு சதவும்
மூன்றே யகவும் ஐந்திரு கவ்வும்
ஆவீ றையும் ஈயீ றிகரமும்.

(இ - ள்.) அவற்றுள் - முன்னே "திரியும்" என்ற சிறப்பெழுத்துக்களுள், ஏழ் ஆம் உயிர் - ஏழாமுயிரானது [𑌋], இய்யும் இருவும்-இகரமாகவும் இருவாகவும்; ஐ வருக்கத்து - ஐந்து வர்க்கங்களிலும், இடையில் மூன்றும்-நடுநின்ற மும்மூன்று எழுத்துக்களும், அவ் அவ் முதலும் - அந்தந்த வருக்கத்தின் முதலெழுத்துக்களாகவும்; எட்டு - எட்டாவது மெய் [𑌶], யவ்வும் - (சகரமாகத் திரிதல் மாத்திரமே யன்றி) யகரமாகவும்; முப்பது -

முப்பதாம்மெய் [ஶ], ச யவும்-(மொழிமுதலிறுதிகளில்) சகரமாகவும் (நடுவில்) சகரமாகவும் யகரமாகவும்; மேல்ஒன்று-முப்பத்தொன்றும் மெய் [ஷ] ச டவும் - (முதலில்) சகரமாகவும் (இடை கடைகளில்) டகரமாகவும்; இரண்டு - முப்பத்திரண்டாம் மெய் [ஸ], ச தவும் - (முதலில்) சகரமாகவும் (இடையில்)சகரமாகவும் தகரமாகவும்;மூன்று-முப்பத்துமூன்றும்மெய்[ஹ], அ கவும்-(முதலில்) ஏறிநின்ற உயிராகவும் (இடையில்) ககரமாகவும்;ஐந்து-முப்பத்தைந்தாம்மெய் [க்ஷ], இருகவ்வும்-இரண்டு ககரமாகவும்; ஆ ஈறு - (பொதுவெழுத்துக்களிலே) மொழியிறுதி ஆகாரமானது, ஐயும்-ஐகாரமாகவும்; ஈ ஈறு-மொழியிறுதி ஈகாரமானது, இகரமும்-இகரமாகவும்,(திரியும்).

'மூன்றேஅகவும்' என்றதில் அஎன்றது. மற்றஉயிர்கட்கும் உபலக்ஷணம்.

(உ - ம்.) ऋ இ—ऋषभ. இடபம்
இரு—वृत्तः - விருத்தம்
ஏழாம் உயிர் - இ, இரு எனத் திரிந்தது.

- ख க—नखं ... நகம் (உகிர்)
- ग नागः ... நாகம் (பாம்பு)
- घ मेघं ... மேகம்.
- छ ச—छविः ... சவி (ஒளி.)
- ज विजयः ... விசயம்.
- झ झटिति ... சடிதி.
- ठ ட—पीठं ... பீடம்.
- ड जडं ... சடம்.
- ढ गूढं ... கூடம். (மறைவானது.)
- थ த—स्थलं ... தலம்.
- द दिनं ... தினம்.
- ध धरा ... தரை.
- फ ப—फलं ... பலம் (பயன்.)
- ब बलं ... பலம் (வலிமை,)
- भ भारः ... பாரம்.

ஐந்து வருக்கத்திலும் இடைநின்ற மும்மூன்று எழுத்துக்களும்-அவ்வவ் வருக்கத்தின் முதலெழுத்தாகத் திரிந்தன.

- ज ய—जमदग्नि ... யமதங்கி: [மொழிமுதல்.]
- पंकजं ... பங்கயம். [மொழியிடை.]

ஜ - யகரமாகத் திரிந்தது.

- श ச—शंकरः ... சங்கரன். [மொழிமுதல்.]
- आशा ... ஆசை. [மொழியிறுதி.]
- पाशः ... பாசம் [மொழியிடை.]
- ய—देशः ... தேயம். [மொழியிடை.]

ஶ - சகரமாகவும், யகரமாகவும் திரிந்தது.

- ष ச—षण्मुखः ....சண்முகன் [மொழிமுதல்]
- ட—विषयं .... விடயம். [மொழியிடை கடை.]
- भाषा .... பாடை. [மொழியிடை கடை.]

ஷ - சகரமாகவும், டகரமாகவும் திரிந்தது.

ஸ ச—ஸஹா	.... சபை.	[மொழிமுதல்.]	ஸ - சகரமாகவும், தகரமாகவும் திரிந்தது.
வாஸ:	.... வாசம்.	[மொழியிடை.]	
த ௨ாஸ:	.... மாதம்.		
ஹ உயிர்—ஹரி: ஹார:,	.... அரி ஆரம்,	[மொழிமுதல்:]	ஹ உயிராகவும், ககரமாகவும் திரிந்தது.
ஹிமம்	... இமம், ஏமம்		
க—மோஹம்	.... மோகம்.	[மொழியிடை.]	
க்ஷ க்க—வக்ஷ:	.... பக்கம்.	க்ஷ-இரண்டு ககரமாகத் திரிந்தது.	
ஆ ஐ—மாலா	.... மாலை	ஆகாரவீறு ஐகாரமாகத் திரிந்தது.	
ஈ இ—புரீ	.... புரி	ஈகாரவீறு இகரமாகத் திரிந்தது.	

ஆவீற்றையும் ஐயீற்றையும் இறுதியிற்கூறியது, அவை பொதுவெழுத்தாதல் தோன்றவென்க.

பயின்றுவருவனவற்றிற்குத் திரிபுகூறி, மற்றவை வந்தவிடத்திற் காண்கவென்பார், 'இகரமுமாகும்' எனப் பயனிலைகொடுத்து முடியாமல் 'இகரமும்' என அவாய்நிலையாக முடித்தார். (அவாய்நிலையாவது-ஒருசொல் மற்றொரு சொல்லை வேண்டி நிற்பது.)

அதனால் க்ஷகரம் - இரு ககர மாதலேயன்றி, க்ஷணம்-கணம், க்ஷமா-கமை, க்ஷீரம்-கீரம், க்ஷேத்ரம்-கேத்திரம் என ஒரு ககரமாகவும்: கடாக்ஷம்-கடாட்சம், மீநாக்ஷி-மீனாட்சி என டகர சகரமாகவும்: பிக்ஷா-பிச்சைஎன இருசகரமாகவும்: க்ஷேமம்-சேமம் என ஒருசகரமாகவும் திரிந்து வருதல் முதலியன கொள்க. (௨0)

[வடமொழிவிகாரம்.]

‡ ௧௪௮. ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்கு
இய்யு மொழிமுத லாகிமுன் வருமே.

(இ - ள்.) (ஆரியமொழி தமிழில் வரும்பொழுது,—ரவ்விற்கு - ரகரத்தை முதலிலேயுடைய மொழிக்கு, அ முதல் ஆம் முக் குறிலும் - அ இ உ என்னும் மூன்று குற்றெழுத்துக்களி லொன்றும்,— லவ்விற்கு - லகரத்தை முதலிலேயுடைய மொழிக்கு, இ முதல் இரண்டும்-இ உ என்னும் இரண்டிலொன்றும்,—யவ்விற்கு-யகரத்தை முதலிலேயுடைய மொழிக்கு, இய்யும்-இகரமும்,—மொழி முதல் ஆகி-மொழிக்குமுதலாகி, முன் வரும்-(அம்மூன்றெழுத்துக்களுக்கு) முன்னே வரும்; (எ - று.)—முன் - காலமுன்.

(உ - ம்.) ரங்கம்-அரங்கம், ரத்நம் - அரதனம்: ராமன்-இராமன், ரவி - இரவி; ரோமம்-உரோமம், ரோஹிணீ-உரோகிணி எனவும்: லாபம் - இலாபம், லக்ஷணம் - இலக்கணம்: லோபம்-உலோபம், லோகம்-உலோகம் எனவும்; யமன் - இயமன், யக்ஷன் - இயக்கன் எனவும் வரும்.

இனி, சிறுபான்மை, யுத்தம் - உயுத்தம், யோகம்-உயோகம் என யகரத்துக்குமுன் உகரம் வருதலும், டம்பம் - இடம்பம் என டகரத்துக்குமுன் இகரம் வருதலும் உண்டு. (௨௧)

‡ கசகூ. இணைந்தியல் காலை யரலக் கிகரமும்
மவ்வக் குகரமும் நகரக் ககரமும்
மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற.

(இ - ள்.) இணைந்துஇயல் காலை - (ஆரியமொழியுள்இரண்டெழுத்து) இணைந்து (ஓரெழுத்தைப்போல)நடக்கும்போது,—யரலக்கு-(பின்னின்ற) யகர ரகர லகரங்கட்கு, இகரமும்—;—மவக்கு - மகர வகரங்கட்கு, உகரமும்—;—நகரக்கு - நகரத்திற்கு, அகரமும்—,—மிசை-முன்னே,|வரும்—; ரவழி - (இணைந்து முன் நின்ற) ரகரத்திற்குப் பின், உவ்வும்ஆம்-உகரமும் வரும்; (எ - று.)—இணைந்துவருதலை, ஸம்யுக்தாக்ஷர மென்பர்.

(உ-ம்.) காவ்யம் - .... காவியம்		
வக்ரம் - .... வக்கிரம்		யரலக்கு இகரம்.
சுக்லம் - .... சுக்கிலம்		
பத்மம் - .... பதுமம்		மவ் வக்கு உகரம்.
பக்வம் - .... பக்குவம்		
ரத்நம் - .... அரதனம்—நகரக்கு அகரம்.		
அர்த்தம்- .... அருத்தம்—ரவ்வழி உ.		

'பிற' என்றதனால், ரத்நம் - இரத்தினம், சக்ரம் - சக்கரம், வாக் - வாக்கு, விராட் - விராட்டு, ஸத் - சத்து இவை முதலாகிய தோன்றலும்; சக்தி - சத்தி, காவ்யம்-காப்பியம், பர்வதம்-பருப்பதம், ஸ்வயம்பூ-சுயம்பு, ஸ்வயம்வரம் - சுயம்வரம், சயமரம், உத்பலம் - உற்பலம், திநம் - தினம், பாபம் - பாவம், கல்பகம் - கற்பகம், ஸ்நேஹம் - சினேகம், சம்பகம்-சண்பகம், அக்நி - அங்கி, பங்க்தி - பந்தி, அஸ்த்ரம் - அச்சிரம், சூர்ணம்-சுண்ணம், க்ருஷ்ணன் - கண்ணன், கர்ணன் - கன்னன், பஸ்மம் - பற்பம், அக்ஷௌஹிணீ - அக்குரோணி, கர்மம்-கன்மம்இவைமுதலாகியதிரிதலும்; ஸ்தூலம் - தூலம், ஜ்ஞாநம் - ஞானம், ஜ்யோதி - சோதி, ஸமரம் - சமர், அமர், சமம் இவை முதலாகிய கெடுதலும் கொள்க. (உஉ)

[தமிழிற் சிறப்பெழுத்தும், பொதுவெழுத்தும்.]

‡ கருo. றனழஎ ஒவ்வு முயிர்மெய் யுயிரளபு
அல்லாச் சார்புந் தமிழ்பிற பொதுவே.

(இ - ள்.) (முதலும் சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதில்),—றனழ எ ஒவ்வும் - இவ்வைந்து முதலெழுத்துக்களும், உயிர்மெய்உயிரளபு அல்லா சார்பும் - உயிர்மெய்யும் உயிரளபெடையு மல்லாத சார்பெழுத்து எட்டும், தமிழ் - தமிழுக்கே (சிறப்பெழுத்துக்களாம்); பிற - ஒழிந்த இருபத்தேழு எழுத்துக்களும், பொது - (தமிழுக்கும் ஆரியத்துக்கும்) பொதுவெழுத்துக்களாம்; (எ - று.)—எகர ஒகரங்கள் பிராகிருதபாஷைக்கும் உரியனவாதலால், மெய்யை முற்கூறினர். (உ௩)

பதவியல் முற்றிற்று.

ந. உயிரீற்றுப்புணரியல்.

உயிரெழுத்துக்களைஇறுதியிலுடையநிலைமொழிகளோடு உயிர்முதலும் மெய்ம்முதலுமாகிய வருமொழிகள் புணரும் விதத்தைச் சொல்லும் இயல்.

[புணர்ச்சி இன்ன தென்பது.]

‡ கருக. மெய்யுயிர் முதலீ றுமிரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

(இ - ள்.) மெய் உயிர் - மெய்யையும் உயிரையும், முதல் ஈறு ஆம் - முதலும் இறுதியுமாக வுடைய, இரு பதங்களும் - (பகாப்பதம் பகுபதம் என்ற) இரண்டு பதங்களும், தன்னொடும் பிறிதொடும் - தன்னொடு தானும் பிறிதொடு பிறிதுமாய், அல்வழி வேற்றுமைபொருளின் - அல்வழிப்பொருளினலாவது வேற்றுமைப்பொருளினலாவது, பொருந்து உழி - பொருந்துமிடத்து,—நிலை வரு மொழிகள் - நிலைமொழியும் வருமொழியும், இயல்பொடு விகாரத்து - இயல்பாகவாயினும் விகாரமாகவாயினும், இயைவது - பொருந்துவது,—புணர்ப்பு - (முன்சொல்லப்பட்ட) புணர்ச்சியாம்; (எ-று.)

உயிரீற்றின்முன் உயிர்முதல்மொழி புணர்தல், உயிரீற்றின்முன்மெய்ம்முதல்மொழி புணர்தல், மெய்யீற்றின் முன் உயிர்முதல்மொழி புணர்தல், மெய்யீற்றின் முன் மெய்ம்முதல்மொழி புணர்தல் எனப் புணர்ச்சி நான்கு வகையாம்.

(உ - ம்.) மெய்ம்முத லுயிரீறு - மணி.	மணி + அழகு - உயிர்முன் உயிர்.
உயிர்முத லுயிரீறு - அது.	நிலம் + வலிது - மெய்ம்முன்மெய்.
உயிர்முதல் மெய்யீறு-அவன்	மணி + பெரிது-உயிர்முன் மெய்.
மெய்ம்முதல் மெய்யீறு-கல்.	நிலம் + அழகிது-மெய்ம்முன்உயிர்.

தன்னொடு தான் பொருந்துதலாவது - பகுபதத்தோடு பகுபதமும், பகாப்பதத்தோடுபகாப்பதமும் புணர்தல். பிறிதொடுபிறிதுபொருந்துதலாவது-பகுபதத்தோடு பகாப்பதமும், பகாப்பதத்தோடுபகுபதமும்புணர்தல்.

(உ - ம்.) அவன்	+ வந்தான்	—பகுபதத்தோடு பகுபதம்.
பொன்	+ கலம்	—பகாப்பதத்தோடு பகாப்பதம்.
பொன்னன்	+ கை	—பகுபதத்தோடு பகாப்பதம்.
கிளி	+ அழகிது	—பகாப்பதத்தோடு பகுபதம்.

'உயிர்மெய்முதலீறும்'என்றும், 'வேற்றுமையல்வழி'என்றுங்கூறினல், உயிர்மெய்யென்னும் ஓரெழுத்தென்றும் வேற்றுமையல்லாதவழியென்றும் பொருள்பட்டு மயங்கவைத்த லென்னும் குற்றத்துக்கு இடமாமாதலால், அங்ஙனங் கூறாது, 'மெய்யுயிர்' என்றும், 'அல்வழிவேற்றுமை'என்றும்மாற்றிக் கூறினர்,

பொருட்புணர்ச்சி.

[வேற்றுமை, அல்வழி.]

‡ கரு௨. வேற்றுமை யைம்முத லாறு மல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
* தழுவு தொடரடுக் கெனவீ ரேழே.

(இ - ள்.) வேற்றுமை-வேற்றுமை புணர்ச்சியாவது,—ஐ முதல் ஆறு ஆம் - ஐ ஆல் கு இன் அது கண் என்கின்ற ஆறு உருபுகளும் (இடையில் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரப் பதங்கள்) பொருந்தும் தொடர்ச்சியாம்; அல்வழி-அல்வழிப்புணர்ச்சியாவது,—தொழில்-வினைத்தொகையும், பண்பு - பண்புத்தொகையும், உவமை-உவமைத்தொகையும், உம்மை-உம்மைத்தொகையும், அன்மொழி - அன்மொழித்தொகையும், எழுவாய் - எழுவாய்த்தொடரும், விளி - விளித்தொடரும், (ஈர்) எச்சம்-பெயரெச்சத் தொடரும் வினையெச்சத்தொடரும், (ஈர்) முற்று - தெரிநிலைவினைமுற்றுத் தொடரும் குறிப்புவினைமுற்றுத்தொடரும், இடை-இடைச்சொல் தொடரும், உரி - உரிச்சொல்தொடரும், அடுக்கு - அடுக்குத்தொடரும், என - என்று, ஈர் எழ் - பதினான்காம்; தழுவு தொடர்-(இவையெல்லாம்) தழுவுந் தொடர்களாம்; (எ - று.)—அல்வழி - வேற்றுமையல்லாத வழி.

'ஈர்' என்பதை 'முற்று' என்பதனோடும் கூட்டுக.

ஐ முதலிய ஆறுவேற்றுமையுருபுகள் இடையில் மறைந்துநிற்க நிலைமொழி வருமொழியோடு புணர்வது-வேற்றுமைத்தொகைநிலை யென்றும், அவ்வுருபுகள் வெளிப்பட்டுநிற்கப் புணர்வது - வேற்றுமைத்தொகாநிலை [விரி] யென்றும் கூறப்படும். அல்வழியில் வினைத்தொகை முதலிய ஐந்தும், தொகைநிலைகள்; மற்றை ஒன்பதும், தொகாநிலைகள். இவற்றின்இலக்கணத்தையெல்லாம், மேற் பொதுவியலில் ௧0-ஆஞ் சூத்திரமுதல் ௧௬-சூத்திரங்களில் விவரமாகக் காணலாம்.

[வேற்றுமைப்புணர்ச்சி.]

தொகை.	(உ - ம்.)	விரி.	
நீர் குடித்தான்	[ஐ]	நீரைக் குடித்தான்.	(உ)
கல் எறிந்தான்	[ஆல்]	கல்லால் எறிந்தான்.	(ங)
மன்னன் மகன்	[கு]	மன்னனுக்கு மகன்.	(௪)
மலை வீழருவி	[இன்]	மலையின் வீழருவி.	(ரு)
பொன்னன் கை	[அது]	பொன்னது கை.	(சு)
வீடு புகுந்தான்	[கண்]	வீட்டின்கண் புகுந்தான்.	(எ)

* 'தொழில் பண்பு உவமை உம்மை அன்மொழி எழுவாய் விளிஈரெச்சம் முற்று இடை உரி தழுவுதொடர்' என்பதற்கு-வினைத்தொகை முதலிய பதின்மூன்றும் (தமக்கு ஏற்கும் பெயர்வினைகளோடு) தொடரும் தொடர்ச்சியென்று உரைத்தல், நேர்,

[அல்வழிப்புணர்ச்சி.]

க. வினைத்தொகை ...கொல்யானை [கொன்ற யானை, கொல்கின்ற யானை, கொல்லும் யானை.]		தொகைநிலைத் தொடர் - ரு.
உ. பண்புத்தொகை ...கருங்குதிரை [கருமையாகிய குதிரை.]		
இருபெய ரொட்டுப் பண்புத்தொகை } பனைமரம் [பனையாகிய மரம்.]		
ங. உவமைத்தொகை ...மதி முகம் [மதிபோன்றமுகம்.]		
ச. உம்மைத்தொகை ...கபிலபரணர் [கபிலனும் பரணனும்.]		
ரு. அன்மொழித்தொகை—கருங்குழல் [கருமையாகிய கூந்தலையுடையவள்] (வந்தாள்.)		
சு. எழுவாய்த்தொடர் ...பொன்னன் வந்தான்.		தொகாநிலைத் தொடர் - கூ.
எ. விளித்தொடர் ...பொன்னா! வா.		
அ. பெயரெச்சத்தொடர் ...வந்த மன்னன், பெரிய மன்னன்.		
கூ. வினையெச்சத்தொடர் ...வந்து போனான், மெல்லப்போனான்.		
க0. தெரிநிலைவினைமுற்றுத்தொடர் ...வந்தான் பொன்னன்.		
கக. குறிப்புவினைமுற்றுத்தொடர் ...குழையன் கொற்றன்.		
கஉ. இடைச்சொல்தொடர் ...மற்றொன்று.		
கங. உரிச்சொல்தொடர் ...நனி பேதை.		
கச. அடுக்குத்தொடர் ...பாம்புபாம்பு.		

இவை தழுவுதொடர் எனவே, அவ்விருவழியிலும் தழாத்தொடரும் சில உள என்றாராயிற்று. 'நீர்க்குடம்' என்பது - நீரையுடைய குடம் என விரிதலால், நீர் என்பது உடைய என்பதைத் தழுவிக் குடம் என்பதைப் பொருளால் தழுவாமல் தொடர்ந்ததனால், இது-தழாத்தொடராகிய வேற்றுமைத்தொகை; [இவ்வாறு தொக்குவருவது, உருபும்பயனும் உடன்தொக்க தொகை எனப்படும்: உருபும்பொருளு முடன்தொக்க தொகை யெனினும் ஒக்கும்.] 'மரத்தைச் சாத்தன் வெட்டினான்' என்பதில், மரத்தை என்பது வெட்டினான் என்பதைத் தழுவிச் சாத்தன் என்பதைப்பொருளால் தழுவாமல் தொடர்ந்ததனால், இது - தழாத்தொடராகிய வேற்றுமைவிரி. "சுரையாழ அம்மி மிதப்ப" என்பது சுரை மிதப்ப அம்மி ஆழ எனக் கூட்டப்படுதலால், சுரை என்பது ஆழ என்பதையும் அம்மி என்பதுமிதப்ப என்பதையும் பொருளால் தழுவாமல் தொடர்ந்தன. இவை-தழாத்தொடராகிய அல்வழிப்புணர்ச்சி. தழாத்தொடராவது-நிலைமொழியானது வருமொழியோடு பொருட்பொருத்தமுறத் தழுவாத தொடர். பொருட்பொருத்தமுறத்தழுவிய தொடர் - தழுவுதொடர்.

உருபும் பயனு முடன் தொக்க தொகை.

இரண்டாம் வேற்றுமை.	நீர்க்குடம்	[நீரையுடையகுடம்.]
மூன்றாம் வேற்றுமை.	பொற்குடம்	[பொன்னாலாகிய குடம்]
நான்காம் வேற்றுமை.	நோய்மருந்து	[நோய்க்குத்தரும் மருந்து.)

ஐந்தாம் வேற்றுமை. மலையருவி [மலையினின்றுவிழும் அருவி.]
ஆறும் வேற்றுமை. ——— (வந்தவழிக் கண்டுகொள்க.)*
ஏழாம் வேற்றுமை. காட்டுப்புலி [காட்டில்உள்ள புலி.]

எட்டுவேற்றுமைகளுள் முதல்வேற்றுமைக்கும் எட்டாம்வேற்றுமைக்கும் பெயரும் பெயரின் விகாரமுமே யன்றித் தமக்கென வேறுஉருபு இல்லாமையால், அவ்விரண்டையும் 'எழுவாய்', 'விளி' என்றுஅல்வழியிற்சேர்த்து, அவைஒழிந்தஆறையுமே வேற்றுமையென்றார். அடுக்குந்தழுவுதொடராயினும், ஒருசொல்லே அடுக்கிவருதலால் மற்றையவைபோலத் தழுவுதொடரன்றென்பதை அறிவித்தற்கு, அதனை இறுதியில் வைத்தார். (உ)

எழுத்துப்புணர்ச்சி.

[இயல்பு புணர்ச்சி.[

‡ கருரு. விகார மனைத்தும் மேவல தியல்பே.

(இ - ள்.) விகாரம் அனைத்தும் - (வருஞ்சூத்திரத்திற்சொல்லப்படும்) விகாரவகை முழுவதையும், மேவலது - அடையாதது,—இயல்பு - இயல்புபுணர்ச்சியாம்; (எ - று.)

(உ-ம்.) மணி + பெரிது = மணிபெரிது. புகழ் + அழகு = புகழழகு. (௧)

[விகாரப்புணர்ச்சி.]

‡ கருசு. தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிமூ விடத்து மாகும்.

(இ - ள்.) தோன்றல்-(எழுத்தாவது சாரியையாவது) தோன்றுதலும், திரிதல்-(ஓர்எழுத்து மற்றோர் எழுத்தாக) வேறுபடுதலும், கெடுதல்-(உள்ள எழுத்துக்) கெடுதலும்,—விகாரம் - விகாரப்புணர்ச்சியாம்; மூன்றும்-இம்மூவகைவிகாரங்களும்,—மொழி - நிலைமொழிவருமொழிகளின், மூ இடத்தும்-(முதல் இடை கடை என்னும்) மூன்றுஇடத்திலும், ஆகும் - வரும்; (எ-று.)

(உ - ம்) பூ + கொடி = பூங்கொடி = வருமொழிமுதலில் மெய்தோன்றிற்று.
அல் + திணை = அஃறிணை — வருமொழிமுதலிலும், நிலைமொழி யீற்றிலும் உள்ள மெய்கள் திரிந்தன.
நிலம் + வலயம் = நிலவலயம் — நிலைமொழி யீற்றுமெய் கெட்டது.
ஆறு + பத்து = அறுபது — நிலைமொழி முதலுயிர் திரிந்து வருமொழியிடையொற்றுக் கெட்டது.

* தசரதனது மகனாகிய ராமனென்பது 'தசரதராமன்' என ஆறும்வேற்றுமை யுருபும் பொருளும்உடன் தொக்கு வழங்குதல்காண்க. சடகோபரந்தாதி (உ௧) "இராவணன்றன் பொன்முடியாற் கடல்தூர்த்த வில்லான் பொருநைத்துறைவன்" என்பது இராமபிரானது அடியவராகிய ஆழ்வார் எனப் பொருள்படுதலும் அது.

பனை + காய்=பனங்காய்—நிலைமொழி யீற்றுயிர் கெட்டு 'அம்' சாரியைதோன்றி அதன்ஈறு திரிந்தது.

ஒன்பது + பத்து = தொண்ணூறு—நிலைமொழி வருமொழிகள்மூன்றிடத்தும் [முழுவதும்] விகாரப்பட்டன. (௪)

[செய்யுள்விகாரம்.]

‡ ௧௫௫. வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி.

(இ - ள்.) வலித்தல்-(மெல்லொற்றை)வல்லொற்றாக்கலும்,மெலித்தல்-(வல்லொற்றை) மெல்லொற்றாக்கலும்,நீட்டல்-(குற்றெழுத்தை) நெட்டெழுத்தாக்கலும்,குறுக்கல் -.(நெட்டெழுத்தைக்)குற்றெழுத்தாக்கலும்,விரித்தல் - (இல்லாத எழுத்தை)வருவித்தலும்,தொகுத்தலும்-(உள்ளஎழுத்தை) நீக்குதலும்,—செய்யுள் - செய்யுளிடத்து, வேண்டுஉழி-(செய்யுளிலக்கணத்தைநோக்கி) அமைக்கவேண்டுமிடத்து, வரும்—; (எ - று.)

(உதாரணம்.)

௧. "முத்தை வருஉங் காலம்"—முந்தையென்பது வலிந்துநின்றது.
௨. "தண்டையி னினக்கிளி"—தட்டையென்பது மெலிந்துநின்றது.
௩. "கற்பக நீழல்"—நிழலென்பது நீண்டுநின்றது.
௪. "நன்றென்றேன் தியேன்"—தீயேனென்பது குறுகிநின்றது.
௫. "நெல்விளையும்மே"—விளையுமேயென்பதுமகரமெய்விரிந்துநின்றது
௬. "நீ நாடுகேன"—நாடுகவென வென்பது அகரம் தொக்குநின்றது.

(தட்டை - கிளியோட்டுங் கருவி.)

புணர்ச்சிவிகாரத்துக்தும்செய்யுள்விகாரத்துக்தும்வேறுபாடு:—புணர்ச்சிவிகாரம், நிலைமொழி வருமொழிப்புணர்ச்சியில்மாத்திரமேவரும்; தனிமொழியில் வாராது: இது,உலகவழக்குச்செய்யுள்வழக்கு என்னும் இரண்டுக்கும் உரியதாம். செய்யுள்விகாரம், செய்யுளில்மாத்திரமே வரும்: உலகவழக்கில்வாராது:இது, தனிமொழி தொடர்மொழிஇரண்டுக்கும் பொது.()

[இதுவும் அது.]

‡ ௧௫௬. ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே.

(இ - ள்.) ஒரு மொழி - ஒருசொல்லினுடைய, மூ வழி-(முதல் இடை கடை என்னும்) மூன்றில் ஓரிடத்து, குறைதலும் - குறைந்துவருதலும்,—அனைத்து - அச்செய்யுள்விகாரமாம்; (எ - று.)

(உ - ம்.) "மரை யிதழ்" —தாமரை என்பது முதல் குறைந்தது.
"ஓதி முதுபோத்து"—ஓந்தி என்பது இடை குறைந்தது.
"நீலுண் துகிலிகை"—நீலம் என்பது கடை குறைந்தது.

(ஓந்தி - ஓணான்.)

தொகுத்தல் விகாரம் பகுபதத்திலும், முதல் இடைகடைக்குறைவிகாரங்கள் * பகாப்பதத்திலும் வருமென வேறுபாடு கொள்க. (சு)

[புணர்ச்சி விகாரத்தில் வரும் ஐயத்தை நீக்குதல்.]

‡ கருஎ. ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப்பெறும்.

(இ - ள்.) ஒரு புணர்க்கு - ஒருபுணர்ச்சிக்கே, இரண்டும்-(ஒருவிகாரமேயன்றி) இரண்டுவிகாரங்களும், மூன்றும்-மூன்றுவிகாரங்களும், உறபெறும் - வரப்பெறும்; (எ - று.)

(உ - ம்.) (க) யானை + கொம்பு = யானைக்கொம்பு—தோன்றல்.

(உ) நிலம் + பனை = நிலப்பனை—கெடுதலும் தோன்றலும்.

(ங) பனை + காய் = பனங்காய்—கெடுதலும்தோன்றலும்திரிதலும்.

பிறவும் இவ்வாறே காண்க. (எ)

பொதுப்புணர்ச்சி.

(உயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் பொது.)

[எல்லா ஈற்றின் முன்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல்.]

‡ கருஅ. § எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்க ளியல்பும்
குறில்வழி யத்தனி யைநொ துமுன்மெலி
மிகலுமாம் ணளனல வழிநத் திரியும்.

(இ - ள்.) (க) எண்மூ எழுத்து - இருபத்துநான்கு எழுத்துக்களையும், ஈறு - இறுதியாகவுடைய, எவ் வகை மொழிக்கும் - எல்லாவகைச் சொற்களுக்கும், முன் - முன்னே, வரும் - வருகின்ற, ஞ ந ம ய வக்கள்-ஞகரநகர மகர யகர வகரங்கள், இயல்பும்-இயல்பாதலும்;—(உ) குறில்வழி ய - தனிக் குற்றெழுத்தின்பின் நின்ற யகரமெய்க்கும், தனி ஐ - ஓரெழுத்தொருமொழியாகிய (உயிர்உயிர்மெய்என்னும்) ஐகாரத்துக்கும், நொ து-(ஓரெழுத்தொருமொழியாகிய) நொ என்பதற்கும் து என்பதர்கும், முன் - முன்வருகின்ற, மெலி - ஞகர நகர மகரங்கள்; மிகலும் - மிகுதலும், ஆம் - ஆகும்;—(ங) ண ள ன ல வழி - ணகர ளகர னகர லகர மெய்களின்பின் வருகின்ற, ந - நகரமானது, திரியும்—; (எ - று.)

புணரியலிலே அல்வழி வேற்றுமைகளில் ஒன்றை வெளிப்படையாகவாயினும் குறிப்பாகவாயினும் கூறாத இடங்களி லெல்லாம் அவ்விரண்டையும் கொள்க.

---

* இவற்றை 'அடி தொடைமுதலியநோக்கித்தொகுக்கும்வழித்தொகுத்தலன்றி வழக்கின்கண் மரூஉப்போலச் செய்யுட்கண் மரூஉவாய் அடிப்பாடாக ஒருமொழி முதலிடைகடையென்னும் மூன்றிடத்தும் குறைந்துவருதல்' என்பர் விருத்தியுரைகாரர்.

§ கoஎ - ஆஞ் சூத்திரம் பார்க்க.

'ஞநமயவக்கள்' என்றது, மெல்லின இடையினங்களில்மற்றை எழுத்துக்கள் மொழிக்கு முதலாகாவாதலால்; பின்வருஞ்சூத்திரங்களில் வலி, மெலி, இடை என்பனவும் - அந்தந்த இனங்களில் மொழிக்குமுதலில்வரும் எழுத்துக்களையே குறிக்கும்.

(க) அல்வழி. (உதாரணம்) வேற்றுமை.

அல்வழி	வேற்றுமை
இள + ஞாயிறு = இளஞாயிறு	வலி + ஞமலி = வலிஞமலி
பனை + நீண்டது = பனைநீண்டது	பூ + நீட்சி = பூநீட்சி
பொன் + மெலிது = பொன்மெலிது	மண் + மாட்சி = மண்மாட்சி
வேர் + யாது = வேர்யாது	கல் + யானை = கல்யானை
எஃகு + வலிது = எஃகுவலிது	வாள் + வலிமை = வாள்வலிமை

ஞ ந ம ய வக்கள் இயல்பாயின; மற்றை ஈறுகட்கும் இங்ஙனமே காண்க.

(உ)

அல்வழி.	வேற்றுமை.	
மெய் + ஞான்றது = மெய்ஞ்ஞான்றது	+ ஞாற்சி = மெய்ஞ்ஞாற்சி	குறில்வழி ய
நீண்டது = மெய்ந்நீண்டது	நீட்சி = மெய்ந்நீட்சி	
மாண்டது = மெய்ம்மாண்டது	மாட்சி = மெய்ம்மாட்சி	
கை + ஞான்றது = கைஞ்ஞான்றது	+ ஞாற்சி = கைஞ்ஞாற்சி	தனி ஐ
நீண்டது = கைந்நீண்ட்து	நீட்சி = கைந்நீட்சி	
மாண்டது = கைம்மாண்டது	மாட்சி = கைம்மாட்சி	

குறில்வழி ய, தனி ஐ முன் மெலி மிக்கன.

நொ + ஞெள்ளா = நொஞ்ஞெள்ளா	து + ஞெள்ளா = துஞ்ஞெள்ளா
நாகா = நொந்நாகா	நாகா = துந்நாகா
மாடா = நொம்மாடா	மாடா = தும்மாடா

நொ து முன்மெலிமிக்கன.*இவை வினையாதலால் அல்வழி (நொ-வருந்து து-உண்.இவைஇரண்டும்-ஒருமையேவல்.ஞெள்ளா முதலியன-விளிப்பெயர்)

(ங) அல்வழி. வேற்றுமை.

அல்வழி	வேற்றுமை
மண + நீண்டது = மண்ணீண்டது	மண் + நீட்சி = மண்ணீட்சி
முள் + நீண்டது = முண்ணீண்டது	முள் + நீட்சி = முண்ணீட்சி
பொன் + நீண்டது = பொன்னீண்டது	பொன் + நீட்சி = பொன்னீட்சி
கல் + நீண்டது = கன்னீண்டது	கல் + நீட்சி = கன்னீட்சி

ண ள ன ல வழி ந திரிந்தது.

"ணளனலவழி நத் திரியும்"என்றது, பின் மெய்யீற்றுப்புணரியலில் வரும் "னலமுன் றனவும்" என்னுஞ் சூத்திரத்தில் விவரிக்கப்படும்.

இச்சூத்திரம், வருமொழிச்செய்கைகூறியது. சிறுபான்மைநிலைமொழியீறுவிகாரப்படுதல், மேல் அவ்வவ்வீற்றுச்சிறப்புவிதியாற்பெறப்படும். (அ)

---

* 'நொ து முன் மெலி மிகலுமாம்' என எண்ணின்கண் நிற்கும் எச்சவும்மையானே, நொ து என்னும்இரண்டுசொல்முன்னும் இடையினம் மிகலுமா மெனக் கூறினாராயிற்று;அவை வருமாறு:—'நொய்யவன,நொவ்வளவா; துய்யவன, துவ்வளவா என வரும்'—நன்னூல் விருத்தியுரை.

[பொதுப்பெயர் உயர்திணைப்பெயர் ஈறு.]

‡ கருகூ. பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்
வலிவரி னியல்பாம் ஆவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமா முயர்திணை.

(இ - ள்.) (க) பொதுப்பெயர்-(இருதிணைகட்கும்)பொதுவானபெயர்களுக்கும், உயர்திணைப் பெயர்கள்-உயர்திணைப் பெயர்களுக்கும், ஈறுமெய்-இறுதியிலுள்ள மெய்கள்,—வலி வரின்-(வருமொழிமுதலில்)வல்லெழுத்து வந்தால், இயல்புஆம் - இயல்பாகும்;—(உ) ஆவி ய ர முன்-பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களின்ஈற்றில்வருகின்ற) உயிரெழுத்துக்களின்முன்னும் யகர ரகர மெய்களின் முன்னும் வருகின்ற, வன்மை - வல்லெழுத்துக்கள், மிகா - மிகாவாம்;—(ங) (இவ்வாறன்றி), சில உயர்திணை - மெய்யீறும்உயிரீறுமாகிய) சில உயர்திணைப்பெயர்கள், (நாற்கணங்களோடும் புணருமிடத்து), விகாரம் ஆம் - (நிலைமொழி வருமொழிகள்) விகாரப்பட்டு வருதலும் உண்டு; (எ - று.)

பொதுப்பெயராவது - உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பொதுவாக வரும் பெயர். பொதுப்பெயர் * விரவுப்பெயர் என்பன ஒருபொருட் சொற்கள். உயர்திணை அஃறிணை இரண்டிலும் கலத்தலுடைய பெயர் - விரவுப்பெயர்; விரவுதல் - கலத்தல்.

'வலி,' 'வன்மை' என்றது-மொழிக்கு முதலில் வரும் க ச த பக்களை.

நாற்கணமாவன-வன்கணம்,மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம்.

வல்லினம் வந்தால் திரிதற்கு உரிய நிலைமொழியீற்றுமெய்யெழுத்துக்கள் [ண் ள் ன் ல்] திரியாமல் இயல்பாதல்பற்றி ஈற்றுமெய்இயல்பாம்'என்றும், ஆவி யரக்களின் முன் மிகுதற்கு உரிய வருமொழிமுதல் வல்லெழுத்துக்கள் மிகாமல் இயல்பாதல்பற்றி 'வன்மை மிகா' என்றும் பிரித்துக்கூறினார். (முன்னது, நிலைமொழியீற்றை நோக்கியது; பின்னது, வருமொழிமுதலை நோக்கியது.) §

(க) அல்வழி. (உதாரணம்.) வேற்றுமை.

அல்வழி			வேற்றுமை		
ஆண்	+ குறியன்	= ஆண்குறியன்.	ஆண்	+ கை	= ஆண்கை.
ஆண்	+ சிறிது	= ஆண்சிறிது.	ஆண்	+ செவி	= ஆண்செவி.
சாத்தன்	+ தீயன்	= சாத்தன்றீயன்	சாத்தன்	+ தலை	= சாத்தன்றலை.
சாத்தன்	+ பெரிது	= சாத்தன்பெரிது.	சாத்தன்	+ புறம்	= சாத்தன்புறம்
நான்	+ சிறியேன்	= நான்சிறியேன்.			

எனப் பொதுப் பெயரீற்றுமெய்வலிவர இயல்பாயின. பிறவும்காண்க.

---

* இது. உருரு - ஆம் சூத்திரத்தில் வருகின்றது.

§ 'ஈற்று மெய்' என்றும், 'முன்' என்றும் பகுத்து ஓதியது, யாண்டும் நிலைமொழி வருமொழி விகாரங்கள் தெரிந்து அறிந்துகோடற்குஎன்க என்பது, பழைய உரை,

'சாத்தன்' என்பது - ஒருதெய்வத்தின் பெயராதலாலும், மனிதர்க்கும் விலங்குக்கும் பெயராக இடப்படுதலாலும், இருதிணைப்பொதுப்பெயராம்.

அல்வழி.	வேற்றுமை.
அவள் + குறியள் = அவள்குறியள்.	தையல் + பெருமை = தையல்பெருமை.
மகன் + சிறியன் = மகன்சிறியன்.	மகன் + தலை = மகன்றலை.
குரிசில் + பெரியன் = குரிசில்பெரியன்	வேள் + சிறுமை = வேள்சிறுமை.

என உயர்திணைப்பெயரீற்று மெய் வலிவர இயல்பாயின. *

(உ) அல்வழி.	வேற்றுமை.
பிள்ளை + சிரியன் = பிள்ளைசிரியன்.	சாத்தி + கை = சாத்திகை.
பிள்ளை + சிறிது = பிள்ளைசிறிது	சாத்தி + செவி = சாத்திசெவி.
நீ + குறியை = நீகுறியை.	தாய் + தலை = தாய்தலை.
நீர் + குறியீர் = நீர்குறியீர்.	தாய் + பொருள் = தாய்பொருள்.

எனப் பொதுப்பெயரீற்றுஆவி யகர ரகாரமுன்வன்மைமிகாவாயின.

அல்வழி.	வேற்றுமை.
நம்பி + குறியன் = நம்பிகுறியன்.	நங்கை + தலை = நங்கைதலை.
சேய் + சிறியன் = சேய்சிறியன்	சேய் + சிறுமை = சேய்சிறுமை.
அவர் + பெரியர் = அவர்பெரியர்.	அவர் + பெருமை = அவர்பெருமை

என உயர்திணைப்பெயரீற்று ஆவி யகாரரகாரமுன்வன்மைமிகாவாயின

(௩) 'சிலவிகாரமா முயர்திணை' என்றதற்கு, வருமொழி முதலெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்ளப்பட்டன.

(உ-ம்.) கபிலன்	+ பரணன்	= கபிலபரணர்	அல்வழி.
நம்பி	+ கொற்றன்	= நம்பிக்கொற்றன்	
வடுகன்	+ நாதன்	= வடுகநாதன்	
அரசன்	+ வள்ளல்	= அரசவள்ளல்	
விராடன்	+ அரசன்	= விராடவரசன்	
ஆசீவகர்	+ பள்ளி	= ஆசீவகப்பள்ளி	வேற்றுமை
மக்கள்	+ குணம்	= மக்கட்குணம்	
நளன்	+ வெண்பா	= நளவெண்பா	
குமரன்	+ கோட்டம்	= குமரகோட்டம் குமரக்கோட்டம்	

என இருவழியும் உயர்திணையுள் சில தமக்கு ஏற்றபடி விகாரமாயின .(க)

[வினைப்பெயர்முன்னும் விளிப்பெயர்முன்னும் வல்லினம்.]

‡ கசுo. ஈற்றியா வினைவிளிப் பெயர்முன்வலி யியல்பே.

* தோன்றல் + தீயன்—தோன்றறீயன், தோன்றல் + தலை—தோன்றலை எனவும்; வேள் + தீயன்—வேடீயன், வேள் + தலை—வேடலை எனவும் லகாரளகரமெய்கள் தகரம் வருமிடத்துக் கெடுதல் மயக்கவிதியின்மை பற்றி யென்றுஅறிக; (கக௭ - ஆஞ் சூத்திரம் பார்க்க.) நாம் + சிறியோம் = நாஞ்சிறியோம் என மகரமெய் வலிவர இனமாத்திரிதலும் இது; (ககடு-ஆம் சூத்திரம் பார்க்க,)

(இ - ள்.) (க) ஈறு (வினா) - இறுதியில் வருகின்ற (ஆ ஓ ஏ என்னும்) மூன்று வினாவெழுத்துக்களுக்கும், (உ) யா வினா-யாஎன்னும்வினாப்பெயர்க்கும், (ங) விளிப் பெயர் - (உயிரீறும் மெய்யீறு மாகிய) விளிவேற்றுமைப் பெயர்களுக்கும், முன்-முன் வருகின்ற, வலி-வல்லெழுத்துக்கள், இயல்பே-இயல்பேயாம்; (எ - று.)

(க)(உ - ம்.)

அவனா கொற்றனோ சாத்தனே	+	கொண்டான்-அவனாகொண்டான் சென்றான் —அவனாசென்றான் தந்தான் —அவனாதந்தான் போயினான் —அவனாபோயினான்	எனஈற்றுவினாமுன் வலிஇயல்பாயின.

(உ)

அல்வழி.	வேற்றுமை.
யா + குறியன —யாகுறியன.	+ தந்தான்—யாதந்தான்.
சிறியன —யாசிறியன.	பார்த்தான்—யாபார்த்தான்.

என யாவினாமுன் வலி இயல்பாயின; (யா - யாவை.)

(ங) பொன்னா + கொள் = பொன்னாகோள்	தோழீ + தா = தோழீதா
பிள்ளாய் + செல் = பிள்ளாய்சேல்.	மக்காள் + போம் = மக்காள்போம்

என விளிப்பெயர்முன் வலி இயல்பாயின.

ஈற்றுவினா மூன்றும், விளிப்பெயரும் - அல்வழி; யாவினாப்பெயர்-அல்வழி, வேற்றுமை இரண்டுக்கும் பொது. (௧௦)

[முன்னிலைவினைமுன்னும், ஏவல்முன்னும் வல்லினம்.]

‡ ௧௬௧. ஆவி யரழ விறுதிமுன் னிலைவினை
ஏவல்முன் வல்லின மியல்பொடு விகற்பே.

(இ - ள்.) ஆவி - உயிரையும், ய ர ழ - ய ர ழ என்னும் மூன்றுமெய்களையும், இறுதி - ஈறாக வுடைய, (க) முன்னிலை வினை - முன்னிலை வினைமுற்றுக்களுக்கும், (உ) ஏவல்-ஏவல்வினைமுற்றுக்களுக்கும், முன்-முன்வருகின்ற, வல்லினம் - க ச த பக்கள்,—இயல்பொடு - இயல்புடனே, விகற்பு - விகல்பமுமாம் [ஒன்றுக்கே இயல்பாயும் மிக்கும் வரும்]; (எ - று.)

முன்னிலைவினைக்கும்ஏவல்வினைக்கும் வேறுபாடு:—முன்னிலைவினை-நடந்தாய் நடக்கின்றாய் நடப்பாய் என்றாற்போல மூன்றுகாலத்தும்தனித்தனிவருவதாய் முன்னிற்கும் பொருளினது தொழிலை உணர்த்திஏவற்பொருள் படாதது என்றும், ஏவல்வினை - நடமின் நடவும்என்றாற்போல எதிர்காலத்து மாத்திரமே வருவதாய் முன்னிற்கும்பொருளைக் கட்டளையிடுவது என்றும் வேறுபாடு அறிக. ஏவலெல்லாம் முன்னிலைவினையாம்;முன்னிலைவினையெல்லாம் ஏவலாகா.

விகற்புமாவது-ஒருபுணர்ச்சிக்கே ஒருகால் ஒருவகையாயும்,மற்றொருகால் வேறுவகையாயும் வருவது; விகற்பம், * உறழ்ச்சி, § பொருதல் என்பன - ஒருபொருட்சொற்கள்; நியதியின்மை யென்பது பொருள்.

* ௨௦௩ - ஆஞ் சூத்திரம் பார்க்க. § ௨௧௩ - ஆஞ்சூத்திரம் பார்க்க.

(க) உண்டனை (உ-ம்) உண்டாய்	+	கொற்ரு-உண்டனைகோற்ரு சாத்தா=உண்டாய்சாத்தா	தேவா-உண்டனைதேவா புலவா-உண்டாய்புலவா
உண்டீர்	+	கொற்றரே=உண்டீர்கோற்றரே சாத்தரே =உண்டீர்சாத்தரே	தேவரே=உண்டீர்தேவரே புலவரே=உண்டீர்புலவரே

என ஆவி யா இறுதி முன்னிலைவினைமுன் வலி இயல்பாயின.

ழகரமெய்யீற்றுவிகுதிஇல்லாமைபற்றி ழகரமெய் முன்னிலைவினைக்கு ஈருகாமையால், அதற்கு உதாரணம் இல்லை.

முன்னிலைவினைமுன் விகற்பித்தல் வந்தவிடத்துக் காண்க.

(உ) வா +கொற்ரு=வாகோற்ரு பாய்+சாத்தா =பாய்சாத்தா	சேர் +தேவா=சேர்தேவா வாழ் +புலவா=வாழ்புலவா

என ஆவி யா ழ இறுதி ஏவல்வினைமுன் வலி இயல்பாயின.

நட+கொற்ரு=நடகோற்ரு; நடக்கோற்ரு
எய்+கொற்ரு=எய்கோற்ரு, எய்க்கோற்ரு } என ஏவல்வினைமுன் வலிவிகற்பித்தன.

இவையெல்லாம் வினைமுற்றுத்தொடராதலால், அல்வழிப்புணர்ச்சி. (கக)

உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி.

புணரியல் மூன்றனுள் உயிரீற்றுப்புணரியல் முதலதாதலால், அதில் முதற்பதிஞெரு சூத்திரங்களால் இதுவரையிலும் புணர்ச்சிவிதியைஉயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் பொதுப்படக் கூறி, இனி உயிரீற்றுப்புணர்ச்சிச் சிறப்புவிதி கூறுகின்ருர்.

[உயிர்முன் உயிர் புணர்தல்.]

‡ கரு௨. இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் ருகும்.

(இ - ள்.) உயிர்வரின்-(வருமொழிமுதலில்)உயிர்வந்தால்,—(க)இ ஈ ஐ வழி - இகர ஈகார ஐகாரங்களின் பின்னே, யவ்வும் - யகரமெய்யும்;—(உ) ஏனை உயிர் வழி - (அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும்) இவ்வேழுஉயிர்களின் பின்னே, வவ்வும் - வகரமெய்யும்;—(ங) ஏ முன் - ஏகாரத்தின்பின்னே, இ இருமையும் - இவ்விரண்டும்[யகரமெய்யும் வகரமெய்யும்],—உடம்படுமெய் என்று ஆகும் - உடம்படுமெய்யாக வரும்; (எ - று.)—முன் - இடமுன்.

உடம்படுமேய் - நிலைமொழியீற்றிலும் வருமொழிமுதலிலும் நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய்; உடம்படுத்த லென்ருலும், உடன்படுத்த லென்ருலும் பொருள்ஒக்கும். (உடம்பு அடு எனப் பிரித்து,வரும் உயிர்எறற்கு உடம்பாக அடுக்கும் மெய் என்ருலும் பொருந்தும்,)

(க) அல்வழி. (உதாரணம்.) வேற்றுமை.

அல்வழி	வேற்றுமை	
மணி + அழகிது = மணியழகிது	+ அழகு = மணியழகு	இ ஈ ஐ முன் யகரம் வந்தது.
தீ + அழகிது = தீயழகிது	+ அழகு = தீயழகு	
மலை + அழகிது = மலையழகிது	+ அழகு = மலையழகு	
(உ) விள + அழகிது = விளவழகிது	+ அழகு = விளவழகு	மற்றை உயிர்களின் முன்வகரம் வந்தது.
பலா + அழகிது = பலாவழகிது	+ அழகு = பலாவழகு	
கடு + அழகிது = கடுவழகிது	+ அழகு = கடுவழகு	
பூ + அழகிது = பூவழகிது	+ அழகு = பூவழகு	
நொ + அழகிது = நொவ்வழகிது	+ அழகு = நொவ்வழகு	
கோ + அழகிது = கோவழகிது	+ அழகு = கோவழகு	
கௌ + அழகிது = கௌவழகிது	+ அழகு = கௌவழகு	

(ங) அவனே + அழகன் = அவனேயழகன் என இடைச்சொல் ஏமுன் யகரமும், ஏ + எலாம் = ஏவெலாம், தே + உழவு = சேவுழவு; தே + அடியார் = தேவடியார் எனப் பெயர்ச்சொல் ஏ முன் இருவழியும் வகரமும்,

சே + அடி = சேயடி, சேவடி எனச் செம்மையென்னும் பண்புப்பெயரின்விகாரமாகிய 'சே' முன் யகரமும் வகரமும் உடம்படுமெய்யாக வந்தன.

(சேயடி சேவடி என்பவற்றை "ஈறுபோதல்" என்ற சூத்திரத்து 'முன்னின்ற மெய் திரிதல்' என்றதில் அடக்குதலுமாம்.) (கஉ)

[யகரவினாமுன்னும் சுட்டுமுன்னும் நாற்கணமும் புணர்தல்.]

‡ கரு௩. எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமு மெய்தின் வவ்வும்
பிறவரி னவையும் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுதல் நெறியே.

(இ-ள்.) (க) எகர வினா-எகர வினாவிடைச்சொல்லுக்கும், முச்சுட்டின்-மூன்றுசுட்டிடைச்சொற்களுக்கும், முன்னர் - முன்னே, உயிரும்---, யகரமும்---, எய்தின் - வந்தால், வவ்வும் - வகரமெய்யும்;---பிற - யகரமொழிந்த மெய்கள், வரின் - வந்தால், அவையும்-அவ் வந்த மெய்களும்;---(உ) தூக்கில்-செய்யுளில், சுட்டு - சுட்டெழுத்து, நீளின்-நீளுமிடத்து, யகரமும்-யகரமெய்யும்,---தோன்றுதல்-மிகுதல்,---நெறி - முறையாம்; (எ-று.)

(க) (உ-ம்.) அணி---எவ்வணி
யானை---எவ்யானை
எகரவினா முச்சுட்டின் முன்னர் உயிரும் யகரமும்வர வகரமெய் தோன்றிற்று.

எ அ இ உ +	குதிரை---எக்குதிரை	நாடு ---எந்நாடு	பிற வர அவ் வந்த மெய் தோன்றின.
	சேனை---எச்சேனை	மனை ---எம்மனை	
	தண்டு ---எத்தண்டு	விதம் ---எவ்விதம்	
	படை ---எப்படை	ஙனம் ---எங்ஙனம்	
	ஞாலம்---எஞ்ஞாலம்		

(உ) ஆ + இடை---"ஆயிடை"---சுட்டு நீண்டவிடத்து யகரம்தோன்றிற்று. (ஆயிடை-அவ்விடம்) சுட்டு நீளுதற்கும் இதுவே விதி.

இவையெல்லாம் இடைச்சொல் தொடராதலால், அவ்வழிப்புணர்ச்சி.

'நெறி' என்ற * மிகையால்-யாங்ஙனம் என 'யா' வினாவின் முன்னும் ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம் என நீண்டசுட்டின் முன்னும் ஙகரம் மிகுதலும்; ஈது, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, ஆண்டு, ஈண்டு எனச் சுட்டுப்பெயர்நீளலும்; "விண்வத்துக்கொட்கும்" [விண் + அத்து = விண்வத்து], "செல்வுழிச் செல்க" [செல் + உழி = செல்வுழி] என மெய்யீற்றின்முன் உயிர்வர இப்படி உடம்படுமெய் யல்லாத வகரம் பெறுதலும் கொள்க; இவ்வாறு மெய்யீற்றின் முன் வரும் வகரத்தை, 'மெய்யீற்றுடம்படுமெய்' என்பர், ஆசிரியர் நச்சினார்க்கினியர். (கரு)

[குற்றியலுகரத்தின் முன்னும் சில முற்றியலுகரத்தின் முன்னும் உயிரும் யகரமும் புணர்தல்.]

‡ கசுச. உயிர்வரி னுக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரி னிய்யாம் முற்றுமற் றொரோவழி.

(இ - ள்.) (க) உ குறள்-குற்றியலுகரமானது,— உயிர் வரின்—(வருமொழி முதலில்) உயிர் வந்தால், மெய் விட்டு-(தனக்குஇடமாகிய), மெய்யை விட்டு, ஓடும் -| கெடும்;—ய வரின்-(வருமொழிமுதலில்)யகரம் வந்தால், இ ஆம் - (அவ்வுகரம்) இகரமாகத் திரியும்;—(உ)முற்றும் - முற்றியலுகரமும், ஒரோவழி - ஒவ்வோரிடத்து, அற்று - அவ்வாறேயாகும் [உயிர்வர உகரம் கெடுதலும் யகரம் வர உகரம் இகரமாகத் திரிதலு மாகிய அவ்விரண்டு விதியையும் பெறும்]; (எ - று.)—உக்குறள்-மாத்திரை குறுகிய உகரம்.

(க) குற்றியலுகரம். (உ - ம்.)	(உ) முற்றியலுகரம்.	
வரகு + அருமை—வரகருமை	கதவு + அருமை—கதவருமை.	வேற்றுமை.
+ யாது —வரகியாது	+ யாது —கதவியாது.	அல்வழி.

§ 'கெடும்' என்னுமல் 'ஓடும்' என்றமையால்-'காண்பதுவும்', 'வருவதுவே' எனக் குற்றியலுகரம் ஒரோவிடத்துக் கெடாமல் "இ ஈ ஐ வழி" என்னுஞ் சூத்திரப்பொதுவிதியால் வகரஉடம்படுமெய் பெறுதலும் கொள்க. ()

---

* மிகை-அவசியமல்லாத சொல். சூத்திரத்தில் அவசியமல்லாத பதம் காணப்பட்டால் அதனால் ஏதேனும் தக்கபொருள் கொள்ளவேண்டுமென்பது இலக்கணநூலார் துணிபு. இங்கே, 'தோன்றும்' என்றாலே அமைவதாயிருக்க, 'தோன்றுதல் நெறி' என்றதில் 'நெறி' என்றது-இன்றியமையாததன்றாதல் காண்க. பிறவும் இங்ஙனமே கண்டுகொள்க.

§ 'குற்றியலுகரம் சிறுபான்மை உயிர்முதல்மொழி வரும்பொழுது கெடாமல் நிற்கும்' என்ற இவ்விதியை இச்சூத்திரத்தில் அடக்காமல், மேல் பெயரியலில் இவ்வாசிரியர் "தன்முகமாகத் தானழைப்பதுவே" எனவும், "ஆறனுருமைக் கதுவு மாதுவும்" எனவும் தாமே உதாரணங்காட்டிக்கூறியதன் குறிப்பினாற் பெறவைத்தா ரெனக் கொள்ளுதல் நேராமென அறிக. இங்ஙனம் சொல்லவேண்டுவதோர் அருத்தத்தை வெளிப்படையாகச்சொல்லாமல் தான் சொல்வதன் குறிப்பினால் தெரிவித்தல், உடம்பொடுபுணர்த்தல் என்னும் உத்தி.

உயிரின் முன் வல்லினம் புணர்தல்.

பொது விதி.

‡ கசுடு. இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும் விதவாதன மன்னே.

(இ-ள்.) இயல்பினும்-இயல்பினலாவது, விதியினும்-விதியினலாவது, நின்ற - (மொழிக்கு ஈருக) நின்ற, உயிர் முன்-உயிர்களின் முன், க ச த ப- (வருமொழிமுதலில் வருகின்ற) க ச த பக்கள், மன்-பெரும்பாலும், மிகும்- இரட்டிக்கும், விதவாதன-(பின்) சிறப்புவிதியிற் சொல்லாதவைகள்;(எ-று.)

இயல்புஉயிரீறவது-விகாரப்படாமல் இயற்கையாகநின்ற உயிர் சொல்லுக்கு இறுதியாக நிற்பது; (உ - ம்.) விள, பலா, மலை முதலியன.

விதிஉயிரீறவது-மொழிக்கு இறுதியில் இயற்கையாகநின்ற உயிராவது மெய்யாவது ஒருவிதிபற்றி நீங்கி மற்ரேர் உயிரீருக நிற்பது; (உ-ம்.)ஒன்று- ஒற்றை, மரம்-மரமுதலியன. விதியெனினும், ஆக்கப்பாடெனினும் ஒக்கும்.

விதவாதன - விதந்துசொல்லப்படாதன. விதத்தலாவது - இன்னது இன்னவிடத்து இன்னவாறு ஆமென எடுத்துவிதித்தல். அதனை, வருஞ்சூத்திரங்களிற் காண்க.

அல்வழி.	வேற்றுமை.
(உ - ம்.) ஆட(ச்) சென்ருன்	வாழை (ப்) பழம்---இயல்புஉயிரீறு.
நேற்றை (ப்) பொழுது	மர (க்) கிளை---விதிஉயிரீறு.

(க) 'பின் சிறப்புவிதியிற்சொல்லாதவை பெரும்பாலும் மிகும்'எனவே அவை சிறுபான்மை மிகா என்றும்; (உ) 'பின் சிறப்புவிதியிற்சொல்லாதவை பெரும்பாலும் மிகும்' எனவே, சிறப்புவிதியில் மிகாவென்றுசொன்னவை சிறுபான்மை மிகும் என்றும் கூறினராயிற்று. அவை வருமாறு:---

(க) எரிகரை, மலைகிழவோன்-வேற்றுமை.
கூப்புகரம், நாட்டுபுகழ் - அல்வழி.
} பின் சிறப்புவிதியில்லாதவை இருவழியிலும் மிகாவாயின.

(உ) நொ (க்) கொற்ரு
து (க்) கொற்ரு
} "ஏவல்முன் வல்லினமியல்பொடுவிகற்பே"எனச் சொன்ன சிறப்புவிதி பெருமல் மிக்கே வந்தன.

இச்சூத்திரத்து 'க ச த ப' என்றதை, மேல்வருஞ் சிறப்புவிதிச் சூத்திரங்களில் வேண்டுமிடத்தெல்லாம் கூட்டிக்கொள்க. (கரு)

சிறப்புவிதி.

[உயிரீற்று மரப்பெயர்க்குச் சிறப்புவிதி.]

‡ கசுசு. மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து
வரப்*பெறு னவுமுள வேற்றுமை வழியே.

---

* பெறுன - பெறுவன என்பதன் தொகுத்தல்; 'பெறுந' என்பது; பழையவுரையின் பாடம்: ந் . பெயரிடைநிலை.

(இ - ள்.) வேற்றுமைவழி - வேற்றுமைப்புணர்ச்சியில், மரம் பெயர் முன்னர்-(உயிரீற்றுச் சில) மரப்பெயர்கட்குமுன், இனம் மெல்லெழுத்து வர பெறுனவும் - (முன்சொன்ன பொதுவிதிப்படி வருகிற வல்லெழுத்து மிகாமல்அவற்றிற்கு)இனமாகியமெல்லெழுத்துத்தோன்றப்பெறும்தொடர் களும், உள - உள்ளனவாம்; (எ - று.)

(உ - ம்.) விள + காய் = விளங்காய், மா + பழம் = மாம்பழம்.

'இனமெல்லெழுத்தும்' என உம்மை கொடுத்துச் சொல்லாமையால், இவ்வுதாரணங்கள் பொதுவிதியைப் பெறு வென அறிக.

'பெறுனவும்' என்ற உம்மையால், மெல்லெழுத்துப்பெறுமல் பொது விதியால் வல்லெழுத்து மிகப்பெறுவன பெரும்பாலன வெனக் கொள்க.

(உ - ம்.) பலாக்காய், ஆத்திப்பூ, வாழைப்பழம், இலந்தைக்கனி முதலியன

யாங்கோடு, யாக்கோடு; காயாங்கோடு, காயாக்கோடு என மெல்லெ ழுத்துப்பெற்று விகற்பித்துவருதலை உரையாற் கொள்க; 'பெறுனவும்' என்ற உம்மையினுலேயே இவ்விகற்பமுங் கொள்ளுதலும் ஒன்று. (கசு)

அகரவீற்றுச் சிறப்புவிதி.

[சில அகரவீற்றின்முன் வல்லினம் இயல்பாதல்.]

‡ கசுஎ. செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரி னெச்சமுற் றூற னுருபே
அஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே.

(இ - ள்.) செய்யிய என்னும் வினையெச்சம் - செய்யிய என்னும் வாய் பாட்டு எதிர்காலவினையெச்சத்துக்கும், பல் வகை பெயரினெச்சம் - பல வகைப்பட்ட (அகரவீற்றுப்) பெயரெச்சங்களுக்கும், முற்று - (பலவகைப் பட்ட அகரவீற்று) வினைமுற்றுக்களுக்கும், ஆறன் உருபு-ஆறும்வேற்றுமை அகாவுருபுக்கும், அஃறிணைப்பன்மை-(அகரவீற்றுப்) பலவின்பாற் பெயர் களுக்கும், அம்ம-அம்ம என்னும் உரையசை யிடைச்சொல்லுக்கும், முன் - முன்னே, இயல்பே - (வருகிற கசதபக்கள்) இயல்பேயாம்; (எ - று.)

'பல்வகை' என்பதை 'முற்று' என்பதனேடும் கூட்டுக.

முதலிலும் இறுதியிலும் 'செய்யிய,' 'அம்ம' என்ற அகரவீற்றுச்சொற் களைவைத்ததனுல்,இடையிலுள்ளபெயரெச்சம் முதலியனவும் அகரவீறென் பதும்; 'பல்வகை' என்றதனுல், வினையடி நான்கிலும் பிறந்த உடன்பாடும் எதிர்மறையுமாகிய எல்லாப்பெயரெச்சங்களும் அவ்வாறுபிறந்த எல்லா வினைமுற்றுக்களும் என்பதும்; முன்னே 'முற்று' என்றதில் பலவின்பால் வினைமுற்று அடங்கியதனுல், பின்னே 'அஃறிணைப் பன்மை' என்றது பல வின்பாற்பெயர் என்பதும் பெறப்பட்டன. (வினையடி நான்காவன:---இயற் கையான வினையடி ஒன்றும், மற்றைப் பெயர் இடை உரி அடியாகப் பிறந்த செயற்கைவினையடி மூன்றுமாம்.)

(உதாரணம்.)

உண்ணியதந்தான், செய்யியபோனான்—செய்யியவென்வினையெச்சம். அல்.
உண்ட குதிரை, பெரிய பொருள் —பல்வகைப் பெயரினெச்சம். அல்.
உண்டன குதிரைகள், வாழிய கொற்றா, என்ப சிலர்—பல்வகைமுற்று. அல்.
தன கைகள், தன தாள்கள் —ஆறனுருபு. வேற்றுமை.
பல குதிரைகள், சில செய்தான் —இருவழியிலும்அஃறிணைப்பன்மை.
அம்ம கொற்றா, அம்ம தேவா —அம்மஎன்னும் இடைச்சொல் அல்.

(உண்ணிய - உண்ணுதற்கு. செய்யிய - செய்தற்கு. வாழிய - வாழ்க.)

உரையிற்கோடலால், அம்மாகொற்றா என அம்ம என்னும்உரையசையிடைச்சொல் நீண்டுவரினும் வலி இயல்பாதல் கொள்க. (கஎ)

['வாழிய' என்பதற்குச் சிறப்புவிதி.]

‡ ககூ௮. வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்
ஏகலு முரித்தஃ தேகினு மியல்பே.

(இ - ள்.) (க) வாழிய என்பதன் - வாழிய என்னும் வியங்கோள்வினைமுற்றினுடைய, ஈற்றின் - இறுதியிலுள்ள, உயிர்மெய் - யகரஉயிர்மெய், ஏகலும் - நீங்குதலும், உரித்து-உரியதாம்; (உ) அஃது ஏகினும்-அவ்வுயிர்மெய் நீங்கி (இகரஈறாய்) நின்றாலும், இயல்பே - (அதன்முன்வருகிற வல்லினம் பொதுவிதியால் மிகாமல் சிறப்புவிதியிற்கூறியபடி) இயல்பேயாம், (எ - று.)---பொதுவிதி - "இயல்பினும் விதியினும்" என்றசூத்திரம். சிறப்புவிதி - "செய்யிய வென்னும் வினையெச்சம்" என்ற சூத்திரம்.

(உ - ம்.) (க) ஆ வாழிய - ஆ வாழி---ஈற்று உயிர்மெய் நீங்கிற்று.

(உ) வாழிய + கொற்றா---வாழிகொற்றா } ஈற்று உயிர்மெய் நீங்க வலி
+ சாத்தா ---வாழிசாத்தா } இயல்பாயிற்று.

இச்சூத்திரத்து வுபலக்ஷணத்தால், போற்றிய என்பது 'போற்றி' என நிற்றல் முதலியனவும் கொள்க: [உபலக்ஷணமாவது-ஒருசொல்ஒழிந்த தன் இனத்தையும் குறிப்பது; பொதுவியல் எ - ஆஞ் சூத்திரங் காண்க.] (கஅ)

['சாவ' என்பதற்குச் சிறப்புவிதி.]

ககூகூ. சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி. *

(இ - ள்.) சாவ என் மொழி - சாவ என்னுஞ் செயவென்வாய்பாட்டு வினையெச்சத்தினுடைய, ஈறு-இறுதியிலுள்ள, உயிர்மெய்-வகரஉயிர்மெய், சாதலும் - (வருமொழியோடு புணர்கையில்) கெடுதலும், விதி-விதியாம்.

(உ - ம்.) சாவகுத்தினான்---சாக்குத்தினான்.

* இச்சூத்திரத்து உபலக்ஷணத்தால், 'நன்றாய்ப்படித்தான்' முதலியஇடங்களில், 'ஆக' என்னும் செயவெனெச்சம் ஈற்று உயிர்மெய் கெட்டு 'ஆ' என நிற்றல் போவனவும் கொள்க,

இப்புணர்ச்சி சாவக்குத்தினன் என்னும் புணர்ச்சி போலச் சிறந்ததல்லாமையால், 'சாதலும்விதி என இழிவுசிறப்பும்மை கொடுத்துக் கூறினர்.

[‘பல’, ‘சில’ என்பவற்றிற்குச் சிறப்புவிதி.]

‡கஎ0. பலசில வெனுமிவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும் அகரமேக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற.

(இ - ள்.) பல சில எனும் இவை - பல சில என்னும் இவ் விரு சொல்லும், தம்முன் தாம் வரின் - தமக்குமுன்னே தாமே வருமாயின்[பலஎன்பதற்குமுன் பல என்பதும் சில என்பதற்குமுன் சில என்பதும் வந்தால்], (க) இயல்பும் - (வருமொழிமுதல்மெய்) இயல்பாதலும், (உ) மிகலும்-மிகுதலும், (ங) அகரம் ஏக லகரம் றகரம் ஆகலும் - (நிலைமொழியிறுதியில்நின்ற அகரம் கெட லகரமெய் றகரமெய்யாகத் திரிதலும்;---(ச) பிற வரின்-(இவ்விரண்டுசொற்களின் முன்) வேறுசொற்களி லொன்று வந்தால், அகரம் - (நிலைமொழியிறுதியில்நின்ற) அகரம், விகற்பம்ஆகலும் - (நிற்பதும் நீங்குவதுமாகி) விகற்பித்தலும்,---உள - உள்ளனவாம்; (எ - று.)

(உ - ம்.) (க) பலபல, சிலசில---இயல்பாயின.

(உ) பலப்பல, சிலச்சில---மிக்கன.

(ங) பற்பல, சிற்சில---அகரம் கெட லகரம் றகரமாயிற்று.

(ச) பலகலை, பல்கலை, சிலவளை, சில்வளை பலநாள், சின்னாள், பலவாயம், பல்லாயம் } பிறவர அகரம் நின்றும் நீங்கியும் விகற்பித்தது.

'பிற' என்ற மிகையால் - பல்பல, சில்சில எனத் தம்முன்தாம்வர அகரம்கெட்டு லகரம் றகரமாகாமல் சிறுபான்மை வருதலும்; பற்பகல், சிற்கலை எனப் பிறவர அகரம் கெட்டு லகரம் றகரமாகத் திரிதலும்; இன்னும் இங்குக்கூறிய அகரவீற்றுப்புணர்ச்சியுள் அடங்காது வருவனஉளவாயின் அவையும் கொள்க. (உ0)

ஆகாரவீற்றுச் சிறப்புவிதி.

[ஆகாரத்தின்முன் வல்லினம்.]

‡ கஎக அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா.

(இ - ள்.) அல்வழி - அல்வழிப்புணர்ச்சியில்,—(க) ஆ - ஆ என்னும்பெயர்க்கும், மா - மா என்னும் பெயர்க்கும், (உ) மியா - மியா என்னும் முன்னிலையசை இடைச்சொல்லுக்கும், (ங) முற்று - (ஆகாரவீற்றுஎதிர்மறைப் பலவின்பால்) வினைமுற்றுக்கும், முன் - முன்னே, மிகா - (வருகிற வல்லினம்) இயல்பாகும்; (எ - று.)

'முற்று' எனப் பொதுவாகக்கூறினும், ஆகாரவீற்றுச்சிறப்புவிதி கூறுமிடமாதலால், ஆகாரவீற்றுமுற்றென்பது அதிகாரத்தால் விளங்கியது.

(உ-ம்.) (க) ஆ குறிது, மா சிறிது—ஆ, மா முன் வலி இயல்பாயிற்று.
(உ) கேண்மியா தேவா—மியாமுன் வலி இயல்பாயிற்று.
(ங) உண்ணு பன்றிகள்—முற்றுமுன் வலி இயல்பாயிற்று.

இரட்டுறமொழிதலால், காட்டுப்பசுஎன்னும் பொருளைத் தருகிறஆமா என்பதன் முன்னும் ஆமா குறிது, ஆமா சிறிது என வலி இயல்பாம்என்க.

'முற்றுமுன் மிகா'எனவே,அருத்தாபத்தியால் - அவ்வினையாலணையும் பெயரின்முன்னும அவ்வினைமுற்றுவினையெச்சமானவற்றின்முன்னும்மிகாமையும் கொள்க; [அருத்தாபத்தியாவது - ஒருபொருளைக் கூறியமாத்திரத்தில் அதன்குறிப்பைக் கொண்டு கூறப்படாத மற்றொரு பொருளையும் அறிவது.]

(உ-ம்.) உண்ணு கிடந்தன, சென்றன, தந்தன, போயின.

இங்கே, உண்ணு என்றது - வினையாலணையும்பெயராயின், உண்ணுதனவாகிய பிராணிகள் கிடந்தனஎனவும்; வினைமுற்றுவினையெச்சமாயின், உண்ணுதனவாய்க் கிடந்தன எனவும் பொருள்படும்.

இவ்வாய்பாட்டுச்சொல் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாயின் உண்ணுக்குதிரை என்றும்,ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாயின்உண்ணுக்கிடந்தன என்றும், உடன்பாட்டு இறந்தகால வினையெச்சமாயின்உண்ணுக்கிடந்தன என்றும் பொதுவிதியால் வலிமிக்கு வருமென்று அறிக. இவற்றிற்கு - முறையே உண்ணாத, உண்ணாமல், உண்டு என்று பொருள். உண்ணாது என்ற ஒன்றன்பால்முற்று உண்ணு எனத் தொகுத்தல்விகாரப்பட்டு வரும்பொழுது அதன்முன் வலிஇயல்பாமென உணர்க. (உக)

[குறிலணைந்த ஆகாரத்துக்குச் சிறப்புவிதி.]

‡ கஎஉ. குறியதன் கீழாக் குறுகலு மதனோடு
உகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்.

(இ-ள்.) குறியதன் கீழ் ஆ - குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம்,—(க) குறுகலும் - (அகரமாகக்) குறுகுதலும்,---(உ) அதனோடு - அவ்வாறு குறுகுதலுடனே, உகரம் ஏற்றலும் - உகரம் பெறுதலும்,---(ங) இயல்பும் - (அவ்விரண்டுமில்லாமல்) தன் இயல்பில் நிற்றலும்,---(ஆகிய இம்மூன்றுவிதியும்),---தூக்கின் - செய்யுளில், ஆம் - ஆகும்; (எ-று.)---தூக்கு - செய்யுள். கசுங - ஆஞ் சூத்திரத்திலும் இது வந்தது.

(உ-ம்.) (க) "நில விரி கானல்" --குறியதன்கீழ் ஆ, குறுகிற்று.
(உ)"என் செய்யுமோ நிலவு"---குறுகி, உகரமேற்றது
(ங)"நிலா லணங்கு"---இயல்பாயிற்று.

செய்யுளில் இம்மூன்றும் ஆம் எனவே, வழக்கில் இரண்டும் ஒன்றும் ஆம் என்றாராயிற்று; குறுகி உகரமேற்காமல் நிற்றல், வழக்கில் வாராது.

(உ-ம்.) நிலவு, நிலா; கனவு, கனா---குறுகிஉகரமேற்றலும், இயல்பும்,
தரா, மிடா, கடா---இயல்புமாத்திரம் (இவை விகாரப்படா.)

இகரவீற்றுச் சிறப்புவிதி.

['அன்றி', 'இன்றி' என்பன.]

‡ ௧௭௩. அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே.

(இ - ள்.) அன்றி இன்றி என் வினை எஞ்சு இகரம் - 'அன்றி' 'இன்றி' என்னும் எதிர்மறைக்குறிப்புவினையெச்சங்களின் ஈற்றிலுள்ள இகரம், தொடர்பினுள் - செய்யுளில், உகரம் ஆய் வரின் - உகரமாய்த்திரிந்து வந்தால்,— இயல்பு - (வருகிறகசதபக்கள்) இயல்பாகும், (எ - று.)— தொடர்பு - செய்யுள்.

(உ - ம்.) "நாளன்று போகி" = அன்றி + போகி
"உப்பின்று புற்கை யுண்க" — இன்றி — புற்கை.

உகரமாகத்திரியாவிடின், நாளன்றிப்போகி, உப்பின்றிப்புற்கை எனப் பொதுவிதிப்படி வல்லெழுத்து மிகு மெனக் கொள்க. (௨௩)

['நாழி' 'உரி' என்பவற்றிற்குச் சிறப்புவிதி.]

௧௭௪. உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும் டகர முரியின் வழியே
யகர வுயிர்மெயா மேற்பன வரினே.

(இ - ள்.) (௧) உரி வரின் - உரிஎன்னும் முகத்தலளவுப்பெயர் (வருமொழியாக) வந்தால், நாழியின் - (நிலைமொழியாகநின்ற) நாழி என்னும் முகத்தலளவுப்பெயரினது, ஈறு உயிர்மெய் - ஈற்றிலுள்ள 'ழி' என்னும் உயிர்மெய், கெட - நீங்க, டகரம் - டகரமெய், மருவும் - (அவ்விடத்தில்) வரும்; (௨) உரியின் வழி - (நிலைமொழியாக நின்ற) உரி என்னும் முகத்தளவுப்பெயரின் பின், யகரஉயிர்மெய் ஆம் - யகரவுயிர்மெய் வரும்: ஏற்பன - (அவ்வுயிர்மெய் வருவதற்கு) ஏற்ற மொழிகள், வரின் - (வருமொழியாக) வந்து புணர்ந்தால்; (எ - று.)

(உ - ம்.) (௧) நாழி + உரி — நாடுரி — 'ழி' கெட, டகரம் தோன்றிற்று.

(௨) உரி + உப்பு — உரியவுப்பு | + மிளகு — உரியமிளகு } உரிவழி யகரம்
+ பயறு — உரியபயறு | + வரகு — உரியவரகு } தோன்றிற்று.

(உரி இரண்டு கொண்டது, நாழி.)

'ஏற்பன வரின்' எனவே, ஏலாதன வரின் உரியரிசி, உரியாழாக்கு என இச்சிறப்புவிதிபெறுமற் பொதுவிதிபெறு மெனக் கொள்க. (௨௪)

['புளி' என்பதற்குச் சிறப்புவிதி.]

௧௭௫. சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும்.

(இ - ள்.) சுவை - அறுசுவையுள்ஒன்றை யுணர்த்துகின்ற, புளி முன் - புளி என்னும் பெயரின் முன், (வல்லினம் வந்து புணர்ந்தால்),— இனம்மென்மையும் - (அவ்வல்லெழுத்து மிகுதலன்றி அதற்கு) இனமாகிய மெல்லெழுத்தும், தோன்றும் - (ஒரோரிடத்து) மிகும்; (எ - று.)

(உ-ம்.) புளி + கறி = புளிங்கறி | + தயிர் = புளிந்தயிர்
+ சோறு = புளிஞ்சோறு | + பாளிதம் = புளிம்பாளிதம்

புளிப்பாகிய கறி எனவும், புளிப்பையுடைய கறி எனவும் விரிக்கப்படுதலால், இவையே வேற்றுமை அல்வழி இரண்டுக்கும் உதாரணமாம்.

'மென்மையும்' என்ற இறந்தது தழுவிய இழிவுசிறப்பு உம்மையால், புளிக்கறி எனப் பொதுவிதிப்படிவலிமிகுதலே சிறப்பையுடையதாமென அறிக.

இகர ஐகாரவீற்றுச் சிறப்புவிதி.

‡ கஎ௬. அல்வழி இ ஐம் முன்ன ராயின்
இயல்பும் மிகலும் விகற்பமு மாகும்.

(இ - ள்.) அல்வழி - அல்வழிப் புணர்ச்சியில்,—இ ஐ முன்னர் - (நிலைமொழியீற்று) இகர ஐகாரங்களின் முன், ஆயின் -(வல்லினம்) வருமாயின்,—(க) இயல்பும்-இயல்பாதலும், (உ) மிகலும்-(பொதுவிதிப்படியே) மிகுதலும், (௩) விகற்பமும்-விகற்பித்தலும் [ஒன்றுக்கே ஒருகால் மிகாமையும் ஒருகால் மிகுதலும்], ஆகும்—; (எ - று.)

இவ்வாறு பொதுப்படக்கூறினாராயினும், இயல்பு மிகுதி விகற்பங்களை இடத்துக்கு ஏற்றபடி கொள்க.

ஒப்பின்முடித்தல் என்னும் உத்தியால், ஐகாரவீறும் உடன் கூறினார்.

பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கட்குவிதி முன்னமே அமைந்திருத்தலால், இச்சூத்திரவிதி அஃறிணைப்பெயர்க்கும் வினை முதலியவற்றிற்குமாம்.

(உ-ம்.) (க) புலி + சிறிது = புலிசிறிது
யானை + பெரிது = யானைபெரிது
செடி + கொடி = செடிகொடி
யானை + குதிரை = யானைகுதிரை
இடி + சுவர் = இடிசுவர்
உரை + கல் = உரைகல்
} இ ஐ முன் அல்வழியில் வலி இயல்பாயின.

(உ) மார்கழி + திங்கள் = மார்கழித்திங்கள்
ஆடி + கொண்டான் = ஆடிக்கொண்டான்
பனை + கை = பனைக்கை
} வலி மிக்கன.

(௩) கிளி + குறிது = கிளிகுறிது, கிளிக்குறிது
கடி + கமலம் = கடிகமலம், கடிக்கமலம்
தினை + சிறிது = தினைசிறிது, தினைச்சிறிது
} விகற்பித்தன. (உ௬)

ஈகாரவீற்றுச் சிறப்புவிதி.

[ஆப்பீமுன் நாற்கணம்.]

கஎஎ. ஆமுன் பகரவீ யனைத்தும்வரக் குறுகும்
மேலன வல்வழி யியல்பா கும்மே.

(இ - ள்.) ஆ முன் பகர ஈ-'ஆ' என்னும் பெயரின்முன் நின்ற பகர ஈகாரம் [ஆப்பீ], அனைத்தும்வர-(இருவழியிலும்) நாற்கணமும் வந்தால், குறுகும்-

குறகி இகரமாகும்; அல்வழி-அல்வழியில், மேலன-மேல் "அல்வழி இஐ" என்னுஞ் சூத்திரத்திற் கூறிய விதி மூன்றில்,இயல்பு ஆகும்-(குறுகியஅதன் முன் வருகிற வல்லினம்) இயல்பைப் பெறும்; (எ - று.)

(உ - ம்.) ஆப்பி + அரிது = ஆப்பியரிது | ஆப்பி + நன்று = ஆப்பிநன்று
+ குளிரும் = ஆப்பிகுளிரும் | + வலிது = ஆப்பிவலிது

'அல்வழி இயல்பாகும்' எனவே, வேற்றுமையில் ஆப்பிக்குளிர்ச்சி, ஆப்பித்திரட்சி எனப் பொதுவிதிப்படியே வலி மிகுமெனக் கொள்க.

இதில் "பகரவீ" என்றதும் வருஞ் சூத்திரத்தில் "பவ்வீ" என்பதும் - இடக்கரடக்கல். பகராஈ, பவ்வீ-பகரமெய்யின் மேல் ஏறிய ஈகாரம்.(ஆப்பி-பசுச்சாணம்.)

[சில ஈகாரவீற்றின்முன் வலி]

களஅ. பவ்வீ நீமீ முன்ன ரல்வழி
இயல்பாம் வலிமெலி மிகலுமாம் மீக்கே.

(இ - ள்.) (க) ப ஈ-(இடக்கர்ப்பெயராகிய) பகராஈகாரத்துக்கும், நீ-(நீக்குதலென்னும் பொருள்கொண்ட) 'நீ' என்ற முதனிலைத்தொழிற்பெயர்க்கும், மீ-(மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும்) 'மீ' என்ற சொல்லுக்கும், முன்னர்-முன்னே, அல்வழி-அல்வழிப்புணர்ச்சியில்,இயல்பு ஆம்-(வருகிற வல்லினம்) இயல்பாகும்; (உ) மீக்கு-(இவற்றுள்ளே) 'மீ' என்னுஞ் சொல்லுக்கு, வலி மெலி மிகலும் ஆம்-வல்லெழுத்து மிகுதலும் மெல்லெழுத்து மிகுதலும் ஆகும்; (எ - று.)

(உ - ம்.) (க)பீ + குறிது = பீகுறிது, சிறிது, தீது, பெரிது ⎫
நீ + கடிது — நீகடிது, சிறிது, தீது, பாற்று ⎬ இயல்பாயின.
மீ + கண் — மீகண், செவி, தலை, புறம் ⎭

(உ)மீ + கூற்று—மீக்கூற்று—வலிமிக்கது.
மீ + தோல்—மீந்தோல்—மெலிமிக்கது. (உஅ)

உகரவீற்றுச் சிறப்புவிதி.

[சில முற்றியலுகரத்தின் வலி]

‡ களகூ. மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீறு
ஆகு முகர முன்ன ரியல்பாம்.

(இ - ள்.) மூன்று (உருபு)-('ஒடு' என்னும்) மூன்றாம்வேற்றுமையுருபுக்கும், ஆறு உருபு - ('அது' என்னும்) ஆறாம் வேற்றுமை யுருபுக்கும், எண் - (இயல்பாயும் விகாரப்பட்டும் வரும்) எண்ணுப்பெயர்கட்கும், வினைத்தொகை-வினைத்தொகைக்கும், சுட்டு-சுட்டுப்பெயர்கட்கும், ஈறு ஆகும்-இறுதியாகிய, உகரம் முன்னர் - முற்றியலுகரத்தின் முன்னே, இயல்பு ஆம் - (வருகிற வல்லினம்) இயல்பாகும்; (எ - று.)

(உ-ம்.)அவனொடு + கொண்டான் = அவனொடுகொண்டான்—மூன்றனுருபு
பொன்னனது + செவி = பொன்னனதுசெவி--- ஆறனுருபு.

{ எழு + தலை = எழுதலை—இயல்பு எண்ணுப்பெயர்.
{ ஒரு, இரு, அறு, எழு + புறம் = ஒருபுறம்—விகார எண்ணுப்பெயர்.

விடு + கணை = விடுகணை, விரவு + படை = விரவுபடை வினைத்தொகை.

{ அது + கண்டான் = அதுகண்டான்—வேற்றுமை } சுட்டுப்பெயர்.
{ இது, உது + குறிது = இதுகுறிது—அல்வழி }

'சுட்டீறுரும்'என்றதன்உபலக்ஷணத்தால்,எதுகண்டான்,எதுபெரிது என வினாவீறுரும் முற்றியலுகரத்தின் முன்னும் வலி இயல்பாதல்கொள்க.

உது + காண் = உதுகாண், உதுக்காண் என இரண்டாம்வேற்றுமைத் தொகையில் விகற்பித்துவருவது, "இயல்பின் விகாரமும்" என்னுஞ்சூத்திரத்து 'அன்னபிறவும்' என்பதனால் அமையும்.

(இச்சூத்திரத்தில் 'உகரம்' எனப் பொதுப்படக் கூறியிருக்கவும்,மூற்றியலுகரமென்றே சிறப்பாகக்கொண்டது, இச்சூத்திரத்தைமேல்"வன்றொடரல்லன" என்பது முதலாக வருங் குற்றியலுகரச் சிறப்புவிதிச் சூத்திரங்களைச் சாரவைக்காமல் "அதுமுன்வரு மன்று" என்னும்முற்றியலுகரவிதிச் சூத்திரத்தின்முன் வைத்ததனு லென்று அறிக. அன்றியும், குற்றியலுகரவீறுகிய 'ஒடு'என்னும் மூன்றனுருபும். 'ஆது' என்னும்ஆறனுருபும், ஒன்று முதலிய எண்ணுப்பெயர்களும், வன்றொடரொழிந்த வினைத்தொகைகளும், 'அஃது' முதலிய சுட்டுப்பெயர்களும் என்பவற்றிற்கு விதி, மேல் "வன்றொடரல்லன", "இடைத்தொட ராய்தத்தொடர்" என்னும் இரண்டு சூத்திரங்களிலும் அடங்குமாறு காண்க. இதுபற்றியே, வன்றொடர்வினைத்தொகைமுன் வலியியல்பாதலைமாத்திரம்கீழ் "விதவா தனமன்" என்றதில் அடக்கியதும்.) (உகூ)

['அது' என்பதற்குச் சிறப்புவிதி.]

கஅ௦. அதுமுன் வருமன் றூன்றுந் தூக்கின்.

(இ - ள்.) அது முன் - 'அது' என்னுஞ் சுட்டுப்பெயரின் முன், வரும் - (வருமொழியாக) வருகிற, அன்று - 'அன்று' என்னும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று,—தூக்கின் - செய்யுளில்,—ஆன்று ஆம் - 'ஆன்று' என முதல் நீளும்; (எ - று.)

(உ - ம்.) அது + அன்று—அதான்று.

'ஆன்றேயாம்' என்னுமையால் அதன்று, அதுவன்று எனநீளாமலும்வரும்.

[குற்றியலுகரத்தின்முன் வலி: அல்வழி]

‡ கஅக. வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி.

(இ - ள்.) வன்றொடர் அல்லன முன் - வன்றொடரொழிந்த ஐந்து தொடர்க் குற்றியலுகரத்தின் முன்னும், (வருகிற வல்லினம்),—அல்வழி - அல்வழிப் புணர்ச்சியில், மிகா - இயல்பாம்; (எ - று.)

(உ - ம்.) ஆறு + தலை = ஆறுதலை --- நெடிற்றொடர்.
எஃகு + பெரிது = எஃகுபெரிது--- ஆய்தத்தொடர்,

வரகு + சிறிது =வரகுசிறிது --- உயிர்த்தொடர்.
வந்து + தந்தான் =வந்துதந்தான்--- மென்றொடர்.
எய்து + பொருள் =எய்துபொருள்---இடைத்தொடர்.

'வன்றொடரல்லனமுன்மிகா, என்றதனால், வன்றொடரின்முன்' எழுத்துச் சிறிது', 'படித்துத் தந்தான்' என அல்வழியில் வலி மிகு மென்க.

ஏழாம்வேற்றுமை யிடப்பொரு ளுணர நின்ற அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னும் மென்றொடர்க்குற்றியலுகரவீற்று இடைச்சொற்களின் முன் வரும் வல்லினம் மிகும்.

(உ - ம்.) அங்குக்கண்டான், இங்குச்சென்றான், உங்குத்தந்தான், எங்குப்பெற்றான்,ஆங்குக்கற்றான், ஈங்குச்சேர்ந்தான்,ஊங்குப்பார்த்தான்,யாங்குக்கண்டான், ஆண்டுச்சென்றான், ஈண்டுத்தந்தான், யாண்டுப்போயினான் என வரும்.

ஏழாம்வேற்றுமைக் காலப்பொருளுணர நின்ற அன்று,இன்று,என்று, பண்டு, முந்து என்னும் மென்றொடர்க் குற்றியலுகர வீற்று இடைச்சொற்களின்முன் வரும் வல்லினம்-அன்றுகண்டான், இன்றுசொன்னான், என்று தந்தான், பண்டுபோயினான், முந்துபெற்றான் என இயல்பாயே முடியும்.

இவையெல்லாம்சொல்லால் அல்வழியும்பொருளால்வேற்றுமையுமாதலால், சில அல்வழிவிதியையும் சில வேற்றுமைவிதியையும் ஏற்றன. (௩க)

[குற்றியலுகரத்தின்முன் வலி: வேற்றுமை.]

‡ க௯௨. இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

(இ - ள்.) இடைத்தொடர் - இடைத்தொடரும்,ஆய்தத்தொடர் - ஆய்தத்தொடரும், ஒற்று இடையில் மிகா நெடில் உயிர் தொடர் - ஒற்றுஇடையேமிகாத நெடிற்றொடரும் ஒற்றுஇடையேமிகாத உயிர்த்தொடரும்,முன்-ஆகிய இவற்றின் முன், வேற்றுமை மிகா-(வருகிற வல்லினம்)வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாம்; (எ - று.)

(உ - ம்.) மார்பு + கடுமை =மார்புகடுமை —இடைத்தொடர்.
எஃகு + சிறுமை =எஃகுசிறுமை —ஆய்தத்தொடர்.
நாகு + தீமை =நாகுதீமை ---மிகாநெடிற்றொடர்.
வரகு + கதிர் =வரகுகதிர் ---மிகாவுயிர்த்தொடர்.

'ஒற்றிடையின்மிகா' என்றதை, உயிர்த்தொடரோடும் கூட்டுக; 'ஒற்றிடையின் மிகா நெடிலுயிர்த்தொடர்' என்றது, வருஞ்சூத்திரத்தாற்கூறப்படும் டகர றகர வீறுக ளொழிந்த மற்றைய ஈறுகளை.

'ஒற்றிடையின் மிகா நெடிலுயிர்த்தொடர்முன்மிகாவேற்றுமை,என்றதனால், வீடு---வீட்டு, வயிறு---வயிற்று என ஒற்று இடையில் மிகும் நெடிற்

ஞொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கட்குமுன் வரும் வல்லினம்-வீட்டுச்சுவர், வயிற்றுக்கடுப்பு என வேற்றுமையிலும், மூட்டுப்பூச்சி, வெளிற்றுப்பனை என அல்வழியிலும் மிக்குவரு மென்று அறிக.

இங்குக் கூறப்படாத மென்றொடரின் முன்னும், வன்றொடரின்முன்னும் வண்டுக்கால், கொக்குச்சிறகு என வேற்றுமையில் வலிமிகு மென்க.

எனவே, ஆறுவகைக் குற்றியலுகரங்களுள் இடைத்தொடர், ஆய்தத்தொடர் (ஒற்றிடைமிகாத)நெடிற்றொடர்,(ஒற்றிடைமிகாத)உயிர்த்தொடர் இவற்றுக்குமுன் வேற்றுமை அல்வழி இரண்டிலும் வலிமிகா வென்றும்; (ஒற்றிடைமிகும்) நெடிற்றொடர் (ஒற்றிடைமிகும்)உயிர்த்தொடர்,வன்றொடர் இவற்றுக்குமுன் இருவழியிலும் வலிமிகு மென்றும்; மென்றொடர்முன் அல்வழியில் மிகா, வேற்றுமையில் மிகுமென்றும் கூறியதாயிற்று. (கஉ)

[டகர றகர ஈற்றுச் சில குற்றியலுகரங்கட்குச் சிறப்புவிதி.]

ஒற்றுஇடையேமிகும் நெடிற்றொடர் உயிர்த்தொடர்.

‡ கஅரு. நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.

(இ - ள்.) நெடிலோடு உயிர்த் தொடர் - நெடிற்றொடர்களும் உயிர்த்தொடர்களுமாகிய,குற்றுகரங்களுள்-குற்றியலுகரமொழிகளுள்,டறஒற்று-(அவ்வுகரம் ஏறிநின்ற) டகர றகர மெய்கள், வேற்றுமை - வேற்றுமைப் புணர்ச்சியில், மிக - பெரும்பாலும், இரட்டும்—; (எ - று.)

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்க.

நெடிற்றொடர் (உ - ம்.)	உயிர்த்தொடர்:
ஆடு + கால் = ஆட்டுக்கால்.	முரடு + மனிதன் = முரட்டுமனிதன்.
சோறு + வளம் = சோற்றுவளம்.	வயிறு + இடை = வயிற்றிடை.

(க) 'பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும்' எனவே, ட ற ஒற்றுச் சிறுபான்மை வேற்றுமையில் இரட்டாமையும்;(உ) 'வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டும்' எனவே, ட ற ஒற்றுச் சிறுபான்மை அல்வழியில் இரட்டுதலும்;(ங) 'டற ஒற்றுப் பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும்'எனவே, பிறஒற்றுக்கள் சிறுபான்மை இருவழியிலும் இரட்டுதலும் கொள்க.

(உதாரணம்.)

(க)	காடு + சென்றான் = காடுசென்றான் கிணறு + மூழ்கினான் = கிணறுமூழ்கினான்	வேற்றுமையில் ட ற ஒற்றுக்கள் இரட்டாவாயின.
(உ)	காடு + அரண் = காட்டரண் களிறு + யானை = களிற்றியானை	அல்வழியில் ட ற ஒற்றுக்கள் இரட்டின.
(ங)	வெருகு + கண் = வெருக்குக்கண்-வேற்றுமை எருது + மாடு = எருத்துமாடு—அல்வழி	இருவழியிலும்பிறஒற்றுக்கள் இரட்டின.

இனி, 'மிக' என்பதற்கு-வருமொழிமுதலில் வரும் வல்லெழுத்து மிக எனப் பொருள்கொள்ளுதலும் ஒன்று. (ஙங)

[மென்றொடரின்முன் நாற்கணம்: இருவழி.]

‡ கஅ௪. மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொட ராகா மன்னே.

(இ-ள்.) (க) மென்றொடர் மொழியுள்-மென்றொடர்க்குற்றியலுகரமொழிகளுள், சில - சிலசிலமொழிகள், —வேற்றுமையில்—, தம்இனம்-தமக்கு இனமாகிய, வன்றொடர் - வன்றொடர்க் குற்றியலுகர மொழிகளாகத் திரியும்; (உ) மன்-பல,ஆகா-அவ்வாறு வன்றொடர்க்குற்றியலுகரமாகத்திரியா.

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்க.

(உ - ம்.) (க) மருந்து + பை = மருத்துப்பை
குரங்கு + மனம் = குரக்குமனம்
இரும்பு + வலிமை = இருப்புவலிமை
கன்று + ஆ = கற்று
} வேற்றுமையில்வன்றொட ராயின.

(உ) வண்டு + கால் = வண்டுக்கால்
பந்து + நலம் = பந்துநலம்
ஞெண்டு + வளை = ஞெண்டுவளை
சங்கு + இனம் = சங்கினம்
} வேற்றுமையில் வன்றொட ராகாதன.

'சில வன்றொடராம்' எனவே ஆகாதன பல வென்பது தானே வந்து இயையவும்,, 'ஆகா மன்'என்றமிகையால், (க) அல்வழியிலும்சிறுபான்மை வன்றொடராதலும், (உ) இருவழியிலும் விகற்பித்து வருதலும் கொள்க.

(உ-ம்.) (க) நஞ்சு + பகைமை = நச்சுப்பகைமை
இரும்பு + மனம் = இருப்புமனம்
} அல்வழியில்வன்றொடராயின.

(உ) குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி
= குரக்குக்குட்டி
பாம்பு + தோல் = பாம்புத்தோல்
= பாப்புத்தோல்
} வேற்றுமையில் விகற்பித்தன.

அன்பு + தளை = அன்புத்தளை
= அற்புத்தளை
} அல்வழியில் விகற்பித்தன.

(இனி, இச்சூத்திரத்திற்கு மென்றொடர்க் குற்றியலுகரங்களுள் சில வேற்றுமையில் பெரும்பாலும் வன்றொடராகாதன என ஒரேவாக்கியமாகவும் உரைக்கலாம்: பல வேற்றுமையில் வன்றொடரா மென்றும், சில அல்வழியிலும் வன்றொடரா மென்றும் கருத்து அமையும்.) (ந௪)

[சில குற்றியலுகரத்துக்குச் சிறப்புவிதி.]

‡ கஅரு. ஐயீற் றுடைக்குற் றுக முமுளவே.

(இ - ள்.) ஐ - ஐகாரச்சாரியை, ஈறு உடை - இறுதியிற் பெற்றுவருகிற, குற்றுகரமும்-குற்றியலுகரமொழிகளும், உள - (சில) உண்டு; (எ-று.)

மேற்சூத்திரத்தைச் சாரவைத்ததனால்,மென்றொடரென்பது பெறப்படும். வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்க.

(உ - ம்.) பண்டு + காலம் = பண்டைக்காலம்
இன்று + நாள் = இற்றைநாள்
} அல்வழி.

மூந்து + வளம் — முந்தைவளம்			வேற்றுமை.
அன்று + அழகு— அற்றையழகு			

மேலைச்சூத்திரத்தைச் சாரவைத்தாராயினும், 'ஐயீற்றுடைக் குற்றுகரம்' எனப் பொதுப்படச் சொன்னதனால் - நேற்று + பொழுது—நேற்றைப் பொழுது, நேற்று + கூலி—நேற்றைக்கூலி எனவும்: பொழுது + செலவு—பொழுதைச்செலவு எனவும் பிறதொடர்களும் ஐகாரச்சாரியை பெறுதலும்;'ஐயீற்றுடைக் குற்றுகரம்'என உடைமையாக்கிக் கூறியதனால் - வருமொழிப் புணர்ச்சியை நோக்காமலே ஒன்று - ஒற்றை, இரண்டு - இரட்டை, வேடு - வேட்டை, ஏறு - ஏற்றை எனத் தனிமொழியாக நின்று ஐகாரம் பெறுதலும்; ஓராண்டு - ஓராட்டை, ஈராண்டு-ஈராட்டை என அடையடுத்தமொழியாக நின்று ஐகாரம் பெறுதலும் கொள்க. (ரு௫)

[திசைப்பெயர்க்குச் சிறப்புவிதி.]

‡ க௮௬. திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலு மாம்பிற.

(இ - ள்.) திசையொடு - (குற்றியலுகரவீறாகிய) திக்கைக்குறிக்கும் பெயரோடு, திசையும் - திக்கைக்குறிக்கும் பெயரும், பிறவும் - வேறு பொருள்களைக் குறிக்கிற பெயர்களும், சேரின் - (வருமொழியாக) வந்து புணருமிடத்து,—நிலை ஈறு - நிலைமொழியிறுதியில் நின்ற, உயிர்மெய் - 'கு' என்னும் உயிர்மெய்யும், க ஒற்று - (அதன் அயலில் நின்ற) ககர மெய்யும், நீங்கலும் - கெடுதலும்,—றகரம் - (ஈற்றயலில் நின்ற) றகரமெய், ன ல ஆ திரிதலும் - னகரமெய்யாகவும் லகரமெய்யாகவும் திரிதலும்,—ஆம் - ஆகும்; (எ - று.)

திசைப்பெயர் - திக்கைக் குறிக்கும் பெயர்.

ஏற்புழிக்கோடல் என்னும் உத்தியால்,நிலையீற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்குதல் - கிழக்கு குணக்கு குடக்கு வடக்கு என்பவற்றிற்கும், றகரம் னகரமாகத்திரிதல்-தெற்கு என்பதற்கும், றகரம் லகரமாகத் திரிதல் - மேற்கு என்பதற்கும் எனக் கொள்க. (குணக்கு - கிழக்கு. குடக்கு - மேற்கு.)

'பிற' என்ற மிகையால், கிழக்கு என்பது ழகாரத்தின் அகரம்கெட்டு முதல்நீண்டுவருதல் கொள்க.

(உ - ம்.)	வடக்கு	+ கிழக்கு	=வடகிழக்கு	உயிர்மெய்யும், ககர மெய்யும் கெட்டு வந்தன.
	குடக்கு	+ திசை	=குடதிசை	
	குணக்கு	+ நாடு	=குணநாடு	
	தெற்கு	+ மேற்கு	=தென்மேற்கு	உயிர்மெய் கெட,றகரம் னகரமாயிற்று.
		+ யாறு	=தென்யாறு	
	மேற்கு	+ காற்று	=மேல்காற்று	உயிர்மெய் கெட, றகரம் லகரமாயிற்று.
		+ ஊர்	=மேலூர்	

கிழக்கு + காற்று—கீழ்காற்று } உயிர்மெய்யும் ககரவொற்றும்அக
+ நாடு —கீழ்நாடு } ரமும் கெட்டு முதல் நீண்டது.

இன்னும் 'பிற' என்றதனால், கீழைக்குளம், கீழைச்சேரி: மேலைக் குளம், மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும்; வடக்கூர், வடக்குமலை, தெற்கூர், தெற்குமலை என மேற்காட்டிய விகார மின்றியும் வருதலும்; திசையோடு திசை புணரும்போது தெற்குவடக்கு வடக்குத்தெற்கு,கிழக் குமேற்கு, மேற்குக்கிழக்கு எனப் பொதுவிதி பெறுதலும் கொள்க. வடதி சைக்காற்றுக்கு வழங்குகிற வாடை யென்ற பெயரில் வடக்கு என்ற பகுதி முதல் நீண்டதும் இங்கேயே அமைக்கப்படும்.'கவ்வொற்று நீங்கலும்'என்ற தன் குறிப்பால், வருமொழி முதல்வலி மிகாமை பெறப்படும். (கூசு)

[‘தேங்கு’ என்பதற்குச் சிறப்புவிதி]

† கஙஎ. தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.

(இ - ள்) காய் வரின்-காய் என்னுஞ்சொல்(வருமொழியாக) வந்தால் தெங்கு - தெங்கு என்னும் நிலைமொழி, நீண்டு - (முதல்) நீண்டு, ஈறு உயிர் மெய் கெடும் - ஈற்றிலுள்ள 'கு' என்னும் உயிர்மெய் நீங்கும்; (எ - று.)

(உ-ம்.) தெங்கு + காய்—தேங்காய். இது,வேற்றுமைப்புணர்ச்சி.(கூஎ)

[எண்ணுப்பெயர்கட்குச் சிறப்புவிதி.]

† கஙஅ. எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்
ஒன்று முதலெட் டீரு மெண்ணுள்
முதலீ ரெண்முதல் நீளும் மூன்றாறு
எழு * குறுகுமா றேழல் லவற்றின்
ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்
ஏகு மேற்புழி யென்மனார் புலவர்.

(இ - ள்.) எண் - எண்ணலளவுப்பெயரும், நிறை - நிறுத்தலளவுப் பெயரும், அளவும் - மற்றை முகத்தலளவு நீட்டலளவுப் பெயர்களும், பிற வும் - பிறபெயர்களும், எய்தின் - (வருமொழியாக) வந்தால்,—ஒன்றுமுதல் எட்டு ஈறு ஆம் எண்ணுள் - (நிலைமொழியாகநின்ற)ஒன்றுமுதல் எட்டு ஈறா கிய எண்களுள், முதல் ஈர் எண் - முதலிலுள்ள (ஒன்று இரண்டு என்னும்) இரண்டெண்களும், முதல் நீளும் - முதற்குறில் நீளும்; மூன்று ஆறு எழு - மூன்றும் ஆறும் எழும், குறுகும் - (முதல்நெடில்) குறுகும்; ஆறு எழு அல் லவற்றின் - ஆறும் எழும் அல்லாத (ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து எட்டு என்னும்) ஆறு எண்களினுடைய, ஈறு உயிர்மெய்யும்-இறுதியிலுள்ள உயிர் மெய்களும், எழன் - எழு என்பதனுடைய, உயிரும் - (இறுதியி

* 'எழ்' என மெய்யீற்றுப்பெயராகக் கொண்டார், தொல்காப்பியனார்,

துள்ள) உகர உயிரும், ஏகும் - கெடும்: ஏற்பு உழி - ஏற்கும் இடங்களில், என் மனார் புலவர் - என்றுசொல்வர் அறிவுடையோர்; (எ - று.)

இச்சூத்திரத்துக் கூறிய விகாரமும், இப்புணர்ச்சியை முற்றமுடித்தற் காக அடுத்த ஐந்து சூத்திரங்களிற் கூறும்விகாரங்களும் பெரும்பாலும்பண் புத்தொகைக்கே உரியனவா மென்பார், 'ஏற்புழி' என்றார். இன்னும் அத னால், எழு என்பது முதல்குறுகுமிடத்து உகரம் கெடா தென்றும், உகரம் கெடுமிடத்து முதல்குறுகா தென்றும் கொள்க.

'ஏற்புழி' என்பதை, மேல்வரும் நான்குசூத்திரங்களிலும் கூட்டுக.

எழு என்பது முற்றியலுகர வீறாயினும் 'ஒன்றினமுடித்தல் தன்னின முடித்தல்' என்னும் உத்தியால், குற்றியலுகரங்களோடு சேர்த்துக் கூறினர்.

(உ - ம்) பத்து = அறுபது, எழுபது

ஆறு எழு	+	கழஞ்சு = அறுகழஞ்சு, எழுகழஞ்சு நாழி = அறுநாழி, எழுநாழி சாண் = அறுசாண், எழுசாண் வகை = அறுவகை, எழுவகை	ஆறும் எழும் முதல் குறுகின.

எழு + கடல் = எழ்கடல்—எழுன் ஈற்றுயிர் கெட்டது.

மற்றவற்றிற்கு உதாரணம், பின்னே அந்தந்தஎண்களின் சிறப்புச்சூத் திரங்களிற் காட்டப்படும்.

இன்னும் 'ஏற்புழி' என்றதனால், ஒன்றுமுதல் எட்டீறும் எண்களுள் இரண்டு முதலியன - இரண்டு கழஞ்சு, மூன்று படி, நான்கு பொருள், ஐந்து படை, ஆறு குணம், எழு கடல், எட்டுக் கோடி எனப் பொதுவிதி யால் முடிதலும்; "ஒன்றுதேரினன்," "ஒன்றிரண்டு" எனச் சிறுபான்மை ஒன்றும் அங்ஙனம் முடிதலும் கொள்க.

'எழ்குறுகும்மாறு' என்று பாடமோதுவாரு முளர். (௯அ)

['ஒன்று,' 'இரண்டு' என்பவற்றிற்குச் சிறப்புவிதி.]

† க௪௯. ஒன்றன் புள்ளி ரகர மாக
இரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே.

(இ - ள்.) ஒன்றன் - (ஈற்று உயிர்மெய் கெட்டுநின்ற) ஒன்று என்னும் எண்ணினது, புள்ளி - னகரமெய்யானது, ரகரம் ஆக - ரகரமெய் யாக,— இரண்டன் - (ஈற்றுஉயிர்மெய்கெட்டுநின்ற) இரண்டுஎன்னும் எண்ணினது, ஒற்று - ணகரமெய்யும், உயிர் - (ரகரமெய்யின்மேல் உள்ள) அகரவுயிரும், ஏக - கெட,—உ வரும் - (அவ்விரண்டு ரகரமெய்யின்மேலும்) உகரம்வரும்: (ஏற்பு உழி) - ஏற்குமிடத்து; (எ - று.)

'ஏற்புழி' என்றதனல் - முதல்நீண்டவிடத்து உகரம் வாராதென்றும், உகரம் வருமிடத்து முதல் நீளாதென்றும் கொள்க. *

(உ - ம்.) ஒன்று + ஆயிரம் = ஓராயிரம் + கலம் = ஓர்கலம் + நாழி = ஓர்நாழி + யானை = ஓர்யானை		ஒன்று முதல்நீண்டு ஈற்றுயிர்மெய் கெட்டு னகரம் ரகரமாயிற்று.
இரண்டு + ஆயிரம் = ஈராயிரம் + கலம் = ஈர்கலம் + நாழி = ஈர்நாழி + யானை = ஈர்யானை		இரண்டு முதல்நீண்டு ஈற்றுயிர்மெய்யும் ணகரமெய்யும் அகரவுயிரும் கெட்டன.
ஒன்று இரண்டு	+ ஆயிரம் = ஓராயிரம், இராயிரம் கழஞ்சு = ஒருகழஞ்சு, இருகழஞ்சு நாள் = ஒருநாள், இருநாள் வழி = ஒருவழி, இருவழி	முதல் நீளாமல் ரகரமெய்யின்மேல் உகரம் பெற்று வந்தன.

ஒரு + ஆயிரம் = ஓராயிரம் என உரகங்கெட்டுப் புணர்தலை "முற்றுமற்றொரோவழி" என்றதனற் கொள்க. ஓர்கலம், ஓர்நாள், ஓர்வகை என முதல் நீளாமலும் உகரம்பெருமலும் வருதல், உரையிற்கோடலால்அமையும். (ஙக)

['மூன்று' என்பதற்குச் சிறப்புவிதி.]

† கசுo. மூன்ற னுறுப்பழிவும் வந்தது மாகும்.

---

* ஒன்று இரண்டு என்னும் எண்கள் ஓர் ஈர் என நிற்பது வருமொழி முதலில் உயிர்வருமிடத்தே எனவும், முதல்நீளாது உகரம்பெற்று ஒரு இரு என நிற்பது மெய்வருமிடத்தே எனவும் கொண்டு, இவை மாறுபடவரின் வழுவா மென்பாரு முளர்; நல்னூலார்தாமே (எஉ) "ஆனவொன்றுதி யோர்புடை யொப்பினமே" என்றும், (ஙஅகூ) "வேறவற்றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்" என்றும் மெய்ம்முதன்மொழிமுன் 'ஓர்' என உபயோகித்துள்ளா ராதலால், அங்ஙனங்கொள்ளுதல் சாலாது. தொல்காப்பியத்தில் அக்காலத்துப் பெரும்பான்மைவழக்குப்பற்றி அங்ஙனம்வரையறுத்துக் கூறியிருந்ததனை நன்னூலார் 'இறந்ததுவிலக்க'லால் ஒழித்து இலக்கியங் கண்டு "முதலீரெண்முதல்நீளும்" என்றும், "ஒன்றன்புள்ளி ரகரமாக, இரண்டனொற்றுயிரேக உவ்வருமே" என்றும் பொதுப்படச் சூத்திரஞ் செய்திருக்க, நன்னூலுரையில் அவ்வரையறையைப்புகுத்துதல் நூற்கருத்துக்கு ஒத்ததன்றும். "மாக்கேழ்மடநல்லா யென்றரற்றுஞ் சான்றவர், நோக்கார்கொல் நொய்யதோர் துச்சிலை - யாக்கைக்கோ, ரீச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே, காக்கை கடிவதோர் கோல்" என்ற நாலடியாரில் உயிர்முதன் மொழிவருதலோடு மெய்ம்முதன்மொழி வருதலோடு பேதமற ஓர் எனநின்றமையுணர்க. "ஓர்பப்பத்தாம்," "அச்சாணியன்ன தோர்சொல்," "ஆயிரங் காக்கைக் கோர்கல்," "இருவீறு," "இருவியல்," "இருவாறு," "ஒருவாறு" என இங்ஙனம் நியதியின்றிச் சான்றோர் செய்யுள்களிலும் உரைநடைகளிலும் வந்துள்ளவை அளவிறந்தன காண்க.

(இ - ள்.) மூன்றன் - (இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற) மூன்று என்னும் எண்ணினது, உறுப்பு - னகரமெய்யானது, அழிவும் - கெடுதலும், வந்ததும் - (வருமொழிமுதலில்) வந்த மெய்யாகத் திரிதலும், ஆகும்—: (ஏற்புஉழி) - ஏற்குமிடத்து; (எ - று.)

'ஏற்புழி' என்றதனால் - முதல்குறுகுதல் மெய்வருமிடத்து என்றும், அவ்விடத்து னகரமெய் வருமெய்யாகத் திரியுமென்றும்; னகரமெய்கெடுதல் உயிர்வருமிடத்து என்றும், அவ்விடத்து முதல்குறுகாது என்றும் கொள்க.

(உ-ம்.) மூன்று + ஆயிரம் = மூவாயிரம் } உயிர்வரமுதல்குறுகாமல்ஈற்றுயிர்
+ உலகு = மூவுலகு } மெய்யும்னகரமெய்யும்கெட்டன.

மூன்று + கலம் = மூக்கலம் } மெய்வர முதல்குறுகி ஈற்றுயிர்
+ நூறு = மூந்நூறு } மெய் கெட்டு னகரமெய் வந்த
+ வட்டி = முவ்வட்டி } மெய்யாகத் திரிந்தது.

இன்னும், 'ஏற்புழி' என்றதனால் - வகரம் வருமிடத்து மூவ்வழி என முடிதலே யன்றி, மூவழி என முதல்குறுகாமல் னகரமெய்கெட்டு முடிதலும்; யகரம் வருமிடத்து மூவ்யானை என னகரமெய் வகரமெய்யாகத்திரிந்து முடிதலும் கொள்க. (சo)

['நான்கு' என்பதற்குச் சிறப்புவிதி.]

† கசுக. நான்கன் மெய்யே லறவா கும்மே.

(இ - ள்.) நான்கன்-(இறுதி உயிர்மெய் கெட்டுநின்ற) நான்குஎன்னும் எண்ணினது, மெய் - னகரமெய், ல ற ஆகும் - லகரமெய்யாகவும் றகரமெய்யாகவும் திரியும்: (ஏற்பு உழி) - ஏற்குமிடத்து; (எ - று.)

'ஏற்புழி'என்றதனால் - னகரமெய் லகரமாகத்திரிவது உயிரும் இடையினமும் வருமிடத்து என்றும், றகரமாகத்திரிவது வல்லினம் வருமிடத்து என்றும், மெல்லினம் வருமிடத்துத் திரியாது என்றும் கொள்க.

(உ - ம்) நான்கு + ஆயிரம் = நாலாயிரம் } உயிரும் இடையினமும் வர ஈறு
+ வகை = நால்வகை } கெட்டு னகரம் லகரமாயிற்று.

நான்கு + கவி = நாற்கவி } வலிவர ஈறுகெட்டு னகரம்
+ பால் = நாற்பால் } றகரமாயிற்று.

நான்கு + மணி = நான்மணி } மெலிவர ஈறுகெட்டு னகரம்
+ நாழி = நானாழி } திரியாது நின்றது.

இன்னும் 'ஏற்புழி' என்றதனால் - மூவினமெய்களும் வருமிடத்துநாலு குதிரை, நாலுநாள், நாலுவழி என ஈறுகெட்டு னகரம் லகரமாய் உகரம் பெற்றுவருதலும் கொள்க.

நான்மணி, நானாழி என்றவற்றில் நால் என்றும் பிரிக்கலாம். (சக)

['ஐந்து' என்பதற்குச் சிறப்புவிதி.]

† கசுஉ. ஐந்தனுெற் றடைவது மினமுங் கேடும்.

(இ - ள்.) ஐந்தன் - (இறுதிஉயிர்மெய் கெட்டு நின்ற) ஐந்து என்னும் எண்ணினது, ஒற்று - நகரமெய்யானது, அடைவதும்-(வருமொழிமுதலில்) வருகிற மெய்யாகத் திரிதலும், இனமும் - அதற்கு இனமாகத் திரிதலும், கேடும் - கெடுதலுமாம்: (ஏற்பு உழி) - ஏற்குமிடத்து; (எ - று.)

'ஏற்புழி' என்றதனால் - நகரமெய் வருமெய்யாகத் திரிவது மெல்லினம் வருமிடத்து என்றும், இனமாகத்திருவது வல்லினம் வருமிடத்து என்றும், கெடுவது உயிரும் இடையினமும் வருமிடத்து என்றும்கொள்க.

(உ - ம்) ஐந்து + மூன்று = ஐம்மூன்று — நகரம் வருமெய்யாகத் திரிந்தது.

ஐந்து + பால் = ஐம்பால் — வருமெழுத்துக்கு இனமாயிற்று.

ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்
+ வகை = ஐவகை } நகரமெய் கெட்டது.

'அடைவதும் இனமும்' என்றமையின், அருத்தாபத்தியால் ஐந்நூறு, ஐந்தொழில் என நகர தகரங்கள் வருமிடத்து நகரமெய் இயல்பாய் நிற்கும்.

['எட்டு' என்பதற்குச் சிறப்புவிதி.]

† கஉங. எட்ட னுடம்பு ணவ்வாகு மென்ப.

(இ - ள்.) எட்டன் - (இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற) எட்டென்னும் எண்ணினது, உடம்பு - டகரமெய்யானது, ண ஆகும் - (நாற்கணமும் வர) ணகரமெய்யாகத் திரியும், என்ப-என்று சொல்வர் (புலவர்); (எ - று.)

(உ-ம்.) எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்
+ கழஞ்சு = எண்கழஞ்சு | எட்டு + நாழி = எண்ணாழி
+ வகை = எண்வகை

[தொண்ணூறு, தொள்ளாயிரம்.]

‡ கஉச. ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீஇப் பஃ தகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

(இ - ள்.) ஒன்பானொடு - ஒன்பஃதுடனே, பத்தும்-பத்து என்பதும், நூறும்-நூறுஎன்பதும், ஒன்றின்-(வருமொழியாகவந்து) புணருமாயின்,— முன்னதின் ஏனைய-முன்னதாகிய நிலைமொழி தவிர மற்றை வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும், முரணி-(முறையே நூறெனவும் ஆயிரமெனவும்) திரித்து,—ஒவ்வொடு - (நிலைமொழிமுதலிலுள்ள) ஒகரவுயிரோடு, தகரம் - தகரமெய்யை, நிறீஇ - (அதற்குஆதாரமாக முன்) நிறுத்தி,—பஃது- (அந்நிலைமொழியிறுதியிலுள்ள) பஃதை, அகற்றி - கெடுத்து,—னவ்வை - (அயலில்நின்ற) னகரமெய்யை, நிரலே - முறையே, ண ள ஆ - (பத்தின் திரிபாகிய நூற்றின் புணர்ச்சிக்கு) ணகரமெய்யாகவும் (நூற்றின்திரிபாகிய ஆயிரத்தின் புணர்ச்சிக்கு) ளகரமெய்யாகவும், திரிப்பது - திரித்துக்கொள்வது,—நெறி - முறைமையாம்; (எ-று.)—முரணுதல்-ஓரிலக்கம் மேலேற்றி மாற்றுதல்.

('முன்னதின்' என்பதிலுள்ள 'இன்' உருபு - ஐந்தாம் வேற்றுமை நீக்கப் பொருளதாய், 'ஏனைய' என்னும் இடைச்சொல்லடியாகத் தோன்றிய குறிப்பு வினையாலணையும் பெயரைக்கொண்டது. இனி, முன்னதின்-முன்னதாகிய பத்தினாலே, ஏனைய முரணி - மற்றை வருமொழியாகிய பத்தையும் நூற்றையும் பெருக்குமாற்றால் நூறெனவும் ஆயிரமெனவுந் திரித்து என்று உரைப்பாருமுளர்; இப்பொருளுக்கு, 'இன்' உருபு-ஏதுப்பொருளது. இனி, இதற்கு மற்று ஓர் உரை வருமாறு:—முன்னதின்-நிலைமொழியாகிய ஒன்பஃது என்பதனைப்போல, ஏனைய முரணி - வருமொழியாகிய பத்தையும் நூற்றையும் முறையே திரித்து என்று பொருள்; அதாவது:—எட்டையடுத்த எண்ணாகிய ஒன்பஃது அல்லது ஒன்பது என்பதிலுள்ள பஃது அல்லது பது என்பது, அதற்கு அடுத்த எண்ணாகிய பத்து என்பதன் விகாரம்போன்றிருத்தலால், அதற்கு ஏற்ப, எண்பது என்பதற்கு அடுத்ததானத்து எண்ணில் [ஒன்பதுபத்தில்] வருமொழியாகிய பத்தை அதற்கு அடுத்ததானத்து எண்ணாகிய நூறு என்றும், என்னூறு என்பதற்கு அடுத்ததானத்து எண்ணில் [ஒன்பது நூறுஎன்பதில்] வருமொழியாகிய நூறு என்பதை அதற்கு அடுத்ததானத்து எண்ணாகிய ஆயிரம் என்றும் திரித்து என்றபடி: பத்து என்னுந் தானத்திற்கு வரமாட்டாத குறைவுடைய ஒன்பது என்பது பதுஎன்னும் இறுதியைப்பெற்றதுபோல, நூறு என்னுந் தானத்திற் குறைந்த நிலையிலிருக்கின்ற பத்து என்பது நூறுஎன்றுதிரிதலையும், ஆயிரமென்னுந்தானத்திற் குறைந்த நிலையிலிருக்கிற நூறு என்பது ஆயிரம் என்று திரிதலையும் பெறுமென்க. (இவ்வுரைக்கு, 'இன்' உருபு - ஒப்புப்பொருளது.)

(உ - ம்.) ஒன்பஃது + பத்து=(க) ஒன்பஃதுநூறு, (உ) தொன்பஃதுநூறு, (ங) தொன்நூறு, (ச) தொண்நூறு, (ரு) தொண்ணூறு.

ஒன்பஃது + நூறு= (க) ஒன்பஃது ஆயிரம், (உ) தொன்பஃது ஆயிரம், (ங) தொன்ஆயிரம், (ச) தொள்ஆயிரம், (ரு) தொள்ளாயிரம்; இது, தொளாயிரம் எனவும் வழங்குகின்றது.

'பஃதகற்றி' என்பதோடு பொருந்த 'ஒன்பஃதோடு' என்னுமல் ஒன்பானொடு' என்றமையால், ஒன்பது நின்றுபுணரினும் இவ்விதியே பெறும்.

இப்புணர்மொழிகள் ஒகரவுயிர் ஒன்றுஒழிய மற்றவையெல்லாம் விகாரப்பட்டுக்கிடந்தமையால் மரூஉவென்று கொள்ளாமல், தொல்லாசிரியர் முடித்தவாறே முடித்துக்காட்டினேமென்பார், 'நெறி' என்றாரென்க. (சச)

['ஒன்று' முதலிய எட்டு எண்களின்முன் 'பத்து.']

† கசரு. முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தின்
இடையொற் றேக லாய்த மாகல்
எனவிரு விதியு மேற்கு மென்ப.

(இ - ள்.) முதல் - முதலிலுள்ளவையான, இரு நான்கு ஆம் எண் முனர்-எட்டு எண்களின் முன்னும் வருகிற, பத்தின் - பத்து என்னும் எண்

ணினது, இடை - நடுவில் நின்ற, ஒற்று - தகரமெய்யானது,—ஏகல் - கெடுதலும், ஆய்தம் ஆகல் - ஆய்தமாகத்திரிதலும், என - என்று, இருவிதியும்- இவ்விரண்டு விதிகளையும், ஏற்கும்—, என்ப - என்று சொல்வர், (புலவர்).

முத லிருநான்காம் எண் - ஒன்று முதல் எட்டு ஈறாயின.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு	(உ - ம்) + பத்து	ஒருபது, ஒருபஃது; இருபது, இருபஃது; முப்பது, முப்பஃது; நாற்பது, நாற்பஃது; ஐம்பது, ஐம்பஃது; அறுபது, அறுபஃது; எழுபது, எழுபஃது; எண்பது, எண்பஃது.

['ஒருபஃது' முதலியவற்றுக்குச் சிறப்புவிதி.]

கக௬. ஒருபஃ தாதிமுன் னொன்றுமுத லொன்பான்
எண்ணு மவையூர் பிறவு மெய்தின்
ஆய்த மழியவாண் டாகுந் தவ்வே.

(இ - ள்.) ஒருபஃது ஆதிமுன்-ஒருபஃது முதலாகிய எட்டெண்களின் முன்,—ஒன்று முதல் - ஒன்றுமுதலாகிய, ஒன்பான் எண்ணும் - ஒன்பது எண்களும்,—அவை - அவ்வெண்களை, ஊர் - ஊர்ந்த, பிறவும் - மற்றவையும்,—எய்தின் - வந்து புணருமாயின்,— ஆய்தம் - (நிலைமொழியிடையிலே நின்ற) ஆய்தமானது, அழிய - கெட, த - (இயல்பாகிய) தகரம், ஆண்டு ஆகும் - அவ்வாய்தம் நின்றவிடத்து வரும்; (எ - று.)

(உ - ம்.) ஒருபஃது + ஒன்று = ஒருபத்தொன்று—எண்;

இருபஃது + மூன்றுகலம் = இருபத்துமூன்றுகலம்—எண்ணடுபிறிது. மற்றவையும் இப்படியே. ஐயமொழித்தற்கு, 'அவையூர்பிறவும்' என்றார்.

'ஆய்தங்கெடத் தகரம்வரும்' என்றமையின், அருத்தாபத்தியால்ஆய்தமில்லாத ஒருபது முதலானவைகளும் இவ்வாறு தகரம்பெறும் என்க.(சசு)

['பத்து,' ஒன்பது' என்பவற்றின்முன் மற்றை எண்கள்.]

கக௭. ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்
ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்
ஏற்ப தேற்கு மொன்பது மினைத்தே.

(இ - ள்.) ஒன்று முதல் ஈரைந்து - ஒன்று முதலாகிய பத்து எண்களும், ஆயிரம் - ஆயிரமும், கோடி - கோடியும் ஆகிய, எண்-எண்ணுப்பெயரும், நிறை - நிறைப்பெயரும், அளவும்-அளவுப்பெயரும், பிற-பிறபெயரும், வரின் - (வருமொழியாக) வந்து புணருமாயின்,— பத்தின் - (நிலைமொழியாகிய) பத்தினது, ஈறு உயிர்மெய் - இறுதியிலுள்ள 'து' என்னும் உயிர்மெய்யை, கெடுத்து - போக்கி, இன்னும் - இன்சாரியை யாயினும், இற்றும்-இற்றுச்சாரியை யாயினும்,ஏற்பது- (அவ்விடத்திற்குப்)பொருந்துவது ஒன்றை,ஏற்கும்-ஏற்றுநிற்கும்; ஒன்பதும்-ஒன்பது என்னும் நிலைமொழியும்,

இனைத்தே - இத்தன் மையதேயாம் [இவ்விரண்டு சாரியைகளில் ஒன்றை ஏற்று நிற்கும்]; (எ - று.)

(உ - ம்.) பத்து + ஒன்று=பதினொன்று, பதிற்றொன்று.

ஒன்பது + ஆயிரம்=ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றாயிரம்.

பதினொன்று - உம்மைத்தொகை. பதிற்றொன்று - பண்புத்தொகை. ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றாயிரம் இரண்டும் - பண்புத்தொகை. உம்மைத் தொகை - கூட்டலும், பண்புத்தொகை - பெருக்கலுமாம்.

'ஏற்பதேற்கும்' என்றதனால் - பதினொன்று பதினாயிரம் என இன் சாரியை உம்மைத்தொகை பண்புத்தொகை இரண்டிலும் ஏற்றபடி வருதலும், இற்றுச்சாரியை பண்புத்தொகைக்கே வருதலும், ஒன்பதன் ஈற்றுயிர்மெய் கெடாமல் நிற்றலும், பத்துக்கோடி ஒன்பதுகோடி எனப் பொது விதிப்படியே முடிதலும் கொள்க. (௬எ)

['பத்து' முன் இரண்டு பன்னிரண்டு.]

‡ ககூஅ. இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வொற்று னவ் வாகு மென்ப.

(இ - ள்.) இரண்டு - இரண்டு என்பது, முன் வரின்-(வருமொழியாக) முன்வருமாயின்,—பத்தின் - பத்து என்னும் நிலைமொழியினது, ஈறு உயிர்மெய் - ஈற்றிலுள்ள 'து' என்னும் உயிர்மெய், கரந்திட - கெட,—ஒற்று - (நடுநின்ற) தகரமெய், ன ஆகும் - னகரமெய்யாகத் திரியும், என்ப - என்று சொல்வர்; (எ - று.)—(இங்கு 'என்ப' என்பதை அசையாகக் கொள்ளுதல் பொருத்தம்; 'என்ப'என்பதை அசையென்பர், தொல்காப்பியவுரையிலும், சீவகசிந்தாமணியுரையிலும் நச்சினார்க்கினியர்.)

(உ - ம்.) பத்து + இரண்டு=பன்னிரண்டு. இவ்விதி,உம்மைத்தொகைக்கே.

* பத்து + நான்கு=பன்னான்கு, பத்து + மூன்று=பன்மூன்று, பத்து + ஒன்று=பன்னொன்று எனச் சிறுபான்மை வருதலையும் இச்சூத்திரத்தில் அடக்கிக்கொள்க;இனி அவற்றை மரூஉவின் பாற்படுத்தலும் ஒன்று. (௬அ)

---

* "கொடுத்தனன் பலிக்குத் தன்னைக் குமரனென் றறிந்து குன்ற மெடுத்தவன் திதிபன்னான்கி னிலைடயுவா வின்றா கென்று,"

"அட்டமியி லோதினா லாசானுக் காகாது
சிட்டருக்குப் பன்னான்கு தீதாகும்—கெட்டவுவா
வித்தைக்கு நாசமாம் வெய்ய பிரதமையிற்
பித்தரும் பேசார் பிழை" எனவும்,

"பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறம்" எனவும்,

"அருக்கர் பன்னிருவரு மகன்றார்" எனவும் காண்க.

['ஒன்று முதலியன தன்முன் தான்வருதல்.]

† கககூ. ஒன்ப தொழித்தவெண் ணொன்பது மிரட்டின்
முன்ன தின் முன்னல வோட வுயிர்வரின்
வவ்வு மெய்வரின் வந்தது மிகல்நெறி.

(இ - ள்.) ஒன்பது ஒழித்த - ஒன்பது என்கின்ற எண் ஒன்றனையும் ஒழித்து நின்ற, எண் ஒன்பதும் - (ஒன்று முதல் பத்து ஈறாகிய) ஒன்பது எண்களும், இரட்டின் - இரட்டித்து [தனக்குமுன்னே தான்] வந்தால்,— முன்னதின் - நிலைமொழியினது, முன் அல - முதலெழுத்தல்லாதவைக ளெல்லாம், ஓட - கெட [முதலெழுத்து ஒன்றுமாத்திரமே நிற்க],—உயிர் வரின் - வருமொழி உயிர்முதல்மொழியாயின், வவ்வும் - வகரமெய்யும்,— மெய் வரின் - வருமொழி மெய்ம்முதல்மொழியாயின், வந்ததும் - வந்த மெய்யும், மிகல் - மிகுதல், நெறி - முறைமையாம்; (எ - று.)

(உ-ம்.) ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு ஐவைந்து அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து.

'நெறி' என்றமிகையால் - நந்நான்கு என நான்கு குறுகுதலும்,ஒரோ வொன்று, ஒன்றொன்று என இவ்வாறு வருதலும்; வேறு + வேறு = வெவ் வேறு; பாதி + பாதி = பப்பாதி எனப் பிறபெயர்கள் இரட்டிக்கும்போது இவ்வாறு விகாரமடைதலும்; இன்னும் குற்றியலுகரப்புணர்ச்சி விதியுட் கூறுதவை உளவாயின் அவையும் கொள்க. இவற்றில் வெவ்வேறு,பப்பாதி என்பவை மரூஉ மொழியுமாம். (சுக)

ஊகாரவீற்றுச் சிறப்புவிதி.

[பூவின்முன் வல்லினம்.]

‡ உ00. பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும். *

(இ - ள்.) பூ பெயர் முன் - பூ என்னும் பெயர்ச்சொல்லின் முன், இனம் மென்மையும் தோன்றும் - (வருகிற வல்லினம் பொதுவிதியால்மிகு தலேயல்லாமல்) அவற்றிற்கு இனமாகிய மெல்லினமும் மிகும்; (எ - று.)

(உ - ம்.) பூ + கொடி = பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம்,பூம்பொழில்.

இவற்றுள் - பூ என்பது மலராயின், பூவையுடைய கொடி என இரண் டாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையும்; அழகாயின், பூவாகிய கொடி எனப் பண்புத்தொகையுமாம். (சு0)

எகார ஒகார வீற்றுச் சிறப்புவிதி.

[இடைச்சொல் எ, ஒ முன் வலி.]

‡ உ0க. இடைச்சொல் எ ஒ முன்வரி னியல்பே.

* 'புணரும்' என்றும் பிரதிபேதம்.

(இ - ள்.) இடைச்சொல் - இடைச்சொற்களாகிய, எ ஓ முன் - எ ஓ வென்பவற்றின் முன், வரின் - (வல்லினம்) வந்தால், இயல்பே-(பொதுவிதியால் மிகாமல்) இயல்பேயாகும்; (எ - று.)

(உ-ம்.) அவனே + கண்டான் = அவனேகண்டான், அவனோகண்டான்.

வினைப்பொருளில் வரும் எகார ஓகாரங்களின் முன் வலி இயல்பாதல் கீழ் "ஈற்றியாவினா" என்னுஞ் சூத்திரத்திற் கூறப்பட்டதனால், இவ்விதிமற்றைப்பொருள்களில் வருமிடத்து எனக் கொள்க. (௫௧)

ஐகாரவீற்றுச் சிறப்புவிதி.

[ஐகாரத்தின் முன் மெய்]

‡ ௨०௨. வேற்றுமை யாயி னைகா னிறுமொழி
ஈற்றழி வோடு மம் மேற்பவு முளவே.

(இ - ள்.) ஐகான் இறுமொழி - ஐகாரவீற்றுச் சொற்கள், வேற்றுமை ஆயின் - வேற்றுமைப்புணர்ச்சியில் வருமாயின், ஈறு அழிவோடும் - ஈற்று ஐகாரம் கெடுதலுடனே அம் - 'அம்' சாரியையை, ஏற்பவும் - பெற்று முடிவனவும், உள - சிலவுள்ளன; (எ - று.)

'அழிவோடும்' என்ற உம்மையால், அழியாமையோடுஅம்ஏற்பவும்உள் என்க. வருமெழுத்தைச்சொல்லாமையால்,நாற்கணத்துள்ஏற்பனகொள்க.

(உ - ம்.) தாழை	+ பூ	= தாழம்பூ	ஐ அழிவோடுஅம் ஏற்றன.
எலுமிச்சை	+ மரம்	= எலுமிச்சமரம்	
ஆவிரை	+ வேர்	= ஆவிரம்வேர்	
புன்னை	+ கானல்	= புன்னையங்கானல்	ஐ அழியாமையோடு அம் ஏற்றன.
முல்லை	+ தொடை	= முல்லையந் தொடை	

'ஏற்பவுமுள' என்றதனால், முல்லை + புறவு = முல்லைப்புறவு, கொல்லை + சாரல் = கொல்லைச்சாரல் எனப் பொதுவிதிபெற்றுவருதலும் கொள்க.

['பனை'என்பதற்குச் சிறப்புவிதி.]

௨०௩. பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோ யம்முந் திரள்வரி னுறழ்வும்
அட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை.

(இ - ள்.) (க) பனை முன்-பனை என்னும் பெயரின் முன்,கொடிவரின்-கொடி என்னும் பெயர் வருமாயின், மிகலும் - (வந்தககரம்) மிகுதலும்,—(உ) வலி வரின்-க ச த பக்கள் வருமாயின், ஐ போய் - (நிலைமொழியீற்று) ஐகாரம் கெட்டு, அம்மும் - 'அம்'சாரியை பெறுதலும்,—(ங)திரள் வரின்-திரள் என்னும் பெயர் வருமாயின், உறழ்வும் - (வந்த தகரம் மிகுந்தும் ஐ போய் 'அம்' சாரியைபெற்றும்) விகற்பித்தலும்,—(ச) அட்டு உறின் - அட்டு என்னும் பெயர் வருமாயின், ஐகெட்டு - (நிலைமொழியீற்று) ஐகாரம் கெட்டு, அ நீள்வும் - (வருமொழிமுதல்) அகரம் ஆகாரமாதலும்,—ஆம் - ஆகும்:—வேற்றுமை - வேற்றுமைப்புணர்ச்சியில்; (எ - று.)

(உ-ம்.) (க) பனை + கொடி = பனைக்கொடி—மிக்கது.
(உ) பனை + காய் = பனங்காய்—ஐகெட்டு 'அம்' பெற்றது.
(ங) பனை + திரள் = பனைத்திரள், பனந்திரள்—உறழ்ந்தது.
(ச) பனை + அட்டு = பனாட்டு—ஐ கெட்டு அ நீண்டது. (ருங)

உயிரீற்றுப்புணரியல் முற்றிற்று.

ச. மெய்யீற்றுப்புணரியல்.

மெய்யெழுத்துக்களை இறுதியிலுடைய நிலைமொழிகளோடு உயிர் முதல் மொழியும் மெய்ம்முதல்மொழியு மாகிய வருமொழிகள் புணரும் விதத்தைச்சொல்லும் இயல்.

மெய்யீற்றின் முன் உயிர்.

[பொதுவிதி.]

‡ உ0ச. உடல்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே.

(இ-ள்.) உடல் மேல்-(நிலைமொழியின் இறுதியில்நின்ற) மெய்யெழுத்தின்மேல், உயிர் - (வருமொழிமுதலிலுள்ள) உயிரெழுத்து, வந்து ஒன்றுவது - வந்து கூடிநிற்பது,—இயல்பே - இயல்புபுணர்ச்சியேயாம்; (எ-று.)*

(உ-ம்.) புகழ் + அழகிது = புகழழகிது —அல்வழி.
வேல் + எறிந்தான் = வேலெறிந்தான்—வேற்றுமை. (க)

[தனிக்குறில்முன் மெய்க்குச் சிறப்புவிதி.]

‡ உ0ரு. தனிக்குறில் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்.

(இ-ள்.) தனி குறில் முன் - தனித்த குற்றெழுத்தை யடுத்து நின்ற, ஒற்று - மெய்,—உயிர் வரின் - (வருமொழிமுதலில்) உயிர் வந்தால், இரட்டும் - இரட்டித்து நிற்கும்; (எ-று.)

(உ-ம்.) மண் + அழகிது = மண்ணழகிது—அல்வழி.
பொன் + அணி = பொன்னணி—வேற்றுமை. (உ)

மெய்யீற்றின் முன் மெய்.

[யகரமொழிந்த மெய்களின் முன் யகரம்.]

‡ உ0சு. தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரம்
துன்னு மென்று துணிநரு முளரே.

(இ-ள்.) தன் ஒழி - தன்னை [யகரத்தை] ஒழிந்த, மெய் முன்-(மொழிக்கு இறுதியில் வரும் ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்னும் பத்து) மெய்களின் முன்னும், ய வரின் - (வருமொழிமுதலில்) யகரம் வந்தால், இகரம் துன்னும் - இகரம் (இடையில் வந்து) சேரும், என்று—, துணிநரும்-(அருமையாகக்) கொள்பவர்களும், உளர் - (சிலர்) உண்டு; (எ-று.)

---

* 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் உலகத்து முறைமை யெனினுமாம்' என்பது, பழையஉரை.

(உ-ம்.) வேள் + யாவன் =வேளியாவன் —அல்வழி.
மண் + யாப்பு =மண்ணியாப்பு—வேற்றுமை.

'துணிநரும்' என்ற உம்மையால், வேள்யாவன், மண்யாது எனப் பொஃதுவிதி * பெறுமென்பார் பலருளரென்க. (கூ)

[சில ஈற்று முதனிலைத்தொழிற்பெயர்க்கும் ஏவற்கும் சிறப்புவிதி.]

உ0எ. ஞணநமலவளன வொற்றிறு தொழிற்பெயர்
§ ஏவல் வினைநனி யவ்வல் மெய்வரின்
உவ்வுறு மேவ லுறாசில சில்வழி.

(இ-ள்.) (க) ஞணநமலவளன - ஞ ண ந ம ல வ ள ன என்கிற, ஒற்று - (எட்டு) மெய்களையும், இறு - இறுதியாகவுடைய, தொழிற்பெயர்- (முதனிலைத்) தொழிற்பெயர்களும், ஏவல் வினை - ஏவலொருமை வினைகளும் ஆகிய இவற்றின் முன், ய அல் மெய் - யகரத்தை ஒழிந்த (மொழிக்குமுதலில் வரும் க ச த ப ஞ ந ம வ என்னும் எட்டு) மெய்களும், வரின்- (வருமொழி முதலில்) வருமாயின், நனி - பெரும்பாலும், உ உறும் - உகரச்சாரியை (நிலைமொழியீற்றில்) பொருந்தும்;—(உ) சில ஏவல் - சில ஏவல்வினைகள், சில் வழி - சிலஇடங்களிலே, உறா - (அவ்வுகரச்சாரியையைப்) பொருந்தாவாம்; (எ-று.)

இங்கே - 'தொழிற்பெயர்', 'ஏவல்வினை' என்றது - பகுதிமாத்திரமே நின்று அந்தந்தப்பொருளை உணர்த்துகின்ற முதனிலைத் தொழிற்பெயர்களையும், ஒருமையேவல்களையும்.

(க) அல்வழி. (உதாரணம்.) வேற்றுமை

அல்வழி			வேற்றுமை	
உரிஞ்	+ கடிது	= உரிஞுக்கடிது	+ கடுமை	= உரிஞுக்கடுமை
உண்	+ சிறிது	= உண்ணுச்சிறிது	+ சிறுமை	= உண்ணுச்சிறுமை
பொருந்	+ தீது	= பொருநுத்தீது	+ தீமை	= பொருநுத்தீமை
திரும்	+ பெரிது	= திருமுப்பெரிது	+ பெருமை	= திருமுப்பெருமை
வெல்	+ ஞான்றது	= வெல்லுஞான்றது	+ ஞாற்சி	= வெல்லுஞாற்சி
வவ்	+ நீண்டது	= வவ்வுநீண்டது	+ நீட்சி	= வவ்வுநீட்சி
துள்	+ மாண்டது	= துள்ளுமாண்டது	+ மாட்சி	= துள்ளுமாட்சி
தின்	+ வலிது	= தின்னுவலிது	+ வலிமை	= தின்னுவலிமை

என இருவழியிலும் முதனிலைத்தொழிற்பெயர்கள் உகரம் பெற்றன.

உரிஞ்	+ கொற்றா	= உரிஞுகொற்றா	வெல்	+ ஞெள்ளா	= வெல்லுஞெள்ளா
உண்	+ சாத்தா	= உண்ணுசாத்தா	வவ்	+ நாகா	= வவ்வுநாகா
பொருந்	+ தேவா	= பொருநுதேவா	துள்	+ மனிதா	= துள்ளுமனிதா
திரும்	+ பூதா	= திருமுபூதா	தின்	+ வளவா	= தின்னுவளவா

என ஏவல்வினைகள் உகரம்பெற்றன.

(உ) உகரச்சாரியை பெற்றும் பெறாமலும் வரும் ஏவல்வினைகள் ண ன ல ள என்னும் நான்கு ஈற்றனவுமாம்: (உ-ம்.) உண்கொற்றா, தின்சாத்தா,

* கஙஅ - ஆஞ் சூத்திரம். § 'ஏவல்வினைமுனும்' என்ற பாடம் சிறக்கும்.

வெல்பூதா, துள்வள்வா என உகரம் பெறுமல் வந்தன. ஞ ந ம வ என்னும் நான்கு ஈறும், உகரம்பெற்றே வரும்.

சிறுபான்மை உண்ஞு, தின்னு என வருமொழி நோக்காமல் உகரம் பெறுதலும், வாருசாத்தா வாழுவளவா எனப் பிற ஈறுகள் உகரம்பெறுதலும் உள்ளன வென்பார், 'நனி' என்றூர்.
கீழ் 'யவ்வரி னிகரந் துன்னும்' என்றதனுல், யகரத்தை இங்கு விலக்கினுர்.

[நகரவீற்றுத் தொழிற்பெயர்க்குச் சிறப்புவிதி]

உ0௪. நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை.

(இ - ள்.) ந இறு தொழிற்பெயர்க்கு - நகரத்தை இறுதியாகவுடைய முதனிலைத் தொழிற்பெயர்க்கு,—வேற்றுமை - வேற்றுமையில்,—அவ்வும் ஆம் - (உகரச்சாரியையேயன்றி) அகரச்சாரியையும் பொருந்தும்;(எ - று.)

(உ-ம்.) பொருந் + கடுமை	=பொருநக்கடுமை	வேற்றுமையில்
+ நன்மை	=பொருநநன்மை	அகரச்சாரியை
+ வன்மை	=பொருநவன்மை	பெற்றது.

(பொருநுதல் - ஒருவர் மற்ருெருவர்போல வேடம்கொள்ளும் பொருநரது தொழிலாதலால், ஒத்தலென்னும் பொருளது; பொருநர் - கூத்தர்.)

ணகர னகர வீறு.

[ணகர னகர வீற்றின் இயல்பும் திரிபும்.]

‡ உ0௫. ணன வல்லினம் வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக்கு அல்வழிக்கு
அனைத்துமெய் வரினு மியல்பா கும்மே.

(இ - ள்.) (க) ணன - ணகர னகரங்கள், வேற்றுமைக்கு - வேற்றுமைப்புணர்ச்சியில், வல்லினம் வர - (வருமொழிமுதலில்) வல்லினம் வந்தால், டற உம் - (முறையே) டகரமாகவும் றகரமாகவும், பிறவரின்-மெல்லினமும் இடையினமும் வந்தால், இயல்பும் - இயல்பாகவும், ஆகும்—; (உ) அல்வழிக்கு - அல்வழிப்புணர்ச்சியில், அனைத்து மெய் வரினும் - மூன்றினமெய்களும் வந்தாலும், இயல்பு ஆகும் - இயல்பேயாம்; (எ - று.)— 'வேற்றுமைக்கு,' 'அல்வழிக்கு' என்பன - உருபுமயக்கம்.

(உ - ம்.) (க) கண்	+ களிறு	=கட்களிறு	வேற்றுமையில் ணன
பொன்	+ தகடு	=பொற்றகடு	வல்லினம் வரட்டறஆயின
மண் பொன்	+ மாட்சி	=மண்மாட்சி, பொன்மாட்சி	வேற்றுமையில் பிற
	+ வன்மை	=மண்வன்மை, பொன்வன்மை	வர இயல்பாயின.
(உ) மண் பொன்	பெரிது	=மண்பெரிது, பொன்பெரிது	அல்வழியில்
	+ மாண்டது	=மண்மாண்டது, பொன்மாண்டது	பலவும் வர
	யாது	=மண்யாது, பொன்யாது	இயல்பாயின.

ஒப்பின்முடித்தல் என்னும்உத்தியால், னகரத்தையும் உடன்கூறினுர்; பின்னேகூட்டிச்சொல்லப்படும்எழுத்துக்களுக்கும்இவ்வுத்தியையேகொள்க.

[ணகர னகர வீற்றின் கேடு.]

‡ உகo. குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.

(இ - ள்.) குறில் அணைவு இல்லா - (தனிக்) குற்றெழுத்தைச் சாரா மல் ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்துள்ள, ணனக்கள் - ணகர னகரமெய்களானவை,—வந்த - (வருமொழிக்கு முதலாக) வந்த, நகரம்—, திரிந்த உழி - திரிந்தவிடத்து, கேடு - தாம் கெடுதலை, நண்ணும் - பொருந்தும்; (எ - று.)

நகரம் திரிதல், *"னலமுன் றனவும்" என்னுஞ்சூத்திரத்தாற் கூறப்படும்.

	அல்வழி.	வேற்றுமை.
(உ - ம்.) தூண்	+ நன்று —தூணன்று	+ நன்மை—தூணன்மை
பசுமண்	+ நன்று —பசுமணன்று	+ நன்மை—பசுமணன்மை
வலியன்	+ நன்று —வலியனன்று	+ நன்மை—வலியனன்மை
கோன்	+ நல்லன்—கோனல்லன்	+ நன்மை - கோனன்மை.

[சில ணகரவீற்றுப் பெயர்க்குச் சிறப்புவிதி.]

உகக. சாதி குழூஉப் பரண் கவண்பெய ரிறுதி
இயல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற
டவ்வா கலுமா மல்வழி யும்மே.

(இ - ள்.) (க) சாதி - சாதிபற்றிவரும் பெயர்கட்கும், குழூஉ - கூட்டம்பற்றிவரும் பெயர்கட்கும், பரண் கவண் பெயர்-பரண் கவண் என்னும் பெயர்கட்கும், இறுதி - ஈற்றிலுள்ள ணகரமானது, வேற்றுமைக்கு - வேற்றுமைப்புணர்ச்சியிலும், இயல்பு ஆம் - (வல்லினம்வந்தால்) இயல்பாகும்—; (உ) உணவு எண் - உணவிற்குரிய (எள் என்னும் பொருளையுடைய) எண் என்னும் பெயர்க்கும், சாண் - சாண் என்னும் (நீட்டலளவைப்) பெயர்க்கும், (ஈற்றுணகரமானது), அல்வழியும் - அல்வழிப்புணர்ச்சியிலும், ட ஆகலும் ஆம் - (வல்லினம் வந்தால்) டகரமாகத் திரிதலையும் பொருந்தும்.

(உ.-ம்.) (க) பாண் + தொழில் = பாண்டொழில்-சாதிப்பெயர் }
அமண் + சேரி = அமண்சேரி - குழூஉப்பெயர் } வேற்றுமை
பரண் + கால் = பரண்கால் - பரண்பெயர் } யிலும் இய
கவண் + கடுமை = கவண்கடுமை-கவண்பெயர் } ல்பாயின.

(உ) எண் + பெரிது = எட்பெரிது—எண்பெயர் } அல்வழியிலும்
சாண் + கோல் = சாட்கோல் = சாண்பெயர் } திரிந்தன.

'டவ்வாகலுமாம்' என்ற உம்மையால், எண் + கடிது—எண்கடிது, சாண் + கோல்—சாண்கோல் என இயல்பாதலே சிறப்பா மென்க.

'பிற' என்ற மிகையால் - வேற்றுமையில் பாண் + குடி = பாணக்குடி, அமண் + சேரி = அமணச்சேரி எனச் சாதி குழூஉப் பெயர்கள் அகரச்சாரியைபெறுதலும், அட்டூண் + துழனி = அட்டூண்டுழனி எனச் சிறுபான்மை பிறபெயரிறுதி இயல்பாதலும்; மண் + குடம் = மண்குடம், மட்குடம்

---

* இவ்வியலின் உச-ஆஞ் சூத்திரம்.

என விகற்பித்துவருதலும்; இருவழியிலும் இன்னும் ணகரமெய்யீற்றுள் அடங்காதவைஉண்டாயின் அவையும் கொள்க. (அ)

[னகரவீற்றுச் சாதிப்பெயர்க்குச் சிறப்புவிதி.]

உகஉ. னஃகான் கிளைப்பெய ரியல்பு மஃகான்
அடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே.

(இ - ள்.) னஃகான் கிளை பெயர் - னகரத்தை இறுதியிலுடைய சாதிப்பெயர்,—இயல்பும் - (வல்லினம்வர ஈறுதிரியாமல்) இயல்பாதலும், அஃகான் அடைவும்-அகரச்சாரியையைப் பெறுதலும், வேற்றுமைப் பொருட்கு - வேற்றுமைப் புணர்ச்சியில், ஆகும்—; (எ - று.)

(உ - ம்.) எயின் + குடி = எயின்குடி, எயினக்குடி
சேரி = எயின்சேரி, எயினச்சேரி.

'பொருட்கே' என்ற மிகையால் - எயின் + மரபு = எயினமரபு, எயின் + வாழ்வு = எயினவாழ்வு, எயின் + அணி = எயினவணிஎன மற்றைக் கணங்கள்வரினும் அகரச்சாரியை பெறுதலும்; எயின் + பிள்ளை = எயினப் பிள்ளை, எயின் + மன்னன் = எயினமன்னன் என அல்வழியில் அகரச்சாரியை பெறுதலும் கொள்க. (கூ)

['மீன்' என்னும் மொழிக்குச் சிறப்புவிதி.]

உகங. மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே.

(இ - ள்.) மீன் - மீன் என்னும் பெயரின் இறுதியிலுள்ள னகரம்,—வேற்றுமை வழி - வேற்றுமைப்புணர்ச்சியில், (வல்லெழுத்து வந்தால்), றவ்வொடு - றகரத்தோடு, பொரூஉம் - விகற்பித்துநிற்கும்; (எ-று.) னகரம் றகரமாகத் திரிந்தும் திரியாமலும் வருமென்றபடி.

(உ-ம்.) மீன் + கண் = மீற்கண், மீன்கண்
செவி = மீற்செவி, மீன்செவி } விகற்பித்து வந்தது. (க0)

['தேன்' என்னும் மொழிக்குச் சிறப்புவிதி.]

† உகச. தேன்மொழி மெய்வரி னியல்பும் மென்மை
மேவி னிறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி.

(இ - ள்.) (க) தேன் மொழி - தேன் என்னுஞ் சொல், மெய் வரின் - (மூன்றின) மெய்களும் (வருமொழிமுதலில்) வந்தால், இயல்பும் - (இறுதியிலுள்ள னகரமெய்) இயல்பாதலும்,—(உ) மென்மை மேவின் - மெல்லினம்வந்தால், இறுதி அழிவும் - அவ்விறுதி னகரமெய் (இயல்பாதலேயன்றிக்) கெடுதலும்,—(ங) வலி வரின் - வல்லினம் வந்தால், ஈறு போய் - அவ்வீற்று னகரமெய் (இயல்பாதலேயன்றிக்) கெட, வலி மெலி மிகலும் - (வந்த) வல்லினமாவது (அதற்கு இனமான) மெல்லினமாவது மிகுதலும், ஆம் - ஆகும், இரு வழி - வேற்றுமை அல்வழி இரண்டிலும்; (எ - று.)

அல்வழி.	(உ - ம்.)	வேற்றுமை.	
(க) தேன் + கடிது	= தேன்கடிது	+ செம்மை = தேன்செம்மை	இயல்பு
மாண்டது	= தேன்மாண்டது	மாட்சி = தேன்மாட்சி	
யாது	= தேன்யாது	யாப்பு = தேன்யாப்பு.	
(உ) தேன் + மொழி	= தேன்மொழி	+ மலர் = தேன்மலர்	இயல்பும்,
	= தேமொழி	= தேமலர்	அழிவும்.
(ங) தேன் + குழம்பு	= தேன்குழம்பு	+ குடம் = தேன்குடம்	இயல்பும்,
	= தேக்குழம்பு	= தேக்குடம்	வலிமிகலும்,
	= தேங்குழம்பு	= தேங்குடம்	மெலிமிகலும்

['எகின்' என்பதற்குச் சிறப்புவிதி.]

உகரு. மரமல் லெகின்மொழி யியல்பும் அகரம்
மருவ வலிமெலி மிகலு மாகும்.

(இ - ள்.) (க) மரம் அல் - மரத்தின்பெய ரல்லாத, எகின் மொழி - (அன்னப்பறவையின் பெயராகிய) எகின் என்னுஞ் சொல், இயல்பும் - (அல்வழியில் இயல்பாதலேயன்றி வேற்றுமைப்புணர்ச்சியிலும் வல்லினம் வர இறுதி னகரம்) இயல்பாதலும்;—(உ) அகரம் மருவ - (இருவழியிலும்) அகரச்சாரியை பொருந்த, வலி மெலி மிகலும் - வல்லெழுத்தாவது (அதற்குஇனமான) மெல்லெழுத்தாவது மிகுதலும், ஆகும்—; (எ - று.)

(உ - ம்) (க) எகின் + சிறை	= எகின்சிறை	வேற்றுமையில் வலிவர இயல்பாயிற்று.
தலை	= எகின்றலை	
(உ) எகின் + புள்	= எகினப்புள்	அல்வழியில் அகரம்வர வலி மெலி மிக்கன.
	= எகினம்புள்	
எகின் + கால்	= எகினக்கால்	வேற்றுமையில் அகரம் வர வலி மெலி மிக்கன.
	= எகினங்கால்	

அகரம்வருதற்கு, வருமெழுத்தைச்சொல்லாமையால், நாற்கணமுங்கொள்க.
(உ - ம்.) எகின் + மாட்சி = எகினமாட்சி, எகினவாழ்க்கை, எகினவழகு.

['குயின்' 'ஊன்' என்னுஞ் சொற்களுக்குச் சிறப்புவிதி.]

உகசு. குயினூன் வேற்றுமைக் கண்ணு மியல்பே.

(இ - ள்.) குயின் - குயின் என்னும் பெயரும், ஊன் - ஊன் என்னும் பெயரும்,—வேற்றுமைக்கண்ணும்-வேற்றுமைப்புணர்ச்சியிலும், இயல்பே- (இறுதி னகரம்) இயல்பேயாகும்; (எ-று.)—(குயின்-மேகம். ஊன் - தசை.)

(உதாரணம்.)

குயின் + கடுமை = குயின்கடுமை	ஊன் + தீமை = ஊன்றீமை
சிறுமை = குயின்சிறுமை	பெருமை = ஊன்பெருமை.

['மின்' முதலிய நான்கிற்குச் சிறப்புவிதி.]

உகஎ. மின்பின் பன்கன் தொழிற்பெய ரனைய
கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்.

(இ - ள்.) (க) மின் பின் பன் கன் - மின்முதலியநான்குசொற்களும், தொழிற்பெயர் அனைய * முதனிலைத்தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரச்சாரியை பொருந்தும்;—(உ) கன் - (இவற்றுள்) கன்என்னுஞ் சொல், அ எற்று - (வல்லினம்வந்தால் உகரச்சாரியையை யேயன்றி அகரச்சாரியையையும் பெற்று, மென்மையோடு உறழும் - மெல் லெழுத்தோடு விகற்பிக்கும் [வருகிற வல்லெழுத்தாவது அதற்கு இன மான மெல்லெழுத்தாவது மிகப்பெறும்]; (எ - று.)—(பன் - ஓர்புல், கன்- சிறுதராசுதட்டு.)

(க)	அல்வழி.	(உ - ம்.)	வேற்றுமை.
மின், பின், பன், கன் +	கடிது = மின்னுக்கடிது	+	கடுமை = மின்னுக்கடுமை
	நன்று = மின்னுநன்று		நன்மை = மின்னுநன்மை
	வலிது = மின்னுவலிது		வன்மை = மின்னுவன்மை

என இருவழியிலும் தொழிற்பெயர்போல உகரம் பெற்றன.

(உ) கன் + தட்டு = கன்னத்தட்டு
= கன்னந்தட்டு } அல்வழியில் அகரம்பெற்று உறழ்ந்தது.

கன் + தூக்கு = கன்னத்தூக்கு
= கன்னந்தூக்கு } வேற்றுமையில் அகரம் பெற்று உறழ்ந்தது. (கச)

['தன்' 'என்' 'நின்' என்பவற்றிற்குச் சிறப்புவிதி.]

‡ உகஅ. தன்னென் னென்பவற் றீற்றுனவ் வன்மையோடு
உறழும் நின்னீ றியல்பா முறவே.

(இ - ள்.) (க) தன் என் என்பவற்று - (தான் யான் என்பவற்றின் விகாரமாகிய) தன் என் என்னும் மொழிகளினுடைய, ஈறு ன - இறுதியி லுள்ள னகரமெய்யானது, வன்மையோடு உறழும் - (வல்லினம்வந்தால்) தனக்கு இனவல்லெழுத்தாகிய றகரமாகத் திரிந்தும் திரியாது இயல்பாகி யும் விகற்பிக்கும்;—(உ) நின் ஈறு-(நீ என்பதன் விகாரமாகிய)நின் என்னும் மொழியினது இறுதியிலுள்ள னகரமெய்யானது, இயல்பு ஆம் - (வல்லி னம்வந்தால் திரியாமல்) இயல்பேயாகும்; (எ-று.)—இவ்விதி வேற்றுமைப் புணர்ச்சிக்கே யென அறிக.

(உ - ம்.) (க) தன் + பகை = தன்பகை, தற்பகை
என் + பகை = என்பகை, எற்பகை } னகரம்உறழ்ந்தது.

(உ) நின் + பகை = நின்பகை—னகரம் இயல்பாயிற்று.

'உறவே' என்ற மிகையால்-உன் + பகை = உன்பகை என நீ என்பதன் திரிபாகிய உன் என்பதன் னகரம் வலிவர இயல்பாதலும், மான்குளம்பு வான்சிறப்பு என வேற்றுமையிற் சிறப்புவிதி சொல்லப்பெறாதவை இயல் பாதலும்; வரின் + கொள்ளும் = வரிற்கொள்ளும் என அல்வழியில் செ யின்என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொதுச்சூத்திரத்தால் இயல்பா காமல் திரிதலும்;(மின் பின் முதலியவை மின்கடிது, மின்கடுமை என இரு

* உ0எ - ஆஞ் சூத்திர விதி.

வழியிலும் சாரியைபெறுதலும் திரிதலுமின்றி வருதலும்); இன்னும் ணகர மெய்யீற்றுள் அடங்காதவை இருந்தால் அவையும் கொள்க. (கரு)

மகரவீறு.

[பொதுவிதி.]

‡ உகக. மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும்.

(இ - ள்.) (க) ம ஈறு - மகரத்தை இறுதியிலுடைய சொற்கள், (நாற்கணங்களும் வந்து புணரும்பொழுது), ஒற்று அழிந்து - (இறுதியிலுள்ள) மகரமெய் கெட்டு, உயிர் ஈறு ஒப்பவும் - உயிரீற்றுச்சொற்கள் போலப் புணர்வனவும்,—(உ) வன்மைக்கு இனம் ஆ(க்) திரிபவும் - (வல்லினம் வந்தால் கெடாமல்) அவற்றிற்கு இனமான மெல்லெழுத்தாகத் திரிவனவும், ஆகும்—; (எ - று.)

உயிரீறுஒத்தலாவது - செயற்கையுயிரீறாய் நின்று இயற்கை யுயிரீறு போல உயிர்வந்தால் * உடம்படுமெய்பெறுதலும், வல்லினம்வந்தால் § மிகுதலும், மெல்லினமும்இடையினமும்வந்தால் || இயல்பாகப் புணர்தலுமாம்.

அல்வழி. (உ - ம்.) வேற்றுமை.

(க) வட்டம் + ஆழி = வட்டவாழி	மரம் + அடி = மரவடி	இரு வழியிலும் மவ்வீறு கெட உயிரீறு ஒத்தது.
கல் = வட்டக்கல்	கிளை = மரக்கிளை	
நேமி = வட்டநேமி	நார் = மரநார்	
வாரி = வட்டவாரி	வேர் = மரவேர்	

(உ) மரம் + சிறிது = மரஞ்சிறிது, நம் + கை = நங்கை—இனமாகத்திரிந்தது.

'இனமாத்திரியும்' என்றமையால், மரம் + பெரிது = மரம்பெரிது; சிறியேம் + பண்பு = சிறியேம்பண்பு எனப் பகரம்வருமிடத்து மகரம் பகரத்துக்கு இனமாதலின் திரியாது நிற்கும். (கசு)

[சிறப்புவிதி.]

உஉ0. வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்
அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள.

(இ - ள்.) (க) வேற்றுமை - வேற்றுமைப்புணர்ச்சியில், (வல்லினம் வந்தால்), ம போய் - மகரஈறு கெட்டு, வலி மெலி உறழ்வும் - வல்லினமாவது (அவற்றிற்கு இனமான) மெல்லினமாவது மிகுதலும்;—(உ) அல்வழி - அல்வழிப்புணர்ச்சியில், உயிர் - உயிரும், இடை - இடையினமும், வரின் - வந்தால், இயல்பும் - (கெடாது) இயல்பாதலும், உள - உள்ளனவாம்; (எ - று.)

(உ -ம்.) (க) குளம் + கரை = குளக்கரை, = குளங்கரை } வேற்றுமையில் மப் போய் வலிமெலி உறழ்ந்தது.

(உ) குளம் + அழகிது = குளமழகிது, மரம் + வலிது = மரம்வலிது } அல்வழியில் உயிர்இடை வர இயல்பாயிற்று. (கஎ)

* கசுஉ-ஆஞ் சூத்திரம். § கசுரு-ஆஞ் சூத்திரம். || கருஅ-ஆஞ் சூத்திரம்.

['நும்' முதலிய நான்கிற்குச் சிறப்புவிதி.]

‡ உஉக. நும்தம்,
எம்நம் மீறு மவ்வரு ஞநவே.

(இ - ள்.) நும் தம் எம் நம் - நும் முதலிய நான்கு விகாரமொழிகளுக்கும், ஈறு ஆம் - இறுதியாகிய, ம - மகரமெய்யானது,—வரும் ஞ ந - (வருமொழிமுதலில்) வருகிற ஞகர நகரங்களாகத் திரியும்; (எ - று.)—இவை-முறையே நீர், தாம், யாம், நாம் என்பவற்றின் விகாரங்கள்; வேற்றுமை.

(உதாரணம்.)

நும், தம், எம், நம் } + ஞாண் = நுஞ்ஞாண், தஞ்ஞாண், எஞ்ஞாண், நஞ்ஞாண்.
நூல் = நுந்நூல், தந்நூல், எந்நூல், நந்நூல்.

உம் + ஞாண் = உஞ்ஞாண், உம் + நூல் = உந்நூல் என நீர் என்பதன் திரிபாகிய உம் என்பதன் ஈற்று மகரமும் வரும் ஞ ந வாகத் திரிதலை உரையிற்கோடலாற் கொள்க. (கஅ)

['அகம்' என்பதற்குச் சிறப்புவிதி.]

‡ உஉஉ அகமுனர்ச் செவிகை வரி னிடையன கெடும்.

(இ - ள்.) அகம்முனர்-அகம் என்னும் உள்ளிடப்பெயரின்முன், செவி கை வரின்-செவி கை (என்னுஞ் சினைப்பெயர்கள்) வந்தால்,—இடையன-(நிலைமொழியிறுதிமகரம் வன்மைக்கு இனமாகத்திரிதலேயன்றி அதன்) நடுவில் நின்ற ககரமெய்யும் (அதன்மேலேறிய) அகரவுயிரும், கெடும்-அழியும்.

(உ - ம்.) அகம் + செவி = அஞ்செவி; அகம் + கை = அங்கை.

'கெட்டேவரும்' என்னுமையால் - அகஞ்செவி, அகங்கை எனவும் வரும்.

ககர சகர முறைப்படி 'கைசெவி' என்னாது 'செவிகை' என்று சகரத்தை முன்னேசொன்னது, அகம் + சிறை = அஞ்சிறை எனச் சிறுபான்மை பிறசொல்லும் வருவது தோன்ற வென்க. (கக)

['ஈம்' 'கம்' 'உரும்' என்பவற்றிற்குச் சிறப்புவிதி.]

உஉௗ. ஈமும்,
கம்மு முருமுந் தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே.

(இ - ள்) (க) ஈமும் கம்மும் உருமும்-ஈம் கம் உரும் என்னும் மூன்று சொற்களும், தொழிற்பெயர் மானும் - (இருவழியிலும்) * முதனிலைத்தொழிற்பெயர்போல (யகரமல்லாத மெய்கள்வந்தால்) உகரச்சாரியை பெற்று முடியும்;—(உ) முதலன-(இவற்றுள்) முதலில் நின்ற ஈமும் கம்மும், வேற்றுமைக்கு - வேற்றுமைப்புணர்ச்சியில், அவ்வும் பெறும் - உகரச்சாரியையையேயன்றி அகரச்சாரியையையும் பெறும்; (எ - று.)—(ஈம் - நன்காடு. கம் - தொழில். உரும் - இடி.)

* உ௦எ - ஆஞ் சூத்திர விதி.

ஈம்
கம்
உரும் + கடிது = ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது
நீண்டது = ஈமுநீண்டது, கம்முநீண்டது, உருமுநீண்டது
வலிது = ஈமுவலிது, கம்முவலிது, உருமுவலிது

ஈம்
கம்
உரும் + கடுமை = ஈமுக்கடுமை, கம்முக்கடுமை, உருமுக்கடுமை
நீட்சி = ஈமுநீட்சி, கம்முநீட்சி, உருமுநீட்சி
வன்மை = ஈமுவன்மை, கம்முவன்மை, உருமுவன்மை

என இருவழியிலும் உகரச்சாரியை பெற்றன.

(உ) ஈம் + குடம் = ஈமக்குடம்
கம் + குடம் = கம்மக்குடம் } முதலன வேற்றுமையில் அகரச்சாரியை பெற்றன. (உ0)

யகர ரகர ழகர வீறு.

[யரழ ஈற்றின்முன் வல்லினம்.]

‡ உஉச. யரழ முன்னர்க் கசதப அல்வழி
இயல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்.

(இ - ள்.) (க) யரழ முன்னர் - யகர ரகர ழகர மெய்களின்முன், கசதப - ககர சகர தகர பகரங்கள் வந்தால்,—அல்வழி - அல்வழியில், இயல்பும் - இயல்பாதலும், மிகலும் - மிகுதலும்; (உ) வேற்றுமை - வேற்றுமையில், மிகலும் - மிகுதலும், இனத்தோடு உறழ்தலும் - வல்லினமாவது மெல்லினமாவது மிகுந்து விகற்பித்தலும், விதி ஆகும்—; (எ - று.)

(உ - ம்.) (க) வேய் + கடிது = வேய்கடிது | மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி
வேர் + சிறிது = வேர்சிறிது | கார் + பருவம் = கார்ப்பருவம்
வீழ் + தீது = வீழ்தீது | யாழ் + கருவி = யாழ்க்கருவி

என அல்வழியில் இயல்பும் மிகலும் ஆயின.

(உ) நாய் + கால் = நாய்க்கால்
தேர் + தட்டு = தேர்த்தட்டு
ஊழ் + பயன் = ஊழ்ப்பயன் } வேற்றுமையில் வலிமிக்கது.

வேய் + குழல் = வேய்க்குழல், வேய்ங்குழல்
ஆர் + கோடு = ஆர்க்கோடு, ஆர்ங்கோடு
குமிழ் + கோடு = குமிழ்க்கோடு, குமிழ்ங்கோடு } வேற்றுமையில் இனத்தோடுஉறழ்ந்தன.

'மேல் என்ற மிகையால் - வாய் + புகுவது = வாய்புகுவது என வேற்றுமையில் இயல்பாதலும்; பாழ் + கிணறு = பாழ்க்கிணறு பாழ்ங்கிணறு என அல்வழியில் இனத்தோடு உறழ்தலும்; வேய் + யாது = வேயாது, வேய் + யாப்பு = வேயாப்புஎனத் தனிக்குறிலைச்சாராதயகரவீறு யகரம்வர இருவழியிலும் கெடுதலும்; இன்னும் அடங்காதவைகளிருந்தால் அவையும்கொள்க.

['தமிழ்' 'தாழ்' என்பவற்றிற்குச் சிறப்புவிதி.]

உஉரு. தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறுமே லற்றே.

(இ - ள்.) (க) தமிழ் - தமிழ் என்னுஞ் சொல், வேற்றுமைக்கு-வேற்றுமைப் புணர்ச்சியில், (நாற்கணமும் வந்தால்), அ உறவும் - அகரச்சாரியை பொருந்தவும், பெறும்—;—(உ) தாழும்-தாழ் என்னுஞ் சொல்லும், கோல் வந்து உறுமேல்-கோல் என்னுஞ் சொல் (வருமொழியாக) வந்து பொருந்துமாயின், அற்றே-அவ்வாறேயாம் [அகரச்சாரியை பெறும்]; (எ - று.)

தமிழுக்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்க.

(உ-ம்.) (க) தமிழ் + பிள்ளை = தமிழப்பிள்ளை, தமிழநாகன், தமிழவளவன், தமிழவரசன் எனவும்: (உ) தாழ் + கோல் = தாழக்கோல்எனவும்வரும்.

தமிழையுடைய பிள்ளை; தாழைத்திறக்குங்கோல் என விரியும். தாழக்கோல் - திறவுகோல்; தாழாகிய கோல் என இருபெயரொட்டுப்பண்புத் தொகையாக்கொண்டு, இருவழியிலும் அகரச்சாரியை பெறுமெனினும் பொருந்தும்.

['கீழ்' என்பதற்குச் சிறப்புவிதி.]

உஉசு. கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்.

(இ-ள்.) கீழின் முன்-கீழ் என்னுஞ் சொல்லின்முன்வருகிற, வன்மை-வல்லினம், விகற்பமும் ஆகும்-(ஒருகால் இயல்பாகியும் ஒருகால்மிக்கும் வருகிற) விகற்பத்தையும் பொருந்தும்; (எ - று.)

(உ-ம்.) கீழ் + குலம் = கீழ்குலம் = கீழ்க்குலம் | கீழ் + சாதி = கீழ்சாதி = கீழ்ச்சாதி. (உரு)

லகர ளகர வீறு.

[பொதுவிதி]

‡ உஉஎ. லளவேற் றுமையில் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப.

(இ-ள்.) (க) ல ள-(மொழியிறுதியிலுள்ள) லகரளகர மெய்கள்,—வலி வரின்-வல்லினம் வந்தால், வேற்றுமையில்—, ற ட வும்-(முறையே) றகர டகர மெய்களாகத் திரிதலும்,—(உ) அல்வழி - அல்வழியில், அவற்றோடு உறழ்வும்-அந்த றகர டகரங்களாகத்திரிந்தும் திரியாமலும் விகற்பித்தலும், ஆம்-ஆகும்;—(ங) இருவழியானும் - வேற்றுமை அல்வழி இரண்டிலும், மெலி மேவின்-மெல்லினம் வந்தால், ன ண வும் (முறையே) னகர ணகர மெய்களாகத் திரிதலும்,—(ச) இடை வரின்-இடையினம் வந்தால், இயல்பும்-இயல்பாதலும், ஆகும்—: என்ப-என்றுசொல்வர் (புலவர்); (எ - று)— 'இருவழியான்' என்றது, உருபுமயக்கம்.

(உ-ம்.) (க) கால் + குறை = காற்குறை, முள் + குறை = முட்குறை } வேற்றுமையில் வலிவர றகர டகரங்களாகத் திரிந்தன.

(உ) கால் + குறிது = கால்குறிது, காற்குறிது; முள் + குறிது = முள்குறிது, முட்குறிது } அல்வழியில் வலிவர உறழ்ந்து வந்தன.

(௫) அல். { கல் + நெரிந்தது = கன்னெரிந்தது
வாள் + மாண்டது = வாண்மாண்டது }
வே. { கல் + மலை = கன்மலை
வாள் + மாண்பு = வாண்மாண்பு } இருவழியிலும் மெல்லினம்வர னகர ணகரங்களாகத் திரிந்தன.

(௬) அல். { கால் + யாது = கால்யாது
முள் + வலிது = முள்வலிது }
வே. { கல் + யானை = கல்யானை
தோள் + வலிமை = தோள்வலிமை } இருவழியிலும் இடையினம்வர இயல்பாயின.

'அல்வழி யவற்றோடுறழ்வும்' என்றாலும், இவற்றோடு மயங்காத தகரம் வருமிடத்து ஏற்புழிக்கோடலால், கற்றீது, முட்டீது எனத் திரிந்தேவரும்.

[சிறப்புவிதி.]

‡ உஉ௪. குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉ மல்வழி யானே.

(இ - ள்.) குறில் வழி-தனிக்குறிலின்பின் நின்ற, லள - லகர ளகர மெய்கள்,—அல்வழியான் - அல்வழிப் புணர்ச்சியில், த அணையின்-தகரம் (வருமொழிமுதலில்) வருமாயின், ஆய்தம்ஆகவும் பெறூஉம்-(றகரடகரமெய்களாகத் திரிதலேயன்றி) ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும்; (எ-று.)— 'அல்வழியான்' என்பது - உருபுமயக்கம்.

(உ-ம்.) கல் + தீது = கஃறீது, முள் + தீது = முஃடீது.

இது, ஆய்தக்குறுக்கம்; கஎ-ஆஞ் சூத்திரத்திற் கூறியது. (உரு)

[லகர ளகர வீற்றின் கேடு முதலியன.]

‡ உஉகூ. குறில்செறி யாலள அல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்புந் திரிபு மாவன வுளபிற.

(இ - ள்.) (க) குறில் செறியா - தனிக்குறிலைச் சாராத, ல ள - லகர ளகர மெய்கள்,—அல்வழி-அல்வழிப்புணர்ச்சியில், வந்த - (வருமொழிக்கு முதலாக) வந்த, தகரம்—, திரிந்த பின் - (* றகர டகரங்களாகத்) திரிந்தவிடத்து, கேடும்-தாம் கெடுதலும்;—(உ) ஈர் இடத்தும்-அல்வழி வேற்றுமை யிரண்டிலும், வரு ந திரிந்தபின்-(வருமொழிக்கு முதலாக) வந்த நகரம் (* னகர ணகரங்களாகத்)திரிந்தவிடத்து, மாய்வும்-தாம் கெடுதலும்;— (௩) வலி வரின் - (வருமொழி முதலில்) வல்லெழுத்து வந்தால், இயல்பும் திரிபும் - (அல்வழிப்புணர்ச்சியில் விகற்பியாமல்) இயல்பாதலும் திரிதலும் (வேற்றுமைப்புணர்ச்சியில்) திரியாமல் இயல்பாதலும், ஆவன-பொருந்துவன, உள-உண்டு; (எ - று.)

* இவ்வியுவின் ௩௪-ஆஞ் சூத்திரம்.

(உ-ம்.) (க) தோன்றல் + தீயன் = தோன்றறீயன் | அல்வழியில்வந்த தகரம்
வேள் + தீயன் = வேடீயன் | திரிய ல ள கெட்டன.

(உ) தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன் | அல்வழியில்வந்த நகரம்
வேள் + நல்லன் = வேணல்லன் | திரிய ல ள கெட்டன.

தோன்றல் + நன்மை = தோன்றனன்மை | வேற்றுமையில்வந்த நக
வேள் + நன்மை = வேணன்மை | ரம்திரிய லளகெட்டன.

(ங) கால் + கடிது = கால்கடிது | அல்வழியில்வலிவர லள
மரங்கள் + கடிய = மரங்கள்கடிய | பொதுவிதிப்படி விகற்
வேல் + படை = வேற்படை | பியாமல் இயல்பும் திரிபு
வாள் + படை = வாட்படை | மாயின.

கால் + குதித்து = கால்குதித்து | வேற்றுமையில் வலிவரப் பொது
வாள் + போழ்ந்து = வாள்போழ்ந்து | விதிப்படி திரியாமல் இயல்பாயின.

'பிற' என்ற மிகையால்-தோன்றறீமை, வேடீமை எனக் குறில் செறியா ல ள வேற்றுமையிலும் தகரந்திரியுமிடத்துக் கெடுதலும்; காற்றூணி, தாட்டூணி என அல்வழியிலும் கெடாமையும்; விற்படை எனக்குறில் செறிந்த லகரம் அல்வழியில் உறழாமல்திரிதலும்;கொல்களிறு, கொள்பொருள் எனக் குறில் செறிந்த லகர ளகரங்கள் அல்வழியில் உறழாமல் இயல்பாதலும்; அகல் + பரப்பு = அகன்பரப்பு, விழல் + காடு = விழன்காடு என இருவழியிலும் லகரம் வல்லினம்வர னகரமாகத்திரிதலும், இன்னும் இவ்விரண்டீற்றுள் அடங்காதன உளவாயின் அவையும் கொள்க.

(உயர்திணையிற் காட்டிய உதாரணங்கள், மயக்கவிதியில்லாதவிடத்து வருதலால்,'சில விகாரமா முயர்திணை'என்றவற்றுள் அடங்காவாம்.) (உசு)

[லகர ளகரவீற்றுத் தொழிற்பெயர்க்குச் சிறப்புவிதி.]

உருo. லளவிறு தொழிற்பெய ரீரிடத்து முவ்வுறு
வலிவரி னல்வழி யியல்புமா வனவுள.

(இ - ள்.) (க) ல ள இறு தொழிற்பெயர்-லகரளகரங்களை இறுதியாகவுடைய (விகுதிபெற்ற) தொழிற்பெயரும் ளகரத்தை இறுதியாகவுடைய (முதனிலைதிரிந்த) தொழிற்பெயரும், ஈர் இடத்தும்-இருவழியிலும, உ உறு-(யகரமல்லாதமெய்கள் வந்தால்) உகரம் பெறுவாம்;—(உ) வலிவரின்-வல்லினம் வந்தால், அல்வழி-அல்வழியில், இயல்பும் ஆவன-(உறழாமல்) இயல்பாகும் தொழிற்பெயர்களும், உள-சில உண்டு; (எ-று.)

(உ - ம்.) (க) ஆடல்சிறந்தது, விக்குணன்று, கோள்வலிது—அல்வழி.
கோட்கடுமை ஆடனன்மை,விக்குள்வன்மை—வேற்றுமை.

என இருவழியிலும் உகரச்சாரியை பெறாமல் முடிந்தன.

(உ) நடத்தல்கடிது—அல்வழியில் உறழாமல் இயல்பாயிற்று.(உஎ)

['வல்' என்பதற்குச் சிறப்புவிதி.]

உருக. வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்
பலகை நாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம்.

(இ - ள்.) (க) வல் - வல் என்னும் பெயர், இரு வழியும் - இருவழியிலும், தொழிற்பெயர் அற்று - * தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்கள்வந்தால் உகரச்சாரியை பெறும்;—(உ) பலகை நாய் வரினும் - பலகை நாய் என்னும் பெயர்கள் வந்தாலும் (பிறபெயர்கள் வந்தாலும்), வேற்றுமைக்கு - வேற்றுமையில், அவ்வும் ஆம் - (உகரச்சாரியையேயல்லாமல்) அகரச்சாரியையும் பெறும்; (எ - று.)—(வல் - சூதாடுகருவி.)

'வரினும்' என்ற எதிரதுதழுவிய எச்சவும்மையால் 'பிறபெயர்' என்பதும், 'அவ்வும்' என்ற இறந்ததுதழுவிய எச்சவும்மையால் 'உகரச்சாரியையேயல்லாமல்' என்பதும் பெறப்பட்டன.

(க) அல்வழி.	(உ - ம்.) வேற்றுமை.
வல் + கடிது—வல்லுக்கடிது	வல் + கடுமை—வல்லுக்கடுமை
நன்று—வல்லுநன்று	நன்மை—வல்லுநன்மை
வலிது—வல்லுவலிது	வலிமை—வல்லுவலிமை

என இருவழியிலும் யகரமல்லாத மெய்கள் வர உகரச்சாரியை பெற்றது.

(உ) வல் + பலகை—வல்லுப்பலகை	வல் + புலி—வல்லுப்புலி
—வல்லப்பலகை	—வல்லப்புலி
நாய்—வல்லுநாய்	குதிரை—வல்லுக்குதிரை
—வல்லநாய்	—வல்லக்குதிரை

என வேற்றுமையில் பலகை நாயும் பிறவும் வர, உகரமும் அகரமும் பெற்றது. இவை - வல்லினது அறைகீறிய பலகை, வல்லினுள் நாய்என விரியும்.

['நெல்' முதலிய நான்கிற்குச் சிறப்புவிதி.]

உ௬உ. நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்
அல்வழி யானும் றகர மாகும்.

(இ - ள்.) நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும் - நெல் முதலிய நான்கு சொற்களின் ஈற்று லகர மெய்,—அல்வழியானும் - அல்வழியிலும், றகரம் ஆகும்-(பொதுவிதியால் உறழாமல் வேற்றுமையிற்போல) றகரமெய்யாகத் திரியும்; (எ-று.)—(செல் - மேகம், கொல்-கொல்லனது தொழில்.)

'நெல்' முதலில் வைத்தது, பிறவும் பெய ரென்றற்கு.

(உ - ம்.) நெல் + கடிது—நெற்கடிது	கொல் + தீது —கொற்றீது
செல் + சிறிது—செற்சிறிது	சொல் + பெரிது—சொற்பெரிது

['இல்' என்பதற்குச் சிறப்புவிதி.]

உ௬௩. இல்லெ னின்மைச் சொற்கு ஐயடைய
வன்மை விகற்பமு மாகா ரத்தொடு
வன்மை யாகலு மியல்பு மாகும்.

(இ - ள்.) (க) இல் என் - இல் என்கிற, இன்மை சொற்கு - இன்மைப் பண்பை உணர்த்துகின்ற சொல்லுக்கு, ஐ அடைய - ஐகாரச்சாரியை

* உ0எ - ஆஞ் சூத்திர விதி.

பொருந்த, வன்மை - (அவ்விடத்து வருகின்ற) வல்லினம், விகற்பமும் - (மிக்கும் மிகாமலும்) விகற்பித்தலும்,— (உ) ஆகாரத்தொடு - ஆகாரச்சாரியை பொருந்த, வன்மை ஆகலும் - (அவ்விடத்துவருகின்ற) வல்லினம் மிகுதலும், (ங) இயல்பும் - (இவ்விருவிதியும் பெறாமல்) இயல்பாதலும், ஆகும் - பொருந்தும்; (எ - று.)

(உ-ம்.) (க) இல் + பொருள் = இல்லைப்பொருள் = இல்லைபொருள் } ஐகாரச்சாரியை வர வன்மை விகற்பித்தது.

(உ) இல் + பொருள் = இல்லாப்பொருள் — ஆகாரச்சாரியைபெறவலிமிக்கது

(ங) இல் + பொருள் = இல்பொருள் — இருவிதியும்பெறாமல்இயல்பாயிற்று.

சாரியைக்கு வருமெழுத்தைச்சொல்லாமையால், நாற்கணமும்கொள்க.

இல் + ஞானம் = இல்லைஞானம், இல்லாஞானம்
இல் + வன்மை = இல்லைவன்மை, இல்லாவன்மை
இல் + அணி = இல்லையணி, இல்லாவணி } மற்றை மூக்கணமும் வரச் சாரியைபெற்றது.

இல்பொருள் என்பதுபோல இல்லைபொருள், இல்லாப்பொருள் என்பனவும் இங்குப் பண்புத்தொகையே: இவற்றுள்ஐகாரமும்ஆகாரமும்சாரியை.

இல்லைபொருள் என்பது-பண்புத்தொகை நிலைத்தொடராகவும், குறிப்பு வினைமுற்றுத் தொகாநிலைத் தொடராகவும்; இல்லாப்பொருள்என்பது பண்புத்தொகைநிலைத்தொடராகவும், ஈறுகெட்ட எதிர்மறைக்குறிப்புப்பெயரெச்சத் தொகாநிலைத்தொடராகவும் கொள்ளப்படு மாதலால், இவற்றுள் ஒன்றற்குஒன்று வேறுபாடு என்னவென்றால்:— தொகைநிலைகள் ஒருமொழிபோல விட்டிசையாமலிருத்தலும், தொகாநிலைகள் தொடர்மொழிபோல விட்டிசைத்தலும் வேறுபாடு என அறிக. (ஙO)

['புள்' 'வள்' என்பவற்றிற்குச் சிறப்புவிதி.]

உஙச. புள்ளும் வள்ளுந் தொழிற்பெயர் மானும்.

(இ - ள்.) புள்ளும் வள்ளும் - புள் வள் என்னும் இரண்டு சொற்களும், தொழிற்பெயர் மானும் - (இருவழியிலும் பொதுவிதியால் முடிதலே யல்லாமலும்) * தொழிற்பெயர்போல (யகரமல்லாத மெய்கள் வந்தால்) உகரச்சாரியையைப் பெற்றும் புணரும்; (எ - று.)

(உ-ம்.) புள் + கடிது = புள்ளுக்கடிது, புள்ளுநன்று, புள்ளுவலிது
வள் + கடிது = வள்ளுக்கடிது, வள்ளுநன்று, வள்ளுவலிது } அல்வழி.

புள் + கடுமை = புள்ளுக்கடுமை, புள்ளுநன்மை, புள்ளுவன்மை
வள் + கடுமை = வள்ளுக்கடுமை, வள்ளுநன்மை, வள்ளுவன்மை } வேற்றுமை. ()

வகர வீறு.

[வகரவீற்றுச் சுட்டுப்பெயர்களுக்குச் சிறப்புவிதி.]

‡ உஙரு. சுட்டு வகரமூ வினமுற முறையே
ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்.

* உOஎ - ஆஞ் சூத்திரம்.

(இ-ள்.) சுட்டு வகரம் - (அவ் இவ் உவ் என்னும் அஃறிணைப்பலவின் பாற்) சுட்டுப்பெயர்களின் இறுதியி லுள்ள வகரமெய்,—மூ இனம் உற - வல்லின மெல்லின இடையினங்கள் வர,—முறையே - முறையாக,—(க) ஆய்தமும்—, (உ) மென்மையும்-வரும் மெல்லினமும், (௩) இயல்பும்—; ஆகும்—; (எ - று.)

(உ-ம்.) (க) அவ் + கடிய =அஃகடிய—வலிவர ஆய்தமாயிற்று.
(உ) அவ் + ஞான்றன =அஞ்ஞான்றன-மெலிவரமெலியாயிற்று.
(௩) அவ் + யாவை =அவ்யாவை—இடைவர இயல்பாயிற்று.

இவ், உவ் என்பவற்றோடும் இப்படியே கூட்டுக.

'இச்சொற்கள் வேற்றுமைப்புணர்ச்சியில் அற்றுச்சாரியையைப்பெறும்' என *மேல் எடுத்துக்கூறுதலால்,இவ்விதி அல்வழிக்கெனக்கொள்க.(௩உ)

[‘தெவ்’ என்பதற்குச் சிறப்புவிதி.]

† உ௩௬. தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்.

(இ - ள்.) (க) தெவ் என் மொழி - தெவ் என்னும் பெயர், தொழிற் பெயர் அற்று-§ தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்களோடு புணருமிடத்து உகரச்சாரியை பெற்று முடியும்;—(உ) ம வரின்-(வருமொழிமுதலில்) மகரம் வந்தால், வஃகான் - (நிலைமொழியீற்று) வகர மெய், மவ்வும் ஆகும்-(உகரச்சாரியைபெறுதலேயன்றி ஒரோவிடத்துச் சாரியைபெறாமல்) மகரமெய்யாகத் திரியவும் பெறும்; (எ - று.)

¶ தெவ் பகைமை; இதுஆகு பெயராய், பகைவனையும் உணர்த்திநிற்கும்.

(உ-ம்.)

(க) அல்வழி.	வேற்றுமை.	
தெவ் + கடிது = தெவ்வுக்கடிது	+ கடுமை = தெவ்வுக்கடுமை	உகரம் பெற்றது.
நன்று = தெவ்வுநன்று	நன்மை = தெவ்வுநன்மை	
வலிது = தெவ்வுவலிது	வலிமை = தெவ்வுவலிமை	

(உ) தெவ் + மன்னர் = தெம்மன்னர்—அல்வழி.
தெவ் + முனை = தெம்முனை —வேற்றுமை. } மகரம் வர, வகரம் மகரமாகத்திரிந்தது.

வருமொழித் திரிபு.

[வருமொழிமுதலில் தகர நகரம் திரிதல்.]

‡ உ௩எ. னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகுந் தநக்க ளாயுங் காலே.

(இ - ள்.) ன ல முன் - னகர லகர மெய்களின்முன், த நக்கள் - (வருகிற) தகர நகரங்கள், ற ன வும்-(முறையே) றகர னகரங்களாகவும்; ண ள முன்-ணகர ளகர மெய்களின்முன் (தகர நகரங்கள்), ட ண வும் - (முறையே) டகர ணகரங்களாகவும், ஆகும்—; ஆயுங்கால்-ஆராயுமிடத்து; (எ-று.)

* உ௫௦-ஆஞ் சூத்திரம். § உ௦எ-ஆஞ் சூத்திரம். ¶ "தெவ்வுப் பகையாகும்" என்பது, தொல்காப்பியத்து உரிச்சொல்லியல்.

னகர லகரங்களின் முன் வருகிற தகரம் றகரமாகவும், னகர லகரங்களின் முன் வருகிற நகரம் னகரமாகவும்; ணகரளகரங்களின் முன்வருகிற தகரம் டகரமாகவும், ணகர ளகரங்களின் முன் வருகிற நகரம் ணகரமாகவும் திரியுமென்றபடி.

பொன் + தீது	=பொன்றீது	—அல்வழி	னகரத்தின் முன் தகரம் றகரமாயிற்று.
தீமை	=பொற்றீமை	—வேற்றுமை	
பொன் + நன்று	=பொன்னன்று	—அல்வழி	னகரத்தின் முன் நகரம் னகரமாயிற்று.
நன்மை	=பொன்னன்மை	-வேற்றுமை	
கல் + தீது	=கற்றீது	—அல்வழி	லகரத்தின் முன் தகரம் றகரமாயிற்று.
தீமை	=கற்றீமை	—வேற்றுமை	
கல் + நன்று	=கன்னன்று	—அல்வழி	லகரத்தின் முன் நகரம் னகரமாயிற்று.
நன்மை	=கன்னன்மை	—வேற்றுமை	
மண் + தீது	=மண்டீது	—அல்வழி	ணகரத்தின் முன் தகரம் டகரமாயிற்று.
தீமை	=மட்டீமை	—வேற்றுமை	
மண் + நன்று	=மண்ணன்று	—அல்வழி	ணகரத்தின் முன் நகரம் ணகரமாயிற்று.
நன்மை	=மண்ணன்மை	—வேற்றுமை	
முள் + தீது	=முட்டீது	—அல்வழி	ளகரத்தின் முன் தகரம் டகரமாயிற்று.
தீமை	=முட்டீமை	--வேற்றுமை	
முள் + நன்று	=முண்ணன்று	--அல்வழி	ளகரத்தின் முன் நகரம் ணகரமாயிற்று.
நன்மை	=முண்ணன்மை	--வேற்றுமை	

('ஆயுங்காலே' என்றதனால், அல்வழி வேற்றுமைப்பொருள்நோக்கத்தாலல்லாமல் மயக்கவிதியில்லாமையால் இப்படிப் புணரும் முதல் ஈறு இரண்டனுள் ஒன்றுவது இரண்டுமாவது விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகிப் புணருமென்பதும்,மயக்கவிதியுள்ளனவற்றிற்கு விகாரம் அல்வழிவேற்றுமைப் பொருள்நோக்கத்தால் வருமென்பதும் பெறப்பட்டன.) (௩௪)

வேற்றுமைப்புணர்ச்சிக்குச் சிறப்புவிதி.

[உருபுபுணர்ச்சிமுடிபைப் பொருட்புணர்ச்சிக்கும் ஏற்றுதல்]

௨௩௮. உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்.

(இ - ள்.) உருபின் முடிபவை-மேல் உருபுபுணரியலில் உருபுபுணர்ச்சியிலேமுடியும் முடிபுகள்,—அப் பொருளினும்-அவ்வுருபுகள் தொக்குநின்று அப்பொருள் தோன்றப் புணரும் பதப்புணர்ச்சியிலும், ஒக்கும் - ஒத்துமுடியும்; (எ - று.)

(உ - ம்.) (க) எல்லாவற்றதும்—உருபுபுணர்ச்சி.

எல்லாவற்றுக்கோடும்—வேற்றுமைப்பொருட்புணர்ச்சி.

உருபுபுணர்ச்சியில் அஃறிணையில் அற்றும் உருபின்மேல் உம்மும் பெறுதல்போல, உருபுதொக்க பதப்புணர்ச்சியிலும் பெற்றன. [உ௪௫-ஆம் சூத்திரம்.]

உருபுபுணர்ச்சியாவது-வேற்றுமையுருபு வெளிப்பட்டு நிற்கப் புணரும் புணர்ச்சி; மரத்திற்கிளை என்பது போல. வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாவது-வேற்றுமையுருபு தொக்குநிற்க அவ்வுருபின் பொருளமையப் புணரும் புணர்ச்சி; மரக்கிளை என்பது போல.

(உ) எல்லாநமதும்—உருபுபுணர்ச்சி.
எல்லாநங்கையும்—வேற்றுமைப்பொருட்புணர்ச்சி.

* உருபுபுணர்ச்சியில் உயர்திணையில் நம்மும் உருபின்மேல் உம்மும் பெறுதல்போல, உருபுதொக்க பதப்புணர்ச்சியிலும் பெற்றன.

எல்லார்தமதும், எல்லார்தங்கையும்; எல்லீர்நுமதும், எல்லீர்நுங்கையும்; தனது, தன்கை; ஆனது, ஆன்கோடு; அவற்றது, அவற்றுக்கோடு; அதனது, அதன்கோடு என உருபுபுணர்ச்சிபோலப் பதப்புணர்ச்சியும் முடிந்தவாறு காண்க. இவற்றில், முன்னது உருபுபுணர்ச்சி; பின்னது பதப்புணர்ச்சி. (நரு)

புணரியல்களுக்குப் புறனடை.

‡ உநக. இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்
போலியு மரூஉவும் பொருந்திய வாற்றிற்கு
இயையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.

(இ - ள்.) (க) இடை - இடைச்சொற்களுள்ளும், (உ) உரி-உரிச்சொற்களுள்ளும், (ந) வடசொலின் - வடசொற்களுள்ளும், இயம்பிய - (உயிரீற்றுப்புணரியல் மெய்யீற்றுப் புணரியல்களிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்) சொல்லிய புணர்ச்சியிலக்கணங்கள், கொளாதவும் - பொருந்தாமல் (வேறுபட்டு) வருவனவும்; (ச) போலியும்-இலக்கணப்போலிமொழிகளும்; (ரு) மரூஉவும் - மரூஉமொழிகளும், பொருந்திய ஆற்றிற்கு - (உலகவழக்குச் செய்யுள் வழக்குக்களில்) நடக்கும் முறைமைக்கு, இயைய - பொருந்தும்படி, புணர்த்தல் - கூட்டிமுடித்தல்,—யாவர்க்கும் - (அறிவுடையோர்) எல்லார்க்கும், நெறி - முறைமையாம்; (எ - று.)

(உதாரணம்.)

(க) ஆன் + கன்று = ஆன்கன்று வண்டின் + கால் = வண்டின்கால்	வேற்றுமையில்சாரியையிடைச்சொற்களின்ஈற்றுனகரம் இயல்பாயிற்று.
(உ) மழ + களிறு = மழகளிறு தட + தோள் = தடந்தோள்	உரிச்சொல்லீற்று உயிர்முன் வலிவர இயல்பாயும், மெலிமிகுந்தும் வந்தன.
(ந) அளி + குலம் = அளிகுலம் பாத + கமலம் = பாதகமலம்	வடசொல்லீற்று உயிர்முன் வலிவர மிகாது இயல்பாயின.
(ச) இல் + முன் = முன்றில் பொது + இல் = பொதியில் வேட்கை + அவா = வேணவா	இலக்கணப்போலி மொழிகள் முன் விதிபெறுமல் தமக்கு ஏற்றபடி விகாரம் பெற்றன.
(ரு) அருமருந்தன்ன = அருமந்த குணக்குஉள்ளது = குணுது சோழநாடு = சோணுடு தஞ்சாவூர் = தஞ்சை வடுகன்தந்தை = வடுகந்தை	மரூஉ மொழிகள் முன்விதி பெறுமல் தமக்கு ஏற்றபடி விகாரம் பெற்றன.

* உசடு - ஆம் சூத்திரம் பார்க்க.

இங்கே 'இடையுரிவடசொல்' என்றது, நிலைமொழிகளைப்பற்றியதென அறிக. இதனால், நிலைமொழிமாத்திரம் வடமொழியாயிருந்து வடமொழிப் புணர்ச்சியில் முன்சொன்ன விதிகளுக்கு மாறிவருவனவும்இதில்அடங்கும்.

வடமொழிப்புணர்ச்சி.

வடமொழித்தொடர்கள், தமிழில் வருமிடத்துப் பெரும்பாலும் அவ் வடநூற்புணர்ச்சியையே பெறும்; புணர்ச்சியை வடநூலார் 'சந்தி' என்பர். அது - உயிரோடு உயிர் புணர்கையில் தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்தி சந்தி என மூவகைப்படும்

[தீர்க்க சந்தி]

(க) அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் அவற்றில் ஒன்று வந்தால், அவ் விரண்டும் கெட ஓர் ஆகாரம் தோன்றும். (உ - ம்.)

பத + அம்புஜம் = பதாம்புஜம்	கங்கா + அம்ருதம் = கங்காம்ருதம்
பரம + ஆநந்தம் = பரமாநந்தம்	சதா + ஆநந்தம் = சதாநந்தம்.

(உ) இகர ஈகாரங்களில் ஒன்றன்முன் அவற்றில் ஒன்று வந்தால், அவ் விரண்டும் கெட ஓர் ஈகாரம் தோன்றும். (உ - ம்.)

கவி + இந்திரன் = கவீந்திரன்	மகீ + இந்திரன் = மகீந்திரன்
கிரி + ஈசன் = கிரீசன்	நதீ + ஈசன் = நதீசன்.

(ந) உகர ஊகாரங்களில் ஒன்றன்முன் அவற்றில் ஒன்று வந்தால், அவ்விரண்டும் கெட ஓர் ஊகாரம் தோன்றும். (உ - ம்.)

குரு + உதயம் = குரூதயம்	சுயம்பூ + உபதேசம் = சுயம்பூபதேசம்
சிந்து + ஊர்மி = சிந்தூர்மி	சுயம்பூ + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம்.

[குண சந்தி.]

(க) அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் இகர ஈகாரங்களில் ஒன்று வந்தால், அவ்விரண்டும் கெட ஓர் ஏகாரம் தோன்றும். (உ - ம்.)

தேவ + இந்திரன் = தேவேந்திரன்	தரா + இந்திரன் = தரேந்திரன்
தேவ + ஈசன் = தேவேசன்	ரமா + ஈசன் = ரமேசன்.

(உ) அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் உகர ஊகாரங்களில் ஒன்று வந்தால், அவ்விரண்டும் கெட ஓர் ஓகாரம் தோன்றும். (உ - ம்.)

சூர்ய + உதயம் = சூர்யோதயம்	கங்கா + உத்பத்தி = கங்கோத்பத்தி
ஞான + ஊர்ச்சிதன்-ஞானோர்ச்சிதன்	தயா + ஊர்ச்சிதன்-தயோர்ச்சிதன்.

[விருத்திசந்தி.]

(க) அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஏகார ஐகாரங்களில் ஒன்று வந்தால், அவ்விரண்டும் கெட ஓர் ஐகாரம் தோன்றும். (உ - ம்.)

பரம + ஏகாந்தி = பரமைகாந்தி	தேவதா + ஏகத்வம் - தேவதைகத்வம்
சர்வ + ஐச்வர்யம் = சர்வைச்வர்யம்	தேவதா + ஐக்யம் = தேவதைக்யம்.

(உ) அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஓகார ஒளகாரங்களில் ஒன்று வந்தால், அவ்விரண்டும் கெட ஓர் ஒளகாரம் தோன்றும். (உ - ம்.)

வந + ஓஷதி = வநௌஷதி	மகா + ஓஷதி = மகௌஷதி
திவ்ய + ஒளஷதம்-திவ்யௌஷதம்	மகா + ஒளதார்யம் = மகௌதார்யம்.

மெய்ம்முதலீற்றுமொழிப்புணர்ச்சிக்கு விதி அளவிறந்தனவாம். (நசு)

மெய்யீற்றுப்புணரியல் முற்றிற்று.

ரு. உருபுபுணரியல்.

உயிரீறும் மெய்யீறுமான வேற்றுமையுருபுகள் நிலைமொழி வருமொழிகளோடு புணரும் விதத்தைச் சொல்லும் இயல். உயிரீறு மெய்யீறு என்றவற்றுள் அடங்குவனவற்றையே தனியே எடுத்துக்கூறுதலால், இவ்வியல் அவ்விரண்டு இயல்களின்பின் வைக்கப்பட்டது.

உருபுகள்.

[எட்டுஉருபுகளும் சாரும் இடவகையால் இத்தனையென்பது.]

உ௪0. ஒருவ னொருத்தி பல ரொன்று பல வென
வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான்கு
உருபு முறழ்தர நாற்பதா முருபே.

(இ - ள்.) ஒருவன் - ஒருவனும் [ஆண்பாலும்], ஒருத்தி - ஒருத்தியும் [பெண்பாலும்], பலர்-பலரும் [பலர்பாலும்], ஒன்று-ஒன்றும் [ஒன்றன்பாலும்], பல - பலவும் [பலவின்பாலும்], என - என்று, வரு - வருகின்ற, பெயர் ஐந்தொடு-ஐந்துபாற் பெயர்களோடும், பெயர் முதல் இரு நான்கு உருபும் - பெயர்வேற்றுமை [எழுவாய்] முதல் விளிவேற்றுமைவரையில் நின்ற எட்டு வேற்றுமையுருபுகளையும், உறழ்தர - பெருக்கிக் கணக்கிட, உருபு நாற்பது ஆம் - (வேற்றுமை) உருபுகள் நாற்பதாகும்; (எ - று.)

(உ - ம்.) நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பியே என ஒருவன்என்னும் வாய்பாட்டு உயர்திணைஆண்பாற் பெயரோடு எட்டு உருபுகளும் வந்தன. கூனி, மக்கள், மரம், மரங்கள் என்னும் மற்றை நான்குவாய்பாட்டுப் பெயர்களோடும் இப்படியே கூட்டுக.(க)

[வேற்றுமையுருபுகளின் பயனும், அவை வரும் இடமும்.]

உ௪க. பெயர்வழித் * தம்பொருள் தரவரு முருபே.

(இ - ள்.) உருபு - (வேற்றுமை) உருபுகள், தம் பொருள் தர - தமது பொருளைக் கொடுக்க, பெயர் வழி - பெயர்க்குப் பின், வரும்—; (எ - று.)

தம் பொருள் - கர்த்தாப்பொருள், செயப்படுபொருள் முதலியன.

(உ-ம்.) நம்பி பெற்றான், நம்பியைப் பெற்றான்என இவ்வாறு காண்க.

உருபுபுணர்ச்சிக்குச் சிறப்புவிதி.

[பொருட்புணர்ச்சிமுடிபை உருபுபுணர்ச்சிக்கும் ஏற்றுதல்.]

உ௪உ ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்
ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.

(இ - ள்.) ஒற்று உயிர் முதல் ஈறு - மெய்யையும் உயிரையும் முதலும் இறுதியுமாகவுடைய, உருபுகள் - (ஐ முதலிய ஆறு) வேற்றுமையுருபுகள்,—

---

* 'தன்பொருள்' என்றும் பிரதிபேதம்.

(இடைச்சொல்லாயினும்), —புணர்ச்சியின் - (நிலைமொழி வருமொழிகளோடு) புணருமிடத்து,—வேற்றுமை புணர்ப்பு அப்பெயர் - (நடந்த இரண்டியல்களுள்ளும்) வேற்றுமைப்பொருட்புணர்ச்சியில் இயல்பாகவும் விகாரமாகவும் புணர்ந்த மெய்யுயிர்முதலீற்றுப் பெயர்களை, மன் ஒக்கும் - பெரும்பாலும் ஒத்து நடக்கும்; (எ - று.)

(உ - ம்.) நம்பி + கண் + வாழ்வு=நம்பிகண்வாழ்வு—இங்கே முறையே "ஆவி யரமுன் வன்மைமிகா" என்றும், "ணன வல்லினம் வரட் டறவும் பிறவரி னியல்பு மாகும் வேற்றுமைக்கு" என்றும் சொல்லியபடியே கண்ணுருபின் முதலும் ஈறும் இயல்பாயின.

உறி + கண் + பால்—உறிக்கட்பால்—இங்கே முறையே "இயல்பினும் விதியினும் நின்ற வுயிர்முன் கசதப மிகும்" என்றும், "ணனவல்லினம் வரட்டறவும்" என்றும், சொல்லியபடியே கண்ணுருபின் முதலும் ஈறும் விகாரமாயின.

'பெரும்பாலும் ஒக்கும்' என்றமையால், சிறுபான்மை ஒவ்வா வென்பதாம்.

(உ - ம்) நம்பி + கு=நம்பிக்கு—இங்கே "ஆவியரமுன் வன்மை மிகா" என்ற விதி ஒவ்வாமல் குவ்வுருபின் முதல் வல்லொற்று மிக்கது.(௩)

சாரியை.

[சாரியை வரும் விதம்.]

‡ உசரு. பதமுன் விகுதியும் பதமு முருபும்
புணர்வழி யொன் றும் பலவுஞ் சாரியை
வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்

(இ - ள்.) பதம் முன் - பதத்தின்முன், விகுதியும் - விகுதியாவது, பதமும் - பதமாவது, உருபும் - உருபாவது, புணர் வழி-புணருமிடத்து, (அவற்றிற்கு இடையே),சாரிபை ஒன்றும்பலவும் ஒருசாரிபையாயினும் பலசாரியைகளாயினும்,—(க)வருதலும்—,(உ)தவிர்தலும்·வராதிருத்தலும்(௩)விகற்பமும்-(ஒன்றுக்கேவருதலும்தவிர்தலுமாகிய) உறழ்ச்சியும்,ஆகும்-;(எ-று.)

		விகுதிப்புணர்ச்சி.	பதப்புணர்ச்சி.	உருபுபுணர்ச்சி:	
(உ-ம்.)	(க)	நடந்தனன்	புளியங்காய்	அவற்றை—வருதல்.	
	(உ)	நடந்தான்	புளிக்கறி	தன்னை—தவிர்தல்.	
	(௩)	நடந்தன நடந்த	நெல்லின்குப்பை நெற்குப்பை	ஆனை ஆவை	விகற்பம்.

ஆவினுக்கு, மரத்தினுக்கு—சாரியைகள் பல வந்தன.

மாடத்துக்கு - மாடக்கு, நிலத்துக்கு - நிலக்கு முதலியன - சாரியை வேண்டுமிடத்துஇல்லாமையால், தொகுத்தலென்னுஞ்செய்யுள்விகாரமாம்.

[பொதுச்சாரியை.]

‡ உசச. அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம்
தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே.

(இ - ள்.) அன் ... ன - அன்முதல் னகரமெய் [ன்] ஈருகச் சொல்லப் பட்ட பதினேழும், இன்ன பிறவும் - இவைபோல்வன பிறவும்,—பொது சாரியை-(விகுதிபதம் உருபு என்கிற மூன்று புணர்ச்சிகளிலும் தனிமொழி களிலும் வருதலினாலே) பொதுவான சாரியைகளாம்; (எ - று.)

	சாரியை.		சாரியை.	
(உ - ம்.)	அன் —ஒன்றன்கூட்டம்	(ப)	நம்—எல்லாநம்மையும்	(உ)
	ஆன் —ஒருபாற்கு	(உ)	நும்—எல்லீர்நும்மையும்	(உ)
	இன் —வண்டின்கால்	(ப)	எ —ஒன்றேகால்	(ப)
	அல் —தொடையல்	(த)	அ —நடந்தது	(வி)
	அற்று—பலவற்றை	(உ)	உ —சாத்தனுக்கு	(உ)
	இற்று—பதிற்றுப்பத்து	(ப)	ஐ —ஒற்றை	(த)
	அத்து—மரத்திலே	(ப)	கு —செய்குவாய்	(வி)
	அம் —நெஞ்சம்	(த)	ன் —கோன்	(த)
	தம் —எல்லார்தம்மையும்	(உ)	'இன்னபிறவும்' என்றதனால்,	

தன் - அவன்றனை (உ) தாம் - அவர்தாம் (த) ஆ-இல்லாப்பொருள் (ப)
தான் - அவன்றான் (த) ஆம் - மண்ணாங்கட்டி (ப) து-நடத்தற்கு (வி)
என வருகின்றவையும், மற்றும் இப்படி வருபவையும் கொள்க. (ரு)

['எல்லாம்' என்பதற்குச் சிறப்புவிதி.]

‡ உசரு. எல்லா மென்ப திழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் முறுமே
அன்றேல் நம்மிடை யடைந்தற் றாகும்.

(இ-ள்.) (க) எல்லாம் என்பது-எல்லாம் என்னும் இருதிணைப்பொதுப் பெயர், இழி திணை ஆயின் - அஃறிணையில் வரும்பொழுது, (அதனோடு ஆறு உருபுகளும் புணர்ந்தால்), அற்றோடு உருபின்மேல் உம் உறும்-இடை யிலே அற்றுஎன்னும்சாரியையையும் உருபின்மேல் முற்றும்மையையும் பெ றும்;—(உ) அன்றேல்-அன்றாயின் [உயர்திணையில் வரும்பொழுது], இடை-இடையிலே, நம் அடைந்து-நம் என்னும் சாரியையைப் பெற்று, அற்று ஆகும் - அவ்வாறாகும் [உருபின்மேல் முற்றும்மையையும் பெறும்]; (எ-று.)

(உ - ம்.) (க) எல்லாம் + ஐ=எல்லாவற்றையும்—அஃறிணை.
(உ) + ஐ=எல்லாநம்மையும்—உயர்திணை.

எல்லாநம்மையும் என்பதற்கு-எல்லாரையும் என்றுபொருள்; படர்க்கை.

'உயர்திணையாயின்' என்றாலும் எல்லாநம்மையும் என்பது உயர்திணைத் தன்மைக்கு மாத்திரமே வருமெனக் கொள்வர் ஒருசாரார்.

இனி, இரட்டுறமொழிதலால், இழிதிணையாய் இன் அற்றோடு எனப் பிரித்து, எல்லாவற்றினையும் என அற்று, இன் என்னும் இரண்டு சாரியை வருதலும் கொள்க. மற்றை உருபுகளோடும் இப்படியே கூட்டுக. (சு)

['எல்லாரும்', 'எல்லீரும்' என்பவற்றிற்குச் சிறப்புவிதி.]

உசசு. எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லு முருபின் பின்ன ரும்மே.

(இ-ள்.) (ஆறுஉருபுகளும் புணருமிடத்து), எல்லாரும் எல்லீரும் என்பவற்று - எல்லாரும் எல்லீரும் என்கிற இருபெயர்களினுடைய, உம்மை - (இறுதியிலுள்ள) முற்றும்மைகளை, தள்ளி-நீக்கி,—நிரலே-முறையே, தம் - தம்என்னும் சாரியையும், நும் - நும் என்னும் சாரியையும், சார - (அவையிருந்த இடங்களிலே) பொருந்த,—உம் - (அவற்றினாலே நீக்கப்பட்ட) முற்றும்மைகள், உருபின் பின்னர் புல்லும் - உருபுகளின் பின்னே வந்து பொருந்தும்; (எ - று.)

(உ - ம்.) எல்லாரும் + ஐ = எல்லார்தம்மையும்.
எல்லீரும் + ஐ = எல்லீர்நும்மையும்.

எல்லாரையும், எல்லீரையும் எனச் சாரியைபெறாமல் வருதலும் உண்டு.

['தான்' முதலிய பெயர்கட்குச் சிறப்புவிதி.]

‡ உ௪எ. தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்
நீ நீர் என் எம் நின் நு மாம் பிற
குவ்வி னவ்வரும் நான்கா றிரட்டல.

(இ-ள்.) (க) (உருபுகள் புணருமிடத்து), தான் தாம் நாம்-இம்மூன்று பெயர்களும், முதல் குறுகும்-முதல்நெடில் குறுகி (முறையே தன் தம் நம் என) வரும்; (உ) யான் யாம் நீ நீர - இந்நான்கு பெயர்களும், என் எம் நின் நும் ஆம் - (முறையே) என் எம் நின் நும் என வரும்; (ங) குவ்வின் - (இவ்வேழுபெயரோடும்) குவ்வுருபு புணருமிடத்து, அ வரும்-(நடுவில்) அகரச்சாரியை வரும்; (௪) நான்கு-நான்காம் வேற்றுமையுருபு புணரும்போது அகரச்சாரியையின் உயிர் வந்தாலும், ஆறு - ஆறும்வேற்றுமை யுருபுகளின் முதல் உயிர்கள் வந்தாலும், இரட்டல - (அவ்வேழு விகாரமொழிகளிலும் இறுதியாகிய தனிக்குறில் முன்னொற்றுக்கள்) இரட்டாவாம்; (எ - று.)

(உதாரணம்.)

(க) தான் + ஐ = தன்னை தாம் + ஐ = தம்மை நாம் + ஐ = நம்மை மற்றை உருபுகளோடும் கூட்டுக.	முதல் குறுகின.	(உ) யான் + ஐ = என்னை யாம் + ஐ = எம்மை நீ + ஐ = நின்னை நீர் + ஐ = நும்மை	என், எம், நின், நும் எனத் திரிந்தன.

(ங) தான் + கு = தனக்கு—கு வர அகரச்சாரியை பெற்றது.

(௪) தன் + அ + கு = தனக்கு அது = தனது ஆது = தனாது அ = தன	நான்காம்வேற்றுமையில் அகரச்சாரியை பெறுமிடத்தும், ஆறும் வேற்றுமையுருபு உயிர்கள் புணருமிடத்தும் தனிக்குறில் முன்னொற்று இரட்டாதாயிற்று.

'தன்னுடைய' என்பதில் உடைய என்பது சொல்லுருபாதலின், தனிக்குறில்முன்னொற்று இரட்டாமை அதற்குப் பொருந்தாதாம்.

'பிற' என்றதனால், நீ என்பது உன் எனவும், நீர் என்பது உம் எனவும் திரிந்துவருதல் கொள்க. 'நுன்' என வழங்குவது, திசைச்சொல்.

இனி, நீர் என்பது 'நீம்' எனத் திரிதலும், இங்கு 'பிற' என்றதனுலேயே கொள்ளப்படவேண்டும். * நீம் என்பது - சிறுபான்மை செய்யுளில் தனியாகவும், பெரும்பான்மை செய்யுளிலும் வழக்கிலும் 'கள்' என்னும் விகுதியோடு சேர்ந்து 'நீங்கள்' என்றும் பயிலும். இனி, இதனை மரூஉமொழியில் அடக்குதலும் ஒன்று. (அ)

['ஆ,' 'மா,' 'கோ' என்னும் சொற்களுக்குச் சிறப்புவிதி.]

‡ உசவு. ஆ மா கோ னவ் வணையவும் பெறுமே.

(இ - ள்.) ஆ-ஆ என்னும் பசுவின்பெயரும், மா - மா என்னும் மிருகத்தின்பொதுப்பெயரும், கோ-கோஎன்னும் தலைவனதுபெயரும்,—ன அணையவும் - (உருபுகள் புணருமிடத்து) னகரச்சாரியை பொருந்தவும், பெறும்—.

'அணையவும்' என்ற உம்மையால் - அணையாமலிருக்கவும் பெறுமென்றதாயிற்று; ஆகவே, விகற்பித்துவரு மெனக் கொள்க.

(உ - ம்.) ஆ + ஐ = ஆனை, ஆவை
மா + ஐ = மானை, மாவை
கோ + ஐ = கோனை, கோவை
} னகரச்சாரியை பெற்றும் பெருதும் விகற்பித்தன. மற்றையுருபுகளோடும் கூட்டுக.

இன்னும், 'னவ்வணையவும்' என்ற உம்மையால் - குவ்வுருபு புணரும்பொழுது ஆனுக்கு என உகரச்சாரியையும் உடன்பெறுதலும், ஆவுக்கு என உகரச்சாரியையொன்றே பெறுதலும், ஆவினுக்கு என இன்சாரியையுடன் உகரச்சாரியை பெறுதலும், ஆவினை என மற்றையுருபுகள் புணரும்பொழுது இன்சாரியையொன்றே பெறுதலும் கொள்க. மா, கோ என்பனவும் இவ்வாறே.

இரட்டுறமொழிதலால், ஆமா என ஒருசொல்லாய்க் காட்டுப்பசுவை உணர்த்திநின்ற இடத்தும், ஆமானை, ஆமாவை, ஆமானுக்கு, ஆமாவுக்கு, ஆமாவினுக்கு, ஆமாவினை என இவ்விதி பெறுதலும் கொள்க.

அணையும் என்று நிறுத்தாமல் 'அணையவும்பெறும்' என்றதனுல், ஆன், மான், கோன், ஆமான் எனத் தனிமொழியிலும் னகரச்சாரியை பெறுதலும் கொள்க. § (க)

---

* சீவகசிந்தாமணியில், "நன்றப்பொருளே வலித்தேன்" என்ற செய்யுளில், "அன்றைப்பகலே யடியேன் வந்தடைவ னீமே, வென்றிக் களிற்றுனுழைச் செல்வது வேண்டுமென்றான்" என்ற இடத்து 'நீம்' என்பது வந்ததும், அச்செய்யுளுரையில் நச்சினார்க்கினியர் "இளந்த வல்ல செய்யுளுட்டிரிநவும்" என்றதனுல், 'நும்' என்னுஞ் சொல் 'நீயிர்' என முழுவதுந் திரியாது மகரம்நிற்பத்திரிந்து 'நீம்'என நின்றது; இனி, நீம் என்று ஓர் திசைச்சொல்லுமாம்' என உரைத்ததும் உணர்க.

§ இங்கு 'உரையிற்கோடலால், 'ஊ' என்பதும் ஊனை என னகரச்சாரியை பெறுதலும் கொள்க' என்பாரும் உளர்; அது பொருந்ாது:எனெனின்:—இந்நூலாசிரியர் "குயினூன் வேற்றுமைக்கண்ணு மியல்பே" என்ற சூத்திரத்தில்'ஊன்'என்பதை ஒரு தனிமொழியாகக் கொண்டன ராதலால் அதனை ஆன் மான் கோன் என்பனபோல ஓரெழுத்தொருமொழி னகரச்

['ஒருபது' முதலிய எண்ணுப்பெயர்கட்குச் சிறப்புவிதி.]

உசகூ. ஒன்று முதலெட் டீறு மெண்ணூர்
பத்தின்முன் ஆன்வரிற் பவ்வொற் றொழியமேல்
எல்லா மோடு மொன்பது மிற்றே.

(இ - ள்.) ஒன்று முதல்—, எட்டு ஈறு ஆம் - எட்டுவரையி லுள்ள, எண் - எண்ணுப்பெயர்களோடு, ஊர்-புணர்ந்த, பத்தின் முன்-பத்து என்னும் எண்ணுப்பெயரின்முன் (ஆறு உருபுகள் புணருமிடத்து), ஆன் - ஆன் சாரியை, வரின் - வந்தால்,—ப ஒற்று ஒழிய - பத்து என்னும் எண்ணினது பகரமெய் ஒன்றுமே நிற்க, மேல் - அதன்மேலே நின்ற, எல்லாம் - எல்லாவெழுத்துக்களும், ஓடும் - கெடும்:—ஒன்பதும் - ஒன்பது என்னும் எண்ணின் முன்னும் (உருபுகள் புணருமிடத்து ஆன்சாரியை வந்தால்), இற்றே - இவ்வாறேயாகும் [பகரமெய்மாத்திரம் நிற்க மேலேநின்ற எல்லா வெழுத்தும் கெடும்]; (எ - று.)

(ஒருபது ஒருபஃது என இடையொற்றுக் கெட்டும் ஆய்தமாகத் திரிந்தும் விகாரப்பட்டுவரும் பத்து என்பார், 'எண்ணூர் பத்து' எனப் பொதுப் படக்கூறினர். அவை ஒருபது ஒருபஃது, இருபது இருபஃது, முப்பது முப்பஃது, நாற்பது நாற்பஃது, ஐம்பது ஐம்பஃது, அறுபது அறுபஃது, எழுபது எழுபஃது, எண்பது எண்பஃது என்பன.)

'ஆன் வரின்' என்றதனல், ஆன்சாரியைவருதற்கும் இதுவேவிதியென்க.

'வரின்' என வருதலைப் பராமுகமாகச் சொன்னதனல், வராமலிருத்தலும் கொள்க; எனவே, விகற்பித்துவரு மென்றதாயிற்று.

(உ-ம்.) ஒருபது + ஐ = ஒருபானை, ஒருபதை, ஒருபஃதை } விகற்பித்து
ஒன்பது + ஐ = ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை } வந்தன.

இன்னும், ஆன்வருதலைப் பராமுகமாகச் சொன்னதனல்-ஒருபானுக்கு ஒருபானினை என உகரச்சாரியை இன்சாரியைகளும் வேண்டுமிடத்து வருமெனக் கொள்க. மற்றை உருபுகளோடும் இப்படியே கூட்டுக. (௧௦)

சாரியை பெற்றதாகக்கொள்ளுதல் இவ்வாசிரியர்க்கு உடன்பாடன்றென்பது தெளிவாக விளங்குமாதலின்; ஆனதுபற்றியே, இங்குக்கூறுராயினர். தொல்காப்பியனர் அக்காலவழக்குப்பற்றி "ஊவெனொருபெய ராவொடு சிவணும்" என விதித்துச் சூத்திரஞ் செய்திருப்பினும் இவ்வாசிரியர் தாம் நூல்செய்தகாலத்தில் ஊ என்ற வழக்குச் சிறுபான்மைப்பட்டு ஊன் என்ற வழக்கே பெரும்பான்மைப்பட்டதனல், ஊ என்ற பெயரை "உயிர்மவிலாறும்" என்றதனல் ஒருவாறு குறிப்பித்த மாத்திரத்தோடு விட்டு 'ஊன்' என்பதனைத் தனிமொழியாகக் கொண்டன ரென்க. இது பழையன கழிதலும் புதியன புகுதலுமாம். தொல்காப்பிய நச்சினர்க்கினியத்தில் "ஊ' என்பது தசையை யுணர்த்தி நின்ற வழக்கு, ஆசிரியர் நூல்செய்த காலத்து வழக்கு; அன்றித்தேயவழக்கேனும் உணர்க' என்றது, இங்கே கருதத்தக்கது.

[வகரஈற்றுச் சுட்டுப்பெயர்க்குச் சிறப்புவிதி]

‡ உடுப. வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.

(இ - ள்.) வ இறு சுட்டிற்கு - (அஃறிணைப் பலவின்பாலாகிய அவ் இவ் உவ் என்னும்) வகரமெய்யீற்று மூன்று சுட்டுப்பெயர்கட்கும், அற்று உறல் - (உருபுகள் புணருமிடத்து) அற்று என்னுஞ் சாரியை பொருந்துதல், வழி - முறைமையாம்; (எ - று.)

(உ - ம்.) அவ் + ஐ = அவற்றை
இவ் + ஐ = இவற்றை
உவ் + ஐ = உவற்றை } என அற்றுச்சாரியை வேண்டியே வந்தன. மற்றை வேற்றுமைகளோடும் கூட்டுக.

'உறும்' என்று நிறுத்தாமல் 'வழியே' என்றமிகையால் - அவற்றினை, இவற்றினை, உவற்றினை என அற்றுச்சாரியையோடு இன்சாரியை வருதலும்; தனிக்குறில் முன் ஒற்று உயிர்வர இரட்டாமையும்; அவை, இவை, உவை என்னும் வைவீற்றுச்சுட்டுப்பெயர்கள் அவையிற்றை,இவையிற்றை, உவையிற்றை என இற்றுச்சாரியை பெறுதலும்;எவற்றை என வினப்பெயரும் இவ்வாறு நிற்றலும் கொள்க. (கக)

['அஃது' முதலிய சுட்டுப்பெயர்கட்குச் சிறப்புவிதி.]

† உடுக. சுட்டின்முன் னாய்த மன்வரிற் கெடுமே.

(இ - ள்.) சுட்டின் முன்-(அஃது இஃது உஃது என்னும் மூன்று சுட்டுப்பெயர்களில் மொழிமுதற்) சுட்டெழுத்தின்முன் நின்ற, ஆய்தம்—,— அன் வரின் - (அச்சுட்டுப்பெயர்களோடு உருபுகள் புணருமிடத்து) அன் சாரியை வந்தால், கெடும்—; (எ - று.)

'அன் வரின்' என்றதனால், அன்சாரியை வருதற்கும் இதுவே விதியென்க. 'வரின்' என வருதலைப் பராமுகமாகச் சொன்னதனால், வராமலிருத்தலும் கொள்க; எனவே, விகற்பிக்கு மென்றதாயிற்று.

(உ - ம்.) அஃது + ஐ = அதனை, அஃதை
இஃது + ஐ = இதனை, இஃதை
உஃது + ஐ = உதனை, உஃதை } எனச் சாரியை விகற்பித்தும், சாரியை வந்தவிடத்து ஆய்தம் கெட்டும் வந்தன.

'அன்' சாரியை வருதலை நோக்கி ஆய்தங்கெட்டவிடத்து அது இது உது என ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களாகிப் பின்பு அன்சாரியை பெறுதலால், ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்கள் அது-அதனை, இது-இதனை, உது-உதனை என 'அன்' சாரியை பெறுதற்கும் இதுவே விதியென்க.

இன்னும் 'அன்' சாரியை வருதலைப் பராமுகமாகக் கூறியதனல்-குவ்வுருபு புணரும்போது அது + கு = அதற்கு என அன்சாரியை தனித்து வருதலல்லாமலும், அதனுக்கு என உகரச்சாரியையுடன் வருதலும் கொள்க. இன்னும் அதனல் - 'அதை,' 'இதுக்கு' எனச் சாரியையின்றி வருதலும், அத்தை, அத்தால் என வழங்குதலும் கொள்க.

இச்சூத்திரத்து உபலக்ஷணத்தால் - வினப்பெயராகிய எது என்பது எதனை, எதனுக்கு, எதை என இவ்வாறு வருதலும் அமையும். (கஉ)

[அத்துச்சாரியை முதல் கெடுதல்]

‡ உருஉ. அத்தின் அகரம் அகரமுனை யில்லை.

(இ - ள்.) அத்தின் - அத்துச்சாரியையின் முதலிலுள்ள, அகரம்-அகரவுயிரானது,—அகரம் முனை-(இயல்பினாலும் விதியினாலும் நிலைமொழியீற்றில் நின்ற) அகரவுயிரின் முன் (வந்தால்), இல்லை-கெடும்; (எ - று.)

உயிரீற்றுமொழியின் முன் அத்துச்சாரியை வருதற்கும் இதுவே விதி.

(உ - ம்.) மக + அத்து = மகத்தை, மகத்துக்கை—இயல்பு உயிரீறு.
மர + அத்து = மரத்தை, மரத்துக்குறை—விதி உயிரீறு.

'அகரமுனையில்லை' என்றதனால்-போழ்தத்து வள்ளன்மை, அவையத்துச்சென்றார் எனப் பிறஉயிரீற்றின்முன் அத்தின்அகரம் கெடாதென்க.

இனி, சிறுபான்மை அத்தின் அகரம் விளவத்துக்கோடு, அதவத்துக்கண் என அகரவீற்றின்முன் கெடாமலும்;நிலாத்துக்கொண்டான், துலாத்துக்கோல் என ஆகாரவீற்றின்முன்னும், தேத்து என ஏகாரவீற்றின் முன்னும் கெட்டும் வருமெனவும் அறிக.

இது - * தொல்காப்பியச் சூத்திரம். (கரு)

புறனடை.

[சாரியைப் புறனடை: சாரியைகளை அறியும் வகை.]

உருரு. இதற்கிது சாரியை யெனினள வின்மையின்
விகுதியும் பதமு முருபும் பகுத்திடை
நின்ற வெழுத்தும் பதமு மியற்கையும்
ஒன்ற வுணர்த்த லுரவோர் நெறியே.

(இ - ள்.) இதற்கு இது சாரியை எனின் - (விகுதிப்புணர்ச்சி முதலிய புணர்ச்சிகளில்)இதுக்கு இது சாரியை என்று (வரையறுத்துத் தனித்தனி) சொல்லப்புகுந்தால், அளவு இன்மையின்-ஓர் அளவு இல்லாமையால்,—விகுதியும் - விகுதிப்புணர்ச்சியையும், பதமும் - பதப்புணர்ச்சியையும், உருபும் - உருபுபுணர்ச்சியையும், பகுத்து - பிரித்து,—இடை நின்ற - நடுவில் நின்ற,;எழுத்தும் - (னகரம் அகரம் முதலிய) எழுத்துச்சாரியையையும்,பதமும்-(அன் ஆன் முதலிய) பதச்சாரியையையும், இயற்கையும்-(இவ்விரண்டு சாரியையும் இல்லாத) இயல்பையும், ஒன்ற உணர்த்தல் - தெரிய அறிவித்தல்,—உரவோர் நெறி - அறிவுடையோரது முறைமையாம்; (எ - று.)

	எழுத்துச்சாரியை.	பதச்சாரியை.	இயல்பு.
(உ - ம்.)	நடந்தது	நடந்தனன்	நடந்தான்—விகுதிப்புணர்ச்சி.
	ஆனநெய்	வண்டின்கால்	தன்கை —பதப்புணர்ச்சி.
	சாத்தனுக்கு	எவற்றை	என்னால் —உருபுபுணர்ச்சி.

இவ்வாறே மூவகைப்புணர்ச்சிகளையும் பகுத்தறிந்துகொள்க.

* தொல்காப்பியம்-எழுத்ததிகாரம், புணரியல் - உசு.

எல்லாச்சாரியைகளும் இடைச்சொல்லாயினும், இவ்வாறு எழுத்துச் சாரியை பதச்சாரியை எனப் பிரித்தது, அவற்றுள் வேறுபாடு அறிதற்கு வைத்த குறியென அறிக. (கச)

[நால்வகைப்புணர்ச்சிக்கும் புறனடை.]

உருச. விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினும்
உரைத்த * விதியினோர்ந் தொப்பன கொளலே.

(இ - ள்.) விகுதி - விகுதிப்புணர்ச்சியும், பதம் - பதப்புணர்ச்சியும், சாரியை-சாரியைப்புணர்ச்சியும், உருபு - உருபுபுணர்ச்சியும் ஆகிய, அனைத்தினும் - நான்கு புணர்ச்சிகளிடத்தும், உரைத்த-பொதுப்படச் சொல்லப்பட்ட, விதியின் - விதிகளுள், ஓர்ந்து-(இவ்விதி இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது என்று) ஆராய்ந்து அறிந்து,ஒப்பன - எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியே,கொளல்-(அதற்குக்)கொள்க;(எ-று.)

(வரலாறு.)

விகுதிப்புணர்ச்சியுள் "றவ்வொ டுகர வும்மை நிகழ்பல்லவும்" எனப் பொதுப்பட விதித்தாராயினும், 'சென்று' என்ற இடத்து இறந்தகாலமும், 'சேறு' என்ற இடத்து எதிர்காலமும் பொருந்து மென்று கொள்க.

பதப்புணர்ச்சியுள் "அல்வழி இ ஐம் முன்னராயின், இயல்பும் மிகலும் விகற்பமு மாகும்" எனப் பொதுப்பட விதித்தாராயினும், 'யானைகுதிரைகள்'என உம்மைத்தொகையில் இயல்பாயும்,'ஆடித்திங்கள்' எனப் பண்புத் தொகையில் மிகுந்தும், 'கிளிகுறிது,' 'கிளிக்குறிது' எனச் சில எழுவாய்த் தொடரில் விகற்பித்தும் வருமென்று கொள்க.

சாரியைப்புணர்ச்சியுள் "பதமுன் விகுதியும் பதமு முருபும், புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை, வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்" எனப் பொதுப்பட விதித்தாராயினும, 'நாட்டின்கண் இருந்தான்' எனக் கண்ணுருபிற்கு இன்சாரியை வரு மென்றும், 'நாட்டினீங்கினான்' என இன்னுருபிற்கு இன்சாரியை (பெரும்பாலும்) வரா தென்றும் கொள்க.

உருபுபுணர்ச்சியுள் "ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்,ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே" எனப் பொதுப்பட விதித்தாராயினும், 'நம்பிகண்' எனக் கண்ணுருபு மிகா தென்றும், 'நம்பிக்கு' எனக் குவ்வுருபு மிகு மென்றும் கொள்க. மற்றவைகளும் இப்படியே. (கரு)

[இரண்டாம்வேற்றுமைப்புணர்ச்சிக்குச் சிறப்புவிதி.]

‡ உருரு. இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்தும் நின்றும்
அன்ன பிறவு மாகு மையுருபே.

---

* 'விதியுள்' என்றும் பிரதிபேதம்.

(இ - ள்.) ஐ உருபு - இரண்டாம்வேற்றுமைப் புணர்ச்சி,—இயல்பின் விகாரமும் விகாரத்து இயல்பும்-(பொதுவிதிப்படி முடிதலேயன்றி அப்படி விதித்த)இயல்பிலே விகாரமாகியும் விகாரத்திலே இயல்பாகியும்;உயர்திணையிடத்து - உயர்திணைப்பெயரினிடத்து, விரிந்தும் - உருபு வெளிப்பட்டும், தொக்கும் - உருபு மறைந்தும்; விரவுப் பெயரின்-பொதுப்பெயரினிடத்து, விரிந்தும் - உருபு வெளிப்பட்டும், நின்றும் - உருபு மறைந்தும்; அன்ன பிறவும் - அவைபோல்வன பிற வேறுபாடுகளும், ஆகும் - ஆகிவரும்; (எ - று.)

(உ - ம்.) நின் + புறங்காப்ப='நிற்புறங்காப்ப'— "நின்னீறியல்பாம்" என இயல்பாகவேண்டுமிடத்து விகாரமாயிற்று.

மண்சுமந்தான், பொன்கொடுத்தான்—"ணன வல்லினம் வரட்டறவும்" என விகாரமாகவேண்டுமிடத்து இயல்பாயிற்று.

நம்பியைக் கொணர்ந்தான்—உயர்திணையிடத்து விரிந்தது.

மகன் + பெற்றாள்—மகற்பெற்றாள்—உயர்திணையிடத்துத் தொக்கது.

கொற்றனைக் கொணர்ந்தான்—பொதுப்பெயரிடத்து விரிந்தது.

ஆண்பெற்றாள்—பொதுப்பெயரிடத்துத் தொக்கது.

'அன்ன பிறவும்' என்றதனால் - 'தற்கொண்டான்'என விகற்பிக்கவேண்டுமிடத்துத் திரிந்தேவருதலும், பிறவுங்கொள்க. (தன் + கொண்டான்.)

எண்ணுப்பொருளில் வந்த இறந்ததுதழுவிய இழிவுசிறப்பு உம்மைகளால் - வேற்றுமைக்கு என்று விதித்த பொதுவிதியோடு ஒத்து 'வரகுதந்தான்' என இயல்பில் இயல்பாகியும், 'சுக்குத் தின்றான்' என விகாரத்தில் விகாரமாகியும் வருதலே பெரும்பான்மை யென்க. (கசு)

[மூன்றும் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்புவிதி]

உடுசு. புள்ளியு முயிரு மாயிறு சொல்முன்
தம்மி னாகிய தொழில்மொழி வரினே
வல்லினம் விகற்பமு மியல்பு மாகும்.

(இ - ள்.) புள்ளியும் உயிரும் ஆய் இறு சொல் முன்-(மூன்றும்வேற்றுமைத்தொகையில்) மெய்யும் உயிரும் இறுதியாகிநின்ற சொற்களின் முன், தம்மின் ஆகிய தொழில் மொழி - கருத்தாவாகிய நிலமொழிப்பொருள்களாலாகிற வினைச்சொற்கள் [செயப்பாட்டு வினைச்சொற்கள்], வரின் - (வருமொழியாக) வந்தால்,—, வல்லினம் - (அவ்விடத்து வரும்) வல்லினம், (பொதுவிதிப்படி முடிதலேயன்றி), விகற்பமும் - உறழ்ச்சியும், இயல்பும்—, ஆகும்—; (எ - று.)

(உ - ம்.) பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான்
புலிகோட்பட்டான், புலிக்கோட்பட்டான் } விகற்பம்.

பேய்பிடிக்கப்பட்டான், புலிகடிக்கப்பட்டான்—இயல்பு.

உம்மையால் - அராத்தீண்டப்பட்டான், சுறாப்பாயப்பட்டான் எனப் பொதுவிதியால் முடிவனவே பெரும்பாலனவாம். (கள)

எழுத்ததிகாரத்திற்குப் புறனடை.

உருஎ. இதற்கிது முடிபென் றெஞ்சாதி யாவும்
விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்
வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.

(இ-ள்.) இதற்கு இது முடிபு என்று - இதுக்கு இதுதான் முடிந்த இலக்கண மென்று, யாவும்-(இவ்வதிகாரத்துள் விதிக்கத்தக்கவற்றை) எல்லாம், எஞ்சாது - குறையாமல், விதிப்பு - (தனித்தனிஅளவுசெய்து) விதிக்கப்புகுந்தால் அதற்கு, அளவு இன்மையின்-ஒரு வரம்பு இல்லாமையால்,— விதித்தவற்று இயலான்-வகுத்து விதித்தவற்றினுடைய இலக்கணங்களை (ஏதுவாக)க்கொண்டு, வகுத்து உரையாதவும்-வகுத்து விதிசொல்லாதவற்றையும், வகுத்தனர் கொளல் - (அநுமானப்பிரமாணத்தால்) வகுத்து விதியுரைத்துக்கொள்க; (எ - று.)

(உ - ம்.) எழுத்தியலுள், "மொழிமுதற்காரணமாம் அணுத்திரளொலி எழுத்து" என ஒலிவடிவெழுத்தை உரைத்ததனால், 'ஒலிவடிவைக் காட்டுதற்கு ஓர் கருவியாக எழுதப்பட்டது வரிவடிவெழுத்து' எனக் கொள்க.

பதவியலுள், "அன் ஆன் அள் ஆள்" என்னுஞ் சூத்திரத்தில் முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கென உரைத்ததனால், 'பெருமாள்' என்னும் பதம் பெருமையையுடையா னென்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்கிற பதத்தினது ஆன்விகுதி ஆள் விகுதியாக ஒரோவிடத்துத் திரிந்து ஆண்பாலையே யுணர்த்திநின்றதெனக் கொள்க.

உயிரீற்றுப்புணரியலுள், "இயல்பினும் விதியினுநின்ற வுயிர்முன், கசதப மிகும்" என உரைத்ததனால், "ணனவல் லினம்வரட் டறவும்" என்ற இடத்து, டகரமும் வல்லினமாதலின் மிக்கதெனக் கொள்க.

மெய்யீற்றுப்புணரியலுள், "நும்தம், எம்நம் மீறு மவ்வரு ஞநவே" என உரைத்ததனால்,அம் என்னுஞ்சொல்லிறுதி மகரமும் தனிக்குறிலடுத்த ஒற்றாதலின் தன்னோடு மயங்காத மெல்லினம் வந்தால் அதுவாய்த்திரிந்து அந்நகை என அழகிய நகையென்னும் பொருளதாய் வருமெனக் கொள்க.

உருபுபுணரியலுள், இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம்வேற்றுமைக்கும் புறனடை உரைத்ததனால், ஏழாம்வேற்றுமையும் மண்சேர்ந்து, விண்புகுந்து என வேற்றுமைப் பொதுவிதியை ஏலாமல் சிறுபான்மை வருமெனக் கொள்க.

இன்னும் இவ்வைந்தியலுள்ளும் வகுத்து உரையாதவற்றையெல்லாம் இதுவே இடமாக முடித்துக்கொள்க. (நு-அ)

உருபுபுணரியல் முற்றிற்று.

"அடையெண் பெயர்முறை தோற்றம் வடிவள வாதியந்தம்
இடைநிலை போலியென் றீரைந் தெழுத்து மீருபதமும்
படுபுணர் மூன்றி னியல்பும் விகாரமுஞ் சாரியையும்
உடனுணர் வாரை யெழுத்தறி வாரென்ப ருத்தமரே."

எழுத்ததிகாரம் முற்றுப்பெற்றது.

இரண்டாவது

சொல்லதிகாரம்.

மேற்கூறிய எழுத்தினாலாகிய

பலவகைச்சொற்களின் இலக்கணங்களை உணர்த்தும் அதிகாரம்.

க. பெயரியல்.

பெயர்ச்சொல்லின் இலக்கணங்களை உணர்த்தும் இயல்.

[* கடவுள் வணக்கமும், அதிகாரத்தொடக்கமும்.]

உருவ. முச்சக நிழற்றும் முழுமதி முக்குடை
அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே.

(இ - ள்.) முச் சகம்-(சுவர்க்கம் பூமி பாதாளம் என்னும்) மூன்றுலோகங்களுக்கும், நிழற்றும்-நிழலைச் செய்கின்ற, முழு மதி - நிறைந்த [பூர்ண] சந்திரன்போன்ற, முக் குடை - மூன்று குடைகளையுடைய, அச்சுதன்-அழியாத கடவுளாகிய அருகதேவனது §, அடி-பாதங்களை, தொழுது-வணங்கி, —சொல் - (முன்னதிகாரத்துட் சொல்லிய எழுத்தினு லாகிய) சொல்லின் இலக்கணத்தை, அறைகுவன் - சொல்வேன்; (எ - று.)—அச்யுதன் - தன்னைச் சரணமடைந்தவர்களைக் கைவிடாதவ னென்றுமாம். ஏ - ஈற்றசை.

முக்குடை-சந்திராதித்தியம், நித்தியவிநோதம், சகலபாசனம் எனப் பெயர்பெறும்; இவை, ஒன்றன்மேலொன்றாக அமைந்துள்ளன: ஆனது பற்றி,'முச்சக நிழற்றும்' என்றார். "திங்கண் மூன் றடுக்கிய திருமுக்குடைக் கீழ்" என்றார் சிலப்பதிகாரத்தும். 'சொல்' என்றது, ஆகுபெயர். (க)

* 'அஃதேல், ஒருநூற்கு எடுத்துக்கோடற்கண்ணே வணக்கஞ்சொல்லுத லன்றி அதிகாரந்தோறுஞ் சொல்லியது என்னையோ வெனின்,—நூல் ஒன்றேயெனினும் அதிகாரங்கள் பொருளான் வேறுபடுதலானும், முன்னையொருசாரார் ஒரோ வதிகாரத்தை ஒருநூலாக்கிப் பாயிரம் முழுதும்பகர்தலானும், "ஆதியு மந்தமு நடுவு மங்கலம்,ஓதிய முறைமையி னுரைப்ப ராயிடின், ஏதமி லிருநிலக் கிழத்தி யின்புற, நீதியம் பனுவல்கள் நிலவு மென்பவே" என்ப வாதலானும், 'கற்றதனாற் பயன்: குற்றமற்று முற்றுமுணர்ந்த ஒற்றைநற்றவன் பொற்றுளிணைமலர் போற்றல்' என்பதனானும், சொன்னாரெனக் கொள்க' என்பது, பழைய உரை.

§ 'ஈண்டுக் காப்பது கருதி 'அச்சுதன்' என்றது, மேலையதிகாரத்துப் படைப்பதுகருதி 'நான்முகன்' என்றதுபோலும்'என்பது நன்னூல்விருத்தி,

சொல்லின் பொதுவிலக்கணம்.

[சொல் இன்ன தென்பது.]

‡ உருக. ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்று
இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.

(இ - ள்.) ஒருமொழி-ஒருமொழியும், தொடர்மொழி-தொடர்மொழியும், பொதுமொழி - பொதுமொழியும், என்று - என்று மூன்று பிரிவை யுடையதாய்,—இரு திணை - இரண்டு திணைகளையும், ஐம் பால் பொருளையும், (அவற்றின் கூறுபாடான) ஐந்துபால்களையும், தன்னையும்- நன்பொருளையும், மூவகை இடத்தும் - மூன்று இடங்களிலும், வழக்கொடு - உலகவழக்கத்திலும், செய்யுளின் - செய்யுள்வழக்கத்திலும், வெளிப்படை - வெளிப்படை யாகவாவது, குறிப்பின் - குறிப்பாகவாவது, விரிப்பது - தெரிவிப்பது,— சொல் - சொல்லாம்; (எ - று.)—சொல் - பொருளைச் சொல்வது.

இருதிணை யைம்பாற் பொருளைத் தெரிவித்தல் - தான் இன்னதிணை இன்னபால் என்று அறிவித்தல். தன்னைத் தெரிவித்தல் - தான் இன்ன அருத்தத்தைக் கொண்டதென்று அறிவித்தல். (உ)

[மூவகைமொழிகள்.]

‡ உகூ0. ஒருமொழி பொருபொரு ளனவாம் தொடர்மொழி
பலபொரு ளனபொது விருமையு மேற்பன.

(இ - ள்.) ஒருமொழி - ஒருமொழிகளாவன:— ஒரு பொருளன ஆம் - (பகர்ப்பதமாவது பகுபதமாவது ஒன்று நின்று தம்தம்) ஒருபொருளைத் தருவனவாம்; தொடர்மொழி-தொடர்மொழிகளாவன:— பலபொருளன-(அவ் விருவகைப்பதங்களும் இரண்டு முதலியனவாகத் தொடர்ந்துநின்று ஒவ்வொரு சொல்லுக்கு ஒவ்வொரு பொருளாக இரண்டுமுதலிய)பலபொருள்களைத் தருவனவாம், பொது - பொதுமொழிகளாவன:— இருமையும் ஏற்பன - (ஒருமொழியாக நின்று ஒருபொருளைத் தந்தும் அதுவே தொடர்மொழியாக நின்று பலபொருளைத் தந்தும்) இவ்விரண்டுக்கும் பொதுவாக நிற்பனவாம்; (எ - று.)

(உதாரணம்.)

ஒருமொழி—நிலம், நிலத்தன்; நட, நடந்தான்; தில், மன்; தவ, நனி.

தொடர்மொழி—நிலம்வலிது, அதுகொல், சாலப்பகை, மண் அளந்தமால்.

பொதுமொழி—எட்டு, தாமரை, வேங்கை இவை - ஒருமொழிகளாக நின்று ஒருபொருளைத் தருதலன்றியும், எள் + து [எள்ளை உண்.], தா + மரை [தாவுகின்ற மான்], வேம் + கை [வேகின்ற கை] எனத் தொடர்மொழிகளாக நின்று ஒவ்வொருசொல்லுக்கு ஒவ்வொருபொருளாகப் பல பொருள்களைத் தருதலும் காண்க.

இங்கு 'தொடர்மொழி பலபொருளன' என்றது - பலசொற்கள் தொடர்ந்து நின்று ஒவ்வொருசொல்லுக்கு ஒவ்வொருபொருளாகப்பலபொருள்களைத் தெரிவிப்பதை; இவ்வியலில், கடு-ஆம் சூத்திரத்தில் "ஒருபொருள் குறித்த பலசொல்லாகியும்,பலபொருள் குறித்த ஒரு சொல்லாகியும்"எனக் கூறுமவற்றில் ஒருசொல்லே நின்று பலபொருள்களைக் குறிப்பதையன்று; அது-திரிசொல்லாம். ஒருமொழியெனினும், தனிமொழியெனினும்ஒக்கும். தொடர்மொழியெனினும், சொற்றொடரெனினும் ஒக்கும். பொதுமொழி-இவ்விரண்டின் தன்மையையும் ஏற்றுவருபவை. (ங)

[இருதிணை.]

‡ உசுக. மக்கள் தேவர் நரக ருயர்திணை
மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை

(இ - ள்.) மக்கள் - மனிதர்களும், தேவர் - தேவர்களும், நரகர்-நரகர்களும், உயர்திணை - உயர்திணைப்பொருள்களாம்; மற்று உயிர் உள்ளவும் - மற்றை (மிருகம் பறவை முதலாகிய) உயிருள்ளவையும், இல்லவும் - (நிலம் நீர் முதலாகிய)உயிரில்லாதவையும்,அஃறிணை-அஃறிணைப்பொருள்களாம்.

இம்மூவகையோருடைய உடம்பையும் உயிரையும் தனித்தனி குறிக்கும்போது, அவ்விரண்டும் அஃறிணையாம்; (உ - ம்.) உடம்பு பருத்தது, உயிர் நீங்கிற்று.

உயர் திணை - உயர்ந்த பகுப்பு; அஃறிணை - அல் திணை : அதுவல்லாத [தாழ்வாகிய] பகுப்பு. அஃறிணையெனினும், இழிதிணையெனினும் ஒக்கும். உயர்திணை - வினைத்தொகை. அஃறிணை - பண்புத்தொகை.

மக்கள் - பூலோகவாசிகள், தேவர் - சுவர்க்கலோகவாசிகள். நரகர் - பூமியின்கீழுள்ள நரகலோகத்தில் வாசஞ்செய்பவர்கள்.மனிதராய்ப் பிறந்து புண்ணியபாவங்களைச்செய்து புண்ணியமிகுதியால் தேவராகவும் பாவமிகுதியால் நரகராவும் தோன்றுவதனுல், மக்கள் தேவர் நரகர் என முறைப்படுத்திக் கூறினர்.

இனி, 'சூரியன் உதித்தான்', 'சூரியன் உதித்தது;' 'சந்திரன் மறைந்தான்', 'சந்திரன் மறைந்தது;' 'கலி நீங்கினன்' 'கலி நீங்கிற்று;' 'வந்தான் கூற்றுவன்', 'வந்தது கூற்று' எனத் தேவர்களையும்; 'சேடன் எழுந்தான்,' 'சேடன் எழுந்தது'; 'கார்க்கோடகன் தீண்டினன்', 'கார்க்கோடகன் தீண்டிற்று' எனத் தேவகணத்தாரையும் உயர்திணையாகச் சொல்வதுமல்லாமல் அஃறிணையாகச் செல்வதும் உண்டு.

கடவுளை உயர்திணையாகவும், அஃறிணையாகவும் சொல்லலாம்;(உ-ம்.) கடவுள் இருக்கிறார், தெய்வம் இருக்கிறது. (ச)

[உயர்திணையின் பால்கள் - ங.]

‡ உசுஉ. ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை.

(இ - ள்.) ஆண்-ஆண்பாலும், பெண்-பெண்பாலும்,பலர்-பலர்பாலும், என - என்று, உயர்திணை—, முப் பாற்று - மூன்று பால்களை யுடையது.

பால் பகுப்பு. ஆண்பாலும், பெண்பாலும் ஒருமை. பலர்பால்-பன்மை.

ஆடவர் மைந்தர் முதலிய ஆண்பன்மையையும், பெண்டிர் மகளிர் முதலிய பெண்பன்மையையும், மக்கள் மாந்தர் முதலிய அவ்விருவர்பன்மையையும் அடக்கி, 'பலர்' என்றார்; வருஞ்சூத்திரத்தில் 'பல' என்பதும் அது. (ரு)

[அஃறிணையின் பால்கள் - உ]

‡ உசுரு. ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை.

(இ - ள்.) ஒன்றே - ஒன்றன்பாலும், பல - பலவின்பாலும், என்று—, அஃறிணை—, இரு பாற்று - இரண்டுபால்களை யுடையது; (எ - று.)

அஃறிணையில் சேவல் களிறு கடுவன் முதலிய ஆண்பாலும், பெடைபிடி மந்தி முதலிய பெண்பாலும் இருந்தாலும், அப்பகுப்பு - உயிருள்ளவற்றில் புழு முதலிய சிலவற்றிற்கும், கல் முதலிய உயிரில்லாதவற்றிற்கும் இல்லாமையால், அப்பகுப்பை ஒழித்து, எல்லாவற்றிற்கும் பொருந்த 'ஒன்று' என்றார். * ஒன்றன்பால் - ஒருமை. பலவின்பால் - பன்மை. (சு)

[திணை பால்களுக்குப் புறனடை]

† உசுசு. பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பால்
ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்
இருமையு மஃறிணை யன்னவு மாகும்.

(இ-ள்.) பெண்மை விட்டு-பெண்தன்மை குறைந்து, ஆண் அவாவுவ - ஆண்தன்மை மிகுந்திருப்பனவாகிய, பேடு - பேடுகள், ஆண்பால் - (உயர்திணை) ஆண்பாலாம்; ஆண்மை விட்டு - ஆண்தன்மை குறைந்து, அல்லது அவாவுவ - பெண்தன்மை மிகுந்திருப்பனவாகிய பேடுகள், பெண்பால் - (உயர்திணைப்) பெண்பாலாம்; இருமையும்-இவ்விருவகைப்பேடுகளும், அஃறிணை அன்னவும் - (உயர்திணையாவதன்றி) அஃறிணையையொத்து நடப்பவையும், ஆகும்—; (எ. - று.)—பேடு - நபும்ஸகம்.

இவையும் மக்கட்கதியினவேனும், அத்தன்மை நிரம்பாமையின் இவ்வாறு முடியுமென்க. ஆணிலக்கணமும் பெண்ணிலக்கணமும் கலந்து ஒருவகையாயினும் நிரம்பாமல் நிற்கும் பேடுகளை, பாற்பொதுமையின் நீக்கி, குறைந்த இலக்கணம் ஒழிய மிகுந்த இலக்கணம்பற்றி, உயர்திணை ஆண்பால் பெண்பால்களுள் ஒருபாலிற் சேர்த்துச் சொல்லுதல் தகுதியென்றும், இவ்விலக்கணங்களைக்கருதாமல் பொதுப்படக் குறித்தபோது இருவகைப்பேடுகளும் ஆண் பெண் என்னும் இரண்டினுள் ஒன்றிற் சேர்தல் கூடாமையால் உயர்திணையாகாமல் உயிருள்ளவற்றில் ஆண் பெண் என்னும் பகுப்பு இன்றி நின்ற அஃறிணையிற் சேர்த்துச் சொல்லப்படுமென்றும் கூறியபடி.

---

* 'ஆண் பெண் என்பன அஃறிணைக்கும் ஒக்குமெனினும் அவ்விரண்டிற்கும் அஃறிணைக்கண் 'வந்தது' என்பதல்லது வழக்கினுள் வேறு வாய்பாடு இன்மையின், ஆண்பால் பெண்பால் என்னும் வழக்கு உயர்திணைக்கே ஆமென்க' என்பது, பழைய உரை.

பெண்மைவிட்டு ஆண் அவாவுவபேடு, அலி யெனப்படும்; சிகண்டிமுதலியோர். ஆண்மைவிட்டுப் பெண் அவாவுவ பேடு, பேடி யெனப்படும்; பிருகந்நளை, வீணாபதி முதலியோர்; இவ்விருவகைக்கும் பொதுப்பெயர்-பேடு.

(உ-ம்) 'அலி வந்தான்'
"சிகண்டி இவன்" } ஆண்பாலாகச் சொல்லப்பட்டன.
"பேடி அணியாளோ"
"தேரூர்ந்தாள் அந்த மெய்ப் பேடி"
"வீணாபதியென்னும் பேடி - என்றாள்" } பெண்பாலாகச் சொல்லப் பட்டன.

அலி வந்தது, பேடிவந்தது, பேடுவந்தது-அஃறிணையாகச்சொல்லப்பட்டன.

[மூன்று இடத்தும் சொல் திணை பால்களை உணர்த்துதல்.]

‡ உசூரு. படர்க்கை வினைமுற்று நாமங் குறிப்பின்
பெறப்படுந் திணைபா லனைத்து மேனை
இடத்தவற் றொருமை பன்மைப் பாலே.

(இ-ள்.) படர்க்கை வினைமுற்று நாமம் - படர்க்கையிடத்து வினைமுற்றுச் சொல்லையும் படர்க்கையிடத்துப் பெயர்ச்சொல்லையும், குறிப்பின்-சொன்னால், திணை பால் அனைத்தும் - இருதிணையும் ஐம்பாலும், பெறப்படும்—; ஏனை இடத்து - ஒழிந்த தன்மை முன்னிலை யிடங்களின் (வினைமுற்றுச்சொல்லையும் பெயர்ச்சொல்லையும் சொன்னால்), அவற்று - அவ்விருதிணை ஐம்பால்களுள், ஒருமை பன்மை பாலே - ஒருமைப்பாலும பன்மைப்பாலும் மாத்திரமே, (பெறப்படும்); (எ-று.)

* மூன்று இடங்களுள் படர்க்கையில் மாத்திரமே இருதிணை ஐம்பால் என்கிற பகுப்பு உண்டு; மற்றைத் தன்மை முன்னிலைகளில் ஒருமை பன்மை என்கிற பகுப்புமாத்திரம் உண்டேயன்றி இருதிணை ஐம்பாற் பகுப்புக்கள் இல்லை.

தன்மைமுன்னிலைகள், இருதிணைக்கும் பொது. §

வினைமுற்று, நாமம், குறிப்பின், பெறப்படும் என்பவை-மற்றோரிடத்தும் கூட்டி உரைக்கப்பட்டன.

	ஆண்பால்.	பெண்பால்.	பலர்பால்.	உயர்திணை.
(உ-ம்.)	நடந்தான்.	நடந்தாள்.	நடந்தார்.	—படர்க்கைவினைமுற்று.
	அவன்.	அவள்.	அவர்.	—படர்க்கைப்பெயர்.
	ஒன்றன்பால்.	பலவின்பால்.		அஃறிணை.
	நடந்தது.	நடந்தன.		—படர்க்கைவினைமுற்று.
	அது.	அவை.		—படர்க்கைப்பெயர்.

எனப் படர்க்கைச்சொற்கள், திணை பால்களை யுணர்த்தின.

* இத்தன்மை, வினையியல்-ரு-ஆஞ் சூத்திரத்திலும் நன்குவிளங்கும்.

§ 'தன்மை உயர்திணைக்கேயன்றி அஃறிணைக்கு உரித்தாமோ? எனின்,—"பேய் பூதம் மர்தி கிளி பூவை பேசுதலா, லாகுமே தன்மை பொது" என்பதனால் ஆமென்க' என்பது, பழைய உரை.

ஒருமை.	பன்மை.	இருதிணைப்பொது.
நடந்தேன்.	நடந்தேம்.	—தன்மைவினைமுற்று.
யான்.	யாம்.	—தன்மைப்பெயர்.
நடந்தாய்.	நடந்தீர்.	—முன்னிலைவினைமுற்று.
நீ.	நீர்.	—முன்னிலைப்பெயர்.

எனத் தன்மைமுன்னிலைச்சொற்கள், ஒருமைபன்மைகளை உணர்த்தின.

ஒருமை - ஒரு பொருளைக் குறிப்பது; பன்மை - ஒன்றின்மேற்பட்ட பல பொருள்களைக் குறிப்பது. வடநூலார் ஒருமையை ஏகவசநமென்றும், பன்மையைப் பகுவசநமென்றும் கூறுவர். வடமொழியிலக்கணத்திலுள்ள த்விவசநமும் [இருமையெண்ணும்], தமிழிற் பன்மையில் அடக்கப்படும். எண், வசநம், மொழி என்பன - ஒருபொருட் சொற்கள்.

(மூவிடங்களில் ஒன்றற்கு உரிய வினைமுற்றும் பெயரும் இப்படி உணர்த்துமெனவே, இவ்விடங்களுக்குப் பொதுவாகிய வினைமுற்றுக்களும் பெயர்களும் சந்தர்ப்பம் நோக்கிப் பொதுமைநீங்கி ஓரிடத்திற்கு உரியன வாகியும், வினையெச்சம் முதலியனவும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயர்வினைகளைச் சார்ந்தும் இப்படியே திணை பால் முதலியவற்றை உணர்த்துமெனக் கொள்க.) (அ)

[மூவகை இடம்.]

‡ உசுசு. தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே.

(இ - ள்.) மூ இடன்-மூன்று இடங்களாவன:— தன்மை-தன்மையும், முன்னிலை - முன்னிலையும், படர்க்கை - படர்க்கையும் ஆகும்; (எ - று.)

தன்மை-தன்னைக்குறிப்பது. முன்னிலை-எதிரில்நிற்கும் பொருளைக்குறிப்பது. படர்க்கை-இவ்விரண்டையுங்குறியாது அயற்பொருளைக்குறிப்பது.

(உ - ம்.) யான், வந்தேன்; யாம், வந்தோம்—தன்மை.
நீ, வந்தாய்; நீர், வந்தீர்—முன்னிலை.
அவன், வந்தான்; அவள், வந்தாள்; அவர், வந்தார்; அது, வந்தது; அவை, வந்தன. } படர்க்கை. (க)

[வழக்கு.]

‡ உசுஎ. இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றாகு மூவகை யியல்பும்
இடக்க ரடக்கல் மங்கலங் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல்.

(இ - ள்.) இலக்கணம் உடையது-இலக்கணமுடையதும், இலக்கணப் போலி - இலக்கணப்போலியும், மரூஉ - மரூஉவும், என்று ஆகும் - என்று வழங்குகின்ற, மூவகை இயல்பும்-மூன்றுவகை இயல்புவழக்குக்களும்: இடக்கரடக்கல்-இடக்கரடக்கலும், மங்கலம்-மங்கலமும், குழூஉக்குறி - குழூஉக் குறியும், எனும்-என்று வழங்குகின்ற, முத் தகுதியோடு-மூன்று தகுதிவழக்

குக்களும், (ஆக), வழக்கு இயல் - வழக்கிலக்கணம், ஆறு ஆம்-அறுவகைப் படும்; (எ - று.)—குழூஉ - கூட்டம்.

(க) இலக்கணமுடையது - இலக்கணவழியால் வருவது.

(உ - ம்.) நிலம், நீர், தீ, பொன்னன், நன்னிலம் முதலியன.

(உ) இலக்கணப்போலி - இலக்கணமில்லாததாயினும் இலக்கணமுடையதுபோலச் சான்றோரால் தொன்றுதொட்டு வழங்கப்படுவது.

(உ-ம்.)

இல்முன்-முன்றில்	பொதுவில்-போதியில்	தசை சதை
நகர்ப்புறம்-புறநகர்	மிஞிறு-ஞிமிறு	கோவில்-கோயில்
இல்வாய்-வாயில்	வைசாகி-வைகாசி	கண்மீ-மீகண்.

(ங) மரூஉ-தொன்றுதொட்டு வருதலின்றி இடையில் எழுத்துக்கள் தோன்றியும் திரிந்தும் கெட்டும் இலக்கணம்சிதைந்து தானே மருவிவழங்குவது.

(உ-ம்.)

அருமருந்தன்ன - அருமந்த	தஞ்சாவூர் - தஞ்சை
மலையமானாடு - மலாடு	ஆற்றூர் - ஆறை
சோழநாடு - சோணாடு	உறையூர் - உறந்தை
பாண்டியநாடு - பாண்டிநாடு	ஆயிற்று - ஆச்சு
தொண்டைமானாடு-தொண்டைநாடு	அ, இ, உ - அந்த இந்த உந்த
குணக்குள்ளது - குணாது	எ - எந்த
தெற்குள்ளது - தெனாது	யாடு - ஆடு, யாக்கை - ஆக்கை
வடக்குள்ளது - வடாது	யாறு - ஆறு, யானை - ஆனை
பொழுது - போழ்து, போது	யாளி - ஆளி, யாமை - ஆமை
மரவடி - மராடி	யார் - ஆர், யாய் - ஆய்
குளவாம்பல் - குளாம்பல்	வருகிறது - வருகுது
பெயர் - பேர்	வாயில் - வாசல்

இம்மூன்றும், எப்பொருட்குஎச்சொல்இயல்பில்அமைந்ததோ அச்சொல்லாலேயே அப்பொருளைக் கூறுதலால்; 'இயல்புவழக்கு'எனப்பட்டன.*

(க) இடக்கரடக்கல் - இடக்கான [நன்மக்களிடத்தே சொல்லத்தகாத] வார்த்தைகளை மறைத்துப் பிறவாற்றாற் சொல்லுதல். [இடக்கர் - இடக்கு என்பதன் ஈற்றுப்போலி.]

(உ - ம்.) மலங்கழுவிவந்தான்-கால்கழுவிவந்தான், பீ-பவ்வீ, பகாவீ.

(உ) மங்கலம் - மங்கலமல்லாத சொல்லை ஒழித்து மங்கலமான சொல்லாற் கூறுவது. [மங்கலம் - சுபம்.]

(உ-ம்.) செத்தான் - துஞ்சினான்	பொய்யாகிய உடம்பு - மெய்
சுடுகாடு - நன்காடு	செவ்வாய்க்கிழமை - மங்களவாரம்
ஓலை - திருமுகம்	தாலி அறுந்தது - தாலிபெருகிற்று.

(ங) குழூஉக்குறி-ஒருகூட்டத்தார் ஒருகாரணத்தால் ஒருபொருளின் சொற்குறியை ஒழித்து வேறொருசொல்லால் அப்பொருளைக் கூறுவது.

---

* 'இவற்றுள், முதலன மூன்றும்-ஒருகாரணமின்றி இயல்பான்வருதலின் இயல்புவழக்கென்றாயின; ஏனைமூன்றும்-இவ்வாறன்றி உயர்ந்தோரும் இழிந்தோரும் இவ்வாறுகொண்டு மொழிவது தக்கதென்று கொண்டுவழங்குதலின், தகுதிவழக்கென்றாயின' என்பது, பழைய உரை.

(உ - ம்.) பொன் - பறி—தட்டார் சொல்வது.

கள் - சொல்விளம்பி—வேடர் சொல்வது.

இம்மூன்றும், பொருள்களுக்கு இயல்பாய் ஏற்பட்ட சொற்களை ஒழித்துத் தகுதியான வேறுசொற்களால் அப்பொருளைக் கூறுதலால், 'தகுதி வழக்கு' எனப்பட்டன. (க0)

[செய்யுள்.]

‡ உசுஅ. பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினில்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்.

(இ - ள்.) பல் வகை தாதுவின் - (தோல் இரத்தம் இறைச்சி எலும்பு முதலிய) எழுவகைத் தாதுக்களினாலே, உயிர்க்கு-உயிர்க்கு (இடமாகச்செய்யப்பட்ட), உடல் போல் - உடம்புபோல,— பல சொல்லால் - பலவகைச் சொற்களாலும், பொருட்கு - பொருளுக்கு, இடன் ஆக - இடமாக, உணர்வினில் - கல்வியறிவினால், வல்லோர் - (செய்யுள் செய்ய) வல்லவரால், அணி பெற - அலங்காரம்தோன்ற, செய்வன - செய்யப்படுபவை,—செய்யுள் - செய்யுளாம்; (எ - று.)

இப்படிச் சொல்லவே, (எழுத்தாலானது சொல்லாதலால்), எழுத்து சொல் பொருள் அணிஎன்னும்நான்கினாலும்ஆவதுசெய்யுள்என்றதாயிற்று.

யாக்கைக்கும் யாப்புக்கும் ஒப்புமைகூறியது, இச்சூத்திரம்.

பொருள்-அகப்பொருளும், புறப்பொருளும். அகப்பொருள்-இன்பம்; புறப்பொருள் - அறமும், பொருளும். அணி - சொல்லணியும், பொருளணியும். சொல்லணி - மடக்கு முதலியன. பொருளணி - உவமை முதலியன.

யாப்பு, பாட்டு, தூக்கு, செய்யுள், தொடர்பு என்பன - ஒருபொருளன.

(உ-ம்.) "அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே யுலகு."

இக்குறள்வெண்பா,'கடவுள்வாழ்த்து'என்னும்பொருளுக்குஇடமாகி, எடுத்துக்காட்டுவமையணியும் பிறவும் உடையதாயிருத்தல் காண்க. (கக)

[குறிப்பும், வெளிப்படையும்.]

‡ உசுகூ. ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி
ஆகுபெய ரன்மொழி வினைக்குறிப்பே
முதல் தொகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை.

(இ - ள்) ஒன்று ஒழி பொதுச்சொல் - (இருதிணையிலும் ஆண்பால் பெண்பால்களுள்)ஒன்றை ஒழிக்கும் பொதுச்சொற்களும், விகாரம்-(வலித்தல் மெலித்தல் முதலிய ஒன்பதுவகைச் செய்யுள்) விகாரச் சொற்களும், தகுதி-(இடக்கரடக்கல்முதலிய மூவகைத்) தகுதிவழக்குச்சொற்களும்,ஆகு

பெயர் - ஆகுபெயர்ச்சொற்களும், அன்மொழி - அன்மொழித்தொகைச் சொற்களும், வினைக்குறிப்பு - குறிப்புவினைச்சொற்களும், முதல் - முதலில் நிற்கிறமொழியைக்குறிக்கிற சொற்களும், தொகை - பொருளின் தொகையைக்குறிக்கிற சொற்களும், குறிப்போடு - (இம் முதற்குறிப்பும் தொகைக்குறிப்பு மல்லாத பலவழியாலும் குறிப்பாய்வரும்) பிறகுறிப்புச்சொற்களும், இன்ன பிறவும் - இவைபோல்வன பிறவும்,—குறிப்பின் - குறிப்பினால், தரு - (பொருள்களைத்) தருகிற, மொழி - சொற்களாம்;—அல்லன- இவையல்லாதவையெல்லாம், வெளிப்படை - வெளிப்படையாற் பொருள்களைத் தருகிற சொற்களாம்.

(உதாரணம்.)

ஆயிரமக்கள்பொருதார், இம்மாடுகள் கறந்தன } *ஒன்றெழிபொதுச்சொல்-இருதிணையிலும்ஒருபாலையொழித்து ஒருபாலைக் குறிப்பாற்காட்டிற்று.

"தண்டையினினக்கிளி," "மரை மலர்" } செய்யுள்விகாரச் சொற்கள்-தட்டை,தாமரை என்பவற்றைக் குறிப்பாற் காட்டின.

கால்கழுவிவந்தான், திருமுகம் படி, பறி கொடு } தகுதிவழக்குக்கள் - மலங்கழுவி, ஓலை, பொன் என்பவற்றைக் குறிப்பாற் காட்டின.

புளி தின்றான், ஊர் மகிழ்ந்தது } ஆகுபெயர்கள் - பழம், மனிதர் இப்பொருள்களைக் குறிப்பாற் காட்டின.

தேன்மொழி வந்தாள், பெருந்தகை வந்தான் } அன்மொழித் தொகைகள் - அவற்றையுடைய பெண்ணையும், ஆணையும் குறிப்பாற் காட்டின.

இப்போது பொன்னன், முன் சிறியன் } வினைக்குறிப்புக்கள்-பெயர்ப்பொருளை நீக்கி, பொன்னையுடையனாயிருக்கிறான், சிறுமையுடையனாயிருந்தான் என்னும் பொருள்களைக் குறிப்பாற் காட்டின.

ஆத்திசூடி படித்தான், வெற்றிவேற்கை படி } முதற்குறிப்புக்கள்-அச்சொல்லை முதலிலேயுடைய நூல்களைக் குறிப்பாற் காட்டின.

ஐவரோடு குந்தி வந்தாள், "ஐவரை அடைத்த முனி" } தொகைக்குறிப்புக்கள் - பாண்டவர்களையும், ஐம்பொறிகளையும் குறிப்பாற் காட்டின.

கல்லைக்கடிக்க நன்குசமைத்தாய், பாயா வேங்கை, "உவர்க்கட லன்ன செல்வர்" (உப்புக்கடல்போன்றசெல்வமுள்ளோர்.) } பிறகுறிப்புக்கள் - நன்றாகச் சமைக்க வில்லை, வேங்கைமரம், லோபிகள்என்பவற்றைக் குறிப்பாற் காட்டின.

('இன்னபிறவும்' என்றதனால் - தெரிநிலை குறிப்பு வினையாலணையும் பெயர்களும், இருவகை வினைமுற்றாலும் வரும் முற்றெச்சங்களும், செய்யுமென்னும் முற்றும், "கேட்குநபோல" முதலியனவாக அஃறிணையிடத்துச் சொல்லப்படுவனவும் ஆகிய இவை முதலானவையும் குறிப்பாற் பொருளுணர்த்துமெனக் கொள்க.)

(இப்படியல்லாமல்) நிலம், நீர், தீ, காற்று, வானம், வந்தான், சென்றது என இவ்வாறு வருபவை வெளிப்படையாற் பொருளுணர்த்துவனவாம். ()

* இதன் இலக்கணத்தை, ௬௯௨ - ஆம் சூத்திரத்திற் காண்க.

சொல்லின் பாகுபாடு.

[சொல் இத்தனைவகைப்படு மென்பது.]

‡ உ௭௦. அதுவே,
இயற்சொல் திரிசொ லியல்பிற் பெயர்வினை
எனவிரண் டாகு மிடையுரி யடுத்து
நான்குமாந் திசைவட சொல்லணு காவழி.

(இ - ள்.) அது - (முன்னேகூறிய) சொல்,—இயற்சொல் - இயற்சொல்லும், திரிசொல்-திரிசொல்லும் என்கிற, இயல்பின்-தன்மையையுடைய, பெயர் - பெயர்ச்சொல்லும், வினை-வினைச்சொல்லும், என-என்று, இரண்டு ஆகும்-இரண்டுவகைப்படும்; இடை - இடைச்சொல்லும், உரி - உரிச்சொல்லும், அடுத்து - (அவற்றுடன்) சேர்ந்து, நான்கும் ஆம் - நான்குவகையாகவும் ஆம்; திசை வடசொல்-திசைச்சொல்லும் வடசொல்லும், அணுகாவழி-(அச்சொற்களுடன்) சேராத இடத்து; (எ - று.)

எனவே-பெயரியற்சொல் பெயர்த்திரிசொல்; வினையியற்சொல், வினைத்திரிசொல்; இடையியற்சொல், இடைத்திரிசொல்; உரியியற்சொல், உரித்திரிசொல்எனத்தமிழ்ச்சொல்எட்டுவகைப்படுமென்றும், திசைச்சொல்லும் வடசொல்லும் சேர்ந்தவிடத்துப்பத்துவகைப்படுமென்றும் கூறியதாயிற்று.

'இயற்சொல் திரிசொ லியல்பின்' என்றதை 'இடை உரி' என்பதனோடும் கூட்டுக. இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயர்வினைகள் போலத் தனித்துநடவாமல் அவற்றை அடுத்தேவருதலாலும், இடைஉரிகளில் இயற்சொல் திரிசொல் என்னும் பகுப்பு அவ்வளவாகச் சிறப்புடையதன்றாதலாலும், 'இடையுரி யடுத்து' எனத் தனியேஎடுத்தும், 'நான்குமாம்' என இழிவு சிறப்பும்மைகொடுத்தும் கூறினர். 'திசைவடசொல் அணுகாவழி' எனப் பராமுகமாக இறுதியிற்கூறியது, அவை இந்நான்குசொற்களுள் அடங்குதலால்.

பெயர்ச்சொல் பொருளை உணர்த்துதலால் முன்னும், வினைச்சொல் அப்பொருளின் தொழிலை உணர்த்துதலால் அதன் பின்னும், இடைச்சொல் அப்பொருளையும் தொழிலையும் குறிப்பால் உணர்த்தி அவற்றை அடுத்து நிற்றலால் அவ்விரண்டன் பின்னும் வைக்கப்பட்டன. உரிச்சொல்லை இறுதியில் நிறுத்தியது, அது பொருளால் பெயர்வினைகளில் அடங்குதலால். வடதிசைச்சொல்லைத் திசைச்சொல்லில் அடக்காதது, அதன் பலவகைப் பெருமையும்பற்றி.* (கரு)

[இயற்சொல்.]

‡ உ௭௧. செந்தமி ழாகித் திரியாது யார்க்குந்
தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்.

---

* 'இஃது ஒருநிலத்திற்கே யுரித்தன்றிப் பதினெண்பூமிக்கும், விண்ணிற்கும், புவனாதிக்கும் பொதுவாய் வருதலின், திசைச்சொல்லின் அடங்காது வேறுஓதினா ரென்க. அஃது என்னை?—'வடச்சண்மொழி' என்னுமாலோவெனின், ஆண்டு வழக்குப்பயிற்சிநோக்கி அவ்வாறு கூறுப வென்ப' என்பது, பழைய உரை.

(இ - ள்.) செந்தமிழ் ஆகி-செந்தமிழ்நாட்டில் வழங்குஞ் சொல்லாகி, திரியாது - திரிசொற்போலாகாமல், யார்க்கும்-படித்தவர்க்கு மாத்திரமே யன்றிப் படியாதவர்க்கும், தம் பொருள்-தமது பொருள்களை, விளக்கும்-தெரிவிக்கின்ற, தன்மைய - தன்மையையுடைய உலகவழக்குச்சொற்களே, இயற்சொல் - இயற்சொற்களாம்; (எ - று.)

செந்தமிழ்நாடு-வடபாண்டிநாடு; தமிழைவளர்த்த பாண்டியர்கட்கும் சங்கப்புலவர்கட்கும் உறைவிடமாதலால்.

இயற் சொல் - இயல்பாய் [யாவர்க்கும்] பொருள் விளங்கும் சொல்.

(உ - ம்.) மண், பொன், மரம்—பெயரியற்சொல்.
நடந்தான், வந்தான்—வினையியற்சொல்.
அவனை, அவனால் (இவைகளில்உள்ள ஐஆல்)—இடையியற்சொல்.
அழகு, அன்பு—உரியியற்சொல். (கச)

[திரிசொல்.]

‡ ௨எ௨. ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும்.

(இ - ள்.) ஒரு பொருள் குறித்த - ஒருபொருளையே தெரிவிக்கின்ற, பலசொல்ஆகியும்-பல சொற்களாயும், பலபொருள் குறித்த - பலபொருள்களைத் தெரிவிக்கின்ற, ஒருசொல் ஆகியும்-ஒரேசொல்லாயும், அரிதுஉணர் பொருளன-அருமையாக [கற்றவர்களால்மாத்திரமே] அறியப்படுகிற அருத்தத்தையுடையவை,—திரிசொல் ஆகும் - திரிசொற்களாம்; (எ - று.)

திரிசொல்-இயற்சொல்லினின்று திரிந்த[வேறுபட்ட]சொல்;வேறுபடுதலாவது-எளிதிற்பொருள்அறியப்படாமல் அரிதிற் பொருள்அறியப்படுதல்.

'அரிது உணர் பொருளன' என்றதனால் - ஒருபொருள்குறித்த பல சொற்களிலும் பலபொருள்குறித்த ஒருசொற்களிலும் இயற்சொல் தவிர மற்றவையே திரிசொல்லென்று கொள்க.

(உ - ம்.) கிள்ளை, தத்தை—இவை-கிளி என்கிற ஒருபொருளைக் குறித்த பல பெயர்த்திரிசொல்.

காசு—இது-குற்றம் பொன் மணி முதலிய பலபொருள்களைக் குறித்த ஒரு பெயர்த்திரிசொல்.

படர்ந்தான், ஏகினான், சென்றான்—இவை - போனான் என்கிற ஒரு பொருளைக் குறித்த பல வினைத்திரிசொல்.

வரைந்தான்—இது - நீக்கினான், கொண்டான், எழுதினான் முதலிய பல பொருள்களைக் குறித்த ஒரு வினைத்திரிசொல்.

சேறும்,வருதும் இவற்றில் உள்ள றும் தும் விகுதிகள்—தன்மைப்பன்மை எதிர்காலம் என்கிற ஒருபொருளைக் குறித்த பல இடைத்திரிசொல்.

கொல்—இது - ஐயம், வினை முதலிய பலபொருள்களைக் குறித்த ஓர் இடைத்திரிசொல்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி—இவை - மிகுதி என்கிற ஒரு பொருளைக் குறித்த பல உரித்திரிசொல்.

கடி—இது - காப்பு கூர்மை அச்சம் கரிப்பு விளக்கம் சிறப்பு மணம் முதலிய பலபொருள்களைக் குறித்த ஓர் உரித்திரிசொல்.

இப்பகுப்பினவன்றி ஒருபொருள் குறித்த ஒருசொல்லாகிவரினும் அரிதுணர்பொருளுடைய சொல் திரிசொல்லேயாம். (சரு)

[திசைச்சொல்.]

‡ உள௩. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழொழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப.

(இ - ள்.) செந்தமிழ் நிலம் சேர் - செந்தமிழ்நாடாகிய பாண்டிய நாட்டைச் சேர்ந்த, பன்னிரு நிலத்தினும்-பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளிலும், ஒன்பதிற்று இரண்டினில் - பதினெட்டுத் தேசங்களுள், தமிழ் ஒழி நிலத்தினும் - தமிழ்நாடு ஒழிந்த பதினேழு நாடுகளிலும், தம் குறிப்பின - வசிப்பவர்கள் தமது பேசும்பாஷைகளிலுள்ள பதங்கள் அப்பொருளோடு செந்தமிழில் வந்து வழங்குவன,—திசைச்சொல் - திசைச்சொற்களாம்:— என்ப - என்று சொல்வர், (புலவர்); (எ - று.)

திசைச்சொல் - திசைகளில் வழங்குகின்ற தேச பாஷைகளிலிருந்து செந்தமிழில் வந்து வழங்கும் சொற்கள்.

* கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டாவன:—தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, கற்காநாடு, வேணாடு, பூமிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, அருவாவடதலைநாடு, சீதநாடு, மலையமாநாடு, சோழநாடு, என்பன. தென்பாண்டிநாடு - செந்தமிழ்ப்பாண்டிநாட்டுக்குத் தென்திசையி லுள்ளது.

(உ-ம்.) க. பசுவைப் பெற்றம் என்பதும், சோற்றைச் சொன்றி என்பதும் } தென் பாண்டிநாட்டுச் சொல்.

உ. தாயைத் தள்ளை என்பது—குட்டநாட்டுச்சொல்.

௩. தந்தையை அச்சன் என்பது—குடநாட்டுச்சொல்.

௪. வஞ்சகரைக் கையர் என்பது—கற்காநாட்டுச்சொல்.

௫. தோட்டத்தைக் கிழார் என்பது—வேணாட்டுச்சொல்.

௬. சிறுகுளத்தைப் பாழி என்பது—பூமிநாட்டுச்சொல்.

---

* "தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண் பூமி
பன்றி யருவா அதன்வடக்கு—நன்றாய்
சீதம் மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்"

அன்றியருவாவதன்வடக்கு' என்று பாடமோதி, அன்றிநாடெண்பாரும் உளர்.

எ. வயலைச் செய் என்பது—பன்றிநாட்டுச்சொல்.

அ. சிறுகுளத்தைக் கேணி என்பது—அருவாநாட்டுச்சொல்.

கூ. புளியை எகின் என்பது—அருவாவடதலைநாட்டுச்சொல்.

க0. தோழனை எலுவன் என்பதும், தோழியை இகுளை என்பதும் }—சீதநாட்டுச்சொல்.

கக. நல்லநீரை வெள்ளம் என்பது—மலையமானாட்டுச்சொல்.

கஉ. * தாயை ஆய் என்பது—புனனாட்டுச்சொல்.

§ தமிழ்நாடு ஒழிந்த நாடு பதினேழாவன:—சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கௌடம், குசலம்.

மாமரத்தைக் கொக்கு என்பது—துளுவநாட்டுச்சொல்.

அகப்படுதலைச் சிக்குதல் என்பது—கன்னடநாட்டுச்சொல்.

கருத்தாக இருத்தலை எச்சரிக்கை என்பதும், சொல்லுதலைச் செப்புதல் என்பதும் }—தெலுங்க நாட்டுச் சொல்.

மற்றவையும் இப்படியே ஆங்காங்கு வருதல் கண்டுகொள்க.

ஐயோ என்பதை 'அந்தோ என்பது - சிங்களநாட்டுச்சொல்' என்று முன்னைய உரையாசிரியர்கள் எழுதியிருந்தாலும், அது 'ஹந்த' என்னும் வடசொல்லின் சிதைவு என்று தெரிதலால், இங்குக் கொள்ளப்படவில்லை.

என்ப - பலர்பால் முற்று; அன்சாரியைபெறாத பலவின்பால் முற்றாகக்கொண்டு, திசைச்சொல்லென்று சொல்லப்படுவன என உரைப்பினும் அமையும். (கரு)

[வடசொல்.]

‡ உஎச. பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானு மியைவன வடசொல்.

(இ - ள்.) பொது எழுத்தானும் - (ஸம்ஸ்கிருதபாஷைக்கும் தமிழ்ப்பாஷைக்கும்)பொதுவாகிய எழுத்துக்களாலும், சிறப்பு எழுத்தானும் - ஸம்ஸ்கிருதத்துக்கே உரிய சிறப்பெழுத்துக்களாலும், ஈர் எழுத்தானும் - பொதுவும் சிறப்பும் ஆகிய இவ்விருவகையெழுத்துக்களாலும், இயைவன - அமைந்துள்ளனவான ஸம்ஸ்கிருதபாஷைப்பதங்கள் தமிழில் திரிந்தும் திரியாமலும் வந்து வழங்குவன,—வடசொல் - வடசொற்களாம்; (எ - று.)

வடசொல் - வடதிசைமொழியிலிருந்து செந்தமிழில் வந்து வழங்கும் சொல். ஸம்ஸ்கிருதம் ஆதியில் வடக்கே இமயமலைப் பிராந்தத்தில் கங்கா

---

* இது, பழையஉரையிற் கண்டது.

§ "சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக் குடகங்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கங்
கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலந்
தங்கும் புகழ்த்தமிழ்சூழ் பதினேழ்புவி தா மிவையே,"

தீரத்தில் காசி முதலிய இடங்களில் மிக்கு வழங்கிவந்ததனால், அதற்கு வடமொழி' என்று பெயர்.

(உ - ம்.) க. அமலம், காரணம், மேரு—பொதுவெழுத்தால் இயைந்தன.

உ. சுகி, போகி, சுத்தி—சிறப்பெழுத்தால் இயைந்தன.

ங. அரி, அரன் சயம்—ஈரெழுத்தாலும் இயைந்தன.

இவற்றில், முந்தினது - தற்சமம்; மற்றையிரண்டும் - தற்பவம்.

இனி, இச்சூத்திரத்தில் 'ஆனும்' என்பதை ஆயினும் என்பதன் திரிபாகக்கொண்டு உரைப்பினும் அமையும். (கஎ)

பெயர்ச்சொல்.

சொல்லதிகாரத்தில் முதலதான இவ்வியலில் இதுவரை சொல்லிலக்கணத்தைப்பொதுப்படக்கூறி, இனிப்பெயர்ச்சொல்லிலக்கணம் கூறுகின்றார்.

[பெயர்ச்சொல்லின் பொதுவிலக்கணம்.]

‡ உஉரு. இடுகுறி காரண மரபோ டாக்கந்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்று
ஏற்பவும் பொதுவு மாவன பெயரே.

(இ - ள்.) இடுகுறி காரணம் - இடுகுறியும் காரணக்குறியும் (என்னும் இரண்டும்), மரபோடு ஆக்கம்-மரபும் ஆக்கப்பாடும் (என்னும் இரண்டையும்), தொடர்ந்து-பற்றி;—தொழில் அல காலம் தோற்றா - வினையாலணையும்பெயர்களல்லாதவை காலத்தைக்காட்டாமல்,—வேற்றுமைக்கு இடன் ஆய்-எட்டுவேற்றுமைகளும் சார்தற்கு இடமாகி, திணை - இருதிணையிலும், பால் - ஐம்பாலிலும், இடத்து - மூவிடத்திலும், ஒன்று-ஒன்றை, ஏற்பவும்-ஏற்றுவருபவையும், பொதுவும்-(அவ்விருதிணை யைம்பால் மூவிடங்களுள்) பலவற்றிற்கு உரியவையும், ஆவன - ஆகிநிற்பன,—பெயர் - பெயர்ச்சொற்களாம்; (எ - று.)

எனவே - இடுகுறிமரபுப்பெயர், இடுகுறியாக்கப்பெயர், காரணமரபுப்பெயர், காரணவாக்கப்பெயர் எனப் பெயர் நான்குவகைப்படுமென்றபடி. இடுகுறி காரணங்களுக்கு இலக்கணம், * கீழ்க் கூறப்பட்டது. மரபாவது-ஒருவரால் ஆக்கப்படாமல் தொன்றுதொட்டு வழங்கிவருவது ஆக்கமாவது-புதிதாகப் புலவர்களால் உண்டாக்கப்பட்டு வருவது

(உ - ம்.) மரம், விள, பனை—இடுகுறிமரபு.

அவன், அவள்,—பறவை காரணமரபு.

"மானவேன் முட்டைக்கு மாறாயதெவ்வர்போங், கானவேன் முட்டைக்குங்காடு"—இப் பொய்யாமொழிப்புலவர் பாட்டில் முருகக்கடவுளுக்கு 'முட்டை' என்று பெயர்சொன்னது, இடுகுறியாக்கம்.

* சுஉ - ஆஞ் சூத்திரம்.

(கீழ்ப்பதவியலில் "இடுகுறியாகி முன்னேயொன்றாய் முடிந்தியல்கின்ற பெயர்" எனக் கூறியுள்ளதனுல், காரணங் கருதாததாயும் புதிதாக ஆக்கப்படுவதாயுமுள்ள இடுகுறியாக்கப்பெயர்க்கு உதாரணம் அரிதாமென உணர்க. கடவுளர்பெயரை மனிதர்கட்கும் விலங்குகட்கும் இட்டுவழங்குதல், இடுகுறியாக்கத்தின்பாற்படும்.)

பொன்னன், பூணன், மலைமகள்மகன்—இவை - காரணக்குறியாக்கம்.

நடந்தவனை, நடப்பவனுல், நடக்கின்றவற்றோடு—வினையாலணையும் பெயர்கள் காலங்காட்டின.

'தொழிலல காலந்தோற்ரு'எனப்பொதுவாகச் சொன்னதனுல்-(வினையாலணையும்பெயர்கள் காலங்காட்டுவது மாத்திரமேயல்லாமல்)சிலதொழிற் பெயர்களும் காலங்காட்டு மென்பது பெறப்பட்டது.

நடந்தமை, நடக்கின்றமை,செய்வது—தொழிற்பெயர் காலங்காட்டின.

மரம் முதலிய இடுகுறிப்பெயரும், அவன் முதலிய காரணப்பெயரும் - தொன்றுதொட்டு வந்தன. முட்டை முதலிய இடுகுறிப்பெயரும், பொன்னன் முதலிய காரணப்பெயரும்-நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டு வருவன.

[உயர்திணை ஆண்பாற்பெயர்.]

உஎசு. அவற்றுள்,
கிளையெண் குழூஉமுதற் பலபொருள் திணைதேம்
ஊர்வா னகம்புற முதல நிலன்யாண்டு
இருது மதிநா ளாதிக் காலம்
தோள் குழல் மார்புகண் காதுமுத லுறுப்பு
அளவறி வொப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்
ஓத லீத லாதிப் பல்வினை
இவையடை சுட்டு வினப்பிற மற்றேடு
உற்றனவ் வீறு நம்பி யாடூஉ
விடலை கோவேள் குரிசில் தோன்றல்
இன்னன ஆண்பெய ராகு மென்ப.

(இ - ள்.) அவற்றுள் - மேலே 'பெயர்' என்றவற்றுள்,—கிளை - சுற்றமும், எண்-எண்ணும், குழூஉ - கூட்டமும், முதல் - முதலிய, பலபொருள்-பலபொருட்பெயர்களையும்; திணை-ஐவகைநிலங்களும், தேம்-தேசமும், ஊர்-ஊரும், வான் - ஆகாயமும், அகம் - உள்ளிடமும், புறம் - வெளியிடமும், முதல - முதலிய, நிலன்-இடப்பெயர்களையும்; யாண்டு-வருடமும், இருது-பருவமும், மதி - மாதமும், நாள் - நக்ஷத்திரமும், ஆதி - முதலிய, காலம் - காலப்பெயர்களையும்; தோள்-தோளும், குழல் - மயிரும், மார்பு - மார்பும், கண் - கண்ணும், காது - காதும், முதல் - முதலிய, உறுப்பு - சினைப்பெயர்

களையும்; அளவு - அளவும், அறிவு - ஞானமும், ஒப்பு - உவமிக்கப்படுங் குணமும், வடிவு - உருவமும், நிறம் - வர்ணமும், கதி - (மக்கள் தேவர் நரகர் விலங்கு என்னும் நால்வகைக்) கதிகளும், சாதி - சாதியும், குடி - குலமும், சிறப்பு - மேன்மையும், ஆதி - முதலிய, பல் குணம்-பல குணப் பெயர்களையும்; ஓதல் - படித்தலும், ஈதல் - கொடுத்தலும், ஆதி - முதலிய, பல் வினை - பல தொழிற்பெயர்களையும்; இவை - இவற்றை, அடை - அடுத்துவருகின்ற, சுட்டு - மூன்று சுட்டெழுத்துக்களும், வினா - மூன்று முதல் வினாவெழுத்துக்களும், பிற - பிற என்பதும், மற்றோடு-மற்று என்பதுமாகிய இடைச்சொற்களையும், உற்ற - அடியாகக்கொண்டு பிறந்த, ன ஈறு - னகரமெய்யீற்றுப்பெயர்களும்: 'நம்பி ஆடூஉ விடலை கோ வேள் குரிசில் தோன்றல்'-இவ்வேழு பெயர்களும்: இன்னன - இவைபோல்வன பிறவும்,—ஆண்பெயர்ஆகும் - உயர்திணை ஆண்பாற் பெயர்களாம்:—என்ப - என்று சொல்வர்,(புலவர்); (எ - று)

'னவ்வீறு'எனவே-அன், ஆன், மன், மான், ன் இவ்வைந்தும் அடங்கும்.

சுட்டு முதலிய நான்கு இடைச்சொற்களும் தமக்கென்று ஒருபொருளில்லாமல் பொருள் முதலிய ஆறில் ஒன்றைக் குறிப்பால் உணர்த்துமென்பார், 'இவையடை சுட்டு வினாப் பிற மற்று' என்றார்.

பொருளால் வரும் பெயர்கள்.

(உ - ம்.) தமன், நமன், நுமன், எமன்—கிளையால்வருபெயர்.
ஒருவன்—எண்ணால்வருபெயர்.
சங்கத்தான்—குழூஉவால்வருபெயர்.
பொன்னன், முடியன்—இவை 'முதல்' என்றதனால்வருபெயர்.

இடத்தால் வரும் பெயர்கள்.

வெற்பன், பொருப்பன், சிலம்பன்—குறிஞ்சிநிலத்தால்வருபெயர்.
மறவன், எயினன்—பாலைநிலத்தால்வருபெயர்.
இடையன், ஆயன்—முல்லைநிலத்தால்வருபெயர்.
ஊரன், மகிழ்நன், நாடன், மள்ளன்—மருதநிலத்தால்வருபெயர்.
சேர்ப்பன், துறைவன், கரையான்—நெய்தல்நிலத்தால்வருபெயர்.
சோழியன், தொண்டைநாட்டான், சீனத்தான்—தேசத்தால்வருபெயர்.
சிற்றூரான், மதுரையான், திருவல்லிக்கேணியான்—ஊரால்வருபெயர்.
வானத்தான், விண்ணவன்—வானால்வருபெயர்.
அகத்தான், புறத்தான்—அகம் புறம் என்றவற்றால் வரு பெயர்.
மண்ணகத்தான், பாதலத்தான்—'முதல' என்றதனால் வரு பெயர்.

காலத்தால் வரும் பெயர்கள்.

மூவாண்டினன், பிரபவன், பிலவவருடத்தான்—வருடத்தால்வருபெயர்.
இளவேனிலான், காரான்—பருவத்தால்வருபெயர்.
கார்த்திகையான், தையான்—மாதத்தால்வருபெயர்,

உத்தரட்டாதியான், திருவோணத்தான்—நக்ஷத்திரத்தால்வருபெயர்.
நெருநலான், முற்காலத்தான், இக்காலத்தான் - 'ஆதி' என்றதனால் வரு பெயர்.

சினையால் வரும் பெயர்கள்.

திணிதோளான், சுரிகுழலன், வரைமார்பன், செங்கண்ணன், நெட்டைக் காதன்—தோள் முதலிய ஐந்து உறுப்பாலும் வரு பெயர்.
குறுந்தாளன், நெடுங்கையான், பெருவயிற்றன், பல்லன், உதடன்-'முதல்' என்றதனால் வரு பெயர்.

குணத்தால் வரும் பெயர்கள்.

பெரியன், சிறியன்—அளவால்வருபெயர்.
அறிஞன், புலவன்—அறிவால்வருபெயர்.
பொன்னொப்பான், புலியனையான்—ஒப்பால்வருபெயர்.
கூனன், குறளன்—வடிவால்வருபெயர்.
கரியன், செய்யன்—நிறத்தால்வருபெயர்.
மானுடன், தேவன், நரகன், தெளிசிங்கன்—கதியால்வருபெயர்.
அந்தணன், அரசன், வணிகன், வேளாளன்—சாதியால்வருபெயர்.
கங்கன், காடவன், சேக்கிழான்—குடியால்வருபெயர்.
ஆசிரியன், படைத்தலைவன்—சிறப்பால்வருபெயர்.
நல்லன், தீயன்—'ஆதி' என்றதனால் வரு பெயர்.

தொழிலால் வரும் பெயர்கள்.

ஓதுவான், ஈவான்—'ஓதல்', 'ஈதல்' என்றவற்றால் வரு பெயர்.
கொல்லன், தட்டான், கணக்கன், திருடன்—'ஆதி' என்றதனால் வரு பெயர்.

இடைச்சொல்லால் வரும் பெயர்கள்.

அவன், இவன், உவன்—சுட்டால்வருபெயர்.
எவன், ஏவன், யாவன்—வினாவால்வருபெயர்.
பிறன், மற்றையான்—'பிற,' 'மற்று' என்றவற்றால் வரு பெயர்.
'நம்பி' முதலிய எழுபெயர்களும்—சூத்திரத்திற் காட்டப்பட்டன.

'இன்னன' என்றதனால் - வில்லி, மீளி, வழுதி, கிள்ளி, சென்னி, செட்டி, சக்கிரி, ஏந்தல், செம்மல், சேய், தம்பி, எனாதி, காவிதி, குடுமி, வள்ளல், அண்ணல் இவை முதலாக உயர்திணை யாண்பாற்பொருள் குறித்து வருவனவெல்லாம் கொள்க. (கக)

[உயர்திணைப் பெண்பாற்பெயர்.]

உஎஎ. கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்
ளவ்வொற் றிகரக் கேற்ற வீற்றவும்
தோழி செவிலி மகடூஉ நங்கை
தையலோ டின்னன பெண்பாற் பெயரே.

(இ - ள்.) கிளை முதலாக - சுற்றம் முதலாக, கிளந்த - (முன்சூத்திரத்திற்) சொல்லப்பட்ட, பொருள்களுள் - (அறுவகைப்) பொருள்களுள்ளும் இடைச்சொற்களுள்ளும் ஒன்றினடியாகப் பிறந்து, ள ஒற்று இகரக்கு - ளகர மெய்யும் இகரவுயிரும் பொருந்துதற்கு, ஏற்ற - தகுந்த, ஈற்றவும் - அவ்விரண்டு ஈற்றுப் பெயர்களும்; 'தோழி செவிலி மகடூஉ நங்கை தையலோடு' - இவ்வைந்துபெயர்களும், இன்னன-இவைபோல்வன பிறவும்,— பெண்பால் பெயர் - உயர்திணைப் பெண்பாற் பெயர்களாம்; (எ - று.)

'ளவ்வொற்று' எனவே - அள், ஆள், ள் இம்மூன்றும் அடங்குதலறிக.

'ளவ்வொற்று இகரக்கு ஏற்ற ஈற்றவும்' என்றதனால் - சிலபெயர்கள் ளகரத்துக்கும், சிலபெயர்கள் இகரத்துக்கும், சிலபெயர்கள் இரண்டுக்கும் ஏற்றவையாக வரும்.

(உ - ம்.) பொருளால் வருபெயர்:—தமள், நமள், நுமள், எமள்—கிளை; ஒருத்தி---எண்; அவையத்தாள், அவையத்தி---குழூஉ; பொன்னிளுள், பொன்னி---முதல்.

இடத்தால் வரு பெயர்:---குறத்தி, எயிற்றி, ஆய்ச்சி, உழத்தி, பரத்தி—ஐவகைநிலம்; சோழிச்சி, மலைபாட்டி---தேயம்; கருவூராள்---ஊர்; வானத்தாள். வானத்தி---வான்; அகத்தாள், அகத்தி: புறத்தாள், புறத்தி-அகம், புறம்; மண்ணகத்தாள், மண்ணகத்தி---முதல.

காலத்தால் வரு பெயர்---ஐயாண்டினள்—வருடம்; இளவேனிலாள்-பருவம்; ஐப்பசியாள்---மாதம், பூரத்தாள்---நக்ஷத்திரம்; காலையாள்---ஆதி.

சினையால் வருபெயர்:---திணிதோளாள், திணிதோளி; சுரிகுழலாள், சுரிகுழலி; நெடுமார்பாள், நெடுமார்பி; தடங்கண்ணாள், தடங்கண்ணி; குழைக்காதாள், குழைக்காதி---தோள்முதலியஉறுப்பு; குறுந்தாளி, மூக்கி---முதல்.

குணத்தால் வரு பெயர்:---பெரியள்---அளவு; புலமையாள்---அறிவு; பொன்னொப்பாள்---ஒப்பு; கூனள், கூனி---வடிவு; கரியள்---நிறம்; மானுடத்தி---கதி; பார்ப்பினி---சாதி; குறுக்கையள்---குடி; மனைத்தலைவி---சிறப்பு; நல்லள்---ஆதி.

தொழிலால் வரு பெயர்:---ஓதுவாள், ஈவாள்---ஓதல், ஈதல்; கொல்லத்தி, தட்டாத்தி---ஆதி.

இடைச்சொல்லால் வரு பெயர்---அவள், இவள், உவள்---சுட்டு, எவள், ஏவள், யாவள்-- வினா; பிறள், மற்றையாள்---பிற, மற்று.

'தோழி' முதலிய ஐந்துபெயர்களும்---சூத்திரத்திற் காட்டப்பட்டன.

'இன்னன' என்றதனால் * பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை அரிவை, தெரிவை, பேரிளம்பெண், இருளை, மாது, பெண்டு இவைமுதலாக உயர்திணைப் பெண்பாற்பொருள் குறித்துவருவனவெல்லாம் கொள்க. ()

---

* 'பருவப்பெயரான 'பேதை' முதல் ஏழும் காலப்பெயருள் அடங்குமெனக் கொள்க' என்பது, பழைய உரை.

[உயர்திணைப் பலர்பாற்பெயர்.]

உ௭அ. கிளந்த கிளைமுத லுற்றரவ் வீற்றவும்
கள்ளெ னீற்றி னேற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும்.

(இ - ள்.) கிளந்த - முன்னே சொல்லப்பட்ட, கிளை முதல் - சுற்றம் முதலாகிய அறுவகைப்பொருளையும் இடைச்சொற்களையும், உற்ற - அடியாகக்கொண்டு பிறந்த, ர ஈற்றவும் - ரகரமெய்யீற்றுப் பெயர்களும், கள் என் ஈற்றின் - கள் என்னும் விகுதியை ஈறாகவுடைய பெயர்களுள், ஏற்பவும்-(இவ்விடத்துக்குப்) பொருந்திவருவனவும், பிறவும்-(இவைபோல்வன) பிறவும்,---பல்லோர் பெயரின் பகுதி ஆகும் - உயர்திணைப் பலர்பாற் பெயர்களாகும்; (எ - று.)

'ரவ்வீற்ற' எனவே - அர், ஆர், மார், ர் இந்நான்கும் அடங்கும்.

'கள்' விகுதி அஃறிணைப்பலவின்பாலுக்கும் வருதலால், 'ஏற்பவும்' என்றார்.

பொருளால் வருபெயர்.---தமர், நமர், நுமர், எமர்---கிளை; இருவர், மூவர்---எண்: அவையத்தார்---குழூஉ: முடியர், பொருளர்---முதல்.

இடத்தால் வருபெயர்:---குறவர், எயினர், ஆயர், மகிழ்நர், கரையார்-ஐவகைநிலம்; நிடதத்தார்---தேயம், பட்டணத்தார்---ஊர்; வானத்தார் - வான், அகத்தார், புறத்தார்---அகம், புறம்; மண்ணோர்---முதல்.

காலத்தால் வருபெயர்:---ஐயாண்டினர்---வருடம்; முதுவேனிலார்-பருவம், ஐப்பசியார்---மாதம்; திருவாதிரையார்-நக்ஷத்திரம்;காலையார்--ஆதி.

சினையால் வருபெயர்.---திணிதோளார், சுரிகுழலார், நெடுமார்பர், தடங்கண்ணர், குழைக்காதர்---தோள் முதலிய உறுப்பு; நெடுங்கையர்---முதல்.

குணத்தால் வருபெயர்:—பெரியர்—அளவு; புலவர்—அறிவு; புலியொப்பார்—ஒப்பு; முடவர்—வடிவு; கரியர்— நிறம்; மானுடவர்—கதி; அந்தணர்---சாதி; குறுக்கையர்---குடி ;ஆசிரியர்—சிறப்பு;நல்லர்,தீயர்--ஆதி.

தொழிலால் வருபெயர்.- -ஓதுவார், ஈவார்---ஓதல், ஈதல்; கொல்லர், தட்டார்---ஆதி.

இடைச்சொல்லால் வருபெயர்:---அவர், இவர், உவர்—சுட்டு; எவர், ஏவர், யாவர்---வினா; பிறர், மற்றையார்---பிற, மற்று.

'கள்' விகுதி - கோக்கள் மனுக்கள் எனத் தனிவிகுதியாகவும், தமர்கள்நமர்கள் என * விகுதிமேல்விகுதியாகவும் வருமென்று அறிக.

'பிற' என்றதனால் - மாந்தர், மக்கள், மாக்கள் இவை முதலாக உயர்திணைப் பலர்பாற் பொருள் குறித்து வருவன வெல்லாம் கொள்க. (உக)

---

* ஒருசார் ரகாரஒற்றும் 'கள்' என் விகுதியும் கூடிவந்தாலும், முன்னின்ற ரகாரவொற்றே பால்விளக்கும்; ஏனையது வாய்பாடுநிரப்பல்மாத்திரையேயாவது என்க' என்பது, பழைய உரை.

[அஃறிணை ஒன்றன்பாற்பெயர்.]

உஎகூ. வினாச்சுட் டுடனும் வேறு மாம்பொருள்
ஆதி யுறுதுச் சுட்டணை யாய்தம்
ஒன்றனெண் ணின்னன வொன்றன் பெயரே.

(இ - ள்.) வினா சுட்டுடனும் - மூன்று முதல்வினாவும் மூன்றுசுட்டு மாகிய இடைச்சொற்களையும், வேறும் ஆம் பொருள் ஆதி - இவற்றின் வேறாகிய பொருள்முதலிய அறுவகைப்பெயர்களையும், உறு - அடியாகக் கொண்டுபிறந்த, து - துவ்விகுதி யீற்றுப் பெயர்களும், சுட்டு அணை ஆய்தம் - சுட்டெழுத்தோடு ஆய்தத்தைபும் பொருந்திய துவ்விகுதியீற்றுப் பெயர்களும், ஒன்றன் எண் - ஒன்றாகிய எண்ணுப்பெயரும், இன்னன - இவைபோல்வனபிறவும்,—ஒன்றன் பெயர் - அஃறிணை ஒன்றன்பாற் பெயர்களாம்; (எ - று.)

'சுட்டணை யாய்தம்' எனவேறு எடுத்துக்கூறினமையால், 'வினாச்சுட்டு டனும்' என்றது- ஆய்தமணையாத சுட்டுப்பெயர்களும், வினாப்பெயர்களுமாம்.

(உ - ம்) எது, ஏது, யாது—வினா; அது, இது, உது—சுட்டு.

குழையது—பொருள். நிலத்தது—இடம். திருவாதிரையது—காலம். கொம்பினது—சினை. குறியது—குணம். ஆடலது—தொழில்.

அஃது, இஃது, உஃது—ஆய்தம் அணைந்த சுட்டு. ஒன்று—எண்.

'இன்னன' என்றதனால் - பிறிது, மற்றையது என்பவை முதலாக அஃறிணை ஒன்றன்பாற்பொருள் குறித்து வருவன வெல்லாம் கொள்க.

'ஒன்றனெண்' என்பதில், அன் - அல்வழிச்சாரியை. 'ஒன்றெனெண்' எனப் பாடங்கொள்ளுதல் பொருந்தும்; 'ஒன்றென்னும் எண்ணும்' என்பது, பழைய உரை. (உஉ)

[அஃறிணைப் பலவின்பாற்பெயர்.]

உஅ0. முன்ன ரவ்வொடு வருவை யவ்வும்
சுட்டிறு வவ்வுங் கள்ளிறு மொழியும்
ஒன்ற லெண்ணு முள்ள வில்ல
பல்ல சில்ல வுளவில பலசில
இன்னவும் பலவின் பெயரா கும்மே.

(இ-ள்.) முன்னர் - முன்னேசொல்லப்பட்ட, அவ்வொடு-அவற்றோடு [வினா சுட்டு பொருளாதி ஆறு இவைகளோடு], வரு - (ஏற்றபடி) வருகிற வை - 'வை' விகுதியீற்றுப்பெயர்களும், அவ்வும் - அகரவீற்றுப்பெயர்களும், சுட்டு இறு வவ்வும் - வகரமெய்யீற்றுச் சுட்டுப்பெயர்களும், கள் இறு மொழியும் - 'கள்' என்னும் விகுதி யீற்றுப் பெயர்களும், ஒன்று அல் எண்ணும் - ஒன்றல்லாத [இரண்டுமுதலாகிய] எண்ணுப்பெயர்களும், 'உள்ள இல்லபல்ல சில்ல உள இல பல சில' - இவ்வெட்டுப்பெயர்களும், இன்னவும் - இவைபோல்வன பிறவும்,—பலவின் பெயர் ஆகும் - அஃறிணைப் பலவின்பாற் பெயர்களாம்; (எ - று.)

(உ-ம்.) எவை எவை, யாவை---வினு: அவை; இவை, உவை---சுட்டு. குழையவை, குழையன---பொருள். அகத்தவை, அகத்தன---இடம். மூலத்தவை, மூலத்தன---காலம். கோட்டவை, கோட்டன---சினை. கரியவை, கரியன---குணம். ஆடலவை ஆடலன---தொழில்.

அவ், இவ் உவ்---வவ்விறு சுட்டு. அவைகள், யானைகள், குதிரைகள்---கள் விகுதிப் பெயர்கள். (அவைகள் என்பதில், கள் - விகுதிமேல்விகுதி.)

இரண்டு, பத்து, நூறு, ஆயிரம்---ஒன்றல்லாத எண்.

'உள்ள' முதலிய எட்டுப்பெயர்களும், சூத்திரத்திற் காட்டப்பட்டன.

'இன்னவும்' என்றதனுல்-யா, பிற, மற்றைய என்பவைமுதலாக அஃறிணைப்பலவின்பாற்பொருள் குறித்து வருவனவெல்லாம் கொள்க. (உங)

[பால்பகா அஃறிணைப்பெயர்.]

‡ உ௪௯ பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.

(இ-ள்.) பால் பகா-ஒருமைப்பால் பன்மைப்பால்கள் பகுக்கப்படாத, அஃறிணை பெயர்கள்-அஃறிணைப் பெயர்ச்சொற்கள்,---பால் - (அத்திணையின்) இருபால்களுக்கும், பொதுமைய-பொதுவாகியபெயர்களாம்;(எ-று.)

ஒன்றன்பாலைக் காட்டுகிற 'து' என்னும் விகுதியையும்,பலவின்பாலைக் காட்டுகிற, 'வை அ கள்' என்னும் விகுதிகளுள் ஒன்றையும் பெருத அஃறிணைப்பெயர்கள் - ஒன்றன்பால் பலவின்பால் என்னும் இரண்டுபால்களுக்கும் பொதுவாமென்றபடி; இவை, முன்னும் பின்னும் வருகிற சொற்களாற் பொதுமைநீங்கி இன்னபாலென்று துணியப்படும்.

(உ-ம்.) பறவை வந்தது, பறவை வந்தன; அலரி மலர்ந்தது, அலரி மலர்ந்தன; வளர்ந்தது மரம், வளர்ந்தன மரம்; சென்றது குதிரை, சென்றன குதிரை. இவை - பெரும்பாலும் பகாப்பதயாகவும், சிறுபான்மை பகுபதமாகவும் வரும். (உ௪)

[இருதிணைப் பொதுப்பெயர்.]

உ௫௰. முதற்பெயர் நான்குஞ் சினைப்பெயர் நான்கும்
சினைமுதற் பெயரொரு நான்குமுறை யிரண்டும்
தன்மை நான்கு முன்னிலை யைந்தும்
எல்லாந் தாந்தா னின்னன பொதுப்பெயர்.

(இ-ள்.) முதற்பெயர் நான்கும் - முதலைப்பற்றிவரும் நால்வகைப் பெயரும், சினைப்பெயர் நான்கும் - சினையைப்பற்றிவரும் நால்வகைப்பெயரும், சினை முதல் பெயர் ஒரு நான்கும் - சினையையும் முதலையும் ஒருங்கு பற்றி வரும் நால்வகைப்பெயரும், முறை இரண்டும் - முறையைப்பற்றி வரும் இருவகைப் பெயரும், தன்மைநான்கும் - தன்மைப்பெயர் நான்கும், முன்னிலை ஐந்தும் - முன்னிலைப்பெயர்ஐந்தும், எல்லாம் தாம் தான் - இம்மூன்றுபெயர்களும், (ஆகிய இருபத்தாறு பெயர்களும்), இன்னன - இவை போல்வன பிறவும்,---பொதுப்பெயர் - (இருதிணைக்கும்) பொதுவான பெயர்களாம்;(எ-று.)---இவை, வருஞ்சூத்திரங்களால் முறையே கூறப்படும்.

'இன்னன' என்றதனால் - சூரியன் உதித்தான், சூரியன் உதித்தது; குழவி வந்தான், குழவி வந்தாள், குழவி வந்தது என ஒருபொருளே இரு திணையிலும் வரும் பொதுப்பெயர் முதலானவையும்; ஊமை வந்தான், ஊமை வந்தாள், ஊமை வந்தது, ஊமை வந்தன என உயர்திணை அஃறிணை யிருபால்களிலும் வரும் பொதுப்பெயர் முதலானவையும்; தன்மை முன்னிலை வினையாலணையும் பெயர்களும்; பிறவும் கொள்க. (உரு)

[முதற்பெயர் முதலிய நான்கை வகுத்தல்.]

உஅரு. ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்
ஆமந் நான்மைக ளாண்பெண் முறைப்பெயர்.

(இ - ள்.) அவ் - அம் முதற்பெயரும் சினைப்பெயரும் சினைமுதற்பெயரும்,---ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின் - ஆண்மை முதலாகிய இந்நான்குபாலும் காரணமாக, நான்மைகள் ஆம் - நந்நான்காம்; முறைப் பெயர் - முறைப்பெயர்கள், ஆண் பெண் - ஆண்மை பெண்மை என்கிற இருபாலும் காரணமாக இரண்டாம்; (எ - று.)---அவ் - அவை.

முதற்பெயர் - சாத்தன் கொற்றன் என வழங்குதற்பயத்தனவாய்க் காரண மின்றி ஒரு பொருளைப் பற்றி வரும் இடுகுறிப்பெயர். முதற்பெயர், இயற்பெயர் என்பன - ஒருபொருட்சொற்கள். சினைப்பெயர் - சினை [உறுப்பு] ஆகிய காரணம் பற்றி முதற்பொருளின்மேல் வரும் பெயர். சினை முதற் பெயர் - மேற்கூறிய சினைப்பெயரும் முதற்பெயரும் சேர்ந்து ஒரு பெயராக வருவது. முறைப்பெயர் - பிறப்பினால் ஒருவர்க்கு ஒருவர் உண்டாகும் சம்பந்தத்தைப்பற்றி வரும் பெயர்.

(உதாரணம்.)

ஆண்மை.	பெண்மை.	ஒருமை.	பன்மை.	
சாத்தன்	சாத்தி	கோதை	கோதைகள்	-முதற்பெயர் நான்கு.
முடவன்	முடத்தி	செவியிலி	செவியிலிகள்	-சினைப்பெயர்நான்கு.
முடக் கொற்றவன்	முடக் கொற்றி	கொடும்புற மருதி	கொடும்புற மருதிகள்	சினைமுதற் பெயர் நான்கு.
தந்தை	தாய்	...	...	... முறைப்பெயர் இரண்டு. (உசு)

[திணைப்பொதுப்பெயர்கள் பாற்பொதுவாதல்]

உஅச. அவற்றுள்,
ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும்.

(இ - ள்.) அவற்றுள் - முதற்பெயர் முதலாகிய (பதினன்கு) பொதுப் பெயர்களுள், ஒன்றே - ஒவ்வொன்றும்,---இரு திணை - இரண்டு திணைகளிலும், தன் பால் - தன்தன் பாலை, ஏற்கும் - ஏற்றுவரும்; (எ - று.)

எனவே, ஆண்மைப்பொதுப்பெயர் - உயர்திணை யாண்பாலையும், அஃறிணையாண்பாலையும்; பெண்மைப் பொதுப்பெயர் - உயர்திணைப் பெண் பாலையும், அஃறிணைப் பெண்பாலையும்; ஒருமைப் பொதுப்பெயர் - உயர் திணை யொருமையாகிய ஆண்பால் பெண்பால்களையும், அஃறிணை யொன்

றன்பாலையும், பன்மைப்பொதுப்பெயர் - உயர்திணைப் பலர்பாலையும், அஃறிணைப்பலவின்பாலையும் எற்கு மென்றதாயிற்று.

(உதாரணம்.)

உயர்திணை.	அஃறிணை.
சாத்தன் இவன்	சாத்தன் இவ்வெருது---ஆண்மைப் பொதுப்பெயர்.
சாத்தி இவள்	சாத்தி இப்பசு ---பெண்மைப் பொதுப்பெயர்.
கோதை இவன் / கோதை இவள்	கோதை இது ---ஒருமைப் பொதுப்பெயர்.
கோதைகள் இவர்	கோதைகள் இவை ---பன்மைப் பொதுப்பெயர்.
தந்தை இவன்	தந்தை இவ்வெருது ---ஆண்மை முறைப்பெயர்.
தாய் இவள்	தாய் இப்பசு ---பெண்மை முறைப்பெயர்.
யான் நம்பி / யான் நங்கை	யான் பறவை---தன்மையொருமைப் பொதுப்பெயர்
யாம் மக்கள்	யாம் பறவைகள்---தன்மைப்பன்மைப் பொதுப்பெயர்.
நீ நம்பி, நீ நங்கை	நீ பறவை---முன்னிலை யொருமைப் பொதுப்பெயர்.
நீர் மக்கள்	நீர் பறவைகள்---முன்னிலைப்பன்மைப் பொதுப்பெயர்.
அவரெல்லாம்	அவையெல்லாம்---எல்லாம் என்னும் பெயர்.
அவர்தாம்	அவைதாம்---தாம் என்னும் பெயர்.
அவன்தான் / அவள்தான்	அதுதான்---தான் என்னும் பெயர்.

மற்றவைகளையும் இப்படியே இருதிணையிலும் கூட்டுக. (உஎ)

[தன்மை முன்னிலை படர்க்கைப் பெயர்கள்.]

‡ உ௫. தன்மை யான் நான் யாம் நாம் முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ
அல்லன படர்க்கை எல்லா மெனல் பொது.

(இ - ள்.) தன்மை - தன்மைப்பெயர் நான்காவன,---யான் நான் யாம் நாம் - என இவையாம்; முன்னிலை - முன்னிலைப்பெயர் ஐந்தாவன;--எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ - என இவையாம்; அல்லன - இவ்வொன்பதுமல்லாத பெயர்களெல்லாம், படர்க்கை - படர்க்கையிடத்திற்கு உரியவைகளாம்; எல்லாம் எனல் - (அவற்றுள்) எல்லாமென்னும் பெயரொன்றும், பொது - (மூன்று இடத்திற்கும்) பொதுவாம்; (எ - று.)

(உ - ம்.) யாமெல்லாம், நீரெல்லாம், அவரெல்லாம்---எல்லாமென்பது மூவிடத்திலும் வந்தது. (உஅ)

[தொழிற்பெயர் வினையாலணையும் பெயர்கட்கு இடம்]

‡ உ௬. வினையின் பெயரே படர்க்கை வினையா
லணையும் பெயரே யாண்டு மாகும்.

(இ - ள்.) வினையின் பெயர் - தொழிற்பெயர்கள், படர்க்கையே-படர்க்கையிடத்திற்கே உரியவையாம்; வினையாலணையும்பெயர் - வினையாலணையும் பெயர்கள், யாண்டும் ஆகும் - (தனித்தனி) மூன்றிடத்திற்கும் உரியவையாம்; (எ-று,)-வினைப்பெயரெனினும்,தொழிற்பெயரெனினும்ஒக்கும்.

எகாரங்கள், பிரித்துக் கூட்டப்பட்டன.

(உ - ம்.) வருகை, மறதி---தொழிற்பெயர்கள் படர்க்கை யிடத்துக்கே வந்தன; (வருகை நன்று, மறதி தீது என இவ்வாறு படர்க்கையாகிய கொண்டுமுடியுஞ் சொல்லோடு கூட்டிக் காண்க.)

உண்டேனை	[உண்டஎன்னை]	---தன்மை	வினையாலணையும்பெயர்மூவிடத்தும் வந்தன.
உண்டாய்க்கு	[உண்டஉனக்கு]	---முன்னிலை	
உண்டானது	[உண்டவனுடைய]	---படர்க்கை	

தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் வேறுபாடு:—

தொழிற்பெயர் வினையாலணையும்பெயர் இரண்டும் வினையினின்று பிறக்கும் பெயராதலால் தம்முள் ஒக்குமாயினும், தொழிற்பெயர்-தொழிலுக்குப் பெயராகவந்து படர்க்கையிடத்திற்கே உரியதாம் என்றும், வினையாலணையும் பெயர் - தொழிலையுடைய பொருளுக்குப் பெயராக வந்து மூன்றிடங்கட்கும் தனித்தனி உரியதாம் என்றும் வேறுபாடு அறிக.

யான் வந்தேன், நீ வந்தாய், அவன்வந்தான்என இடத்தால் ஒன்றுபட நின்ற எழுவாய் பயனிலை போல, யான் வருகை நீவருகை அவன்வருகை என்னு மிடங்களிலுள்ள வருகை என்னுந் தொழிற்பெயரும் எழுவாயை நோக்கி மூவிடங்கட்கும் உரியதோ எனச் சந்தேகம் உண்டாமிடத்து, அப்பொழுதும் வருகை, எனது வருகை, நினது வருகை, அவனது வருகை என்னுமிடங்களிற் போல அத்தொழிற்பெயர்கள் படர்க்கை யிடத்துக்கே உரியனவாமென்று சந்தேகம் ஒழித்தபடி. (உக)

[சில இருதிணைப்பொதுப்பெயர்கட்கு எண்வகுத்தல்.]

‡ உஎ. தான் யான் நான் நீ ஒருமை பன்மை தாம்
யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர்.

(இ - ள்.) தான் யான் நான் நீ - இந்நான்கு பெயரும், ஒருமை - ஒருமைப் பெயர்களாம்; தாம் யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர்-இவ்வெட்டுப்பெயர்களும், பன்மை - பன்மைப் பெயர்களாம்; (எ - று.)

தான்முதலிய பெயர்கள் நான்கும் - ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால் என்னும் ஒருமைப்பால் மூன்றுக்கும் பொதுவென்றும், தாம்முதலிய பெயர்கள் எட்டும் - பலர்பால் பலவின்பால் என்னும் பன்மைப்பால் இரண்டுக்கும் பொதுவென்றும் கூறியபடி.

தாம்முதலிய பன்மைப்பெயர்கள் - கள் என்னும் பன்மைவிகுதி பெற்று, தாங்கள் யாங்கள் என்பவை முதலாகவும் வரும். (உ0)

[எண்ணடியாகப்பிறந்த உயர்திணைப்பெயர்க்குப் புறனடை.]

‡ உஅ. ஒருவ னொருத்திப் பெயர்மே லெண்ணில.

(இ - ள்.) ஒருவன் ஒருத்தி பெயர் - (ஒன்று என்னும் எண்ணின் அடியாக) ஒருவன் என்னும் ஆண்பாற்பெயரும் ஒருத்தி என்னும் பெண்பாற்பெயரும் (உண்டாகுமேயல்லாமல்),---மேல் எண்-(ஒன்றுக்கு) மேற்பட்ட

[இரண்டுமுதலிய] எண்களின் அடியாக, இல - (ஆண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும்) உண்டாகாவாம்; (எ - று.)

ஒன்று என்பது ஒருமையெண் ணாதலால் அதனடியாக ஒருமையாகிய ஆண்பால் பெண்பாற்பெயர்களே உண்டாகு மென்றும், பன்மையாகிய பலர்பாற்பெயர் உண்டாகா தென்றும், இரண்டு முதலியவை பன்மையெண்களாதலால் அவற்றினடியாக ஒருமையாகிய ஆண்பால் பெண்பாற்பெயர்கள் உண்டாகா என்றும், பன்மையாகிய பலர்பாற்பெயரே உண்டாகுமென்றும் கூறியபடி. (ருக)

[இதுவும் அது.]

‡ உஅகூ. ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

(இ - ள்.) ஒருவர் என்பது - ஒருவர் என்று வழங்கும் சொல்,---உயர் இரு பாற்று ஆய்-உயர்திணை ஆண் பெண் இவ்விருபாலுக்கும் பொதுப் பெயராய்,---(ஒருபொருளையே உணர்த்துமாயினும்), பன்மை வினை - பலர்பால் வினையை, கொளும் - கொண்டு முடிகின்ற, பாங்கிற்று-தன்மையையுடையது,---என்ப—என்று சொல்வர், (புலவர்); (எ - று.)

ஒருவர் என்பது - விகுதிநோக்கிப் பலர்பால் வினையைக் கொண்டு முடிந்து சொல்லாற் பன்மையேயாயினும், பகுதிநோக்கிப் பொருளால் ஒருமையேயா மென்க.

இனி, 'உய ரிரு பாற்றாய்' என்பதற்கு - (உயர்திணை முப்பால்களுள் பலர்பாலை விளக்காமல்) மற்றை ஆண்பால்பெண்பால்களுள் உயர்வைப் பற்றி வருவதாய் என்றும் பொருள் கொள்ளலாம்.

(உ - ம்.) ஆடவருள் ஒருவர் அறத்தின்வழி நிற்பார்---ஆண்பால்.
பெண்களுள் ஒருவர் கணவன்வழி நிற்பார்---பெண்பால். (ருஉ)

[ஆகுபெயர்.]

‡ உகூ0. பொருள்முத லாறோடு அளவை சொல் தானி
கருவி காரியம் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன ஆகுபெயரே.

(இ - ள்.) பொருள் முதல் ஆறோடு - பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்ற ஆறும், அளவை - (எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என்னும்) நால்வகை அளவும், சொல்-சொல்லும், தானி ஸ்தானத்தையுடையதும், கருவி - காரணமும், காரியம் - காரியமும், கருத்தன் - கருத்தாவும், ஆதியுள் - இவைமுதலான பொருள்களுள், ஒன்றன் பெயரான் - ஒருபொருளின் இயற்கைப்பெயரால், அதற்கு இயை பிறிதை - அப்பொருட்குச் சம்பந்தப்பட்ட வேறொருபொருளை, தொல் முறை - பழமையாகவரும் முறைப்படியே, உரைப்பன - சொல்லிவருபவை,—ஆகுபெயர் - ஆகுபெயர்களாம்; (எ - று.)

'ஆதி' என்றதனால், உவமம் முதலியன கொள்க.

மொழிகள் தொடருமிடத்து, ஒருமொழியின் இயற்பொருள் அதனை முடிக்கவரும் மொழியின் பொருளோடு பொருத்தமில்லாமற் போகுமிடத்து அம்மொழியில் ஆக்கப்பொருள் கொள்ளப்படும். இவ்வாறு ஆக்கப் பொருள் கொள்ளப்படும் மொழிகளே ஆகுபெயர்களாம் ஒன்றன்பெயர் மற்றொன்றுக்கு ஆகுகிற பெயர், ஆகுபெயர். * ஆகுபெயரை வடநூலார் 'லக்ஷணு' என்பர்.

பொருள் முதலிய ஆறினுள் அடங்கிநின்றவற்றையே பிரித்து அளவை முதலாக எடுத்துச்சொன்னதனால், 'பொருள்முத லாறு' என்றவை அவை யொழிந்தன வென்க.

'அதற்கியை பிறிதை' என்றதனால் - சம்பந்தமில்லாத பொருளை உரைத்தல் ஆகுபெயரி னிலக்கணமன் றாயிற்று; அச் சம்பந்தம் பலவகைப் படும். 'தொன்முறை' என்றதனால், புதிதுபுதிதாகத் தம்தமக்கு வேண்டியவாறு உரைப்பது இலக்கணமன் றென்று அறிக.

(உ - ம்.) க. பொருளாகுபெயர் —தாமரை முகம்.
உ. இடவாகுபெயர் —ஊர் வந்தது.
ங. காலவாகுபெயர் —கார் அறுத்தது.
ச. சினையாகுபெயர் —வெற்றிலை நட்டான்.
ரு. குணவாகுபெயர் —நீலம் சூடினள்.
சு. தொழிலாகுபெயர் ---வற்றல் உண்டான்.
எ. எண்ணலளவாகுபெயர்---கால் நோகும்.
அ. எடுத்தலளவாகுபெயர் ---வீசை தந்தான்.
கூ. முகத்தலளவாகுபெயர்---நாழி கொடு.
க0. நீட்டலளவாகுபெயர் ---முழம் தந்தான்.
கக. சொல்லாகுபெயர் ---உரை செய்தான்.
கஉ. தானியாகுபெயர் ---விளக்கு ஒடிந்தது
கங. கருவியாகுபெயர் ---திருவாய்மொழி ஓதினான்.
கச. காரியவாகுபெயர் ---அலங்காரம் படி.
கரு. கருத்தாவாகுபெயர் ---திருவள்ளுவர் கற்றான்.
கசு. உவமையாகுபெயர் ---பாவை வந்தாள்.

பொருளாகுபெயர் - முதலாகுபெயரென்றும், இடவாகுபெயர்-தானவாகுபெயரென்றும், குணவாகுபெயர் - பண்பாகுபெயரென்றும், கருவியாகுபெயர் - காரணவாகுபெயரென்றும் கூறப்படும். முதலாகு பெயரோடு சினையாகுபெயரும், தானவாகுபெயரோடு தானியாகுபெயரும், காரணவாகுபெயரோடு காரியவாகுபெயரும் மாறுபாடுகொண்ட தென அறிக. தொழிலாகுபெயர்க்கும் காரியவாகுபெயர்க்கும் உள்ள வேறுபாடு, அதனதன் இலக்கணத்தால் நன்குவிளங்கும்.

---

* 'ஆக்க ஆகும் பெயர் ஆகுபெயர் என்றாயிற்று ஆகவே, இயற்பெயரும் ஆகுபெயரும் என எல்லாப் பெயரும் இருகூற்றவாம் என்பதுவுமாயிற்று' என்பது, பழையஉரை.

க. பொருளாகுபெயராவது - முதற்பொருளின் பெயர் அதன் சினைப் பொருளுக்கு ஆகுவது. 'தாமரை முகம்' என்றதில், தாமரை என்னும் கொடியின் பெயர் அதன் மலர்க்கு ஆயிற்று. (ஆம்பல் வாய் முதலியனவும் இதற்கு உதாரணமாம்.) [சினை - உறுப்பு, அவயவம். முதல் - உறுப்பையுடையது, அவயவி.]

உ. இடவாகுபெயராவது - இடத்தின் பெயர் அவ்விடத்திலுள்ள பொருளுக்கு ஆகுவது. 'ஊர் வந்தது' என்றதில், ஊர் என்னும் இடத்தின் பெயர் அதிலுள்ளவர்க்கு ஆயிற்று. (நாடு களித்தது, உள் மகிழ்ந்தான், அகன் அமர்ந்து, வான் உவந்தது முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

ங. காலவாகுபெயராவது - காலத்தின் பெயர் அக்காலத்திலுள்ள பொருளுக்கு ஆகுவது. 'கார் அறுத்தது' என்றதில், கார் என்னும் மழைக் காலத்தின்பெயர் அதில் விளையும் பயிர்க்கு ஆயிற்று.(வசந்தம்அணிந்தான், கார்த்திகை[தோன்றிப்பூ]மலர்ந்ததுமுதலியனவும் இதற்குஉதாரணமாம்.)

ச. சினையாகுபெயராவது-சினைப்பொருளின் பெயர் அதன் முதற் பொருளுக்கு ஆகுவது. 'வெற்றிலை நட்டான்' என்றதில், இலை என்னும் சினையின்பெயர் அதன் கொடிக்கு ஆயிற்று. (மருக்கொழுந்து நட்டான் முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

ரு. குணவாகுபெயராவது-குணத்தின்பெயர் அதனையுடைய பொருளுக்கு [குணிக்கு] ஆகுவது. 'நீலம் சூடினாள்'என்றதில், நீலமென்னும் நிறக் குணப்பெயர் அதனையுடைய குவளைமலர்க்கு ஆயிற்று.(வெள்ளை உழுதது, 'வரிசையா னின்புறும் மேல்' முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

சு. தொழிலாகுபெயராவது-தொழிலின்பெயர் அதனையுடையபொருளுக்கு ஆகுவது. 'வற்றல் உண்டான்' என்றதில். வற்றலென்னும் தொழிலின் பெயர் அத்தொழிலையுடைய ஓர் உணவுக்கு ஆயிற்று.(எழுந்து எழுதினான், பாட்டுப் படித்தான், கடவுள் இருக்கிறார், செய்யுள் இயற்றினான், யாக்கை நிலையில்லாதது முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

எ. எண்ணலளவையாகுபெயராவது - எண்ணியளக்கின்ற ஒன்று இரண்டுஅரைகால் முதலிய எண்ணுப்பெயர் அவ்வளவைக்கொண்டபொருளுக்கு ஆகுவது. 'கால் நோகும்'என்றதில்,கால் என்னும் எண்ணலளவைப் பெயர் உடம்பில் அவ்வளவைக் கொண்ட உறுப்புக்கு ஆயிற்று. (அரையில் உடுத்தான், ஒன்று கொடுத்தான் முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

அ. எடுத்தலளவையாகுபெயராவது-நிறுத்தளக்கின்ற வீசையாக்கு முதலிய பெயர் அவ்வளவைக்கொண்ட பொருளுக்கு ஆகுவது. 'வீசை தந்தான்' என்றதில், வீசை என்னும் எடுத்தலளவைப்பெயர் அவ்வளவைக் கொண்ட பொருளுக்கு ஆயிற்று. (மணங்கு கொடு முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

கூ. முகத்தலளவையாகுபெயராவது - மொண்டு அளக்கின்ற நாழி குறுணி கலம் முதலிய பெயர் அவ்வளவைக் கொண்ட பொருளுக்கு ஆகு

வ்து. 'நாழி கொடு' என்றதில், நாழி என்னும் முகத்தலளவைப்பெயர் அவ்வளவைக்கொண்ட பொருளுக்கு ஆயிற்று. (பதக்கு விற்றான், கலம் குத்தினான் முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

கo. நீட்டலளவையாகுபெயராவது - நீட்டியளக்கின்ற முழம் சாண் யோசனை காதம் முதலியபெயர் அவ்வளவைக்கொண்ட பொருளுக்கு ஆகுவது. 'முழம் தந்தான்' என்றதில், முழம் என்னும் நீட்டலளவைப் பெயர் அவ்வளவைக்கொண்ட பொருளுக்கு ஆயிற்று. (காதம் கடந்தான், யோசனை சென்றான் முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

கக. சொல்லாகுபெயராவது-சொல்லின்பெயர் அதன் பொருளுக்கு ஆகுவது. 'இந்நூலுக்கு உரை செய்தான்' என்றதில், உரை என்னும் சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆயிற்று. (மொழி உணர்ந்தான் முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

கஉ. தானியாகுபெயராவது - தானத்திலுள்ள பொருளின்பெயர் அதற்குத்தானமான பொருளுக்கு ஆகுவது. [தானி-ஸ்தானி; ஸ்தானம்-இடம்.] 'விளக்கு ஒடிந்தது' என்றதில், விளக்கு என்னும் நெருப்புச் சுவாலையின் பெயர் அதற்கு இடமான தண்டுக்கு ஆயிற்று. (நெஞ்சு [மார்பு] நொந்தது, முரசு உயர்த்தவன் முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

கந. கருவியாகுபெயராவது-காரணத்தின்பெயர் காரியத்துக்கு ஆகுவது. 'திருவாய்மொழி ஓதினான்' என்றதில், மொழி யென்னும் கருவியின் பெயர், அதனாலாகிய நூலுக்கு ஆயிற்று. (திருவாசகம் படித்தான், திருக்குறள் முற்றிற்று முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

கச. காரியவாகுபெயராவது - காரியத்தின்பெயர் காரணத்துக்கு ஆகுவது. 'அலங்காரம் படி' என்றதில், அலங்காரம் என்னும் இலக்கணமாகிய காரியத்தின்பெயர் அதனை அறிவித்தற்குக் காரணமாகிய நூலுக்கு ஆயிற்று. (பாட்டியல் முற்றிற்று முதலியனவும் இதற்கு உதாரணமாம்)

கரு. கருத்தாவாகுபெயராவது - செய்தவன்பெயர் அவனாற்செய்யப்பட்டதற்கு ஆகுவது. 'திருவள்ளுவர் படி' என்றதில் வள்ளுவர் என்னும் கருத்தாவின்பெயர் அவராற்செய்யப்பட்ட நூலுக்கு ஆயிற்று. (மனுமுறை வழுவாதவன் முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

கசு. உவமையாகுபெயராவது - உபமானத்தின்பெயர் உபமேயத்துக்கு ஆகுவது. 'பாவை வந்தாள்' என்றதில், பாவை என்னும் உபமானத்தின்பெயர் அதுபோன்ற பெண்ணுக்கு ஆயிற்று. [பாவை - சித்திரப்பதுமை.] (காளை வந்தான் முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

தேவர்கள் முதலியோர் பெயரை, மனிதர்கட்கு இட்டு வழங்குவதும் ஆகுபெயரில் அடக்கப்படும்.

இவ்வாகுபெயர்-இருமடியாகுபெயர், மும்மடியாகுபெயர், அடையடுத்தவாகுபெயர் என வரவும்பெறும்.

(உ-ம்.) 'புளி தின்றான்' என்றதில், புளி என்னும் சுவைக்குணப் பெயர் அதனையுடைய பழத்துக்குக் குணவாகுபெயர். 'புளி முளைத்தது' என்றதில், புளி என்பது - சுவைப்பெயர் பழத்திற்கு ஆய், பழத்தின்பெயர் மரத்திற்கு ஆதலால், இருமடியாகுபெயர். (வரை [மலை]பிளந்தான் முதலியனவும் இதற்கு உதாரணமாம். வரையென்னும் கணுவின் பெயர் - அதனையுடைய மூங்கிலுக்கும், பின்பு அது மூங்கில்விளையும் மலைக்கும் ஆனமை காண்க.)

'கார் பெய்தது' என்றதில், கார் என்னும் நிறக்குணப்பெயர்-அதனையுடைய மேகத்திற்கு ஆதலால், குணவாகுபெயர். 'கார் வந்தது' என்றதில், கார் என்பது - நிறத்தின்பெயர் மேகத்திற்கு ஆய், மேகத்தின்பெயர் அது பெய்யும் பருவத்திற்கு ஆதலால், இருமடியாகுபெயர். 'கார் அறுத்தது' என்றதில், கார் என்பது நிறப்பெயர் மேகத்திற்கு ஆய், மேகத்தின் பெயர் அதுபெய்யும் பருவத்திற்கு ஆய், பருவத்தின்பெயர் அதில் விளையும் பயிர்க்கு ஆதலால், மும்மடியாகுபெயர்.

'வெற்றிலை நடு,' 'மருக்கொழுந்து நட்டான்,' 'திருவாசகம்' என்பவற்றில், வெறு மரு திரு என்னும் அடைமொழிகளால் அடுக்கப்பட்ட இலை, கொழுந்து, வாசகம் என்பன ஆகுபெயராதலால் இவை அடையடுத்த ஆகுபெயர். ('வார்சான்ற கூந்தல் [பெண்ணே!] கேள்' முதலியனவும் இதற்கு உதாரணமாம்.)

ஆகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் வேறுபாடு;—ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் தன்பொருளை உணர்த்தாமல் வேறுபொருளை உணர்த்துதலினால், இவையிரண்டுக்கும் வேறுபாடு என்னவென்றால்,—(க) ஆகுபெயர் - ஒருசொல்லாய்வரும்; அன்மொழித்தொகை - பலசொல்லாய் வரும். (உ) ஆகுபெயர்-முதல் சினை முதலிய சம்பந்தத்தால் வேறுபொருளை உணர்த்தும்; அன்மொழித்தொகை - வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகையாற்றலால் வேறுபொருளை உணர்த்தும். (ங) ஆகுபெயர் - பெரும்பாலும் நியதிப்பெயராய் வரும்; அன்மொழித்தொகை - நியதிப்பெயராய் வராது. (ச) ஆகுபெயர் தொன்றுதொட்டு வரும்; அன்மொழித்தொகை - யாதாயினும் ஒரு காரணத்தாற் புதிதுபுதிதாக உண்டாக்கப்பட்டு வரும். இவையே ஒன்றற்கு ஒன்று வேறுபாடாம் என்று அறிக. (ஙங)

வேற்றுமை.

[வேற்றுமையின் இலக்கணம்.]

‡ உகூக. ஏற்கு மெவ்வகைப் பெயர்க்கு மீறாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை.

(இ-ள்.) ஏற்கும் - தம்மை ஏற்றுக்கொள்ளுதற்கு உரிய, எவ்வகை பெயர்க்கும்-எல்லாவகைப்பட்ட பெயர்கட்கும், ஈறாஆய்-இறுதியில்வருவனவாய், பொருள்-(அப்பெயர்களின்) பொருளை, வேற்றுமை செய்வன-வேறுபடுத்துவனவாகிய, வேற்றுமை - வேற்றுமைகள், எட்டே - எட்டேயாம்.

தன்னைஎற்ற பெயரின் பொருளை வேறுபடுத்துவதற்குக் காரணமான உருபை 'வேற்றுமை' என்றது, காரியவாகுபெயர்; வேறுபடுத்துதல்-கருத்தாப்பொருளும் செயப்படுபொருளும் கருவிப்பொருளும் முதலாக வேறு பொருள்களைத் தரச்செய்தல்; அது, மேல்வரும் சிறப்புச்சூத்திரங்களிற் சொல்லப்படும். விளிவேற்றுமையைப் பெயரதுவிகாரமென்று முதல்வேற்றுமையில் அடக்கி வேற்றுமை எழென்பாரது கொள்கையை மறுத்து, அது பெயரின் விகாரமேயாயினும் படர்க்கையை முன்னிலையாக வேறுபடுத்தலுடைமையின் வேறென்றற்கு, 'எட்டே வேற்றுமை'எனத் தேற்றேகாரங் கொடுத்துக் கூறினர். (௩௪)

[வேற்றுமைகளின் பெயரும், முறைமையும்.]

‡ உகூஉ. பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளியென் றாகு மவற்றின் பெயர் முறை.

(இ - ள்.) அவற்றின் - அவ்வேற்றுமைகளினுடைய, பெயர்-பெயர்களும், முறை - முறையுமாவன:—(க) பெயரே - பெயரும், (உ) ஐ - ஐயும், (௩) ஆல்-ஆலும், (௪) கு - குவ்வும், (௫) இன்-இன்னும், (௬) அது-அதுவும், (எ) கண் - கண்ணும், (அ) விளி - விளியும், என்று ஆகும்—; (எ - று.)

முதல்வேற்றுமை வேறுஉருபுஎற்காமல் பெயர்மாத்திரமாய்நிற்றலால் பெயர்வேற்றுமை யென்றும், எட்டாம்வேற்றுமை விளித்தற்பொருளதாதலால் விளிவேற்றுமை யென்றும் பெயர்பெறும்; விளித்தல் - அழைத்தல்.

[எழுவாயுருபு மற்றையுருபுகளை ஏற்றல்.[

உகூ௩. ஆற னுருபு மேற்குமவ் வுருபே.

(இ - ள்.) அ உருபே - (பெயர்மாத்திரையாய் நிற்கின்ற) அவ்வெழுவாயுருபே, ஆறன் உருபும் - (ஐ முதலாகிய) ஆறு வேற்றுமை யுருபுகளையும், ஏற்கும் - ஏற்றுவரும்; (எ - று.)

விளியுருபு பெயரின் விகாரமே யாதலால், அதனை நீக்கி, மற்றை ஆறு உருபுகளையும் ஏற்கு மென்றாரென்க. (௩௬)

['ஐ' முதலிய வேற்றுமையுருபுகளை ஏற்காத பெயர்கள்.]

‡ உகூ௪. நீயிர் நீவிர் நா னெழுவா யலபெறா.

(இ - ள்.) நீயிர் நீவிர் நான் - நீயிர் நீவிர் என்னும் முன்னிலைப்பெயர்களும் நான் என்னும் தன்மைப்பெயரும்,—எழுவாய் அல - எழுவாயல்லாத மற்றை எழு வேற்றுமை யுருபுகளை, பெறா - பெற்றுவாராவாம்; (எ - று.)

நும்மை நும்மால், உம்மை உம்மால் முதலியன-நீர் என்னும் முன்னிலைப்பெயரின் வேற்றுமைகளாதலாலும், என்னை என்னல் முதலியன-யான் என்னும் தன்மைப்பெயரின் வேற்றுமைக ளாதலாலும், நீயிர் நீவிர் என்பவையும், நான் என்பதும் - எழுவாய்வேற்றுமை யொன்றையே யன்றி மற்றை வேற்றுமைகளை எலா வாயின வென அறிக. (யாம் என்பது - எம் என்று வருதல்போல, யான் என்பது - என் என்று வரும்; அவ்வாறே

நாம் என்பது - நம் என்று வருதல் போல, நான் என்பது - நன் என வர வேண்டும்: அங்ஙனம் வாராமையால், நான் என்பது - பிறவேற்றுமைகட்கு வாராமையை அறிக.)

[முதல்வேற்றுமை.]

‡ உகூரு. அவற்றுள்,
எழுவா யுருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினக்கொள லதன்பய னிலையே.

(இ - ள்.) அவற்றுள்-முன்சொல்லப்பட்ட எட்டு வேற்றுமைகளுள்,--- எழுவாய் - முதல்வேற்றுமையினது, உருபு - உருபாவது,-- திரிபு இல்-(ஐ முதலாகிய உருபுகளை ஏற்றுத்) திரிதலில்லாத [ஏற்காமல் இயல்பாய் நிற்கிற], பெயரே-பெயரேயாம்; வினை - வினையையும், பெயர் - பெயரையும், வின - வினவையும், கொளல் - கொள்ளவருதல்,---அதன்-அவ்வுருபினது, பயனிலை - பொருள் நிலையாம்; (எ - று.)

எனவே - எழுவாய்வேற்றுமைக்கு வேறு உருபு இல்லை யென்பதும், வினையும் பெயரும்வினவும் கொண்டுமுடியுஞ்சொல்லாய் வந்துநிற்க, அவற்றுக்குக் கருத்தாவாய் நிற்பதே அதன்பொரு ளென்பதும் பெறப்பட்டன. திரிதலில்லாதபெயரை வேற்றுமையென்றது, தானே தன்பொருளைக்கருத்தாப்பொருளாக வேறுபடுத்துதலால். எழுவாய் வேற்றுமை, முதல்வேற்றுமை, பெயர்வேற்றுமை, வினைமுதல், செய்பவன், கருத்தா என்பன - ஒரு பொருட்சொற்கள். எழுவாயெனினும், முதலெனினும் ஒக்கும். வினைமுதல்-பயனிலையிற்குறிக்கும் தொழிலைச்செய்தற்கு முதலாயுள்ள பொருள். செய்பவனெனினும், கருத்தாவெனினும் ஒக்கும்; கர்த்தா - வடசொல்.

(உ - ம்.) சாத்தன் வந்தான், அவன் பெரியன்---வினைகொள வந்தன.
ஆ ஒன்று, அரசன் இவன்---பெயர்கொள வந்தன.
அவன் யார், ஆ யாது---வினக்கொள வந்தன.

கருத்தாப்பொருளாவது - தொழிலிற் சுதந்தரமுடைய பொருளாம். பொன்னன் வந்தான் என்றதில், பொன்னன் வருகைத்தொழிலிற் சுதந்தர முடையனாதல் காண்க.

எழுவாய்வேற்றுமைக்கு ஐ முதலானவை போன்ற உருபுஇல்லாதிருந்தாலும், உரையிற்கோடல் என்கிற உத்தியால் - ஆனவன், ஆகின்றவன், ஆவான், என்றவன், என்கின்றவன், என்பவன், அவன் முதலாக ஐம்பாலிலும் வருகிறசொல்லுருபுகள் உண்டெனக் கொள்க; அவை - சாத்தனாகிறவன், சாத்தியவள், சாத்தரானவர், ஆவென்பது, ஆக்களானவை எனவரும். இன்னும் இவ்வுத்தியைப் பின்வரும் வேற்றுமைகளிற்காட்டப்படும் சொல்லுருபுகட்கெல்லாம் கொள்க.

இனி, இது தோன்றா எழுவாயாக வருதலும் உண்டு; (உ - ம்.) செல்வாயோ சாத்தா என்றவிடத்து, நீ என்பது - தோன்றா எழுவாய். (எழுவாய் தொக்கது.)

கருத்தா - இயற்றுதற்கருத்தா, ஏவுதற்கருத்தா என இருவகைப் படும். இயற்றுதற்கருத்தா - தானே நேராகச் செய்வது. ஏவுதற்கருத்தா- தானே நேராகச் செய்யாமல் வேறொருவனைக்கொண்டு செய்விப்பது.

(உ - ம்.) தச்சன் கோயிலைக் கட்டினான்—இயற்றுதற்கருத்தா.
அரசன் கோயிலைக் கட்டினான்—ஏவுதற்கருத்தா.

கருத்தா மூன்றாம்வேற்றுமையா யிருக்கும்போது செயப்படுபொருள் முதல் வேற்றுமையாய் வருதலால், முதல் வேற்றுமைக்குச் செயப்படு பொருளும் சிறுபான்மை உண்டெனக் கொள்க.

(உ - ம்.) கடவுளால் உலகம் படைக்கப்பட்டது. (ரு-அ)

[இரண்டாம் வேற்றுமை.]

‡ உகசு. இரண்டா வதனுரு பையே அதன்பொருள்
ஆக்க லழித்த லடைதல் நீத்தல்
ஒத்த லுடைமை யாதி யாகும்.

(இ - ள்.) இரண்டாவதன் - இரண்டாம் வேற்றுமையினது, உருபு - உருபாவது,—ஐயே - (முன்சொல்லப்பட்ட) ஐ ஒன்றுமேயாம்; அதன் - அதனுடைய, பொருள் - பொருள்களாவன:—ஆக்கல் - ஆக்கப்படுபொருளும், அழித்தல்-அழிக்கப்படுபொருளும், அடைதல் - அடையப்படுபொருளும், நீத்தல்-நீக்கப்படுபொருளும், ஒத்தல்-ஒக்கப்படுபொருளும்,உடைமை-உடைமைப்பொருளும், ஆதி ஆகும் - முதலியனவாம்; (எ-று.)—எனவே, இரண்டாம் வேற்றுமையின் பொருள் செயப்படுபொரு ளென்றதாயிற்று.

(உ - ம்.) குடத்தைச் செய்தான்—ஆக்கப்படுபொருள்.
கோட்டையை இடித்தான்—அழிக்கப்படுபொருள்.
ஊரைச் சேர்ந்தான்—அடையப்படுபொருள்.
வீட்டை விட்டான்—நீக்கப்படுபொருள்.
புலியைப் போன்றான்—ஒக்கப்படுபொருள்.
பொன்னை உடையான்—உடைமைப்பொருள்.

செயப்படுபொருளாவது - கருத்தாவினது தொழிலின் பயனை அடைவது.'குடத்தைச்செய்தான்'என்றதில், செய்தல்-கருத்தாவினது தொழில்; செய்யப்படுதல்-அத்தொழிலின் பயன்; அப்பயனை அடைவது குடம்: ஆதலால்,குடம் செயப்படுபொருள். செயப்படுபொருள், செய்பொருள்,கருமம், காரியம் என்பன-ஒருபொருட்சொற்கள். கர்மம், கார்யம் - வடசொற்கள்.

§ 'ஆதி' என்றதனால்-வீட்டை விரும்பினான், நூற்பொருளை அறிந்தான் என விரும்பப்படுதலும் அறியப்படுதலும் முதலானவையும் கொள்க. இவையெல்லாம் ஆக்கல்முதலிய ஆறுபொருள்களுள் ஒருவாறு அடங்குதல்அறிக.

§ "'ஆதி' என்றதனால், ஒவ்வாமை முதலானவும் இவற்றின் பரியாய மொழிகளும் கொள்க; 'உடைமை' - வினைக்குறிப்பு. அவனையொவ்வான், நின்னைப்போலான் என்றற் றொடக்கத்தன - ஒவ்வாமை. அறத்தைக் காத்தான் வளர்த்தான் பெருக்கினான் படைத்தான் என்றற் றொடக்கத்தன - ஆக்கமொழிப்பரியாயம்; பிறவற்றிற்கும் இவ்வாறே வருவன கண்டு கொள்க' என்பன, பழைய உரை,

இனி அரசன் பகைவரைச் சிறைச்சாலையை அடைவித்தான், சாத்தன் பசுவைப் பாலைக் கறந்தான் என இரண்டு செயப்படுபொருள்கள் சில இடங்களிலே தன்வினை பிறவினை இரண்டிலும் வருதலும் உண்டு.* (நகூ)

[மூன்றும் வேற்றுமை]

‡ உகூஎ. மூன்றா வதனுரு பாலா னோடொடு
கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள்.

(இ - ள்.) மூன்றுவதன் - மூன்றும் வேற்றுமையினுடைய, உருபு - உருபுகளாவன,—ஆல் ஆன் ஒடு ஓடு - (முன்சொல்லப்பட்ட)ஆல் என்பதே யன்றி ஆனும் ஒடும் ஓடுவும் ஆகும்; அதன் - அதனுடைய, பொருள்-பொருள்களாவன:—கருவி - கருவியாதலும், கருத்தா-வினைமுதலாதலும், உடன் நிகழ்வு - உடனிகழ்ச்சியுமாம்; (எ - று.)

இவ்வாறு பொதுப்படக் கூறினு ராயினும், ஏற்புழிக்கோடல் என்கிற உத்தியால்-ஆல் ஆன் உருபுகளுக்குக் கருவிப்பொருளும் கருத்தாப்பொருளும், ஒடு ஓடு உருபுகளுக்கு உடனிகழ்ச்சிப்பொருளும் சிறந்தன வென்க.

(உ - ம்.) வாளால் வெட்டினன், வாளான் வெட்டினன்—கருவி.

அரசனுலாக்கப்பட்ட கோயில், அரசனுனாக்கப்பட்டகோயில்—கருத்தா

மகனோடு தந்தை வந்தான், மகனொடு தந்தை வந்தான்—உடனிகழ்ச்சி.

கருவியாவது-கருத்தாவின் தொழிலுக்குச் சாதனமா யிருப்பது. 'வாளாற் பகைவனை வெட்டினன்' என்றதில், வெட்டுதல்-கருத்தாவின் தொழில்; அவ்வெட்டுதற்குச் சாதனமா யிருப்பது-வாள்:ஆதலால், அது கருவிப்பொருளாம்; அக்கருவி-முதற்கருவியும், துணைக்கருவியும் என இருவ வகைப்படும். முதற்கருவியாவது - காரியமாக மாறி அதினின்றும் வேறு படாதது. துணைக்கருவியாவது-முதற்கருவி காரியப்படுமளவும் அதற்குத் துணையாய் நின்று பின்பு பிரிவது. முதற்கருவி=முதற்காரணம். துணைக் கருவி—துணைக்காரணம்.

(உ - ம்.) மண்ணாற் குடத்தை வனைந்தான்—மண்-முதற்கருவி.
தண்டசக்கரங்களாற் குடத்தை வனைந்தான்--தண்டசக்கரம்-துணைக்கருவி

கருத்தாப்பொருள் இன்னதென்று எழுவாய்ச் சூத்திரவுரையிற் காட்டப்பட்டது. இதுவும்-இயற்றுதற்கருத்தா, ஏவுதற்கருத்தா என இருவகை.

(உ-ம்.) தச்சனாற் கோயில் கட்டப்பட்டது—தச்சன்இயற்றுதற்கருத்தா.
அரசனாற் கோயில் கட்டப்பட்டது—அரசன்-ஏவுதற்கருத்தா.

முதல்வேற்றுமைக் கருத்தாவுக்கும் மூன்றும் வேற்றுமைக் கருத்தாவுக்கும் வேறுபாடு என்னவென்றால்,—முதல்வேற்றுமைக் கருத்தா-தன்னோடு திணை பால் இடங்களில் ஒத்த செய்வினைப்பயனிலையைக் கொண்டு முடியும். மூன்றும்வேற்றுமைக்கருத்தா-செயப்படுபொருளோடு திணை பால் இடங்களில்ஒத்த செயப்பாட்டுவினைப் பயனிலையைக்கொண்டு முடியும்.கருத்தா முதல்வேற்றுமையா யிருக்கும்போது,செயப்படுபொருள் இரண்டாம்

* இதனை வடநூலார் 'த்விகர்ம கர்த்தரி ப்ரயோகம்' என்பர்.

வேற்றுமையாய் வரும்; கருத்தா மூன்றாம்வேற்றுமையா யிருக்கும்போது, செயப்படுபொருள் முதல்வேற்றுமையாய் வரும்.

(உ - ம்.) தச்சன் கோயிலைக் கட்டினான்—முதல்வேற்றுமைக்கருத்தா. *

தச்சனாற்கோயில் கட்டப்பட்டது-மூன்றாம்வேற்றுமைக்கருத்தா.§

உடனிகழ்ச்சிப்பொருளாவது-வினைகொண்டு முடிகின்ற பொருளின் தொழிலைத் தன்னிடத்தும் உடன் நிகழ்கிறதாக வுடையது. 'மகனோடு தந்தை வந்தான்' என்றதில், தந்தை - வினைகொண்டுமுடிகிற பொருள்; வருதல் - அப்பொருளின் தொழில்; அத்தொழிலைத் தன்னிடத்தும் உடன் நிகழ்கிறதாகவுடைய பொருள் - மகன்: ஆதலால், அது - உடனிகழ்ச்சிப் பொருள்.

சிறுபான்மை, ஆல் ஆன் உருபுகள் - உடனிகழ்ச்சிப்பொருளிலும், ஓடு ஒடு உருபுகள் - கருவிப்பொருள் கருத்தாப்பொருள்களிலும் அருமையாக வரும்.

(உ-ம்.) "தூங்குகையா லோங்குநடைய," "உறழ்மணியா னுயர்மருப்பின"-

இவற்றில், ஆல் ஆன் உருபுகள் - உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தன; கையால் - கையோடு, மணியான் - மணியோடு என்று பொருள்.

"கொடியோடுதுவக்குண்டான்," "ஊசியொடுகுயின்றதூசும்பட்டும்"-

இவற்றில், கொடியோடு என்பதில்-ஓடு உருபு கருத்தாப்பொருளிலும், ஊசியொடு என்பதில் - ஒடு உருபு கருவிப்பொருளிலும் வந்தன; கொடியோடு - கொடியால், ஊசியொடு - ஊசியால் என்று பொருள்.

இனி, ஒரோவிடத்து, ஆல் ஆன் உருபுகள் - தோறும் என்கிற பொருளையும், ஓடு ஒடு உருபுகள் - அடைமொழிப்பொருளையும் தரும்.

(உ - ம்.) ஊரானொருகோயில்—இது, ஊர்தோறும் எனப் பொருள் படும்.

கோபத்தோடு வந்தான்—கோபம் - வருதற்கு விசேஷண மாதலால், அடைமொழிப்பொருள்; கோபமுடையனாய் வந்தா னென்க.

கருவிப்பொருளில் 'கொண்டு' என்பதும், உடனிகழ்ச்சிப்பொருளில், 'உடன்' என்பதும் சொல்லுருபாக வரும்.

(உ-ம்.) வாள்கொண்டு வெட்டினான், மகனுடன் தந்தை வந்தான்.(௪0)

[நான்காம் வேற்றுமை.]

‡ உகூ௭. நான்கா வதற்குரு பாகும் குவ்வே
கொடை பகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியி னிதற்கிதெனல் பொருளே.

(இ - ள்.) நான் காவதற்கு - நான்காம் வேற்றுமைக்கு, உருபு-உருபாவது;—குவ்வே ஆகும்-(முன்சொல்லப்பட்ட) கு ஒன்றுமேயாம்; பொருள்-அதன் பொருள்களாவன:—கொடை - கொடுத்தலும், பகை - பகையும், நேர்ச்சி-நட்பும், தகவு - தகுதியும், அது ஆதல் - அதுவாதலும், பொருட்டு-

---

* இதனை வடநூலார் 'கர்த்தரி ப்ரயோகம்' என்பர்.

§ இதனை வடநூலார் 'கர்மணி ப்ரயோகம்' என்பர்.

பொருட்டும், முறை - உறவுமுறையும், ஆதிபின் - முதலான பொருளில், இதற்கு இது எனல்-இதற்கு இது வென்பது பட வருதலாம்; (எ - று.)—'இதற்கிதெனல் பொருள்' என்றதனால், நான்காம் வேற்றுமையின் பொருள் ஏற்றுக்கொள்ளுதற்பொருளென்றதாயிற்று.

கொடையெனவே கொள்ளுதற்பொருளும், பகையெனவே பகைதொடர்பொருளும், நேர்ச்சியெனவே நட்புத்தொடர்பொருளும் தகுதியெனவே தகுதியுடைப்பொருளும், அதுவாதலெனவே முதற்காரணகாரியப்பொருளும், பொருட்டெனவே நிமித்தகாரணகாரியப்பொருளும், முறையெனவே முறைக்கு இயைபொருளும் குவ்வுருபின் பொருள்களாமென்க.

(உ - ம்.) யாசகர்க்குப் பொன்னைக் கொடுத்தான்—கொள்ளுதற்பொருள்.
பாம்புக்குப் பகை கருடன்—பகைதொடர்பொருள்.
சாத்தனுக்கு நண்பன் கொற்றன்—நட்புத்தொடர்பொருள்.
அரசர்க்கு இவ்வாபரணம் உரியது—தகுதியுடைப்பொருள்.
குண்டலத்திற்குப் பொன்—முதற்காரணகாரியப்பொருள்.
கூலிக்கு வேலைசெய்தான்—நிமித்தகாரணகாரியப்பொருள்.
பொன்னனுக்கு மகன் இவன்—முறைக்கு இயைபொருள்.

'ஆதி' என்றதனால், மயிலைக்கு வடக்குத் திருவல்லிக்கேணி, சாத்தனுக்குச் சிறந்தவன் கொற்றன் என எல்லைப்பொருளில் வருதலும், பிறவும் கொள்க.

பொருட்டுப்பொருளில் குவ்வுருபு நிற்றற்கு உரிய சில இடங்களில் **பொருட்டு, நிமித்தம்** என்பவையும், குவ்வுருபின்மேல் ஆக என்பதும் சொல்லுருபுகளாக வரும். (உ-ம்.) கூலியின்பொருட்டு வேலைசெய்தான், கூலியினிமித்தம் வேலை செய்தான், கூலிக்காக வேலை செய்தான். (சுக)

[ஐந்தாம் வேற்றுமை.]

‡ உகூகூ. ஐந்தா வதனுரு பின்னு மில்லும்
நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே.

(இ - ள்.) ஐந்தாவதன் - ஐந்தாம்வேற்றுமையினுடைய, உருபு-உருபுகளாவன:—இன்னும் இல்லும்-(முன்சொல்லப்பட்ட) இன் என்பதேயன்றி இல் என்பதும் ஆகும்; பொருள் - அதன் பொருள்களாவன:—நீங்கல்-நீங்குதற்பொருளும், ஒப்பு-உவமைப்பொருளும், எல்லை - எல்லைப்பொருளும், ஏது - ஏதுப்பொருளும் ஆகத் தன்னை ஏற்ற பெயரின் பொருளை வேறுபடுத்தல்; (எ - று.)

(உ - ம்.) மலையின்வீழருவி—நீக்கப்பொருள்.
காக்கையிற் கரிது களம்பழம்—ஒப்புப்பொருள்.
மதுரையின் வடக்குச் சிதம்பரம்—எல்லைப்பொருள்.
கல்வியிற் பெரியன் கம்பன்—ஏதுப்பொருள்.

எல்லைப்பொருள் - மதுரையின் வடக்குச் சிதம்பரம் எனத் திசையளவும், 'கச்சியில் திருத்தணிகை முக்காவதம்' என வழியளவும், சாத்தனில் இரண்டு ஆண்டு மூத்தவன் கொற்றன் எனக் காலவளவும், 'அரசிற் பெரியர் அந்தணர்' எனப் பண்பளவும் முதலியன பற்றி வரும்.

'காக்கையிற் கரிது களம்பழம்' என உபமானமும் உபமேயமு மாக வருமிடத்தில், காக்கையின் - காக்கைபோல எனப் பொருள்கொண்டால், ஒப்புப்பொருள்; இதனை உவமைப்பொரு வென்பர்: காக்கையின் - காக்கையைக் காட்டிலும் எனப்பொருள் கொண்டால், எல்லைப்பொருளாம்;இதனை உறழ்பொரு வென்பர்.

நீக்கப்பொருளிலும், எல்லைப்பொருளிலும் - இன், இல் உருபுகளின் மேல் நின்று இருந்து என்பவை சில இடத்துச் சொல்லுருபுகளாக வரும்.

(உ - ம்.) ஊரினின்று நீங்கினன், ஊரிலிருந்து போனன், காட்டினின்று ஊர் காதம், காட்டிலிருந்து ஊர் காதம். (சஉ)

[ஆறும் வேற்றுமை.]

‡ ரூ00. ஆற னொருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம் பண்பு உறுப்பு
ஒன்றன் கூட்டம் பலவி னீட்டம்
திரிபி னாக்க மாம்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

(இ - ள்.) ஆறன் ஒருமைக்கு - ஒருமையாகிய வருமொழியையுடைய ஆறும்வேற்றுமைக்கு, அதுவும் ஆதுவும்-(முன்சொல்லப்பட்ட) அது என்பதேயன்றி ஆது என்பதும், பன்மைக்கு - பன்மையாகிய வருமொழியையுடைய ஆறும்வேற்றுமைக்கு, அவ்வும் - அ என்பதும், உருபு ஆம்-உருபுகளாகும்; பொருள்-(அதன்) பொருள்களாவன:—பண்பு-(குணமும் தொழிலுமாகிய) பண்பும், உறுப்பு - அவயமும், ஒன்றன் கூட்டம் - ஒரு பொருட் கூட்டமும், பலவின் ஈட்டம் - பலபொருட்டிரட்சியும், திரிபின் ஆக்கம் - ஒன்று திரிந்து மன்றொன்றுதலும், ஆம் - ஆகிய, தற்கிழமையும் - (ஐந்து) தற்கிழமைப் பொருள்களையும், பிறிதின்கிழமையும் - (அவையல்லாத பொருள் இடம் காலம் ஆகிய மூன்று) பிறிதின் கிழமைப்பொருள்களையும், பேணுதல் - உடையதாய் வருதலாம்; (எ - று.)

தற்கிழமையாவது - தன்னோடு ஒற்றுமையுடைய பொருளின் சம்பந்தம். பிறிதின்கிழமையாவது - தன்னின் வேறுகிய பொருளின் சம்பந்தம். பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்ற ஆறனுள், குணம் தொழில் என்ற இரண்டும் 'பண்பு' என்ற ஒன்றில் அடக்கப்பட்டன. அவ்வாறனுள் பிந்தின மூன்றும் தற்கிழமைப்பொருள் எனவே, இவையல்லாத பொருள் இடம் காலம் ஆகிய மூன்றும் பிறிதின்கிழமைப்பொருளென்பது பெறப்பட்டது. ஆகவே, இப்படி பலவகையாலும் வருகிற சம்பந்தப்பொருளே ஆறும் வேற்றுமையின் பொருளென்றதாயிற்று.

(உ - ம்.) சாத்தனது கருமை ---(குணப்) } பண்புத்தற்கிழமை.
சாத்தனது வரவு ---(தொழிற்) }
சாத்தனது கை ---உறுப்புத் தற்கிழமை.
மரந்தரது தொகுதி ---ஒன்றன்கூட்டத் தற்கிழமை.

பறவைகளது கூட்டம்---பலவினீட்டத் தற்கிழமை.
நெல்லினது பொரி ---திரிபிணுக்கத் தற்கிழமை.
சாத்தனது பசு ---பொருட் பிறிதின்கிழமை.
சாத்தனது வீடு ---இடப் பிறிதின்கிழமை.
சாத்தனது நாள் ---காலப் பிறிதின்கிழமை.

எனது கை, நினது வரவு, தனது பொருள்---ஆது உருபு.

என கைகள், நின வீடுகள், தன பொருள்கள்---அகர உருபு.

ஆறனுருபு-'எனது உயிர்,' 'இராகுவினது தலை', 'பூமியினது தலம்' என உடையதும் உடைமைப்பொருளும் வேறாகாத ஒற்றுமைக்கிழமைப் பொருளிலும் வரும்; யான் என்பதும் உயிர் என்பதும், இராகு என்பதும் தலை என்பதும், பூமிஎன்பதும் தலம்என்பதும் ஒருபொருளேயாதலால், இவை ஒற்றுமைக்கிழமை.

சிறுபான்மை 'அது' உருபு - 'நினது அடியார்,' எனதுகைகள்' என வருமொழி பன்மையாயிருக்கும்பொழுதும் வரும்; பிற உருபுகளும் மாறி வருதலு முண்டு.

இவ்வேற்றுமைக்கு 'உடைய' என்பது - சொல்லுருபாக வரும்.

(உ - ம்.) என்னுடைய வீடு, அவனுடைய தம்பி. (சரு)

[ஏழாம் வேற்றுமை.]

‡ ருoக. ஏழ னுருபு கண்ணாதி யாகும்
பொருள்முத லாறு மோரிரு கிழமையின்
இடனாய் நிற்ற லிதன்பொரு ளென்ப.

(இ - ள்.) ஏழன் - ஏழாம் வேற்றுமையினுடைய, உருபு - உருபுகளாவன,---கண் ஆதி ஆகும்-(முன் சொல்லப்பட்ட கண் என்பதேயன்றி) அக் கண் முதலிய பிறவுமாம்; இதன்-இதனுடைய, பொருள்-பொருளாவது:--- பொருள் முதல் ஆறும்-(தன்னை ஏற்ற) பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறுவகைப்பெயர்களும், ஓர் இரு கிழமையின்-தற்கிழமை பிறிதின்கிழமை என்னும் இரண்டு பொருள்களுக்கும், இடன் ஆய் நிற்றல்-இடமாய் நிற்றலாம், என்ப - என்றுசொல்வர், (புலவர்); (எ - று.)— எனவே, இடப்பொருள் ஏழாம்வேற்றுமையின் பொருளென்றதாயிற்று.

'ஆதி' என்றதனாற் குறித்த உருபுகள், வருஞ்சூத்திரத்திற்கூறப்படும்.

(உதாரணம்.).

மணியின்கண் இருக்கின்றது ஒளி	---தற்கிழமை	பொருள் இடமாயிற்று.
மரத்தின்கண் வாழ்கின்றது பறவை	---பிறிதின்கிழமை	
ஊரின்கண் உள்ளது வீடு	---தற்கிழமை	இடம் இடமாயிற்று.
ஆகாயத்தின்கண் பறக்கின்றதுபருந்து	-பிறிதின்கிழமை	
நாளின்கண் நாழிகை உள்ளது	---தற்கிழமை	காலம் இடமாயிற்று.
வேனிலின்கண் பாதிரி பூக்கும்	---பிறிதின்கிழமை	
கையின்கண் உள்ளது விரல்	---தற்கிழமை	சினை இடமாயிற்று.
கையின்கண் விளங்குகின்றது வளை	---பிறிதின்கிழமை	

நிறத்தின்கண் உள்ளது அழகு	—தற்கிழமை	குணம் இடமாயிற்று.
இளமையின்கண்வாய்த்தது செல்வம்	—பிறிதின்கிழமை	
ஆட்டத்தின்கண் உள்ளது அபிநயம்	— தற்கிழமை	தொழில் இடமாயிற்று(௬௬)
ஆட்டத்தின்கண் பாடப்பட்டது பாட்டு	--பிறிதின்கிழமை	

[ஏழாம் வேற்றுமை யுருபுகள்.]

௩௦௨. கண் கால் கடை இடை தலை வாய் திசை வயின்
முன் சார் வலம் இடம் மேல் கீழ் புடை முதல்
பின் பாடு அளை தேம் உழை வழி உழி உளி
உள் அகம் புறம் இல் இடப்பொரு ளுருபே.

(இ - ள்.) கண்......இல்-இவ்விருபத்தெட்டும், இடப்பொருள் உருபு-இடப்பொருளுக்கு உரிய ஏழாம்வேற்றுமையின் உருபுகளாம்; (எ - று.)

இங்கேயும் 'கண்'உருபைக் கூட்டிச்சொன்னது, தொடர்ச்சி தோன்ற.

(உதாரணம்)

கால்-'ஊர்க்கால்.'	வலம்-'கைவலம்.'	தேம்-'கோடாய்தேத்து.'
கடை-'வேலின்கடை.'	இடம்-'இல்லிடம்.'	உழை-'அவனுழை.'
இடை-'நல்லாரிடை.'	மேல்-'தன்மேல்.'	வழி-'நிழல்வழி.'
தலை-'வலைத்தலை'	கீழ்-'நிழற்கீழ்.'	உழி-'உறையுழி.'
வாய்-'கடல்வாய்'	புடை-'எயிற்புடை.'	உளி-'காவுளி.'
திசை-'தேர்த்திசை'	முதல்-'சுரன்முதல்.'	உள்-'குவட்டுள்'
வயின்-'அவர்வயின்.'	பின்-'காதலிபின்.'	அகம்-'பல்லாரகத்து.'
முன்-'கற்றூர்முன்.'	பாடு-'நம்பாடு.'	புறம்-'உயிர்ப்புறத்து.'
சார்-'காட்டுச்சார்.'	அளை-'கல்லளை.'	இல்-'ஊரில்.'

(இல் - வீடு. எயில் - மதில். சுரன் - பாலைநிலம். காதலி - மனைவி. கோடாய் - செவிலித்தாய். கா - சோலை. குவடு - மலையுச்சி.)

இன்னும், முன்சூத்திரத்து 'ஆதி' என்றதனால்-பக்கல், பாங்கர்,முகம், மாடு, பால், இன் முதலானவைகளும் உருபுகளாக வரும்; (உ-ம்.) சாத்தன் பக்கல், காட்டுப்பாங்கர், போர்முகத்து, யாவர்மாட்டும், அவன்பால், நாட்டின்.

இனி, கண் கால் முதலானவை - உருபாகாமல் இடவேறுபாடுகளை யுணர்த்தும் சொற்களாயும் வரும்; (உ - ம்.) கண்ணகலுலகம், அகத்திலிருந்தான், புறத்திற் போனான், மேல் நின்றான் என இவ்வாறு காண்க. ()

[எட்டாம் வேற்றுமை.]

‡ ௩௦௩. எட்ட னுருபே யெய்துபெய ரீற்றின்
திரிபு குன்றல் மிகுத லியல்பயல்
திரிபு மாம் பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே. *

---

* 'எய்துபெய ரெனவே, எய்தாத பெயரும் உள என்பதாம்; அவை போக்கிச் சொல்லுதும். படர்க்கையோரை யெனவே, முன்னிலை தன்மை யார் ஈண்டே விலக்கப்பட்டாராம். படர்க்கையோரை என்றாரேனும், "ஒருமொழி யொழி தன்னினங் கொளற் குரித்தே" என்பதனால், படர்க்கையிடத்து ஐம்பாலும் கொள்க. பெயருருபிற்கும் இயல்பான விளியுருபிற்கும் உருபான் வேற்றுமையின்றேனும், பொருளான் உண்டெனக் கொள்க. தான் என்பது, சந்தவின்பப்பொருட்டு வந்தது' என்பது, பழைய உரை.

(இ - ள்.) எட்டன் - எட்டாம் வேற்றுமையினுடைய, உருபு - உருபுகளாவன,—எய்து பெயர்-(விளியை) அடையும் பெயரினது, ஈற்றின் திரிபு-இறுதி திரிதலும்,குன்றல்-இறுதிகெடுதலும்,மிகுதல்-இறுதியில் ஓரெழுத்து மிகுதலும், இயல்பு-இயல்பாதலும்,அயல் திரிபும்-ஈற்றெழுத்துக்குமுந்தின எழுத்துத் திரிதலும்,ஆம்-ஆகும்;பொருள்-பொருளாவது,—படர்க்கையோரை - படர்க்கை யிடத்துப் பொருளை, தன் முகம் ஆக - தனக்கு எதிர்முகமாக, அழைப்பது-அழைத்தலாம்; (எ-று.)—எனவே, விளிக்கப்படுபொருள் எட்டாம்வேற்றுமையின் பொருளென்றதாயிற்று. இது, விளிவேற்றுமையெனவும்படும். தான்-அசை. 'ஈற்றின்' என்பதைப் பிறவிடத்தும் கூட்டுக.

(உ - ம்.) தந்தை - தந்தாய், நல்லாள்-நல்லாய், தோழு-தோழூ—ஈறுதிரிபு.
அரசன் - அரச, சோழன் - சோழ —ஈறுகுன்றல்.
மகன் - மகனே, தந்தை - தந்தையே —மிகுதல்.
நம்பி, தோழி, சாத்தன், நங்கை —இயல்பு.
மக்கள் - மக்காள், புலவர் - புலவீர். —அயல்திரிபு.

இவற்றுள் பலஉருபுகளை ஓரிடத்தே ஏற்றுவருதலும் உண்டு.

(உ - ம்.) அப்பன் - அப்பா—ஈறுகுன்றலும், அயல்திரிபும்.
அண்ணன் - அண்ணாவோ - ஈறுகுன்றலும், அயல்திரிபும், மிகுதலும்.
சிறுபான்மை அளபெடையும் விளியுருபாம்.

(உ - ம்.) வேள் - வேஎள், அம்மான் - அம்மாஅன். (சகூ)

[விளிக்கப்படு பெயர்கள்.]

௩0௪. இ உ ஊவோடு ஐ ஒ ன ள ர ல
யவ்வீற் றுயர்திணை ஓ ர அல் லிவற்றொடு
ணஃகா னவீ றாகும் பொதுப்பெயர்
ஞ ந ஒழி யனைத்தீற் றஃறிணை விளிப்பன.

(இ - ள்.) இ உ ஊவோடு ஐ ஒ ன ள ர ல ய-இ உ ஊ ஐ ஒ என்கிற உயிர்களும் ன ள ர ல ய என்கிற மெய்களும் ஆகிய பத்துஎழுத்துக்களையும், ஈறு - இறுதியிலுடைய, உயர்திணை (பெயர்)-உயர்திணைப்பெயர்களும்; ஓ ர அல் - (அவற்றுள்) ஓகாரஉயிரும் ரகரமெய்யும் ஒழிந்த, இவற்றொடு - மற்றை எட்டு எழுத்துக்களுடனே, ணஃகான ஆ - ணகரமெய்யும் ஆகாரவுயிரும் ஆகிய பத்துஎழுத்துக்களும்,ஈறுஆகும்-இறுதியாகிய, பொதுப்பெயர்-இருதிணைப் பொதுப்பெயர்களும்; ஞ ந ஒழி - (மொழிக்கு ஈறாகு மென்ற இருபத்துநான்கு எழுத்துக்களுள்) ஞகர நகரங்களும் (அளபெடையில் மாத்திரமே ஈறாகும் எகரமும் நொ கௌ வௌ என வினைக்கு ஈறாதலேயன்றிப் பெயர்க்கு ஈறாகாத ஒகாரமும் ஔகாரமும்) ஒழிந்த, அனைத்து-பத்தொன்பது எழுத்துக்களையும், ஈறு-இறுதியிலுடைய, அஃறிணை (பெயர்)-அஃறிணைப்பெயர்களுமே,—விளிப்பன - அழைக்கப்படுவனவாம்; (எ-று.)—அனைத்து - எல்லாம், விளிப்பன - விளியேற்பன.

ஈனையீற்றுப்பெயர்கள் விளியேலா என்றவாறு.

இதனுள் 'பெயர்' என்பதனை இருதிணையிடத்தும் வருவித்துக்கொள்க.

(உ - ம்.) உயர்திணைப்பெயர்கள்:—நம்பி, வேந்து, ஆடூ, விடலை, கோ, ஐயன், வேள், வணிகர், தோன்றல், சேய் என முறையே இங்குக்காட்டிய பத்து ஈறுகளும் காண்க.

பொதுப்பெயர்கள்:—சாத்தி, கூற்று, அழிதூ [பேடு], தந்தை, சாத்தன், கடவுள், தூங்கல் [பிள்ளை], தாய், ஆண், பிதா என முறையே இங்குக்காட்டிய பத்துஈறுகளும் காண்க.

அஃறிணைப்பெயர்கள்:—மக, புரூ, கிளி, தீ, முசு, பூ, சே, நாரை, சோ, மண், கராம், அலவன், நாய், தகர், குயில், தெவ், பூழ், புள், வண்டு என முறையே இங்குக்காட்டிய பத்தொன்பது ஈறுகளும் காண்க.

இங்கு "ஞ ந வொழி யனைத்தீற் றஃறிணை" என நகரவீற்று அஃறிணைப்பெயர் விலக்கப்பட்டிருத்தலால்,முதுகு என்னும் பொருளை யுணர்த்துகிற வென் வெரின் என்ற சொற்களைச் சிறப்பு னகரவீறுகவே கொண்டனரென்றும், வெந் வெரிந் எனப் பொதுநகரவீறுகக் கொண்டிலரென்றும் அறியலாம். (௬௭)

[மூவகைப்பெயர்க்கும் பொதுவிளியுருபு.]

௩0௫. இம்முப் பெயர்க்கண் இயல்பும் ஏயும்
இகர நீட்சியும் உருபாம் மன்னே.

(இ - ள்.) இ முப் பெயர்க்கண்-(விளிக்கப்படுமென்ற) இந்த மூவகைப் பெயர்களிடத்தும்,—இயல்பும் - இயல்பாதலும், ஏயும் - ஏகாரம்மிகுதலும், இகரம் நீட்சியும் - இகரம் ஈகாரமாய்த் திரிதலும், மன் - பெரும்பாலும், உருபு ஆம் - விளியுருபுகளாம்; (எ - று.)

(உ - ம்.) முனி கூறாய், மாந்தர் கூறீர்—இயல்பு. கோவே கூறாய், மக்களே கூறீர்—ஏ மிகல். நம்பீ கூறாய், தோழீ கூறாய்—இகர நீட்சி.	உயர்திணை.
அன்னை கூறாய், ஆண் கூறாய்—இயல்பு. பிதாவே கூறாய், பெண்ணே கூறாய்—ஏ மிகல். சாத்தீ கூறாய், கொற்றீ கூறாய்—இகரநீட்சி.	பொதுப்பெயர்.
மான் கொடியாய், கிளி நல்லாய்—இயல்பு. மயிலே ஆடாய், புறாவே வாராய்—ஏ மிகல். மந்தீ கொடியை, தும்பீ வா—இகரநீட்சி	அஃறிணை.

காட்டாதொழிந்த பெயர்களும் இவ்வாறே வரும். 'பெரும்பாலும்' என்றதனல் - இவ்வுருபுகள் சிலவற்றிற்குப் பொருந்தாமை கொள்க.(௬௮)

[ஐகாரவீற்றுப்பெயர்களின் விளியுருபு.]

௩0௬. ஐயிறு பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும்
உருபாம் அல்லவற் றுயு மாகும்.

(இ - ள்.) ஐ இறு பொதுப்பெயர்க்கு - ஐகார ஈற்றுப் பொதுப்பெயர்க்கு, ஆயும் ஆவும் - (இயல்பும் ஏகாரம்மிகுதலு மன்றி ஐகாரம்) ஆய் ஆகவும் ஆ ஆகவும் திரிதலும், உருபு ஆம் உருபுகளாம்; அல்லவற்று-அல்லாத உயர்திணை அஃறிணைப் பெயர்கட்கு, ஆயும் - (இயல்பும் ஏகாரம் மிகுதலுமல்லாமல் ஐகாரம்) ஆய் ஆகத் திரிதலும், ஆகும் - விளியுருபாம்; (எ - று.)

(உ - ம்.)	அன்னை—அன்னாய் அம்மை—அம்மா	பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும் வந்தன.
	விடலை—விடலாய் நாரை—நாராய்	உயர்திணைப்பெயர்க்கும், அஃறிணைப் பெயர்க்கும் 'ஆய்' வந்தது.

இனி, உரையிற்கோடலால் - 'அன்னே,' 'அம்மே' எனப் பொதுப்பெயரின் ஈற்று ஐகாரம் ஏகாரமாகத் திரிதலும் கொள்க. (௫௬)

[னகரவீற்று உயர்திணைப்பெயர்களின் விளியுருபு.]

௩௦எ. ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்
அளபீ றழிவயல் நீட்சி யதனோடு
ஈறு போத லவற்றோ டோவுறல்
ஈறழிந் தோவுறல் இறுதியவ் வாதல்
அதனோ டயல்திரிந் தேயுற வீறழிந்து
அயலே யாதலும் விளியுரு பாகும்.

(இ - ள்.) (பொதுவிதியால் இயல்பும் ஏகாரம் மிகுதலு மன்றி),—னஈறு உயர்திணை பெயர்க்கண்-னகர மெய்யீற்று உயர்திணைப்பெயர்களுள், ஒருசார் - சில, அளபு - அளபெடுத்தலும், ஈறு அழிவு - இறுதி கெடுதலும், அயல் நீட்சி - ஈற்றயல் நீளுதலும், அதனோடு ஈறுபோதல் - ஈற்றயல் நீண்டு ஈறுகெடுதலும், அவற்றோடு ஓ உறல் - ஈற்றயல் நீண்டு ஈறுகெட்டு ஓகாரம் மிகுதலும், ஈறு அழிந்து ஓ உறல்-ஈறுகெட்டு ஓகாரம் மிகுதலும், இறுதி ய ஆதல்-ஈற்று னகரமெய் யகரமெய்யாகத் திரிதலும், அதனோடு அயல் திரிந்து ஏ உறல் - ஈற்று னகரமெய் யகரமெய்யாகத் திரிந்து அதன் அயலில் நின்ற ஆகாரம் ஓகாரமாகி ஏகாரம் மிகுதலும், ஈறு அழிந்து அயல் ஏ ஆதலும் - ஈறுகெட்டு அதன் அயலில் நின்ற அகரம் ஏகாரமாதலும், விளி உருபு ஆகும் - விளியுருபுகளாம்; (எ - று.)

'ஒருசார்' என்பதை அடுத்த சூத்திரங்கட்கும் கூட்டுக.

(உதாரணம்.)

சேக்கிழான்	- சேக்கிழாஅன்	—அளபெடுத்தது.
புலவன்	- புலவ	—ஈறு அழிந்தது.
நம்பன்	- நம்பான்	—ஈற்றயல் நீண்டது.
மன்னன்	- மன்னா	—ஈற்றயல் நீண்டு ஈறுகெட்டது.
ஐயன்	- ஐயாவோ	—ஈற்றயல்நீண்டு ஈறுகெட்டுஓகாரம்மிக்கது.

ஐயன் - ஐயவோ —ஈறு அழிந்து ஓகாரம்மிக்கது.
கோயிலான் - கோயிலாய் —இறுதி யவ்வாயிற்று.
வாயிலான் - வாயிலோயே } இறுதி யவ்வாய் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாய் ஏகாரம் மிக்கது.
ஐயன் —ஐயே —ஈறு அழிந்து அயல் அகரம் ஏகாரமாயிற்று. (௫௦)

[ளகரவீற்று உயர்திணைப்பெயர்களின் விளியுருபு.]

௩௦௮. ளஃகா னுயர்பெயர்க் களபீ றழிவயல்
நீட்சி யிறுதி யவ்வொற் றாதல்
அயலி லகரமே யாதலும் விளித்தனு.

(இ - ள்.) (பொதுவிதியன்றி),—ளஃகான் உயர் பெயர்க்கு-ளகரமெய் யீற்று உயர்திணைப்பெயர்களுள் சிலவற்றிற்கு, அளபு - அளபெடுத்தலும், ஈறு அழிவு - ஈறுகெடுதலும், அயல் நீட்சி-ஈற்றயல் நீளுதலும், இறுதி ய ஒற்று ஆதல் - ஈற்று ளகரமெய் யகரமாதலும், அயலில் அகரம் ஏ ஆதலும்-ஈற்றயல் அகரம் ஏகாரமாதலும், விளி தனு - விளியுருபுகளாம்; (எ - று.)

(உ - ம்) வேள் - வேஎள் —அளபெடுத்தது.
எல்லாள் - எல்லா —ஈறு அழிந்தது.
மக்கள் - மக்காள் —ஈற்றயல் நீண்டது.
குழையாள் - குழையாய்—ளவ்வொற்று யவ்வொற்றாயிற்று.
அடிகள் - அடிகேள் —ஈற்றயலில் அகரம் ஏகாரமாயிற்று. ()

[ரகரவீற்று உயர்திணைப்பெயர்களின் விளியுருபு.]

௩௦௯. ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ லீற்றயல்
அகரம் இ ஈ யாத லாண்டை ஆ
ஈயாத லதனோ டேயுற லீற்றுஏ
மிக்கயல் யாக்கெட் டதனயல் நீடல்
ஈற்றி னீருற லிவையுமீண் டுருபே.

(இ - ள்.) (பொதுவிதியன்றி),—ர ஈறு உயர் பெயர்க்கு - ரகரமெய் யீற்று உயர்திணைப்பெயர்களுள் சிலவற்றிற்கு,—அளபு எழல் - அளபெடுத்தலும், ஈறு அயல் அகரம் இ ஈ ஆதல் - ஈற்றயல் அகரமானது இகரமாதலும் ஈகாரமாதலும், ஆண்டை ஆ ஈ ஆதல் - ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாதலும், அதனோடு ஏ உறல்-சில ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஏகாரம் ஏற்றலும், ஈறு ஏ மிக்கு அயல் யா கெட்டு அதன் அயல் நீடல் ஈற்றில் ஏகாரம் மிகுந்து அயலில் 'யா' கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாதலும், ஈற்றின் ஈர் உறல் - இறுதியில் 'ஈர்' அடைதலும், இவையும் - ஆகிய இவையும்,— ஈண்டு - இவ்விடத்து, உருபு - விளியுருபுகளாம்; (எ - று.)

(உ - ம்.) சிறார் - சிறாஅர்—அளபெடுத்தது.
தெவ்வர்- தெவ்விர் —ஈற்றயல் அகரம் இகரமாயிற்று.

வணிகர் - வணிகீர்—ஈற்றயல் அகரம் ஈகாரமாயிற்று.

சான்றோர் - சான்றீர்—ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாயிற்று.

கணியார்-கணியீரே—ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஏகாரம்மிக்கது

நம்பியார்-நம்பீரே—{ ஈற்றில் ஏகாரம்மிக்கு அயல்'யா' கெட்டு அதன் அயல் இகரம் ஈகாரமாயிற்று.

எமர் - எமரீர் —'ஈர்' ஏற்றது.

'ஈண்டு' என்ற மிகையால் - கடலாரே, கடலீரே, எனவும்; சாத்தியாரே, சாத்தியீரே எனவும் அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களைச் சிறப்பித்து ரவ்வீற்று உயர்திணைப்பெயர்போலக் கூறினும் இவ்வுருபேற்றல் கொள்க. (௫௨)

[லகர யகர வீற்று உயர்திணைப்பெயர்களின் விளியுருபு.]

௫௰. லகாரவீற் றுயர்பெயர்க் களபயல் நீட்சியும்
யகார வீற்றிற் களபுமா முருபே.

(இ - ள்.) (பொதுவிதியன்றி),—லகார ஈறு உயர் பெயர்க்கு - லகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்களுள் சிலவற்றிற்கு, அளபு - அளபெடுத்தலும், அயல் நீட்சியும் - ஈற்றயல் நீளுதலும்; யகார ஈற்றிற்கு - யகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்களுள் சிலவற்றிற்கு, அளபும்-அளபெடுத்தலும்,— உருபு ஆம் - விளியுருபுகளாம்; (எ - று.)

(உ - ம்.) மால் - மாஅல் —அளபு.
மடவரல் - மடவரால்—அயல்நீட்சி. | சேய் - சேஎய்—அளபு.

'யகார வீற்றிற்கு' எனப் பொதுப்படக் கூறியதனால் - சிலவிடத்தில் தாய் - தாஅய், பேய் - பேஎய் என யகரவீற்றுப் பொதுப்பெயர்க்கும் அஃறிணைப்பெயர்க்கும் அளபெடுத்தல் விளியுருபாதலும் கொள்க. (௫௩)

[னகரவீற்று அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களின் விளியுருபு.]

௫௰௧. னவ்வீற் றுயர்திணை யல்லிரு பெயர்க்கண்
இறுதி யழிவத னேடயல் நீட்சி.

(இ - ள்.) (பொதுவிதியன்றி):—ன ஈறு உயர்திணை அல் இரு பெயர்க்கண்-னகரமெய்யீற்று உயர்திணைப்பெயரல்லாத அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களுள் சிலவற்றிற்கு, இறுதி அழிவு - ஈறுகெடுதலும், அதனேடு அயல் நீட்சி-ஈறுகெட்டு அதன் அயல் நீளுதலும்,(விளியுருபுகளாம்); (எ-று.)

அலவன் - { அலவ—இறுதி அழிவு
அலவா—இறுதி அழிந்து அயல்நீட்சி. } அஃறிணைப்பெயர்.

சாத்தன் - { சாத்த—இறுதி அழிவு
சாத்தா—இறுதி அழிந்து அயல்நீட்சி. } பொதுப்பெயர்.

[லகர ளகர வீற்று அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களின் விளியுருபு]

௫௰௨. ளவீற் றஃறிணைப் பெயர் பொதுப் பெயர்க்கண்
ஈற்றயல் நீட்சியு முருபா கும்மே.

(இ - ள்.) லள ஈறு அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்க்கண் - லகர ளகர மெய்யீற்று அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களுள் சிலவற்றிற்கு, —ஈறு அயல் நீட்சியும் - (பொதுவிதியன்றி) ஈற்றயலெழுத்து நீளுதலும், உருபு ஆகும் - விளியுருபாம்; (எ - று.)

(உ - ம்.) முயல் - முயால்; கிளிகள்-கிளிகாள்—அஃறிணைப்பெயர்.
தூங்கல் - தூங்கால், பிள்ளைகள் - பிள்ளைகாள்—பொதுப்பெயர்.

[விளியுருபுகளுக்குப் புறனடை.]

‡ ௩௧௩. அண்மைபி னியல்புமீ றழிவும் சேய்மையின்
அளபும் புலம்பின் ஓவு மாகும்.

(இ - ள்.) (முன்சொல்லப்பட்ட விளியுருபுகளுள்),—அண்மையின்- சமீபத்திலிருக்கிற பொருளை அழைக்குமிடத்து, இயல்பும் - இயல்பாதலும், ஈறு அழிவும் - ஈறு கெடுதலும்; சேய்மையின் - தூரத்திலிருக்கிற பொருளை அழைக்குமிடத்து, அளபும் - அளபெடுத்தலும்: புலம்பின்-அழுகையில் ஒரு பொருளை அழைக்குமிடத்து, ஓவும் - ஓகாரம்மிகுதலும், ஆகும் - வரும்; (எ - று.)

எனவே, மற்றைவிளியுருபுகள் இம்மூன்றிடங்களிலும் கலந்துவரும்.

(உ - ம்.) க. அண்மைவிளி—தம்பி, அரச.
உ. சேய்மைவிளி—மா அல், சிரு அர்.
௩. புலம்பல்விளி—அப்பாவோ. (௫௬)

[விளியடையாத பெயர்கள்.]

‡ ௩௧௪. நுவ்வொடு வினாச்சுட் டுற்ற ன ள ர
வை துத் தாம் தான் இன்னன விளியா.

(இ - ள்.) நுவ்வொடு - நு என்பதையும், வினா - (எ ஏ யா என்னும் மூன்று முதல்) வினாவையும், சுட்டு - (அ இ உ என்னும் மூன்று) சுட்டையும், உற்ற - (முதலாகப்) பொருந்திய, ன ள ர - ன ள ர என்னும் மூன்று மெய்யீற்று உயர் திணை முப்பாற்பெயர்களும்; வை து - வைது என்கிற இரண்டீற்று அஃறிணையிருபாற் பெயர்களும், தாம் தான்-இந்த இரண்டு பொதுப்பெயர்களும், இன்னன-இவைபோல்வன பிறவும், விளியா-விளிக்கப்படுவனவல்ல; (எ - று.)-ன, ள, ர - அன், அள், அர் விகுதிகள்.

முன் 'படர்க்கையோரைத் தன்முகமாகத் தானழைப்பது' என்றதனால், தன்மை முன்னிலைப்பெயர்கள் விளியுருபையேலாமை அமைந்து கிடந்தது. ஆகவே, படர்க்கைப்பெயர்களுள் விளியுருபையேலாதவற்றை இங்குக்கூறினார்.

வை து என்கிற இரண்டும் நுவ்வொடு பொருந்தா வென்பார், அதனை 'ஒடு' கொடுத்துப் பிரித்துக் கூறினார். *

* சூத்திரத்தில் 'நுவ்வொடு' என்றமாத்திரமே கூறினராயினும் அதனோடு விகுதிகளைச் சேர்க்கும்போது மகரமெய்யை இடையிடுதல் வேண்டும்; "தநநு எம்முதல் மகரமிடையிட்டு, ன ள ர வா மீற்றன சுற்றப் பெயரே" என்பது காண்க.

(வரலாறு.) யான், யாம், நாம், நீ, நீர், எல்லீர் எனவும்; நுமன், நுமள்; நுமர் எனவும்; எவன், எவள், எவர், எது, எவை: யாவன், யாவள், யாவர், யாது, யாவை: ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை எனவும்; அவன், அவள், அவர், அது, அவை: இவன், இவள், இவர், இது, இவை: உவன், உவள், உவர், உது, உவை எனவும்; தாம் எனவும், தான் எனவும் வருகின்ற இப் பெயர்கள் விளியை ஏலாமை காண்க.

'இன்னன' என்றதனால் - மற்றையான், எல்லாம் முதலியன கொள்க. ஓசையின்பம் நோக்கி, 'வை து' என மாற்றிக் கூறினர். (௩௭)

[முதற்பெயர் சினைப்பெயர்களின் வேற்றுமைக் குப் புறனடை.]

‡ ௩௧௫. முதலை ஐ உறின் சினையைக் கண் ணுறும்
அதுமுதற் காயின் சினைக்கு ஐயாகும்.

(இ - ள்.) முதலை - முதற்பெயரை, 'ஐ' உறின் - இரண்டனுருபு பொருந்தினல், சினையை - சினைப்பெயரை, 'கண்' - ஏழனுருபு, உறும் - பொருந்தும்; 'அது' - ஆறனுருபு, முதற்கு - முதற்பெயர்க்கு, ஆயின் - வந்தால், சினைக்கு - சினைப்பெயர்க்கு, 'ஐ' - இரண்டனுருபு, ஆகும் - வரும்; (எ - று.)

இன்னும் இரட்டுறமொழிதல் என்கிற உத்தியால் - அது என்பதைச் சுட்டாக்கி, அது - அக்கண்ணுருபு எனவும் பொருளுரைத்துக்கொள்க.

(உ - ம்.) க. யானையைக் காலின்கண் வெட்டினன். உ. யானையது காலை வெட்டினன். } ௩. யானையின் கண் காலை வெட்டினன்.

எனவே, யானையைக் காலை வெட்டினன் என முதல் சினை இரண்டினும் ஐயுருபு வருதல் அவ்வளவாகச் சிறப்பன்று என்க. * (௩௮)

[முதல் சினைகளுக்கும், பிண்டப்பொருளுக்கும் புறனடை.]

௩௧௬. முதலிவை சினையிவை யெனவே றுளவில
உரைப்போர் குறிப்பின அற்றே பிண்டமும்.

(இ - ள்.) முதல் இவை சினை இவை என - முதற்பொருள்கள் இவை சினைப்பொருள்கள் இவை என்கிறதற்கு, வேறு உள இல - (இரண்டாக) வேறு உள்ளன இலவாம்; உரைப்போர் - (ஒருபொருளையே இரண்டாகப் பகுத்துச்) சொல்வோரது, குறிப்பின - குறிப்பினளவேயாம்; பிண்டமும் - பிண்டப்பொருளும், அற்றே - அத்தன்மையதேயாம்; (எ - று.)

'அற்றே பிண்டமும்' என்றதனால், முன்சூத்திரப்பொருளையும் இச்சூத்திரப்பொருளையும் பிண்டப்பொருளுக்கும் ஏற்கச்செய்தார்.

யானையைக் குறித்தபோது, யானை உள்ளதாக அதனுடைய கை கால் கொம்பு முதலியவை வேறு இல்லையாம்; அவ்வவயவத்தைக்குறித்தபோது, அவை உள்ளனவாக யானை வேறு இல்லையாம். ஒருபொருளின் பிரிவுகளாத

---

* 'முதலை 'ஐ உறும்' என்னது, 'ஐ உறின்' என்றதனன், யானையைக் கோட்டைக்குறைத்தான் எனவும் ஆமெனக்கொள்க'என்பது,பழையஉரை.

லால், இவ்வாறு கூறப்பட்டன. பிண்டப்பொருள்—நெல்லைப் பொலியின் கண் வாரினன், நெல்லினது பொலியை வாரினன் என வரும். பிண்டித்த பொருளாகிய பொலி [குவியல்]யும், பிண்டிக்கப்பட்ட பொருளாகிய நெல்லும் வேறாகாமையால், அவ்விரண்டிலும் ஐயுருபு வருவது, சிறப்பன்றென்க.

இனி, இச்சூத்திரத்திற்கு - உலகத்தில் முதற்பொருள்கள் இவை சினைப் பொருள்கள் இவை எனத் தனித்தனி வெவ்வேறுபொருள்கள் இல்லையாம்; சொல்லுவான்குறிப்பால், முதற்பொருளே சினைப்பொருளாயும், சினைப்பொருளே முதற்பொருளாயும் மாறுபட்டு வரும்: கை என்பது-மனிதனை நோக்கச் சினையாயும், விரலைநோக்க முதலாயும்; விரல் என்பது-கையைநோக்கச் சினையாயும், நகத்தை நோக்க முதலாயும் வருதல் காண்க. பிண்டப்பொரு [தொகுதிப்பொரு]ளும், அவ்வாறே, தொகுத்த பொருளிவை தொகுக்கப்பட்ட பொருளிவை என வெவ்வேறு பொருள்களுடையனவல்ல: சொல்லுவான் குறிப்பால், பிண்டித்தபொருளே பிண்டிக்கப்பட்டபொருளாயும், பிண்டிக்கப்பட்டபொருளே பிண்டித்தபொருளாயும் வரும்; படைகள் என்பது-தொகுதியை நோக்கப் பிண்டிக்கப்பட்ட பொருளாயும், வேல் வாள் வில் முதலிய உட்பகுதிகளை நோக்கப் பிண்டப்பொருளாயும் வருதல் காண்க என இவ்வாறு பொருள்கொள்ளுதலும் ஒன்று. (௲க)

[உருபுமயக்கம்.]

‡ ௬கஎ. யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

(இ - ள்.) யாதன் உருபின் கூறிற்று ஆயினும் - எந்த வேற்றுமையுருபால் (எந்த வேற்றுமைப்பொருள்) சொல்லப்பட்டதாயினும்,—(உருபு சென்ற வழியே பொருள்சேராமல்), பொருள் செல் மருங்கின் - அப்பொருள்சென்ற வழியே, வேற்றுமை-அவ்வுருபு, சாரும்-சேரும்: (எ - று.)

எனவே, வேற்றுமையுருபு பொருளுக்கு இயையாமல் மாறிவந்தால், அவ்வுருபைப் பொருளுக்கு இயைந்த உருபாகத் திரித்துக்கொள்க. உருபுமயக்கமெனினும்,வேற்றுமைமயக்கமெனினும் ஒக்கும். *மயக்கம்-மாறுதல்.

(உ - ம்.) "இந்நகர்க்கே வாழ்கின்றேம்,"—இங்கு நகர் - எற்றுக் கொள்ளுதற்பொருளாகாமல் இடப்பொருளாய் நிற்கையால், நகர்க்கண் வாழ்கின்றேம் எனக் குவ்வுருபைக் கண்ணுருபாகத் திரித்துக்கொள்க. "ணனவல்லினம்வர" என்ற சூத்திரத்தில், 'வேற்றுமைக்கு' 'அல்வழிக்கு' என்பன- வேற்றுமையில், அல்வழியில் எனப் பொருள்படுதலும் இது.

"காலத்தினற் செய்த நன்றி"—இங்குக் காலம்-கருவி கருத்தாப்பொருளாகாமல் இடப்பொருளாய் நிற்கையால், காலத்தின்கண் செய்த நன்றி என ஆனுருபைக் கண்ணுருபாகத் திரித்துக்கொள்க. "குறில்வழிலள" என்ற சூத்திரத்தில், 'அல்வழியான்' என்றது-அல்வழியில் எனப் பொருள்படுதலும் இது.

---

* பொருள்மயக்கம், ௬எ௬ - ஆஞ் சூத்திரத்திற் கூறப்படும்.

"அழுக்கா றுடையானைச் செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்"— இங்குத் தவ்வை-செயப்படுபொருளாகாமல் ஏற்றுக்கொள்ளுதற் பொருளாய் நிற்கையால், தவ்வைக்கு காட்டிவிடும் என ஐ உருபைக்குவ்வுருபாகத் திரித்துக்கொள்க. (பொருமையுள்ளவனை இலக்குமி மூதேவிக்குக் காட்டி விடுவள் என்பது இதன் பொருள்.)

"புலியொடு ஒத்தான்"—இதில் புலி-உடனிகழ்ச்சிப் பொருளாகாமல் செயப்படுபொருளாய் நிற்கையால், புலியை என ஒடுஉருபை ஐஉருபாகத் திரித்துக்கொள்க.

மற்றும் இப்படி வருவனவற்றை ஆராய்ந்து அறிந்துகொள்க. இச்சூத்திரம், *தொல்காப்பியத்தினின்று எடுத்துக்கொள்ளப்பட்டது(௬0)

[சில வேற்றுமையுருபுகள் செய்யுளில் திரிந்துவருதல்.]

௩கஅ. ஐயான்குச் செய்யுட் கவ்வு மாகும்
ஆகா அஃறிணைக்கு ஆனல் லாதன.

(இ - ள்.) ஐ ஆன் கு-ஐயும் ஆனும் குவ்வும் ஆகிய மூன்று உருபுகளும், செய்யுட்கு-செய்யுளில், அவ்வும் ஆகும்-(சில இடத்தில்) அகரமாகவரவும் பெறும்; அஃறிணைக்கு - அஃறிணையில், ஆன் அல்லாதன ஆகா - ஆன் உருபு மாத்திரம் அகரமாக வருமே யன்றி அல்லாத ஐயும் குவ்வும் (அகரமாக) வராவாம்; (எ - று.)—எனவே, உயர்திணையில் மூன்றுஉருபும் திரியுமென்றதாயிற்று. செய்யுட்கு, அஃறிணைக்கு என்பன - உருபுமயக்கம்.

'ஐ ஆன் கு அவ்வாகும்' எனப் பொதுப்படக்கூறினாராயினும்,ஐஉருபு அகரமாகத் திரியவும், ஆன் உருபும் கு உருபும்-அகரத்தைச் சார்ந்து நிற்கவும் பெறு மெனப் பொருள் கொள்க.

(உ - ம்.)'காவலோனக் களிறஞ்சும்மே'	—காவலோனை	உயர்திணை.
'புலவரான'	—புலவரான்	
'கடிநிலையின்றே ஆசிரியற்க'	—ஆசிரியற்கு	
'புள்ளினான'	—புள்ளினான்—அஃறிணை.	

'உம்மை எதிர்மறை யாகலின், அவ்வாறுதிரிதல் சிறுபான்மையெனக் கொள்க' என்பது, பழையஉரை. (௬க)

[எட்டுவேற்றுமைசுட்டும் முடிக்குஞ்சொல்.]

‡ ௩ககூ. எல்லை இன்னும் அதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளும் நான்கே ழிருமையும்
புல்லும் பெரும்பாலு மென்மனார் புலவர்.

(இ - ள்.) எல்லை இன்னும் - எல்லைப்பொருளில் வருகிற ஐந்தாம்வேற்றுமையும், அதுவும்-ஆறும் வேற்றுமையும், பெயர் - பெயரை, கொளும் -

* தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - வேற்றுமைமயங்கியல் - உ௩.

கொண்டு முடியும்; அல்ல - மற்றை எழுவாய் முதலிய வேற்றுமைகளெல்லாம், வினை - வினையை, கொளும் - கொண்டு முடியும்; நான்கு ஏழ்-நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும், இருமையும் - இரண்டையும் [வினையையும் வினையோடு பொருந்தும் பெயரையும்], புல்லும் - கொண்டு முடியும், பெரும்பாலும்—:என்மனார் - என்று சொல்வர், புலவர் - அறிவுள்ளோர்; (எ - று.)

அல்ல - முதல், இரண்டு, மூன்று, நான்கு, (எல்லைப்பொருளொழிந்த பொருளில் வரும்) ஐந்து, ஏழு, எட்டு ஆகிய வேற்றுமைகள்.

'பெரும்பாலும்' என்றதனால் - வினைகொளற்கு உரியன சிறுபான்மை தொழிற்பெயரையும் வினையாலணையும் பெயரையும் கொண்டு முடிதலும் எழுவாய்வேற்றுமை வினைகொண்டு முடிதலேயன்றிச் சிறுபான்மை பெயரையும் வினாவையும் கொண்டு முடிதலும் கொள்க.

(உ - ம்.) கருவூரின் கிழக்கு
சாத்தனது கை } எல்லைஇன்னும்,அதுவும்-பெயர்கொண்டன.

சாத்தன் வந்தான், சாத்தன் கரியன்.
குடத்தை வனைந்தான், குடத்தை யுடையவன்.
வாளால் வெட்டினான், வாளால் வலியவன்.
சாத்தனுக்குக் கொடுத்தான், சாத்தனுக்கு நல்லவன்.
நோயின் நீங்கினான், காக்கையின் கரிது.
அவையின்கண் இருந்தான், அவையின்கண் பெரியன்.
கொற்றா கொள், கொற்றா வலியை.
} மற்றவை-தெரிநிலையும் குறிப்புமாகிய வினைகளைக் கொண்டன.

மணியின்கண் ஒளி
பிணிக்கு மருந்து } நான்கும, ஏழும்-வினையையே யன்றிப் பெயரையும் கொண்டன.

இப்பெயர்கள் - இன் அது உருபுகள் கொண்டுமுடிந்த பெயர்கள் போலாகாமல் பிணிக்கு (க்கொடுக்கும்) மருந்து, மணியின்கண் (இருக்கும்)ஒளி என வினையைவேண்டி நிற்பதனால்,வினையோடுபொருந்தும் பெயர்களாயின.

சாத்தன் வருதல்
குடத்தை வனைந்தவன் } வினைகொள்வன - தொழிற்பெயரையும், வினையாலணையும் பெயரையும் கொண்டன.

சாத்தன் அவன்
சாத்தன் யாவன் } எழுவாய் வேற்றுமை - பெயரையும், வினாவையும் கொண்டது. (௬உ)

பெயரியல் முற்றிற்று.

உ. வினையியல்.

வினைச்சொல்லின் இலக்கணத்தைச் சொல்லும் இயல்.

வினைச்சொல்.

[க. தெரிநிலைவினை.]

‡ ௩௨௦. செய்பவன் கருவி நிலஞ் செயல் காலஞ்
செய்பொரு ளாறுந் தருவது வினையே.

(இ - ள்.) செய்பவன் - கருத்தாவும், கருவி - கருவியும், நிலம் - இடமும், செயல் - தொழிலும், காலம் - காலமும், செய்பொருள் - செயப்படுபொருளும் ஆகிய, ஆறும் - அறுவகைப் பொருளையும், தருவது - காட்டுவது,—வினை - தெரிநிலை வினைச்சொல்லாம்; (எ - று.)

'வினை' எனப் பொதுப்படக் கூறினாராயினும், வருஞ் சூத்திரத்தாற் குறிப்புவினை கூறுதலால், இது தெரிநிலைவினை யெனப் பெறப்பட்டது. தெரிநிலைவினை செயலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டும் வினை: அங்ஙனமன்றி அவற்றைக் குறிப்பாகக்காட்டுவது, குறிப்புவினை.

'செய்பவன்' என ஒருபாலிற் சொன்னாராயினும், "ஒருமொழி யொழி தன்னினங் கொளற் குரித்தே" என்பதனால், ஐம்பாலும் கொள்க.

(உ - ம்.) 'வனைந்தான்' என்றால், அதில் - குயவனாகிய கருத்தாவும், மண்ணாகிய முதற்காரணமும், தண்டம் சக்கரம் முதலிய துணைக்காரணங்களும், வனைந்த இடமும், வனைதல்தொழிலும், இறந்தகாலமும், குடம் முதலிய செயப்படுபொருளும் தோன்றுதல் காண்க.

இந்த ஆறையும் தருவது-செயப்படுபொருள் குன்றாத [உள்ள] வினை; செயப்படுபொருள் குன்றிய [இல்லாத] வினை, அச் செயப்படுபொருள் ஒழிந்த ஐந்தையுமே காட்டும்; (உ - ம்.) வந்தது.

முற்றுவினைகளில் பகுதியால் செயலும், விகுதியால் கருத்தாவும், இடைநிலை முதலியவற்றால் காலமும்; பெயரெச்ச வினையெச்சங்களில் இம்முறையே செயலும் காலமும் வெளிப்படையாகத் தோன்றுதலால், மற்றவை கருத்தாகத் தோன்றுமென்று கொள்க. (க)

[உ. குறிப்புவினை.]

‡ ௩௨க. பொருள்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.

(இ - ள்.) பொருள் முதல் ஆறினும் - பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறையும் அடியாகக்கொண்டு, தோற்றி-பிறந்து, முன் ஆறனுள் - முன்சூத்திரத்திற் சொல்லப்பட்ட(செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் என்ற) ஆறனுள், வினைமுதல் மாத்திரை - கருத்தா ஒன்றையே, விளக்கல் - காட்டுதல்,—வினைக்குறிப்பு-குறிப்புவினையின் இலக்கணமாம்; (எ - று.)

(உதாரணம்.)

குழையன் பொன்னன் —பொருள்.	காலன், கண்ணன்—சினை.
அகத்தினன், ஊரன் —இடம்.	கரியன், நல்லன் —குணம்.
ஆதிரையான், ஓணத்தான்—காலம்.	நடையன், சொல்லன்—தொழில்

இவற்றில், விகுதியால் செய்பவன் விளங்கிற்று. மற்றவை குறிப்பாக உண்டெனக் கொள்க. (உ)

[வினைச்சொற்களின் பகுப்பு.]

‡ ௩உஉ. அவைதாம்,

முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்.

(இ - ள்.) அவை தாம்-(முன் இரண்டு சூத்திரங்களாலும் தெரிநிலை குறிப்பு என்ற) அவ்வினைச்சொற்கள்,—முற்றும் - வினைமுற்றும், பெயர் வினை எச்சமும் - பெயரெச்சமும் வினையெச்சமும், ஆகி - என்று மூன்று வகையாகி, ஒன்றற்கு உரியவும் - (திணை பால் இடங்களுள்) ஒவ்வொன்றற்குச் சிறப்பாக வருவனவும், பொதுவும் - பலவற்றிற்குப்) பொதுவாக நிற்பனவும், ஆகும்---; (எ - று.)

இவற்றிற்கு உதாரணம், பின் வருஞ் சிறப்புச்சூத்திரங்களிற் காண்க. இனி, பிறவழிகளால் ஒன்றற்கு உரியவும் பொதுவுமாக நிற்பனவும் சில உண்டென்று கொள்க.

(உ-ம்.) தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவினை:—வெளுத்தான், தேற்றதவர். இவை - தான் வெளுத்தான், அறியாதவர் என்று பொருள் படும்போது, தன்வினை; ஒன்றை வெளுக்கச்செய்தான், அறிவியாதவர் என்று பொருள்படும்போது, பிறவினை. (இவையே, செயப்படுபொருள் குன்றியவினைக்கும் செயப்படுபொருள்குன்றாவினைக்கும் பொதுவினைக்கும் உதாரணமாம்.)

உடன்பாட்டுக்கும் எதிர்மறைக்கும் பொதுவினை:—சாவான், செய்யாய். இவை-இறப்பான், செய் என்று பொருள்படும்போது, உடன்பாட்டுவினை; இறவான், செய்யமாட்டாய் என்று பொருள்படும்போது, எதிர்மறைவினை. உடன்பாட்டுவினையெனினும், விதிவினையெனினும் ஒக்கும். எதிர்மறை வினையெனினும், மறைவினையெனினும் ஒக்கும்.

செய்வினைக்கும் செயப்பாட்டுவினைக்கும் பொதுவினை:—கொன்ற யானை, விழுங்கிய மீன். இவை - கொல்லுதலைச் செய்த, விழுங்குதலைச் செய்த எனப் பொருள்படும்போது, செய்வினை; கொல்லப்பட்ட, விழுங்கப்பட்ட எனப் பொருள்படும்போது, செயப்பாட்டுவினை.

இன்னும் பலவகையால் வரும் பொதுவினை:—

உண்டு---(க) தன்மை யொருமை வினைமுற்று [உண்டேன்], (உ)இறந்த காலவினையெச்சம் [புசித்து], (௩) குறிப்புவினைமுற்று [உளது.]

ஓதுவான்—(க) தொழிற்பெயர் [படித்தல்], (உ) எதிர்காலவினைமுற்று [படிப்பான்], (௩) எதிர்காலவினையெச்சம் [படிக்க.]

தழைப்ப—(க) பலர்பால் வினைமுற்று [தழைப்பர்], (உ) பலவின்பால் வினைமுற்று [தழைப்பன], (௩) செயவெனெச்சம் [தழைக்க.]

தேடிய—(க) இறந்தகாலவினைமுற்று [அவைதேடின], (உ) வியங்கோள் வினைமுற்று [தேடுக], (௩) இறந்தகாலப்பெயரெச்சம் [தேடின சாத்தன்], (௪) எதிர்காலவினையெச்சம் [தேடுதற்கு]. பிறவும் இவ்வாறே காண்க. (௩)

க. வினைமுற்று.

[வினைமுற்றின் இலக்கணம்.]

‡ ௩உ௩. பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரல தேற்பில முற்றே.

(இ - ள்.) பொது இயல்பு ஆறையும்-(பலவகை வினைகளுக்கும்) பொதுவாகிய (செய்பவன் முதலிய) ஆறையும், தோற்றி-தோன்றச்செய்து, பொருள்பெயர் முதல் - பொருள் முதலிய, அறு பெயர் அலது-ஆறுவகைப்பெயரல்லாத மற்றொன்றையும், எற்பில - எற்காதன,—முற்று - (தெரிநிலையும் குறிப்புமாகிய) வினைமுற்றுக்களாம்; (எ - று.)

எனவே, அவ்வினைமுற்றுக்கள் அந்த ஆறுபெயர்களையும் கொண்டுமுடியுஞ்சொல்லாகப்பெற்றுவேறொன்றையும்வேண்டாதுவருமென்றதாயிற்று.

எச்சவினைகள் போலக் குறைந்துநில்லாமல் முடிந்துநிற்றலால், 'முற்று' எனப்பட்டது.

(உ - ம்.) தெரிநிலை.	குறிப்பு.	அறுபெயர்.	
செய்தான் மகன்	பெரியன் மகன்	—மகன்	- பொருள்.
குளிர்ந்தது நிலம்	வலியது நிலம்	—நிலம்	- இடம்.
வந்தது கார்	கரியது கார்	—கார்	- காலம்.
குவிந்தது கை	சிறியது கை	—கை	- சினை.
வந்தது நன்மை	உள்ளது நன்மை	—நன்மை	- குணம்.
ஒழிந்தது பிறப்பு	கொடியது பிறப்பு	—பிறப்பு	- தொழில்.

மற்றைத் திணை பால் இடம் காலங்கள்தோறும் இவ்வாறே ஒட்டுக. (௪)

[தெரிநிலை வினைமுற்றின் பாகுபாடு.]

உ௩௪. * ஒருவன் முதலைந்தையும் படர்க்கை யிடத்தும்
ஒருமை பன்மையைத் தன்மைமுன் னிலையினும்
§ முக்கா லத்தினு முரண முறையே
மூவைந் திருமூன் றாறாய் முற்று
வினைப்பத மொன்றே மூவொன் பானும்.

* இத்தன்மை, பெயரியல் அ - ஆஞ்சூத்திரத்திலும் கூறப்பட்டது.
§ 'முக்காலத்தொடு' என்றும் பிரதிபேதம்.

(இ - ள்.) ஒருவன் முதல் ஐந்தையும் - ஆண்பால் முதலிய ஐந்துபால் வினைமுற்றுக்களையும், படர்க்கை இடத்தும்-படர்க்கையிடத்திலும், ஒருமை பன்மையை-ஒருமைபன்மை வினைமுற்றுக்களை, தன்மை முன்னிலையினும்-தன்மையிடத்திலும் முன்னிலையிடத்திலும் (வைத்து), முக்காலத்தினும் - மூன்று காலங்களாலும், முரண - பெருக்கிக்கணக்கிட, முறையே-(சொல்லப்பட்ட) முறைப்படி, மூ ஐந்து - (படர்க்கைவினைமுற்றுப்) பதினைந்தும், இரு மூன்று - (தன்மை வினைமுற்று) ஆறும், ஆறு-(முன்னிலை வினைமுற்று) ஆறும், ஆய் - ஆகி,—முற்றுவினை பதம் ஒன்றே - தெரிநிலை வினைமுற்றுச் சொல் ஒன்றுதானே, மூ ஒன்பான் ஆம் - இருபத்தேழாகும்; (எ - று.)

	இறந்தகாலம்.	நிகழ்காலம்.	எதிர்காலம்.	
ஆண்பால்	நடந்தான்	நடக்கின்றான்	நடப்பான்.	
பெண்பால்.	நடந்தாள்	நடக்கின்றாள்	நடப்பாள்	படர்க்கை-கரு.
பலர்பால்.	நடந்தார்	நடக்கின்றார்	நடப்பார்.	
ஒன்றன்பால்.	நடந்தது	நடக்கின்றது	நடப்பது.	
பலவின்பால்.	நடந்தன	நடக்கின்றன	நடப்பன.	
ஒருமை.	நடந்தேன்	நடக்கின்றேன்	நடப்பேன்.	தன்மை-சு
பன்மை.	நடந்தேம்	நடக்கின்றேம்	நடப்பேம்.	
ஒருமை:	நடந்தாய்	நடக்கின்றாய்	நடப்பாய்.	முன்னிலை சு
பன்மை.	நடந்தீர்	நடக்கின்றீர்	நடப்பீர்.	

ஆகத் தெரிநிலைவினைமுற்று இருபத்தேழாம் எனவே, குறிப்புவினைமுற்று, காலம் விளங்காததனால் ஒன்பதாம் என்றதாயிற்று. (ரு)

[க. ஆண்பாற் படர்க்கை வினைமுற்று.]

‡ ௲உரு. அன் ஆ னிறுமொழி ஆண்பாற் படர்க்கை.

(இ - ள்.) அன் ஆன் இறு மொழி-அன் ஆன் என்கிற இரண்டுவிகுதியையும் இறுதியிலுடைய மொழிகள்,—ஆண்பால் படர்க்கை - உயர்திணையாண்பாற் படர்க்கைத் தெரிநிலைமுற்றும் குறிப்புமுற்றும் ஆம்; (எ - று.)

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
அன்.	நடந்தனன்	நடக்கின்றனன்	நடப்பன்	குழையன்	அவன்.
ஆன்.	நடந்தான்	நடக்கின்றான்	நடப்பான்	குழையான்	(சு)

[உ. பெண்பாற் படர்க்கை வினைமுற்று.]

‡ ௲உசு. அள் ஆ ளிறுமொழி பெண்பாற் படர்க்கை.

(இ - ள்.) அள் ஆள் இறு மொழி - அள் ஆள் என்கிற இரண்டு விகுதியையும் இறுதியிலுடைய மொழிகள்,—பெண்பால் படர்க்கை-உயர்திணைப் பெண்பாற் படர்க்கைத் தெரிநிலை முற்றும் குறிப்புமுற்றும் ஆம்; (எ - று.)

(உ - ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
அள்.	நடந்தனள்	நடக்கின்றனள்	நடப்பள்	குழையள்	அவள்
ஆள்.	நடந்தாள்	நடக்கின்றாள்	நடப்பாள்	குழையாள்	(எ)

[௩. பலர்பாற் படர்க்கை வினைமுற்று.]

‡ ௩உ௭. அர் ஆர் பவ்வூ ரகர மா ரீற்ற
பல்லோர் படர்க்கை மார் வினையொடு முடிமே.

(இ - ள்.) அர் ஆர் ப ஊர் அகரம் மார் ஈற்ற-அர் ஆர் ப மார் என்கிற நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள்,—பல்லோர் படர்க்கை-உயர்திணைப் பலர்பாற் படர்க்கைத் தெரிநிலைமுற்றும் குறிப்புமுற்றும் ஆம்;—மார்-(இவற்றுள்ளே) 'மார்' ஈற்று வினைமுற்று,—வினையொடு முடிமே-(பொதுவிதியாற் பெயருடன் முடிவதேயன்றி) வினையுடனும் முடியும்.

மார்,ப விகுதிகள்-தாமே காலங்காட்டுதலால், குறிப்புவினைக்குவாரா.

(உ - ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
அர்.	நடந்தனர்	நடக்கின்றனர்	நடப்பர்	குழையர்.	அவர்.
ஆர்.	நடந்தார்	நடக்கின்றார்	நடப்பார்	குழையார்	
ப.	* நடப்ப	———	* நடப்ப	———	
மார்.	———	———	கொண்மார்	———	

'கொண்மார் [கொள்வார்]வந்தார்' என மார்-வினையொடு முடிந்தது.

இனி, 'மார் வினையொடு முடிமே' என்பதற்கு - 'மார்' என்ற விகுதி வினைப்பகுதிக்கு மாத்திரமே வருமென்றும் மற்றைப் பெயர் இடை உரிப் பகுதிகளுக்கு வராதென்றும் உரைப்பாரும் உளர்; அது பொருத்தமுடையதே: 'மார்'என்ற விகுதி கொண்மார் செய்ம்மார் என வினைப்பகுதியோடு மாத்திரம் வருதலும், மற்றைவிகுதிகள் குழையர் குழையார் என்ப சால்ப எனப்பெயர் இடைஉரிப்பகுதிகளோடும் வருதல்போல மார்விகுதி வாராமையுங் காண்க. குருமார் தேவிமார் என மார்விகுதி பெயரோடு கூடிவருமிடத்து வினைமுற்றுவிகுதி யன்றிப் பெயர்விகுதியாதல் உணர்க. (அ)

[௪. ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்று.]

‡ ௩உ௮. து று டு க் குற்றிய லுகர வீற்ற
ஒன்றன் படர்க்கை டுக் குறிப்பி னாகும்.

(இ - ள்.) து று டு குற்றியலுகரம் ஈற்ற - து று டு என்கிற குற்றிய லுகரவீற்று மூன்று விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள்,—ஒன்றன் படர்க்கை-அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைத் தெரிநிலைமுற்றும் குறிப்பு முற்றும் ஆம்; டு - (இவற்றுள்)டு என்கிற விகுதி,—குறிப்பின் ஆகும் - குறிப்புவினைமுற்றில் வரும் [தெரிநிலை வினைமுற்றிற்கு வாராது]; (எ - று.)

'று' விகுதி - தெரிநிலையில் நிகழ்கால எதிர்காலங்களுக்கு வாராது.

---

* நடந்தார், நடப்பார் என்று பொருள்; நடப்பன என்ற பொருளில்-அ என்ற பலவின்பால் விகுதி பகரவிடைநிலை பெற்றதாம்.

(உ-ம்.) இறப்பு. நிகழ்வு. எதிர்வு. குறிப்பு.

	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
து	நடந்தது	நடக்கின்றது	நடப்பது	குழையது	அது.
று	ஆயிற்று	———	———	குழையிற்று	
டு	———	———	———	பொருட்டு	

(பொருட்டு - பொருளை யுடையது.) (௯)

[௫. பலவின்பாற் படர்க்கை வினைமுற்று.]

‡ ௩௨௯. அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை
ஆவே எதிர்மறைக் கண்ண தாகும்.

(இ-ள்.) அ ஆ ஈற்ற-அ ஆ என்கிற விகுதிகளை இறுதியிலுடைய மொழிகள்,—பலவின் படர்க்கை - அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைத் தெரிநிலை முற்றும் குறிப்புமுற்றும் ஆம்; ஆ - (இவற்றுள்) ஆ என்கிற விகுதி,—எதிர்மறைக்கண்ணது ஏ ஆகும்-எதிர்மறையில்மாத்திரமேவரும் [உடன்பாட்டில் வராது]; (எ-று.)—ஏகாரம், பிரித்துக் கூட்டப்பட்டது.

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு	எதிர்வு.	குறிப்பு.
அ	நடந்தன	நடக்கின்றன	நடப்பன	குழையன—அவை
ஆ	நடவா---(ஆகாரவிகுதி, எதிர்மறையில் வந்தது.)			(௧0)

[இருதிணைப் பொதுவினை.]

‡ ௩௩0. தன்மை முன்னிலை வியங்கோள் வேறுஇலை
உண்டு ஈரெச்சம் இருதிணைப் பொதுவினை.

(இ-ள்.) தன்மை - தன்மை வினைமுற்றுக்களும், முன்னிலை - முன்னிலை வினைமுற்றுக்களும், வியங்கோள் - வியங்கோள் வினைமுற்றுக்களும், வேறு இலை உண்டு - இம்மூன்று குறிப்புவினைமுற்றுக்களும், ஈர் எச்சம் - பெயரெச்சங்களும் வினையெச்சங்களும்,---இருதிணைபொது வினை-இரண்டு திணைகளுக்கும் பொதுவாகிய வினைகளாம்; (எ-று.)---இலை-இல்லை விகாரம்.

செய்யுமென்னும் முற்று, பெயரெச்சவாய்பாடு கொண்டிருத்தலால், அதுவும் இருதிணைப்பொதுவினையாதலை இங்கேயேஅமைத்துக்கொள்க. ()

[தன்மை யொருமை வினைமுற்று.]

‡ ௩௩௧. கு டு து று என்னுங் குன்றிய லுகரமோடு
அல் அன் என் ஏன் ஆகு மீற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை.

(இ-ள்.) கு டு து று என்னும் குன்றியலுகரமோடு - கு டு து று என்கிற நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய குற்றியலுகரமாகிய மொழிகளும், அல் அன் என் ஏன் ஆகும் ஈற்ற - அல் அன் என் ஏன் என்கிற நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகளும்,---இரு திணை முக் கூறு ஒருமை தன்மை-உயர்திணை ஆண்பால் பெண்பால் அஃறிணை ஒன்றன்பால் என்னும் மூன்றுக்கும் பொதுவாகிய தன்மை யொருமைத் தெரிநிலைமுற்றும் குறிப்புமுற்றும் ஆம்; (எ-று.)

கு டு து று என்கிற நான்கும் - தாமே - காலங்காட்டுதலால், குறிப்பு வினைக்கு வாரா. அல் விகுதி, இடைநிலையோடு சேர்ந்து தெரிநிலையில் எதிர் காலத்திலேமாத்திரம் வரும்.

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
கு.	—	—	உண்கு	—	யான்.
டு.	உண்டு	—	—	—	யான்.
து.	வந்து	—	வருது	—	யான்.
று.	சென்று	—	சேறு	---	யான்.
அல்.	—	—	செய்வல்	---	யான்.
அன்.	உண்டனன்	உண்கின்றனன்	உண்பன்	குழையன்	யான்.
என்.	உண்டனென்	உண்கின்றனென்	உண்பென்	குழையென்	யான்.
ஏன்.	உண்டேன்	உண்கின்றேன்	உண்பேன்	குழையேன்	யான்.

இவை ஒருபுருஷனுக்கும், ஒருபெண்ணுக்கும், ஒருவிலங்குக்கும்தனித் தனி உரியதாதல்காண்க. முன்னிலையொருமைமுற்றும் இத்தன்மையதே.

[தன்மைப் பன்மை வினைமுற்று.]

‡ ௱௲உ. அம் ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம் ஏம் ஓம் இவை படர்க்கை யாரையும்
உம் ஊர் கட த ற இருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை.

(இ-ள்.) அம் ஆம் என்பன - அம் ஆம் என்கிற இரண்டு விகுதிகளை யும் இறுதியிலுடைய மொழிகள், முன்னிலையாரையும் - முன்னிலை யிடத் தாரையும்; எம் ஏம் ஓம் இவை - எம் ஏம் ஓம் என்கிற மூன்று விகுதிகளையும் இறுதியிலுடையமொழிகள், படர்க்கையாரையும் - படர்க்கையிடத்தாரையும் உம் ஊர் க ட த ற - கும் டும் தும் றும் என்கிற நான்குவிகுதிகளையும் இறு தியிலுடையமொழிகள், இருபாலாரையும் - (முன்னிலை படர்க்கை என்னும்) இரண்டிடத்தார்களையும், தன்னொடு படுக்கும் - தன்னுடன் கூட்டுகின்ற, தன்மை பன்மை - தன்மைப்பன்மை வினைமுற்றும் குறிப்புமுற்றும் ஆம்; (எ-று.)---தன்மைப்பன்மை என்பது - தன்னொடு சார்ந்தாரையும் கூட்டி யல்லது தனித்து இயலாமையால், இவ்வாறு கூறினர். இவற்றை உளப் பாட்டுத்தன்மைப்பன்மை யென்பர்.

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
அம்.	உண்டனம்	உண்கின்றனம்	உண்பம்	குழையம்	யாம் [யானும், நீயும்.]
ஆம்.	உண்டாம்	உண்கின்றாம்	உண்பாம்	குழையாம்	யாம் [யானும், நீயும்.]
எம்.	உண்டனெம்	உண்கின்றனெம்	உண்பெம்	குழையெம்	யாம் [யானும், அவனும்.]
ஏம்.	உண்டேம்	உண்கின்றேம்	உண்பேம்	குழையேம்	யாம் [யானும், அவனும்.]
ஓம்.	உண்டோம்	உண்கின்றோம்	உண்போம்	குழையோம்	யாம் [யானும், அவனும்.]
கும்.	———	———	உண்கும்	——	யாம் [யானும், நீயும், அவனும்.]
டும்.	உண்டும்	———	———	——	யாம் [யானும், நீயும், அவனும்.]
தும்.	வந்தும்	———	வருதும்	-----	யாம் [யானும், நீயும், அவனும்.]
றும்.	சென்றும்	———	சேறும்	——	யாம் [யானும், நீயும், அவனும்.]

இவை சிறுபான்மை இம்முறையின்றி மாறிவருதலும் உண்டு. இயல்பு பற்றிய தனித்தன்மைப் பன்மையும், உயர்வுத்தன்மைப்பன்மையும் இவ் விகுதிவரையறையை வேண்டாமல் எற்றபடி பெற்றுவருமென்று அறிக.()

[வினையுடனும் முடியும் தன்மைவினைமுற்றுக்கள்.]

ௐௐௐ. செய்கெ னொருமையும் செய்குமென் பன்மையும்
வினையொடு முடியினும் விளம்பிய முற்றே.

(இ - ள்.) செய்குஎன் ஒருமையும் - செய்கு என்கிறவாய்பாட்டுத் தன் மையொருமை முற்றும், செய்கும் என் பன்மையும்-செய்கும் என்கிற வாய் பாட்டுத் தன்மைப்பன்மை முற்றும், வினையொடு முடியினும் - (பெயருடன் முடிதலே யல்லாமல் வினைகொண்டும் முடியும்:) முடிந்தாலும், விளம்பிய - முன்சொல்லப்பட்ட, முற்றே-முற்றுக்களேயாம்[வினையெச்சமெனப்படா.]

(உ - ம்.) உண்கு வந்தேன்; உண்கும் வந்தோம். (கச)

[உளப்பாட்டு முன்னிலைப்பன்மை வினைமுற்று.]

‡ ௐௐச. முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை.

(இ - ள்.) (தன்மையோடு கூடிய முன்னிலை படர்க்கைகள் தன்மை யானாற்போல),—முன்னிலை - முன்னிலையிடத்துச் சொல்லோடு, கூடிய - சேர்ந்த, படர்க்கையும் - படர்க்கையிடத்துச்சொல்லும்,—முன்னிலை - முன்னிலையாம்; (எ - று.)

(உ - ம்.) உண்டனிர், உண்மின், குழையீர்—நீர் [நீயும் அவனும்.]

இச்சூத்திரம், முன்னிலைப்பன்மைவினைமுற்றைக் கூறுமிடத்துக் கூறா மல் ஒன்றினமுடிந்தல்தன்னினமுடித்தல் என்கிற உத்தியால் இங்கே கூறப் பட்டது. (கரு)

[முன்னிலை யொருமை வினைமுற்று.]

‡ ௐௐரு. ஐ ஆய் இகர வீற்ற மூன்றும்
ஏவலின் வரூஉ மெல்லா வீற்றவும்
முப்பா லொருமை முன்னிலை மொழியே.

(இ - ள்.) ஐ ஆய் இகரம் ஈற்ற மூன்றும் - ஐ ஆய் இ என்கிற மூன்று விகுதிகளை இறுதியிலுடைய மொழிகளும், ஏவலின் வரூஉம் எல்லா ஈற்ற வும்-(விகுதிபெறுமலும் பெற்றும்) ஏவலில்வருகிற இருபத்துமூன்று ஈற்று மொழிகளும்,—முப் பால்-(ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால் என்னும்) மூன்றுக்கும் பொதுவாகிய, ஒருமை முன்னிலை மொழி-முன்னிலை யொரு மைத் தெரிநிலைமுற்றும் குறிப்புமுற்றும் ஆம்; (எ - று.)

இகரவிகுதி, எதிர்காலத்தை இடைநிலையில்லாமல் தானே காட்டும்.

எவல்வினைமுற்று, தெரிநிலையில் மாத்திரமே யல்லாமல் குறிப்பில் இல்லாமையால், உம்மை கொடுத்துப் பிரித்தார்.

ஏல்லா ஈறு - "ந ட வா முடி சீ" என்னுஞ் சூத்திரத்திற் கூறியன,

(உ-ம்.)	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
ஐ.	உண்டனை	உண்கின்றனை	உண்பை	குழையை	நீ.
ஆய்.	உண்டாய்	உண்கின்றாய்	உண்பாய்	குழையாய்	
இ.	உண்டி	உண்ணாநின்றி	சேறி	வில்லி	

ஆய், இ, அல், எல், ஆல் என்கிற விகுதிகளை இறுதியிலுடைய வினைச் சொற்களும், 'ஆய்' விகுதி இல்லாமல் பகுதிமாத்திரமாய் நிற்கிற வினைச் சொற்களும், ஏவலொருமை முற்றுக்களாம்; இவ்விகுதிகளுள், அல், எல், ஆல் என்பவை - எதிர்மறையில் மாத்திரமே வரும்.

(உ - ம்.) உண்ணாய் உண்ணுதி உண் } நீ
உண்ணல் உண்ணேல் மரூல்

எதிர்மறை ஏவலொருமை முற்றுக்கள் - எதிர்மறை ஆகார இடைநிலையின்முன் தகரஎழுத்துப்பேற்றுடன் ஏ இ என்கிற விகுதிகளுள் ஒன்றைப்பெற்றும் வரும்; (உ-ம்.) உண்ணாதே, உண்ணாதி. (கசு)

[சில ஏவல்வினைமுற்றுக்குச் சிறப்புவிதி.]

ருருசு. முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

(இ - ள்.) முன்னிலை முன்னர் - முன்னிலை யேவலொருமை முற்றிற்குமுன், ஈயும் ஏயும் - ஈகாரமும் ஏகாரமும், அந் நிலை மரபின் மெய் ஊர்ந்து-அவ்விடத்து நிற்றற்கு உரிய தன்மையையுடைய (யாதாயினும் ஒரு) மெய்யின்மேல் ஏறி, வரும்—; (எ - று.)

(உ - ம்.) செல் - சென்றீ எனவும், நில் - நின்மே எனவும் வரும்.

இங்கே செல், நில் என்பன-மயக்கவிதி யில்லாததனால், ஈறுதிரிந்தன. இந்த ஈகார ஏகாரங்கள், விகுதிகளல்ல; 'ஆய்' விகுதியில்லாத ஏவலில் வருகின்ற முன்னிலையசைகளாம். றகரமெய்யும், மகரமெய்யும்எழுத்துப்பேறு *

[முன்னிலைப் பன்மை வினைமுற்று.]

‡ ருருஎ. இர் ஈர் ஈற்ற இரண்டு மிருதிணைப்
பன்மை முன்னிலை மின் அவற் றேவல்.

(இ - ள்.) இர் ஈர் ஈற்ற இரண்டும் - இர் ஈர் என்கிற இரண்டுவிகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள்,—இரு திணை - இருதிணைகளுக்கும் பொதுவாகிய, பன்மை முன்னிலை-முன்னிலைப்பன்மைத் தெரிநிலைமுற்றும் குறிப்புமுற்றும் ஆம்; மின் - 'மின்' விகுதியை இறுதியிலுடைய மொழிகள்,—அவற்று ஏவல் - முன்னிலை ஏவற் பன்மை முற்றாம்; (எ - று.)

ஏவற்பன்மைக்கு ஈர் உம் விகுதிகளும், புதியனபுகுதலால் வரும்.

(உ - ம்.]	இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.	குறிப்பு.	
இர்.	உண்டனிர்	உண்கின்றனிர்	உண்பிர்	குழையிர்	நீர்
ஈர்.	உண்டீர்	உண்கின்றீர்	உண்பீர்	குழையீர்	

உண்மின், உண்ணீர், உண்ணும்என ஏவற்பன்மைவினைமுற்றுக்கள்வந்தன.

---

* 'இது புணர்ச்சிவிதியன்மையின், ஈண்டே வைத்தாரென்க' என்பது, பழைய உரை.

[வியங்கோள் வினைமுற்று.]

‡ ௩௩௮. கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலு மிடம்பா லெங்கு மென்ப.

(இ-ள்.) க ய ஒடு - க ய என்கிற இரண்டு உயிர்மெய்களுடன், ர ஒற்று-ரகரமெய்யையும், ஈற்ற-இறுதியிலுடையமொழிகள்,—வியங்கோள்-வியங்கோள் வினைமுற்றுக்களாம்; (அவை), இடம் பால் எங்கும் - மூன்றிடங்களிலும் ஐம்பால்களிலும், இயலும் - செல்லும், என்ப - என்று சொல்வர், (புலவர்); (எ-று.)—இது, எதிர்காலத்துக்கு மாத்திரம் வரும்.

'ரவ்வொற்று' என்றதனால், முன்னைய இரண்டும் உயிர்மெய்யென்பது பெறப்படும். 'கயவொடு' என உயிர்மெய்களை 'ஒடு' என்னும் இடைச்சொற்கொடுத்துப்பிரித்ததனால், ரகரமெய் அவைபோலத்தனித்துநில்லாமல்யகரத்தோடுகூடி நிற்கப்பெறுமெனக்கொள்க. க ய இரண்டனுள் யகரத்தைப்பின்னே வைத்தது, அது தனித்துவராமல் இகரச்சாரியை பெற்றே வருதலால்.

(உ-ம்.) வாழ்க, வாழிய, வாழியர்
உண்க, உண்ணிய, நிலீயர் } யான், யாம்; நீ, நீர்; அவன், அவள், அவர், அது, அவை.

உரையிற்கோடலால் - ஓங்க, எழுந்தருள என 'அ' என்பதும்; ஒரால் [ஒருவுக] என 'ஆல்' என்பதும்; 'மாசில ளுதல்' [ஆகுக] என 'தல்' என்பதும்; "அஞ்சாமை [அஞ்சற்க] அஞ்சுவது" என 'மை' என்பதும்; "மக்கட்பதடியெனல்" [என்க] என உடன்பாட்டிலும், "மகனெனல்" [என்னற்க] என எதிர்மறையிலும் 'அல்' என்பதும் வியங்கோள் வினைமுற்று விகுதிகளாய் வருமென்க. 'காட்டி - இகரவீற்றுவியங்கோள்' என்பதும், 'வேண்டும் என்பது - உம் ஈற்றால் வந்ததோர் ஏவல்கண்ணிய வியங்கோள்' என்பதும் நச்சினார்க்கினியர் கொள்கை.

வியங்கோள் - வெல்க, சிறக்க என வாழ்த்துதற்பொருளிலும்; வருக, உண்க என விதித்தற் பொருளிலும்; அருளுக, ஏக என வேண்டிக்கொள்ளுதற் பொருளிலும்; கெடுக, அழிக என வைதற்பொருளிலும் வருமென்க. மற்றைப் பொருள்களையும் இவற்றில் அடக்கிக்கொள்க.

வியங்கோள் - காரணப்பெயர்; ஏவுதலைக் கொள்வதென்று பொருள்; வியம் - ஏவல்: இப்பொருளதாதலை 'வியவர்' என்பதிலும் காண்க. *

ஏவலுக்கும் வியங்கோளுக்கும் வேறுபாடு:—(க) ஏவல் கட்டளைப் பொருளில் மாத்திரமே வரும்; வியங்கோள் - வாழ்த்துதல் முதலிய பல பொருள்களில் வரும். (உ) ஏவல் - முன்னிலையில் மாத்திரமே வரும்; வியங்கோள் - ஐம்பால் மூவிடங்களிலும் வரும். (௩) ஏவலில் ஒருமை பன்மை என்ற பகுப்புஉண்டு; வியங்கோளில் அப்பகுப்பு இல்லை.

---

* 'வியவர் - ஏவல்செய்வார்; 'வியங்கோள்' போல' என்றதும், 'வியம்-ஏவலாதலின், போக்கின்மேற்று' என்றதும் - சீவகசிந்தாமணி - நச்சினார்க்கினியருரை.

வியங்கோளும் ஒருவகை ஏவற்பொருள்பற்றியதே யாயினும், முன்னிலையில் மாத்திரமே வருவதை ஏவலென்றும், ஐம்பால் மூவிடங்களிலும் வருவதை வியங்கோ ளென்றும் பிரித்துக் கூறுவது, தொன்றுதொட்டு வரும் முறைமை யென்க. 'வியங்கோள் மூவிடத்து வருதலின், ஏவலுள் அடங்காதென்க' என்பது, பழையஉரை. (௧௯)

[ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவாகிய குறிப்பு வினைமுற்று.]

‡ ௩௩௯. வேறில்லை யுண்டைம் பால்மூ விடத்தன.

(இ - ள்.) வேறுஇல்லை உண்டு-இம்மூன்று குறிப்புவினைமுற்றுக்களும், ஐம் பால் மூ இடத்தன - ஐம்பால்களுக்கும் மூன்றிடங்களுக்கும் உரியன.

(உ - ம்.) வேறு, இல்லை, உண்டு. } யான், யாம்; நீ, நீர்; அவன், அவள், அவர், அது, அவை. (௨௦)

௨. பெயரெச்சம்.

[பெயரெச்சத்தின் இலக்கணம்.]

‡ ௩௪௦. செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

(இ - ள்.) செய்த செய்கின்ற செய்யும் என் பாட்டில் - செய்த செய்கின்ற செய்யும் என்று சொல்லப்படுகின்ற மூன்றுவகை வாய்பாட்டுச்சொற்களிலே, காலமும் - (முறையே இறப்பு நிகழ்வு எதிர்வு என்கிற மூன்று) காலங்களும், செயலும் - தொழிலும், தோன்றி - தோன்றப்பெற்று,—பாலொடு - பாலும், செய்வது ஆதி அறு பொருள் பெயரும் - செய்பவன்கருவி நிலம் செயல் காலம் செயப்படுபொருள்என்கிற அறுவகைப் பொருட்பெயர்களும், எஞ்சநிற்பது - ஒழிய நிற்பன,—பெயரெச்சம் - தெரிநிலைப்பெயரெச்சமும் குறிப்புப்பெயரெச்சமும் ஆம்; (எ - று.)—நிற்பது - சாதியொருமை.

பெயரெச்சம் - பெயரைக் கொண்டு முடிவதாகிய குறைந்து நிற்குஞ் சொல். எஞ்சுவது, எச்சம்.

பால் எஞ்சி நிற்றல் - கொண்டுமுடியுஞ்சொல்லின் பாலன்றித் தனக்கென்று ஒருபா லில்லாமை. அறுபொருட்பெயர் எஞ்சி நிற்றல் - ஆறுவகைப் பொருட்பெயருள் ஒன்று கொண்டுமுடியுஞ் சொல்லாக நிற்கப் பெறுதல். மேல் வினையெச்சசூத்திரத்தில், 'பால் வினை யொழிய நிற்பது' என்பதற்கும் இவ்வாறு கொள்க.

எற்புழிக்கோடலால்-இச்சூத்திரத்தில் 'தோன்றி' என்பதுவரையிலும் தெரிநிலைக்கும், மற்றையது தெரிநிலை குறிப்பு இரண்டுக்கும் கொள்க.

(உ-ம்.) இறப்பு. உண்ட
நிகழ்வு. உண்கிற
எதிர்வு. உண்ணும் } பொன்னன்—செய்பவன்.
கலம் —கருவி.
வீடு —நிலம். } ஊண்---செயல்;
பகல்-காலம்;
சோறு-செய்பொருள்

குறிப்பு - உள்ள, பெரிய, புதிய, இலைய, முகத்த—வேல்.

தெரிநிலைப்பெயரெச்சம் காலமும் செயலும் தோன்றநிற்றலும், இருவகைப் பெயரெச்சமும் பாலும் கொண்டுமுடியும்பெயரும் குறையநிற்றலும்காண்க.

உண்ணாத, செய்யாத-எதிர்மறைத்தெரிநிலைப் பெயரெச்சம். இல்லாத, அல்லாத - எதிர்மறைக் குறிப்புப்பெயரெச்சம். (உண்ணாத, செய்யாத என்பவை காலங்காட்டாதனவாயினும், அவற்றின்உடன்பாடாகிய உண்ட செய்தமுதலியவை காலங்காட்டுதலால் இவையும் தெரிநிலையாம்.)

எதிர்மறைப் பெயரெச்சம், உண்ணா செய்யா இல்லா அல்லா என்று ஈறுகெட்டும் நிற்கும்.

உண்ணாத செய்யாத என்பவற்றில், உண் செய் என்ற பகுதிகள் உடன்பாட்டுக்கு உரியவை யாதலால், ஆ - எதிர்மறையிடைநிலை; இல்லாத, அல்லாத என்றவற்றில் இல் அல் என்ற பண்படிப்பகுதிகளே எதிர்மறைகாட்டுதலால், ஆ - சாரியை: இது, எதிர்மறை வினையெச்சத்துக்கும் பொருந்தும். இல்லாத, அல்லாத என்றவற்றிலும் ஆ - எதிர்மறை யெனக் கொண்டால், இரண்டு எதிர்மறை ஒருடன்பாட்டை உணர்த்தவேண்டுமாதலின், அங்ஙனங்கொள்ள இடமில்லாமை காண்க.

பெயரெச்சம் - சங்குசுட்ட சுண்ணம்பு, உண்ட இளைப்பு எனக் காரணப்பொருளிலும்; நோய்தீர்ந்த மருந்து, நின்னைக்காணும் அவா எனக் காரியப்பொருளிலும் வரு மென்று அறிக. (சுட்ட - சுட்டதனு லாகிய. உண்ட - உண்டதனு லாகிய. தீர்ந்த - தீர்தற்குக் காரணமான. காணும் - காணவேண்டுமென்ற என்று பொருள்.) (உக)

[செய்யுமென்னும் வாய்பாட்டுச் சொல்லுக்குச் சிறப்புவிதி.]

‡ ௩௪௪. செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளு ளும்முந் தாகலும் முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே.

(இ-ள்.) செய்யும் என் எச்சம் - செய்யும் என்னும் வாய்பாட்டுப்பெயரெச்சத்தினுடைய, ஈறு - இறுதியிலுள்ள, உயிர்மெய் - உயிர்மெய்யெழுத்து, சேறலும் - கெடுதலும்; செய்யுள் - செய்யுளிடத்து, உம் - 'உம்' விகுதி, உந்து ஆகலும் - உந்து எனத் திரிதலும்: முற்றேல் - (அது) செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றாயின், உயிரும் - (இறுதியில் உள்ள) உயிராயினும், உயிர்மெய்யும் - உயிர்மெய்யாயினும், ஏகலும் - கெடுதலும், உள - உள்ளன; (எ - று.)

'செய்யுளுள் உம் உந்தாம்' எனவே, மற்றை விதிகள் வழக்கிலும் செய்யுளிலும் எற்றபடி வருமெனக் கொள்க.

ஆகும்பொருள் - ஆம்பொருள்	தாவும்மரை-தாமரை	எச்சத்து உயிர்
போதும்போது - போம்போது	வாவும்புரவி-வாம்புரவி	மெய்கெட்டது.

பாயும்	—"பாயுந்து"	செய்யுளில் எச்சத்து உம்
கூப்பெயர்க்கும்	—"கூப்பெயுர்க்குந்து"	உந்து ஆயிற்று.

கலுழும்	—"கலுழ்மே"	செய்யுளில் முற்றில் உயிர் கெட்டது.
போலும்	—"மீகானும் போன்ம்"	
மொழியும்	—"அவனொடுமொழிமே"	செய்யுளில் முற்றில் உயிர்மெய் கெட்டது.
முடியும்	—"வினையொடு முடிமே"	
குணமாகும்	—குணமாம்	வழக்கில் முற்றில் உயிர்மெய் கெட்டது.
பொழுதுபோகும்	—பொழுதுபோம்	

'செய்யும் என் படர்க்கை முற்று' என்றாயினும், 'செய்யும் என் ஏவல் முற்று' என்றாயினும் கூறாமல் பொதுப்பட 'முற்றேல்" என்று கூறியதனால், கேளுமோ - "வருகுவம் கேண்மோ", உரையுமோ - 'முன்னியதுரைமோ'' என ஏவல்முற்றில் உயிரும் உயிர்மெய்யும்கெட்டுவருதலும்கொள்க.*

ரு. வினையெச்சம்.

[வினையெச்சத்தின் இலக்கணம்.]

‡ ருசஉ. தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே.

(இ - ள்.) தொழிலும்-செயலும், காலமும்—, தோன்றி - விளங்கி,— பால் - பாலும், வினை-(கொண்டுமுடியும்) வினையும், ஒழிய நிற்பது-குறைய நிற்பன, வினையெச்சம்-தெரிநிலைவினையெச்சமும்குறிப்புவினையெச்சமுமாம்

வினையெச்சம் - வினையைக் கொண்டுமுடிவதாகிய குறைந்துநிற்கும் சொல்.

'வினை' எனப் பொதுப்படக் கூறியதனால்-உடன்பாடும் எதிர்மறையும் பற்றிவருகிற தெரிநிலையும் குறிப்பு மாகிய வினைமுற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும், வினையாலணையும்பெயரும், தொழிற்பெயரும் ஆகிய பல வகை வினைச்சொற்களையும் கொண்டுமுடியுஞ் சொல்லாகப் பெற்றுவரும்.

ஏற்புழிக்கோடலால்-தொழிலும் காலமும்தோன்றுதல் - தெரிநிலைக்கும், பால் வினை ஒழிய நிற்றல் - தெரிநிலை குறிப்பு இரண்டுக்கும் கொள்க.
(உ - ம்.) செய்துபோ - தெரிநிலை. இன்றிக் காண் - குறிப்பு.

இங்கே, தெரிநிலைவினையெச்சம் தொழிலும் காலமும் தோன்ற நிற்றலும், இருவகை வினையெச்சமும் பால் வினை ஒழிய நிற்றலும் காண்க.(உரு)

[தெரிநிலைவினையெச்ச வாய்பாடுகள்.]

‡ ருசரு. செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச் செயின் செய்திய செய்தியர்
வான் பான் பாக்கின வினையெச்சம் பிற
ஐந்தொன் றாறும் முக்காலமும் முறைதரும்.

(இ - ள்.) செய்து......செய்யியர் - செய்து என்றது முதல் செய்யியர் என்பது வரையிலுள்ள ஒன்பது வாய்பாடுகளால் வருவனவும், வான் பான்

---

* 'உம்மையான், இவை இவ்வாறுதல் ஒருதலையல்ல வெனக் கொள்க' என்பது, பழையஉரை.

பாக்கு - இம்மூன்று விகுதிகளைப் பெற்றுவருவனவும், இன பிற - இவை போல்வன பிறவும், வினையெச்சம் - தெரிநிலை வினையெச்சங்களாம்; (இப் பன்னிரண்டினுள்), ஐந்து-(முதலிலுள்ள) ஐந்தும், ஒன்று - (நடுவிலுள்ள) ஒன்றும், ஆறு - (இறுதியிலுள்ள) ஆறும்,—முறை - முறையே, முக்கால மும் - இறந்தகால நிகழ்கால எதிர்காலங்களை, தரும் - காட்டும்; (எ - று.)

இவற்றுள், செய்து என்பது - இடைநிலையினாலும், மற்றவை - விகுதி யினாலும் காலங்காட்டுவன வென்று அறிக.

(உ - ம்.) இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.
க. நடந்து வந்தான்.	க. நடக்க வல்லன்.	க. வரின் கொள்ளும்.
உ. உண்குபு போனான்.		உ. ஆடிய தந்தான்.
௩. பெய்யாக் கொடுக்கும்.		௩. உண்ணியர் வருவான்.
௪. காணூ மகிழ்ந்தான்.		௪. கோல்வான்சென்றது.
௫. உண்டெனப் போனான்.		௫. தின்பான் புகுந்தது.
		௬. செய்பாக்கு வந்தான்.

(உண்குபு - உண்டு. பெய்யா - பெய்து. காணூ - கண்டு. உண்டென- உண்டதனால். வரின் - வந்தால். ஆடிய - ஆடுதற்கு. உண்ணியர் - உண்ணு தற்கு. கொல்வான் - கொல்லுதற்கு. தின்பான்-தின்னுதற்கு. செய்பாக்கு- செய்தற்கு.) 'செய்யூஉ' என அளபெடையோடுகூடிய பாடமும் உண்டு.

வான், பான், பாக்கு என்பன - அந்தந்த விகுதிகளையுடைய சொற் களைஉணர்த்திநின்றன. வான், பான் என்பவற்றில், ஆன் - வினையெச்ச விகுதி, வ், ப் - எதிர்கால இடைநிலை என்பது, ஒருசாரார் கொள்கை.

இன - இன்ன என்பதன் தொகுத்தல்.

'இன்ன' என்றதனால் - இறந்தகாலத்திற்கு இ ய் உம் என்பனவும், எதிர் காலத்திற்கு ஆல் கால் கு கடை வழி இடத்து என்பனவும், எதிர்மறைக்கு மல் மை மே என்பனவும், குறிப்புவினையெச்சத்துக்கு அ றி ஆல் முதலி யனவும், பிறவும் விகுதிகளாக வருமெனக் கொள்க. அவையெல்லாம் பத வியலில் காட்டப்பட்டன.

இடையில் ஆகாரம் பெற்ற உண்ணாமல் இல்லாமல் முதலிய வினை யெச்சங்கள் ஈறுகெட்டு உண்ணா இல்லா என்று நிற்றலும் உண்டு.

உரையிற்கோடலால் - நிகழ்காலத்திற்குக் காட்டிய செயவெனெச்சம் காரணப்பொருளதாம்பொழுது இறந்தகாலத்திலும், உடனிகழ்ச்சிப்பொ ருளதாம்பொழுது தனக்கு உரிய நிகழ்காலத்திலும், காரியப்பொருளதாம் பொழுது எதிர்காலத்திலும் வருமெனக் கொள்க. அதனால், இது - சிறு பான்மை 'முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சம்' எனவும் படும்.

(உ - ம்.) மழை பெய்ய நெல் விளைந்தது—இறந்தகாலம்.
சூரியன் உதிக்கச் சாத்தன் வந்தான்—நிகழ்காலம்.
நெல் விளைய மழை பெய்தது—எதிர்காலம்.

இவற்றுள் பெய்ய என்பது-(பெய்தலால் எனப் பொருள்பட்டு) விளைதலுக்குக் காரணமாகியும், உதிக்க என்பது - உதிக்கையில் எனப் பொருள்பட்டு) வருதலோடு உடன்நிகழ்கிறதாகியும், விளைய என்பது - (விளையும்படி எனப் பொருள்பட்டுப்) பெய்வதன் காரியமாகியும் நிற்றல் காண்க.

இன்னும், இவ்வுத்தியால்,வான்முதலிய மூன்றும்-யான்வருவானேன், அவன் நடப்பானேன், படுபாக்கறிந்து என(முறையே) வருதல், நடத்தல், படுதல்எனப்பொருள்பட்டுத்தொழிற்பெயர்விகுதிகளாகவருதலும்கொள்க

வினையெச்சம்,சிறுபான்மைதொழிற்பெயர்ப்பொருளிலும்வரும்:(உ-ம்.) வரக் கண்டேன்; (இது. வருதலைக் கண்டேனென்று பொருள்படும்.) (உச)

[வினையெச்சங்களின் முடிபுவேறுபாடு]

† ங.சச. அவற்றுள்,
முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்
வினைமுதல் கொள்ளும் பிறவு மேற்கும் பிற.

(இ - ள்.) அவற்றுள்-(முன்சூத்திரத்திற்சொல்லிய பன்னிரண்டு வாய்பாட்டு) வினையெச்சங்களுள், முதலில் - முதலிலுள்ள, நான்கும் - (செய்து செய்பு செய்யா செய்யூ என்ற) நான்கும், ஈற்றில் - இறுதியிலுள்ள, மூன்றும்- (வான் பான் பாக்கு என்கிற விகுதிகளையுடைய) மூன்றும், வினைமுதல் - தன்கருத்தாவின் வினையை, கொள்ளும் - கொண்டுமுடியும்: பிற - நடுவிலுள்ள செய்தென செய செயின் செய்யிய செய்யியர் என்ற) ஐந்தும், பிறவும் - (தன்கருத்தாவின் வினையை மாத்திரமேயன்றிப்) பிறகருத்தாவின் வினையையும், ஏற்கும் - கொண்டு முடியும்; (எ - று.)

(உ-ம்.)	க. உ.	இராமன் நடந்து வந்தான்	முதலில் நான்கும், ஈற்றில் மூன்றும் - தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடிந்தன.
	உ. பு.	பொன்னன் உண்குபு போனான்	
	ங. ஆ.	புயல் பெய்யாக் கொடுக்கும்	
	ச. ஊ.	மகள் காணூ மகிழ்ந்தாள்	
	க. வான்.	புலி கொல்வான் சென்றது	
	உ. பான்.	வேடர் அலைப்பான் புகுந்தனர்	
	ங. பாக்கு.	வள்ளல் தருபாக்கு வருவான்	

க.	என.	சாத்தன் உண்டென மகிழ்ந்தான்	இடையில் ஐந்தும்-தன்கருத்தாவின் வினையையும், வேறு கருத்தாவின் வினையையும் கொண்டுமுடிந்தன.
		சாத்தன் உண்டென யான் மகிழ்ந்தேன்	
உ.	அ.	பொன்னன் உண்ண வருகிறான்	
		சாத்தன் உண்ண நீ காணாய்	
ங	இன்.	இராமன் உண்ணின் மகிழ்வான்	
		வறியன் உண்ணின்வள்ளல்கொடுப்பான்	
ச.	இய.	மகன் உண்ணிய வருவான்	
		மகள் உண்ணிய தாய் கொடுப்பாள்	
ரு.	இயர்.	தந்தை உண்ணியர் போவான்	
		பிறன் உண்ணியர் தான் வழங்குவான்	

'இடையிலைந்தும்' என்னாது 'பிற' என்றதனால்-கீழ்ச்சூத்திரத்து 'இன' என்றதனாற் கொண்டவினையெச்சங்களுள், செய்துஎன்னும் வாய்பாடுபெற்றி

வருகிற இகர யகர வீற்று வினையெச்சங்களும், உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சமும்-தன்கருத்தாவின் வினையையும்,மற்றவை தன்கருத்தாவின் வினையையும், பிறகருத்தாவின் வினையையும் கொள்ளு மெனக் காண்க.

(உ-ம்.) மகன் ஓடிவந்தான்
மகள் போய்க் கண்டாள்
தான் வலியப் பேசினான் } தன் கருத்தாவின் வினைகொண்டன.

அவன் உண்டால் உவக்கும் | மழை இன்றிப் பொய்ப்பின்
யான் உண்டால் பசி தீரும் | விருந்தின்றி அவன் உண்ணான்

என இருவகைக் கருத்தாவின் வினை கொண்டன.பிறவும் இவ்வாறே.(உரு)

[கீழ் 'வினைமுதல்கோள்ளும்' என்றதற்குப் புறனடை.]

† ௩சரு. சினைவினை சினையொடும் முதலொடும் செறியும்.

(இ - ள்.) சினை வினை - ('முதலில்நான்கும் ஈற்றில் மூன்றும்' என்ற வினையெச்சங்கள்) உறுப்பின் வினையாயின் (அவை),—சினையொடும்-(முன் 'வினைமுதல்கொள்ளும்' என்ற விதியினால்) உறுப்பின்வினையுடன் முடிதல் மாத்திரமே யல்லாமல், முதலொடும்-உறுப்பியின்வினையுடனும், செறியும் - (ஒற்றுமைநயம்பற்றி) முடியும்; (எ - று.)

சினை - அவயவம், உறுப்பு. முதல் - அவயவி, உறுப்பி.

(உ-ம்.) கால் ஒடிந்து விழுந்தது
கண் சிவந்து நொந்தது } சினைவினை அச்சினையின் வினையோடு முடிந்தது.

சாத்தன் கால்ஒடிந்து விழுந்தான்
பொன்னன் கண்நொந்து கிடந்தான் } சினைவினை அச்சினைக்கு உரிய முதலின் வினையோடு முடிந்தது. (உசா)

[வினையெச்சவாய்பாடுகள் திரிதல்.]

‡ ௩சசா. சொல்திரியினும் பொருள் திரியா வினைக்குறை.

(இ - ள்.) வினைக்குறை - வினையெச்சவாய்பாடுகள்,—சொல் திரியினும் - (வேறு வாய்பாடுகளாகச்) சொல் மாறிவந்தாலும், பொருள்-(அவற்றின்) பொருள்கள், திரியா - வேறுபடாவாம்; (எ - று.)

என்றது-தன்கருத்தாவின் வினையைக் கொண்டுமுடிதற்கு ஏற்ற 'முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்'என்ற வினையெச்சவாய்பாடுகள் வேறுகருத்தாவின் வினையைக் கொண்டுமுடிந்தால்,அவ்விடங்களில், அவற்றை, வேறு கருத்தாவின் வினையையும் கொண்டு முடிதற்கு ஏற்ற வினையெச்சங்களின் திரிபாகக் கொள்க என்றதாயிற்று. (இது, உருபுமயக்கம்போல்வது.)

மழைபெய்து நெல்விளைந்தது, யான்கோள்வான் பொன்கொடுத்தான்—இவற்றில், பெய்து, கொள்வான் என்பவை - வேறுவினைகொண்டு முடிதற்கு ஏலாமையால், அவற்றை முறையே பெய்ய கொள்ள என்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபாகக் கொள்க.

இனி, 'வினைக்குறை'எனப் பொதுப்படக் கூறியதனால் எவ்வகைவினையெச்சச்சொல்லும் பொருளுக்கு இயையாமல் மாறிவருமாயின், அதனைப் பொருளுக்கு இயைந்த வினையெச்சச்சொல் திரிந்துவந்ததாகக் கொள்க.

(உ-ம்.) "கொழுநற் றொழுது எழுவாள்"-தொழாநின்று என்னும் நிகழ் கால வினையெச்சம், தொழுது எனத் திரிந்துநின்றது. "இல்லாகியாங்கு"- ஆனல் என்னும் எதிர்காலவினையெச்சம்,ஆகி எனத் திரிந்து நின்றது.(உஎ)

ஒழிபு.

[குறிப்புவினைக்குப் புறனடை.]

ருசஎ. ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா.

(இ - ள்.) ஆக்கம் - (ஆதல் என்னும்) ஆக்கத்தைக் கொண்ட, வினைக் குறிப்பு - குறிப்புவினைச்சொற்கள்,—ஆக்கம் இன்று-(அந்த) ஆக்கச்சொல் இல்லாமல், இயலா - வாராவாம்; (எ - று.)

வேற்றுமைப்புணர்ச்சிக்கு வேற்றுமையுருபுகள் விரிந்தாயினும் மறைந் தாயினும் அதற்கு உரிமையாக நிற்பது போல, ஆக்கவினைக்குறிப்புக்கு ஆக்கச்சொல் விரிந்தாயினும் மறைந்தாயினும் அதற்குஉரியதாக நிற்கும்.

(உ-ம்.) பகைவன் நல்ல னாயினன்
கல்வியாற் பெரியனாயினன் } ஆக்கச்சொல் விரிந்துநின்றது.

சாத்தன் நல்லன்
கல்வியாற் பெரியன் } ஆக்கச்சொல் மறைந்துநின்றது.

எனவே-இயற்கைவினைக்குறிப்பாயின். ஆக்கச்சொல் மறைந்து வருத லும் விரிந்துவருதலு மில்லாமல், தந்தைநல்லன், குலத்தாற்பெரியன் என் றேவருமெனக் கொள்க.

இங்ஙனமாகவே, குறிப்புவினை - ஆக்கவினைக்குறிப்பு, இயற்கைவினைக் குறிப்பு என இரண்டுவகைப்படு மென்றும், அவை இவ்வாறு நடக்கு மென் றும் கூறினாராயிற்று. (உஅ)

['செய்யும்'என் முற்றுக்குச் சிறப்புவிதி.]

‡ **ருசஅ. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்**
செல்லா தாகும் செய்யுமென் முற்றே.

(இ - ள்.) செய்யும் என் முற்று-'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினை முற்று,—பல்லோர் படர்க்கை-படர்க்கைப் பலர்பாலிலும், முன்னிலை-முன் னிலையிலும்,தன்மையில்-தன்மையிலும்,செல்லாது ஆகும்-வராதாம்;(எ-று.)

எனவே, படர்க்கையில் பலர்பால் ஒழிந்த ஆண்பால் பெண்பால் ஒன் றன்பால் பலவின்பால்களில் செல்லு மென்றதாயிற்று.

(உ-ம்.) அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும்.

இவ்வாய்பாட்டு முற்று - 'நீர் உண்ணும்' என முன்னிலையில் பன்மை யேவலாக வருதல் புதியனபுகுத லாதலால், இங்குக் கூறாராயினர். (உகூ)

['யார்' என்னும் குறிப்புவினைமுற்றுக்குச் சிறப்புவிதி.]

‡ **ருசகூ. யாரென் வினவினைக் குறிப்பு உயர் முப்பால்,**

(இ - ள்.) யார் என்-'யார்' என்கிற, வினா - வினாப்பொருளைத் தருகிற, வினைக்குறிப்பு - குறிப்பு வினைமுற்று,—உயர் முப்பால் - உயர்திணைப்படர்க்கை மூன்று பால்களுக்கும் பொதுவாம்; (எ - று.)

(உ - ம்.) அவன் யார், அவள் யார், அவர் யார்.

இது, இங்குப் பலர்பால்முற்றன்று; உயர்திணைப் பொதுக்குறிப்பு முற்று. இதில், ர்-பொதுவிகுதி.

இனி, நான் யார், நாம் யார், நீ யார், நீர் யார் எனத் தன்மை முன்னிலைகளில் வருதல் - புதியனபுகுதல்; 'என்னெஞ்சம்ஆர்' என அஃறிணைக்கு வருதலும் அது. (ஆர் - யார் என்பதன் மரூஉ.) (௩௰)

['எவன்' என்னும் குறிப்புவினைமுற்றுக்குச் சிறப்புவிதி.]

‡ ௩௫௰. எவனென் வினாவினைக் குறிப்பு இழி யிருபால்.

(இ - ள்.) எவன் என் - 'எவன்' என்கிற, வினா - வினாப்பொருளைத் தருகிற, வினைக்குறிப்பு - குறிப்புவினைமுற்று,—இழி இரு பால் - அஃறிணைப் படர்க்கை இரண்டுபால்களுக்கும் பொதுவாம்; (எ - று.)

இது, இங்கு ஆண்பால்முற்றன்று; அஃறிணைப் பொதுக்குறிப்புமுற்று. எதுஎன்றும், எவை என்றும் பொருள்படும்: இதில், அன் - பொதுவிகுதி.

(உ - ம்.) அது எவன், அவை எவன். இது - என் என விகாரப்பட்டும், அது பின்பு என்னை என்ன என்னே என்னோ என் எனப் பலவாறு விகாரப்பட்டும் வரும். (௩௧)

[முற்றெச்சம்.]

† ௩௫௧. வினைமுற்றே வினை யெச்ச மாகலும்
குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே.

(இ - ள்.) வினைமுற்றே - (தெரிநிலை) வினைமுற்றுச்சொல்லே, வினையெச்சம் ஆகலும் - வினையெச்சப்பொருளதாக வருதலும், குறிப்புமுற்று - குறிப்பு வினைமுற்றுச் சொல், ஈர் எச்சம் ஆகலும்-வினையெச்சப்பொருளும் பெயரெச்சப்பொருளும் உடையதாகவருதலும, உள - உண்டு; (எ - று.)

(உ - ம்.) க.—'கண்டனன் வணங்கினான்' என்பது - கண்டு வணங்கினான் என்றும், 'காணான் போனான்' என்பது - காணாமற்போனான் என்றும் பொருள்படுதலால், தெரிநிலைமுற்று வினையெச்சமாதல் காண்க.

உ.—'சாத்தன் வில்லினன் வந்தான்' என்பது - வில்லையுடையனாய் வந்தான் எனப் பொருள்படுதலால் குறிப்புமுற்று வினையெச்சமாகியும், 'குழையினன் கொற்றன் வந்தான்' என்பது-குழையையுடைய கொற்றன் வந்தான் எனப் பொருள்படுதலால் குறிப்பு முற்றுப் பெயரெசசமாகியும் வருதல் காண்க.

இனி, 'வினையெச்சமாகலும்' என்ற (எண்ணின்ற எதிரதுதழுவிய எச்ச) உம்மையால் - 'உண்டான் சாத்தன்(ஊர்க்குப்போனான்)' என்பதில்- உண்ட சாத்தன் எனப் பொருள்பட்டு, தெரிநிலைமுற்றுப் பெயரெச்சமாக வருதலும் கொள்க. (௩௨)

வினையியல் முற்றிற்று.

௩. பொதுவியல்.

முன்சொன்ன பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும், பின்சொல்லும் இடைச்சொல்லுக்கும் உரிச்சொல்லுக்கும் பொதுவான இலக்கணங்களைச் சொல்லும் இயல். இது, சிங்கநோக்காக நான்கு இயல்களுக்கும் நடுவில் வைக்கப்பட்டதென அறிக. (சிங்கம், முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டே செல்லும்.)

[ஒன்றொழி பொதுச்சொல்.]

‡ ௩௫௨. இருதிணை யாண்பெண் ணுளொன் றனையொழிக்கும்
பெயரும் வினையும் குறிப்பி னானே.

(இ - ள்.) இரு திணை -இரண்டு திணைகளிலும், --பெயரும்-(ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய) பெயர்ச்சொற்களும், வினையும் - (அவ்விருபால்களுக்கும் பொதுவாகிய) வினைச்சொற்களும்,---ஆண் பெணுள் - அவ்வாண்பால் பெண்பால்களுள், ஒன்றனை-ஒருபாலை, குறிப்பினான் - குறிப்பினால், ஒழிக்கும் - நீக்கி மற்றொருபாலை விளக்கும்; (எ - று.)

(உ - ம்.) (க) ஆயிர மக்கள் போர் செய்யப் போயினர்---இதில், மக்கள் என்னும் உயர்திணை ஆண் பெண் இருபாற்கும் பொதுப்பெயரும், போயினர் என்னும் பொதுவினையும், போர் என்னும் குறிப்பினால் பெண்பாலை ஒழித்து ஆண்பாலைக் காட்டின; (மக்கள் - மனிதர்.) இது - உயர்திணைப் பெண்ணொழி பெயரும், வினையும்.

பெருந்தேவி கருவுயிர்த்தகட்டிலின்கீழ் நால்வர்மக்கள் உளர்—இதில், மக்கள் என்னும் பொதுப்பெயரும், உளர் என்னும் பொதுவினையும், கருவுயிர்த்த என்னும் குறிப்பினால் உயர்திணை ஆண்பாலை ஒழித்துப் பெண்பாலைக் காட்டின. (கருவுயிர்த்தல்-பிரசவித்தல்.) இது-உயர்திணை ஆணொழி பெயரும், வினையும்.

(உ) இப் பெற்றங்கள் உழவு ஒழிந்தன---இதில், பெற்றங்கள் என்னும் அஃறிணை ஆண் பெண் இருபாற்கும் பொதுப்பெயரும், ஒழிந்தன என்னும் பொது வினையும், உழவு என்னும் குறிப்பினால் பெண்பாலை ஒழித்து ஆண்பாலைக் காட்டின. (பெற்றம் - மாடு; இங்கே எருது.) இது - அஃறிணைப் பெண்ணொழி பெயரும், வினையும்.

இப் பெற்றங்கள் பால் சொரிந்தன---இதில், பெற்றங்கள் என்னும் பொதுப்பெயரும், சொரிந்தன என்னும் பொதுவினையும், பால் என்னும் குறிப்பினால் ஆண்பாலை ஒழித்துப் பெண்பாலைக் காட்டின. (பெற்றம் - இங்கே, பசு.) இது அஃறிணை ஆணொழி பெயரும், வினையும். (க)

[செய்யுளில் சில பெயர்வினையின் ஈற்றயல் திரிதல்.]

‡ ௩௫௩. பெயர்வினை யிடத்து ன ள ர ய ஈற்றயல்
ஆ ஓ வாகலும் செய்யுளு ளுரித்தே.

(இ - ள்.) பெயர் வினை இடத்து - பெயரிடத்தும் வினையிடத்தும், ன ள ர ய ஈறு அயல் ஆ - னகர ளகர ரகர யகர வீற்றிற்கு அயலில் உள்ள விகுதி முதல் ஆகாரம், ஓ ஆகலும் - ஓகாரமாகத் திரிதலும்,—செய்யுளுள்-செய்யுளிடத்து, உரித்து - உரியதாம்; (எ - று.)

பெயர்.	(உ - ம்.)	வினை.	
வில்லான்	= "வில்லோன்."	படைத்தான்	= "படைத்தோன்."
தொடியாள்	= "தொடியோள்."	பெயர்த்தாள்	= "பெயர்த்தோள்."
நல்லார்	= "நல்லோர்."	சென்றார்	= "சென்றோர்."
பெரியாய்	= "பெரியோய்.	வந்தாய்	= "வந்தோய்."

வினையாலணையும்பெயரிடத் தல்லது வினையிடத்தும் ஒரோவிடத்து ஆ ஓ வாகத் திரிந்துவருதலால், அதனையும் உடன் கூறினார்.

'ஆகலும்' என்ற எதிர்மறை உம்மையால், செக்கான் வண்ணான் என ஆ ஓ ஆகாமையும் கொள்க. இன்னும், 'ஆ ஓவாகலும்' என்ற உம்மையை ஆக்கவும்மையாகக்கொண்டு, கிழவன்-கிழவோன், இருவர்-இருவோர், புலவர்-புலவோர், சிலர்-சிலோர், பலர்-பல்லோர் எனச் சிலவிடத்து அகரம் ஓகாரமாதலையும் அமைத்துக்கொள்க. (உ)

[உருபும் வினைவிகுதியும் எதிர்மறையினும் திரியாமை.]

நூருச. உருபும் வினையும் எதிர்மறுத் துரைப்பினும்
திரியா தத்தமீற் றுருபி னென்ப.

(இ - ள்.) உருபும்-எட்டு வேற்றுமை யுருபுகளும், வினையும் - மூவகை வினைச்சொற்களும்,—எதிர் மறுத்து உரைப்பினும்-எதிர்மறையாகச் சொல்லுமிடத்தும், தம்தம் ஈறு உருபின்-தம்தமது விகுதியினின்றும் தம் தமது உருபினின்றும், திரியா - வேறுபடா, என்ப - என்று சொல்வர், (புலவர்).

உருபு உருபினின்றும் திரியாவென்றும், வினை ஈற்றினின்றும் திரியாவென்றும் * எதிர்நிரனிறையாகப் பொருள்கொள்க.

உருபில் எதிர்மறுத்தல், அவற்றின் பயனிலைகளி லெனக் காண்க.

(உ - ம்.) சாத்தன் வாரான், குடத்தை வனையான், வாளால் எறியான் புல்லர்க்குக் கொடான், நிலையின் நீங்கான், பொருளினது இன்மை, தீயர் கண் சேரான், சாத்தா போகேல் என முறையே எட்டுவேற்றுமையுருபுகளும் எதிர்மறையிலும் தம்தம் உருபு மாறுபடவாயின.

நடவான், நடவாத, நடவாக்கால் என முறையே மூவகை வினைச்சொற்களும்-எதிர்மறையிலும் தம் தம் விகுதி மாறுபடாவாயின.

உரையிற்கோடலால், செய்ய - செய்யாமல், செய்யாது, செய்யாமே, செய்யாமை என வினையெச்சமும்; நடத்தல் - நடவாமை எனத் தொழிற்

---

* எதிர்நிரனிறை, இவ்வியலின் சுங - ஆம் சூத்திரத்தில் விளங்கும்.

பெயரும்; உண்ணாய்,உண்ணேல், உண்ணாதே என ஒருமையேவலும்; மற்றும் சிலவும் ஈறு திரிந்தும் வருமெனக் கொள்க. (௩)

[உருபும் வினையும் அடுக்கி முடிதல்.]

௩௫௫. உருபுபல அடுக்கினும் வினைவே றடுக்கினும்
ஒருதம் மெச்ச மீறுற முடியும்.

(இ - ள்.) உருபு - எட்டு வேற்றுமை யுருபுகளும், பல அடுக்கினும் - (விரிந்தும் தொக்கும் தம்முள் விரவியாயினும் வெவ்வேறாக வாயினும்) பல அடுக்கி வந்தாலும், வினை - (மூவகை) வினைச்சொற்களும், வேறு அடுக்கினும் - வெவ்வேறு பல அடுக்கி வந்தாலும், ஒரு தம் எச்சம் - தாம் தாம் கொண்டு முடியும் சொல் ஒன்று, ஈறு உற - இறுதியில் வர, முடியும்-(எல்லாம் அதனோடு) முடியும்; (எ - று.)

(உ - ம்) (க) அரசன்பகைவனை வாளால் வேட்டினான்—உருபுகள்விரிந்து விரவிப் பல அடுக்கி ஒருவினை கொண்டன.
வாள் கைக் கொண்டான்—உருபு தொக்குஅவ்வாறுவந்தன.

(உ) சாத்தனையும் கொற்றனையும் வாழ்த்தினான், சாத்தனுக்கும் கொற்றனுக்கும் தந்தை—ஐ உருபும்,கு உருபும்,விரிந்து வேறு பல அடுக்கி முறையே ஒருவினையும்,ஒருபெயரும் கொண்டன.
அருளற முடையான்—உருபுதொக்கு அவ்வாறு வந்தன.

(௩) ஆடினான் பாடினான் சாத்தன்,இளையள் மெல்லியள் மடந்தை தெரிநிலை வினைமுற்றும், குறிப்புமுற்றும் வேறுபல அடுக்கி முறையே ஒவ்வொரு பெயர் கொண்டன.

(௪) கற்ற கேட்ட பெரியோர், நெடிய பெரிய மனிதன்---தெரி---நிலைப் பெயரெச்சமும், குறிப்புப்பெயரெச்சமும் - வேறு பல அடுக்கி முறையே ஒவ்வொரு பெயர் கொண்டன.

(௫) கற்றுக் கேட்டு அறிந்தார்,விருப்பின்றி வெறுப்பின்றி இருந்தார் ---தெரிநிலைவினையெச்சமும்,குறிப்புவினையெச்சமும் வேறுபல அடுக்கி முறையே ஒவ்வொரு வினை கொண்டன. (௪)

[இடைப்பிறவரல்.]

‡ ௩௫௬. உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன.

(இ - ள்.) உருபு - எட்டு வேற்றுமையுருபுகளும், மூற்று-வினைமுற்றுக்களும், ஈர் எச்சம் - பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் ஆகிய இவற்றுக்கும், கொள்ளும்-இவை கொண்டுமுடிகிற, பெயர் வினை-பெயர்ச்சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும், இடை-நடுவில், ஏற்பன-(அவ்வவ்விடத்துக்குப்) பொருந்துவனவாகிய, பிற-வேறுசொற்கள், வரலும் - வருதலும், ஆம் - ஆகும்; (எ - று.)

(உ-ம்.) (க) சாத்தன் (வயிறு நிரம்ப) உண்டான்.
அறத்தை (அழகுபெற)ச் செய்தான்.
வாளால் (மாய) வெட்டினான்.
தேவர்க்குச் (செல்வம்வேண்டிச்) சிறப்பு எடுத்தான்.
மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான்.
சாத்தனது (பருங்கை) யானை.
ஊர்க்கண் (உயர்ந்த ஒளி) மாடம்.
இராமா (விரைந்து ஓடி) வா.

இடைநிலை.

(உ) வந்தான் (அவ்வூர்க்குப்போன) சாத்தன் ---வினைமுற்று.
(ங)வந்த(வடகாசி) மன்னன் ---பெயரெச்சம்
(ச) வந்து (சாத்தன் அவ்வூர்க்குப்)போயினான்---வினையெச்சம்.
'ஏற்பன வரலுமாம்'என்றதனால்,ஏலாதன இடையில்வரப்பெறாவாம்.

[முடிக்குஞ்சொல் நிற்குமிடம்.]

௩௫௭. எச்சப் பெயர்வினை எய்து மீற்றினும்.

(இ-ள்.) எச்சம் - (வேற்றுமையுருபுகளும் வினைமுற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும்) கொண்டுமுடியுஞ் சொல்லாகிய,பெயர் வினை - பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும்,---ஈற்றினும்-(அவ்வுருபு முதலியவற்றிற்கு) இறுதியிலும், எய்தும் - வரும்; (எ-று.)

'ஈற்றினும்' என்ற எச்ச உம்மையால், முதலிலும் வருதல் கொள்க.*

ஈறு	முதல்
(உ-ம்.) சாத்தன் வந்தான்	வந்தான் சாத்தன்
மரத்தைக் குறைத்தான்	குறைத்தான் மரத்தை
சாத்தனால் வந்தான்	வந்தான் சாத்தனால்
சாத்தனுக்குக்கொடுத்தான்	கொடுத்தான் சாத்தனுக்கு
சாத்தனின் நீங்கினான்	நீங்கினான் சாத்தனின்
சாத்தனது ஆடை	------------------
சாத்தன்கண் சென்றான்	சென்றான் சாத்தன்கண்
மணியில் ஒளி	------------------
சாத்தா வா	வா சாத்தா

உருபுகளின் கொண்டு முடியுஞ் சொற்கள் இரண்டிடத்தும் வந்தன.

வந்தான் சாத்தன்	சாத்தன் வந்தான்
வந்த சாத்தன்	------------------
வந்து போயினான்	போயினான் வந்து

முற்று எச்சங்களின் கொண்டு முடியும் சொற்கள் இரண்டிடத்தும் வந்தன.

'எய்து மீற்றின்' என்றாற்போல முதலில் வருதலை எடுத்துச்சொல்லாமல் 'ஈற்றினும்' என்றதனால் தழுவிக்கொண்டதனால் - ஆறாம் வேற்றுமையுருபும் ஏழாம்வேற்றுமையுருபும் பெயரெச்சமும் கொண்டுமுடிகிற பெயர்ச்சொற்கள்அவற்றிற்கு இறுதியில்மாத்திரம் வருமேயல்லாமல் முதலில் வாரா என்பதும், மற்றவை முதலில் வந்தாலும்,இறுதியில் வருவனபோலச் சிறப்புடையனவல்ல என்பதும் தோன்றுமாறு அறிக.

---

* 'உம்மையான், வரல் ஒருதலையல்லவென்க' என்பது, பழைய உரை.

(சாத்தனது ஆடை என்பது-ஆடை சாத்தனது என மாறினால்,சாத்தனது என்பது - ஆறாம் வேற்றுமையாகாது, குறிப்புவினைமுற்றாம்.) (௬)

[ஒருமொழி, தன் இனத்தையும் உணர்த்துதல்: உபலக்ஷணம்.]

‡ ௩௫௪. ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே.

(இ - ள்.) ஒருமொழி-(நால்வகைச்சொற்களுள்)ஒருசொல்,--(தன்னை உணர்த்துவதோடு), ஒழி-ஒழிந்துநின்ற, தன் இனம் - தன் இனங்களையும், கொளற்கு - தழுவிக்கொள்ளுதற்கு, உரித்து - உரியதாம்; (எ - று.)

(உ - ம்.) சோற்றை உண்டான்என்றால்-அதனோடுகறியைத்தின்றான் என்பது முதலியனவும், வெற்றிலை தின்றான் என்றால்-அதனோடு பாக்குச் சுண்ணாம்புகளைத் தின்றான்என்பதும், நஞ்சு உண்டவன் சாவான்என்றால் - நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம்,நஞ்சுண்டவை சாம் என்பனவும்கூறாமலே அமைதலால், இவற்றுள்சோறுஎன்னும் பெயர்ச்சொல்-ஒழிந்த கறிமுதலிய தன்இனங்களையும், உண்டான்என்னும் வினைச்சொல்-தின்றான் முதலிய தன் இனங்களையும், வெற்றிலை என்னும் பெயர்ச்சொல்-மற்றைப் பாக்குச் சுண்ணாம்புகளையும், உண்டவன் சாவான் என்னும் ஆண்பாற் பெயர் வினைகள்-மற்றை நான்குபாற் பெயர்வினைகளையும் கொள்ளுதற்கு உரியனவாக நின்றமை காண்க. (எ)

பெயர்வினைகள்திணைபால்இடம்காலங்களின்பொதுமைநீக்கும்விதம்

† ௩௫௫. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே.

(இ - ள்.) பொது-(திணை பால் இடம் காலங்களுக்குப்)பொதுவாகிய,பெயர் வினைகளின்-பெயர்ச்சொற்கள் வினைச்சொற்கள் என்பவற்றினுடைய, பொதுமை-(அத் திணை முதலியவற்றிற்குப்) பொதுவாயிருக்குந் தன்மையை,---மேல் வரும்-மேலே வருகிற, சிறப்பு-(ஒரு திணை பால் இடம் காலத்துக்கே) சிறப்பாகிய,பெயர் வினை தாமே-பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும், நீக்கும்-நீக்கி ஒரு திணை பால் இடம் காலத்துக்கே உரிமைசெய்யும்.

ஒன்றற்கு முன் பின் என்னும் இரண்டு இடமும் 'மேல்' எனப்படுதலால், சிறப்புப்பெயர் வினை எவ்விடத்து வந்தாலும் கொள்க.

பொதுப்பெயர்.	சாத்தன் இவன் / சாத்தன் இது	பெயர்த்திணைப்பொதுமையைப் பின்வந்த சிறப்புப்பெயர் நீக்கி ஒருதிணைக்கு உரிமைசெய்தது.
	சாத்தன் வந்தான் / சாத்தன் வந்தது	பெயர்த் திணைப்பொதுமையைப் பின்வந்த சிறப்புவினை நீக்கி ஒரு திணைக்கு உரிமை செய்தது.
	ஒருவர் என்தாயார் / ஒருவர்என்தகப்பனார்	பெயர்ப்பாற்பொதுமையைப் பின் வந்த சிறப்புப்பெயர்நீக்கி ஒருபாலுக்கு உரிமைசெய்தது.
	மரம் வளர்ந்தது / மரம் வளர்ந்தன	பெயர்ப்பாற் பொதுமையைப் பின் வந்த சிறப்புவினை நீக்கிஒருபாலுக்கு உரிமைசெய்தது.
	யாமெல்லாம் வருவாம் / நீரெல்லாம் வருவிர் / அவரெல்லாம் வருவார்	பெயரிடப்பொதுமையை முன்வந்தசிறப்புப்பெயரும்,பின்வந்தசிறப்புவினையும்நீக்கி ஓரிடத்துக்கு உரிமைசெய்தன.

பொதுவினை.

வாழ்க-	அவன் அவள் அவர் அது அவை நான் நாம் நீ நீர்	வினைத்திணைபாலிடப் பொதுமையைப் பின்வந்த சிறப்புப்பெயர்கள் நீக்கி ஒரு திணைபால்இடத்துக்குஉரிமைசெய்தன
உண்டு-	வந்தான் வந்தாள் வந்தார் வந்தது வந்தன வந்தேன் வந்தோம் வந்தாய் வந்தீர்	வினைத்திணைபாலிடப்பொதுமையைப் பின்வந்தசிறப்புவினைகள்நீக்கிஒன்றுக்கு உரிமைசெய்தன. (அ)

[எச்சங்களின் முடிபு.]

௩௬0. பெயர்வினை உம்மைசொற் பிரிப்பென ஒழியிசை
எதிர்மறை இசையெனுஞ் சொல்லொழி பொன்பதும்
குறிப்பும் தத்த மெச்சம் கொள்ளும்.

(இ - ள்.) பெயர் - பெயரெச்சமும், வினை-வினையெச்சமும், உம்மை - உம்மையெச்சமும், சொல் - சொல்லெச்சமும், பிரிப்பு - பிரிநிலையெச்சமும், என - எனவெச்சமும், ஒழியிசை - ஒழியிசையெச்சமும், எதிர்மறை - எதிர்மறையெச்சமும், இசை - இசையெச்சமும், எனும் - என்கிற, சொல் ஒழிபு ஒன்பதும் - சொல்லெச்சங்கள் ஒன்பதும், குறிப்பும் - குறிப்பெச்சமும்,—தத்தம் எச்சம் கொள்ளும் - தம்தமது எஞ்சிநின்ற சொற்களைக் கொண்டு முடியும்; (எ - று.)—எஞ்சுதல் - குறைதல்.

எனவே, எச்சங்கள் சொல்லெச்சம், குறிப்பெச்சம் என இருவகைப் படும்.

இந்தப் பத்து எச்சங்களுள்ளும், பெயரெச்சம் வினையெச்சம் எனவெச்சம் என்னும் மூன்றற்கும் எச்சச்சொற்கள் வாக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும்; மற்றவற்றிற்கு எச்சச்சொற்கள் வருவித்து உரைக்கப்படும்.

(உதாரணம்.)

(க) செய்த சாத்தன், நல்ல சாத்தன் எனப் பெயரெச்சங்கள் - தம் எச்சமாகிய சாத்தன் என்னும் பெயரைக் கொண்டன.

(உ) செய்து வந்தான், மெல்ல வந்தான் என வினையெச்சங்கள் - தம் எச்சமாகிய வந்தான் என்னும் வினைமுற்றைக் கொண்டன.

(௩) சாத்தனும் வந்தான் என்னும் உம்மையெச்சம் - 'முன்னே கொற்றனும்வந்தான்' எனத் தன் எச்சத்தைக் கொண்டது.

(௪) நல்லவனென்றான் என்னும் சொல்லெச்சம் - நல்லவனென்று சொன்னான் எனச் சொல் என்னும் தன் எச்சத்தைக் கொண்டது.

(௫) சாத்தனே கொண்டான், சாத்தனோ கொண்டான் என்னும் பிரிநிலையெச்சங்கள் 'பிறர் கொண்டிலர்' எனத் தம் எச்சத்தைக் கொண்டன. கொள்ளுதலாற் சாத்தனினின்று பிறர்பிரிக்கப்பட்டாராதலின்பிரிநிலை.

(௬) கடல் ஒல்லெனா ஒலித்தது, நரம்பு விண்ணென இசைத்தது என்னும் எனவெச்சங்கள்-தம் எச்சமாகிய வினையைக்கொண்டன; மிகவும்ஒலித்தது, மிகவும் இசைத்தது என்பன இவற்றிற்குப் பொருளாமாதலால் இவ்வெனவெச்சம்,விகுதிப்பொருளைத்தருவதோர்இடைச்சொல்லாம்

(எ) கூரியதோர் வாள்மன், படித்தற்கோ வந்தான் என்னும் ஒழியிசை யெச்சங்கள்-முறையே 'இப்பொழுதுஒடிந்தது', 'விளையாட வந்தான்' எனத் தம் எச்சத்தைக் கொண்டன.

(அ) மறப்பினும் ஓதிக்கொளலாகும், யானே செய்தேன் என்னும் எதிர் மறையெச்சங்கள் - முறையே 'மறக்கலாகாது', 'யான் செய்திலேன்' எனத் தம எச்சத்தைக் கொண்டன.

(கூ) "கற்றதனலாய பயனென்' என்பதில் - (நூலைக்) கற்றதனல் என ஒரு சொல்லும், "அந்தாமரையன்னமே நின்னை யானகன் ருற்றுவனே?" என்பதில் - (என் உயிரினும் சிறந்த) நின்னை யெனப் பலசொற்களும் வருவிக்கப்படுதலால், இவ்விசையெச்சங்கள் - தம்எச்சங்களைக்கொண் டன. (இசையெச்சமாவது - வாக்கியங்களில் அவ்விடத்திற்கு ஏற்ப ஒருசொல்லும் பலசொற்களும் வருவித்து உரைக்கப்படுதல்.)

(க0) குறிப்பெச்சமாவது - பெயரியலிற் பன்னிரண்டாஞ் சூத்திரத்திலே "ஒன்றொழி பொதுச்சொல்" முதலாக "இன்ன பிறவும்" வரைக்கும் சொல்லப்பட்டவை; ஆயிரம் மக்கள் பொருதார் என்பதில், மக்கள் என்னும் பொதுப்பெயர் - ஆடவர் என்னும் சிறப்புப்பெயரைக் கொண்டது. பிறவும் அச்சூத்திரவுரையிற் காண்க.

குறிப்பெச்சமொழிந்த ஒன்பதில், சொல்லெச்சம்-சொல் என்கிற சொல் ஒன்றே குறைந்துநிற்பது என்றும், இசையெச்சம் - பெயர்முதலிய சொற்க ளுள் ஒன்ருயினும்பலவாயினும் குறைந்துநிற்பது என்றும் வேறுபாடுஅறிக.

தொகைநிலைத் தொடர்மொழிகள்.

[தொகைநிலைத்தொடர்மொழிகளின் இலக்கணம்.]

‡ ௬௬க. பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளி னவற்றி னுருபிடை
ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத்தொடர்ச்சொல்.

(இ - ள்.) பெயரொடு - பெயர்ச்சொல்லோடு, பெயரும்-பெயர்ச்சொல் லும், வினையும் - வினைச்சொல்லும், வேற்றுமை முதலிய - (பின்சொல்லப் படும்) வேற்றுமை முதலாகிய, பொருளின் - அறுவகைப் பொருட்புணர்ச் சியில், அவற்றின் உருபு - அவற்றினுடைய உருபுகள், இடைஒழிய-நடுவில் தொக்கு நிற்க, இரண்டு முதல் ஆ (க) தொடர்ந்து - இரண்டு சொற்கள் முதலாகப் பலசொற்கள் தொடர்ந்து, ஒரு மொழிபோல் நடப்பன - ஒரு சொற்போல நடப்பவை,—தொகைநிலை தொடர்சொல் - தொகைநிலைத் தொடர்ச்சொற்களாம்; (எ - று.)--தொகை - இங்கே, உருபு மறைதல்.(க)

[தொகைநிலைத்தொடர்கள் இத்தனை யென்பது.]

‡ ௬௬௨. வேற்றுமை வினை பண்பு உவமை உம்மை
அன்மொழி என அத்தொகை யாறுகும்.

(இ - ள்.) வேற்றுமை - வேற்றுமைத்தொகையும், வினை-வினைத்தொகையும், பண்பு - பண்புத்தொகையும், உவமை-உவமைத்தொகையும், உம்மை-உம்மைத்தொகையும், அன்மொழி - அன்மொழித் தொகையும், என - என்று, அ தொகை - முன்சொன்ன தொகைநிலைத் தொடர்மொழிகள், ஆறு ஆகும் - அறுவகைப்படும்; (எ - று.) (௧௧)

[௧. வேற்றுமைத்தொகை.]

‡ ௩௬௩. இரண்டு முதலா மிடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

(இ-ள்.) இடை - (எழுவாய்க்கும் விளிக்கும்) நடுவில் நின்ற, இரண்டு முதல் ஆம் ஆறு உருபும் - இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமையுருபுகளும், வெளிப்படல் இல்லது - வெளிப்படாமல் மறைந்துநிற்கும் தொடர்மொழிகள்,—வேற்றுமைத்தொகை - வேற்றுமைத்தொகைகளாம்;(எ-று.)
(உ-ம்.)நிலம் கடந்தான் [ஐ] இரண்டாம்வேற்றுமைத்தொகை.

தலைவணங்கினான் [ஆல்] மூன்றாம்வேற்றுமைத் தொகை.
சாத்தன் மைந்தன் [கு] நான்காம்வேற்றுமைத் தொகை.
ஊர் நீங்கினான் [இன்] ஐந்தாம்வேற்றுமைத் தொகை.
சாத்தன் கை [அது] ஆறாம்வேற்றுமைத் தொகை.
குன்றக் குகை [கண்] ஏழாம்வேற்றுமைத் தொகை.
யானைக் கோட்டு நுனி குறைத்தான்—பன்மொழித் தொடர்.

இனி, 'ஆறு உருபும்' என்ற முற்றும்மையை எச்சவும்மை யாக்கி, கைக்களிறு, பொற்குடம் என உருபும் பொருளும் உடன்தொக்கனவும் வேற்றுமைத்தொகை யெனக்கொள்க; அவை - கையையுடைய களிறு, பொன்னாற்செய்த குடம் என விரியும்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார், "ஐயும் கண்ணு மல்லாப் பொருள் வயின், மெய்யுருபு தொகா இறுதி யான" எனக் கூறுதலால், ஐயுருபும் கண்ணுருபு மல்லாத நான்கு உருபும் - இடையிலன்றி இறுதியிலே தொகா வெனவும், அந்த ஐயுருபும் கண்ணுருபும் - கடந்தான் நிலம், இருந்தான் குன்றத்து என இறுதியிலும் தொகு மெனவும் கொள்க.

வேற்றுமையுருபுகள் இடையிலே தொகுமென்றா ராயினும், அவை விரிந்துநிற்குமிடத்து எப்பொருள்படுமோ அப்பொருள்படுமிடத்தே தொக்குநிற்கும்; அப்பொருள் படாவிடத்தே தொக்குநில்லாவாம்.

(உ - ம்.) சாத்தனை அடித்தான், சாத்தனோடு வந்தான் என ஐயுருபும் ஓடுஉருபும் விரிந்துநிற்குமிடத்துச் செயப்படுபொருளும் உடனிகழ்ச்சிப் பொருளும் படுதல் போல, சாத்தன் அடித்தான், சாத்தன் வந்தான் என அவ்வுருபுகள் தொக்குநிற்குமிடத்து அப்பொருள்படாததனால் இப்படிப் பட்டஇடங்களில் உருபு தொக்கு நில்லாதென அறிக. (௧௨)

[ச. வினைத்தொகை.]

‡ ௩௬௪. காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

(இ-ள்.) காலம் - காலங்காட்டும் வினையுருபாகிய இடைநிலையும் விகுதியும் முதலியன, கரந்த - மறைந்துநின்ற, பெயரெச்சம் - பெயரெச்ச்ங்கள்,—வினைத்தொகை - வினைத்தொகைகளாம்; (எ-று.)

எனவே, பெயரெச்சவினையின் உருபாகிய விகுதியும் இடைநிலையும் முதலியன தொக்குநிற்கப் பகுதிமாத்திரமாய் நின்று முக்காலத்துக்கும் பொதுவாய்ப் பெயரெச்சப்பொருளை உணர்த்திப் பெயர்கொண்டுமுடிவது வினைத்தொகை யென்றபடி.

காலங் காட்டுவனவற்றை 'காலம்' என்றது, காரியவாகுபெயர்.

(உ-ம்.) தோய்தயிர், பெய்ம்மழை, அழிபொருள், உழுபடை.

இவை - முன்னும்பின்னும் வருகின்ற சொற்களின் குறிப்பால், நேற்றுத் தோய்ந்த தயிர், இன்று பெய்கிற மழை, நாளை அழியும் பொருள், முக்காலத்தும் உழுத உழுகிற உழும் படை என ஒருகாலம்பற்றியும் முக்காலம் பற்றியும் விரியும்.*

வருவழி, தருபொருள், அலமருநெஞ்சம் எனச் சிலவினைத்தொகை பகுதிவிகாரப்பட்டும் வரும். சிலபகுதிகள், வினைத்தொகையாக வாரா. ()

[௫. பண்புத்தொகை.]

‡ ௩௬௫. பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்
ஒருபொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை.

(இ-ள்.) பண்பை விளக்கும் - பண்போடு பண்பிக்கு உள்ள ஒற்றுமையை விளக்குதற்கு வருகிற, மொழி-('ஆகிய'என்னும்) பண்புருபு, தொக்கனவும் - மறைந்துநிற்பவையும், ஒரு பொருட்கு இருபெயர் வந்தவும்-(அப்பண்புருபுதொக்குநிற்க) ஒருபொருளுக்கு (ச் சிறப்புப்பெயரும் பொதுப்பெயருமான) இருபெயர்கள் வந்தவையும்,—குணத்தொகை - பண்புத்தொகைகளாம்; (எ-று.—)பண்பு-குணம்; அதனையுடையது,பண்பி[குணி.]

'பண்பு' எனப் பொதுப்படச் சொன்னதனால் - வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலியன எல்லாம் கொள்க. (வண்ணம் - நிறம். வடிவு - உருவம். அளவு - எண் முதலியன. சுவை - உருசி.) ஒருபொருட்கு இருபெயர் வந்தது, இருபெயரொட்டுப் பண்புத்தொகை யெனப்படும்; இதில் சிறப்புப்பெயர் முன்னும், பொதுப்பெயர் பின்னும் நிற்கும்.

(உ-ம்.) செந்தாமரை, கருங்குதிரை—வண்ணப் பண்புத்தொகை.
வட்டக்கல், சதுரப்பலகை—வடிவுப் பண்புத்தொகை.

---

* 'காலங்கரந்த பெயரெச்சம்வினைத்தொகை' என்றமையால், 'காலம் தோன்றும்பெயரெச்சம் தொகாநிலையா மென்க' என்பது-பழையவுரை.

ஒருபொருள், முக்குணம்-அளவுப் பண்புத்தொகை.
துவர்க்காய், இன்சொல்—சுவைப் பண்புத்தொகை.
ஆயன்சாத்தன்,சாரைப்பாம்பு-இருபெயரொட்டுப்பண்புத்தொகை.
செங்நிறக்குவளை, கரும்புருவச்சிலை—பன்மொழித்தொடர்.

இவை - செம்மையாகிய தாமரை, வட்டமாகிய கல், ஒன்றாகிய பொருள், துவர்ப்பாகிய காய், ஆயனாகிய சாத்தன், செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும். செம்மையாகிய தாமரை யென்ற வாய்பாட்டால் விரிக்கப்பட்டாலும், செந்நிறமுள்ளதாகிய தாமரையென்றே கருத்து. செம்மையையுடைய தாமரையென வேற்றுமைப்பொருள்படவிரித்தல், பொருளுக்குஒக்குமாயினும், சொல்லியல்புக்கு ஒவ்வாது. (௧௪)

[௪. உவமத்தொகை]

‡ ௩௬௬. உவம வுருபிலது உவமத் தொகையே.

(இ - ள்.) உவம உருபு - (வினை பயன் மெய் உரு என்பவற்றைப் பற்றிவருகிற) 'போல' முதலிய உவமவுருபுகள், இலது - மறைந்துநின்ற தொடர்மொழிகள்,—உவமத் தொகை - உவமத்தொகைகளாம்; (எ - று.) —(வினை - தொழில். பயன் - பிரயோசனம். மெய் - வடிவம். உரு - நிறம்.)

எனவே, உபமேயத்துக்கும் உபமானத்துக்கும் இருக்கின்ற ஒப்புமையை விளக்குகின்ற 'போல' முதலியஉருபுகள் இடையிலே தொக்குநிற்கஉபமானச்சொல்லும் உபமேயச்சொல்லும் தொடர்வது, உவமத்தொகையாம்.

(உ-ம்.) புலிக்கொற்றன், குருவிகூப்பிட்டான்—வினையுவமத்தொகை.
மழைக்கை, கற்பகவள்ளல்—பயனுவமத்தொகை.
துடியிடை, வேய்த்தோள்—மெய்யுவமத்தொகை.
கார்க்கூந்தல், பவளவாய்—உருவுவமத்தொகை.
மரகதக்கிளிமொழி, இருள்மழைக்கை—பன்மொழித்தொடர்.

இவை-புலிபோலுங்கொற்றன்,மழைபோலும்கை,துடிபோலும்இடை, கார்போலும் கூந்தல், மரகதம்போலும் கிளிபோலும் மொழி என விரியும்.
(துடி - உடுக்கை. வேய் - மூங்கில். மரகதம் - பச்சையிரத்தினம்.)(௧௫)

[உவமவுருபுகள்.]

‡ ௩௬௭. போலப் புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே.

(இ - ள்.) போல......நிகர - 'போல' முதலிய வினையெச்சம் பத்தும், அன்ன இன்ன என்பவும் - இப்பெயரெச்சம் இரண்டும், பிறவும் - இவை போல்வன பிறவும்,—உவமத்து உருபு - உவமவுருபுகளாம்; (எ - று.)

'பிற' என்றதனால், போல், புரை முதலிய வினையடிகளும், அவ்வடியாற் பிறத்தற்கு உரிய மற்றை வினையெச்சங்களும், வினைமுற்றுக்களும்,

பெயரெச்சங்களும், பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண், மலைய முதலியவையும் கொள்க. (௧௬)

[ரு. உம்மைத்தொகை.]

‡ ௩௬௮. எண்ண லெடுத்தல் முகத்தல் நீட்டல்
எனுநான் களவையு ளும்மில தத்தொகை.

(இ - ள்.) எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் எனும் நான்கு அளவையும் - எண்ணலளவை எடுத்தலளவை முகத்தலளவை நீட்டலளவை என்கிறநால்வகை அளவைகளாற் பொருள்களை அளக்குமிடத்துத் தொடர்கிற அவ்வளவைப்பெயர்களுள், உம் இலது - 'உம்' என்னும் இடைச்சொல் தொக்குநிற்பவை,—அத்தொகை - அவ்வும்மைத்தொகைகளாம்; (எ - று.)

(உ-ம்.) ஒன்றேகால், கபிலபரணர்—எண்ண லும்மைத்தொகை.
கழஞ்சேகால், தொடியேகஃசு—எடுத்த லும்மைத்தொகை.
கலனேகுறுணி, நாழியாழாக்கு—முகத்த லும்மைத்தொகை.
சாணங்குலம், சாணரை—நீட்ட லும்மைத்தொகை.
சேரசோழபாண்டியர், புலிவிற்கெண்டை—பன்மொழித்தொடர்.

இவை - ஒன்றும் காலும், கழஞ்சும் காலும், கலனும் குறுணியும், சாணும்அங்குலமும், சேரனும் சோழனும் பாண்டியனும் என விரியும். (கழஞ்சு, தொடி, கஃசு - சில எடையளவுகள்.)

இத்தொகையில் உம்மை இடையில்மாத்திரமே யன்றி இறுதியிலும் தொக்குநிற்பதனால், இதனை, இடையில் தொகுமென்னும் வேற்றுமைத் தொகை முதலிய நான்கிற்கும், இறுதியில் தொகுமென்னும் அன்மொழித் தொகைக்கும் நடுவிலே வைத்தாரென்று அறிக.

வினைத்தொகையும் பண்புத்தொகையும் விரிந்தால் தெரிநிலைப் பெயரெச்சத் தொகாநிலைத்தொடரும், உவமத்தொகை விரிந்தால் சிலவிடத்து வினையெச்சத் தொகாநிலைத்தொடரும் சிலவிடத்துப் பெயரெச்சத்தொகாநிலைத் தொடரும், உம்மைத்தொகை விரிந்தால் இடைச்சொல் தொகாநிலைத்தொடருமா மெனக் காண்க. (௧௭)

[௬. அன்மொழித்தொகை.]

‡ ௩௬௯. ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி.

(இ - ள்.) ஐந் தொகை மொழிமேல்-(வேற்றுமைத்தொகை முதலிய) ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்தில், பிற தொகல்- அவையல்லாத [பிறமொழிகளாகிய] உருபுகள் தொக்கு வருபவை,—அன்மொழி - அன்மொழித் தொகைகளாம்; (எ - று.)—(ஐந்து தொகைகளுக்கும் உரியன) அல்லாத மொழி தொக்குநிற்பது, அன்மொழித்தொகை.

(உதாரணம்.)

(௧) பூங்குழல்—இரண்டாம்வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; பூவையுடைய குழலை யுடையாள் என விரியும்

பொற்றொடி---மூன்றும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; பொன்னாலாகியதொடியையுடையாள் என விரியும்.

அணியிலக்கணம்--நான்காம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; அணிக்கு இலக்கணஞ்சொன்ன நூல் என விரியும்.

பொற்றாலி-- ஐந்தாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; பொன்னினாகிய தாலியையுடையாள் என விரியும்.

சேரன்குடி---ஆறும்வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; சேரனது குடிமக்க ளிருக்கும் ஊர் என விரியும்.

கீழ்வயிற்றுக்கழலை---ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; கீழ்வயிற்றின்கண் எழுந்த கட்டி போல்வான் என விரியும்.

(உ) தாழ்குழல்---வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; தாழ்ந்த குழலையுடையான் என விரியும்.

(ங) ஆண்டகை--பண்புத்தொகைப் புறத்துப்பிறந்தஅன்மொழித்தொகை; ஆண்மையாகிய தகுதியை [குணத்தை] யுடையான் என விரியும்.

(ச) துடியிடை--உவமத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; துடிபோலும் இடையை யுடையான் என விரியும்.

(ரு)உயிர்மெய்--உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; உயிரும் மெய்யும் கூடிப் பிறந்த எழுத்து என விரியும்.

தகரஞாழல்மார்பு—பன்மொழித்தொடர்; தகரமும் ஞாழலும் கூடி உண்டாகிய சாந்தை அணிந்த மார்பை யுடையான் என விரியும். (தகரம் - ஒருவகை வாசனைப்பொருள். ஞாழல் - குங்குமப்பூ.)

இனி, பன்மொழித்தொடரில் அறுவகைத்தொகைகளும் கலந்துதொகுமாறு,—'திகழ் செவ் வான் மதித் திருமுகப் பூங் குழல்' என வரும்; இது திகழ்கிற செம்மையாகிய வானத்தின்கண் எழுந்த மதிபோலும் திருமுகத்தினையும் பூவையணிந்த குழலினையு முடையாள் என விரியும். (கஅ)

[தொகைநிலைத் தொடர்மொழியில் பொருள்சிறக்கும் இடம்.]

ஙஎ0. முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனுநான் கிடத்தும் சிறக்கும் தொகைப்பொருள்.

(இ - ள்.) * முன் மொழி - முன்நின்ற மொழியும், பின் மொழி - பின் நிற்கும் மொழியும், பல் மொழி - எல்லாமொழிகளும், புறம் மொழி - (இம் மொழிகளல்லாமல்) இவற்றின்புறத்தில் வரும் மொழியும், எனும்-என்கிற,

* 'ஈண்டு 'இடம்' என்றதனால், காலமுன் கொள்ளாது இடமுன் கொள்க' என்பது, பழைய உரை.

நான்கு இடத்தும்-நான்கு இடங்களுள் ஒன்றிலே, தொகை பொருள் சிறக்கும் - தொகைநிலைத்தொடர்மொழிகள் பொருள்சிறந்து நிற்கும்; (எ - று.)

பொதுப்பட நான்கிடத்தும் பொருள்சிறக்கு மென்றாராயினும், உம்மைத்தொகை பலமொழியிலும், அன்மொழித்தொகை புறமொழியிலும், மற்றை நான்கு தொகையும் இடத்துக்கு ஏற்றபடி முன்மொழியிலாயினும் பின்மொழியிலாயினும் பொருள் சிறக்கு மெனக் கொள்க.

(உதாரணம்.)

(க) குடம் வனைந்தான், விரி பூ, செந் தாமரை, வேற் கண் என்பவற்றில் - குடம் முதலிய முன்மொழிகள் பானை முதலிய தம் இனத்தை விலக்கி நிற்றலால், முன்மொழியிற் பொருள் சிறந்தன.

(உ) நிலம் உழுதான், சுடு தீ, செஞ் ஞாயிறு, புலி பாய்ந்தான் என்பவற்றில்-உழுதான்முதலியபின்மொழிகளைக் கூறிய மாத்திரத்தில் நிலம்முதலிய முன்மொழிகள்தாமேவந்து இயைதலால், பின்மொழியிற்பொருள்சிறந்தன.

(ந) இராப்பகல், சேரசோழபாண்டியர் இவை முதலிய உம்மைத் தொகைகளில் - எல்லாமொழிகளிலும் பொருள் சிறந்தன.

(ச) பூங்குழல், உயிர்மெய் இவைமுதலிய அன்மொழித்தொகைகளில்-சொல்லுவோனது கருத்து இவ்விருமொழிப் பொருளின் மேலு மாகாமல் உடையாள் முதலிய புறமொழிப் பொருளின் மேல தாதலால், அவற்றிற் பொருள் சிறந்தன. (கக)

[இடத்தொகை பெயர்த்தொகைகளுக்கு வேறுபாடு.]

நஎக. வல்லொற்று வரினே இடத்தொகை யாகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும்.

(இ - ள்.) வல் ஒற்று வரின் - வல்லெழுத்து (நிலைமொழி வருமொழிகளின் இடையே) வந்தால், இடத்தொகை ஆகும்-இடப்பொருளில்தொக்க ஏழாம்வேற்றுமைத்தொகையாம்;மெல் ஒற்று வரின்-மெல்லெழுத்து(இடையில்)வந்தால், பெயர்த்தொகை ஆகும் - பெயர்கள்தொக்க இருபெயரொட்டுப்பண்புத்தொகையாம்; (எ - று.)

(உ-ம்.) (க) வடுகக்கண்ணன், துளுவச்சாத்தன், கன்னடக்கொற்றன் என இவை - வல்லொற்றுவந்த தொகையாதலால், வடுகநாட்டிற் பிறந்த கண்ணன், துளுவநாட்டிற்சாத்தன், கன்னடத்திற்கொற்றன் என விரியும்.

(உ - ம்) வடுகங்கண்ணன், துளுவஞ்சாத்தன், கன்னடங்கொற்றன் என இவை மெல்லொற்றுவந்த தொகையாதலால், வடுகனாகிய கண்ணன், துளுவனாகிய சாத்தன், கன்னடனாகிய கொற்றன் என விரியும். இனி, சிறுபான்மை மெல்லொற்றுவந்தபோது, வடுகனுக்குமகனாகிய கண்ணன் என இவ்வாறும் விரியும் என்று அறிக.

வல்லொற்று முதல்மொழி வந்து புணர்ந்தபொழுது, "சிலவிகாரமா முயர்திணை" என்றதனால் ஈறுகெட்டு அவ்வல்லொற்றும் அதற்கு இனமான

மெல்லொற்றும் மிகப்பெற்று, வேற்றுமைத்தொகையோ பண்புத்தொகையோ என ஐயப்பட நின்றபோது, இக்குறியினுல் துணியப்படு மென்றதாயிற்று. வடுகநாகன், வடுகவணிகன், வடுகவரசன் எனப் பிறமுதல்மொழிகள் வந்து புணர்ந்தால், சொல்லுவான் குறிப்பாலன்றி இவ்வாறு துணியப்படாவென்க. (உ0)

[உம்மைத்தொகைக்குப் புறனடை.]

௩எஉ. உயர்திணை யும்மைத் தொகை பல ரீறே.

(இ - ள்.) உயர்திணை உம்மைத்தொகை - உயர்திணை யொருமையில் வருகிற உம்மைத்தொகைகள், பலர் ஈறே - (ரகரமெய்யும் 'கள்' என்பதுமாகிய) பலர்பால் விகுதிகளை ஈற்றிலுடையனவேயாம்; (எ - று.)
(உ-ம்.) கபிலபரணர், நபுலவிபுலர், சேரசோழபாண்டியர், தேவன்தேவிகள்.

'பலரீறே' என்ற தேற்றேகாரத்தால் - அஃறிணை யொருமையிலும் பொதுத்திணையொருமையிலும் வருகிற உம்மைத்தொகைகள் தம்தம் பன்மையீருகவே வரவேண்டுமென்கிற நியதி யில்லாமல், உண்மையின்மைகள், உண்மையின்மை, இராப்பகல்கள், இராப்பகல் எனவும்; தந்தைதாயர், தந்தைதாய், சாத்தன் சாத்தியர், சாத்தன்சாத்திகள், சாத்தன்சாத்தி எனவும் பன்மையீற்ருலும், ஒருமையீற்ருலும் வரு மென்ற தாயிற்று. (உக)

[தொகைநிலைத் தொடர்மொழிகள் பலபொருள் படுதல்.]

௩எ௩. தொக்குழி மயங்குந இரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கு மென்ப.

(இ - ள்.) தொக்க உழி-(வேற்றுமையுருபு முதலியன) தொக்குநின்ற இடத்து, மயங்குந-(பொருள்களால்)மயங்குதற்கு உரிய தொடர்மொழிகள், இரண்டுமுதல் ஏழ் எல்லை பொருளின்-இரண்டுமுதல் ஏழுவரையில் உள்ள பொருள்களால், மயங்கும்—, என்ப - என்றுசொல்வர், (புலவர்); (எ - று.)
இது, பொருள்மயக்க மெனப்படும்.

தொகைநிலைத் தொடர்மொழிகள் விரித்துப் பொருள் கொள்ளப்படுமிடத்து ஒருபொருள் கொள்ளப்படுவதுமன்றி இரண்டுபொருள்முதல் ஏழுபொருள்வரையில் பலபொருள்களும் கொள்ளப்படு மென்றபடி - [மயங்குதல் - இணங்குதல்.] தொக்குழி - தொக்கஉழி என்பதன் விகாரம்.

'பொருள்'எனப் பொதுப்படச் சொன்னதனுல்-பெரும்பாலும் தொகைநிலைப்பொருளாலும், சிறுபான்மை தொகாநிலைப் பொருளாலும் மயங்கும்.

(உதாரணம்.)

தெய்வவணக்கம் - தெய்வத்தை வணங்கும் வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம் என இரண்டு பொருள்களால் மயங்கியது.

தற்சேர்ந்தார் - தன்னைச் சேர்ந்தார், தன்னொடு சேர்ந்தார், தன்கண் சேர்ந்தார் என மூன்று பொருள்களால் மயங்கியது.

சொல்லிலக்கணம் - சொல்லுக்கு இலக்கணம், சொல்லினது இலக்கணம், சொல்லின்கண் உள்ள இலக்கணம், சொல்லிலக்கணம் சொன்ன நூல் என நான்கு பொருள்களால் மயங்கியது.

பொன்மணி-பொன்னையுடைய மணி, பொன்னாலாகிய மணி, பொன்னோடு சேர்ந்த மணி, பொன்னின்கண் உள்ள மணி, பொன்னும் மணியும் என ஐந்து பொருள்களால் மயங்கியது.

மரவேலி - மரத்தைக்காக்கும் வேலி, மரத்தாலாகிய வேலி, மரத்திற்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்து வேலி, மரமாகிய வேலி என ஆறு பொருள்களால் மயங்கியது.

சொற்பொருள்-சொல்லாலறியப்படும் பொருள், சொற்குப் பொருள், சொல்லினது பொருள், சொல்லின்கண் பொருள், சொல்லாகிய பொருள், சொல்லும் பொருளும், சொல்லானது பொருள் என ஏழு பொருள்களால் மயங்கியது. (சொல்லானது பொருளென்றது, தொகாநிலைப் பொருளான எழுவாய்த்தொடர்.)

புலி கொல் யானை என்னும் பன்மொழித்தொடர்-புலியைக் கொன்ற யானை, புலியானது கொன்ற யானை, புலியினாற் கொல்லப்பட்ட யானை என மூன்று பொருள்களால் மயங்கியது.

இவ்வாறு எளிதிற் பொருள்கொள்ளாமல், வலிதிற் பொருள்கொள்ளப் புகுந்தால் எழுநிலையென்னும் வரம்பில் நில்லாமல் பலவாமாதலின், அது மரபன்று என்பார், 'என்ப' எனப் புலவர்மேல் ஏற்றிக் கூறினார். (உஉ)

தொகாநிலைத் தொடர்மொழிகள்.

[தொகாநிலைத் தொடர்மொழி இத்தனையென்பது.]

‡ ௩௭௪. முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடையுரி அடுக்கிவை தொகாநிலை.

(இ - ள்.) முற்று - வினைமுற்றும், ஈர் எச்சம் - பெயரெச்சமும் வினையெச்சமும், எழுவாய் - எழுவாயும், விளி - விளியும் ஆகிய, பொருள் - ஐவகைப்பொருளில் (பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும்), ஆறு உருபு - (வேற்றுமைப்பொருளில் அவற்றின் உருபுகளாகிய இரண்டாவது முதலிய) ஆறு உருபுகளும்(இடையில் விரிந்து நிற்கப் பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும்), இடை - இடைச்சொற்புணர்ச்சியும், உரி - உரிச்சொற்புணர்ச்சியும், அடுக்கு - ஒருசொல் அடுக்கிவரும் புணர்ச்சியும், இவை - ஆகிய இவ்வொன்பதும்,—தொகாநிலை-தொகாநிலைத் தொடர்மொழிகளாம்;(எ - று.)

தொகாநிலைத் தொடர்மொழிகளாவன-நிலைமொழி வருமொழிகளின் இடையில் வேற்றுமையுருபு முதலியன தொக்குநில்லாமலும், ஒருமொழித் தன்மைப்படாமலும் சொற்கள் தொடர்வன.

(உ - ம்.) (க) உண்டான் சாத்தன் (தெரிநிலை)
பெரியன் கொற்றன் (குறிப்பு) } வினைமுற்றுத்தொடர்,

(உ) உண்ட சாத்தன் (தெரிநிலைப்)
கரிய சாத்தன் (குறிப்புப்) } பெயரெச்சத்தொடர்.

(ங) உண்டு வந்தான் (தெரிநிலை)
விருந்தின்றி உண்ணுன் (குறிப்பு) } வினையெச்சத்தொடர்.

(ச) சாத்தன் வந்தான்—எழுவாய்த்தொடர்.

(ரு) சாத்தா வா —விளித்தொடர்.

(சா) குடத்தை வனைந்தான்
வாளால் வெட்டினன்
இரப்போர்க்கு ஈந்தான்
மலையின் இழிந்தான்
சாத்தனது கை
மணியின்கண் ஒளி } வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

(எ) மற்று ஒன்று—இடைச்சொல்தொடர்.

(அ) நனி பேதை—உரிச்சொல்தொடர்.

(கூ) பாம்பு பாம்பு—அடுக்குத்தொடர்.

இவையெல்லாம் நிலைமொழிநோக்கி யுணர்க. (உங)

வழு, வழாநிலை, வழுவமைதி.

[வழுக்கள் - எ.]

‡ நுஎரு. திணையே பாலிடம் பொழுது வினஇறை
மரபா மேழும் மயங்கினும் வழூவே.

(இ - ள்.) திணையே - இருதிணையும், பால் - ஐம்பாலும், இடம்-மூவிடமும், பொழுது - முக்காலமும், வின - வினவும், இறை - விடையும், மரபு - (பலவகை) மரபுகளும், ஆம் - ஆகிய, எழும்—, மயங்கின் - தம் தம் முறை தவறிவந்தால், வழு ஆம் - வழுவாகும்; (எ - று.)—ஆகையால், இவ்வாறே எழுவகை வழுக்களையும் அறிந்து, வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் அவை வராமல் நீக்குக.

திணை முதலிய ஆறும் மரபா மாறுனும், இங்கே எடுக்காதொழிந்தவற்றையே மரபென்றுகொள்க வென்பார்,அதனை இறுதியிற் கூறினர். (மரபு - தொன்றுதொட்டு வழங்கும் முறைமை; இறை - எதிர்மொழி, விடை.)

சொற்கள் தொடருமிடத்து, முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் திணை பால் இடம் காலம் வின விடை மரபு என்னும் இவ்வேழிலும் மாறுபடாமல் தொடர்ந்துநிற்பது, முறைமையாம்; அவ்வாறுதொடர்ந்து நிற்பன, 'வழாநிலை' எனப்படும்: வழாநிலையாவது - இலக்கணக்குற்றமில்லாதது. அத் திணை பால் முதலியவற்றில் மாறிநிற்பன, 'வழு' வாம்: வழுவாவது - இலக்கணக் குற்ற முள்ளது. அவற்றில் மாறிநின்று இலக்கணக்குற்ற முள்ளதாகக் காணப்பட்டாலும், முன்னோரால் இருக்கலாமென்று ஏற்றுக்கொண்டு அமைக்கப்பட்டன, 'வழுவமைதி'யாம். இம்மூன்றனுள், வழு நீக்கப்படும்; மற்றை இரண்டும் கொள்ளப்படும்.

(உ - ம்.) (க) அவன் வந்தது—திணை வழு.
(உ) அவன் வந்தான்—பால் வழு.
(ங) யான் வந்தான்—இட வழு.
(ச) நாளை வந்தான்—கால வழு.
(ரு) கறக்கிற எருமை பாலோ சினையோ?---வினு வழு.
(சு) பட்டுக்கோட்டைக்கு வழி எது? என்றால் கொட்டைப்பாக்கு எட்டுப்பணம் என்பது. } விடை வழு.
(எ) யானைசெலுத்துபவனை இடையனென்பது—மரபுவழு. (உச)

[வினுவிடைகள் திணைபால்களில் வழுவாமை.]

† ஙஎசு. ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருள்மே லன்மையும் விளம்புப.

(இ - ள்.) திணை பால் ஐயம் - திணைப்பொருளிலும் பாற்பொருளிலும் ஐயம் (சந்தேகம்) தோன்றியவிடத்து அதனை,—அவ்வப்பொதுவினும்-அத்திணைகளுக்கும் பால்களுக்கும் பொதுவாகிய சொல்லாலும்,—மெய் தெரி பொருள்மேல் - உண்மையாகத் துணிந்த பொருளின்மேல், அன்மையும் - அல்லாத தன்மையை வைத்தும்,—விளம்புப-சொல்வர், (அறிவுடையோர்.)

(உதாரணம்.)

வினு. (க) திணையில் ஐயம் தோன்றியபோது,'குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகிற உரு' எனப் பொதுச்சொல்லால் வினவுக. குற்றிக்கும் மகனுக்கும் பொதுப்பட நிற்றலால், உரு - பொதுச்சொல்லாயிற்று. (குற்றி - கட்டை) இவ்வாறு கூறாமல் தோன்றுகின்றது, தோன்றுகின்றான் எனச் சிறப்புச்சொல்லாற் கூறின், திணைவழுவும் வினுவழுவுமாம்.

(உ) க. உயர்திணையிற் பால் ஐயம் தோன்றியபோது, 'ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர்' எனப் பொதுச்சொல்லால் வினவுக. ஆண் பெண் இரண்டல்லது பலர்பாலென வேறொன்று இல்லாமல் அவ்விருபாலுக்கும் பொதுப்பட நிற்றலால், தோன்றுகிறவர் என்பது-பொதுச்சொல்லாயிற்று. தோன்றுகிறவன் தோன்றுகிறவள் எனச் சிறப்புச் சொல்லாற் கூறின், பால்வழுவும் வினுவழுவுமாம்.

உ. அஃறிணையிற் பால் ஐயம் தோன்றியபோது,'ஒன்றோ பலவோ இவ்வயல் புகுந்த மாடு' எனப் பொதுச்சொல்லால் வினவுக. மாடு என்பது - பால்பகா அஃறிணைப்பெயராய், அத்திணையிருபாலுக்கும் பொதுச்சொல்லாயிற்று.புக்கதுபுக்கனஎனச் சிறப்புச்சொல்லாற் கூறின், பால்வழுவும் வினுவழுவுமாம்.

விடை. (க) குற்றியோ மகனோ என்று ஐயப்பட்டு வினவியபோது, துணிந்த பொருள்குற்றியாயின்'மகனன்று'என்றும்,மகனுயின்'குற்றி

யல்லன்' என்றும் துணிந்த பொருளின்மேல் மற்ருென்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

(உ) க. ஆண்மகனே பெண்மகளோ என்று ஐயப்பட்டு வினவியபோது, துணிந்தபொருள் ஆண்மகனுயின் 'பெண்மகளல்லன்' என்றும், பெண்மகளாயின் 'ஆண்மகனல்லள்' என்றும் துணிந்த பொருளின்மேல் மற்ருென்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

உ. ஒன்ருே பலவோ என்று ஐயப்பட்டுவினவியபோது, துணிந்த பொருள் ஒன்ருயின் 'பலவன்று' என்றும், பலவாயின் 'ஒன்றல்ல' என்றும் துணிந்தபொருளின்மேல்மற்ருென்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

'மகனல்லன், அவ்வுருக் குற்றி' என இவ்வாறு கூறினுல், சொல்பெருகுத லென்னும் விடைவழூவாம் (உரு)

[திணை வழுவமைதி]

‡ ௩௭௭. உயர்திணை தொடர்ந்த பொருள்முத லாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின.

(இ-ள்.) உயர்திணை-உயர்திணையெழுவாயை, தொடர்ந்த-தொடர்ந்து வந்து தானும் எழுவாயாக நிற்கின்ற, பொருள் முதல் ஆறும் - (அஃறிணையாகிய) பொருள் இடம் முதலிய ஆறும், அதனொடு சார்த்தின் - அவ்வுயர் திணையோடு சேர்த்து முடிக்கப்பட்டால், அத் திணை முடிபின் - அவ்வுயர் திணைமுடிபைப் பெறுவனவாம்; (எ - று.)

தொடர்தலாவது - அஃறிணையாகிய பொருள் முதலிய ஆறும் உயர் திணைக்குச் சம்பந்தப்பட்டதாக நிற்றல். சார்த்தலாவது-அஃறிணையாகிய பொருள்முதலியவற்றின் தன்மையை அவற்றையுடைய உயர்திணையின் மேல் ஏற்றிக்கூறுதல்.

(உ - ம்.)

நம்பி பொன் பெரியன்	—பொருள்	இங்கே உயர் திணையெழுவாயின் பயனிலையோடு
நம்பி நாடு பெரியன்	—இடம்	
நம்பிவாழ்நாள்பெரியன்	—காலம்	
நம்பி மூக்குக் கூரியன்	—சினை	அஃறிணை யெழுவாயும் முடிந்தமை அறிக.
நம்பி குடிமை நல்லன்	—குணம்	
நம்பி நடை கடியன்	—தொழில்	

பொன் என்னும்அஃறிணையெழுவாய், நம்பிஎன்னும் உயர்திணையெழுவாயினது பயனிலையாகியபெரியன்என்னும்உயர்திணைவினையைக்கொண்டு முடிதலால் வழுவாகி, தொடர்புண்டாயிருத்தல்பற்றிச்சார்த்திமுடித்தலால் வழுவமைதியாயிற்று. அஃறிணையாகிய பொன்னினது தன்மையான பெருமை, அதனையுடைய உயர்திணையாகிய நம்பியின்மேல் ஏற்றப்பட்டது.

இனி, கிணறு நீர் ஊறிற்று, மாடு கோடு கூரிதுஎன அஃறிணையோடு சேர்ப்பின் அஃறிணை முடிபினவாதலும் கொள்க.

'சார்த்தின்' எனவே, சார்த்தாவிட்டால்வழாநிலையாகநம்பிக்குப்பொன் பெரிது, நம்பிக்கு வாழ்நாள் பெரிது எனத் தம் முடிபு கொள்ளும். (உ௬)

[பலபொருள் கலக்கையில் திணை பால் மரபு வழுவமைதி.]

‡ ௩எ௮. திணை பால் பொருள் பல விரவின சிறப்பினும்
மிகவினு மிழிபினு மொருமுடி பினவே

(இ - ள்.) திணை-திணைகளும், பால்-பால்களும், பல பொருள்-(வெவ்வேறு வினைகளுக்கு உரிய) பலபொருள்களும், விரவின-கலந்து ஒருதொடரால் வருவனவாயின் அவை,—சிறப்பினும்-சிறப்பினாலும், மிகவினும்-மிகுதியினாலும், இழிபினும்-இழிவினாலும், ஒரு முடிபின-ஒருமுடிபைப்பெறுவனவாம்; (எ - று.)

(உதாரணம்.)

திணை. (க) 'பொன்னனும் குதிரையும் வந்தார்கள்' என்பதில்-இருதிணையும் கலந்து, சிறப்பினால் 'வந்தார்கள்' என்னும் உயர்திணைமுடிபைப் பெற்றன. உயர்திணையாயிருத்தல், இங்கே சிறப்பு.

(உ) "பார்ப்பார் தவரே சுமந்தார்பிணிப்பட்டார், மூத்தாரிளையார் பசுப் பெண்டி ரென்றிவர்கட்கு" என்பதில்-இருதிணையும் கலந்து, மிகுதியால் 'இவர்கள்' என்னும் உயர்திணைமுடிபைப் பெற்றன. பசு என அஃறிணைப்பொருள் ஒன்றேயாக, பார்ப்பார் முதலிய உயர்திணைப்பொருள் எழாதல், இங்கே மிகுதி.

(௩) 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்பதில் - இருதிணையும் கலந்து, இழிவினால் 'விடா' என அஃறிணைமுடிபைப் பெற்றன. விடத்தக்கதை விடாமை, இங்கே இழிவு.

பால். "தானும் தன்தையலும்தாழ்சடையோனாண்டிலனேல்" என்பதில்-ஆண்பாலும் பெண்பாலும் கலந்து, சிறப்பினால் 'ஆண்டிலன்' என்னும் ஆண்பால்முடிபைப் பெற்றன. பெண்ணினும் ஆண் உயர்ந்தமை, இங்கே சிறப்பு.

இனி, கலவாமல் எண்ணிமுடிக்கும்போது, தோழனும் தானும் வந்தான்,' 'தோழியும் தானும் வந்தாள்' எனஒருமைமுடிபையேற்றலும் கொள்க.

மரபு. கறியும் சோறும் உண்டான், மாலையும்முடியும் கவித்தான்என்பவற்றில்-வெவ்வேறு வினைகளுக்கு உரிய பலபொருள்கள் கலந்து,சிறப்பினால் 'உண்டான்,' 'கவித்தான்' என ஒருபொருளுக்கு உரியவினைமுடிபைப்பெற்றன.உண்ணலென்னும்வினைக்குஉரியசோறு-தின்னலென்னும் வினைக்கு உரிய கறியினும் தலைமையுடைமையும்,கவித்தலென்னும் வினைக்கு உரிய முடி - சூடுதலென்னும் வினைக்கு உரிய மாலையினும் தலைமையுடைமையும், இங்கே சிறப்பு.

(இங்கே இறுதியிற் சொல்லிய மரபுவழுவமைதி, "வேறுவினைப் பல்பொருள்" என மேல்வருஞ் சூத்திரத்தோடு மாறுகொளக் கூறலன்றோவெனின்;—சிறப்பு முதலியன குறியாமல் எண்ணியபோது முடியும் மரபு அங்கே கூறுதலால், மாறுகொளக்கூறலன் றென்க). (உஎ)

[திணை பால் வழுவமைதி.]

‡ ௩௭௯. உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்
இழிப்பினும் பால்திணை இழுக்கினு மியல்பே.

(இ - ள்.) உவப்பினும் - மகிழ்ச்சியினாலும், உயர்வினும் - மேன்மைப் படுத்திச்சொல்லுதலினாலும், சிறப்பினும் - சிறப்பினாலும், செறலினும் - கோபத்தினாலும், இழிப்பினும்-பழிப்பினாலும், பால் திணை-பாலும் திணையும், இழுக்கினும் - வழுவிவர்தாலும், இயல்பே - அமைதியேயாம்; (எ-று.)

பால்- (க) தன் புதல்வனை 'என் அம்மை வந்தாள்' என்பது, உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(உ) ஒருவனை 'அவர் வந்தார்' என்பது, உயர்த்திச்சொல்லுதலால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

(௩) "மகிழ்வார்க்கும் அல்லார்க்கும் தாயாகித் தலையளிக்கும் தண்டுறை யூரன்"என்பது,சிறப்பினால்ஆண்பால்பெண்பாலாயிற்று.

(௪) "எனைத்துணையராயினு மென்னும் தினைத்துணையும், தேரான் பிறனில் புகல்" என்பது, கோபத்தினால் பன்மைப்பால் ஒருமைப்பாலாயிற்று.

(௫) பெண்வழிச் செல்பவனை 'இவன் பெண்' என்பது, இழிவினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

திணை. (க) ஒரு பசுவை 'என் அம்மைவந்தாள்' என்பது, உவப்பினால்அஃறிணை உயர்திணையாயிற்று.

(உ) "பசுங்கிளியார் சென்றார்கொல்" என்பது, உயர்த்திச் சொல்லுதலால் அஃறிணை உயர்திணையாயிற்று. (கிளியார்-கிளி.)

(௩) "தம்பொரு ளென்ப தம்மக்கள்" என்பது, சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(௪) "எவவும்செய்கலான் தான்தேரானவ்வுயிர், போஒமளவுமோர் நோய்" என்பது,கோபத்தினால்உயர்திணை அஃறிணையாயிற்று.

(௫) நாம் கடவுளுடைமை'என்பது, இழிவினால் உயர்திணை அஃறிணையாயிற்று. இங்கே, இழிவு - தமது பணிவு.

இனி, மகனை 'அப்பன் வந்தான்' என்றும், மகளை 'அம்மை வந்தாள்' என்றும் வழங்கும் மரபுவழுவமைதிகளும் கொள்க. (உஅ)

[பால் இட வழுவமைதி.]

‡ ௩௮௦ ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்
ஒரிடம் பிறஇடந் தழுவலு முளவே.

(இ - ள்.) ஒருமையின் பன்மையும்-ஒருமைப்பாலில் பன்மைப்பாற்சொல்லையும், பன்மையின் ஒருமையும் - பன்மைப்பாலில் ஒருமைப்பாற்சொல்லை

யும், ஓர் இடம் பிற இடம்-ஓரிடத்தில் பிறஇடச் சொல்லையும், தழுவலும்-தழுவிக்கூறுதல்களும், உள-உள்ளனவாம்; (எ - று.)

(உதாரணம்.)

பால். (க) 'வெயிலெல்லாம் மறைத்தது மேகம்' என்பதில், வெயில் என்னும் ஒருமைப்பாலில் எல்லாம் என்னும்பன்மைப்பாற்சொல்சேர்த்துச் சொல்லப்பட்டது. (வெயில் முழுவதையும் என்று கருத்து.) இது, ஒருமைப்பன்மை மயக்கம்.

(உ) 'இரண்டு கண்ணும் சிவந்தது' என்பதில், இரண்டு என்னும் பன்மைப்பாலில் சிவந்தது என்னும் ஒருமைப்பாற்சொல்சேர்த்துச் சொல்லப்பட்டது. (தனித்தனி சிவந்தது என்று கருத்து.) இது, பன்மையொருமை மயக்கம்.

இடம். (க) 'சாத்தன் தாய் இவை செய்வேனே' என்பதில், யான் எனச் சொல்லவேண்டும் தன்மையில்தாய்எனப் படர்க்கைச்சொல்சேர்த்துச்சொல்லப்பட்டது;(சாத்தன் தாயாகிய யான்என்பதுபொருள். இது, தன்மைப் படர்க்கை.

(உ) "எம்பியை யீங்குப்பெற்றேன்" என்பதில், தன்தம்பியைமுன்னிலைப்படுத்தி அவனையே நோக்கிக் கூறுதலால், நின்னை எனச் சொல்லவேண்டும் முன்னிலையில்எம்பியை எனப்படர்க்கைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது. இது, முன்னிலைப் படர்க்கை.

நீயோ அவனோ யார் இது செய்தார்; யானோ அவனோ யார் இதுசெய்தார், நீயோ யானோ யார் இது செய்தார், நீயோ அவனோ யானோயார்இது செய்தார் எனக் கலந்து ஓரிடத்தில் பிறஇடம் வருதலும் கொள்க. (உக)

[இடம் வழுவாமற் காத்தல்.]

நூ௪க. தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை
எழுவா யிரண்டும் எஞ்சிய வேற்கும்.

(இ - ள்.) தரல் வரல் கொடை செலல் - இந்நான்கு சொற்களும், படர்க்கை-படர்க்கையை, சாரும்-அடையும்; எழுவாய் இரண்டும்-(இவற்றுள்) முதலில் நின்ற (தரல் வரல் என்னும்) இரண்டு சொற்களும், எஞ்சிய ஏற்கும் - ஒழிந்த தன்மை முன்னிலைகளையும் ஏற்கும்; (எ - று.)—இங்கே, 'எழுவாய்' என்னும் சொல், முதலென்னும் பொருளது.

தரல் முதலியன - அந்தப்பகுதிகளை உணர்த்திநின்றன வாதலால், அப்பகுதிகளாற் பிறக்கும் வினைகளையெல்லாம் கொள்க.

(உதாரணம்.)

அவனுக்குத் தந்தான் அவனிடத்து வந்தான்	அவனுக்குக் கொடுத்தான் அவனிடத்துச் சென்றான்	நான்கும்படர்க்கையைச் சார்ந்தன.
எனக்குத் தந்தான், உனக்குத் தந்தான் என்னிடத்து வந்தான், உன்னிடத்து வந்தான்		முதலிரண்டும் மற்றவைகளை ஏற்றன.

தரல் வரல் என்னும் இரண்டையும் தன்மை முன்னிலைகளுக்கும் கூட்டியதனல்-படர்க்கைக்கே சிறந்தன - கொடை செலல் என்னும் இரண்டும் என்பதும்,மற்றைத் தரலும் வரலும் படர்க்கைக்கு அவ்வளவாகச் சிறந்தனவல்ல என்பதும்,கொடை செலல்கள் தன்மை முன்னிலைகளுக்கு வாராஎன்பதும் பெறப்படும். இது, பெரும்பான்மைபற்றிய பழையவழக்கு.

இவை - சிறுபான்மை இம்முறை தவறி எனக்குக் கொடுத்தான், நின்பால் சென்ருன் என மாறி வருதலும் உண்டு; அவை முன்கூறிய இடவழுவமைதியின்பால் படும்.

வினைச்சொல் பால்குறிக்கும் விகுதியால் மூன்றிடங்களுக்கும் உரியதாதலை வினையியலிற்கூறி,தரல் முதலியநான்கும் பகுதிதானே|இடங்குறித்து நிற்றலால், இங்குக் கூறினர்; அவற்றுள் அடங்காமையின்.

'ஈங்கு' முதலியன தன்மையிலும், 'ஆங்கு' முதலியன படர்க்கையிலும் வருதலையும் இங்கே அமைத்துக்கொள்க. (௩0)

[காலம்.]

‡ ௩அ௨. இறப்பெதிர்வு நிகழ்வெனக் காலம் மூன்றே.

(இ - ள்.) காலம் - (முன்சொல்லப்பட்ட) காலம்,—இறப்பு - இறந்தகாலமும், எதிர்வு - எதிர்காலமும், நிகழ்வு - நிகழ்காலமும், என - என்று, மூன்று - மூன்ரும்; (எ - று.)

இறப்பு - நடந்தது. எதிர்வு - நடக்கப்போகிறது. நிகழ்வு-நடக்கிறது. நிகழ்காலச்சொல் மற்றையகாலங்களுக்கும் உரியதாகுந் தன்மையைக் கருதி, அதனை இறுதியில் வைத்தன ரென்க. (௩க)

[கால வழுவமைதி.]

‡ ௩அ௩. முக்கா லத்தினு மொத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே.

(இ - ள்.) முக்காலத்தினும் ஒத்து இயல் பொருளை-மூன்றுகாலங்களிலும் (தம்தொழில் இடைவிடாமல்) ஒரு தன்மையாக நடக்கின்ற பொருள்களை, நிகழும் காலத்தான் -நிகழ்காலத்தினல், செப்புவர்-சொல்வர்;(எ-று.)

(உ - ம்.) மலை நிற்கின்றது, தெய்வம் இருக்கின்றது, கடவுள் அளிக்கின்ருர். (மலைக்கு நிற்றலும்,தெய்வத்திற்கு இருத்தலும், கடவுளுக்கு அளித்தலும் முக்காலத்திலும் உள்ளனவாதல் காண்க.) (௩உ)

[இதுவும் அது.]

‡ ௩அச. விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும்
பிறழவும் பெறாஉம்முக் காலமு மேற்புழி.

(இ - ள்.) விரைவினும் - விரைவினுலும், மிகவினும் - மிகுதியினுலும், தெளிவினும் - தெளிவினுலும், இயல்பினும்-(இம்மூன்று காரணங்களு மில்லாமல்) இயல்பினுலும், முக் காலமும் - மூன்று காலங்களும், பிறழவும்

பெறாஉம்-ஒன்று மற்றொன்றாக மாற்றிச் சொல்லப்படவும் பெறும்: எற்பு உழி - எற்குமிடத்து; (எ - று.)—மிகுதி - பெரும்பான்மை.

(உதாரணம்.)

(க) உண்டுபோவதற்கு இருப்பவனை விரைவில் உடன் அழைத்துக்கொண்டு போகவேண்டிய மற்றொருவன் 'இன்னும் உண்டிலையோ?' என்றால், அவன் 'உண்டேனுண்டேன்' என்பான். உண்கிறவனை அவ்வாறு வினவினால் அவனும் 'உண்டேனுண்டேன்' என்பான். இங்கே விரைவினால், எதிர்காலமும், நிகழ்காலமும் - இறந்தகாலமாகச் சொல்லப்பட்டன.

(உ) அக்காட்டில் போனால் கூறை பறிகொடுத்தான், பறிகொடுக்கிறான்; களவுசெய்தால் கையறுக்கப்பட்டான், கையறுக்கப்படுகிறான் என்பவற்றில், மிகுதியினால், எதிர்காலம் - இறந்தகாலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது. கூறை பறிகொடுத்தலும், கையறுக்கப்படுதலும் சிறுபான்மை தப்பினும் தப்புமாதலால், மிகுதி யெனப்பட்டன.

(ங) அறம்செய்தால் சுவர்க்கம் புகுந்தான், புகுகின்றான்; எறும்பு முட்டையெடுத்துக்கொண்டு மேடேறினால் மழைபெய்தது, பெய்கின்றது என்பவற்றில், தெளிவினால், எதிர்காலம்-இறந்தகாலமும், நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது. சுவர்க்கம்புகுதற்கு அறஞ்செய்தல் காரணமென்பது சாஸ்திரப்பிரமாணத்தினாலும், மழைபெய்தற்கு எறும்பு முட்டையெடுத்துக்கொண்டு மேட்டில் ஏறுதல் அறிகுறி யென்பது பிரதியக்ஷப்பிரமாணத்தினாலும் தெளியப்பட்டதனால், தெளிவாயின.

(ச) யாம் முன்னே விளையாடுவது இச்சோலை, விளையாடுகிறது இச்சோலை என்பவற்றில், வேறொருகாரணமு மில்லாமல், இயல்பினால், இறந்தகாலம் - எதிர்காலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது. (ஙங)

[அறுவகை வினா.]

‡ ஙஅ௫. அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை
ஏவல் தரூம் வினா ஆறு மிழுக்கார். *

(இ - ள்.) அறிவு - அறிதலும், அறியாமை - அறியாமையும், ஐயுறல் - சந்தேகப்படுதலும், கொளல் - வாங்கிக்கொள்ளுதலும், கொடை - கொடுத்தலும், ஏவல் - ஏவுதலும் ஆகிய அறுவகைப் பொருளையும், தரும் - தருதலால் வருகின்ற, வினா ஆறும் - ஆறுவகை வினாக்களையும், இழுக்கார் - தவறாமல் கொள்வர், (புலவர்); (எ - று.)

(உதாரணம்.)

(க) ஆசிரியன் 'இச்சூத்திரத்திற்குப் பொருள்யாது?' என்பது-அறிவினா.

(உ) மாணாக்கன் 'இச்சூத்திரத்திற்குப் பொருள்யாது?' என்பது-அறியாவினா.

(ங) 'குற்றியோ? மகனோ?' என்பது - ஐயவினா.

---

* 'இழுக்கா' என்றும் பிரதிபேதம்.

(௪) 'பயறு உள்ளதோ வணிகரே?' என்பது - கொளல்வினா.
(௫) 'சாத்தனுக்கு ஆடையில்லையோ?' என்பது - கொடைவினா.
(௬) 'சாத்தா! உண்டாயா?' என்பது - ஏவல்வினா.

(அறிவினா-தான் ஒருபொருளை அறிந்திருந்து அப்பொருள் பிறர்க்குத் தெரியுமாவென்பதை அறிதற்பொருட்டு அதனைக்குறித்துப் பிறரைக்கேட்பது. அறியாவினா - தான் அறியாத ஒரு பொருளை அறிந்து கொள்ளுதற் பொருட்டுப் பிறரைக் கேட்பது. ஐயவினா - தனக்குச் சந்தேகமாயிருப்ப தொரு பொருளை அச்சந்தேகம் தீர்த்துக்கொள்ளுதற்பொருட்டுப் பிறரைக் கேட்பது. கொளல்வினா-தான் ஒருபொருளை வாங்கிக் கொள்ளுதற்பொருட்டு அப்பொருள் இருத்தலைப்பற்றிப் பிறரைக் கேட்பது. கொடைவினா - தான்ஒருபொருளைக்கொடுத்தற்பொருட்டு அப்பொருள் இருத்தலைப்பற்றிப் பிறரைக் கேட்பது. ஏவல்வினா - தான் ஒருதொழிலைச் செய்யும்படி ஏவுதற் பொருட்டு அத்தொழிலின் நிகழ்ச்சியைப்பற்றிப் பிறரைக்கேட்பது.) (௩௪)

[எட்டுவகை விடை.]

‡ ௩௮௬. சுட்டு மறை நேர் ஏவல் வினாதல்
உற்ற துரைத்த லுறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய ஐந்துமப் பொருண்மையின் நேர்ப.

(இ - ள்.) சுட்டு - குறித்துக்காட்டிக் கூறுதலும், மறை-எதிர்மறுத்துக் கூறுதலும், நேர் - உடன்பட்டுக்கூறுதலும், ஏவல்-எதிராக ஏவுதலும், வினாதல் - எதிராக வினாவுதலும், உற்றது உரைத்தல்-நேர்ந்ததைச் சொல்லுதலும், உறுவது கூறல் - இனி நேர்வதைச் சொல்லுதலும், இனம் மொழி - (வினாவியதற்கு) இனமானதைச் சொல்லுதலும், எனும்-என்ற, எண் இறையுள் - இவ்வெட்டுவகை விடைகளுள், இறுதி நிலவிய ஐந்தும் - கடையில் நின்ற (ஏவல்முதலிய) ஐந்தும், அப்பொருண்மையின்-அவ்விடைப் பொருளைக் குறிப்பால் தருதலினால், நேர்ப-(விடைகளென்று) தழுவிக்கொள்வர், (புலவர்); (எ - று.)

எனவே - முதல் மூன்றும் வெளிப்படை விடையும், மற்றை ஐந்தும் எதிர்மறைப்பொருள் தரும் குறிப்புவிடையுமா மென்றதாயிற்று.

(உதாரணம்.)

(௧) 'உறையூர்க்கு வழி யாது?' என்று வினாவினால், 'இது' என்பது - சுட்டு விடை
(௨) 'இது செய்வாயா?' என்று வினாவியபோது, 'செய்யேன்' என்பது-மறை விடை.
(௩) 'இது செய்வாயா?' என்று வினாவியபோது, 'செய்வேன்' என்பது - நேர்விடை.
(௪) 'இது செய்வாயா?' என்று வினாவியபோது, 'நீ செய்' என்பது - ஏவல் விடை.

(ரு) ‘இதுசெய்வாயா?’ என்று வினவியபோது, ‘செய்வேனே?’ என்பது - வினவெதிர் வினுதல் விடை.

(சு) ‘இது செய்வாயா?’என்று வினவியபோது, ‘உடம்பு நொந்தது’‘நோவாநின்றது’ என்பன - உற்றதுரைத்தல் விடை.

(எ) ‘இது செய்வாயா?’ என்று வினவியபோது, ‘உடம்பு நோம்’ என்பது - உறுவதுகூறல் விடை.

(அ) ‘இது செய்வாயா?’ என்று வினவியபோது, ‘மற்றையது செய்வேன்’ என்பது - இனமொழிவிடை.

வினவெதிர் வினுதல் விடையாவது - தான் ஒரு வினவிற்குச் சொல்லும் உத்தரம் வேறொரு வினவடிவமாய் இருப்பது.

உறுகின்றதுரைத்தலும், உற்றதுரைத்தலில் அடக்கப்பட்டது.

“இனி, ‘நிலவிய’ என்ற மிகையானே, வின இன்றியும் செப்புவருவனவும் உள வென்க. அறிவானெருவன் ‘இன்னநாள் காற்றுஅடிக்கும்,இன்னநாள் மழைபெய்யும், இன்னநாள் வாழ்வுவரும்’ என்றலும், இரப்பவனெருவன் ‘கங்கையாடிப் போந்தேன்,ஒருபிடிசோறு தம்மின், ஓராடை தம்மின்’ என்றலும் காண்க; பிறவும் அன்ன” என்பது, பழைய உரை. (நகரு)

[வினவிடைகளில் முதல் சினை வழுவாமை.]

நகஎ. வினவினும் செப்பினும் விரவா சினைமுதல்.

(இ - ள்.) வினவினும்-வினவுதலினும், செப்பினும் - விடைகொடுத்தலினும், சினை முதல்-சினையும் முதலும், விரவா - (ஒற்றுமைபற்றிச்சினையும் முதலும் ஒன்று என்றுஎண்ணி முதலொடு சினையும் சினையொடு முதலுமாக) மயங்கச் சொல்லப்படாவாம்; (எ - று)

(உ-ம்.) கண் பிறழ்ந்ததோ கயல் பிறழ்ந்ததோ எனவும், சாத்தன் நல்லனே கொற்றன் நல்லனே எனவும்।இவ்வாறு சினையும் முதலும்பற்றி வினவியவர்க்கு - கண் பிறழ்ந்தது கயல் பிறழ்ந்தது எனவும் சாத்தன் நல்லன், கொற்றன் நல்லன் எனவும் விடை கொடுக்கப்படும்; எனவே - அதனை உடையாளைக் கருதி இவள் பிறழ்ந்தாளோ கயல் பிறழ்ந்ததோ என வினவுதலும்,இவள் பிறழ்ந்தாள் எனவிடைகொடுத்தலும்வழுவாமென்றதாயிற்று.

[மரபு.]

‡ நகஅ. எப்பொருளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதல் மரபே.

(இ - ள்.) எப் பொருள் - எந்தப்பொருளை, எச் சொலின்-எந்தச்சொல்லால், எ ஆறு-எவ்வழியால், உயர்ந்தோர் - அறிவுடையோர், செப்பினர் - சொன்னர்களோ, அப்படி செப்புதல் - (அப்பொருளை அச்சொல்லால்)அவ்வழியால் சொல்லுதலே, மரபு - மரபாம்; (எ - று.)

(உ - ம்.) குதிரைக்குட்டி, யானைக்குட்டி எனவும்; யானைக்கன்று, பசுவின் கன்று எனவும்; யானையிலத்தி, எருமைச்சாணம் எனவும்; யானைப்

பாகன், ஆட்டிடையன் எனவும் வரும். பசுவின்குட்டி, குதிரைக்குஞ்சு, யானைச்சாணம், ஆட்டுப்பாகன் எனக் கூறினுல், மரபுவழுவாம். (ருஎ)

[பொதுவினை மரபு வழாநிலை]

ருஅகூ. வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்
வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்.

(இ - ள்.) வேறு வினை - வெவ்வேறுவினைகட்கு உரிய, பல் பொருள்- பல பொருள்களையும், தழுவிய - ஒருசேரத் தழிவிநிற்கின்ற, பொது சொலும் - ஒரு பொதுச்சொல்லும், வேறு அவற்று எண்ணும் - வெவ்வேறு வினைக்கு உரிய பொருள்களை எண்ணிநிற்கும் பல சிறப்புச்சொற்களும்,— ஓர் பொதுவினை-(தமக்குள் ஒன்றற்குஉரிய சிறப்புவினையை வேண்டாமல்) எல்லாவற்றிற்கும் உரியதொரு பொதுவினையை, வேண்டும் - கொண்டு முடிந்து நிற்கும்; (எ - று.)

(உதாரணம்.)

(க) அடிசில் என்பது - உண்பன தின்பன நக்குவன குடிப்பனவற்றிற்கெல் லாம் பொதுச்சொல்லாதலால். அடிசில்அயின்றார், மிசைந்தார்என்றும்; அணி என்பது - கவிப்பன கட்டுவன இடுவன பூண்பனவற்றிற்கெல் லாம் பொதுச்சொல்லாதலால், அணி யணிந்தார், அணி தரித்தார்என் றும்; இயம் என்பது-கொட்டுவன ஊதுவனவற்றிற்கெல்லாம் பொதுச் சொல் லாதலால், இயம் இயம்பினர், இயம் புடுத்தார் என்றும்; படை என்பது - எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலால், படைவழங்கினர், படைதொட்டார்என்றும் பொதுவினையால் முடிக்க. (அடிசில் - உணவு. அணி - ஆபரணம் இயம் - வாத்தியம். படை - ஆயுதம். அயின்றார், மிசைந்தார் - உண் டார். அணிந்தார் - தரித்தார். இயம்பினர், படுத்தார் - முழங்கினர். வழங்கினர், தொட்டார் - பிரயோகித்தார்.)

(உ) இனி, சிறப்புச் சொற்களை எண்ணும்பொழுது, சில நாள் சோறும் சில நாள் மாவும் சிலநாள் நீரும் சிலநாள் சருகும் அயின்றார் அல்லது மிசைந்தார், முடியும் குழையும் மோதிரமும் அரைநாணும் அணிந் தார், பறையும் குழலும் இயம்பினர், வாளும் வேலும் வழங்கினர் என்று பொது வினையால் முடிக்க. (ருஅ)

[சிறப்புவினை மரபு வழாநிலை.]

ருகூ0. வினைசார் பினமிட மேவி விளங்காப்
பலபொரு ளொருசொற் பணிப்பர்சிறப் பெடுத்தே.

(இ - ள்.) வினை-(குறித்தபொருளை விளக்கும்) வினையும், சார்பு-சார் பும், இனம் - இனமும், இடம் - இடமும் முதலிய சொற்களை, மேவி - பொருந்தி, விளங்கா - பொருள் விளங்காத, பல பொருள் ஒரு சொல்-பல பொருள் களைக்குறிக்கும் ஒருசொல்லை, சிறப்பு எடுத்து - சிறப்புச்சொல் லோடுகூட்டி, பணிப்பர் - சொல்வர், (புலவர்); (எ - று.)

எனவே, வினைமுதலியவற்றுள் ஒன்றைப் பொருந்திப் பொருள்விளங்கிக்கிடந்த பலபொருளொருசொல்லை வாளா [சிறப்புச்சொல்லோடு கூட்டாமல்] கூறுவர்; வினை முதலியவற்றுள் ஒன்றைப் பொருந்தியாயினும் பொருந்தாமலாயினும் குறித்தபொருளை விளக்காமல் நிற்கின்ற பலபொருளொருசொல்லைச் சிறப்புச்சொற்கொடுத்துச்சொல்வா என்றதாயிற்று.

(உதாரணம்.)

(க) மா என்பது-மாமரத்திற்கும் வண்டிற்கும் குதிரைக்கும் திருமகளுக்கும் பொதுவாகிய பலபொருளொருசொல். இப்பொருள்களுள்-'மாப் பூத்தது' என்றவிடத்து, மரமென்பது வினையால் விளங்கிற்று. 'மா வீழ்மலர்'என்றவிடத்து, வண்டென்பது சார்பால் விளங்கிற்று. 'தேர் கரிமாக் காலாள்' என்றவிடத்து, குதிரையென்பது இனத்தால் விளங்கிற்று. 'மா வாழ் மார்பன்' என்றவிடத்து, திருவென்பது இடத்தால் விளங்கிற்று. இவை - சிறப்புச்சொல் கொடாமல் கூறப்பட்டன.

(உ) இனி, மா எறிஞன், மா யாது என்றவிடத்து, குறித்த பொருள் விளங்காமையால், விளங்குதற்பொருட்டு, பாய்மா எறிஞன், மாமரம் எறிஞன், பாய்மா யாது, மாமரம் யாது எனச் சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறுக. பிறவும் இவ்வாறே. (நகூ)

[தொடர்மொழிகள் இசைவேறுபாட்டாற் பொருள்துணியப்படுதல்.]

† நகூக. எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி
இசைத்திரிபால் தெளிவெய்து மென்ப.

(இ - ள்.) எழுத்து இயல் திரியா - எழுத்தின் தன்மை வேறுபடாமல், பொருள் திரி - பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயப்படநிற்கின்ற, புணர்மொழி - தொடர்மொழிகள்,—இசை திரிபால் - (குறிக்கப்பட்ட சொற்களின் இறுதியும் முதலும் தோன்ற) இசையறுத்துச் சொல்லும் வகையினால், தெளிவு எய்தும்-பொருள் துணியப்படும்,—என்ப-என்று சொல்வர், (புலவர்); (எ - று)—இது, வழாநிலை.

எனவே, அவ்வாறு இசையறுத்துக்கூறுதல் மரபு என்றதாயிற்று.

(உ - ம்.) செம்பொன்பதின்பலம், குறும்பரம்பு, புத்தியிலாதவன் என வருகின்ற இவை - செம்பொன் பதின்பலம் என இசையறுத்துக்கூறினால் செம்பொன் பத்துப்பலம் என்றும், செம் பொன்பதின்பலம் என இசையறுத்துக் கூறினால் செம்பு ஒன்பதுபலம் என்றும்; குறும்ப ரம்பு என இசையறுத்துக் கூறினால் குறுநிலமன்னருடைய அம்பு என்றும், குறும் பரம்பு என இசையறுத்துக் கூறினால் குறுமையாகிய கழனிதிருத்தும் பலகை என்றும்; புத்தி யிலாதவன் என இசையறுத்துக்கூறினால் அறிவுகெட்டவனென்றும், புத்தியி லாதவன் என இசையறுத்துக்கூறினால் ஞானத்திற் சூரியனென்றும் பொருள் துணியக் கிடத்தல் காண்க. (சo)

[மரபு வழாநிலையும், வழுவமைதியும்.]

† நுகூஉ. ஒருபொருள் மேற்பல பெயர்வரி னிறுதி
ஒருவினை கொடுப்ப தனியு மொரோவழி.

(இ - ள்.) ஒரு பொருள்மேல்-ஒருபொருளின்மேலே [ஒருபொருளைக் குறித்து], பல பெயர் வரின்-பலபெயர்கள் வருமாயின், இறுதி ஒரு வினை கொடுப்ப-(பொருளொன்றே என்பது தோன்ற) அவற்றின் இறுதியில் ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொடுத்துக்கூறுவார்; ஒரோவழி - சில இடத்தில் [பொருளொன்றே என்பது தெளிய நின்ற விடத்தில்], தனியும் - பெயர் தோறும் தனித்தனி ஒருமுடிக்குஞ்சொல்லைக் கொடுத்தும் (கூறுவர், புலவர்); (எ - று.)

'ஒருவினைகொடுப்ப' என்பதைப் பின்னும் கூட்டுக.

வினை என்றது-கொண்டுமுடியுஞ்சொல் என்றமாத்திரமாய் நின்றது; ஆதலால், ஒரு பெயர் கொடுத்து முடித்தலும் கொள்க.

(உதாரணம்.)

(க) 'ஆசிரியர் பாரத்து வாசி நச்சினார்க்கினியர் கூறினர்' எனவும், 'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி இவன்' எனவும் வரும். இவை-இறுதியில் ஒரு வினையும் பெயரும் கொடுக்கப்பட்டன.

(உ) "கொண்டல் வண்ணா விங்கே போதராயே கோயிற்பிள்ளா யிங்கே போதராயே, தெண்டிரைசூழ் திருப்பேர்க்கிடந்த திருநாரணாவிங்கே போதராயே" என்பதில்-கொண்டல்வண்ணன், கோயிற்பிள்ளை, திருநாரணன் என்பன - கண்ணனென்னும் ஒருபொருளே யென்பது தெளியநின்றதனால், பெயர்தோறும் போதராய் என ஒருவினைகொடுக்கப்பட்டது. பெயர்தோறும் தனித்தனி கொடுக்கப்படுகிற வினைவந்த வினையாகவே இருக்கவேண்டுமென அறிக. (சுக)

[சிறப்புப்பெயர்களின்பின் இயற்பெயர் வருதல்.]

நுகூநு. திணை நிலஞ் சாதி குடியே உடைமை
குணந் தொழில் கல்வி சிறப்பாம் பெயரொடு
இயற்பெய ரேற்றிடின் பின்வரல் சிறப்பே.

(இ - ள்.) திணை-(குறிஞ்சி முதலிய ஐவகைத்) திணையும், நிலம்-தேசமும், சாதி-குலமும், குடி-குடியும், உடைமை - உடைத்தாயிருக்கும் பொருளும், குணம்-குணமும், தொழில்-செயலும், கல்வி - வித்தையும், (ஆகிய இவற்றைப்பற்றி வருகிற), சிறப்பு ஆம் பெயரோடு - சிறப்பாகிய பெயருடனே, இயற்பெயர்-இயற்கையாகிய பெயரை, எற்றிடின் - (ஒருபொருள் ஒருசேர) எற்குமாயின், பின் வரலே - (அவ்வியற்கைப்பெயர்) பின்னே வருதலே, சிறப்பு-சிறந்த மரபாம்; (எ - று.)

'பின்வரல் சிறப்பே' என்றதனால் இயற்பெயர் பின்வருதல் வழாநிலை யென்றும், முன்வருமாயின் அது வழுவமைதி யென்றும் பெறப்பட்டது.

[இயற்பெயர்-இயற்கைப்பெயர். சிறப்புப்பெயர்-யாதாயினும் ஒருகாரணம் பற்றிக் கூறும் பெயர்.)

பின் இயற்பெயர்.	முன் இயற்பெயர்.
(உ - ம்.) குன்றவன் கொற்றன்	கொற்றன் குன்றவன் —திணை.
சோழியன் சாத்தன்	சாத்தன் சோழியன் —நிலம்.
பார்ப்பான் துரோணன்	துரோணன்பார்ப்பான்—சாதி.
பாண்டியன் குலசேகரன்	குலசேகரன்பாண்டியன்—குடி.
பொன்னன் நம்பி	நம்பி பொன்னன் —உடைமை.
கரியன் கம்பன்	கம்பன் கரியன் —குணம்.
நடையன் நாகன்	நாகன் நடையன் —தொழில்.
புலவன் திருவள்ளுவன்	திருவள்ளுவன்புலவன்—கல்வி.

இன்னும், இயற்பெயர்முன்வருமிடத்து, ஒட்டக்கூத்தப்புலவன்,அகத்திய முனிவன் என இறுதி விகாரப்பட்டு வருதலும் காண்க. (சஉ)

[சுட்டுப்பெயர் வருமிடம்.]

† ௩கூச. படர்க்கைமுப் பெயரோ டணைபிற் சுட்டுப்
பெயர்பின் வரும் வினை யெனிற்பெயர்க் கெங்கும்
மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி.

(இ - ள்.) படர்க்கை முப் பெயரோடு - படர்க்கை யிடத்தையுடைய (உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் பொதுப்பெயர் என்னும்) மூவகைப் பெயர்களோடு, சுட்டுப்பெயர்—, அணையின் சேர்ந்தால்,—வினை எனின் - (அவ்விடத்தே) வினையாகிய முடிக்குஞ்சொல் வருமாயின்,பின் வரும்-(அச்சுட்டுப்பெயர் அம்மூவகைப் பெயர்க்கும்) பின்னேவரும்; பெயர்க்கு எங்கும் மருவும் - (அம்முடிக்குஞ்சொல் இல்லையாயின்) அப்பெயர்க்குப் பின்னும் முன்னும் (சுட்டுப்பெயர்) வரும்; வழக்கிடை-(இம்மரபு) உலகவழக்கத்தில் ஆம்; செய்யுட்கு - செய்யுளில், எற்பு உழி - (நியதியில்லாமல்) வேண்டியவாறே வரப்பெறும்; (எ - று.)

(உதாரணம்.)

(க) நம்பிவந்தான், அவனுக்குச் சோறிடுக என்றும்; எருது வந்தது, அதற்குப் புல்லிடுக என்றும்; சாத்தன் வந்தான், அவனுக்குச்சோறிடுக,சாத்தன் வந்தது, அதற்குப் புல்லிடுக என்றும் முறையேமூவகைப்பெயர்களோடும் வினை வரும்பொழுது சுட்டுப்பெயர் பின்னே வந்தன.

(உ) நம்பி அவன், அவன் நம்பி என்றும்; குதிரை அது, அது குதிரை என்றும்; சாத்தன் இவன், இது சாத்தன் என்றும் பெயர்க்குப் பின்னும் முன்னும் சுட்டுப்பெயர் வந்தன. இவை-உலகவழக்கு.

(௩) "வா யவனை யல்லது வாழ்த்தாது கை யுலகந், தாயவனை யல்லதுதாந் தொழா," "தந்த முறியி லவர்வைத்த தயிர்பால் வெண்ணெயெட்டாமற், குந்தி யுரலின் மிசையேறி யிளங்கோவியர்முன் கூத்தாடி" எனச் செய்யுளில் வினைவந்தபொழுதும், அவன் அவர் என்ற சுட்டுப்பெயர்கள், 'உலகந்தாயவன்', 'கோவியர்' என்ற பெயர்களின்முன்வந்தன.()

[அடுக்குத்தொடர்.]

† ௩௯௫. அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை அடுக்கும்.

(இ - ள்.) அசைநிலை-அசைநிலைக்கும், பொருள் நிலை-(விரைவு கோபம் மகிழ்ச்சி அச்சம் துன்பம் முதலிய) பொருள்களின் நிலைக்கும், இசை நிறைக்கு - இசையை நிறைப்பதற்கும், ஒரு சொல்—, இரண்டு மூன்று நான்கு எல்லை - இரண்டு மூன்று நான்கு அளவும்; முறை அடுக்கும்-முறை யே அடுக்கிநிற்கும்; (எ - று.)

'முறை' என்றதனால், அசைநிலைக்கு - இரண்டும், பொருள்நிலைக்கு - இரண்டும் மூன்றும். இசைநிறைக்கு-இரண்டும் மூன்றும் நான்கும் அடுக்கு மென்றதாயிற்று.

(உதாரணம்.)

(க) அன்றே அன்றே..............................அசைநிலை.

(உ)
(க) உண்டேன் உண்டேன்; போ போ போ.........விரைவு.
(உ) எய் எய்; எறி எறி எறி..............................கோபம்.
(௩) வாழ்க வாழ்க: வருக வருக வருக..............மகிழ்ச்சி.
(ச) பாம்பு பாம்பு; தீத் தீத் தீ..............................அச்சம்.
(ரு) உய்யேன் உய்யேன்; வாழேன்வாழேன்வாழேன்-துன்பம்.
} பொருள்நிலை

(௩)
"ஏ ஏ இவளொருத்தி பேடியோ"
"நல்குமே நல்குமே நல்குமே நாமகள்"
"பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ"
} இசைநிறை.

(நல்கும் - அருள்செய்வள். பாடுகோ - பாடுவேனே.)

அசைநிலையடுக்கில் இரண்டுக்கும் பொருளில்லை யென்றும், இசைநிறை யடுக்கில் ஒன்றுக்குப் பொருள் உண்டென்றும் வேறுபாடு அறிக.

ஒருசொல்லைப் பலகால் சொல்லுதல் வழுவாயினும், இன்ன இடங்க ளில் ஆமென்றல் - வழுவமைதியும், இவ்வெல்லைகடவாதென்றல் - வழுவா மற்காத்தலுமாம். (சச)

[இரட்டைச்சொல்.]

‡ ௩௯௬. இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந் திசையா.

(இ - ள்.) இரட்டைக் கிளவி - இரட்டைச்சொற்கள்,—இரட்டின்-அவ் விரட்டிப்பினின்றும், பிரிந்து இசையா-பிரிந்து [தனித்து] ஒலியா; (எ-று.)

எனவே-வலிந்து பிரித்துக் கூறின் இரட்டைச்சொல்லானபோதுள்ள பொருள் படா தென்பதும், இரட்டித்துக்கூறுதலே மரபென்பது மாயிற்று.

(உ-ம்.) "சலசல மும்மதம்பொழிய," "கலகல, கூஉந்துணையல்லால்," "களகள உதிர்ந்தது," "குறுகுறு நடந்து," "துடிதுடித்துத் துள்ளிவரும்" என வரும். துடிதுடித்து என்பதில், பின்னையது துடித்துஎனப் பிரிந்திசை க்குமாயினும், முன்னையதுபிரிந்திசையாமையால்இரட்டைச்சொல்லேயாம்.

அடுக்குத்தொடர்க்கும் இரட்டைக்கிளவிக்கும் வேறுபாடு:—அடுக்குத் தொடரும் இரட்டைக்கிளவியும் வந்ததுவே மீண்டும் வருதலால் ஒக்கு மாத லின்,இவையிரண்டுக்கும் வேறுபாடு என்னவென்றால்:—அடுக்குத்தொடர்-மக்களிரட்டையும் விலங்கிரட்டையும் போல வேறுபட்டுத் தனித்தனி பொருள் கொடுத்து நிற்கும்; இரட்டைக்கிளவி - இலையிரட்டையும் பூவிரட் டையும் போல வேறுபடாமல் ஒன்றுபட்டுத் தனித்தனி பொருள்கொடா மல் நிற்கும் என்று அறிக. அன்றியும், இரட்டைக்கிளவி இரண்டுதரத்துக்கு மேல் வந்தது வரப்பெறாது.

இச்சூத்திரம், * தொல்காப்பியத்தினின்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

[ஒருபொருளின்மேல் வரும்பலபெயர்கள்.]

நூ௩ள. ஒருபொருட் பலபெயர் பிரிவில வரையார்.

(இ - ள்) ஒரு பொருள் - ஒருபொருளின்மேல், பல பெயர்-பலபெயர் சொல்லும்போது, பிரிவு இல - (அப்பொருளினின்றும்) பிரிதலில்லாதவற் றை, வரையார் - நீக்காமற் கொள்வர், (புலவர்); (எ - று.)

எனவே, பிரிவுள்ளவற்றை நீக்குவ ரென்றதாயிற்று.

(உ - ம்.) 'ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான்,' 'பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வந்தான்' என்பன-பிரிவிலவாய், பல பெயரும் ஒரு பொருளின்மேற் சென்று, கேட்போர்க்குச் சொல்லு வான்குறித்த பொருளை விளக்கி நின்றன.

"பகையியல்பாயிலி படைக்கை மறவன்," "எழுத்தறி வில்லோ னிலக் கண நிறைகடல்"என வந்தால்,பகை இயல்பாகவேஇல்லாதவனைப் படைக் கைமறவ னென்றலும், எழுத்தறிவில்லாதவனை இலக்கண நிறைகட லென்றலும் கூடாமையால், பிரிந்து வழுவா மென்க.

இனி, இச்சூத்திரத்திற்கு - ஒருபொருளையே குறித்துவரும் பலபெயர் கள் வேறுபடாமல் அப்பொருளையே சுட்டாய் நின்று உணர்த்துமாயின், அவற்றை நீக்காமல் கொள்வர் என்றும் பொருள்கொள்ளலாம்; (உ - ம்.) "நற்பூங் கழலான் இருதிங்கள் நயந்த வாறும்,கற்பா டழித்த கனமாமணித் தூண்செய் தோளான், வெற்பூ டறுத்து விரைவின் நெறிக்கொண்டவா றும்" என்ற இடத்தில், 'கழலான்' என்னும் பொருட்பெயரையே பின் 'தோளான்' என்பது குறித்து, சொல்லுவான்குறிப்பால் அவன்என்னுஞ் சுட்டுப்பெயரின் தன்மையாய் நின்றவாறு காண்க. (௬௬)

[ஒருபொருள் குறித்து வரும் பலசொற்கள்.]

‡ நூ௩அ. ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா.

(இ - ள்.) ஒரு பொருள் பல் மொழி - ஒரு பொருளைக்குறித்து வருகிற பலசொற்கள்;—சிறப்பினின் - (அவ்வாறு வருவதற்கு ஒரு காரணம் இல்லை யானாலும்) சிறந்து நிற்கையால்,—வழா - (அவை) மரபுவழுவென்று நீக்கப்படாவாம்; (எ - று.)—வழுவமைதி யென்று கொள்ளப்படு மென்க,

* தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - கிளவியாக்கம் - சஅ,

சிறந்து நிற்கை - செவிக்குச் சொல்லின்பம் தோன்ற நிற்றல்.

(உ - ம்.) மீ மிசை ஞாயிறு, புனிற் றிளங் கன்று, நா கிளங் கமுகு, உயர்ந் தோங்கு பெரு வரை, குழிந் தாழ்ந்த கண், வெங் கோடும் போர்.

இனி, இரட்டுறமொழிதலால், சிறப்பினின் என்பதற்கு சிறப்புப்பொருளைத் தருதலால் என்றும் பொருள் கொள்ளலாம். இங்குக்காட்டிய உதாரணங்களுள் முறையே மிகவும் மேலிடத்திலுள்ள, மிகவும் இளமையான, மிகவும் உயர்ந்த, மிகவும் உள்ளடங்கிய, மிகவும் கொடிய எனப் பொருள் படுதலும் காண்க. (மீ - மேல். மிசை - மேல். புனிறு - இளமை. நாகு - இளமை.)

இது வாய்பாடுபற்றி, 'மீமிசைச்சொல்' எனவும் படும்.　　　　(சஎ)

[முற்றும்மை வேண்டும் இடம்.]

‡ ௩௯௯. இனத்தென் றறிபொரு ளுலகி னிலாப்பொருள்
வினைப்படுத் துரைப்பி னும்மை வேண்டும்.

(இ - ள்.) இனத்து என்று அறி பொருள் - இவ்வளவென்று அளவறியப்பட்ட பொருளையும், உலகின் இலா பொருள் - (எக்காலத்தும்) எவ்விடத்தும் இல்லாத பொருளையும், வினை படுத்து உரைப்பின் - முடிக்குஞ் சொல்லோடு கூட்டிச் சொல்லும்போது, (அவை), உம்மை வேண்டும்-முற்றும்மையை வேண்டி நிற்கும்; (எ - று.)

(உ - ம்.) (க) 'இருவினையும் சேரா,' 'தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்,' 'வேதம் நான்கும் அறிந்தான்'—இனத்தென்று அறி பொருள்கள், முற்றும்மை வேண்டி நின்றன.

(உ) 'முயற்கோடு ஆகாயப்பூ என்றும் இல்லை,' 'ஒளிமுன் இருள் எங்கும் இல்லை'—உலகில் இலாப்பொருள்கள், முற்றும்மை வேண்டின. இவ்வும்மை சிலவிடத்து 'இருதோள் தோழர் பற்ற,' 'ஒன்பதுழை ஒன்றேல்கி' எனச் செய்யுள் விகாரத்தால் தொக்கு நிற்பதும் உண்டு.

இனி, உலகில் நில்லாத பொருளென்றும் பிரித்து உரைக்கலாம்.

'வினை' என்றது முடிக்குஞ்சொல் என்றமாத்திரமாய் நிற்பதனால், கண் இரண்டும் குருடு, எருது இரண்டும் கிழம் எனப் பெயர்கொண்டு முடியும் போதும் உம்மை பெறுமெனக் கொள்க.

ஐந்தலைநாகம், நான்மறை முதல்வர் என்ற இடங்களில், இனத்தென்று அறிந்தபொருளாயினும், வினைப்படுத்தி உரையாமையால், உம்மைவேண்டாவாயின வென அறிக.　　　　(சஅ)

[செயப்படுபொருள் முதலியவற்றைக் கருத்தாவாகக் கூறுதல்.]

† ௪௦௦. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினு ளுரித்தே.

(இ - ள்.) செயப்படுபொருளை—, செய்தது போல - கருத்தாவைப் போல வைத்து, தொழில் பட கிளத்தலும் - அதன்மேல் அக்கருத்தாவின் வினையை ஏற்றிக்கூறுதலும், வழக்கினுள்-வழக்கத்திலே, உரித்து-உரியது

(உ - ம்.) இம்மாடு யான் கொண்டது, இச்சோறு அவன் கொடுத்தது, இவ்வெழுத்து நீ எழுதியது என வரும்.

'செயப்படுபொருளைச் செய்ததுபோலத் தொழிற்படக்கிளத்தலும்' என்ற எச்ச உம்மையால், கருவி நிலம் செயல் காலங்களைக் கருத்தாவாகக் கூறுதலும் சிலவிடத்து உண்டென்று கொள்க. அவை வருமாறு:—இவ் வெழுத்தாணி யான் எழுதியது - கருவி; இவ்வீடு அவன் இருந்தது-நிலம்; இத்தொழில் நீ செய்தது - செயல்; இந்நாள் அவர் பிறந்தது - காலம். (சகூ)

[அடை அடுத்துவரும் மொழிகள்.]

சOக. பொருள் முத லாறு மடைசேர் மொழியினம்
உள்ளவு மில்லவு மாமிரு வழக்கினும்.

(இ - ள்.) பொருள் முதல் ஆறு ஆம் - பொருள் முதலிய ஆறாகிய, அடை - அடைமொழிகளால், சேர் - அடுக்கப்பட்ட, மொழி-சொற்கள்,— இரு வழக்கினும் - (உலகவழக்குச் செய்யுள்வழக்கு என்னும்) இரண்டிடத்தும், இனம் உள்ளவும் - இனமுள்ளனவாயும், இல்லவும் - (அன்றி) இனமில்லாதனவாயும், ஆம் - வரும்; (எ - று.)

அடை - அடுத்துவரும் மொழி; அடையெனினும், விசேஷணமெனினும் ஒக்கும். இவ்வடைமொழியால் அடுக்கப்படும் மொழி - அடைகொளி எனப்படும்; அடைகொளியெனினும், விசேஷ்யமெனினும் ஒக்கும், சொல்லப்படும்பொருளுக்கு இனமாயுள்ளபொருளை விலக்கும் இனமுள்ள அடை-பிறிதினியைபு நீக்கிய விசேஷணமெனவும்,சொல்லப்படும்பொருளின் இனத்தை விலக்குதலில்லாமல் வரும் இனமில்லாத அடை - தன்னோடு இயைபின்மை நீக்கிய விசேஷணமெனவும் பெயர்பெறும்; இவற்றை முறையே வடநூலார் அந்யயோகவ்யவச்சேதம் அயோகவ்யவச்சேதம் என்பர்.

(உ-ம்.) இனமுள்ளன. இனமில்லன.

இனமுள்ளன	இனமில்லன	
நெய்க்குடம், பாற்குடம்	உப்பளம்	— பொருள்.
துளநெல், வயல்நெல்	ஊர்மன்று	— இடம்.
கார்த்திகைவிளக்கு, தைவிளக்கு	நாளரும்பு	— காலம்.
பூமரம், காய்மரம்	இலைமரம்	— சினை.
செந்தாமரை, வெண்டாமரை	செம்போத்து	— குணம்.
ஊன்றுகோல், ஊதுகோல்	தோய்தயிர்	— தொழில்.

என வழக்கிடத்து வந்தன. அளமெனவே உப்பென்பதும், மன்றெனவே ஊரென்பதும், அரும்பெனவே நாளென்பதும், மரமெனவே இலையென்பதும் போத்தெனவே செம்மையென்பதும், தயிரெனவே தோய்தலென்பதும் தாமே வந்து இயைதலால், அளம்முதலியன அடையில்லாமலும் இப்பொருளாதியாறையும்உணர்த்தும். உப்பில்லாத அளமும், ஊரில்லாத மன்றும், நாளில்லாத அரும்பும், இலையில்லாதமரமும், செம்மையில்லாத போத்தும், தோய்தலில்லாத தயிரும் இல்லையாதலால், இவை இனமில்லனவாயின. இவை இயற்கையடைமொழி யெனவும் படும்.

இனி, முற்கூறிய செய்க்குடம் முதலிய இனமுள்ளவற்றை அடைகொடாமற் கூறின், குறித்தபொருள் விளங்காமல் பொதுவாய்நிற்குமாதலால், அவற்றிற்கு அடைகொடுத்துக் கூறுதலே மரபாயிற்று.

செய்யுள்வழக்கில் வருமாறு.

இனமுள்ளன.	இனமில்லன.
"பொருநட்பெண்டிர்"—பொருள்.	"பொற்கோட்டிமயம்"--பொருள்.
"கான்யாறு"—இடம்,	"வடவேங்கடம்"—இடம்.
"முந்நாட்பிறை"—காலம்.	"வேனிற்கோங்கின்பூ"—காலம்.
"கலவமாமயில்"—சினை.	"சிறகர்வண்டு"—சினை.
"சிறுகோட்டுப்பெரும்பழம்"—குணம்.	"செஞ்ஞாயிறு"—குணம்.
"ஆடரவு"—தொழில்.	"முழங்குகடல்"—தொழில்.

இனமுள்ளவற்றை அடைகொத்துக் கூறுதல் வழாநிலையும், இனமில்லாதவற்றை அடைகொடுத்துக் கூறுதல் வழுவமைதியுமாமென்க. (௫0)

[அடைமொழி மரபுவழுவாமற் காத்தல்.]

௪0௨. அடைமொழி இனமல்லதுந் தருமாண்டுறின்.

(இ - ள்.) அடைமொழி - (முன்சொல்லப்பட்ட) அடைமொழிகள்,—இனம் அல்லதும் தரும் - (இனத்தைத் தருதலேயன்றி அதனோடு) இனமல்லாதவையும் தரும்: ஆண்டு உறின் - அவ்விடத்துக்குப் பொருந்துமாயின்.

(உ-ம்.) பாவஞ்செய்தால் நரகம் புகுவான் என்றால், அது-புண்ணியஞ்செய்தால் சுவர்க்கம்புகுவான் எனஇனத்தைத் தருதல்மாத்திரமேயல்லாமல், அவன் இதுசெய்தால் இதுவருமென்னும் அறிவு இல்லாதவன் என்னும் இனமல்லாததையும் தந்தது. மேலைச்சேரிச்சேவல் அலைத்தது என்றால், அது - கீழைச்சேரிச்சேவல் அலைக்கப்பட்டது என இனத்தைத் தருதல்மாத்திரமே யல்லாமல், அச்சேவலையுடையார்க்கு வெற்றியாயிற்று என்னும் இனமல்லாததையும் தந்தது.

குடங்கொண்டவன் விழுந்தான் என்றால், குடங்கொள்ளாதவன் விழுந்தானல்லன் என்னும் பொருளைத் தராமல்,குடம்விழுந்தது என்றும்;கோழி கூவிற்று என்றால் - மற்றைப்பறவைகள் கூவவில்லை என்னும் பொருளைத் தராமல் பொழுது விடிந்தது என்றும் இவ்வாறு இனத்தைத் தருதவில்லாமலே இனமல்லாததைத் தருதலும் இங்கேயே அமைத்துக்கொள்ளப்படும். இவற்றையெல்லாம் வடநூலார் அர்த்தாபத்தியுள் அடக்குவர். (௫க)

[அடைமொழிகள் முதல்சினைகளை அடுத்துவருதல்.]

௪0௩. அடைசினை முதல்முறை யடைதலும் ஈரடை
முதலோ டாதலும் வழக்கியல் ஈரடை
சினையொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கே.

(இ - ள்.) அடை சினை முதல் முறை அடைதலும் - அடைமொழியும் ஒரு சினையும் ஒரு முதலுமாய் முறையே ஒன்றைஒன்று விசேடித்து வருதலும், ஈர் அடை முதலோடு ஆதலும் - இரண்டு அடைமொழி ஒருமுதலை

விசேடித்து வருதலும், வழக்கு இயல்-உலகவழக்கமாம்; ஈர் அடை சினையொடு செறிதலும் - இரண்டு அடைமொழி ஒருசினையை விசேடித்துவருதலும், மயங்கலும் - இவ்வரம்புகடந்து வருதலும், செய்யுட்கு - செய்யுளுக்கு உரிய வழக்கமாம்; (எ - று.)

வழக்கு: (க) வேற்கை முருகன், செங் கால் நாரை, முழங்கு திரைக் கடல் —இவை, ஓர் அடைமொழியும் ஒருசினையும் ஒருமுதலு மாகி ஒன்றைஒன்று விசேடித்து வந்தன; வேல் - கையையும், கை - முருகனையும் விசேடித்தல் காண்க.

(வேல் - அடைமொழி. கை - சினை. முருகன் - முதல்.)

இவை - சிறுபான்மை கைவேல்முருகன், கால்செந்நாரை, திரைமுழங்கு கடல் என இம்முறை மாறிவருதலும் உண்டு.

(உ) மனைச் சிறு கிணறு, சிறு கருங் காக்கை—இவை, இரண்டு அடைமொழி முதலை விசேடித்து வந்தன.

செய்யுள்: (க) "சிறு பைந் தூவி," "கரு நெடுங் கண்"—இவை, இரண்டு அடைமொழி சினையை விசேடித்து வந்தன.

(உ) "பெருந் தோட் சிறு மருங்குற் பேரமர்க்கட் பேதை," "சிறு நுதற் பேரமர்க்கட் செய்யவா யையநுண்ணிடையாய்"—இவை இவ்வரம்பு கடந்து வந்தன.

இச்சூத்திரத்துக் கூறிய நான்கு விதிகளுள், அடை சினை முதல் முறை அடைதல் மாத்திரம் மரபு வழுவாமற் காத்தலும், மற்றை மூன்றும் மரபு வழுவமைதியுமாம். (நுஉ)

[இயற்கைப்பொருள் மரபுவழுவமைதி.]

௩ஂ௪. இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.

(இ - ள்.) இயற்கை பொருளை-(இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள் என இருவகைப்படும் பொருள்களுள்) இயற்கைப்பொருளை, இற்று என கிளத்தல் - (ஆக்கமும் காரணமும் கொடாமல்) இத்தன்மையதென்று சொல்லுக; (எ - று.)

இயற்கைப்பொருள் - தனக்குப் பின் தோன்றுமல் தான் தோன்றிய போது உடன் தோன்றிய தன்மையையுடைய பொருள். செயற்கைப்பொருள் - தனக்குப்பின் தோன்றிய தன்மையையுடைய பொருள். இயற்கை - அவிகாரம். செயற்கை - விகாரம்.

(உ-ம்.) நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து, மயிர் கரிது, பால் வெள்ளிது, பயிர் பசியது, மெய் உள்ளது, பொய் இல்லது, உயிர் உணரும்.

இயற்கைப்பொருளை இத்தன்மையதென்று வரும் வினையாற் கூறுதலின், இது வழுவமைதி யாயிற்று. நிலம் முதலியவற்றுடனே வலிமை முதலியனவும் இயல்பில் தோன்றியிருத்தல் காண்க.

இச்சூத்திரம் ஆசிரியவசன மென்று அறிக. [தொல்காப்பியம்*]. (நுங)

* தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - கிளவியாக்கம் - கக.

[செயற்கைப்பொருள் மரபுவழுவாமற் காத்தலும், வழுவமைதியும்.]

சுoரு. காரண முதலா ஆக்கம் பெற்றும்
காரண மின்றி ஆக்கம் பெற்றும்
ஆக்க மின்றிக் காரண மடுத்தும்
இருமையு மின்றியும் இயலும் செயும்பொருள்.

(இ - ள்.) செயும் பொருள் - செயற்கைப்பொருள்,—காரணம் முதல் ஆ ஆக்கம் பெற்றும்-காரணச்சொல் முன்வரவும் ஆக்கச்சொல் பின்வரவும் பெற்றும், காரணம் இன்றி ஆக்கம் பெற்றும்-காரணச்சொல் தொக்கு நிற்க ஆக்கச்சொல் வரப்பெற்றும், ஆக்கம் இன்றி காரணம் அடுத்தும் - ஆக்கச் சொல் தொக்குநிற்கக் காரணச்சொல்வரப்பெற்றும், இருமையும் இன்றியும்- இவ்விருவகைச் சொல்லும் தொக்குநிற்கவும், இயலும்-நடக்கும்; (எ - று.)

(உதாரணம்.)

(க) கைபிழியெண்ணெய் பெற்றமையால், மயிர் நல்லவாயின; எருப்பெய்து களைபறித்து நீர் பாய்ச்சியதனால், பயிர் நல்ல வாயின—இவை, முன் காரணச்சொல்லும், பின் ஆக்கச்சொல்லும் பெற்றன.

(உ) மயிர் நல்ல வாயின, பயிர் நல்ல வாயின—இவை, காரணச்சொல் லின்றி ஆக்கச்சொல் பெற்றன.

(ங) கைபிழியெண்ணெய் பெற்றமையால், மயிர் நல்ல; எருப்பெய்து களை பறித்து நீர்பாய்ச்சியதனால், பயிர் நல்ல— இவை, ஆக்கச்சொல் லின்றிக் காரணச்சொல் பெற்றன.

(ச) பிறப்பு நல்ல, இறப்பு நல்ல—இவை, காரணச்சொல் ஆக்கச்சொல் ஆகிய இரண்டும் தொக்குநிற்கப்பெற்றன.

இந்நான்கு விதிகளுள், காரணமுதலா ஆக்கம் பெறுதல் மாத்திரம் மரபு வழுவாமற்காத்தலும், மற்றை மூன்றும் மரபுவழுவமைதியுமாம் (நிச)

[விடைமரபு வழுவாமற் காத்தல்.]

சுoசு. தம்பா லில்ல தில்லெனி னினனாய்
உள்ளது கூறி மாற்றியு முள்ளது
சுட்டியு முரைப்பர் சொற்சுருங் குதற்கே.

(இ - ள்.) தம்பால் இல்லது - தம்மிடத்து இல்லாத பொருளை, இல் எனின்-இல்லையென்று சொல்லப்புகுந்தால்,—இனன் ஆய் உள்ளது கூறி- (வினவப்பட்டதற்கு) இனமாய்த் தம்மிடத்து உள்ள பொருளைச் சொல்லி, மாற்றியும்-(அச்சொல்லைக்கொண்டு அதனை) இல்லையென்று சொல்லியும், —உள்ளது சுட்டியும் - உள்ளபொருளாயின் இவ்வளவு உண்டென்றும்,— உரைப்பர் - சொல்லுவர்,—சொல் சுருங்குதற்கு-(வினவும் விடையுமாகிய) சொற்கள் சுருங்குதற்பொருட்டு; (எ - று.)

குன்றக்கூறல் முதலிய குற்றங்களை நீக்கிச் சுருங்கச்சொல்லல் முதலிய அழகோடு கூறல் வழக்கிற்கும் வேண்டுமென்பார், 'சொற்சுருங்குதற்கு' என்றார்.

97466

(உ - ம்.) (க) 'பயறு உள்ளதோ வணிகரே?' என்றவர்க்கு, அது இல்லையென்பவர், 'உழுந்து உண்டு,' 'உழுந்தும் துவரையு முண்டு' என அதன் இனத்தைச் சொல்லக்கடவர். இந்த இனமொழிகள் பயறில்லை யென்னும் விடைப்பொருளைத் தருதலே யன்றி, மேலே 'உழுந்து உள்ளதோ? துவரை உள்ளதோ?' என்னும் வினக்களும், அவற்றின் விடைகளும் பெருகாமற் காத்தல் காண்க.

(உ) 'பயறு உள்ளதோ வணிகரே?' என்றவர்க்கு, அதுஉண்டு என்பவர் 'இருகலம் உண்டு,' 'இருதூணி உண்டு' என அதன்அளவைச்சொல்லக்கடவர். இந்த அளவைமொழிகள் பயறுண்டென்னும் விடைப்பொருளைத் தருதலே யன்றி, மேலே 'எவ்வளவு உண்டு' என்னும் வினவும், அதன்விடையும் பெருகாமற் காத்தல் காண்க. ()

[ஈ தா கொடு என்பன.]

‡ சுஉஎ. ஈ தா கொடு எனு மூன்று முறையே
இழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை.

(இ -ள்.) ஈ தா கொடு என்னும் மூன்றும் - இம்மூன்றுசொற்களும்,—முறையே—,இழிந்தோன் - இழிந்தவனும், ஒப்போன் - ஒப்பவனும், மிக்கோன்-உயர்ந்தவனும், இரப்பு உரை- இரத்தற்கு வரும் சொற்களாம்;

எனவே, ஈ என்பது - இழிந்தவன் தன்னின் உயர்ந்தவனிடத்து ஒன்றை இரக்கும்போது, தா என்பது - ஒப்போன் தனக்கு ஒப்பவனிடத்து ஒன்றை வேண்டும் போதும், கொடு என்பது - உயர்ந்தவன் தன்னின் இழிந்தவனிடத்து ஒன்றைப்பெற விரும்பும்போதும் வருமெனக் கொள்க. இது, முறைநிரனிறைப் பொருள்கோள்.

(உ - ம்.) தந்தையே ஈ - இழிந்தோ னிரப்பு; தோழா தா - ஒப்போனிரப்பு, மைந்தா கொடு - உயர்ந்தோ னிரப்பு.

முன் "கொடை செலல் சாரும் படர்க்கை" என்று கூறியிருத்தலால், இங்குக் கொடு என்பது தன்மைக்கு வருதல் வழுவமைதி யெனக் கொள்க.

இச்சொற்கள் ஏவலில்மாத்திரமே இவ்வேறுபாடு உணர்த்து மென்பர், சேனவரையர்.

இனி, இம்மூன்று சொற்களும் இம்முறை தவறி வருமாயின் அவற்றை "புதியனபுகுதலும்வழுவல"*எனவரும்புறனடையால் அமைத்துக்கொள்க.

[மரபுவழுவமைதி குறிப்பாற் பொருள்தருதல்.]

சுஉஅ. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே.

(இ - ள்.) முன்னத்தின்-(வெளிப்படையாலன்றிக்)குறிப்பினல், உணரும் - பொருளறியப்படுகிற, கிளவியும் - சொற்களும், உள - (சில) உண்டு.

அவையாவன - "ஒன்றெழி பொதுச்சொல்" என்னுஞ் சூத்திரத்தில் 'இன்னபிறவும்'என்றதனற் கொள்ளப்பட்டவை.

---

* இந்நூலின் ஈற்றுச்சூத்திரம்.

"குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர்" என்றவிடத்து, (கோழியெறிவ ரென்பது தலைமைப்பொருளாகாமல்) பெருஞ்செல்வ வாழ்க்கையர் என்பது குறிப்பினால் உணரப்படுதல் காண்க.

கேட்பவர்களுக்கு வருத்தப்படாமற் பொருள் விளங்கச் சொல்லுதல் மரபாதலால், இது வழுவமைதி யாயிற்று.

இச்சூத்திரம், ஆசிரியவசனமென்று உணர்க; [தொல்காப்பியம்*](நிஎ)

[அஃறிணையை உயர்திணைபோல வைத்துக் கூறுதல்.]

‡ ௪௦௯. கேட்குந போலவுங் கிளக்குந போலவும்
இயங்குந போலவு மியற்றுந போலவும்
அஃறிணை மருங்கினு மறையப் படுமே.

(இ-ள்.) கேட்குந போலவும்-(கேளாதவற்றைக்)கேட்பவைபோலவும், கிளக்குநபோலவும்-(பேசாதவற்றைப்) பேசுபவைபோலவும், இயங்குநபோலவும்-(நடவாதவற்றை) நடப்பவைபோலவும், இயற்றுந போலவும்-(இவையல்லாதவேறுதொழில்களைச் செய்யாதவற்றைச்)செய்பவைபோலவும்,—அஃறிணைமருங்கினும் - அஃறிணையிடத்தும்,—அறையப்படும்-(உயர்திணைபோலவைத்துச்) சொல்லப்படும்; (எ - று.)—இது - வழுவமைதி.

(உதாரணம்.)

(க) "நன்னீரை வாழி அனிச்சமே"—கேட்பதுபோலச் சொல்லப்பட்டது.
(உ)"பகைமையைக்கண்உரைக்கும்"--பேசுவதுபோலச் சொல்லப்பட்டது.
(ங)"இவ்வழிஅவ்வூர்க்குப்போகும்"—நடப்பதுபோலச்சொல்லப்பட்டது.
(௪)"தன்னெஞ்சே தன்னைச்சுடும்"—செய்வதுபோலச் சொல்லப்பட்டது.

[உருவகத்திலும் உவமையிலும் திணைகள் மாறிவருதல்]

௪௧௦. உருவக உவமையில் திணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே.

(இ - ள்.) உருவகம் - உருவகவணியிலும், உவமையில் - உவமை யணியிலும், திணை - உயர்திணை அஃறிணைகளும், சினை முதல்கள் - அவயவமும் அவயவியும், பிறழ்தலும்-தம்முள் மாறிவருதலையும், பிறவும் - இவ்வியலுள் சொல்லாதொழிந்தவற்றையும்,பேணினர் கொளல்-பாதுகாத்துக்கொள்க.

உருவகமாவது-ஒற்றுமையினாலாவது, செய்கையினாலாவது உபமேயத்தில் உபமானத்தைப் பேதமின்றி ஏற்றிச்சொல்லுதல். உவமையாவது-தொழில் பயன் வடிவு நிறம் முதலிய காரணங்களால் இரண்டு பொருள்களுக்கு ஒப்புமை விளங்கச் சொல்வது. உருவகம் - ரூபகம். உவமை - உபமா.

(உதாரணம்.)

(க) க. 'அரசனாகியசிங்கத்திற்குப் பகைவர்கூட்டமாகிய யானைகள்அஞ்சி ஓடின' என, உருவகத்தில் உயர்திணை அஃறிணையோடு மயங்கிற்று. 'கல்விமங்கையை நல்லோர்விரும்புவர்'என, அஃறிணை உயர்திணையோடு மயங்கிற்று.

---

* தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - எச்சவியல் - ௬௩,

உ. 'அவனுக்குத் தம்பியர் இருவரும் இரண்டு தோள்கள்' என, உயர்திணை முதல் உயர்திணைச் சினையோடு மயங்கிற்று. 'தோளாகிய மலை' என உயர்திணைச்சினை அஃறிணைமுதலோடு மயங்கிற்று.

(உ) க. 'மயில்போலும் மங்கை' என, உவமையில் உயர்திணை அஃறிணையோடு மயங்கிற்று. 'நெற்பயிர்கள் கல்வியுடையோர்போல் வணங்கிக் காய்த்தன' என, அஃறிணை உயர்திணையோடு மயங்கிற்று.

உ. 'கயல்போலுங் கண்' என, உயர்திணைச்சினை அஃறிணைமுதலோடு மயங்கிற்று. 'தளிர்போலும் மேனி' என, உயர்திணைமுதல் அஃறிணைச்சினையோடு மயங்கிற்று.

இனி, 'பிறவும்' என்றதனால் - 'இவன் சாசுவதிக்கு ஒப்பானவன்' எனப் பால் மயங்கக் கூறுதலும்: செங்கோல், வீரக் கழல் என ஒரு பொருளின் தன்மையை மற்றொரு பொருளின்மேல் வைத்துக் கூறுதலும் [உடையானுடைய செம்மையும், வீரமும் - கோலின்மேலும், கழலின்மேலும் வைத்துக் கூறப்பட்டன]; ஈந்தான் என்பதற்கு - அருளினான் என ஒரு வினையை மற்றொரு வினையாற் கூறுதலும்; அரசு வேந்து அமைச்சு தூது ஒற்று என உயர்திணையை அஃறிணைவாய்பாட்டாற் கூறுதலும் பிறவும் கொள்க. (௫௧)

பொருள்கோள்.

[பொருள்கோள்களின் பெயரும் தொகையும்.]

† ௪௧௧. யாற்றுநீர் மொழிமாற்று * நிரனிறை விற்பூண்
தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்டு
அடிமறிமாற் றெனப் பொருள்கோ ளெட்டே.

(இ - ள்.) யாறு நீர் - யாற்றுநீர்ப்பொருள்கோளும், மொழிமாற்று - மொழிமாற்றுப்பொருள்கோளும், நிரல் நிறை - நிரனிறைப் பொருள்கோளும், வில்பூண் - விற்பூட்டுப் பொருள்கோளும், தாம்பு இசை-தாப்பிசைப் பொருள்கோளும், அளை மறி பாம்பு - அளைமறிபாப்புப் பொருள்கோளும், கொண்டுகூட்டு - கொண்டுகூட்டுப் பொருள்கோளும், அடி மறி மாற்று - அடிமறிமாற்றுப் பொருள்கோளும், என - என்று, பொருள்கோள்—, எட்டு- எட்டு வகைப்படும்; (எ - று.)—பொருள்கோள் - சொற்கள் பொருளைக் கொள்ளும் விதம். பொருள்கோ ளெனினும், அந்வய மெனினும் ஒக்கும்.()

[க. யாற்றுநீர்ப் பொருள்கோள்.]

† ௪௧௨. மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்
அற்றற் றொழுகுமஃ தியாற்றுப் புனலே.

(இ - ள்.) மற்றைய நோக்காது - (மொழிமாற்று முதலிய) மற்றைப் பொருள்கோள்கள் போல மாறிச் செல்லவேண்டாமல், அடி தொறும் - (செய்யுளின்) அடிகளிலெல்லாம், வான் பொருள் - சிறந்த பொருள், அற்று

* 'நிரைநிறை' என்றும் பிரதிபேதம்.

அற்று ஒழுகும் அஃது - அமைந்து அமைந்து நடப்பதாகிய அப்பொருள் கோள்,—யாற்றுப் புனல் - யாற்றுநீர்ப்பொருள்கோளாம்; (எ - று)

யாற்றுநீர்ப் பொருள்கோள் - திரும்பாமலே ஒரேமுகமாக ஓடுகின்ற ஆற்றுநீரின் ஓட்டம்போல, சொற்கள் முன்பின்னாக மாறாமல் நேராகவே பொருள் கொள்ளப்படுவது. எனவே,இது உவமைபற்றிவந்த பெயரென்க. பூட்டுவில், தாப்பிசை, அளை மறிபாப்பு என்பனவும் இவ்வாறே.

(உ - ம்.) "சொல் அருஞ் சூற் பசும்பாம்பின் தோற்றம்போல், மெல்லவே கருவிருந் தீன்று மேலலார், செல்வமேபோல் தலைநிறுவித் தேர்ந்த நூற், கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே"—இப்பாட்டினுள், சொல் என்னும் எழுவாயினை முதல் எடுத்து,அதன் தொழிலாகிய இருந்து, ஈன்று, நிறுவி,இறைஞ்சி என்னும் வினையெச்சங்கள் ஒன்றை ஒன்று கொள் ளும்படி இடையிலே முறையாக வைத்து, காய்த்த என்னும் பயனிலையை இறுதியிலே நிறுத்தி முடித்தவாறு காண்க.

(இதன்பொருள்:—சொல் - நெற்பயிர்களானவை, அருஞ் சூல் பசும் பாம்பின் தோற்றம் போல் - (கருவுண்டென்று அறிதற்கு) அரிய கருக் கொண்ட பச்சைப்பாம்பின் வடிவம்போல, மெல்லவே கரு இருந்து - நாள டைவிலே கருக்கொண்டு தங்கி,—ஈன்று-பின்பு கதிர்விட்டு,—மேல்அலார் செல்வமே போல்-மேன்மைக்குணமுடையரல்லாத கீழ்மக்கட்குச் செல்வம் (நேர்ந்தால் அவர்கள் செருக்கினால் வணக்கமின்றித் தலைநிமிர்ந்து நிற்பது) போல, தலை நிறுவி - தமது தலை வணங்காமல் நேரே நிறுத்தி நின்று,— (பின்பு கதிர்முற்றியதனால்), தேர்ந்த நூல் கல்வி சேர் மாந்தரின் - மெய்ப் பொருளை யாராய்ந்து கூறுகின்ற சாஸ்திரங்களைக் கற்றல் பொருந்திய மனி தர்கள்(மிக்கவணக்கமுடையராதல்)போல, இறைஞ்சி-மிகவும் வளைந்து,— காய்த்த - விளைந்தன எனக் காண்க. எ - ஈற்றசை.) (சுக)

[உ. மொழிமாற்றுப் பொருள்கோள்.]

† சகௗ. ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றி யோரடியுள் வழங்கல் மொழிமாற்றே.

(இ - ள்) ஏற்ற பொருளுக்கு-ஏற்ற இரண்டு பயனிலைகளுக்கு, இயை யும் - பொருந்தத்தக்க, மொழிகளை-சொற்களை, மாற்றி - (ஏலாதபயனிலை களுக்குத்) தனித்தனி கூட்டி, ஓர் அடியுள் வழங்கல் - ஓர் அடியினுள்ளே சொல்வது, மொழிமாற்று - மொழிமாற்றுப் பொருள்கோளாம்; (எ - று.)

(உ - ம்.) "சுரை ஆழ அம்மி மிதப்ப வரையனைய, யானைக்கு நீத்து முயற்கு நிலை யென்ப, கானக நாடன் சுனை"—இப்பாட்டினுள், முதலடியில் ஆழ என்னும் பயனிலைக்கு இயைந்த அம்மி என்னும் மொழியை மிதப்ப என்னும் பயனிலைக்கும்,மிதப்ப என்னும் பயனிலைக்கு இயைந்த சுரை என் னும் மொழியை ஆழ என்னும் பயனிலைக்குமாக மாற்றிவைத்தவாறும்; இரண்டாமடியில் நீத்து என்னும் பயனிலைக்கு இயைந்த முயல் என்னும் மொழியை நிலை என்னும் பயனிலைக்கும், நிலை என்னும் பயனிலைக்கு

இயைந்த யானை என்னும் மொழியை நீத்து என்னும் பயனிலைக்குமாக மாற்றிவைத்தவாறும் காண்க.

(இதன்பொருள்:—காடுகள்சூழ்ந்த நாட்டையுடைய அரசனது மலைச் சுனையானது, சுரைக்காய் மிதக்க அம்மி அமிழ மலைபோன்ற யானைக்குக் கால்நிலைக்கத்தக்க ஆழமும் முயலுக்கு நீந்தத்தக்க தன்மையது மாகு மென்று கூறுவர் (அறிந்தோர்) எனக் காண்க.) (கூஉ)

[ரு. நிரனிறைப் பொருள்கோள்.]

† சகச. பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்
வேறு நிரல்நிறீஇ முறையினு மெதிரினும்
நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே.

(இ - ள்.) பெயரும் வினையும் ஆம்-பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லு மாகிய, சொல்லையும் - சொற்களையும், பொருளையும் - (அவைகொள்ளும் பெயரும் வினையுமாகிய)பயனிலைகளையும்,வேறு-வேறுவேறாக, நிரல் நிறீஇ-வரிசைப்பட நிறுத்தி,—முறையினும் - முறையாகவாயினும், எதிரினும் - முறை மாறுபடவாயினும், நேரும்-இதற்கு இது பயனிலை யென்பதுபடக் கூறுகிற, பொருள்கோள்—;—நெறி-வழிப்பட்ட, நிரல் நிறை-நிரனிறைப் பொருள்கோளாம்; (எ - று.)

(உதாரணம்.)

(க) "உடுத்ததுவும் மேய்த்ததுவு மும்பர்கோன் றன்னால், எடுத்ததுவும் பள்ளிக் கியையப்—படுத்ததுவும்,அந்நாளெறிந்ததுவு மன்பி னிரந்ததுவும், பொன்னா வரை யிலை காய் பூ"—இது - உடுத்தது பொன், மேய்த்தது ஆ, எடுத்தது வரை, படுத்தது இலை, எறிந்தது காய், இரந்தது பூ எனப் பெயர் களும் பெயர்ப்பயனிலைகளுமாய் நின்ற முறைநிரனிறை.('உடுத்தது'முதலி யன - வினையாலணையும்பெயர். வரை - மலை. பூ - பூமி; வடசொல்)

(இதன்பொருள்.—தேவாதிதேவனான திருமாலினால் அரையில்உடுக்கப் பட்டது பீதாம்பரமென்னும் பொற்பட்டாடை, (கிருஷ்ணாவதாரத்தில்) மேய்க்கப்பட்டது பசு, குடையாக எடுத்துப்பிடிக்கப்பட்டது கோவர்த்தன கிரி, (பிரளயகாலத்தில்) சயனத்துக்கு இயையப் படுக்கையாகக் கொள்ளப் பட்டது ஆலிலை, (கிருஷ்ணாவதாரகாலத்தில் கன்றுகொண்டு) எறியப்பட் டது விளங்காய், (பாண்டவர்க்காகத் துரியோதனனிடம் தூதுசென்று) அன்போடு இரக்கப்பட்டது பூமி எனக் காண்க.)

(உ) "காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப, போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய—நீதியான், மண்ணமிர்த மங்கையர்தோள் மாற் றாரையேற்றார்க்கு, நண்ணிய வாயபொருள்"—இதில், 'கா து சேர் தாழ் குழை ஆய்' என்னும் ஆறும் முன்னிலை ஏவல்வினைச்சொற்க ளாதலால், கா மண், து அமிர்தம், சேர் மங்கையர்தோள், தாழ் மாற்றாரை, குழை ஏற்றார்க்கு, ஆய் நண்ணியவாயபொருள் என வினைப்பயனிலைகளும் பெயர்களுமாய் நின்ற முறைநிரனிறை: [து - உண். தாழ் - கீழ்ப்படுத்து. குழை - மனமிரங்கு. ஆய் - ஆராய்ந்துபார்.]

(இதன்பொருள்.—கன்னி துறை சேர்ப்ப - கன்னியாகுமரியென்னுந் துறைமுகத்தையுடைய கடற்கரைக்குத்தலைவனே! போது சேர் தார் மார்ப- மலர்களினால் தொடுக்கப்பட்ட மாலையைத் தரித்த மார்பை யுடையவனே! போர் செழிய - போர்செய்யவல்ல பாண்டியனே! (நீ), நீதியால்-முறையே, மண்-பூமியை, கா - பாதுகாப்பாய்; அமிர்தம் - இனிய உணவை, து-உண் பாய்; மங்கையர் தோள் - உரிய மகளிர்களின் தோள்களை, சேர்-சேர்வாய்; மாற்றாரை - பகைவர்களை, தாழ்- தாழச்செய்வாய்; ஏற்றார்க்கு - இரப்ப வர்களுக்கு. குழை - மனம்நெகிழ்வாய்; நுண்ணிய ஆய பொருள் - நுட்ப மான பொருள்களை, ஆய் - ஆராய்வாய் எனக் காண்க.)

(ங) "வான்முகிலும் மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல், தானும் குழலும் தனிவீழ்ந்தாள்"—இது - முகில்போலக் குழலும், மின்போலத் தானும் என மாறவேண்டுமாதலின், பெயர்களும் பெயர்ப்பயனிலைகளு மாய் நின்ற எதிர்நிரனிறை.

(இதன்பொருள்.—வானத்திலுள்ள மேகமும் மின்னலும் வெறுந்தரை யிலே விழுந்திட்டாற்போலத் தலைவிரிகோலமாய்த் தான் (தமயந்தி) தனி யே விழுந்திட்டாள் எனக் காண்க.)

(ச) "ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும், பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால், நின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன் றோ, மன்றார் மதிற்கச்சி மாண்பு"—இது - வெஃகா கிடந்தான், பாடகம் இருந்தான், ஊரகம் நின்றான் எனப் பெயர்களும் வினைப்பயனிலைகளு மாய் நின்ற எதிர்நிரனிறை.

(இதன்பொருள்.—நீண்ட திருமால் வெஃகா, பாடகம், ஊரகம் என்ற தலங்களைத் தனக்கு இடமாகக்கொண்டு அவற்றில் முறையே கிடந்தான், இருந்தான், நின்றான்; பலசபைகள் நிறைந்ததும், மதில்சூழ்ந்ததுமான காஞ்சீ புரியின் பெருமை, இதுவன்றோ? இப்படிப்பட்ட கச்சிப்பதியை, மனிதர் கள் எங்ஙனம் விட்டு நீங்குவர்? எனக்காண்க. பஞ்சரம்-இடம். வெஃகா, பாட கம், ஊரகம் என்பன - காஞ்சீநகரத்திலுள்ள திருமால் திருப்பதிகள். திரு மால் அவற்றுள் வெஃகாவில் பள்ளிகொண்ட திருக்கோலமாகவும், பாடகத் தில் வீற்றிருந்த திருக்கோலமாகவும், ஊரகத்தில்நின்றதிருக்கோலமாகவும் எழுந்தருளியிருக்கின்றனன் ஆதலால், இச்செய்யுளில், முறையே கொள்ளா மல் மாற்றி இயைத்துப் பொருள்கொள்ளவேண்டியதாயிற்று. திருவெஃகா- யதோக்தகாரிசந்நிதி யென்றும், திருப்பாடகம்-பாண்டவதூதர்சந்நிதியென் றும், திருவூரகம் - உலகளந்தபெருமாள்சந்நிதியென்றும் வழங்கும்.) (சுங)

[ச. பூட்டுவிற் பொருள்கோள்.]

† சகரு. எழுவா யிறுதி நிலைமொழி தம்முள்
பொருள்நோக் குடையது பூட்டுவில் லாகும்.

(இ - ள்.) எழுவாய் - (செய்யுளின்) முதலிலும், இறுதி - ஈற்றிலும், நிலை-நிற்கிற, மொழி-சொற்கள், தம்முள்-தமக்குள்ளே, "பொருள்நோக்கு

உடையது - பொருளை நோக்குதலுடையது,—பூட்டுவில் ஆகும் - விற்பூட்டுப் பொருள்கோளாம்; (எ - று.)—இங்கே, எழுவாய் - முதல்.

பூட்டுவிற் பொருள்கோள்-இருகோடிகளிலும் நாணி பூட்டப்படுதலையுடைய விற்போலச் செய்யுளின் முதல்மொழியும் இறுதிமொழியும் பொருளிற் பொருந்துவது.

(உ - ம்.) "திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர், இறந்து படிற் பெரிதாமேதம்—உறந்தையர்கோன், தண்ணாரமார்பன் தமிழர்பெருமானைக், கண்ணாரக் காணக் கதவு"—இதில், திறந்திடுமின் கதவு என நோக்கிற்று.

(இதன்பொருள்.—தீயவை பின் காண்டும் - (எவையேனும்) தீங்குகள் நேருமாயின் (அவற்றிற்குப் பரிகாரம்) பின்பு பார்த்துக்கொள்வோம்; மாதர் இறந்துபடின் பெரிது ஆம் ஏதம் - (சோழனைக் காணுதற்கு மிக்க ஆசை கொண்டுவந்துள்ள) மகளிர் (அவனைக் காணாமையாலாகிய வருத்தமிகுதியால்) இறந்தொழிந்தால் (பெண்கொலையாகிய) பெரும் பாவம் விளையும்; (ஆதலால்),—உறந்தையர் கோன் - உறையூரிலுள்ளார்க்கு அரசனும், தண் ஆரம்மார்பன் - குளிர்ந்த முத்துமாலையைத் தரித்த மார்பையுடையவனும், தமிழர்பெருமானை - தமிழ்வல்லார்க்குத் தலைவனுமாகிய சோழனை, கண் ஆர காண - கண்கள்களிக்க (இம்மகளிர்) காணும்படி, கதவு திறந்திடுமின் - கதவைத் திறந்துவிடுங்கள் எனக் காண்க.) (சுசு)

[ரு. தாப்பிசைப் பொருள்கோள்.]

† சகசு. இடைநிலை மொழியே ஏனையீ ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை.

(இ - ள்.) இடை நிலை மொழி - (செய்யுளின்) நடுவில் நிற்கிற மொழி, ஏனை ஈரிடத்தும் - ஒழிந்த முதலிலும் இறுதியிலும், நடந்து - சென்று, பொருளை நண்ணுதல் - பொருளைக் கூடுவது,—தாம்பு இசை - தாப்பிசைப் பொருள்கோளாம்; (எ - று.)—இதனை, மத்திமதீபம் என்பர் வடநூலார்.

தாப்பிசை என்பதற்கு - ஊஞ்சற்கயிறுபோல நடுவில் நின்று இருபக்கத்திலும் செல்லும் சொல் என்பது பொருள்; (தாம்பு - கயிறு.)

(உ - ம்.) "உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண, அண்ணாத்தல் செய்யா தளறு"—இதில், நடுவில்நின்ற 'ஊன்' என்ற சொல் - ஊனுண்ணாமை என முன்னும், ஊனுண்ண எனப் பின்னும் சென்று கூடுதல் காண்க.

(இதன்பொருள்.—உயிர் நிலை-சில உயிர்கள் உடம்பிலே நிற்றல் (அல்லது உயிர் நற்கதியடையும் நிலைமை), ஊன் உண்ணாமை உள்ளது - மாமிச போசனஞ் செய்யாமை யென்கிற தருமத்திலே யுள்ளது; (ஆதலால்), ஊன் உண்ண - (அந்நிலை குலைய ஒருவன்) மாமிசத்தைப் புசிப்பாயினன், அளறு அண்ணாத்தல் செய்யாது-(அவனை உட்கொண்ட) நரகம் (பின்பு ஒருகாலும் அவனை வெளிவிடுதற்கு) வாய்திறவாது எனக் காண்க) (சுரு)

[கூ. அளைமறிபாப்புப் பொருள்கோள்]

† சஎக. செய்யு ளிறுதி மொழியிடை முதலினும்
எய்திய பொருள்கோ ளளைமறி பாப்பே.

(இ - ள்.) செய்யுள் - செய்யுளில், இறுதி - ஈற்றில்நின்ற, மொழி - சொல், இடை-நடுவிலும், முதலினும் - (அதன்பின்பு) முதலிலும், எய்திய- சென்று இயைந்த, பொருள்கோள்—,—அளை மறி பாம்பு-அளைமறிபாப்புப் பொருள்கோளாம்; (எ - று.)

புற்றிலே தலைவைத்து மடங்கும் பாம்புபோல முன்பின்னாக அந்வயிக் கப்படுதலால், இப்பெயர் பெற்றது. (அளை - புற்று. மறிதல்-மடங்குதல்.) பாம்பு புற்றில் தலைவைத்து நுழையுமளவிலே தலை மேலாம்படி நிலைமாறு தல் இயல்பு; அவ்வாறே, செய்யுளின் இறுதியிலிருந்து சொற்களை யெடுத் துக்கூட்டிப் பொருள்கொள்வது, இதன் இலக்கணம்.

(உ - ம்.) "சூழ்ந்த வினை யாக்கை சுடவிளிந்து நாற்கதியிற் சுழல்வார் தாமும், மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார் தாமும், தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித் தளர்வார் தாமும், வாழ்ந்த பொழுதினே வா னெய்து நெறிமுன்னி முயலா தாரே"—இதில், வாழ்ந்தபொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதார், தாழ்ந்தஉணர் வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித் தளர்வார், மூழ்ந்தபிணிநலிய முன் செய்த வினையென்றே முனிவார், சூழ்ந்த வினை யாக்கை சுட விளிந்து நாற்கதியிற் சுழல்வார் எனத் தலைகீழாய் இடையிலும் முதலிலும் சென்று கூடுதல் காண்க.

(இதன்பொருள்.—வாழ்ந்த பொழுதினே - தாம் வலிமையோடு) உயிர் வாழ்ந்திருந்தகாலத்திலே, வான் எய்தும் நெறி முன்னி முயலாதார்-(பின்பு) முத்தியைப்பெறும் வழியைக் குறித்து முயற்சிசெய்யாதவர்கள்,—தாழ்ந்த உணர்வினர் ஆய் தாள் உடைந்து தண்டு ஊன்றி தளர்வார்தாமும்-(முதுமை யில்) அறிவுமழுங்கியவர்களாய்க் கால்வலிமைகுன்றித் தடியை ஆதாரமாக ஊன்றிக்கொண்டு தளர்பவர்களும், மூழ்ந்த பிணி நலிய முன்செய்த வினை என்றே முனிவார்தாமும்-(உடம்பில்) அழுந்திய நோய்கள் வருத்துதலால் முன்புசெய்த கருமத்தின் பயன் இதுவென்று வெறுப்புக்கொள்பவர்களும், சூழ்ந்த வினை யாக்கை சுட விளிந்து நால் கதியில் சுழல்வார்தாமும், - (தம் உயிரை)விடாது சூழ்ந்த கருமம் உடம்பை யொழித்தலால் இறந்து(மக்கட் கதி தேவகதி நரககதி விலங்குகதி யென்னும்) நால்வகைக் கதிகளுள்ளும் மாறி மாறிப்பிறந்து அலைபவர்களு மாவர் எனக் காண்க.) (கூகூ)

[எ. கொண்டுகூட்டுப் பொருள்கோள்]

† சகஅ. யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை
ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே.

(இ - ள்.) யாப்பு அடி பலவினும் - செய்யுளின் அடிகள் பலவற்றிலும், கோப்பு உடை - கோத்தப்பட்டுக் கிடக்கின்ற, மொழிகளை - சொற்களை,

எற்பு உழி-(பொருளுக்கு) எற்ற இடத்தில்,இசைப்ப து-எடுத்துக்கொண்டு கூட்டுவது,—கொண்டுகூட்டு-கொண்டுகூட்டுப் பொருள்கோளாம்;(எ-று.)

சிதர்ந்துகிடந்த சொற்களை எடுத்து வரிசைப்பட அந்வயித்துப் பொருள்கொள்வது, கொண்டுகூட்டுப் பொருள்கோள்.

மொழிமாற்றுப் பொருள்கோளுக்தும், கொண்டு கூட்டுப்பொருள் கோளுக்தும் வேறுபாடு:—இவ்விரண்டும் சொற்கள் முன்பின்னுகமாற்றப் படுதலால் ஒப்புமையுடையனவாயினும் ஓரடியில் உள்ள சொற்களை முன் பின்னுக மாற்றுவது - மொழிமாற்றுப் பொருள்கோள் என்றும், பல அடிகளிலும் நின்ற சொற்களை எற்றபடி கொண்டு கூட்டுவது-கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்றும் அறிக.

(உ - ம்.) "தெங்கங்காய்போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்,வெண் கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி, அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே, வங்கத்துச் சென்ருர் வரின்"—இதில், வங்கத்துச் சென்ருர் வரின் அஞ்சனத்தன்ன பைங்கூந்தலை யுடையாளது மாமேனிமேல் தெங்கங்காய் போலத் திருண்டுருண்ட கோழிவெண்முட்டை யுடைத்தன்ன பசலை தணிவாம எனக் கொண்டு கூட்டுக.

(இதன்பொருள்.—வங்கத்து சென்ருர் வரின்-(பொருள்தேடும்பொருட்டு) மரக்கலத்திலேறிச்சென்ற தலைவர் வந்தால்,—அஞ்சனத்து அன்ன பைங் கூந்தல்-மையைப்போன்ற கரிய கூந்தலையுடைய இத்தலைவியினது, மா மேனி-அழகிய மேனியிற் காணப்படுகின்ற,தெங்கங்காய்போல திரண்டு உருண்ட வெண் கோழிமுட்டை உடைத்து அன்ன பசலை-தேங்காய்போலத்திரண்டு உருண்ட வெண்மையான கோழிமுட்டையை யுடைத்தாற் போன்ற பசலைநிறம், தணிவாம்-நீங்கப்பெறுவோம் எனக் காண்க. பசலை - காமத்தாலுண்டாகும் நிறவேறுபாடு. தணிவு ஆம் எனப் பிரித்து, நீங்கிவிடுமென்று கொள்ளினும் அமையும். இது, தோழிவார்த்தை.) (கூஎ)

[அ. அடிமறிமாற்றுப்பொருள்கோள்.]

† சசகூ. எற்புழி எடுத்துடன் கூட்டுறு மடியவும்
யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை
மாட்சியு மாறு வடியவு மடிமறி.

(இ - ள்.) எற்புஉழி - (பொருளுக்கு) எற்றவிடத்து, எடுத்து—, உடன் கூட்டுறும் - நீங்காமற் கூட்டுகின்ற, அடியவும் - அடியை யுடையவையும், யாப்பு ஈறு இடை முதல் ஆக்கினும் - (யாதாயினும் ஓரடியை எடுத்து)அச் செய்யுளின் இறுதி நடு முதல்களில் யாதாயினும் ஓரிடத்துக் கூட்டினுலும், பொருள் இசை மாட்சியும் மாறு அடியவும் - பொருளோடு செய்யுளோசை மாட்சியும் செய்யுளோசையொழியப்பொருள்மாட்சிமாத்திரமும் வேறுபடாத அடியையுடையவையும்,—அடிமறி - அடிமறிமாற்றுப் பொருள்கோளாம்.

எனவே - எற்புழிக்கூட்டும் அடிமாற்று, மாறு அடிமாற்று என அடிமறிமாற்றுப் பொருள்கோள் இருவகைப்படுமென்றும்; அவற்றுள், பின்னது -

பொருளிசைமாட்சிமாறு அடிமாற்று,பொருள்மாட்சிமாறு அடிமாற்றுஎன இருவகைப்படுமென்றும் கொள்க.[இசையெனினும், செய்யுளோசையெனினும் ஒக்கும்.] அடிமறிமாற்று - மொழிமாற்றும் கொண்டுகூட்டும் போல அடியிலுள்ள சொற்களை முன்பின்னுக மாற்றுவதல்லாமல் அவ்வடிகளையே முழுவதும் எடுத்து முன்பின்னுக மாற்றிவைப்பது.

(உதாரணம்.)

(க) "நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந்துடையார், கொடுத்துத்தான் துய்ப்பினு மீண்டுங்காலீண்டும்,மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம், விடுக்கும் வினை யுலந்தக்கால்"—இதில், கொடுத்துத் தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும், விடுக்கும் வினை உலந்தக்கால் மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்; (இதனை அறியாதவர்) நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார் என அடிகளைப் பொருளுக்கு ஏற்றவிடத்து எடுத்துக் கூட்டல் காண்க. இது, ஏற்புழிக்கூட்டும் அடிமறிமாற்று.

(இதன்பொருள்:—(செல்வம்), கொடுத்து தான் துய்ப்பினும்-(பிறர்க்கும்) கொடுத்துத் தானும் அனுபவித்துவந்தாலும்,ஈண்டும் கால் ஈண்டும்-(நல்வினையால்) வளரவேண்டுங் காலத்து வளரும்; விடுக்கும் வினை உலந்தக்கால் - (முற்பிறப்பிற் செய்தா குறையாக) விட்ட அந்நல்வினை முடிந்துவிட்டால், மிடுக்கு உற்று பற்றினும் நில்லாது செல்வம்-இறுக்கிப் பிடித்தாலும் செல்வம் நிலைபெருமற் போய்விடும்; (இதனையறியாத பலர்) நடுக்கு உற்று தன் சேர்ந்தார் துன்பம் துடையார் - (வறுமையினுல்) நடுங்குதலையடைந்து தம்மைச் சேர்ந்தவரது துன்பத்தை (அவர்வேண்டினகொடுத்துப்) போக்கார் எனக் காண்க.)

(உ) க. "மரகதமணிப்பணிசெய் மாளிகைகளொருசார், அரிமணியழுத்தியன ஆலயமதொருசார், எரிமணியழுத்தியன வில்லின்விதமொருசார், தருணமணிமுத்தினியலுஞ் சதன மொருசார்"—இதில்,எந்த அடியை எங்கே கூட்டினுலும் பொருளும் ஓசையும் வேறுபடாமை காண்க. இது, பொருளிசைமாட்சி மாற அடிமறிமாற்று.

(இதன்பொருள்:—மரகதரத்தினங்களால் வேலைசெய்யப்பட்ட வீடுகள் ஒருபக்கத்திலும், செந்நிறமான பதுமராகக் கற்களைப் பதித்துக் கட்டிய வீடுகள் ஒருபக்கத்திலும், மிக விளங்குகிற நீலமணிகளைப் பதித்தனவான வீடுகளின் வகைகள் ஒருபக்கத்திலும்,முதிர்ந்த அழகிய முத்துக்களினுலமைந்த வீடுகள் ஒருபக்கத்திலும் (உள்ளன) எனக் காண்க.)

உ. "அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம், விலைப்பாலிற் கொண்டூன்மிசைதலுங் குற்றஞ்,சொலற்பாலவல்லாதசொல்லுதலுங் குற்றங், கொலைப்பாலுங் குற்றமேயாம்"—இதில், ஈற்றடியொழிந்த மூன்றடிகளுள் எந்த அடியை எங்கே கூட்டினுலும் பொருளும் ஓசையும் வேறுபடாமையும், ஈற்றடியை யெடுத்து யாதாயினு மோரிடத்துக் கூட்டினுல் ஓசை வேறுபட்டுப் பொருள் வேறுபடாமையும் காண்க. இது, பொருள்மாட்சி மாற அடிமறிமாற்று.

(இதன்பொருள்:—கொல்லுதற்பொருட்டு வேறோருயிரை வளர்த்தலும் பாவம், விலைக்கு வாங்கி மாமிசத்தைப் புசித்தலும் பாவம், சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லுதலும்பாவம், கொல்லுதலும்பாவம்எனக்காண்க.)

பொதுவியல் முற்றிற்று

ச. இடையியல்.

இடைச்சொல்லின் இலக்கணங்களை உணர்த்தும் இயல்.

[இடைச்சொல்லின் இலக்கணம்.]

‡ சஉ0. வேற்றுமை வினை சாரியை ஒப்பு உருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பெ னெண்பகுதியின் தனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும் வந் தொன்றுவ திடைச்சொல்.

(இ - ள்.) வேற்றுமை - (ஐ முதலிய) வேற்றுமை யுருபுகளும், வினை - (விகுதி முதலிய) வினையுருபுகளும், சாரியை-(அன்ஆன் முதலிய) சாரியை யுருபுகளும், ஒப்பு உருபுகள்-(போல் முதலிய) உவமையுருபுகளும், தம் தம் பொருள - தம்தமக்கு உரிய பொருளை உணர்த்திவருகிற ஏ ஓ முதலியவை யும், இசைநிறை-(வேறுபொரு ளில்லாமல்) செய்யுளிசை நிறைத்தற்கே வருபவையும், அசைநிலை - அசையாய்வருதலே பொருளாக நிற்பவையும், குறிப்பு-(வெளிப்படையாய்வரும் இவைபோலாமல்) குறிப்பினாற் பொருளுணர்த்தி வருபவையும், என் - என்கிற, எண் பகுதியின்-இவ்வெட்டு வகையை உடையனவாய்,—தனித்து இயல் இன்றி-தனித்துநடக்கும் தன்மையில்லாமல்,—பெயரினும் வினையினும்-பெயர்ச்சொல்லினிடத்தும் வினைச்சொல்லினிடத்தும், பின் முன்-(அவற்றின்) பின்னேயாயினும் முன்னேயாயினும், ஓர் இடத்து - ஒரு இடத்தில், ஒன்றும் பலவும்-ஒன்றாயினும் பலவாயினும், வந்து—, ஒன்றுவது-ஒன்றுபட்டு நடப்பது,—இடைச்சொல்—; (எ - று.)

தனித்துநடக்கும் ஆற்றலில்லாமல் பெயர் வினைகளோடு சேர்ந்து அவற்றினிடமாக நடத்தலால், 'இடைச்சொல்' எனப்பட்டன. [இடம், இடை என்பன-ஒருபொருட்சொற்கள்.] இனி, பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் ஆகாமல் அவற்றினும் வேறுமாகாமல் நடுத்தன்மையாய் நிற்கையால், இடைச்சொல் எனப்பட்டன எனினும் அமையும்; இனி, முன்னும் பின்னும் வருமாயினும், பெரும்பாலும் இடையிலே வருதலால், இடைச்சொல் என்பது ஆசிரியர் கருத்தென்பாரும் உளர்.

'உருபுகள்' என்பதை, வேற்றுமை வினைசாரியை என்பவற்றோடும் கூட்டுக.

அசைத்தல் - ஒருபொருளையும் உணர்த்தாமல் பெயர்ச்சொல் வினைச்சொற்களோடு சார்த்திச் சொல்லப்படுதல். இசைநிறை அசைநிலை என்னும் இரண்டும் வேறுபொருளை உணர்த்தாதன வாயினும், இசைநிறை - செய்யு

ளில் ஓசையை நிறைப்பதென்றும், அசைநிலை - பெயர் வினைகளோடு சார்த்திச்சொல்லப்படுவ தென்றும் வேறுபாடு அறிக.

வேற்றுமையுரு பிடைச்சொற்கள் - பெயரியலிற் சொல்லப்பட்டன.

வினையுருபிடைச்சொற்கள் - பதவியலிற் சொல்லப்பட்டன. பின்-'சாரியை'எனச்சொல்லுதலால்,வினையென்றது-அதுநீங்கலான மற்றையவற்றை:

சாரியை யிடைச்சொற்கள் - உருபுபுணரியலிற் சொல்லப்பட்டன.

ஒப்புரு பிடைச்சொற்கள்-பொதுவியலில் "போலப் புரைய" என்னும் சூத்திரத்திற் சொல்லப்பட்ட எச்சங்களின் பகுதிகள்.

தம்தம் பொருள் உணர்த்துவனவும், இசைநிறையும், அசைநிலையும் ஆகிய இடைச்சொற்கள் - மேல் இவ்வியலிற் சொல்லப்படுவன.

குறிப்பாற் பொருளுணர்த்தும் இடைச்சொற்கள்வருமாறு:—கோவென, சோவென, துடுமென, ஒல்லென, கஃறென, சுஃறென, கடகடென, களகளென, திடுதிடென,நெறுநெறென,படபடென என்றாற்போல்வன-ஒலிக்குறிப்புப்பொருளைத் தரும் இடைச்சொற்கள். துண்ணென, துணுக்கென, திட்கென, திடுக்கென என்றாற்போல்வன-அச்சக்குறிப்புப்பொருளைத்தரும் இடைச்சொற்கள். பொள்ளென, பொருக்கென, ஞெரேலென என்றாற்போல்வன - விரைவுக்குறிப்புப் பொருளைத் தரும் இடைச்சொற்கள்.

குழையன், அது மற்றம்ம—பெயரின்முன் ஒன்றும் பலவும்வந்தன.
ஓ சாத்தன்,இனி மற்றென்று—பெயரின்முன் ஒன்றும் பலவும்வந்தன.
உண்ணுய், நடந்தனனே—வினையின்பின் ஒன்றும் பலவும் வந்தன.
அம்மா பெரிது, சீ சீ போ—வினையின்முன் ஒன்றும் பலவும் வந்தன.

[இடைச்சொல்லின் பொருள்கள்]

† உஉக. தெரிநிலை தேற்றம் ஐயம் முற்று எண் சிறப்பு
எதிர்மறை எச்சம் வினு விழைவு ஒழியிசை
பிரிப்புக் கழிவு ஆக்கம் இன்னன இடைப்பொருள்.

(இ - ள்.) தெரிநிலை - தெரிநிலையும், தேற்றம் - தெளிவும், ஐயம் - சந்தேகமும், முற்று - முற்றும், எண் - எண்ணும்,சிறப்பு-சிறப்பும், எதிர்மறை-எதிர்மறையும், எச்சம் - எச்சமும், வினு - வினுவும், விழைவு - விருப்பமும், ஒழியிசை - ஒழிந்த சொல்லும், பிரிப்பு - பிரிநிலையும், கழிவு - கழிதலும், ஆக்கம் - ஆக்கமும் (என்னும் பதினுன்கும்), இன்னன - இவை போல்வன பிறவும்,—இடை - ('தத்தம் பொருள' என்ற) இடைச்சொற்களினுடைய, பொருள் - பொருள்களாம்; (எ - று.)—அவை - பேற் காட்டப்படும்.

'இன்னன' என்றதனுல் சில வருமாறு:—

அ, இ, உ—சுட்டுப்பொருளைத் தருவன; அவன், இவன் உவன்.

எ, யா, ஆ, ஓ, ஏ,—வினுப்பொருளைத்தருவன; எவன்,யாவன், பொன்னுே, சாத்தனே, ஏது.

முன், பின்—இடப்பொருளும் காலப்பொருளும் தருவன; முன் செய், பின் இரு.

இனி என்பது-கால இடங்களின் எல்லைப்பொருளைத்தருவது; இனிச் செய்வேன், இனி எம் ஊர்.

தோறும், தோறும்—தொழில் இடங்களின் பன்மைப்பொருளைத் தருவன; செய்தோறும், ஊர்தோறும்.

ஆவது, ஆதல், ஆயினும், தான்—விகற்பப்பொருளைத் தருவன; பத்தாவது எட்டாவது கொடு, (பிறவும் இவ்வாறே காண்க.)

அந்தோ, ஐயோ, ஆ முதலியவை— இரக்கப்பொருளைத் தருவன; இழந்தான்.

அம்மா, ஆ, ஓ முதலியவை— வியப்புப் பொருளைத் தருவன; அம்மா பெரிது.

வாளா, சும்மா, கொன்னே— பயனின்மைப் பொருளைத் தருவன; வாளா இருந்தான்.

சீ, சிச்சீ முதலியவை—இகழ்ச்சிப்பொருளைத் தருவன; சீ சீ போ.
'ந' என்பது—உயர்வுப்பொருளைத் தருவது; நப்பின்னை நக்கீரன்.
மற்றும் இப்படிவருகின்றவற்றை ஆராய்ந்து அறிந்துகொள்க. (உ)

[ஏகார இடைச்சொல்.]

‡ சஉஉ. பிரிநிலை வினா எண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை என ஆறு ஏகா ரம்மே.

(இ - ள்.) ஏகாரம்-ஏகார இடைச்சொல்,—பிரிநிலை - பிரிநிலையும், வினா-வினாவும், எண் - எண்ணும், ஈற்றசை - ஈற்றசையும், தேற்றம் - தெளிவும், இசைநிறை-இசைநிறைத்தலும், என - என்று, ஆறு - ஆறுபொருள் தரும்.

(உதாரணம்.)

(க) அவர்களுள் இவனே கொண்டான்—இதில், ஒரு கூட்டத்திலிருந்து ஒருவனைப் பிரித்து நிற்றலால், பிரிநிலை.

(உ) நீயே கொண்டாய்?—இதில் நீயா கொண்டாய் என வினவுதற்பொருளைத் தருமிடத்து, வினா.

(௩) நிலமே நீரே தீயே - இதில், நிலமும் நீரும் தீயும் என எண்ணுதலால், எண்.

(ச) "இயம்புவ னெழுத்தே"—இதில், வேறுபொருள் இல்லாமல் இறுதியில் நிற்றலால், ஈற்றசை.

(ரு) உண்டே மறுமை—இதில், தெளிவுப்பொருளைத் தருதலால், தேற்றம்.

(சு) "ஏயே இவளொருத்தி பேடி!"—இதில், வேறு பொருளில்லாமல் செய்யுளில் இசையை நிறைத்து நிற்றலால், இசைநிறை.

இனி, நானே கொண்டேன்? எனச் சிலவிடத்து, நான் கொண்டிலேன் என்று வினவுகையில் எதிர்மறைப்பொருள்பட நிற்றலும்; ஏ ஏ பேதை! என இகழ்ச்சிப் பொருள்பட நிற்றலும் முதலியவற்றை "புதியன புகுதல்" என்பதனால் கொள்க.

(௩)

[ஓகார இடைச்சொல்.]

‡ சஉரு. ஒழியிசை வினாச் சிறப்பு எதிர்மறை தெரிநிலை
கழிவு அசைநிலை பிரிப்புஎன எட்டு ஓவே.

(இ - ள்.) ஓ-ஓகார இடைச்சொல்,—ஒழியிசை - ஒழியிசையும், வினா-வினாவும், சிறப்பு - சிறப்பும், எதிர்மறை-எதிர்மறையும், தெரிநிலை - தெரிநிலையும், கழிவு - கழிவும், அசைநிலை - அசைநிலையும், பிரிப்பு - பிரிநிலையும், என - என்று, எட்டு - எட்டுப் பொருளைத் தரும்; (எ - று.)

சிறப்பு-உயர்வுசிறப்பு, இழிவுசிறப்பு என இருவகைப்படும். ஒருபொருளினது உயர்வின் மிகுதியை விளக்குவது - உயர்வுசிறப்பு: இழிவின் மிகுதியை விளக்குவது - இழிவுசிறப்பு.

(உதாரணம்.)

(க) படித்தற்கோ வந்தான்—இதில், படித்தற்கன்று; விளையாடுதற்கு வந்தான் என ஒழிந்தசொற்களைத் தருதலால், ஒழியிசை.

(உ) குற்றியோ மகனோ?—இதில், குற்றியா மகனா என வினாவுதற்பொருளைத் தருதலால், வினா.

(ங) ஓ ஓ பெரியன்!—இதில் ஒருவனது,பெருமையின் மிகுதியைக் காட்டுதலால், உயர்வுசிறப்பு. ஓ ஓ கொடியன்!—இதில், ஒருவனது கொடுமையின் மிகுதியைக் காட்டுதலால், இழிவுசிறப்பு.

(ச) அவனோ கொண்டான்—இதில்,அவன் கொண்டிலன் என்னும் பொருளைத் தருமிடத்து, எதிர்மறை.

(ரு) அலியை நோக்கி,'ஆணோ அதுவும் அன்று; பெண்ணோ அதுவும் அன்று'என்றதில், அத்தன்மையில்லாமையைத் தெரிவித்தலால்,தெரிநிலை.

(சு) நன்மையறியாமற் கெட்டவர்களை 'ஓஒ தமக்கு ஒருநன்மை உணரார்' என்றதில், கழிந்ததற்கு இரங்குதலால், கழிவு.

(எ) "சொல்லுவன் கேண்மினோ"—இதில்,சொல்லுவேன் கேளுங்கள்என ப்பொருள்பட்டு ஓகாரம்வேறுபொருளில்லாமல்நிற்றலால்,அசைநிலை.

(அ) அவர்களுள் இவனோ கொண்டான்—இதில். பலரினின்று ஒருவனைப் பிரித்து நிற்றலால், பிரிநிலை.

இனி, சிலவிடத்து, பத்தோ பதினொன்றோ என ஐயப்பொருள் பட வருதல் முதலியனவும் கொள்க. (ச)

['என,' 'என்று' என்னும் இடைச்சொற்கள்]

‡ சஉசு. வினை பெயர் குறிப்பு இசை யெண் பண்பு ஆறினும்
எனவெனும் மொழி வரும் என்றும் அற்றே.

(இ - ள்.) என எனும் மொழி - என என்னும் இடைச்சொல்,—வினை-வினையும், பெயர் - பெயரும், குறிப்பு - குறிப்பும், இசை - இசையும், எண்-எண்ணும், பண்பு - பண்பும், (ஆகிய), ஆறினும்-ஆறுபொருளிலும், வரும்.

சேர்ந்துவரும்; என்றும் - என்று என்னும் இடைச்சொல்லும், அற்று - அப்படியே (ஆறுபொருளிலும் வரும்); (எ - று.)

(க) மகன் பிறந்தா னெனத் தந்தை மகிழ்ந்தான்—இதில், வினையோடு இயைந்தது.

(உ) "அழுக்கா றெனஒருபாவி"—இதில், பெயரோடு இயைந்தது.

(ங) "பொள்ளென வாங்கே புறம்வேரார்"—இதில், குறிப்போடு இயைந்தது. இது - விரைவுக்குறிப்புமொழி.

(ச) ஒல்லென ஒலித்தது—இதில், இசையோடு இயைந்தது. [இசை-ஒலி.]

(ரு) நிலமென நீரென நெருப்பென—இதில், எண்ணோடு இயைந்தது.

(சு) வெள்ளென விளர்த்தது - இதில், பண்போடு இயைந்தது.

'என்று' என்பதையும், இவ்வாறே இவற்றோடு ஒட்டிக்கொள்க. இனி, 'புலி பாய்ந்தெனப் பாய்ந்தான்' என உவமையோடு இயைதலும் கொள்க.

['உம்' என்னும் இடைச்சொல்.]

‡ சஉரு எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம் முற்று அளவை
தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே.

(இ - ள்.) உம்மை - உம் என்னும் இடைச்சொல்,—எதிர்மறை - எதிர்மறையும், சிறப்பு-(இருவகைச்)சிறப்பும், ஐயம் - சந்தேகமும், எச்சம் - எச்சமும், முற்று-முற்றும், அளவை - எண்ணும், தெரிநிலை-தெரிநிலையும், ஆக்கமோடு - ஆக்கமும் ஆகிய, எட்டு - எட்டுப் பொருளைத் தரும்; (எ - று.)

எச்சம் - இறந்தது தழுவிய எச்சமும், எதிரது தழுவிய எச்சமும் என இருவகைப்படும். எச்சம் - குறைந்துநின்ற பொருளைக் காட்டுவது.

(உதாரணம்.)

(க) சாத்தன் வருதற்கும் உரியன்—இதில், வாராமைக்கும் உரியன் எனப் பொருள்படுதலால், எதிர்மறை.

(உ) குறவரும் அஞ்சும் குன்று—இதில், குறவர்முகமாகக் குன்றின் உயர்வை விளக்குதலால், உயர்வுசிறப்பு.

'புலையனும் விரும்பாத யாக்கை'—இதில், புலையன் முகமாக உடம்பின் இழிவை விளக்குதலால், இழிவுசிறப்பு.

(ங) பத்தாயினும் எட்டாயினும் கொடு—இதில், ஒன்றைத் துணிந்து சொல்லாமையால், ஐயம்.

(ச) சாத்தனும் வந்தான்—இதில், முன் கொற்றன் வந்ததல்லாமல் என்னும் பொருளைத் தந்தால், இறந்ததுதழுவியஎச்சம். இனிக் கொற்றனும் வருவான் என்னும் பொருளைத் தந்தால், எதிரது தழுவியஎச்சம்.

(ரு) தமிழ்நாட்டு மூவரசரும் வந்தார்—இதில், குறைவில்லாமைப் பொருளைத் தருதலால், முற்று.

(சு) சேரனும் பாண்டியனும்—இதில், எண்ணிநிற்றலால், எண்.

(எ) அலியைநோக்கி 'ஆணுமன்று, பெண்ணுமன்று' என்றால்— இதில், இன்னதெனத் தெரிவித்து நிற்றலால், தெரிநிலை.

(அ) பாலும் ஆயிற்று என்றால்—இதில், அதுவே மருந்தும் ஆயிற்று என்னும் பொருளைத் தருமிடத்து, ஆக்கம்.

இனி, சிலவிடத்து இசைநிறை அசைநிலைகளில் வருதலும் கொள்க.

[முற்றும்மைக்குச் சிறப்புவிதி.]

சஉகூ. முற்றும்மை ஒரோவழி எச்சமு மாகும்.

(இ - ள்.) முற்று உம்மை - (மேற்சொன்ன பொருள்களில்) முற்றுப் பொருளில் வரும் உம்மை, ஒரோவழி - சில இடங்களில், எச்சமும் ஆகும்- எச்சப்பொருளைத் தருவதுமாம். (எ - று.)

ஏற்புழிக்கோடலால், எச்சப்பொருள்பட நிற்பது பெரும்பாலும் எதிர்மறையில் எனக் கொள்க.

(உ-ம்.) 'எல்லோரும் வந்திலர்' என்பதில், சிலர்வந்தாரென்றும்; 'அவர் பத்தும் கொடார்' என்பதில்,சிலகொடுப்பா ரென்றும்,'முழுவதும் அறிந்திலன்' என்பதில், சில அறிந்துள னென்றும் பொருள்படுதல் காண்க. (எ)

[எச்சவும்மைக்குச் சிறப்புவிதி.]

† சஉஎ. செவ்வெண் ணீற்றதா மெச்ச வும்மை.

(இ - ள்.) எச்ச உம்மை - எச்சப்பொருளில் வருகிற உம்மை.,—செவ்வெண்-செவ்வெண்ணிலே வருமாயின், ஈற்றது ஆம்-ஈற்றிலே வரும்;(எ-று)

செவ்வெண்ணாவது - பெயர் வினைகளிலே எண்ணிடைச்சொல் தொக்கு நிற்க எண்ணிநிற்பது.

(உ - ம்.) கல்வி செல்வம் ஒழுக்கம் குடிப்பிறப்பும் பெறுவாரு முளர்— இங்கு, இவற்றுள் சிலபெறுவாருமுளர் எனப்பொருள் படுகிற எச்சவும்மை, செவ்வெண்ணின் ஈற்றில் வந்தமை காண்க. (அ)

[சில எண்ணிடைச்சொற்களுக்கு இலக்கணம்.]

சஉ அ. பெயர்ச்செவ்வெண் ஏ என்றா எனா எண்
நான்குந் தொகைபெறும் உம்மை என்று என ஒடு
இந்நான் கெண்ணு மஃதின்றியு மியலும்.

(இ - ள்.) பெயர் செவ்வெண்-பெயர்களிடத்தே எண்ணிடைச்சொல் தொக்குவருகிற செவ்வெண்ணும், ஏ என்றா எனா எண் - (தொகாமல் வருகிற) இம்மூன்று எண்ணிடைச்சொற்களும், நான்கும் - ஆகிய இந்நான்கு எண்களும், தொகை - (இத்தனையென்று கணக்கிடும்) தொகைச்சொல்லை, பெறும் - பெற்றுவரும்; உம்மை என்று என ஒடு இந் நான்கு எண்ணும் - உம் முதலிய இந்த நான்கு எண்ணிடைச்சொற்களும், அஃது இன்றியும் - அத்தொகை பெறாமலும், இயலும் - வரும்; (எ - று.)—('இன்றியும்' என்ற உம்மையால், பின்கூறிய நான்கும் தொகைபெற்றும் வரும்.)

(உ-ம்.) சாத்தன் கொற்றன் இருவரும் வந்தார்
சாத்தனே கொற்றனே இருவரும் வந்தார்
சாத்தனென்று கொற்றனென்று இருவரும்வந்தார்
சாத்தனெனக் கொற்றனென இருவரும்வந்தார்
} தொகைபெற்றுவந்தன.

இவை - வழக்கில் சிறுபான்மை தொகை பெறுமல் வந்தால் அதனை இசையெச்சமாகவும், செய்யுளில் தொகைபெறுமல் வந்தால் அதனைத் தொகுத்தல் விகாரமாகவும் கொள்க.

(உ-ம்.) சாத்தனும், கொற்றனும் இருவரும்வந்தார்
சாத்தனென்று கொற்றனென்று இருவர் உளர்
சாத்தனெனக் கொற்றனென இருவர் உளர்
சாத்தனேடு கொற்றனேடு இருவர் உளர்
சாத்தனும் கொற்றனும் வந்தார்
சாத்தனென்று கொற்றனென்று உளர்
சாத்தனெனக் கொற்றனென உளர்
சாத்தனேடு கொற்றனேடு உளர்,
} தொகைபெற்றும், பெறுமலும் வந்தன.

பெயர்ச்செவ்வெண்ணுக்கும் உம்மைத்தொகைக்கும் வேறுபாடு:— இவ்விரண்டும் பெயர்ச்சொற்களில் எண்ணிடைச்சொல் தொக்குநிற்பனவாயினும், செவ்வெண்-தொடர்மொழிபோல விட்டிசைத்தும், உம்மைத் தொகை-ஒருமொழிபோல விட்டிசையாமலும் வருமெனக் காண்க. (௯)

[சில எண்ணிடைச்சொற்களுக்குச் சிறப்புவிதி]

௪உ௯. என்று மெனவு மொடுவு மொரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருள்தொறும் நேரும்.

(இ - ள்.) என்றும் எனவும் ஒடுவும் - என்று என ஒடு என்னும் இம்மூன்று எண்ணிடைச்சொற்களும், ஒரோவழி நின்றும் - (எண்ணப்படும் பொருள்தோறும் நில்லாமல்) ஓரிடத்தில் நின்றும், பிரிந்து - (தான் நின்ற இடத்தினின்றும்) பிரிந்து, எண் பொருள் தொறும் - எண்ணப்படுகின்ற பொருள்கள்தோறும், நேரும் - போய்ப் பொருந்தும்; (எ - று.)

(உ - ம்.) க. "வினை பகை யென்று இரண்டு"
உ. "பகை பாவ மச்சம் பழி யென நான்கும்"
௩. "பொருள் கருவி காலம் வினை யிடனேடு ஐந்தும்"

இவற்றுள் - வினையென்று, பகையென்று எனவும்; பகையென, பாவமென, அச்சமென, பழியென எனவும்; பொருளொடு, கருவியொடு, காலமொடு, வினையொடு, இடனெடுஎனவும் எண்ணிடைச்சொல் நின்றவிடத்துப் பிரிந்து பிறவிடத்தும் சென்று பொருந்துதல் காண்க. (௧௦)

[எண்ணிடைச்சொற்கள் வினையோடும் வருதல்.]

௪௩௦. வினையொடு வரினுமெண் ணினைய வேற்பன.

(இ - ள்.) ஏற்பன - பொருந்துவனவாகிய, எண் - சில எண்ணிடைச் சொற்கள்—, வினையொடு வரினும் - வினைச்சொல்லோடு வந்தாலும், இனைய.- (பெயரோடுவந்த) இவை போல்வனவாம்; (எ - று.)

(உ-ம்.) மயிலாடக் குயில்வாட மாமுகில் எழுந்தது—செவ்வெண்
கற்றும் கேட்டும் கற்பனை கடந்தார் —உம்மை
உண்ணவென்று உடுக்கவென்று வந்தான் —என்று
உண்ணவென உடுக்கவென வந்தான் —என
உண்ண உடுக்க வென்று வந்தான்—பிரிந்துகூடும் எண்
} வினையோ டுவந்தன. (௧௧)

['தில்' என்னும் இடைச்சோல்.]

சருக. விழைவே காலம் ஒழியிசை தில்லே.

(இ - ள்.) தில் - தில் என்னும் இடைச்சொல்,—விழைவு - ஆசையும், காலம்-காலமும், ஒழியிசை-ஒழிந்தசொல்லும் ஆகிய மூன்றுபொருள்தரும்.

(உதாரணம்.)

(௧) "அரிவையைப் பெறுகதில் லம்ம யானே"—இதில், அரிவையை [பெண்ணை]ப்பெறவேண்டுமென்கிற ஆசையை உணர்த்துதலால், விழைவு.

(உ) "பெற்றாங் கறிகதில் லம்ம இவ்வூரே"—இதில், பெற்றகாலத்தில் அறிக எனக் காலத்தை உணர்த்துதலால், காலம்.

(௩) "வருகதில் லம்ம எஞ்சேரி சேர"—இதில், வந்தால் இன்னது செய்வேன் என்னும் ஒழிந்தசொல்லை உணர்த்துதலால், ஒழியிசை. (௧௨)

['மன்' என்னும் இடைச்சோல்.]

சருஉ. மன்னே அசைநிலை ஒழிபிசை ஆக்கம்
கழிவு மிகுதி நிலைபே றாகும்.

(இ - ள்.) மன் - மன் என்னும் இடைச்சொல்,—அசைநிலை-அசைத்து நிற்றற்பொருளிலும், ஒழியிசை-ஒழிந்தசொற்பொருளிலும், ஆக்கம்-ஆக்கப் பொருளிலும், கழிவு-கழிதற்பொருளிலும், மிகுதி - மிகுதிப்பொருளிலும், நிலைபேறு - நிலைபெறுதற்பொருளிலும், ஆகும் - வரும்; (எ - று.)

(௧) 'அதுமன் கொண்கன் தேரே'—இதில், வேறுபொருளின்றிச் சார்த்தப் பட்டு நிற்றலால், அசைநிலை.

(உ) 'கூரியதோர் வாள்மன்'—இதில், இப்பொழுது ஒடிந்துவிட்டது என்னும் ஒழிந்த சொல்லை உணர்த்துதலால், ஒழியிசை.

(௩) 'பண்டு காடுமன்'—இதில், இன்று வயலாயிற்று என்னும் பொருளை உணர்த்துதலால், ஆக்கம்.

(௪) 'சிறியகண் பெறினே எமக்கீயு மன்னே'—இதில், இப்பொழுது அவன் இறந்ததனால் எமக்குஈதல்கழிந்ததுஎனப்பொருள்படுதலால், கழிவு.

(௫) 'எந்தை எமக்கு அருளும் மன்'—இதில், மிகுதியும் அருளுவா னென்னும் பொருளைத் தருதலால், மிகுதி.

(௬) 'மன்ன உலகத்து மன்னியது புரிமோ'—இதில், இவ்விடைச்சொல் லடியாகப் பிறந்த வினைகள், நிலைபெறாத உலகத்தில் நிலைபெற்றதைச் செய் என்னும் பொருளைத் தருதலால், நிலைபேறு. (௧௩)

['மற்று' என்னும் இடைச்சொல்.]

‡ சருங. வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே.

(இ - ள்.) மற்று-மற்று என்னும் இடைச்சொல்,—வினைமாற்று-வினை மாற்றுப் பொருளையும், அசைநிலை - அசைத்துநிற்றற் பொருளையும், பிறிது எனும் - வேறென்னும் பொருளையும் தரும்; (எ - று.)

(உதாரணம்.)

(க) "மற்றறிவாம் நல்வினை யாமிளைய மென்னாது"—இதில், நல்வினையை விரைந்தறிவாம் என்னும் வினையை மாற்றி இனிமேல் விரையாமல் அறிவா மென்னும் வினையைத் தருதலால், வினைமாற்று.

(உ) "மற்றென்னை ஆள்க"—இதில், வேறுபொருளின்றி நிற்றலால், அசைநிலை.

(ங) "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினும் தான் முந்துறும்"—இதில், மற்றொன்று என்பது - ஊழ்வினைக்கு மறுதலை யாவதோர் உபாயமெனப் பொருள் தருதலால், பிறிது என்பது.

இனி, மற்று என்பது - பின்என்னும் பொருளிலும் வரும்.

(உ - ம்.) "மற்றிவளும் கோற்கண்ணளாகும் குனிந்து." (கச)

['மற்றை' என்னும் இடைச்சொல்.]

‡ சருச. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.

(இ - ள்.) மற்றையது என்பது - மற்றையது என (ப் பெயர்க்கு முதனிலையாய்) வரும் மற்றை என்னும் இடைச்சொல், சுட்டியதற்கு இனம் - முன் சுட்டினபொருளை ஒழித்து அதற்கு இனமான பொருளைக் குறிக்கும்.

(உ - ம்.) இரண்டு ஆடை உள்ளவிடத்து ஒன்றைக்கண்டு வேண்டாதவன் 'மற்றையது கொண்டுவா' என்றால், அதற்கு இனமாகிய ஆடையையே குறித்து நிற்றல் காண்க.

ஒடு ஓடு என்பனபோல மற்று மற்றை என்பனவும் வெவ்வேறு தனிச்சொற்களாம்; ஒன்று மற்றொன்றின் விகார மன்று. (கரு)

['கொல்' என்னும் இடைச்சொல்.]

‡ சருரு. கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே.

(இ - ள்.) கொல் - கொல் என்பது,—ஐயம்-ஐயப்பொருளிலும், அசைநிலை-அசைநிலைப்பொருளிலும் வருகிற, கூற்று-(இடைச்)சொல்லாம்; (எ-று.)

(உதாரணம்.)

(க) அவன் சாத்தன்கொல் கொற்றன்கொல்—இதில், சாத்தனோ கொற்றனோ என்னும் பொருளைத் தருதலால், ஐயம்.

(உ) "கற்றதனா லாய பயனென்கொல்"—இதில், வேறுபொருளில்லாமல் நிற்றலால், அசைநிலை.

இனி, ஒரோவிடத்து 'நீகொல் செய்தாய்' என்பதில், நீயோ செய்தாய்? என வினாப்பொருளைத் தருதலும் கொள்க. (௧௬)

['ஒடு' 'தெய்ய' என்னும் இடைச்சொற்கள்.]

௪௩௬. ஒடுவும் தெய்யவும் இசைநிறை மொழியே.

(இ - ள்.) ஒடுவும் தெய்யவும்-ஒடு தெய்ய என்கிற இரண்டும்,—இசைநிறை - இசைநிறைப்பொருளைத் தருகிற, மொழி - இடைச்சொற்களாம்.

(உ - ம்.) "விலைக்குறு வட்டில் போடுதொடு பொதுள" எனவும், "சொல்லேன் தெய்ய நின்னொடும் பெயர்த்தே" எனவும் வரும். (௧௭)

['அந்தில்', 'ஆங்கு' என்னும் இடைச்சொற்கள்.]

௪௩௭. அந்திலாங் கசைநிலை இடப்பொரு ளவ்வே.

(இ - ள்.) அந்தில் ஆங்கு-இவ்விரண்டுசொல்லும், அசைநிலை இடப்பொருள - அசைநிலைப்பொருளனவாயும் இடப்பொருளனவாயும் வரும்;(எ-று.)

(உதாரணம்.)

(௧) "அந்தில் கழலினன் கச்சினன்"—இதில், வேறுபொருள் இல்லாததனால்,அசைநிலை; (உ) "வருமே சேயிழை அந்தில் கொழுநற் காணிய"—இதில், அவ்விடத்து என்னும் பொருளைத் தருதலால், இடம்.

(௧) "ஆங்கத்திறனல்ல யாம்கழற"—இதில், வேறுபொருள் இல்லாததனால் அசைநிலை; (உ) "ஆங்காங் காயினு மாக"—இதில்,அவ்விடத்து என்னும் பொருளைத் தருதலால், இடம். (௧௮)

['அம்ம' என்னும் இடைச்சொல்.]

௪௩௮. அம்ம உ.ரையசை கேண்மினென் றாகும்.

(இ - ள்.) அம்ம - அம்ம என்னும் இடைச்சொல்,—உரையசை-உரையசைப்பொருளதாகியும், கேண்மின் என்று - (ஒன்றுசொல்வேன்) கேளும் என்ற ஏவற்பொருளதாகியும், ஆகும்-வரும்; (எ - று.)

* உரையசையை 'வாக்யாலங்காரம்' என்பர் வடநூலார்.

(உதாரணம்.)

(௧) 'அதுமற்றம்ம'—இதில், வேறுபொருளில்லாமல் கட்டுரையில் வருதலால், உரையசை. [கட்டுரை - பேச்சு.]

(உ) 'அம்ம வாழிதோழி'—இதில்,ஒன்றுசொல்வேன் கேள் என்னும் ஏவற்பொருளதாய் வந்தது. (௧௯)

---

* 'சிறிது பொருளுணர்த்துவனவற்றை உரையசை யென்றும்,பொருளுணர்த்தாது சொற்களை அசைத்து நிற்பனவற்றை அசைநிலை யென்றும் கூறுதல் ஆசிரியர்கருத்தாதலை இரண்டதிகாரத்தும் கண்டுகொள்க என்பது, தொல்காப்பியம் நச்சினார்க்கினியம்.

['மா' என்னும் இடைச்சொல்.]

௩௬௯. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.

(இ - ள்.) மா என் கிளவி - மா என்னும் சொல்,—வியங்கோள்-வியங் கோளிடத்து வருகிற, அசைச்சொல் - அசைச்சொல்லாகும்; (எ - று.)

(உ - ம்.) 'புற்கை யுண்கமா கொற்கையோனே'—இதில், உண்க என் னும் வியங்கோளை அடுத்து அசையாய் வந்தது காண்க.

இனி, உரையிற்கோடலால் - இவ்விடைச்சொல் 'ஓர்கமா தோழி', 'ஒக் கல் வாழ்க்கை தட்குமா காலே' என வேறுவினையை அடுத்தும்; தேவமா தத்தன், விசயமாதேவி, உலோகமாபாலன், பாலமாகுமரன் எனப் பெயர் களின் இடையிலும் இசைநிறைப்பொருளதாய் வருதலும் கொள்க.

இது - * தொல்காப்பியச் சூத்திரம். (௨0)

[முன்னிலை அசைச்சொற்கள்.]

௩௭0. மியா யிக மோ மதி அத்தை இத்தை
வாழிய மாள ஈ யாழ முன்னிலையசை.

(இ - ள்.) மியா ...-யாழ-இப்பத்து இடைச்சொற்களும்,—முன்னிலை-முன்னிலையிடத்து வருகிற, அசை - அசைச்சொற்களாம்; (எ - று.)

(உ - ம்.)

மியா	—சொல்மியா	இத்தை	—நீயொன்று பாடித்தை.
இக	—காணிக	வாழிய	—காணிய வாழிய.
மோ	—மொழிமோ	மாள	—தவிர்ந்தீகமாள.
மதி	—செல்மதி	ஈ	—சென்றீ பெரும.
அத்தை	—சொல்லியரத்தை	யாழ	—நீயே செலவயர்ந்தியாழ.

மா + இரு = மாயிரு என்றாற்போல, மியா + இக = மியாயிக எனப் புணர்ந்தது, "இடையுரி வடசொலின்" என்னும் சூத்திரவிதியால். (௨௧)

[எல்லாவிடத்தும் வரும் அசைச்சொற்கள்.]

௩௭௧. யா கா பிற பிறக்கு அரோ போ மாது இகும்
சின் குரை ஒரும் போலும் இருந்து இட்டு
அன்று ஆம் தாம் தான் கின்று நின்று அசைமொழி.

(இ - ள்.) யா......நின்று - இவ்விருபது இடைச்சொற்களும், அசை மொழி - (எல்லாவிடங்களிலும் வருகிற) அசைச்சொற்களாம்; (எ - று.)

(உதாரணம்.)

யா	—யா பன்னிருவர் மாணாக்கர்.	அரோ	—குயிலாலு மரோ.
கா	—இவன் காண்டி கா.	போ	—வாழாதென் போ.
பிற	—ஆயினு மல்ல பிற.	மாது	—விளிந்தன்று மாதோ.
பிறக்கு	—பிறக்கதனுட்செல்லான்.	இகும்	—காண்டிகுமல்லமோ.

* தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - இடைச்சொல்லியல் - ௨௫.

சின்	--என்றிசின்.	அன்று	—சேர்து மன்றே.
குரை	--பலகுரைத்துன்பம்.	ஆம்	—பணியுமாவென்றும்.
ஒரும்	--அஞ்சுவதோரு மறனே.	தாம்	—நீர்தாம்.
போலும்	--மகிழ்ந்தனை போலும்.	தான்	—நீதான்.
இருந்து	--எழுந்திருந்தேன்.	கின்று	—ஆசைப்பட்டிருக்கின்றேன்.
இட்டு	--பிளந்திட்டான்.	நின்று	---துணையாய் நின்றான்.

ஆசைப்பட்டிருக்கின்றேன் என்பது-ஆசைப்பட்டேனென்றும், துணையாய்நின்றான் என்பது-துணையானனென்றும் பொருள்படுமிடத்து,கின்று, நின்று - அசைநிலைகள்.

இடையியல் முற்றிற்று.

ரு. உரியியல்.

உரிச்சொல்லின் இலக்கணங்களை உணர்த்தும் இயல்.

[உரிச்சோல்லின் பொது இலக்கணம்.]

‡ ௪௪௨. பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்.

(இ - ள்.) பல் வகை-(குணமும் தொழிலும் ஆகிய) பலவகைப்பட்ட, பண்பும்-(பொருள்களின்) பண்புகளையெல்லாம், பகர்பெயர் ஆகி-தெரிவிக்கிற பெயராகி,---(அவ்வாறு தெரிவிக்கும்போது), ஒரு குணம் - ஒருகுணத்தையும், பல குணம் - பலகுணங்களையும், தழுவி - தெரிவிப்பவையாய்,---பெயர் வினை ஒருவா - பெயர்ச்சொல் வினைச்சொற்களைவிட்டு நீங்காதவையாய்,---செய்யுட்கு - செய்யுளுக்கு, உரியன-உரியவையாய் (ப்பொருளுக்கு உரிமை பூண்டு) வருபவை,---உரிச்சொல் - உரிச்சொற்களாம்; (எ - று.)

(இவ்வாறு வருவதை இனிக்காட்டும் உதாரணங்களுள் காண்க.)

இவை - பண்புப்பெயராயினும், மற்றைப் பெயர் வினைகளை விட்டு நீங்காமையால் 'உரிச்சொல்' என வேறு ஓதப்பட்டன வென்றும், பெயர்வினைகளின் பண்பை உணர்த்தி அவற்றுக்கு உரிமை பூண்டு நிற்பதனல் 'உரிச்சொல்' எனக்காரணப்பெயர்பெற்றனவென்றும்அறிக.இனி,செய்யுளுக்கே உரியனவாய்வருதலால்,உரிச்சொல்லெனப்பெயர்பெற்றதென்பாரும்உளர்.

[பண்பின் இலக்கணம்.]

௪௪௩. உயிருயி ரல்லதாம் பொருட் குணம் பண்பே.

(இ - ள்.) உயிர் - உயிருடையதும், உயிர் அல்லது - உயிருடையதல்லாதும், ஆம் - ஆகிய இருவகையுள் அடங்குகின்ற, பொருள் - (உலகத்திலுள்ள) பொருள்களினுடைய, குணம் - குணங்கள்,---பண்பு-பண்புகளாம்.

[உயிருடைய பொருள்.]

சசச. மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்
ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமே லுணர்தலின்
ஓரறி வாதியா உயிரைந் தாகும்.

(இ - ள்.) மெய் மெய்யும், நா - நாக்கும், மூக்கு-மூக்கும், நாட்டன் - கண்ணும், செவிகளின்-காதும் ஆகிய ஐந்து இந்திரியங்களிலும்,(முறையே ஸ்பரிசம் ரசம் கந்தம் ரூபம் சப்தம் என்னும் ஐம்புலன்களையும் அறியுமிடத்து),ஒன்று முதல் ஆ-(தேகத்தால் ஸ்பரிசத்தை அறியும்அறிவு)ஒன்று முதலாக, கீழ்கொண்டு - கீழ்ப்போன புலனையும் கொண்டு, மேல் - மேல் வரும் புலன்களை, உணர்தலின் - (ஒவ்வொன்ருக) அறிதலால்,---ஓர் அறிவு ஆதி ஆ - ஓரறிவுயிர் முதலாக, ஐந்து ஆகும் - ஐந்துவகையாம்: உயிர்-அவ்வுயிருடைய பொருள்;(எ - று.)---அவை, முறையே மேற்கூறப்படும்.

முறையே மெய் வாய் மூக்கு கண் செவி என்னும் ஐம்பொறிகளின் உணர்ச்சியாகிய பரிசம் ரசம் கந்தம் ரூபம் சப்தம் என்னும் ஐம்புலன்கள் ஊறு சுவை நாற்றம் ஒளி ஓசை எனப்படும். (௫)

[ஓரறிவுயிர்கள்.]

சசரு. புல் மரம் முதல் உற்றறியு மோரறிவுயிர்.

(இ - ள்.) புல்-புல்லும், மரம் - மரமும், - முதல-முதலியவை,---உற்று அறியும் - தேகத்தால் ஸ்பரிசிக்கப்பட்டு ஸ்பரிசத்தை அறிகிற, ஓர் அறிவு உயிர் - ஓரறிவுடைய உயிர்களாம்; (எ - று.)

முதல---புதல், கொடி, புழு முதலியன. பயிலத்தொடுங்கால் புலரு மாகலின், இவற்றுக்கு ஓரறிவு உண்மை உணர்க. (௬)

[ஈரறிவுயிர்கள்.]

சசசு. முரண் நந் தாதி நாவறிவொ டீரறிவுயிர்.

(இ - ள்.) முரண் - சிப்பியும், நந்து - சங்கும், ஆதி முதலியவை,---நா அறிவொடு-(கீழ்ப்போன ஓரறிவுடனே) நாவினுல் ரசத்தையும் அறிகிற அறிவோடு, ஈர் அறிவு உயிர் - இரண்டறிவுடைய உயிர்களாம்; (எ - று.)

ஆதி---கிளிஞ்சில் முதலியன. இவை பிறிதொன்று தாக்கியவழிஅறிதலும், இரைசுவைக்கொள்ளுதலு முடைமையின், மெய்யுணர்வோடு நாவுணர்வும் உடையனவாம். (௭)

[மூவறிவுயிர்கள்.]

சசஎ. சித லெறும் பாதி மூக்கறிவின் மூவறிவுயிர்.

(இ - ள்.) சிதல் - செல்லும், எறும்பு - எறும்பும்,ஆதி-முதலியவை,---மூக்கு அறிவின் - (கீழ்ப்போன இரண்டறிவுகளுடனே) மூக்கினுற் கந்தத்தையும் அறிகிற அறிவோடு, மூ அறிவு உயிர்-மூன்றறிவுடைய உயிர்களாம்

ஆதி---ஈயல், மூதா, அட்டை முதலியன இவை உற்றுணர்ந்து மீளுதலும், நாச்சுவைகொள்ளுதலும், இரையுள்வழி மோந்தறிதலும் என மூன்றறிவினை யுடையவாறு கண்டுகொள்க. (௬)

[நாலறிவுயிர்கள்.]

௪௪௭. தும்பி வண் டாதி கண்ணறிவி னாலறிவுயிர்.

(இ - ள்.) தும்பி - தும்பியும், வண்டு - வண்டும், ஆதி-முதலியவை,---கண் அறிவின்-(கீழ்ப்போன மூன்றறிவுகளுடனே) கண்ணால் ரூபத்தையும் அறிகிற அறிவோடு,நால் அறிவு உயிர்-நான்கறிவுடையஉயிர்களாம்;(எ-று.)

தும்பி-வண்டுகளில் ஒரு சாதி. ஆதி---நண்டு,தேனீ முதலியன. இவை மெய்யுடைமையின் ஊற்றுணர்வும்,இரைகொள்ளுதலின்நாவுணர்வும்,நாற்றங்கொள்ளுதலின் மூக்குணர்வும், கண் உடைமையின் கண்ணுணர்வும் உடையனவாயின. சிறுபான்மை தும்பிக்குச் செவியறிவும் உண்டென்பர்.

[ஐயறிவுயிர்கள்.]

௪௪௯. வானவர் மக்கள் நரகர் விலங்கு புள்
ஆதி செவியறிவோடு ஐயறி வுயிரே.

(இ - ள்.) வானவர் - தேவரும், மக்கள் - மனிதரும், நரகர்-நரகரும், விலங்கு - மிருகங்களும், புள் - பறவைகளும், ஆதி - முதலியவை,---செவி அறிவோடு-(கீழ்ப்போன நாலறிவுகளுடனே)செவியால் சப்தத்தையும் அறிகிற அறிவோடு, ஐ அறிவு உயிர் - ஐந்தறிவுடைய உயிர்களாம்; (எ - று.)

ஆதி---பாம்பு முதலியன. 'நாகர்' என்றும் பாடங்கொள்ளலாம்.
இப்பிராணிகள் ஐந்தறிவுயிராதல், வெளிப்படை. (அ)

[உயிருடையனவல்லாத பொருள்கள்.]

௪௫௦. உணர்விய லாமுயி ரொன்று மொழித்த
உடல்முத லனைத்தும் உயிரல் பொருளே.

(இ - ள்.) உணர்வு இயல் ஆம்-அறிவுமயமாகிய, உயிர் ஒன்றும்-சீவன் ஒன்றையும், ஒழித்த-நீக்கியுள்ள; உடல் முதல்-உடம்பு முதலாகிய, அனைத்தும்-(உலகத்துப்) பொருள்களெல்லாம்,---உயிர் அல் பொருள்-உயிருடையனவல்லாத பொருள்களாம்; (எ - று.) (௧)

[முன் சூத்திரத்திற்குப் புறனடை.]

௪௫௧. ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்றினும்
வேற்றுமை நயத்தின் வேறே உடலுயிர்.

(இ - ள்.) ஒற்றுமை நயத்தின் - (உயிர் தான் அடைந்த உடம்பின்மயமாய் நிற்கிற) ஒருமைப்பாட்டின் தன்மையால், ஒன்று என-(உடம்பும் உயிரும்)ஒன்றுபோல, தோன்றினும்-தோன்றினாலும்,---வேற்றுமை நயத்தின்-(உயிர் சித்தாகியும் உடம்பு அசித்தாகியும் நிற்கிற, வேறுபாட்டின் தன்மையால்,---உடல் உயிர் - உடலும் உயிரும், வேறே - வேறாகும்; (எ - று.)
சித்து-அறியுந்தன்மையுள்ளது. அசித்து சடம்: அறியுந்தன்மையில்லாதது.

[உயிருடைப் பொருள்களின் குணப்பண்பு.]

சஙஉ. அறிவு அருள் ஆசை அச்சம் மானம்
நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி
துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல்
துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல்
வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம்
மறவி இனைய உடல்கொ ளுயிர்க்குணம்.

(இ - ள்.) அறிவு - புத்தியும், அருள் - கிருபையும், ஆசை - விருப்பமும், அச்சம் - பயமும், மானம் - மானமும், நிறை - மனஅடக்கமும், பொறை-(பிறர்செய்த குற்றங்களைப்) பொறுத்தலும், ஓர்ப்பு-ஆராய்ந்து தெளிதலும், கடைப்பிடி - மறவாமல் உறுதியாய்ப் பிடித்தலும், மையல் - (காம) மயக்கமும், நினைவு - எண்ணமும், வெறுப்பு-வெறுத்தலும், உவப்பு-மகிழ்ச்சியும், இரக்கம் - மனம் இரங்குதலும், நாண் - வெட்கமும், வெகுளி-கோபமும், துணிவு - தைரியமும், அழுக்காறு - (பிறர்செல்வம் முதலியவற்றைக் கண்டு) பொறாமையும், அன்பு - அன்பும், எளிமை - எளியதாந்தன்மையும், எய்த்தல் - தளர்ச்சியும், துன்பம் - துக்கமும், இன்பம் - சுகமும், இளமை-இளந்தன்மையும் மூப்பு - முதுமையும், இகல் - பகைமையும், வென்றி - சயமும், பொச்சாப்பு - மறத்தலும், ஊக்கம் - மனஎழுச்சியும், மறம் - வீரமும், மதம்-களிப்பும், மறவி - மறந்துசெய்யுங்குற்றமும், (என்கிற முப்பத்திரண்டும்), இனைய - இவைபோல்வன பிறவும்,---உடல் கொள் உயிர் - உடம்போடு கூடிய உயிர்களினுடைய, குணம்-குணப்பண்புகளாம்; (எ-று.)

அருள் - ஒருவகைச் சம்பந்தமும் இல்லாமல் உண்டாவதென்றும், அன்பு-சம்பந்தம்பற்றி உண்டாவதென்றும் வேறுபாடு அறிக. பொச்சாப்புக்கும் மறவிக்கும் வேறுபாடு, பதவுரையால் விளங்கும். மானம்-தன்நிலையினின்று தாழாமை.

உடலோடுகூடாவிடின், உயிர்க்குணங்கள் வெளிப்படாவாதலின், 'உடல் கொளுயிர்க் குணம்' என்றார்; மேலும், உடலுயிர்த்தொழிற்குணம்' என்பர்.

இவைபோல்வன பிறவாவன-கற்பு, மடமை, நடுவுநிலைமை முதலியன.

[உயிருடைப்பொருள்களின் தொழிற்பண்பு]

சஙங. துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல்
உய்த்த லாதி உடலுயிர்த் தொழிற்குணம்.

(இ - ள்.) துய்த்தல் - அனுபவித்தலும், துஞ்சல்- தூங்குதலும், தொழுதல் - வணங்குதலும், அணிதல் - தரித்தலும், உய்த்தல் - செலுத்துதலும், (என்கிற ஐந்தும்), ஆதி-முதலானவை,---உடல் உயிர் - உடம்போடுகூடிய உயிரினுடைய, தொழில் குணம் - தொழிற்பண்புகளாம்; (எ - று.)

'ஆதி' என்றதனால்-வாழ்த்தல், அரற்றுதல், வரைதல் முதலியன கொள்க.

[உயிரில்லாப் பொருள்களின் குணப் பண்பு.]

சருச. பல்வகை வடி விருநாற்ற மைவண்ணம்
அறுசுவை யூறெட் டுயிரல் பொருட்குணம்.

(இ - ள்.) பல் வகை வடிவு - (வட்டம் முக்கோணம் சதுரம் முதலிய) பலவகைப்பட்ட வடிவுகளும், இரு நாற்றம் - (நறுநாற்றம் தீநாற்றம் என்னும்) இருவகை நாற்றங்களும், ஐ வண்ணம்-(வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை என்கிற) ஐவகை நிறங்களும், அறு சுவை-(கைப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு இனிப்பு கார்ப்பு என்கிற) அறுவகை ருசிகளும், ஊறு எட்டு - (வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்ம்மை சீர்மை இழுமெனல் சருச்சரை என்கிற) எட்டுவகை ஸ்பரிசங்களும்,---உயிர் அல் பொருள் - உயிருடையனவல்லாத பொருள்களினுடைய, குணம்-குணங்களாம்; (எ - று.)

(நொய்ம்மை - கனமில்லாமை, இலேசு. சீர்மை-கனமாயிருத்தல். இழுமெனல் - வழுவழுத்தல்; இதற்கு எதிர் - சருச்சரை.) (௧௩)

[இவ்விருபொருள்களுக்கும் பொதுவாகிய தொழிற்பண்பு.]

சருரு. தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்
நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல்
ஈதல் இன்னன இருபொருள் தொழிற்குணம்.

(இ - ள்.) தோன்றல்......ஈதல் - இவ்வொன்பதும், இன்னன-இவை போல்வன பிறவும்,---இரு பொருள்-(உயிர்ப்பொருளும் உயிரல்பொருளும் ஆகிய)இரண்டுக்கும் பொதுவாகிய,தொழில் குணம்-தொழிற்பண்புகளாம்.

இசைத்தல் - ஒலித்தல். இவைபோல்வன பிறவாவன - அசைதல் முதலியன. (௧௪)

[ஒருகுணங்குறித்த பல உரிச்சொல்.]

† சருசு. சால உறு தவ நனி கூர் கழி மிகல்.

(இ - ள்.) சால......கழி - இந்த ஆறும்,—மிகல் - மிகுதியாகிய ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம்; (எ - று.)

(உ - ம்.) சால---சாலப்பலர்.	நனி---நனிபேதை.
உறு---உறுபுகழ்.	கூர்---களிகூர்மனம்.
தவ---தவப்பல.	கழி---கழிபெருங்காதல்.

சால என்பது-சால் என்னும் உரிச்சொல்லடியாகப்பிறந்த குறிப்புவினையெச்சம். சால் எனப் பண்படியாகச் சூத்திரஞ்செய்யாமல்,'சால'என வினையெச்சமாகச் சூத்திரஞ் செய்தது,இவ்வுரிச்சொல்லி னடியாக மற்றை வினைவிகற்பங்களெல்லாம் தோன்றுமென்றற்கு.; சால்-'சீர்சாலகத்தியன்.'(௧௫)

[பலகுணங்குறித்த ஓர் உரிச்சொல்.]

† சருஎ. கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே.

விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பி னுகும்.

(இ - ள்.) கடி என் கிளவி - கடி என்னும் உரிச்சொல், காப்பு - காவலும், கூர்மை - கூர்மையும், விரை - வாசனையும், விளக்கம் - பிரகாசமும், அச்சம் - பயமும், சிறப்பு - உயர்வும், விரைவு - வேகமும், மிகுதி - மிகுதியும், புதுமை-புதுமையும், ஆர்த்தல், - ஒலித்தலும், வரைவு - நீக்கலும், மன்றல் - கலியாணமும், கரிப்பின் - கரிப்பும் ஆகிய பதின்மூன்று குணங்களிலும், ஆகும் - வரும்; (எ - று.)

(உ-ம்.)காப்பு-கடிநகர்.	சிறப்பு-கடியரண்.	வரைவு-கடிமது.
கூர்மை-கடிவேல்.	விரைவு-கடிசென்முன்	மன்றல்-கடிவினை.
வாசனை-கடிமாலை.	மிகுதி-கடிகாற்று.	கரிப்பு-கடிமிளகு.
விளக்கம்-கடிமார்பன்.	புதுமை-கடிமணம்.	
அச்சம்-கடிப்பேய்.	ஆர்த்தல்-கடிமுரசு.	

முன்தேற்றுப்பொருளில்வருதல், பழையனகழிதலால்விலக்கப்பட்டது. கடி என்பது - கடிமான், கடும்பகல், கடுங்கால் எனத் திரிந்தும் வரும். (கசு)

[ஒருகுணந்தழுவிய பல உரிச்சொல்]

சஅ௦. மாற்றம் நுவற்சி செப்பு உரை கரை நொடி இசை
கூற்றுப் புகறல் மொழி கிளவி விளம்பு அறை
பாட்டுப் பகர்ச்சி இயம்பல் சொல்லே.

(இ - ள்.) மாற்றம்......இயம்பல் - இப்பதினுறும், சொல் - சொல் என்கிற ஒருகுணத்தை உணர்த்துகின்ற உரிச்சொற்களாம்; (எ - று.)

(உ-ம்,)மாற்றம்---வாய்மாற்றம்.	புகறல்---புகன்ற அன்றியும்.
நுவற்சி ---அறிந்துநுவல்	மொழி---கண்டதுமொழிமோ.
செப்பு ---செப்பலுற்றேன்.	கிளவி—கிளந்தகிளைமுதல்.
உரை ---உரைப்பவை.	விளம்பு—விளம்பினர் புலவர்.
கரை ---அறங்கரைநா.	அறை—அறைகுவன்சொல்லே.
நொடி ---ஆயிழைநொடியும்.	பாட்டு—அறம்பாடின்று.
இசை ---இசையெனப்புக்கு.	பகர்ச்சி—பகர்ந்தனர்புலவர்.
கூற்று ---நாங்கள் கூற.	இயம்பல்—இயம்பலுற்றேன்.

இச்சூத்திரத்தையும் வருஞ்சூத்திரத்தையும் "சால உறு தவ" என்னுஞ் சூத்திரத்தின்பின் வைக்காமல் இங்கே வைத்தது, இவை அவைபோலன்றிப் பெயர்களை விட்டுநீங்கியும் நடக்குமென்பது தோன்றுதற்கு. (கஎ)

[இதுவும் அது.]

சஅக. முழக்கு இரட்டு ஒலி கலி இசை துவை பிளிறு இரை
இரக்கு அழுங்கு இயம்பல் இமிழ் குளிறு அதிர் குரை
கனை சிலை சும்மை கௌவை கம்பலை
அரவம் ஆர்ப்போடு இன்னன ஓசை.

(இ - ள்.) முழக்கு......ஆர்ப்போடு - இவ்விருபத்திரண்டும், இன்னன-இவைபோல்வன பிறவும்,---ஓசை-ஓசை என்கிற ஒருகுணத்தை உணர்த்துகின்ற உரிச்சொற்களாம்; (எ - று.)

(உ-ம்.) முழக்கு	---முழங்குகடல்.	இமிழ்	---இமிழ்கடல்.
இரட்டு	---குடிஞையிரட்டும்.	குளிறு	---குளிறுமுரசம்.
ஒலி	---ஒலிபுனலூரன்	அதிர்	---களித்ததிருங்கார்.
கலி	---கலிகெழுமூதூர்.	குரை	---குரைபுனலாறு.
இசை	---பறையிசையருவி.	கனை	---கனைகடல்.
துவை	---பல்லியம்துவைப்ப	சிலை	—சிலைத்தார்முரசம்.
பிளிறு	---பிளிறுவார்முரசு.	சும்மை	---சும்மைமிகுநாடு.
இரை	---இரைக்கும்புனல்.	கௌவை	---கௌவைக்கடல்.
இரங்கு	---இரங்குமுரசினம்.	கம்பலை	---வினைக்கம்பலை.
அழுங்கு	---மாரியழுங்கினமூதூர்	அரவம்	---அரவத்தானை.
இயம்பல்	---முரசமதியம்ப.	ஆர்ப்பு	---ஆர்த்தபல்லியம்.

இவைபோல்வன பிறவாவன-அமலை, தழங்கு, ஓதை, கரை முதலியன.

[இவ்வியலுக்குப் புறனடை.]

சசுO. இன்ன தின்னுழி இன்னண மியலும்
என்றிசை நூலுள் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலாம்
நல்லோ ருரிச்சொலில் நயந்தனர் கொளலே.

(இ-ள்.) இன்னது - (பெயர் வினை இடை உரி என்கிற நால்வகைச் சொற்களில்) இன்னசொல், இன்னஉழி-(தன்மை முன்னிலை படர்க்கைகளிலும் வழக்குச் செய்யுள்களிலும்) இவ்விடத்தே, இன்னணம்-இவ்விலக்கணமுள்ளதாய், இயலும் - வரும், என்று---, இசை - சொல்லக் கடவதாகிய, நூலுள் இந்நூலுள், குண குணி பெயர்கள்-(உரிச்சொல்லாகிய) பண்புப் பெயர்களையும் (அக்குணத்தையுடைய)பண்பிப்பெயர்களையும், பரத்தலின்-(விவரித்துச்சொன்னால் 'மற்றொன்றுவிரித்தல்' என்னுங் குற்றம்நேரிடும்படி) பரந்திருத்தலால், சொல்லாம் - (வேண்டியமட்டும் சொல்வதல்லாமல் நிகண்டிற்போல விரித்துச்) சொல்லக்கடவோ மல்லோம்; (ஆதலால், அவை முழுதையும் அறியவேண்டுபவர்), பிங்கலம் முதல் ஆம்-பிங்கலந்தை முதலிய, நல்லோர் உரிச்சொலில் - நல்லறிவுடைய புலவரால் (கூறப்பட்ட நூல்களுள்ளே) உரிச்சொல்தொகுதியுள், நயந்தனர் கொளல் - விரும்பிக் கண்டறிந்து கொள்க; (எ-று.)

இப்படிச் சொல்லவே-பெயரியலுள் பெயர்ச்சொல் தொகுதியையும், வினையியலுள் வினைச்சொல்தொகுதியையும், இடையியலுள் இடைச்சொல் தொகுதியையும், விரிக்காமைக்கும் இதுவே புறனடையா மென்றுகொள்க.

[சொல்லதிகாரத்துக்குப் புறனடை.]

சசுக. சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்தும்
முற்ற மொழிகுறின் முடிவில வாதலின்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவும்
தெற்றென வுணர்தல் தெள்ளியோர் திறனே. *

---

* 'ஒருமொழிமுடிபிலக்கணம் ஆசிரியர்கூறுமை குன்றக்கூறலாம் பிற எனின்:---இந்திரனுக்குப்பிருகற்பதி இவைவழுஇவைவழுவில்லனஎனவட

(இ - ள்.) சொல்தொறும்-சொற்கள்தோறும். இதன் பெற்றி - இதன் இலக்கணம், இற்று - இத்தன்மையது, என்று---, அனைத்தும் - முழுதும், முற்ற - நிறைய, மொழிகுறின் - சொல்லப்புகுந்தால், முடிவு இல - வரம்பில்லாதனவாம்: ஆதலின் - ஆதலால்,---சொற்றவற்று இயலான்-எடுத்துச் சொல்லப்பட்ட சொற்களினுடைய இலக்கணங்களைக்கொண்டு, மற்றைய பிறவும் - சொல்லப்படாதவற்றின் இலக்கணங்களையும், தெற்றென உணர்தல் - (ஒப்புமைபற்றி இதுவும் அது வென்று) தெளிவாக அறிந்துகொள்ளுதல்,---தெள்ளியோர் திறன் - நூலோதித் தெளிதற்கு உரிய மாணுக்கரது கடமையாம்; (எ - று.)

இதற்கு உதாரணம், முன்வந்தவற்றில் ஆங்காங்குக்கண்டுகொள்க. (உ0)

[இந்நூலுக்குப் புறனடை.]

‡ சகூஉ. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.

(இ - ள்) பழையன கழிதலும்-முற்காலத்து உள்ள இலக்கணங்களுள் சில பிற்காலத்து ஒழிதலும், புதியன புகுதலும்-முற்காலத்து இல்லாத சில பிற்காலத்து இலக்கணமாக வருதலும், வழு அல - குற்றம்அல்லவாம். கால வகையினான் - காலவேறுபாடுபற்றிய தாதலால்; (எ - று.)

இதற்கும் உதாரணம், முன்வந்தவற்றுள் கண்டுகொள்க. (உக)

உரியியல் முற்றிற்று.

"இருதிணை மூவிட நான்மொழி யைம்பா லறுதொகை யேழ்
அருவழு வெட்டுரு பொன்பான் தொகாநிலை யாய்ந்தவெச்சம்
ஒருபது கோளெட்டு முப்பொழு தீரிட மோரியல்பாய்
வருமொழி மூன்று மூணாச்சொல் வண்மை வருந்திருவே."

சொல்லதிகாரம் முற்றுப்பெற்றது.

நன்னூல் காண்டிகையுரை

முற்றிற்று.

மொழிகளைத் தனித்தனியெடுத்து ஓதலுற்றார்க்கு,தெய்வயாண்டில்ஆயிரம் யாண்டு சென்றது; சென்றும் சொற்கள் முடிந்தில என மாபாடியத்துள் ஆசிரியர் பதஞ்சலியார் எடுத்தோதினர்; தமிழ்மொழியும் அவ்வாறு பெருகிக்கிடத்தலின், அவற்றை இவைவழு இவைவழுவில்லன வெனத் தனித்தனியெடுத்து ஓதப்புகின் முடிவுபெறாது; ஆசிரியர்க்கு ஒருவாற்றான்முடிவு பெறினும், சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் அவற்றைக் கற்பதற்கே ஆயுள் போதாவாம்;ஆகவே,அவற்றைக்கற்றுப் பலருடன்பயின்று பிறர்க்கு உரைத்துக் கல்விநிரப்புமாறு இல்லை; ஆகலான், அவ்வாறு கூறாது, சிலவற்றைப் பொதுவிதியானும், சிலவற்றைச் சிறப்புவிதியானும், சிலவற்றை எடுத்தோத்தானும், சிலவற்றை இலேசானும், சிலவற்றைப் புறனடையானும், சிலவற்றை யுத்திவகையானும் உணர்ந்துகொள்ளுமாறு தொகுத்து நூல்செய்தார் ஆசிரியராகலின், ஆகாதென்க' என்று தொல்காப்பியச் சூத்திரவிருத்தியில் உரைத்தது காண்க.

நன்னூல் சூத்திர முதற்குறிப்பகராதி.

சூத்திரம்.	பக்கம்.
அ	
அஆஈற்ற	௨௧௫
அஆஉஊ	௫௯
ஆஆஎஒவ்	௬௦
அஇஉம்முதற்	௪௩
அஐமுதலிடை	௬௭
அகமுனர்ச்	௧௪௦
அசைநிலை	௨௫௭
அடிநா	௪௮
அடைசினை	௨௬௧
அடைமொழி	,,
அண்ணநுனிநாநனி	௪௯
அண்ணநுனிநாவரு	௪௮
அண்பல்லடி	௪௮
அண்பல்முதலு	௪௮
அண்மையி	௨௦௫
அதுமுன்	௧௧௭
அதுவே, இயற்	௧௭௧
அத்தின்அகர	௧௫௮
அந்திலாங்	௨௮௩
அம்மவுரை	,,
அம்ஆம்என்	௨௧௬
அம்முதலீரா	௪௨
அம்முனிகரம்	௬௮
அரிதிற்பெயக்	௨௬
அர்ஆர்பவ்வூர்	௨௧௪
அல்வழி இ ஐ	௧௧௫
அல்வழியாமா	௧௧௨
அவற்றுள், அஇஉ	௪௩
அவற்றுள், எழு	௧௯௨
அவற்றுள், ஏழா	௯௨
அவற்றுள், ஒன்	௧௮௩
அவற்றுள், கிளை	௧௭௬
அவற்றுள், முத	௨௨௪
அவற்றுள், முயற்சி	௪௭
அவற்றுள், வினையி	௧[illegible]
அவைதாம், முற்	௨௧௧
அவ்வழி, ஆவி	௪௭
அவ்வினையாள	௩௧
அழலினீங்கா	௩௨
அளக்கலாகா	௨௩
அள்ஆளிறு	௨௧௩
அறம்பொரு	௧௨
அறிவருளாசை	௨௮௮
அறிவறியாமை	௨௫௦
அன்ஆன்அள்	௮௦
அன்ஆனிறு	௨௧௩
அன்ஆன் இன்	௧௫௨
அன்றியின்றி	௧௧௪
அன்னமாவே	௨௭
ஆ	
ஆஈஊஏ	௪௩
ஆக்கவினைக்	௨௨௬
ஆக்கியோன்	௩௨
ஆசானுரைத்த	௩௧
ஆண்பெண்	௧௬௪
ஆண்மைபெண்	௧௮௩
ஆநின்றுகின்று	௮௮
ஆமாகோனவ்	௧௫௫
ஆமுன்பகரவீ	௧௧௫
ஆயிரமுகத்தா	௩௫
ஆய்தக்கிடந்தலை	௪௯
ஆவிஞணநமன	௬௧
ஆவியாழ	௧௦௫
ஆவியுமொற்று	௫௮
ஆறனுருபு	௧௯௧
ஆறனொருமை	௧௯௭
ஆற்றொழுக்	௧௯
இ	
இஈஎஏ	௪௭
இஈஐவழி	௧௦௬
இஉஊவோடு	௨௦௦
இசைகெடின்	௫௧
இடுகுறிகாரணப்	௪௧
இடுகுறிகாரணமர	௧௭௫
இடைச்சொல்	௧௩௦
இடைத்தொட	௧௧௮
இடைநிலை	௨௭௦
இடையினம்	௪௫
இடையில்நான்கு	௯௧
இடையுரி	௧௪௯
இணைந்தியல்	௯௫
இதற்கிதுசாரி	௧௫௮
இதற்கிதுமுடி	௧௬௧
இம்முப்பெயர்க்	௨௦௧
இயல்பினும்விதி	௧௦௯
இயல்பின்விகா	௧௫௯
இயல்பெழு	௫௮
இயற்கைப்பொ	௨௬௨
இரட்டைக்கிள	௨௫௭
இரண்டாவதனு	௧௯௩
இரண்டுமுதலா	௨௩௫
இரண்டுமுன்	௧௨௯
இருதிணையான்	௨௨௮
இருவர்நூற்கு	௧௧
இர்ஈர்ஈற்ற	௨௧௮
இலக்கணமுடை	௧௬௭
இலக்கியங்கண்	௮௭
இல்லெனின்மை	௧௪௫
இறப்பெதிர்வு	௨௪௯
இனைத்தென்	௨௫௯
இன்னதின்னுழி	௨௯௧
ஈ	
ஈதலியல்பே	௨௬
ஈதாகொடு	௨௬௪
ஈமும், கம்மு	௧௪௦
ஈறுபோதல்	௭௬
ஈற்றியா	௧௦௪
உ	
உஊஒஓஔ	௪௭
உஊஒஓவல	௫௯
உடல்மேலுயிர்	௧௩௨
உணர்வியலா	௨௮௭
உயர்திணைதொட	௨௪௫
உயர்திணையும்	௨௪௧
உயிருமுடம்புமா	௩௯
உயிருயிரல்லதா	௨௮௫
உயிர்மவிலா	௭௦
உயிர்மெய்யாய்த	௪௦
உயிர்மெய்யிரட்டு	,,
உயிர்வரினுக்	௧௦௮
உரத்தின்வளம்	௨௧
உரிவரினுழியி	௧௧௪
உருபின்முடி	௪௪௮
உருபுபல	௨௩௦
உருபுமுற்றீ	,,
உருபும்வினையு	௨௨௯
உருவகஉவமையி	௨௬௫
உவப்பினு	௨௪௭
உவமவுருபில	௨௩௭
எ	
எகரவினாமுச்	௧௦௭
எச்சப்பெயர்	௨௩௧
எடுத்தல்படுத்தல்	௪௯
எட்டனுடம்பு	௧௨௬
எட்டனுருபே	௧௯௯
எண்ணலெடுத்தல்	௨௩௮
எண்ணிறையளவு	௧௨௨
எண்பெயர்	௩௭
எண்மூவெழுத்தீற்	௧௦௧
எதிர்மறைசிற	௨௭௮

சூத்திரம்.	பக்கம்.
எப்பொரு	உருஉ
எயாமுதலு	சச
எல்லாமென்ப	கருந
எல்லாருமெல்	,,
எல்லையின்னு	உ0அ
எவனென்	உஉஎ
எழுத்தியல்திரி	உருச
எழுத்தே	எ0
எழுவகை	கந
எழுவாயிறுதி	உசாசா
என்றுமெனவு	உஅ0
ஏ	
ஏழனுருபுகண்	ககூஅ
ஏற்குமெவ்வகைப்	ககூ0
ஏற்புழிஎடு	உஎஉ
ஏற்றபொருளுக்	உசாஎ
ஐ	
ஐஆய்இகர	உகஎ
ஐஔஇஉச்	சரு
ஐகான்யவ்வழி	சாஎ
ஐந்தனொற்	கஉரு
ஐந்தாவதனுரு	ககூசா
ஐம்தொகை	உநஅ
ஐயந்திணைபா	உசச
ஐயந்திரப்	உந
ஐயான்குச்செய்யு	உ0அ
ஐயிறுபொதுப்பெ	உ0க
ஐயீற்றுடைக்குற	கஉ0
ஒ	
ஒடுவுந்தெய்யவு	உஅந
ஒருகுறிகேட்போ	நக
ஒருசார்னவ்வீற்	உஉ
ஒருநெறியின்றி	கஅ
ஒருபஃதாதி	கஉஅ
ஒருபுணர்க்கிரண்டு	க0க
ஒருபொருட்பல	உருஅ
ஒருபொருட்பன்	,,
ஒருபொருள்குறி	கஎஉ
ஒருபொருள்மே	உருரு
ஒருமையிற்பன்	உசஎ
ஒருமொழிதொட	ககூந
ஒருமொழிமூவழி	க00
ஒருமொழியொரு	ககூந
ஒருமொழியொழி	உநஉ
ஒருவரென்பது	கஅசா
ஒருவனொருத்திபல	கருக
ஒருவனொருத்திப்	கஅரு

சூத்திரம்.	பக்கம்.
ஒருவன்முதலே	உசஉ
ஒழியிசைவினைச்	உஎஎ
ஒற்றுமை	உஅஎ
ஒற்றுயிர்	கருக
ஒன்பதொழித்த	கந0
ஒன்பானொடு	கஉசா
ஒன்றன்புள்ளி	கஉந
ஒன்றுமுதலீ	கஉஅ
ஒன்றுமுதலெட்	கருசா
ஒன்றேபலவென்	கசாரு
ஒன்றொழிபொது	கசாகூ
க	
கஙவுஞ்	சஅ
கசதபவொழி	சாஉ
கடியென்கிளவி	உஅகூ
கண்கால்கடை	ககூகூ
கயவொடு	உககூ
கருத்துப்பதப்	உ0
களிமடிமானி	உகூ
கா	
காரணமுதலா	உசாந
காலங்கரந்த	உநசா
காலங்களனே	நந
கி	
கிளந்தகிளைமுத	கஅ0
கிளைமுதலாக	கஎஅ
கீ	
கீழின்முன்	கசஉ
கு	
குடுதுறுவென்னு	உகரு
குயினுன்வேற்	கநஎ
குலனருள்தெ	உஉ
குறியதன்கீழா	ககந
குறியதன்முன்ன	ரு0
குறிலணைவில்லா	கநரு
குறில்செறியா	கசந
குறில்வழிலள	,,
குற்றுயிரளபி	சாக
குன்றக்கூறல்	கந
கே	
கேட்குநபோ	உசாரு
கொ	
கொல்லேஐயம்	உஅஉ
கோ	
கோடல்மரபே	உகூ
ங	
ஙஞணநமன	ருஉ

சூத்திரம்.	பக்கம்.
நம்முன்கவ்	சாந
சா	
சாதிகுழூஉப்	கநரு
சாலஉறுதவ	உஅகூ
சாவவென்மொழி	ககக
சி	
சிதலெறும்பாதி	உஅகூ
சில்வகையெழு	கஅ
சிறப்பினுமினத்	சசா
சினைவினை	உஉரு
சு	
சுட்டியாவெகர	சா0
சுட்டின்முன்	கருஎ
சுட்டுமறைநே	உருக
சுட்டுவகரமூ	கசசா
சுருங்கச்சொல்	கச
சுவைப்புளி	கசச
சூ	
சூத்திரத்துட்	உ0
செ	
செந்தமிழாகி	கஎக
செந்தமிழ்நிலஞ்	கஎந
செம்மைசிறுமை	எரு
செயப்படுபொரு	உருகூ
செய்கெனொரு	உகஎ
செய்தசெய்கின்ற	உஉ0
செய்துசெய்பு	உஉஉ
செய்பவன்கருவி	உக0
செய்யியவென்	கக0
செய்யுமெனெச்ச	உஉக
செய்யுளிறுதி	உஎக
செய்யென்வினை	எகூ
செவ்வெண்ணீற்	உஎகூ
சொ	
சொல்திரியினும்	உஉரு
சொற்றொறுமிற்	உகூக
ஞ	
ஞணநமலவளன	கநந
ஞநமுன்தம்மினம்	சாந
ட	
டறமுன்கசப	சாந
ண	
ணனமுன்னினங்	சாந
ணனமுன்னும்	ருக
ணனவல்லினம்	கநச
த	
தடறவொற்றின்	அஎ

சூத்திரம்.	பக்கம்.
தத்தம், பகாப்ப	எச
தமிழவ்வுறவும்	கசக
தம்பாலில்ல	உசுந
தம்பெயர்மொழி	சுசு
தரல்வரல்	உசஅ
தற்சுட்டளபொழி	ருரு
தனிக்குறில்	கநஉ
தன்மகனுசான்	உஎ
தன்மைமு - பட	கசுஎ
தன்மைமு - விய	உகரு
தன்மையான்நா	கஅச
தன்னுசிரியன்	நச
தன்னென்	கநஅ
தன்னெழி	கநஉ
தா	
தானமுயற்சி	சரு
தானேதாக்	உரு
தான்தாம்நாம்	கருச
தான்யான்நான்	கஅரு
தி	
திசையொடுதிசை	கஉக
திணைநிலஞ்சாதி	உருரு
திணைபால்பொரு	உசகூ
திணையேபாலிட	உசந
து	
தும்பிவண்டாதி	உஅஎ
துய்த்தல்துஞ்ச	உஅஅ
துறுடுக்குற்றிய	உகச
தெ	
தெங்குநீண்டீற்	கஉஉ
தெரிநிலைதேற்ற	உஎரு
தெரிவரும்பெரு	உஉ
தெவ்வென்மொழி	கசஎ
தே	
தேன்மொழி	கநசு
தொ	
தொகுத்தல்விரி	நச
தொக்குழிமயங்	உசக
தொல்லைவடிவின	ருஎ
தொழிலுங்கால	உஉஉ
தோ	
தோன்றல்திரிதல்	ககூ
தோன்றல்மறை	உஅக
தோன்றுதோற்றி	நரு
ந	
நடவாமடிசீ	எஎ
நவ்விறுதொழிற்	கநச

சூத்திரம்.	பக்கம்.
நா	
நான்கன்மெய்யே	கஉரு
நான்காவதற்குரு	ககூரு
நி	
நிறையுயிர்	சசு
நின்றநெறி	சுஉ
நீ	
நீயிர்நீவிர்நா	ககூக
நு	
நுதலிப்புகுத	கரு
நும்தம், எம்நம்	கச0
நுவ்வொடுவினு	உ0ரு
நூ	
நூலினியல்பே	க
நூலேநுவல்வோன்	அ
நூல்பயிலியல்பே	ந0
நூற்பொருள்வழ	கஎ
நெ	
நெடிலோடாய்த	ருச
நெடிலோடுயிர்த்	ககசு
நெல்லுஞ்செல்லு	கசரு
நே	
நேரினமணியை	கஎ
ப	
பகாப்பதமேழும்	எக
பகுதிவிகுதி	எந
பகுப்பாற்	எக
பஞ்சிதன்சொல்	உக
படர்க்கைமுப்	உருசு
படர்க்கைவினை	கசுசு
பண்பைவிளக்கு	உநசு
பதமுன் விகுதி	கருஉ
பலசிலவெனு	ககஉ
பல்லோர்படர்க்	உஉசு
பல்வகைத்தாது	கசுகூ
பல்வகைப்பண்பு	உஅரு
பல்வகையுதவி	உசு
பல்வகைவடிவிரு	உஅகூ
பவ்வமூவிடத்	அஅ
பவ்வீநீமீ	கககூ
பழையனகழித	உகஉ
பனைமுன்கொடி	கநக
பன்னீருயிருங்	ருகூ
பா	
பாடங்கருத்தே	கக
பாயிரம்பொதுச்	அ
பால்பகாவஃறி	கஅஉ

சூத்திரம்.	பக்கம்.
பி	
பிண்டந்தொகை	ககூ
பிரிநிலைவினு	உஎசு
பு	
புல்மரமுதலவுற்	உஅசு
புள்ளியுமுயிரு	கசு0
புள்ளிவிட்டவ்	சகூ
புள்ளும்வள்ளுந்	கசசு
பூ	
பூப்பெயர்முன்	கந0
பூமலியசோகின்	நஎ
பெ	
பெண்மைவிட்	கசுரு
பெயருவ்வினையு	உசுஅ
பெயரேஜஆல்	கககூ
பெயரொடுபெய	உநச
பெயர்ச்செவ்	உஎகூ
பெயர்வழித்தம்	கருக
பெயர்வினையிடத்	உஉஅ
பெயர்வினைஉம்	உநந
பெய்தமுறை	உரு
பொ	
பொதுப்பெயருயர்	க0ந
பொதுப்பெயர்வி	உநஉ
பொதுவியல்பா	உகஉ
பொதுவெழுத்	கஎச
பொருளிடங்கால	எஉ
பொருள்முதலாறு	உசு0
பொருள்மு-றி	உக0
பொருள்முத-றே	கஅசு
போ	
போலப்புரைய	உநஎ
ம	
மகரவிறுதி	சுசு
மக்கள்தேவர்	கசுச
மங்கலமாகி	உச
மம்முன்பயவ	சுச
மரப்பெயர்முன்ன	க0கூ
மரமல்லெகின்	கநஎ
மலர்தலையுலகின்	ரு
மவ்வீறொற்றழிந்	கநகூ
மற்றையதென்ப	உஅஉ
மற்றையநோக்	உசுசு
மன்னுடை	நரு
மன்னே அசை	உஅக
மா	
மாடக்குச்சித்திர	நசு

சூத்திரம்.	பக்கம்.
மாவென்கிளவி	௨௮௪
மாற்றம்நுவற்சி	௨௯௦
மி	
மியாயிகமோ	௨௮௪
மின்பின்பன்கன்	௧௩௭
மீ	
மீகீழிதழுறப்	௪௮
மீன்றவ்வொடு	௧௩௬
மு	
முகவுரை	௮
முக்காலத்தினு	௨௪௯
முக்காற்கேட்பின்	௩௧
முச்சகரிழற்று	௧௬௨
முதலிருநான்கா	௧௨௭
முதலியவைசினை	௨௦௬
முதலைஐஉறின்	௨௦௯
முதல்வழி	௯
முதற்பெயர்நான்	௧௮௨
முதனூல்கருத்த	௩௩
முரணந்தாதிநா	௨௮௬
முழக்குஇரட்டு	௨௯௦
முற்றீரெச்ச	௨௪௨.
முற்றும்மை	௨௭௯
முன்மொழி	௨௩௯
முன்னத்தினுண	௨௬௪
முன்னரவ்வொடு	௧௮௧
முன்னிலைகூடிய	௨௧௭
முன்னிலைமுன்	௨௧௮
முன்னோர்நூலின்	௧௦
முன்னோர்மொழி	௧௨
மூ	
மூன்றனுறுப்	௧௨௪
மூன்றுவதனுரு	௧௯௪
மூன்றுறுருபெண்	௧௧௬
மூன்றுஉயிரளபு	௫௭
மெ	
மெய்களகரமும்	௬௯

சூத்திரம்.	பக்கம்.
மெய்ந்நாமூக்கு	௨௮௬
மெய்யுயிர்முதலீ	௩௬
மெல்லினம்	௪௪
மென்றொடர்	௧௨௦
மே	
மேற்பல்லிதழுற	௪௯
மொ	
மொழிகுணமின்	௨௪
மொழிமுதற்கார	௩௮
மொழியாய்த்தொ	௬௯
ய	
யகரம்வரக்குற	௫௪
யரழமுன்னர்க்கச	௧௪௧
யரழமுன்னர்மொ	௯௪
யரழவொற்றின்	௬௫
யா	
யாகாபிறபிறக்	௨௮௪
யாதனுருபிற்	௨௦௭
யாப்படிபலவினு	௨௭௧
யாரென்வினை	௨௨௬
யாற்றுநீர்மொழி	௨௬௬
ர	
ரவ்விற்கம்முத	௯௪
ரவ்விற்றுயர்பெ	௨௦௩
ரழவல்லனதம்முற்	௬௪
ல	
லகாரவீற்றுயர்	௨௦௪
லளமுன்கசப	௬௪
லளமெய்திரிந்த	௬௫
லளவிறுதொ	௧௪௪
லளவீற்றஃ	௨௦௪
லளவீற்றியைபினை	௫௬
லளவேற்றுமை	௧௪௨
வ	
வலித்தல்மெலித்த	௧௦௦
வல்லினங்கசடத	௪௪
வல்லேதொழிற்	௧௪௪

சூத்திரம்.	பக்கம்.
வல்லொற்றுவரி	௨௪௦
வவ்விறுசுட்டிற்	௧௫௭
வன்றொடரல்லன	௧௧௭
வா	
வாழியவென்பத	௧௧௧
வானவர்மக்கள்	௨௮௭
வி	
விகாரமனைத்து	௯௧
விகுதிபதஞ்சா	௧௫௯
விரைவினுமிகவி	௨௪௯
விழைவேகால	௨௮௧
விளம்பியபகுதி	௮௦
வினைச்சுட்டுட	௧௮௧
வினைவினுஞ்செப்	௨௫௨
வினைசார்பின	௨௫௩
வினைபெயர்	௨௭௭
வினைமாற்றசை	௨௮௨
வினைமுற்றே	௨௨௭
வினையின்பெய	௧௮௪
வினையொடுவரி	௨௮௦
வே	
வேறில்லையுண்	௨௨௦
வேறுவினைப்பல்	௨௫௩
வேற்றுமைமப்	௧௩௯
வேற்றுமையாயி	௧௩௧
வேற்றுமையைம்	௯௭
வேற்றுமைவினைச	௨௭௪
வேற்றுமைவினைப்	௨௩௪
ள	
ளஃகானுயர்	௨௦௩
ற	
றவ்வொடுகர	௮௮
றனழஎஒவ்வு	௯௫
ன	
னஃகான்கிளைப்	௧௩௬
னலமுன்றனவும்	௧௪௭
னவ்வீற்றுயர்	௨௦௪

நன்னூல் சூத்திர முதற்குறிப்பகராதி முற்றிற்று.

பரீக்ஷைக்கு உரிய வினக்கள்.

நன்னூலாசிரியரது பெயர், இடம், சாதி, மதம், காலம், தந்தை பெயர், இந்நூல்செய்த காரணம், இந்நூலின் முதனூல்—இவை யாவை?

இந்நூலில் 'மொழியியல்' என்னுது 'பதவியல்' என்று பெயர்வைத்த தற்கும், பொதுவியலை இடையில் நிறுத்தியதற்கும் காரணம் என்ன?

"இடுகுறி காரணப்பெயர்" என்ற சூத்திரத்தைப் பெயரியலில் வைக்காமல் எழுத்தியலில் வைத்தது என்?

எழுத்தியலிலும் பதவியலிலும் சொன்ன முதனிலை இறுதிநிலை இடைநிலைகள்; பெயரிடைநிலை, வினையிடைநிலை; தழுவுதொடர், தழாத்தொடர்; புணர்ச்சிவிகாரம், செய்யுள்விகாரம்; தொகுத்தல்விகாரம், முதல் இடை கடைக்குறைகள்; முன்னிலைவினை, ஏவல்வினை; தொழிற்பெயர்; வினையாலணையும்பெயர்; ஆகுபெயர், அன்மொழித்தொகை; முதல்வேற்றுமைக்கருத்தா, மூன்ரும்வேற்றுமைக் கருத்தா; போலி, இலக்கணப்போலி; ஏவல், வியங்கோள்; அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி; மொழிமாற்று, கொண்டுகூட்டு அடிமறிமாற்று என்னும் பொருள்கோள்கள்; தற்சமம், தற்பவம்---இவற்றின் பேதத்தை நன்ருகவிளக்கி ஒவ்வோர் உதாரணமும் காட்டுக.

இருவழி, நாற்கணம், நால்வகைஅளவை, நால்வகைப்பண்பு, நால்வகை உவமை, பொருள்முதலாறு, செய்வதாதி அறுபொருள்--இவை எவை? ஆய்தம், உடம்படுமெய், அன்மொழி, திரிசொல் - இவைகட்குப் பொருள் என்?

எவ்வெவ்விடங்களில் எழுத்துக்கள் அளவுகடந்து நீண்டு ஒலிக்கும்?

ஆய்தம் அளபெடுத்தலை ஒற்றளபெடையிற் சேர்த்தது எதனுல்?

குற்றியலிகரத்துக்கும் ஆய்தக்குறுக்கத்துக்கும் உபயோகமான புணரியற் சூத்திரங்கள் எவை?

மொழி முத லிடை கடைகளில் நிற்கிற எழுத்துக்களை அறிகிறதனுல் பயன் யாது? காரணவிடுகுறிப்பெயராவது என்ன?

தன்வினைப்பகுதிகளை எவ்வெவ் வகையால் பிறவினை யாக்கலாம்?

இடைநிலை யில்லாமல் காலங்காட்டும் வகைகளையெல்லாம் எழுதுக.

விகற்பம், பொருள்கோள்---இவற்றைவிளக்கி வேறுபெயர்குறிக்க.

பல்வகைப்பெயரினெச்சமெவை? பால்பகா அஃறிணைப்பெய ரென்ருலென்ன?

'பல்வகைப்பெயரினெச்சமுற்று,' 'அல்வழி ஆமாயியாமுற்று' என்றவற்றில் முற்று எவை? முற்றெச்சம், எச்சத்திரிபு—இவற்றை விளக்குக.

'பெயரினெச்சமுற்ரு றனுருபே,' 'மூன்ரு றுருபெண்' இங்கு ஆறனுருபு எவை?

ஒற்றிடையின்மிகா நெடிலுயிர்த்தொடர், விதியுயிரீறு, விரவுப்பெயர், ஒன்ருெழிபொதுச்சொல், திரிபிணுக்கம், ஒற்றுமைக்கிழமை, இடுகுறிமரபு, உபலக்ஷணம், இடைப்பிறவரல்—இவற்றை உதாரணத்தோடு விளக்குக.

இயல்புவழக்கு தகுதிவழக்குக்களுள் குறிப்பு எது? வெளிப்படை எது?

நீக்கல், கருத்தா, ஒப்பு, காரணம், எல்லை, கிழமை—இப்பொருள்கள் எவ்வெவ்வேற்றுமைக்கு உரியன? உருபுமயக்கமாவது என்ன?

எவ்வெவ்வேற்றுமைகள் எவ்வெச்சொற்களைக் கொண்டுமுடியும்?

வினைகொண்டுமுடியாத வேற்றுமையைக் குறிக்க.

முதல்வேற்றுமையில் மாத்திரம் வரும் பெயர்களும், உருபேற்கையில் திரியும் பெயர்களும் எவை? வழு, வழாநிலை, வழுவமைதி—யாவை?

விளியேலாத பெயர்கள் எவை? இருதிணைக்கும் பொதுவினைகள் எவை?

ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவான குறிப்புவினைமுற்றுக்கள் எவை? செய்யுமென்முற்று எந்தத் திணைபாலிடங்களில் செல்லும்?

பசு, பலாசு, இறும்பூது, எழு, புணர்வு, சார்பு, சுண்ணும்பு, தாலுஇவற்றுள் குற்றுகரங்களுக்குத் தொடரும், முற்றுகரங்களுக்குக் காரணமும் எழுதுக.

கைம்மாறு, நளவெண்பா, பயில்வுழி, மாயிரு, பால்சுரந்து, குரக்கினம், துகடீர், பைம்பொன்—இப்புணர்ச்சிகளைப் பிரித்து, விதி யெழுதுக.

"ஈறுபோதல்" என்ற சூத்திரத்தில் 'ஆதிநீட' லுக்கு ஐந்து குறிலும் நீண்டு வருதற்கு உதாரணம் கொடுக்க.

அநுபந்தம்.

உபசாரவழக்கு:—காரணம் காரியமாகவும், காரியம் காரணமாகவும், குணம் குணியாகவும், குணிவினை குணவினையாகவும், ஒருபொருளின்வினை மற்றொருபொருளின் வினையாகவும், இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேலாகவும், சினைவினை முதல்வினையாகவும், உடையானது தன்மை உடைமையின்மேலாகவும், ஒருபொருளின் இயல்பு மற்றொருபொருளின் மேலாகவும் இவ்வாறு ஒன்றின்தன்மை மற்றொன்றின்மேல் ஏற்றிக் கூறப்படுதல்; இது, ஆகுபெயரென்ற இலக்கணைக்கு இனமெனத்தக்கது: இதனை வடநூலார் 'ஔபசாரிக ப்ரயோகம்' என்பர்.

(உ - ம்.) "தீவினையென்னுஞ் செருக்கு" என்றது-தீவினையால் வரும் மயக்கமென்று பொருள்படுமிடத்து, காரணம் காரியமாகவும்; "பிறப்பென்னும்பேதைமை" என்றது-பிறப்புக்குக்காரணமாகிய அவித்தையெனப்பொருள்படுதலால், காரியம் காரணமாகவும்; "இல்லவள்மாண்பானால்" என்றது-மனைவி நற்குண நற்செய்கை யுடையளானால் எனப் பொருள்படுதலால், குணம் குணியாகவும்; "இடுக்கண் களைவதாம் நட்பு" என்றது-துன்பந் தீர்ப்பவர் நண்பர் எனப்பொருள்படுதலால், குணிவினை குணவினையாகவும்; "பின்னோக்காச்சொல்" என்றது-பின்வருங் குற்றத்தை நோக்காத சொல் எனப் பொருள்பட்டுச் சொல்பவனது தொழிலாகிய நோக்குதல் சொல்லின்மேலேற்றப்படுதலால், ஒருபொருளின்வினை மற்றொருபொருளின் வினையாக

வும்; 'இந்தப்பானை நாஞழியரிசி பொங்கும்' என்றது-பொங்குதற்கு இடமாமெனப் பொருள்படுதலால், இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேலாகவும்; 'வண்டி அச்சு முறியும்' என்றதில்,அச்சு என்னுஞ் சினையின் வினையாகிய முறிதலென்பது,வண்டியென்னும் முதலின் மேலாகவும்; 'சினவாள்' என்றதில், உடையவனது குணம் உடைமையின் மேலாகவும்; "செவிகைப்ப," "நாற்றங் கேட்பினும்," "கண்ணினுற் பருகும்"என்றவை-பண்பு புலன் மாறுபாடாகவும் வருதல் காண்க.

சாதியொருமை:---ஒருசொல் ஒருமையீறுதோன்ற நின்றும், தோன்ருது நின்றும், பின்ஒருமைபன்மை வினையீருகவந்து முடிக்குஞ்சொல் உளதாகவும் இலதாகவும் தானே பன்மைப்பொரு ளுணர்த்துவது; இதனை, வடநூலார், 'ஜாத்யேகவசநம் என்பர்.

(உ-ம்.) "தென்புலத்தார் தெய்வம்" என்றதில், 'தெய்வம்' என்பது தேவரெனப் பொருள்படுதல் காண்க.

எதிர்மறையிலக்கணை:---ஒருசொல் தனக்கு எதிர்மறையானபொருளை உணர்த்துவது.

(உ-ம்.) எல்லாப்பொருள்களும் நிரம்புதலென்றுபொருள்படும் 'நிரப்பு' என்றது-ஒருபொருளும் இல்லாமையாகிய வறுமையையும்; குற்றத்தை நீக்குத லென்னும் பொருள்தரும் 'அழுக்கறுத்தல்' என்றது - பெருங்குற்றமாகிய பொறாமைப்படுதலையும்; "உடம்போ டுயிரிடை நட்பு" என்றதில், 'நட்பு' என்றது - நட்பின்மையையும்; 'புண்யஜநம்' என்றது-பாபஜநமாகிய அரக்கரையும் உணர்த்துதல் காண்க.

தத்திதாந்தம்:---ஒரு வடசொல் சிறிதுமாறித் தன்னோடு இயைபுடைய பொருளையாயினும், தன்பொருளையாயினும் உணர்த்துவது.

(உ-ம்) தசரதன் மகன்-தாசரதி, ஜநகன் மகள்-ஜாநகி, பாண்டுவின் மக்கள் - பாண்டவர், குருகுலத்தவர்-கௌரவர், குசாம்பனது நகரம்-கௌசாம்பி, ருஷிகள்செய்த நூல் - ஆர்ஷம், இந்திரன்செய்த நூல் - ஐந்த்ரம், வேதசம்பந்தம் - வைதிகம், கோசலநாட்டிற் பிறந்தவள் - கௌசல்யை, விதர்ப்பதேசத்தை ஆள்பவன் - வைதர்ப்பன், நிஷததேசத்தை யாண்டவனைப்பற்றிய நூல்-நைஷதம், விஷ்ணுபக்தன் - வைஷ்ணவன் என்றாற் போல்வன, தன்னோடு இயைபுடைய பொருளை உணர்த்தின.

த்ரிலோகீ - த்ரைலோக்யம் என்ருற்போல்வன, தன்பொருளை உணர்த்துவன.

TAMIL GRAMMATICAL TERMS WITH ENGLISH-EQUIVALENT

பாயிரம்=Preface.
இயல்=Chapter.
அதிகாரம்=Section.
சூத்திரம்=Verse.
எழுத்ததிகாரம்=Orthography.
குறில்=Short vowels.
நெடில்=Long vowels.
சுட்டெழுத்து=Demonstrative letters.
வினாவெழுத்து=Interrogative letters.
வல்லினம்=Hard Consonants. (Surds.)
மெல்லினம்=Soft Consonants. (Nasals.)
இடையினம்=Medial Consonants (Liquids.)
குற்றியலிகரம்=Shortened இ.
குற்றியலுகரம்=Shortened உ.
பொதுவிதி=General rule.
சிறப்புவிதி=Special rule.
புறனடை=Fxception or remark.
மாத்திரை=Quantity.
முதனிலை=Initial letters.
ஈற்றுநிலை=Radical letters.
இடைநிலை=Middle particle.
வினை இடைநிலை=The particle showing the tense.
பகாப்பதம்=Indivisible words.
பகுபதம்=Divisible words.
பகுதி=Root.
பெயர்=Noun.
பண்புப்பெயர்=Abstract noun.
வினை=verb.
பிறவினை=Causative verb.
ஏவல்வினை=Imperative verb.
விகுதி=Termination.
விகாரம்=Change.
காலம்=Tense.
இறந்தகாலம்=Past Tense.
நிகழ்காலம்=Present Tense.
எதிர்காலம்=Future Tense.
புணர்ச்சி=Combination.
தொகைநிலைத்தொடர்கள்=Elliptical expressions.
தொகாநிலைத்தொடர்கள்=Unelliptical phrases.
வேற்றுமைப்புணர்ச்சி=Casal Combinations.

இரட்டித்தல்=Re-duplication.
திணை=Caste.
எண்ணுப்பெயர்=Numerals.
தொழிற்பெயர்=verbal Noun.
சாரியைகள்=Euphonic particles.
சொல்லதிகாரம்=Etymology.
பால்=Gender.
ஆண்பால்=Masculine Gender.
பெண்பால்=Feminine Gender.
பொதுப்பால்=Common Geuder.
ஒன்றன்பால்=Neuter singular.
பலவின்பால்=Neuter plnral.
தன்மை=First person.
முன்னிலை=Second person.
படர்க்கை=Third person.
எண்=Number.
ஒருமை=Singular.
பன்மை=Plural.
சொற்களின்வகை=Parts of speech
இடக்கரடக்கல், மங்கலம்=Euphemism.
பலபொருள்குறித்த ஒருசொல்=Homonyms.
ஒருபொருள்குறித்த பலசொற்கள்=Synonym.
வினையாலணையும் பெயர்=Verbal-noun.
ஆகுபெயர்=Metonomy.
வேற்றுமை=Case.
உருபேற்காதபெயர்கள்=Indeclinable nouns.
எழுவாய்வேற்றுமை=Nominative-case.
இரண்டாம்வேற்றுமை=Accusative case.
மூன்றாம்வேற்றுமை=Instrumental case.
நான்காம்வேற்றுமை=Dative case.
ஐந்தாம்வேற்றுமை=Ablative case.
ஆறாம்வேற்றுமை=Genitive case.
ஏழாம்வேற்றுமை=Locative case.
விளிவேற்றுமை=Vocative case.
வேற்றுமையுருபு=Case-ending.
வினைமுற்று=Finite verb.
குறிப்புவினை=Symbolic verb.
பெயரெச்சம்=The adjectival participle.
வினையெச்சம்=The adverbial par

முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சம்=Infinitive Mood
எதிர்கால வினையெச்சம்=Subjunctive Mood.
எச்சம்=Participles and Infinitives.
வியங்கோள்=Optative verbs
வழாநிலை=Grammatical expressions.
மரபு=Usage, Idiom.
ஒருபொருட் பன்மொழி=Redundant words.
எழுவாய்=Subject.
பயனிலை=Predicate.
செயப்படுபொருள்=Object.
செய்வினை=Active verb.
செயப்பாட்டுவினை=Passive verb.
செயப்படுபொருள் குன்றா வினை=Transitive verb.
செயப்படுபொருள் குன்றிய வினை=Intransitive verb.
அடைமொழி=Epithet.
உடன்பாடு=Affirmation.
எதிர்மறை=Negation.
உவமை=Simile.
உருவகம்=Metaphor.
பொருள்கோள்=Prose order.
இடைச்சொற்கள்=Conjunctions and Particles.
அசை நிலை இடைச்சொல்=Expletive particles.
ஒலிக்குறிப்பு=Onomatopoeia.
உரிச்சொல்=Attributive.
பெயருரிச்சொல்=Adjective.
வினையுரிச்சொல்=Adverb.
முற்றிலக்கணம்சொல்லிலக்கணம்=Parsing.
யாப்பிலக்கணம்=Prosody.
அசை=Metrical syllable.
அணியியல்=Rhetoric.
அணி=Figure of speech.
வஞ்சப்புகழ்ச்சி=Hyperbole.
உயர்வுநவிற்சி=Irony.

பொருளிலக்கணச் சுருக்கம்.

பொருளாவது-சொல்தொடர் கருவியாக அறியப்படுவது; அது-அறம் பொருளின்பமும், அவற்றின் நிலையின்மையும் அவற்றின் நீங்கிய வீடுபேறும் என விவரிக்கப்படும்.

அப்பொருள்-அகப்பொருளும், புறப்பொருளும் என இருவகைப்படும்.

க. அகப்பொருள்.

அகப்பொருளாவது-ஒத்த அன்பினராகிய தலைவனும் தலைவியும் உள்ளத்து உணர்வால் அனுபவிக்கும் இன்பம்.

அது-கைக்கிளைத்திணையும், ஐந்திணையும், பெருந்திணையும் என எழுவகையியல்புடையது. கைக்கிளை-ஒருதலைக்காமம், ஐந்திணை - அன்புடைக்காமம், பெருந்திணை - பொருந்தாக்காமம்.

ஐந்திணை - மருதம், குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல் என்பன.

இவை-முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், என்ற மூன்று வகையால் உரைக்கப்படும்.

அவற்றுள், முதற்பொருள் - நிலமும், பொழுதும்.

மருதத்துக்கு-நாடும் நாடுசார்ந்த இடமும். குறிஞ்சிக்கு-மலையும் மலை சார்ந்த இடமும், பாலைக்கு-சுரமும் சுரஞ்சார்ந்தஇடமும்,முல்லைக்கு-காடும் காடுசார்ந்த இடமும், நெய்தற்கு-கடலும் கடல் சார்ந்த இடமும் நிலமாம்.

பொழுது-பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும்.

பெரும்பொழுது - அறுவகைப்பருவங்கள்; [பர்வம்-இருது.] பன்னிரண்டுமாசங்களுள், சித்திரையும் வைகாசியும்-இளவேனில் [வசந்த காலம்], ஆனி ஆடிகள்-முதுவேனில் [கிரீஷ்மகாலம்], ஆவணி புரட்டாசிகள் - கார் [வர்ஷகாலம்], ஐப்பசி கார்த்திகைகள் - கூதிர் [சரத்காலம்], மார்கழியும் தையும்-முன்பனி [ஏமந்தகாலம்], மாசி பங்குனி - பின்பனி [சிசிரகாலம்.]

சிறுபொழுது - மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு என ஆறுபிரிவாம். இவை, சூரியாஸ்தமனகாலமுதல் ஒவ்வொன்று பப்பத்து நாழிகையாக முறையே அமையும்.

இவற்றில் மருதத்துக்கும் நெய்தலுக்கும்-அறுவகையிருதுவும்; குறிஞ்சிக்கு-கூதிரும், முன்பனியும்; முல்லைக்கு - காரும்; பாலைக்கு - இருவகைவேனிலும், பின்பனியும் உரிய பெரும்பொழுதென்றும்: மருதத்திற்கு - வைகறை காலைகளும், குறிஞ்சிக்கு - யாமமும், முல்லைக்கு-மாலையும், நெய்தற்கு எற்பாடும், பாலைக்கு-நண்பகலும் உரிய சிறுபொழுதென்றும் அறிக.

கருப்பொருள் - தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை செய்தி, யாழ், பண் முதலியன.

மருதத்துக்கு—தெய்வம்-இந்திரன். உணவு-நெல். விலங்கு - எருமை, நீர்நாய். மரம்-வஞ்சி, காஞ்சி, மருதம். பறவை-நாரை, நீர்க்கோழி, தாரா. பறை-மணமுழா, நெல்லரிகிணை. செய்தி-நெல்லரிதல், வைக்கோல்துவைப்பித்தல், களைபறித்தல். யாழ் மருதயாழ். பண்-மருதம். தலைமகன்-ஊரன், மகிழ்நன் தலைமகள் - கிழத்தி, மனைவி. பூ-தாமரை, செங்கழுநீர், குவளை. நீர்-மனைக்கிணறு, பொய்கை, யாறு. ஆடவர்-கடையர், உழவர். மகளிர் - கடைசியர், உழத்தியர். ஊர் - பேரூர் மூதூர்.

குறிஞ்சிக்கு—தெய்வம் - முருகன். உணவு-மலைநெல், தினை. விலங்கு - புலி, கரடி, சிங்கம், பன்றி, யானை. மரம் - அகில், சந்தனம், தேக்கு, வேங்கை, காந்தள். பறவை - கிளி, மயில். பறை - வெறியாட்டு, தொண்டகம். செய்தி-தேனழித்தல், கிழங்கு எடுத்தல், குன்ற மாடுதல், கிளிகடிதல். யாழ்-குறிஞ்சியாழ். பண் - குறிஞ்சி. தலைமகன் - சிலம்பன், வெற்பன், பொருப்பன். தலைமகள்-கொடிச்சி, குறத்தி. பூ-குறிஞ்சி, காந்தள், வேங்கை, சுனைக்குவளை. நீர் - அருவிநீர், சுனைநீர். ஆடவர் - குறவர், குன்றவர். மகளிர் - குறத்தியர். ஊர் - சிறுகுடி.

பாலைக்கு—தெய்வம் - துர்க்கையும், சூரியனும். உணவு-வழிபறித்தனவும், ஊர்க்கொள்ளையடித்தனவும். விலங்கு - வலியழிந்த யானை புலி செந்நாய்கள். மரம் - இருப்பை, ஓமை, பாலை. பறவை - கழுகு, பருந்து. பறை-போர்ப்பறை, ஊரெறிபறை, நிரைகோட்பறை. செய்தி-நிரைகொள்ளுதல், சுரத்தெறிதல், சூறையாடுதல். யாழ்-பாலையாழ். பண்-பஞ்சுரம். தலைமகன்-மீளி, விடலை, காளை. தலைமகள்-எயிற்றி, பேதை. பூ-மராம், குராம், பாதிரி. நீர்-வற்றின கிணறும், வற்றின சுனையும். ஆடவர்-எயினர், மறவர். மகளிர்-எயிற்றியர், மறத்தியர். ஊர் - கொல்குறும்பு.

முல்லைக்கு—தெய்வம் - வாசுதேவன். உணவு-வரகு, சாமை. விலங்கு-முயல்,சிறுமான். மரம்-கொன்றை, காயா, குருந்து. பறவை-கானங்கோழி, மயில். பறை - ஏறுகோட்பறை. செய்தி-வரகு களை பறித்தல், நிரைமேய்த்தல், குழலூதல். யாழ்-முல்லையாழ். பண்-சாதாரி. தலைமகன் - குறும்பொறைநாடன், தோன்றல். தலைமகள்-கிழத்தி, மனைவி. பூ-முல்லை, தோன்றி. நீர் - கான்யாறு. ஆடவர் - இடையர், ஆயர். மகளிர் - இடைச்சியர், ஆய்ச்சியர். ஊர்-பாடி, சேரி.

நெய்தற்கு—தெய்வம் - வருணன். உணவு - மீன்விலையும், உப்புவிலையும். விலங்கு - சுறா, முதலை. மரம் - புன்னை, தாழை. பறவை - அன்னம், நீர்க்காக்கை,அன்றில். பறை-மீன்கோட்பறை,நாவாய்ப்பறை. செய்தி-மீன்விற்றல், உப்புவிற்றல்,அவற்றையீட்டல். யாழ்-விளரியாழ். பண்-செவ்வழி. தலைமகன்-துறைவன், கொண்கன்,சேர்ப்பன். தலைமகள்-நுளைச்சி, பரத்தி. பூ - தாழை, நெய்தல். நீர் - மணற்கிணறும், உவர்க்கழியும். ஆடவர்-பரதர், நுளையர். மகளிர் - பரத்தியர், நுளைச்சியர். ஊர் - பட்டினம், பாக்கம்.

பிறவும் பொருந்துவனவெல்லாம் கொள்க. இவை சிறுபான்மை மாறும்.

உரிப்பொருள்-அந்தந்த நிலங்களுக்கு உரிய நிகழ்ச்சிகள்.

ஊடலும், ஊடல்நிமித்தமும்-மருதம்; புணர்தலும், புணர்தல் நிமித்தமும்-குறிஞ்சி; பிரிதலும், பிரிதல் நிமித்தமும்-பாலை; இருத்தலும்,இருத்தல் நிமித்தமும் - முல்லை; இரங்கலும், இரங்கல்நிமித்தமும் - நெய்தல் என்க.

"போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கஞ்சே ரூட லணிமருதம்—நோக்குங்கால்
இல்லிருக்கை முல்லை இரங்கல் நறுநெய்தல்
சொல்லிருக்கு மைம்பாற் றுறைகை."

என்னுஞ் செய்யுளால் அறிக.

உ. புறப்பொருள்.

புறப்பொருளாவது-மேற்கூறிய ஒத்த அன்புடையாராலேயே யன்றி எல்லாராலும் அனுபவித்து அறியப்பட்டு இது இவ்வாறு இருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படும் பொருள்; அது - அறமும், பொருளும்.

அது - வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என, எழுதிணைகளாக வகுக்கப்படும்.

வெட்சி - பகைவருடைய பசுக்களைக் கவர்தலும், கவர்ந்த பசுக்களை மீட்டலும். இவற்றில், மீட்டல் தனியே கரந்தை எனவும் படும்.

வஞ்சி - பகைவருடைய நாட்டைக் கைப்பற்ற எண்ணி அவர்மேற் போர்க்குச் செல்லுதல்.

உழிஞை-பகைவருடைய மதிலை வளைத்துக்கொள்ளுதலும்,தம் மதிலைக் ...ந்துக்கொள்ளுதலும். இவற்றில் மதில்காத்தல்-தனியே நொச்சி எனவும் ...

தும்பை-பகைவரோடு போர்செய்தல்.

வாகை-பகைவரை வெல்லுதல்; அவரவர் தம்தம் இயல்பை மிகுதிப் படுத்திக் கூறுதலு மென்பர்.

காஞ்சி,- போர்க்குவந்த பகைவர்க்கு எதிர்சென்று ஊன்றுதல்; வீடு பேறு நிமித்தமாகப் பலவகைநிலையாமையைச் சான்றோர்கூறுவதென்றும் கொள்வர்.

வெட்சி முதலியவற்றிற்கு அந்தந்தப்பூமாலை சூடுதலும் உரியது.

"வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்—உட்கா
தெதிரூன்றல் காஞ்சி எயில்காத்தல் நொச்சி
அதுவளைத்த லாகு முழிஞை—யதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர்
செருவென்றது வாகையாம்"

என்னுஞ் செய்யுளால், வீரர்கள் இன்னின்னசமயத்தில் இன்னின்ன மலர்மாலை யணியக்கடவ ரென்பதை யறிக.

பாடாண் - ஒருவனுடைய கீர்த்தி வலிமை கொடை முதலியவற்றை ஆராய்ந்து சொல்லுதல்.

கைக்கிளை, பெருந்திணைஎன்பன-அகப்புறமென்றும்; வாகை, பாடாண், பொதுவியல் என்பன - புறப்புறமென்றும் கூறப்படும்.

இவை-பலதுறைகளாகப் பகுக்கப்பட்டு நூல்களிற் பயிலும்.

யாப்பிலக்கணச் சுருக்கம்.

யாப்பாவது—பலவகைச் சொற்கள்கொண்டு பொருட்கு இடமாகக் கற்றுவல்ல புலவர்களால் அணிபெறப் பாடப்படுவது.

இதற்கு-எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என உறுப்புஆறும்.
எழுத்தாவன—முதலெழுத்தும் சார்பெழுத்துமாகிய அக்ஷரங்கள்.
அசையாவது—எழுத்தினலாக்கப்பட்டுச் சீர்க்கு உறுப்பாய் வருவது.
அது - நேரசை, நிரையசை என இருவகையாம்.

நேரசையாவது—ஒரு குறிலாவது ஒரு நெடிலாவது தனித்தாயினும், ஒற்றடுத்தாயினும் வருவது.

(உதாரணம்.)முறையே 'ஆ ழி' என்பதில் நெடிலும் குறிலும் தனித்தும், 'சோல் வான்' என்பதில் குறிலும் நெடிலும் ஒற்றடுத்தும் நேரசையாயின.

நிரையசையாவது—குறிலிணையாவது குறில்நெடிலாவது தனித்தாயினும் ஒற்றடுத்தாயினும் வருவது.

(உ - ம்.) 'அணி - குறிலிணை தனித்தும், கலம்' - குறிலிணை ஒற்றடுத்தும், 'நிலா' - குறில்நெடில் தனித்தும், 'படாம்' - குறில்நெடில் ஒற்றடுத்தும் நிரையசையாயின.

('அ ஆ' என்பதுபோல விட்டு இசைத்தா லல்லது, தனிக்குறில்,சீரின் முதலில் நேரசையாகாது.)

சீராவது---அந்த அசைகள் சிறுபான்மை தனித்தும், பெரும்பான்மை இரண்டுமுதல் நான்குவரையில் தொடர்ந்தும் வருவது.

அது-ஓரசைச்சீர், ஈரசைச்சீர்,மூவசைச்சீர்,நாலசைச்சீர்எனநான்காம்.

ஓரசைச்சீராவது---நேரசையாயினும் நிரையசையாயினும் தனித்து நின்று சீராய்வருவது. உதாரணவாய்பாடு: நேர்---நாள்; நிரை---மலர்.இவை பெரும்பாலும் வெண்பாவினீற்றில் வரும்.இவற்றை, 'அசைச்சீர்' என்பர்.

ஈரசைச்சீராவது---நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை என இரண்டு அசை கூடிவரும் இந்நான்குமாம்.

(உ-ம்.) நேர்நேர்---தேமா	இவை	நிரைநிரை---கருவிளை	இவை
நிரைநேர்---புளிமா	மாச்சீர்.	நேர்நிரை---கூவிளை	விளச்சீர்.

இவை-இயற்சீர் எனவும், அகவற்சீர் எனவும், ஆசிரியவுரிச்சீர் எனவும்படும்.

மூவசைச்சீராவது---மேற்சொல்லப்பட்ட ஈரசைச்சீர் நான்கின்இறுதியிலும் நேரசையும் நிரையசையும் தனித்தனி கூடிவருதலாலாகியஎட்டாம்.

நேர்நேர்நேர் - தேமாங்காய்	காய்ச்சீர்	நேர்நேர்நிரை-தேமாங்கனி	கனிச்சீர்
நிரைநேர்நேர் - புளிமாங்காய்		நிரைநேர்நிரை-புளிமாங்கனி	
நிரைநிரைநேர் - கருவிளங்காய்		நிரைநிரைநிரை-கருவிளங்கனி	
நேர்நிரைநேர் - கூவிளங்காய்		நேர்நிரைநிரை-கூவிளங்கனி	

இவை - உரிச்சீர் எனவும் இவற்றுள் காய்ச்சீர்கள்-வெண்சீர் எனவும், கனிச்சீர்கள் - வஞ்சிச்சீர் எனவும் படும்.

நாலசைச்சீராவது---அம்மூவசைச்சீர் எட்டின் இறுதியிலும் நேரும் நிரையும் தனித்தனி அடுத்துவருதலாலாகிய பதினாறுமாம்; (உ - ம்.)

நேர்நேர்நேர்நேர்-தேமாந்தண்பூ	நேர்நேர்நேர்நிரை- தேமாந்தண்ணிழல்
நிரைநேர்நேர்நேர்-புளிமாந்தண்பூ	நிரைநேர்நேர்நிரை-புளிமாந்தண்ணிழல்
நிரைநிரைநேர்நேர்-கருவிளந்தண்பூ	நிரைநிரைநேர்நிரை-கருவிளந்தண்ணிழ
நேர்நிரைநேர்நேர்-கூவிளந்தண்பூ	நேர்நிரைநேர்நிரை-கூவிளந்தண்ணிழல்
நேர்நேர்நிரைநேர்-தேமாநறும்பூ	நேர்நேர்நிரைநிரை-தேமாநறுநிழல்
நிரைநேர்நிரைநேர்-புளிமாநறும்பூ	நிரைநேர்நிரைநிரை-புளிமாநறுநிழல்
நிரைநிரைநிரைநேர்-கருவிளநறும்பூ	நிரைநிரைநிரைநிரை-கருவிளநறுநிழல்
நேர்நிரைநிரைநேர்-கூவிளநறும்பூ	நேர்நிரைநிரைநிரை-கூவிளநறுநிழல்

(இவை, வெண்பாவில் வாரா, கலிப்பாவிலும், ஆசிரியப்பாவிலும், சிறு ன்மை குற்றியலிகரவுகரங்கள் வந்த இடத்து வரும்; வஞ்சிப்பாவில் வரு பெரும்பான்மை.)

(பொருளியைபுக்கு ஒவ்வாமல் சீர்பிரிவது, வகையுளி யெனப்படும்.)

தளையாவது---நின்றசீரின் ஈற்றசையோடுவருஞ்சீரின்முதலசைஒன்றி னும் ஒன்றாமலாயினும் கூடிநிற்பது. ஒன்றுத லாவது - நேர்முன் , நிரைமுன் நிரையும் வருவது. ஒன்றாமையாவது - நேர்முன் நிரை ரமுன் நேரும் வருவது,

அத்தளை-நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர் வெண்டளை, இயற்சீர்வெண்டளை, ஒன்றியவஞ்சித்தளை, ஒன்றாவஞ்சித்தளை, கலித்தளை என எழுவகைப்படும்.

நேரொன்றாசிரியத்தளைமாமுன்நேர்வருவது;(நாள்முன்நேர்வருவதும்அது)

நிரையொன்றாசிரியத்தளை - விளமுன் நிரை வருவது; (மலர்முன்நிரை வருவதும் அது.)

வெண்சீர்வெண்டளை-காய்முன்நேர்வருவது;(பூமுன்நேர்வருவதும்அது)

இயற்சீர்வெண்டளை - மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவன; (நாள்முன் நிரை வருவதும், மலர்முன் நேர்வருவதும் அது.)

ஒன்றியவஞ்சித்தளை - கனிமுன் நிரை வருவது; (நிழல்முன் நிரைவருவதும் அது.)

ஒன்றாவஞ்சித்தளை-கனிமுன்நேர்வருவது;(நிழல்முன் நேர்வருவதும் அது.)

கலித்தளை - காய்முன் நிரைவருவது; (பூமுன் நிரைவருவதும் அது.)

அடியாவது—மேற்சொல்லியதளைகள்ஒன்றும்பலவும்அடுத்துவருவது.

அவ்வடி - குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்துவகைப்படும். குறளடி - இருசீராலும், சிந்தடி-முச்சீராலும், அளவடி-நாற்சீராலும், நெடிலடி - ஐஞ்சீராலும், கழிநெடிலடி - ஆறு முதலிய சீர்களாலும் வருவன. (அளவடி - நேரடி யெனவும் படும்.)

தொடையாவது—பல அடிகளிலாயினும், பல சீர்களிலாயினும் எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது.

அது - எதுகை, மோனை, முரண், அளபெடை, இயைபு என்பவற்றால் ஐந்து வகைப்படும். அந்தாதித்தொடை யென்றும் ஒன்று உண்டு.

எதுகைத்தொடையாவது—அடிதோறும்முதலெழுத்துஅளவொத்து நிற்க இரண்டுமுதலிய எழுத்துக்கள் ஒன்றிவரத்தொடுப்பது. சிறுபான்மை இனவெழுத்துக்களும் எதுகையாம்.

சில அடிகளில் எதுகைச்சொல்லின் முதலெழுத்துக்கும்இரண்டாமெழுத்துக்கும் இடையே பிறிதொரு மெய் பெற்றுவருவது, 'ஆசிடையிட்ட எதுகை' எனப்படும்; (உ - ம்.) 'ஆவேறு,' 'பால்வேறு' என்றவிடத்து லகரவொற்றும், 'காய்மாண்ட,' 'பூமாண்ட' என்றவிடத்து யகரவொற்றும் போல்வன.

மோனைத்தொடையாவது—பல அடிகளிலாவது ஓரடியின் பலசீர்களிலாவது முதலெழுத்து ஒற்றுமைப்பட்டுவரத் தொடுப்பது. அ ஆ ஐ ஔ, இ ஈ எ ஏ யா, உ ஊ ஒ ஓ, ஞ ந, ச த, ம வ இவைஒன்றற்குஒன்று மோனையாய் வருதலும் உண்டு. சிறுபான்மை இனவெழுத்துக்களும் மோனையாம். ஓரடியின் சீர்களிலெல்லாம் மோனை வந்தால், முற்றுமோனை யெனப்படு[ம்.]

முரண்தொடையாவது—சொல்லாலும் பொருளாலும் மறுதலை[ப்படத்] தொடுப்பது.

அளபுத்தொடையாவது—உயிரளபெடையாயினும், ஒற்றளபெடையாயினும் ஒன்றிவரத் தொடுப்பது.

இயைபுத்தொடையாவது—ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது. (இத்தொடைகள் அமையாதிருப்பது, செந்தொடை யெனப்படும்.)

அந்தாதித்தொடையாவது—முன்நின்றபாட்டின் இறுதியிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் பின்வரும்பாட்டின் முதலாக அமையப் பாடுவது. இங்ஙனம்பாடும் நூலின் இறுதிச்செய்யுளின் அந்தமே முதற்செய்யுளின் ஆதியாக அமைவது, மண்டலித்தல் எனப்படும்.

இவ்வுறுப்புக்களைப் பெற்றுவருகின்ற பா - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நால்வகைப்படும். 'மருட்பா' என்றும் ஒன்று உண்டு. இப்பாநான்கிற்கும் துறை, தாழிசை, விருத்தம் என இனம் மூன்று; இவற்றுள்,

வெண்பாவாவது—ஈற்றடி முச்சீரடியாகவும் மற்றையடி நாற்சீரடியாகவும் பெற்று, காய்ச்சீரும் மாச்சீர் விளச்சீர்களும் இருவகை * வெண்டளைகளும் கொண்டு, மற்றைச்சீரும் தளையும் பெறுமல், நாள் மலர் என்ற ஓரசைவாய்பாடுகளுள் ஒன்றினாலாவது, காசு பிறப்பு என்ற உகரவீற்று ஈரசைவாய்பாடுகளுள் ஒன்றினாலாவது முடிந்து, ஒருவிகற்பத்தாலாயினும் இருவிகற்பத்தாலாயினும் வருவது. [ஒருவிகற்பமாவது - பல அடிகள் ஓர் எதுகையாய் வருவது; இருவிகற்பமாவது - அவ்வடிகள் இருவகை எதுகையாய் அமைவது.]

அவ்வெண்பா-குறள்வெண்பா, சிந்தியல்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசைவெண்பா, பஃறொடைவெண்பா என ஐந்து வகைப்படும்.

குறள்வெண்பா - இரண்டடியாய் வருவது.

சிந்தியல்வெண்பா - மூன்றடியாய் வருவது.

நேரிசைவெண்பா-நான்கு அடிகளாய் இரண்டாம் அடியின் இறுதிச்சீர்முதலிரண்டு அடிகளின் எதுகையையுடையதனிச்சொல்லாய்வரநிற்பது.

இன்னிசைவெண்பா-நான்கு அடிகளாய்த் தனிச்சொல் இன்றி வருவது. (தனிச்சொற்பெற்றாலும், பலவிகற்பத்தால் வரின், இன்னிசைவெண்பாவேயாம். இரண்டாம் அடியொழிந்த அடிகளில் தனிச்சொற்பெற்று வருவதும் இதுவே.)

பஃறொடைவெண்பா - ஐந்து அடி முதலாகப் பன்னிரண்டு அடியளவும் வருவது. (பன்னிரண்டடிக்கு மேற்படின், கலிவெண்பாவாம்.)

ஆசிரியப்பாவெனினும், அகவற்பாவெனினும் ஒக்கும். இதில் பெரும்பாலும் ஈரசைச்சீர்கள் பயிலும்.

நேரிசையாசிரியப்பா - ஈற்றயலடி முச்சீரடியும், மற்றையடிகளெல்லாம் நாற்சீரடிகளுமாக வருவது.

---

* "காய்முன் நேரும் மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவது வெண்டளை"

நிலைமண்டிலவாசிரியப்பா-எல்லாவடிகளும் நாற்சீரடிகளாய்வருவது.

ஆசிரியவிருத்தம்-அளவொத்த கழிநெடிலடி நான்கினல் வருவது.

அளவொத்தலாவது-ஓரடியில்எந்தச்சீர்எவ்வகைச்சீராக அமைந்துள்ளதோ, அந்தச்சீர் அவ்வகைச்சீராகவே எல்லா அடிகளிலும் அமைவது.

கலிப்பா - காய்ச்சீர்கள் மிகப்பெற்று நாற்சீரடிகளால் வரும்.

தரவுகோச்சகக்கலிப்பா - நாற்சீரடிகளால் தனித்துவருவது.

கலிவிருத்தம் - அளவொத்த அளவடி நான்கினல் வருவது.

கலித்துறை - அளவொத்த நெடிலடி நான்கினல் வருவது; இவை - கலிநிலைத்துறையென்றும், காப்பியக்கலித்துறையென்றும், விருத்தக்கலித்துறை யென்றும் வழங்கப்படும்.

கட்டளைக்கலித்துறை-பெரும்பாலும் முதல் நான்கு சீர்கள் ஈரசைச் சீர்களும் ஐந்தாஞ்சீர் விளங்காய்ச்சீருமான நெடிலடி நான்குகொண்டு, அடி தோறும் வெண்டளை பிறழாமல், நேரசைமுதலாயின் ஓரடிக்கு ஒற்றெழிந்த எழுத்துப் பதினாறும், நிரையசை முதலாயின் அவ்வெழுத்துப் பதினேழுமாய் ஏகாரவீற்றதாய் வருவது.

வஞ்சிப்பா - இருசீரடிகளாலும், முச்சீரடிகளாலும் வரும்.

வஞ்சிவிருத்தம் - முச்சீரடி நான்கு கொண்டு வரும்.

வஞ்சித்துறை - இருசீரடி நான்கு கொண்டு தனித்துவரும்.

(இதுவே ஒருபொருள்மேல் மூன்றடுக்கிவந்தால்வஞ்சித்தாழிசையாம்.

மருட்பா - வெண்பாவாகத் தொடங்கி ஆசிரியப்பாவாக முடிவது.

குற்றியலிகரம் குற்றியலுகரம் அளபெடைஎன்பவை,இடத்துக்குஏற்ப அலகுபெறுமலும் நிற்கும். ஆய்தவெழுத்து - சிலவிடத்து உயிராகவும் சில விடத்து மெய்யாகவும் இடத்துக்கு ஏற்பக் கருதப்படும். ஐகார ஔகாரக் குறுக்கங்கள் - இடத்துக்கு ஏற்பக் குற்றெழுத்தேபோலக்கொண்டு அலகிடப்படும். சிறுபான்மை மெய்யெழுத்துக்களைஒழித்து அலகிடுதலும்உண்டு. அளபெடைகள், மாத்திரைக்கு ஏற்ப அலகுபெறும்.

மற்றவை சிறுபான்மையன. அவற்றின் இலக்கணங்களை யெல்லாம் தொல்காப்பியம், இலக்கணவிளக்கம், யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம் முதலிய பரந்தநூல்களிற் கண்டுகொள்க.

அணியிலக்கணச் சுருக்கம்.

அணியாவது - செய்யுட்கு அழகுசெய்துநிற்பது; [அலங்காரம்]. அது. சொல்லணி, பொருளணி என இருவகைப்படும்.

யமகம், திரிபு, பிராசம் முதலாகச் சொற்பற்றி நிகழ்வன சொல்லணிகளாம்; [சப்தாலங்காரம்.] (யமகம் எனினும், மடக்கு எனினும் ஒக்கும்.)

யமகமாவது-பல அடிகளிலாயினும் ஓரடியில் பல இடங்களிலாயினும் வந்த எழுத்துத்தொடர்களே மீண்டும்வந்து பொருள் வேறுபடுவது.

திரிபாவது - ஒவ்வோரடியிலும் முதலெழுத்து வேறுபட்டிருக்க, இரண்டு முதலிய பல எழுத்துக்கள் ஒன்றிநின்று பொருள் வேறுபடுவது.

பிராசமாவது - வந்த எழுத்துக்களே மீண்டும் வருவது.

பொருளணி - உவமையணி முதலாகப் பலவாறு பொருள்பற்றி நிகழ்வனவாம்; [அர்த்தாலங்காரம்.]

உவமையணி - இரண்டு பொருள்களுக்கு ஒப்புமைவிளங்கச் சொல்வது; [உபமாலங்காரம்.] உபமானம் உபமேயம் பொதுத்தன்மைஉவமவுருபு என்னும் நான்கும் விரிந்துநிற்பது விரியுவமை: (உ - ம்.) 'அமுதம்போலு மின்சொல்.' பொதுத்தன்மையும் உவமவுருபும் தொக்குவரின், தொகையுவமையாம்: 'அமுதம்போலுஞ் சொல்,' 'அமுத வின்சொல்,' 'அமுதச் சொல்' என்றாற்போலக் காண்க.

உலகத்தில் இல்லாத பொருளை உவமைகூறின். இல்பொருளுவமையணி யெனப்படும்; [அபூதோபமாலங்காரம்.] (உ - ம்.) சிங்கத்தை யானைகள் வளைந்தாற்போல, இராமனை அரக்கர் சூழ்ந்தனர்.

எடுத்துக்காட்டுவமையணி-உபமானத்தையும் உபமேயத்தையும் தனிவாக்கியங்களாக நிறுத்தி இடையில்உவமவுருபுகொடாமற்கூறுவது;[த்ருஷ்டாந்தாலங்காரம்.] (உ-ம்.) "அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே யுலகு."

இயைபின்மையணி - ஒருபொருளையே உபமானமும் உபமேயமுமாகச்சொல்வது; [அநந்வயாலங்காரம்.] (உ - ம்) "தானே யுவமை தனக்கு."

எதிர்நிலையணி-பிரசித்தமாகிய உபமானஉபமேயங்களைமாற்றிச்சொல்வது; [ப்ரதீபாலங்காரம்.] (உ - ம்.) முகம்போல மதி தோன்றிற்று.

உருவகணி - உபமேயத்தினிடத்து உபமானத்தின் தன்மையை ஏற்றிக்கூறுவது; [ரூபகம்.] (உ - ம்.) சேனையாகிய கடலை வீமனாகிய மந்தரம் கலக்கியது.ஒருபகுதியைஉருவகப்படுத்தி,மற்றொருபகுதியைஉருவகப்படுத்தாதுவிடின், ஏகதேச உருவகமாம்; (உ-ம்.) இவன் பகைவர்க்குச் சிங்கம். இங்கு,இவனைச சிங்கமென்று கூறிப்பகைவரை யானையென்னுமைகாண்க.

தற்குறிப்பேற்றவணி-இயற்கையாகவுள்ள ஒருபொருளினிடத்துக்கவி தனது கற்பனையை ஏற்றிக்கூறுவது;[உத்ப்ரேக்ஷாலங்காரம்.] (உ-ம்.)சீதையின் முகத்தினழகுக்குத் தோற்றுச் சந்திரன் மறைந்தான்.

உயர்வுநவிற்சியணி-ஒருபொருளினிடத்து மிகுதியான தன்மையைக் கூறுவது; [அதிசயோக்தி.] (உ-ம்.) 'இம்மாடம் சூரியனைத் தடுக்கின்றது' என்றாற்போலச் சம்பந்தமில்லாதிருக்கச் சம்பந்தங் கற்பித்துக்கூறின்,தொடர்புயர்வுநவிற்சியணியும் [சம்பந்தாதிசயோக்தி]; 'இராமனம்பும்அரக்கர் திரளும் ஒருங்கு நாணகன்றோடின' என்றாற்போலக் காரணகாரியநிகழ்ச்சியை ஒருங்கே கூறினால், முறையிலுயர்வுநவிற்சியணியும் [அக்ரமாதிசயோக்தி]; 'அம்புபடுமுன் தலைதுணிந்தது-என்றாற்போலக்காரியத்தைமுன்னும் காரணத்தைப்பின்னும்நிகழ்ந்தனவாகக்கூறினால்மிகையுயர்வுநவிற்சியணியும் [அத்யந்தாதிசயோக்தி] ஆம். (பின்னிரண்டும், விரைவு விளக்குவன.)

ஒப்புமைக்கூட்டவணி-பலபொருள்களைப் பொதுவாகிய ஒருதன்மையில் முடித்தல்; [துல்யயோகிதாலங்காரம்] (உ-ம்.) சூரியனுதிக்கையில் அந்தணர்கைகளும் ஆம்பலும் குவிந்தன.

விளக்கணி-உபமான உபமேயங்களை ஒருதன்மையில் முடித்தல்; [தீபகாலங்காரம்,] (உ - ம்.) நிலவால் சந்திரனும், புகழால் அரசனும் விளங்கும்.

"கையாலு மொருசாபம் [சாபம்-வில்] காலானுமொருசாபம்" [சாபம்-அகலிகையின் சபிப்பு] என்றாற்போல, வந்தசொல்லே மீண்டும்வேறுபொருளில் வந்தால் சொற்பின்வருநிலையும் [சப்தாவ்ருத்திதிபகம்]; "பாண்டியனுமுதுகிட்டான் பாஞ்சாலர் புறமிட்டார்" என்றாற்போலச்சொல்வேறுபட்டு வந்தபொருளே மீண்டுவந்தால் பொருட்பின்வருநிலையும் [அர்த்தாவ்ருத்திதிபகம்]; "மகிழ்ந்தனர்தேவர் மகிழ்ந்தனர்மாந்தர்' என்றாற்போல ஒருசொல்லந்தபொருளிலேயே மீண்டும்வந்தால் சொற்பொருட்பின்வருநிலையும் [உபயாவ்ருத்திதீபகம்] ஆம்.

காட்சியணி-உபமான உபமேயங்களுக்கு ஐக்கியத்தைச் சொல்லுதல்; [நிதர்சநாலங்காரம்.] (உ-ம்.) "கற்றதைமறந்துமேலுங்கற்றல், கைப்பொருளையிழந்து மேலும் ஈட்டுதல்,' 'முகம் சந்திரனழகைக்கொண்டது' என்றாற்போல உபமான உபமேயங்களுள் ஒன்றில் மற்றொன்றின் தன்மையையேற்றிக்கூறுதலும், 'சூரியன்முன் இருள் அழிவது, வலியார்முன் எளியார் அழிவரென்பதைக் காட்டும்' என்றாற்போலத் தன்செய்கையால் ஒருபொருளைத் தெரிவித்ததாகக் கூறுதலும் இவ்வணியே.

பிறிதுமொழிதலணி-உபமானம் கூறியமாத்திரத்தால் உபமேயம் பெறவைத்தல்; [அப்ரஸ்துதப்ரசம்ஸாலங்காரம்.] (உ-ம்.) "எலிப்பகை நாகமுயிர்ப்பக் கெடும்." இவ்வுபமானத்தால், வீரனொருவன் எழுந்தமாத்திரத்தில்வீரரல்லாதார் பலர் அழிவர் என்ற உபமேயம் தோன்றுதல் காண்க.

ஐயவணி-ஒப்புமையினால் ஓர் உபமேயத்தைப் பலபொருளாகச்சந்தேகித்தல்; [சந்தேகாலங்காரம்.](உ - ம்.) "காவியோ கயலோ வெனுங் கண்"

மயக்கவணி-ஒப்புமையினால் ஒருபொருளை மற்றொருபொருளாக அறிதல்; [ப்ராந்திமதலங்காரம்.] (உ-ம்.) 'மகளிர்விழியை வண்டு பெடையென மருவும்.'

நினைப்பணி - ஒன்றைக்கண்டு ஒப்புமையினால் மற்றொரு பொருளை நினைத்தல்; [ஸம்ருதிமதலங்காரம்.] (உ-ம்.) 'கமலமலர் கண்ட மனம் காதலி முகம் கருதிற்று.'

வேற்றுமையணி-உபமான உபமேயங்களுள் ஒன்றுக்கு விசேஷங்கூறுதல்; [வ்யதிரேகாலங்காரம்.] (உ - ம்.) "திங்களும் சான்றோரும் ஒப்பர்; திங்கள் மறுத்தாங்கும், சான்றோர் அதுதாங்கார்."

சிலேடையணி-ஒருதொடரில் பலபொருள்கள் விளங்க அமைத்துக் கூறுதல்; 'செங்கரங்களால் இரவுதீர்க்கும்.' இது - சிவந்த கிரணங்களால் (சூரியன்) இருளையொழித்தலையும், அழகிய கைகளால் (அரசன் தானஞ்செய்து) ஏழைமையை ஒழித்தலையும் குறிக்கும். செம்மை-ஒருநிறம்; அழகு.

கரம்-கிரணம், கை. இரவு - இராத்திரி, இரத்தல். இது-சொல் வெவ்வேறு வகையாகப் பிரியாததனுல், செம்மொழிச்சிலேடை. 'கண்ணும் மொழியும் கரும்பிணையாம்' என்பதில், கரும்பிணை யென்பது - கரு பிணை எனப் பிரிந்து கரியபெண்மான் விழியையும், கரும்பு இணை எனப் பிரிந்து கருப்பஞ்சாற்ருேடு ஒத்தது என்பதையும் குறித்தலால், பிரிமொழிச்சிலேடை.

பிறிதினவிற்சியணி-ஒன்றை இயல்பாகக்கூருமல் வேறுவகையாற்கூறுவது; [பர்யாயோக்தாலங்காரம்] (உ-ம்.) 'மகப்பெற்ருன்' என்ற பொருளை 'புத்என்னும் நரகின் கொடுமையைக்கடந்தான்'என்ருற்போலச் சொல்வது.

வஞ்சப்புகழ்ச்சியணி-பழிப்பினுற் புகழ்ச்சியாவது, புகழ்ச்சியாற் பழிப்பாவது தோன்றக் கூறுதல்; [வ்யாஜஸ்துதி.] (உ-ம்.) 'கங்காநதியே! உனக்கு விவேகமேது? நீ மகாபாவிகளுக்கும் நற்கதி தருகிருயன்ருே' என்றதில் பழிப்பாற் புகழ்ச்சியும் [நிந்தாஸ்துதி], 'பெற்றகல்வியைத் துரோகஞ்செய்யாமல் குருவுக்கே ஒப்பித்திட்டான்' என்றதில் புகழ்ச்சியாற் பழிப்பும் [ஸ்துதிநிந்தை] தோன்றுமாறு அறிக.

முரண்விளைந்தழிவணி - மேல்நோக்கில் ஒன்றுக்கு ஒன்று மாறுபாடாகவும், உள்நோக்கில் அம்மாறுபாடில்லாமலும் அமையக்கூறுதல்; [விரோதாபாஸாலங்காரம்.] (உ - ம்.) "செய்யாள் பலநலமும் செய்வள்" என்பதில், 'செய்யாள்', 'செய்வள்' என்பன - ஒன்ருேடொன்று சொல்லால் முரண்படுதலும்:செய்யாள் என்பது-இலக்குமியெனப்பொருள்பட்டு,அவள் எல்லாநன்மையும் செய்வளெனக் கருத்தால் முரண்படாமையும் காண்க.

நிரனிறையணி - வரிசையாகச்சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்தமுள்ளவைகளையும் அம்முறையே சொல்லுதல்; [யதாஸங்க்யாலங்காரம், க்ரமாலங்காரம் எனவும்படும்.] (உ - ம்.) 'பகைவர்க்கும் நண்பர்க்கும் துன்பமும் இன்பமும் செய்வான்.'

ஒழித்துக்காட்டணி - ஒருபொருளை ஓரிடத்தில் இல்லையென ஒழித்துக் காட்டுதல்; [பரிஸங்க்யாலங்காரம்.] (உ - ம்.) 'அயோத்தியில் மகளிர் சிலம்புகளே கால்களிற்பட்டு முறையிடுவன' என்றது, அவ்வூரில் ஒருவர் கால்களில் விழுந்து தம்குறையைக்கூறி முறையிடவேண்டியவர் இல்லையென்ற பொருளைத் தருதல்'காண்க.

தொடர்நிலைச் செய்யுட் பொருட்பேறணி - ஒருபொருளைக் கூறியதனுல் மற்ருெருபொருள் எளிதிற்சித்திக்கக் கூறுவது; [காவ்யார்த்தாபத்தியலங்காரம்.] (உ - ம்.) 'இராவணனை வென்றிட்ட வாலியை வதைத்தவனுக்கு இராவணன் எவ்வளவு?'

வேற்றுப்பொருள்வைப்பணி - பொதுப்பொருளாற் சிறப்புப்பொருளையும், சிறப்புப்பொருளாற் பொதுப்பொருளையும் சாதித்தல்; [அர்த்தாந்தரந்யாஸாலங்காரம்.] (உ - ம்.) 'அனுமன் கடல் கடந்தான், பெரியோர்க்கு அரியது யாது?'

தன்மைநவிற்சியணி-ஒருபொருளின் இயல்பைச் சமத்காரந்தோன்ற உள்ளபடி கூறுதல்; [ஸ்வபாவோக்தி.] (உ - ம்.) 'தோயும் வெண்தயிர் மத்தொலி துள்ளவும், ஆய வெள்வளை வாய்விட்டரற்றவும்,தேயு நுண்ணிடை சென்று வணங்கவும், ஆயமங்கையர் அங்கை வருந்துவார்.'

வீறுகோளணி - செல்வம் முதலியவற்றின் மிகுதியைக் கூறுவது, (உதாத்தாலங்காரம்.) (உ - ம்.) 'குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர்' இது, செல்வமிகுதி கூறியது.

கருத்துடையடைமொழியணி - கருத்தோடுகூடிய விசேஷணத்தைச் சொல்லுதல்; [பரிகராலங்காரம்.] (உ - ம்.) நான்குகைகளையுடைய திருமால் நான்கு உறுதிப்பொருள்களையும் அருள்வன்.'

கருத்துடையடைகொளியணி - கருத்தோடுகூடிய விசேஷ்யத்தைச் சொல்லுதல்; [பரிகராங்குராலங்காரம்.] (உ - ம்.) 'இராமன் மகிமை நான்முகனாலும் சொலற்கு அரிது.'

உடனிகழ்ச்சியணி - கற்றோரைமகிழ்விக்கும் உடன்நிகழ்தலைச் சொல்லுதல்; [ஸஹோக்தி யலங்காரம்.] (உ - ம்.) 'அரசனே! நின் பகைவரினத்தோடு நின்புகழ் நெடுந்தூரம் ஓடிற்று.' இதற்கு, ஒடு ஓடு உடன் என்னும் மூன்றும் வேற்றுமையுருபு வரும்.

பிரிநிலைநவிற்சியணி - ஒரு பெயர்க்கு இயல்பான பொருளொழிய மற்றொரு பொருளைத் தந்துரைப்பது; [நிருத்தியலங்காரம்.] (உ - ம்.) 'வீமன் போரில் தோல்கள் தோல்களாயின;' இதில் 'தோல்' என்ற யானைப்பெயரைக் கற்பனைப்பொருள்படக் கூறியவாறு காண்க.

எள்ளும் அரிசியும்போல வேறுபாடு விளங்கும்படி பல அணிகள் ஒருசெய்யுளில் சேர்ந்துவருவது - சேர்வையணி [ஸம்ஸ்ருஷ்டியலங்காரம்]எனவும்,பாலும் நீரும்போல வேறுபாடு விளங்காதபடி ஒன்றுக்கு மற்றது உறுப்பாகுமாறு பலஅணிகள் ஒருசெய்யுளிற் கலந்துவருவது - கலவையணி [ஸங்கராலங்காரம்] எனவும் படும். அவற்றை இடம்நோக்கி அறிக.

மற்றும் அணியிலக்கணப் பரப்பையெல்லாம் தொல்காப்பியம், தண்டியலங்காரம், இலக்கணவிளக்கம், வீரசோழியம், மாறனலங்காரம் முதலிய விரிந்தநூல்களில் கண்டுகொள்க.

காப்பிய விலக்கணம்.

தொடர்நிலைச்செய்யு ளெனினும், காவிய மெனினும் ஒக்கும்.

அது - சொல்தொடர்நிலை, பொருள்தொடர்நிலை என இருவகை.

சொல்தொடர்நிலையாவது - அந்தாதிச்செய்யுள்களா லாகிய நூல்.

பொருள் தொடர்நிலையாவது - பெருங்காப்பியமென்றும், சிறுகாப்பியமென்றும் இரண்டுவகைப்படும்.

பெருங்காப்பியமாவது-வாழ்த்து, தெய்வவணக்கம், தலைமைப்பொருளுரைத்தல் என்கிற மூன்றுவகை மங்களங்களுள் ஒன்றை முதலிற் பெற்று, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் - நாற்பொருளையும் தருந் தன்மையதாய், சிறந்த ஒருதலைவன்மேலதாய், நாடு நகரம் மலை கடல் காலம் சந்திரசூரியர் உதய அத்தமனம் விவாகம் முடிகவித்தல் பொழில்விளையாட்டு நீர்விளையாட்டு மதுபானம் மக்கட்பேறு கலவியிற்களித்தல் புலவியிற்புலத்தல் மந்திரம் தூது போர்ச்செலவு போரிடல் வெற்றி முதலிய பலவகைவருணனைகளை யுடையதாய், சருக்கம் இலம்பகம் பரிச்சேதம் முதலான பாகுபாடு பொருந்தி, வீரம் முதலிய சுவைகளும் அவற்றை விளக்குங் கருத்துக்களும் விளங்க, காதுக்கு இனிய ஒருதிறப்பாட்டாலாயினும் பலதிறப்பாட்டாலாயினும் கட்டுரையாலாயினும் கற்றோராலியற்றப்பட்டு நிற்பதாம். இங்குக் கூறியவருணனைகளுள் சிலகுறைந்துவரினும் குற்றமில்லை; இங்ஙனம் கூறியதனால், இது ஒருகதையின்மேலதென்றதாயிற்று.

மேற்கூறியவாறு பலவருணனைகளைப் பெறாமலும் அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கினுள் ஒன்றும் பலவும் குறைந்தும் வருவன-சிறுகாப்பியமென்றும், காப்பியமென்றும் கூறப்படும்; அவை உலா, பரணி. ஆற்றுப்படை, பிள்ளைத்தமிழ். கோவை, கலம்பகம், அந்தாதி, மாலை முதலியன.

எழுத்து.

- முதல் - ௩௰.
  - உயிர் - ௧௨.
    - குறில். ௫
    - நெடில். ௭
  - மெய் - ௧௮.
    - வலி. ௬
    - மெலி. ௬
    - இடை. ௬
- சார்பு - ௩௬௯.
  - உயிர்மெய். ௨௱௧௬
  - முற்றாய்தம். ௮
  - உயிரளபெடை. ௨௧
  - ஒற்றளபெடை. ௪௨
  - குற்றியலிகரம். ௩௭
  - குற்றியலுகரம். ௩௬
    - நெடிற்றொடர் - ௭.
    - ஆய்தத்தொடர் - ௧.
    - உயிர்த்தொடர் - ௧௧.
    - வன்றொடர் - ௬.
    - மென்றொடர் - ௬.
    - இடைத்தொடர் - ௫.
  - ஐகாரக்குறுக்கம். ௩
  - ஔகாரக்குறுக்கம். ௧
  - மகரக்குறுக்கம். ௩
  - ஆய்தக்குறுக்கம். ௨

பதம்.

- பகாப்பதம்.
  - பெயர்.
  - வினை.
  - இடை.
  - உரி.
- பகுபதம்.
  - பெயர்.
    - பொருள்.
    - இடம்.
    - காலம்.
    - சினை.
    - குணம்.
    - தொழில்.
  - வினை.
    - தெரிநிலை.
    - குறிப்பு.

சொல்.

- பெயர்.
  - இயற்சொல்.
  - திரிசொல்.
- வினை.
  - இயற்சொல்.
  - திரிசொல்.
- இடை.
  - இயற்சொல்.
  - திரிசொல்.
- உரி.
  - இயற்சொல்.
  - திரிசொல்.

- புணர்ச்சி.
  - எழுத்துப்புணர்ச்சி.
    - இயல்பு.
    - (புணர்ச்சி) விகாரம் - ௩.
      - தோன்றல்.
      - திரிதல்.
      - கெடுதல்.
      - செய்யுள் விகாரம்.
        - கடைக்குறை.
        - இடைக்குறை.
        - முதற்குறை.
        - தொகுத்தல்.
        - விரித்தல்.
        - குறுக்கல்.
        - நீட்டல்.
        - மெலித்தல்.
        - வலித்தல்.
  - பொருட்புணர்ச்சி.
    - அல்வழி - ௧௪.
      - விரி - ௯.
        - அடுக்குத்தொடர்.
        - உயிர்சொல்தொடர்.
        - இடைச்சொல்தொடர்.
        - குறிப்புவினைமுற்றுத்தொடர்.
        - தெரிநிலைவினைமுற்றுத்தொடர்
        - வினையெச்சத்தொடர் - ௨.
        - பெயரெச்சத்தொடர் - ௨.
        - விளித்தொடர்.
        - எழுவாய்த்தொடர்.
      - தொகை - ௫.
        - அன்மொழித்தொகை - ௫.
        - உம்மைத்தொகை - ௪.
        - உவமைத்தொகை - ௪.
        - இருபெயரொட்டுப் பண்புத்தொகை
        - பண்புத்தொகை - ௪
        - வினைத்தொகை.
    - வேற்றுமை - ௬.
      - தொகை - ௬.
      - விரி - ௬.
      - (௨-ஆம் வேற்றுமை முதல் ௭ - ம் வேற்றுமை வரையில்.)

P31,5x1,1
N28
97466

பெயர்ச்சொல்.

- இடுகுறி. ——— (காரணவிடுகுறி) ——— காரணம்.
- இடுகுறி.
  - ஆக்கம்.
    - பொது.
    - சிறப்பு.
  - மரபு.
    - பொது.
    - சிறப்பு.
- காரணம்.
  - ஆக்கம்.
    - பொது.
    - சிறப்பு.
  - மரபு.
    - பொது.
    - சிறப்பு.

வினைச்சொல்.

- தெரிநிலை.
  - தன்வினை. | பிறவினை.
  - செயப்படுபொருள் குன்றியவினை. | செயப்படுபொருள் குன்றாவினை.
  - செய்வினை. | செயப்பாட்டுவினை.
- குறிப்பு.

- வினைமுற்று.
- பெயரெச்சம்.
- வினையெச்சம்.
- * தொழிற்பெயர்.
  - உடன்பாடு.
  - எதிர்மறை.
- வினையாலணையும் பெயர்.

* தொழிற்பெயர் குறிப்பில் வாராது.